பாவேந்தர் பாரதிதாசனின்

பழம் புதுப்பாடல்கள்



தொகுப்பும் பதிப்பும் :
முனைவர் இரா.இளவரசு

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**
நூலக நூல்கள்
நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**
பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

பாவேந்தர் பாரதிதாசனின்
பழம்புதுப் பாடல்கள்

தொகுப்பும் பதிப்பும்
முனைவர் இரா.இளவரசு



பாவேந்தரின் கையெழுத்தில்

பாவேந்தர் பாரதிதாசனின் பழம்புதுப் பாடல்கள்

முனைவர் இரா.இளவரசு
முன்னைப்பேராசிரியர் & தலைவர்

பாரதிதாசன் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
பல்கலைப்பேரூர்
திருச்சிராப்பள்ளி - 620 024.

நூற்குறிப்பு

தலைப்பு	:	பாவேந்தர் பாரதிதாசனின் பழம்புதுப் பாடல்கள்
ஆசிரியர்	:	முனைவர் இரா.இளவரசு
உரிமை	:	பாரதிதாசன் பல்கலைக்கழகம்
வெளியீடு	:	பாரதிதாசன் பல்கலைக்கழகம், பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி - 620 024.
பதிப்பு	:	முதற்பதிப்பு
ஆண்டு	:	2005
அச்சுத்தாள்	:	என்.எஸ்.மேப்லித்தோ
நூல் அளவு	:	டெம்மி 1/8
பக்கங்கள்	:	512
படிகள்	:	1,200
விலை	:	உரு. 265
நூற்பொருள்	:	பாடல்கள் ஆய்வுப் பதிப்பு
அச்சுக்கோப்பு	:	மதர்போர்டு, சென்னை - 600 014.
அச்சாக்கம்	:	பொன்னி, சென்னை - 600 091.
அட்டை வடிவமைப்பு	:	ட்ரீம்ஷாப், சென்னை - 600 014.

உலைக்களத்தில்...

பாவேந்தர் பாரதிதாசனின் ஒரு நூல் உருவாக்கங் குறித்த கருத்தை உங்கள் முன் வைப்பது மிகப் பொருத்தமாக இருக்கும்.

> "தோழர் முத்தையா நம் வீட்டுக்கு வந்தார். நம்மைவிட அவருக்கு நம் பிள்ளை மன்னர் மன்னன் மிகவும் வேண்டியவர். இருவரும் நம் பழந்தாள் அனைத்தையும் பார்த்துப் பொறுக்கினார்கள். அவற்றினின்று அவர்கட்கு, நான் முன்னாளில் எழுதியனவும், செய்தித்தாள்களில் வந்தவற்றின் நறுக்குகளும் கிடைத்தனவாம். அவைகளின் பெயர் 'காதல் நினைவுகள்' என்று என்னிடம் கூறி இச்சிறு நூலையும் காட்டினார்கள்."

தலைப்பெதுவும் தரப்படாமல் 'காதல் நினைவுகள்' நூலின் தொடக்கத்தில் அமைந்துள்ள கவிஞரின் கூற்று இது. அக்கூற்று என் முயற்சிகளுக்கும் பொருந்தும்.

பாவேந்தரின் பிள்ளை மன்னர்மன்னனும் பாவேந்தர்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த முல்லை முத்தையா அவர்களும் பழந்தாள்களைப் பொறுக்கியதைப் போல நானும் பழந்தாள்களைத் தேடித் திரட்டினேன். அவற்றில் கவிஞர் முன்னாளில் எழுதியனவும் பல்வேறு இதழ்களில் வெளிவந்த கவிதை நறுக்குகளும் எனக்குக் கிடைத்தன. அவற்றைப் 'பாவேந்தர் பாரதிதாசன் பழம்புதுப் பாடல்கள்' என்னும் பெயரில் தமிழ்கூறு நல்லுலகின் முன் படைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

'பழம்புதுப் பாடல்கள்' என்னும் இத்தொகுப்பு கவிஞர் தனது பதின்மூன்றாம் அகவையில் அதாவது 1904ஆம்

ஆண்டில் எழுதிய இளம் பாடலிலிருந்து 1964இல் எழுதிய வாழ்த்துக் கவிதை வரை தன்னகத்தே கொண்டுள்ளது. ஏறத்தாழ அறுபது ஆண்டுக்காலப் பாரதிதாசனின் சிந்தனைப் போக்கை, படைப்பாளுமையைப் புலப்படுத்தும் தொகுப்பு இது. முறையற்ற போக்கை எதிர்க்கும் முதற் பாடல் ஒலித்து நூறாண்டுகள் ஆகிவிட்டன. கவிஞர் மறைந்து நாற்பதாண்டு கள் கடந்து விட்டன. இந்தப் பின்புலத்தில் நோக்கும்போது இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள பாடல்கள் அனைத்தும் பழம்பாடல்களே. இதுவரை பாரதிதாசன் கவிதைகள் என வெளிவந்துள்ள தொகுப்புகளில் இடம்பெறாத பாடல்கள் இவை. தமிழ்கூறு நல்லுலகம் இதுவரை காணாத - முதன்முறையாகக் காணப்போகும் பாடல்களின் தொகுப்பு இது என்ற வகையில் புதுமைப்பொலிவு உடையது. வெடிப்புறப் பேசும் பாரதிதாசன் உணர்ச்சிகள் ஆடை உடுத்தாமல் பாடல்களில் அப்படி அப்படியே பிறக்கின்றன. சில பாடல்களைப் படிக்கும் போது ஒருவர் முகஞ் சுழிக்கலாம். அவரே வேறுசில பாடல்களைப் படிக்கும்போது துள்ளிக் குதிக்கலாம். இந்தத் தொகுப்பு ஒட்டுமொத்தப் பாரதிதாசனை ஓரிடத்தில் காட்டுவதாகும்.

பாரதிதாசனின் தன்மான இயக்கத் தொடர்பு 1928இல் ஏற்பட்டுவிட்டது. அதற்கு ஏழாண்டுகள் கழித்து 1935இல் அவர் ஆசிரியராக இருந்து வெளிக்கொணர்ந்த கவிதை மாத இதழாகிய 'ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்' இதழில் (வெளியீடு 3) 'கவிஞர்களுக்கு வேண்டுகோள்' ஒன்றை விடுக்கின்றார்:

"தமிழ்க் கவிஞர்களே!

1. எக்கொள்கை பற்றியும் எழுதுக; எண்ணங்களைக் கவிதையால் அமைத்துத் தருதல் வேண்டும்.
2. எளிய நடையில் புதிய வகையில் சுவை ஒழுகும்படி கவிதை தந்து உதவிய ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரைப் போல், நூற்றுக்கணக்கான பாரதிகள் நமது கவிதா மண்டலத்தில் தோன்றி மிளிர வேண்டும் என்பது பேரவா.
3. இயற்கையழகு, காதல், நாடகம், தேசீயம், சமூகச் சீர்திருத்தம், பெண்கள் உரிமை இவை பற்றி கவிதை வரைந்து உதவுக. மாணவர்க்கான பாட்டு உதவுக. பிறமொழியில் உள்ள கவிதைகளைத் தமிழ்க் கவிதை யாக்கி அனுப்புக. விடுகவிகள், விகட கவிதைகள்

ஆக்கி அளிக்க. கவிஞர்களே! உங்கள் உள்ளத்தில் ததும்பி வரும் உயர் எண்ணங்களைக் கவிதையில் தொடுத்துக் காட்டுவது தான் - தமிழ்த் தொண்டு செய்வதுதான் கவிதா மண்டலம் மேற்போட்டுக் கொண்ட வேலை."

இவ்வேண்டுகோளில் எந்தக் கொள்கை பற்றியும் எழுதலாம் எனத் தொடங்கி அவர் பட்டியலிட்டுக் காட்டும் பாடு பொருள்கள் அனைத்தையும் பாடியிருப்பதை ஓரிடத்தில் எடுத்துக்காட்டும் தொகைநூல் இது. அவர் மற்ற கவிஞர்களுக்கு விடுத்த வேண்டுகோள் அவராலேயே தனது கவிதைப் பயணத்தின் பல்வேறு காலங்களில் நிறைவேற்றப் பட்டிருக்கிறது என்பதை இந்நூல் புலப்படுத்துகிறது.

பாரதியாரைக் காண்பதற்கு முன்பே கனக சுப்புரத்தினம் பல பாடல்கள் எழுதியவர். 'பாடலில் பழமுறை, பழநடை என்னும் காடு முழுதும் கண்டவர்'. எண்ணங்களை வண்ணப்பாடல்களிலும் வெண்பாவிலும் வடித்தவர். குமுதம் வார இதழில் (16.3.1961) 'வழிகாட்டிகள்' என்னும் தலைப்பில் தான் எழுதிய கட்டுரை ஒன்றில் பாரதியாரைக் காண்பதற்கு முன்பே தான் பல்லாயிரம் பாடல்கள் பாடியதாகக் குறிப்பிட்டு எடுத்துக்காட்டுகளாக 'சூரர்குலம் வேரறுக்க' எனத் தொடங்கும் பாடலையும் 'காணும் பொருளிலெல்லாம்' எனத் தொடங்கும் கண்ணனைப் பற்றிய பாடல் ஒன்றையும் தந்துள்ளார். 'சூரர்குலம்' எனத் தொடங்கும் பாடல் 1920இல் நூல்வடிவம் பெற்ற மயிலம் ஸ்ரீ ஷண்முகன் வண்ணப்பாட்டில் (ப.10) இடம்பெற்றுள்ளது. கண்ணனைப் பற்றிய பாடல் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. (பாடல் எண் 4).

பாவேந்தர் பாடல்கள் வெளிவந்த இதழ்களாகக் குறிப்பிடப்படுபவற்றில் பல கிடைக்கவில்லை. அவற்றில் வெளிவந்த பாடல்களையும் இதுவரை அறியுமாறில்லை. முதன்முதல் வெளிவந்த 'பாரதிதாஸன் கவிதைகள்' தொகுப்பில் (1938) ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு தரப் பட்டுள்ளது. அக்குறிப்பில்

"ஒத்துழையாமைக் காலத்தில் இவர் 'வ.ரா.' அவர்களின் 'சுதந்திரன்' முதலிய பத்திரிகைகட்கு எழுதிய கவிதைக்ள் நல்ல எழுச்சியை உண்டாக்கி உதவின"

என்னும் செய்தி காணப்படுகிறது. 1918-20 காலத்தில் புதுவையிலிருந்து வ.ரா. நடத்தியதாகக் கருதப்படும் இதழ் இதுவரை ஆய்வாளர்க்குக் கிடைக்கவில்லை. துய்ப்ளேக்சு,

தேசோபகாரி முதலிய வேறு இதழ்களிலும் எழுதியதாகக் கூறப்படுகிறது. அவ்விதழ்களில் வெளிவந்த படைப்புகள் எவை என்று அறிய முடியவில்லை. இதிலிருந்து ஆய்வுத் தேடலின் விளைவாக வருங்காலத்தில் புதிய படைப்புகள் கிடைக்கக் கூடும்.

பாரதிதாசனைப் புரட்சிக்கவிஞராக உலகின்முன் நிலை நிறுத்தியதில் 'பாரதிதாஸன் கவிதைகள்' முதல் தொகுப்பிற்குப் பெரும்பங்கு உண்டு. அப்பதிப்பில் இடம்பெற்றுள்ள 'வெளி யிடுவோர் குறிப்பு', நோக்கத்தக்கது.

> "இப்புத்தகத்திலுள்ள கவிகள், சுமார் 300 கவிகளி லிருந்து பொறுக்கப்பட்டவை. பல அருமையான கவிகள் எவ்வளவு முயன்றும் கிடைக்கவேயில்லை. இடமின்மையால் பல கவிகள் நின்றுவிட்டன. அவசரத்தினால், ஆனால், தவிர்க்கக் கூடிய சில காரணங்களால் இப்புத்தகத்தை நான் நினைத்த மாதிரியில் அத்தனைச் சிறப்பாக வெளியிடக் கூடவில்லை. இப்பதிப்பிலுள்ள குற்றங்களை வாசகர்கள் தயைகூர்ந்து தெரிவித்தால், மறுபதிப்பில் அவைகளைக் களைந்து இன்னும் அதிகப் பாடல்களைச் சேர்த்து வெளியிடலாம்."

திருவாட்டி டி.எஸ்.குஞ்சிதம் அம்மையார் வெளியிட்டுள்ள இக்குறிப்பு நமக்குச் சில செய்திகளைச் சொல்லுகிறது.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகள் சற்றொப்ப 300 கவிதைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை. 73 கவிதைகள் அடங்கிய இத்தொகுப்பு 220க்கு மேற்பட்ட கவிதைகளை ஒதுக்கியிருக்கிறது. "இடமின்மையால் அக் கவிதைகள் நின்றுவிட்டன" என்று குறிப்பிடப்படுவது ஏற்புடையதன்று. ஏனெனில் 'பல அருமையான கவிகள் எவ்வளவு முயன்றும் கிடைக்கவே இல்லை' என்றும் குறிப்பு கூறுகிறது. 'பல அருமையான கவிதைகள்' கிடைக்கவில்லை என்பது தேடுதல் முயற்சி தொடர வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

பாடல்கள் பல ஒதுக்கப்பட்டதற்கு இயக்கக் கவிஞராக அவரை முன்னெடுத்துச் செல்லும் கருத்துநிலைச் சார்பு காரணமாகலாம். ஏறத்தாழப் பத்தாண்டுகள் இயக்கத் தொடர்பு கொண்ட பாரதிதாசன் தன்மான இயக்கக் கொள்கைகளை விளக்கும் படைப்புகளை இயற்றியும் வெளியிட்டும் வந்ததோடு பொதுக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் கலந்து

கொள்கிறார். தலைவர் பெரியார் ஈ.வெ.ராவோடு பழக்கமும் ஏற்படுகிறது. இயக்க மாநாட்டில் கவிஞரின் படத்தைத் திறந்து வைக்குமளவு 'புரட்சிக்கவிஞர்' என்னும் 'புகழுரு' உருவாகி இருக்கிறது. அது சிதையாவண்ணமும் இயக்க வளர்ச்சிக்கு மேன்மேலும் அவரின் கருத்துகள் பயன்படும் வகையிலும் நூல் வெளியிட வேண்டிய தேவையும் கட்டாயமும் உள்ளதால் 220க்கு மேற்பட்ட கவிதைகள் ஒதுக்கப்பட்டி ருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

மேற்கண்ட பல செய்திகளால், பாரதிதாசனின் பல பாடல்கள் இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்த பாடல் களிலும் பல வெளியிடப் பெறவில்லை என்பது புலனா கின்றது. 'பழம்புதுப் பாடல்கள்' உருவாக்கத்திற்கு என்னை உந்தித் தள்ளியவை இக்குறிப்புகளே. மேலும் தேடுதல் பணி தொடர வேண்டும் என்பதையும் இவை அறிவுறுத்துகின்றன.

கவிஞரின் தொடக்கக் காலப் பாலியற் கவர்ச்சிக் குறும்பு, இறை ஈடுபாடு, 'தேசீயக் கீர்த்தனை'கள் பாடும் நாட்டு விடுதலை நாட்டம், தன்மான இயக்கப் பகுத்தறிவுக் கொள்கைப் பரப்புரை, பெண்ணுரிமைக் குரல், இந்தித் திணிப்பு எதிர்ப்பு, திராவிட நாட்டு, தமிழ் நாட்டு விடுதலை, உலகம் உன்னுடையது என்னும் உரிமைக் குரல், புதியதோர் உலகம் செய்வோம் என்னும் போர்க்குரல் என அவர் படைப்புகள் அனைத்திலும் வெளிப்படும் படிநிலை வளர்ச்சி களை இப்பழம்புதுப் பாடல்களிலும் காணலாம்.

இசைப்பாடல்கள், குழந்தைப் பாடல்கள், மொழி பெயர்ப்புப் பாடல்கள், பிறந்தநாள் வாழ்த்து, திருமண வாழ்த்து, தலைவர்களுக்கு வரவேற்பு, பகைவர்களுக்கு வசைமொழி, இறப்புக்கு இரங்கற்பா, ஆட்களின், அமைப்பு களின், இதழ்களின் ஆண்டுவிழா வாழ்த்துகள், இதழ்களின், நூல்களின் மதிப்புரைகள் எனப் பல்வகைப் பாக்கள் திரட்டப்பட்டுள்ள தேனடை இது. தனிமாந்தர்களின் வரலாறு, அமைப்புகளின் வரலாறு, நாட்டு வரலாறு முதலியவற்றுக்கான தரவுகள் பலவற்றை இத்தொகுப்பிலிருந்து பெறலாம்.

இத்தொகுப்பின் அமைப்புப் பற்றிக் கருத வேண்டுவன சில:

1. பாடல்கள் கால வரிசைப்படி அளிக்கப்பட்டுள்ளன. அவை எழுதப்பெற்ற காலம், வெளிவந்த காலம் ஆகிய இரண்டும் தெளிவாகத் தெரியின் எழுதப்பெற்ற காலமே குறிக்கப் பெற்றுள்ளது. குத்துமதிப்பாகக் காலம் குறிக்கப்

பட்டிருப்பின் 'முன், பின்' 'இதிலிருந்து இதுவரை' என்னுங் குறிப்போடு காலம் தரப்பட்டுள்ளது.

2. பாடல்களில் பொதுவாக

அ) காலக் குறிப்பு

ஆ) வரிசை எண்ணோடு கூடிய பாடல் தலைப்பு

இ) பாடல்

ஈ) பதிப்பாசிரியர் குறிப்பு

உ) பாடல் பதிவுகளில் காணப்படும் வேறுபாடுகள்

ஊ) பாடல்கள் வெளிவந்த இதழ், நூல் முதலிய மூலச்சான்றுப் பதிவுகள்

என்னும் வரிசையமைப்புப் பின்பற்றப்பட்டுள்ளது.

3. பாடல் தலைப்புகள் பல மூலத்தில் உள்ளவாறே இடம் பெற்றுள்ளன. வேறு பல பதிப்பாசிரியரால் தரப் பட்டவை. அப்படித் தரப்பட்ட தலைப்புகள் 'நூல் அகம்' என்னும் பொருளடக்கப் பகுதியில் உடுக்குறி இட்டுக் காட்டப்பட்டுள்ளன.

4. பாடல்களில் ஒற்று மிக வேண்டிய இடங்களில் அவ்வொற்றுகள் பதிப்பாசிரியரால் அடைப்புக்குறிக்குள் இடப்பட்டுள்ளன.

5. ஒரு பாடல் ஒன்றுக்கு மேற்பட்ட பதிவுகளில் இடம் பெற்று அவற்றிடையே வேறுபாடுகள் தென்படின் அவை பதிப்பாசிரியரின் குறிப்பை அடுத்து அளிக்கப் பட்டுள்ளன.

6. பாடலின் இறுதியில் மூலச்சான்றுப் பதிவுகளாக அமையும் நூல்களோ இதழ்களோ பிறவோ கொடுக்கப் பட்டுள்ளன. கால வரிசையில் அப்பதிவுகள் அமைந் துள்ளன. காலத்தால் முற்பட்ட பதிவு சற்றுத் தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ளது.

7. பாடல்களில் மெட்டு, இராகம், தாளம், சுரக் குறிப்பு, யாப்புக் குறிப்பு முதலியன மூலச் சான்றுப் பதிவில் உள்ளவாறே இடம்பெற்றுள்ளன.

பாரதியின் 'பாப்பாப் பாட்டு'ப் பற்றி ஓர் ஆய்வு மேற்கொண்டபோது, சில கருத்து வேறுபாடுகளிலிருந்து தெளிவு பெற, அந்தப் 'பாப்பா' யார் என அறியும் தேவை ஏற்பட்டது. அப்போது 'வண்ணார் துணிக் கணக்கில்' பாரதி

இளைய மகள் சகுந்தலாவைப் 'பாப்பா' என எழுதியிருந்த குறிப்பும் உதவியது. சகுந்தலா பாரதியை நேரில் கண்டும் அதனை உறுதிப்படுத்திக் கொண்டேன். இவ்வாறு ஒரு படைப்பாளியின் பல்வகைப்பட்ட குறிப்புகளையும் புறந் தள்ளாது போற்றிக் காத்து அருங்காட்சிக்கும் ஆய்வுக்கும் பயன்படுத்துவதை இங்கிலாந்து முதலிய மேல்நாடுகளில் காண்கிறோம். இதனை மனத்தில் நிறுத்துவோர்களுக்கு இத்தொகுப்பிலுள்ள சில பாடல்களின் தேவை புலப்படும்.

இது என் வாழ்நாட் பணி என்றே சொல்லலாம். பலர் ஒத்துழைப்புடன் பல்லாண்டு உழைப்பின் பயனாய் உங்கள் கைகளில் நூலாய்த் தவழுகிறது. இதற்குத் தங்கள் பங்களிப்பைச் செய்த பலர்க்கும் நான் நன்றி சொல்லியாக வேண்டும்.

நான் பணி ஓய்வு பெற்ற பின் பாரதிதாசன் பல்கலைக் கழகம், பாரதிதாசன் உயராய்வு மையத்தின் பேராசிரியராக, வல்லுநர்கள் சிலரின் பரிந்துரையின் அடிப்படையில் என்னை அழைத்தது. பாரதிதாசனை ஆய்வது என்பது எனக்கு நடுக்கரும்பு தின்னும் நயம். கரும்பு தின்னக் கூலி தருகிறார்களே என்ற உணர்வோடு இப்பணியிற் சேர்ந்தேன். பாரதிதாசனில் ஆய்வு செய்ய என்ன இருக்கிறது? எல்லாம் செய்து விட்டார்களே என்று சிலர் கேட்டனர். அவர்களிடம் செய்யவேண்டிய பலவற்றை எடுத்துரைத்தேன். பல்லாயிரம் பாடல்களைப் பலவகையான பொருண்மைகளில் பல்வித வடிவங்களில் அளித்துள்ளார் பாவேந்தர். அவற்றிற்கு 'ஆய்வுச் செம்பதிப்புகள்' தேவை. அதற்கான அடிப்படைப் பணிகள் சிலவற்றை நான் மேற்கொண்டுள்ளேன். அதன் விளைவே உயராய்வு மையத்தின் சார்பில் இப்போது வெளிவரும் **பாவேந்தர் பாரதிதாசன் பழம்புதுப் பாடல்கள், பாவேந்தர் பாரதிதாசன் பாடல்கள் தலைப்பு அகரவரிசை, முதற்குறிப்பு அகரவரிசை, பாவேந்தர் பாரதிதாசன் நூற்களஞ்சியம்** ஆகிய நூல்கள்.

பொருட்செலவைப் பொருட்படுத்தாது தக்கார் சிலரைப் பணியில் ஈடுபடுத்தித் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய பணி இவ்வாய்வுச் செம்பதிப்பு உருவாக்கம்.

உயராய்வு மையம் உருவாக அடிப்படைப் பணிகளை மேற்கொண்டவர் இன்றைய துணைவேந்தர் முனைவர் சி.தங்கமுத்து அவர்கள். அவரின் பொருளார்ந்த துணையுடன் நாடறியும் நல்ல பயன்கள் விளையும் என நம்புகிறேன்.

மையத்தின் சார்பில் இந்நூல்கள் வெளிவருவதில் மிகுந்த ஆர்வம் காட்டி அணிந்துரை வழங்கியுள்ளார். அவர்க்கு என் உள்ளார்ந்த நன்றி. என் நலத்தைப் பெரிதும் விரும்பும் பதிவாளர் முனைவர் இராதா செல்லப்பன் அவர்களுக்கும், இந்நூல் வெளிவர என்னை முடுக்கிக் கொண்டே இருந்த உயராய்வு மையத்தின் இன்றைய பேராசிரியர் - தலைவர் இளவல் முனைவர் ச.சு.இராமர் இளங்கோ அவர்கட்கும் தமிழியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் த.கனகசபை அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

இத்தொகை நூலில் இடம்பெற்றுள்ள பாடல்களைப் பலரிடமிருந்து திரட்டினேன். நண்பர்கள் சிலர் அவர்களின் ஆய்வின்பொருட்டுச் சென்ற இடங்களில் எனக்குத் தேவையான பாடல்களையும கொணர்ந்தளித்தனர்.

அண்ணன் மன்னர் மன்னன் செய்த உதவி பெரிது. அவர் நூல்களில் பதிவு செய்துள்ள பாடல்கள் பல இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அவர் நடத்திய சிறுவர் வார இதழாகிய 'வானம்பாடி'யில் வெளிவந்த பாடல்களை எழுதியனுப்பினார்.

இளவல் ச.சு.இளங்கோ நூல்களும் குறிப்பிடத்தக்க வகையில் பயன்பட்டன. ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதாமண்டலம் (1935) இதழ்த் தொகுப்பின் ஒளிப்படியையும் அளித்துதவினார். முனைவர் மா.அண்ணாதுரை நூல்களில் இடம்பெற்ற கையெழுத்துவடிவப் பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சேலம் 'குயில்பண்ணை' புலவர் அண்ணாமலை, பெரியவர் அன்புப்பழம்நீ, பேரா. வீ.அரசு, பேரா. மா.ரா.அரசு, முனைவர் பழ.அதியமான், மறைந்த பெரியவர் சு.ர.சுப்பிரமணியம் (எஸ்.ஆர்.எஸ்.), அண்ணல் தங்கோவின் பேரன் திரு. அருள்செல்வன், திரு. மா.சு.சம்பந்தம், குருவிக்கரம்பை வேலு, கவிஞர் பொன்னடியான், கவிஞர் பி.எல்.இராசேந்திரன், மறைந்த நா.இராசவேலு, புரட்சிக்கவிஞரின் பேரன் க.புகழேந்தி, பாவலர்மணி சித்தன், பேரா. தி.வ.மெய்கண்டார், ஓவியப் பாவலர் மு.வலவன், நண்பர் திரு. இரா.இரத்தினகிரி முதலியோர் ஏதேனும் ஒரு வகையில் இத்தொகுப்பிற்குத் தங்களால் ஆன உதவியைச் செய்துள்ளனர்.

என் மாணவர் முனைவர் ய.மணிகண்டன் இத் தொகுப்பில் அமைந்துள்ள பெரும்பாலான பாடல்களை மூலத்திலிருந்து படியெடுத்தார். சில பாடல்களைத் தானே

தேடித் தந்ததோடு, தஞ்சை சேக்கிழார் அடிப்பொடி திரு. தி.ந.இராமச்சந்திரன், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைப்பதிவாளர் (ஓய்வு) திரு. இரா.சுப்பராயலு முதலிய நண்பர்களிடமிருந்தும் பெற்றளித்தார். தனது பதிப்புப் பட்டறிவைப் பயன்படுத்தி இந்நூலுக்கான இறுதிவடிவம் கொடுப்பதில் பெரிதும் உதவினார்.

மாத வெளியீடாக வந்த 'குயில்' இதழ்களின் தொகுப்பை மறைந்த என் பேராசிரிய நண்பர் த.மணிமாறன் அளித்துதவினார். குயில் கிழமை இதழ்த் தொகுப்புகளைக் கவிஞர் மணல்மேடு குருநாதன் பார்வையிடத் தந்துதவினார்.

பாவேந்தரிடம் மிகுந்த ஈடுபாடுடைய சிலம்பொலி சு.செல்லப்பனாரும், கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களும் தங்களிடமிருந்த குயில் தொகுப்புகளை உயராய்வு மையத்திற்கு அன்பளிப்பாக வழங்கினர். புதுவைப் புலவர் பாளை எழிலேந்தி அவர்கள், சென்னையிலிருந்து வெளிவந்த 'குயில்' திங்களிருமுறை இதழ்த்தொகுப்பை அளித்தார். தஞ்சை நண்பர் தமிழ்நிலவன் 'பாரதிதாசன் குயில்' திங்களிதழ்த் தொகுப்பை வழங்கினார். அவர்களுக்கெல்லாம் உள்ளார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

1970களிலேயே பல நூலகங்களுக்குச் சென்று குடிஅரசு, நகரதூதன், ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் முதலிய இதழ்களிலிருந்து பாடல்களைப் படியெடுத்துதவிய என் இனிய நண்பர் கோ.மணிவாசகம், இனிய மாணவர்கள் க.முருகன், த.சித்தார்த்தன், முல்லை மு.பழநி, இ.சிகாமணி, கி.தமிழரசி, மைத்துனர் புலவர் பி.தமிழகன், முனைவர் கு.திருமாறன், இளவல் கு.சிவஞானம், முனைவர் மு.இளமுருகன், சு.மனோசு முதலிய பலரின் உறுதுணை நினைக்கத் தக்கது.

தமிழகம், புதுவையைச் சார்ந்த பல நூலகங்கள் பயன்கொள்ளப்பெற்றன. நூலக அலுவலர்கள் மிகுந்த நன்றியோடு நினைக்கத் தக்கவர்கள். புதுவை பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் - ஆய்வுமையம் (முனைவர் அ.கனகராசு), பாரதி நினைவு அருங்காட்சியகம் ஆய்வுமையம் (முனைவர் நா.செங்கமலத்தாயார்), சென்னை மறைமலையடிகள் நூலகம், பெரியார் வாசகர் வட்ட நூலகம், அண்ணா அறிவாலயம் பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம் (நூலகர் சுந்தரராசன்), உரோசா முத்தையா ஆய்வு நூலகம் (கோட்டையூர், சென்னை), தமிழ்க் கா.சு. நூலகம், குளித்தலை,

திருவள்ளுவர் தவச்சாலை நூலகம், அல்லூர், திருச்சி கி.ஆ.பெ.விசுவநாதம் நூலகம், பாரதிதாசன் பல்கலைக்கழக மைய நூலகம் முதலிய பல நூலகத்தார்க்கு நன்றி.

உயராய்வு மையத்தில் பணியாற்றியபோது நான் இட்ட பணிகளைத் தட்டாமல் செய்த திருமதி சி.இலட்சுமி, திருமதி மு.வேல்மணி, செல்வி செ.மகேசுவரி, மாணவர்கள் தே.அசோக்கு, அருட்செல்வன் ஆகியோர்க்கு என் நன்றியும் வாழ்த்தும்.

சின்னேரங்களில் என் சுடுசொற்களையும் பொருட்படுத்தாது நான் வாயாற் சொல்வதைக் கையால் எழுதிப் பெருந்துணைபுரிந்தவர் என் துணைவியார் திருவாட்டி இரா.வேலம்மாள் அவர்கள்.

என் மாணவர் முனைவர் ய.மணிகண்டனின் முனைவர் பட்ட ஆய்வு மாணவி செல்வி ம.மகாலட்சுமி, என் எண்ணவேகத்திற்கு ஈடுகொடுத்து எழுத்துப்படியெடுத் துதவினார். அவரை வாழ்த்துகிறேன்.

'எங்கே அச்சிட்டார்கள்' என்று எல்லோரும் கேட்கும் வகையில் நேர்த்தியாக நூல்களை உருவாக்குவதில் வல்லவர் கள் நண்பர்கள் புலவர் வைகறைவாணன் அவர்களும் திரு. மா.பாலமுருகன் அவர்களும். குறுகிய காலத்தில் பலவகை நெருக்கடிகளுக்கிடையில் மெய்வருத்தம் பாராது அச்சேற்றினர். அவர்களின் உழைப்புக்கு உள்ளார்ந்த நன்றி.

'இன்னும் செப்பம், இன்னும் செப்பம்' என்று திருத்திக்கொண்டே காலம் நீட்டிப்பது என் இயல்பு. நமக்குக் தெரிகிற நிலையில் குறையெதுவும் படைப்புகளில் அமைந்துவிடக்கூடாது என்று எண்ணுவேன். முழுமை என்பதோ நிறைவு என்பதோ ஆய்வில் ஏற்படுவது அரிது. "பெரிதே உலகம் பேணுநர் பலரே" என்றான் சங்கத் தமிழன். தொடரோட்டமாகிய வாழ்க்கையில் 'அவர்க்குப் பின் இவர், இவர்க்குப் பின் இன்னொருவர்' எனப் பலர் வருவர்; ஆய்வர்; உலகம் வளம்பெறும் என்னும் நம்பிக்கையோடு பாவேந்தரின் பழம்புதுப் பாடல்களைத் தமிழ்கூறு நல்லுலகின்முன் படைத்துமகிழ்கிறேன்.

நிறைந்த அன்புடன்

இரா.இளவரசு

பாரதிதாசன் பல்கலைக்கழகம்

முனைவர் **சி.தங்கமுத்து** — பல்கலைப்பேரூர்
துணைவேந்தர் — திருச்சிராப்பள்ளி - 620 024

அணிந்துரை

'மானுடச் சமுத்திரம் நானென்று கூவிய' மாபெருங் கவிஞர் பாரதிதாசன் பெயரால் அமைந்துள்ள நமது பல்கலைக்கழகத்தின் 'பாரதிதாசன் உயராய்வு மையப்' பேராசிரியராக விளங்கிய முனைவர் பேரா. இரா.இளவரசு அவர்கள் அரிதின்முயன்று உருவாக்கியுள்ள ''பாவேந்தர் பாரதிதாசனின் பழம்புதுப் பாடல்கள்'' என்னும் இந் நூலினைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இதுகாறும் நூல்வடிவம் பெறாது சிதறிக்கிடந்த பாரதி தாசனின் கவிதைகளையெல்லாம் முதன்முறையாக ஒருபெருந்தொகுதியாகப் பேராசிரியர் இரா.இளவரசு அவர்கள் தொகுத்துப் பதிப்பித்துத் தமிழுலகிற்கு வழங்கியுள்ளார்.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தமிழக அரசு நிறுவியுள்ள பாரதிதாசன் உயராய்வு மையம்; பாரதிதாசன் குறித்த ஆய்வுகளை வளர்த்தெடுப்பதையும், அவருடைய கருத்துகளைப் பரப்புவதையும், அவருடைய பெருமை யினை உலகறியச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு தொடர்ந்து செயலாற்றி வருகின்றது.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பற்றிய ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்கான அடிப்படை ஆதாரங்கள் அனைத்தையும் கொண்டதாக இன்று நமது 'பாரதிதாசன்

உயராய்வு மையம்' திகழ்கின்றது. பாரதிதாசனின் படைப்புகள், படைப்புகளின் பல பதிப்புகள், பாரதிதாசன் பற்றிய நூல்கள், பாரதிதாசன் நடத்திய இதழ்கள், தொடர்புடைய அரிய இதழ்களின் நகல்கள், அரிய கடிதங்கள், படங்கள் எனப் பாவேந்தர் தொடர்புடைய பெரும்பாலான ஆதாரங்களைக் கொண்டு தமிழகத்தில் இணையொன்றில்லாத 'பாரதிதாசன் கருவூலமா'கவே இம் மையம் விளங்குகின்றது. இந்த நிலைக்கு மையத்தை வளர்த்து வடிவமைத்தவர் முனைவர் இரா.இளவரசு ஆவார்.

பாரதிதாசன் பற்றிய ஆய்வுகள் பல்கிவிட்டபோதிலும் பாரதிதாசன் ஆய்வியலுக்கான அடிப்படைத் தரவுகள் உருவாக்கம் செழுமையும் சீர்மையும் பெறாத நிலையே இன்றும் நிலவுகிறது. பாரதிதாசன் எழுதிய படைப்புகள் அனைத்தும் முழுமையாகச் சேகரிக்கப்பெறாத நிலையும், அவற்றின் அடிப்படையிலான ஆராய்ச்சிப்பதிப்பு உருவாக்கம் மலராத நிலையும் ஆய்வுலகில் காணப் படுகின்றன. இக்குறைபோக்கும் வகையில் முனைவர் இரா.இளவரசு அவர்கள் அக்கால இதழ்களிலும் மலர் களிலும் இடம்பெற்றுத் தொகுக்கப்படாதிருந்த கவிதை களையும், பாவேந்தருடன் பழகியோரிடத்திலும், உறவினர் முதலியோரிடத்திலும் கையெழுத்து வடிவில் இருந்த கவிதைகளையும் பல்லாண்டுகளாகத் திரட்டி, அவற்றி னுக்கு ஓர் அருமையான நூல் வடிவத்தை, பதிப்பு வடிவத்தை இப்பொழுது அளித்துள்ளார்.

பாரதிதாசன் படைத்த பழங்கவிதைகள்தாம் இந்தநூலை அணிசெய்கின்றன. ஆனால் அவை இப்போதுதான் ஆய்வுலகில் புதுமுகங்களாக அறிமுகமாகின்றன. அப்பாடல்களைத் தாங்கிய இந்தப் 'பழம்புதுப் பாடல்கள்' அரிய பதிப்புக் குறிப்புகளோடு காலநிரலில் உருப்பெற்று இப்போது நூலாக மலர்கின்றது.

இத்தொகுதியில் இதுவரை நூல் வடிவம் பெறாத 365 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. பலகாலங்களாகப் பாடல்களைத் தேடித் திரட்டிப் பதிப்பித்துள்ள இப்பெரும்முயற்சி, தமிழ்ச் சான்றோர்களான சி.வை.தா., உ.வே.சா. ஆகியோரின் முயற்சிகளை நினைவூட்டு கின்றது.

இந்நூற்றாண்டின் இருபெருங்கவிஞர்களுள் முதலாமவரான மகாகவி பாரதியாரின் பாடல்களுக்கு ஆய்வுப்பதிப்பு, தமிழ்ப்பல்கலைக் கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. பாரதிதாசன் பாடல்களுக்கும் அதைப்போன்ற ஆய்வுப் பதிப்பினை உருவாக்குவது நாம் மேற்கொள்ளவேண்டிய தலையாய பணியாக நம்முன் காத்திருக்கின்றது. அம் மாபெரும் பணிக்குச் சிறந்த துணையாகவும் முன்னோடி முயற்சியாகவும் இத்தொகுதி அமைகின்றது எனலாம்.

முழுமையான பாரதிதாசனை நாம் அறிந்து உணரவும், முறையான - முழுமையான நோக்கில் பாரதிதாசன் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளவும் இத்தொகுதி அரிய ஆதார நூலாக அமையும்.

இவ்வரிய தொகுதியைக் கடுமையான உழைப்பால் சிறப்பாகத் தொகுத்துப் பதிப்பித்து உருவாக்கியுள்ள நூலாசிரியரை மனமாரப் பாராட்டி மகிழ்கின்றேன். பாரதிதாசன் உயராய்வு மையத்தின் பணிகள் மேன்மேலும் சிறந்தோங்க வாழ்த்துகிறேன்.

அன்புடன்



குறுக்க விளக்கம்

1.	இ.ப.	:	இரண்டாம் பதிப்பு
2.	க	:	கட்டுரை
3.	க.கு	:	கறுப்புக்குயிலின் நெருப்புக்குரல்
4.	க.ம	:	ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் (1935)
5.	க.ம - சு	:	ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் - எஸ்.ஆர்.சுப்பிரமணியம் (1983)
6	கு.இ.பா.பா.	:	குடிஅரசு இதழ்களில் பாரதிதாசன் பாடல்கள்
7.	தொ	:	தொகுப்பு / தொகுத்தவர்
8.	தொ.ஆ.	:	தொகுப்பாசிரியர் / தொகுப்பாளர்
9.	நா.ப.	:	நான்காம் பதிப்பு
10.	நூ	:	நூல்
11.	ப	:	பக்கம் / பக்கங்கள்
12.	பா.தொ.	:	பாடல் தொகுப்பு
13.	பா.நி.	:	பாவேந்தர் நினைவுகள்
14.	பா.ப.	:	பாரதியாரொடு பத்தாண்டுகள்
15.	பா.பற	:	பாட்டுப் பறவைகள்
16.	பா.பா.பா.	:	பாரதிதாசன் பார்வையில் பாரதி
17.	மு.ப.	:	முதற்பதிப்பு
18.	மூ.ப.	:	மூன்றாம் பதிப்பு
19.	வெ.	:	வெளியீடு
20.	வே	:	வேறுபாடு

நூல் அகம்

வ. எண்.	தலைப்பு	காலம்	பக்கம்
	உலைக்களத்தில்		5
	அணிந்துரை		15
	குறுக்கவிளக்கம்		18
1.	மறைப்பதென்ன?*	1904	31
2.	இலாவணிப்பாட்டு*	1907	32
3.	ஆயிரம் பெறும் இலாவணி*	(1907)	33
4.	விண்ணோர் பதியே!*	1911க்கு முன்	35
5.	இராமாயணக் கதை நிகழ்ச்சிப் பாடல்*	1916-1917	36
5அ.	இராமாயணக் கதை நிகழ்ச்சிப் பாடல்*	(1916-1917)	38
6.	பராசக்தியிடம் முறையிடல்*	1918க்குமுன்	39
7.	ஆசிரியர் பு.அ.பெரியசாமிப்பிள்ளைக்கு இரங்கற்பா*	1920	42
8.	தொண்டரைச் சேர்த்தல்	1922	43
9.	தெய்வீகத் தாய்நாடு	1922	45
10.	சக்திக்கு விண்ணப்பம்	1922	48
11.	பாரததேவியிடம் குடியர் தம் தெளிவு கூறல்	1922	50
11அ.	கண்ணிகள் (முன்தொடர்ச்சி)	1923	52
12.	உடமை நாடு	1922	54
13.	மதுவிலக்குப் பாட்டு	1922	57
14.	பாரத சமூக மன்றம் (காங்கிரஸ்) சொல்லுகிறது	1922	58
15.	கொள்கைத் திருநாடு	1923	60
16.	தேவியின் திட்டம்	1923	62
17.	தேச மகா மன்றம் (காங்கிரஸ்)	1923	63

18.	பராசக்தி திருப்புகழ்	1923	65
19.	பசுத்தெய்வம்	1923	67
20.	அன்புதரும் பாரதத்தாய்	1923	71
21.	சுதந்திரம், அமரத்தன்மை	1923	73
22.	சக்திப்பாட்டு	1923	76
23.	வெற்றி நெருக்கம்	1923	77
24.	நீச நாகரிகம்	1923	78
25.	ஆசையும் அச்சமும்	1923	81
26.	நெஞ்சுக்கு நீதி	1923	83
27.	காளிக்கு விண்ணப்பம்	1923	85
28.	சுதந்திர தேவி ஸ்தோத்ரம்	1923	86
29.	அகாலியரின் ஆண்மை	1923	88
30.	ஸ்ரீ லாலா லஜபதிராய் பிணிக்கிரங்கல்	1923	89
31.	ஸ்வதர்மம்	1923	90
32.	இராட்டினம் - தெய்விகப்படை	1923	91
33.	ஏடுகள் (பத்திரிகைகள்) வாழ்க!	1923	92
34.	மகாசக்திக்கு விண்ணப்பம்	1923	93
35.	சமூகத்திருத்தம்	1923	95
36.	திரு (இலக்ஷுமி)	1923	96
37.	வாணி (சரஸ்வதி)	1924	98
38.	திருமண வாழ்த்து*	1924	99
39.	மறந்தறியேன்*	1928க்கு முன்	101
40.	பாலசுப்பிரமணிய நாயகர் இரங்கற்பாக்கள்*	1928	103
41.	வந்தனோபசாரப் பத்திரம்*	1929	106
42.	நாளுக்கு நாணம்	1929	110
43.	திருமண வாழ்த்து*	1930	112
44.	புதுவை முரசு ஆசிரியர் திரு. எஸ்.குருசாமி, பி.ஏ., அவர்கட்கு ஸமர்ப்பணம்	1931	114
45.	வாழ்க ஈ.வெ.ராமசாமிப் பெரியார்	1931	116
46.	கல்வி நீரோடை*	1931	118
47.	எட்டாவது ஆண்டிற் குடிஅரசு	1932	119
48.	சுயமரியாதைத் திருமணத்தில் வாழ்த்து*	1932	120
49.	தொழிலாளர் தோழமைப் பயன்	1933	124
50.	பிழைப்புக்கு வழி	1933	126
51.	குடிஅரசு 9ஆம் ஆண்டு வாழ்த்து*	1933	127

52.	வளர்ந்த திங்கொரு தீ	1933	129
53.	மின்னும் தமிழ்	1933	131
54.	எழுந்தருளும் தெய்வங்களிடம் புதுமையாக வேண்டுதல்*	1933	133
55.	புவியன்னை முன்னேறுகின்றாள்	1934	135
56.	இயற்கைத் தேவியின் கோபம்	1934	136
57.	சோபன அறை	1934	138
58.	தொழிலாளர் கேள்வி	1934	140
59.	கொடைத் தமிழன்	1934	142
60.	தறிநெய்வோர் தவிப்பு - 1*	1934	144
61.	தறிநெய்வோர் தவிப்பு - 2*	1934	145
62.	தொழிற்கல்வி வேண்டு	1935	147
63.	நண்பனுக்குக் கடன்படும் தீமையுணர்த்தல்	1935	148
64.	படியாமை நினைந்து வருந்தல்	1935	149
65.	இனாம் ஜோதிஷம்	1935	150
66.	வண்மைத் தமிழர் தம்புசாமி*	1935	152
67.	தமிழ்த்தாய் - இதழ் மதிப்புரை*	1935	153
68.	தாயைப் பிரிந்திருந்த குழந்தை!	1935	154
69.	புதுஉலகம் - இதழ் மதிப்புரை*	1935	155
70.	குன்றும் மயிலும்	1935	156
71.	உலகின் இலக்ஷியம்	1935	157
72.	வழிகாட்டி - இதழ் மதிப்புரை*	1935	158
73.	பகுத்தறிவு - இதழ் மதிப்புரை*	1935	159
74.	பூங்காவனம்	1935	160
75.	யுத்த ஆயத்தம்	1935	161
76.	தாய் தனயனுக்குரைத்தல்	1935	162
77.	தாயின் மணிக்கொடி	1935	163
78.	சங்கு சுப்பிரமணியன் திருமண வாழ்த்து*	1936	164
79.	எனது நாடு	1936-1937	166
80.	பாம்புப் பாட்டு	1938க்கு முன்	168
81.	சமர்ப்பணம்	1938	170
82.	முஸ்லிம் இளைஞர்களுக்கு வேண்டுகோள்	1938	171
83.	'தை'	1938	172
84.	பட்டாளஞ் சேர்த்தல்	1938	174
85.	இந்திப் போருக்கு அழைத்தல்	1938	176

86.	'தமிழ்மகள் தந்த செய்தி' - நூல் சிறப்புரைப்பா*	1939	177
87.	பிரிந்த பிரானைப் பெறமுடியும்	1940	179
88.	குடுகுடுப்பைக்காரன்	1940	182
89.	ராஜா சர் அண்ணாமலை வள்ளலார் வாழ்த்து	1941	184
90.	அமுதூட்டி அறிவூட்டும் கோயில்	1941	188
91.	அரவிந்தர் யோகம்	1942	190
92.	மாட்சிமிக்க ஆங்கிலேய அரசாங்கத்திற்கும் சொற்பொழிவாளர் என்.தண்டபாணி அவர்கட்கும் வாழ்த்து	1942	192
93.	திருவாரூர் 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்'திற்கு வாழ்த்து	1942	193
94.	திருஅரங்கம் திராவிட வாலிபர் கழகம் - அறிவுலகம் வாழ்த்து	1942	195
95.	எம் கொள்கை	1942	197
96.	ஜனநாயகம்	1942	199
97.	பாரதசேனை*	1942	200
98.	ஆங்கிலர் அறப்போர் வெற்றிமுரசு	1942	201
99.	புத்தாண்டு வாழ்த்து	1943	204
100.	தலைவன் கூற்று	1943	206
101.	தோழி கூற்று (ஆடவர்க்குயிர்)	1943	206
102.	தோழி கூற்று (எம் வீட்டயலில்)	1943	207
103.	திரு.வி.க. மணிவிழா வாழ்த்து*	1943	208
104.	திருமணத்தில் தலைமை வகித்த பெரியார்க்கு வரவேற்பு*	1943	211
105.	கானாடுகாத்தான் வை.சு.ஷண்முகம் மஞ்சுளாபாய் அவர்கட்கு வரவேற்பு*	1943	213
106.	'தமிழ் வாழ்க' - நூற் சிறப்புரை*	1943	214
107.	கூவி அழை கண்ணனையே!	1944	215
108.	திருவரங்கனார்க்கு இரங்கல்*	1944	217
109.	எங்கள் ஊரில்	1944	219
110.	அன்பழகன் - வெற்றிச்செல்வி திருமண வாழ்த்து	1945	220
111.	அது நம்மை ஒன்றுபடுத்தும்	1945	222
112.	மலர்ந்தது முல்லை	1946	223
113.	இராவண காவியச் சிறப்புப் பாயிரம்*	1946	223
114.	பொங்கல் வாழ்த்து	1947	224
115.	ஆளவந்தார்	1947	225

116.	கவிதை மலர்கள் - நூலுக்கு வாழ்த்து*	1947	227
117.	ஏன் சிரித்தாள்?	1947	228
118.	செந்தமிழ் மீட்போம்	1947	229
119.	செந்தமிழ் நாடு	1947	231
120.	வெற்றிப் பறை	1947	232
121.	தமிழ் நலம்	1947	233
122.	நன்றி	1948	235
123.	தொல்லைசெய் நிலவே!*	1948	235
124.	அழகப்பர் அழகுரை	1948	236
125.	எதற்கெடுத்தாலும் சும்-மா எதிர்ப்பாம்	1948	237
126.	தென்றல் அருவி*	1948	238
127.	தையற்கலை வாழ்க	1948	239
128.	அண்ணாவின் உவமைகள் - நூலுக்குச் சிறப்புரை*	1949	240
129.	சுடாத நெருப்பு - நூல் மதிப்புரை*	1949	240
130.	சரசுவதி - இராசவேல் திருமண வாழ்த்து	1949	241
131.	மகள் மருகர் பேரர்க்குப் பொங்கல் வாழ்த்து	1950	243
132.	திருமண வாழ்த்து*	1950	245
133.	தமிழ்நாடு	1950	247
134.	சிவாஜி இதழின் 17ஆம் ஆண்டு வாழ்த்து	1951	249
135.	புலவர் வேணுகோபாலனார் வாழ்க!	1952	251
136.	சரசுவதி - கண்ணப்பர் செல்வி மல்லிகை வாழ்க!	1954	253
137.	அன்றொருநாள் பாரதி	1954	254
138.	புதுவையைப் பற்றி பாரதி அறிக்கை	1954	255
139.	எண்ணருங் கலைகள் ஆய்ந்த அறிஞர்	1955	258
140.	கொய்யாக்கனி - நூல் மதிப்புரை*	1956	259
141.	அன்றைய கருத்து இன்றைய கடமை	1956	260
142.	தமிழர் திருநாள் (ஈன்றபொன்)	1957	262
143.	தமிழர் திருநாள் (தாயகம் எங்கள்)	1957	263
144.	மனத்துக்கண் மாசிலன்	1957	265
145.	ஓவியர்க்கு வாழ்த்து*	1957	270
146.	பாரதியின் விடுதலை வேட்கை	1957	272
147.	நல்லறம் வாழ்க	1958	273
148.	தமிழர் எழுக	1958	274
149.	இந்நாள் காங்கிரசு	1958	275
150.	அறுவரைக் கொன்ற அரசியல் வீழ்க	1958	276

151.	சாதி மறுப்பு	1958	277
152.	மத மறுப்பு	1958	277
153.	தாய்சொல் தட்டேல்	1958	277
154.	மொழிவெறியா கூடாது?	1958	278
155.	நீவிர் எந்தக் கட்சி	1958	279
156.	அணிற் பிள்ளைக்குக் கிளிப்பிள்ளை	1958	281
157.	பெருகும் அன்பு	1958	281
158.	அவள் முகம்	1958	282
159.	தி.க.வில் சேர்ந்த திருவாளர்க்கு வாழ்த்துப்பா	1958	282
160.	ஓவியக் கலைத்திறம்	1958	283
161.	தச்சுக் கலைத்திறம்	1958	283
162.	க.து.விட்டுத் தி.க. வந்தனர் வருக! வாழ்க!	1958	283
163.	மீண்ட செல்வங்கட்கு வரவேற்பும் வாழ்த்தும்	1958	284
164.	காங்கிரசு	1958	285
165.	பொதுப்பணம் அரோகரா!	1958	285
166.	மனத்துணைநாதர்க்கு வாழ்த்து	1958	285
167.	சாராய விற்பனை	1958	286
168.	வடமொழியில் சிபாரிசா?	1958	286
169.	நாட்டில் மிடி இல்லையாம்	1958	287
170.	செந்தமிழ் நாட்டுக்குத் திருநாமம்	1958	287
171.	இறைவன் பணித்ததே நம்பணி!	1958	288
172.	செத்த பிள்ளையை ஆற்றில் எறிவது	1958	289
173.	பம்பாய் ஆர்ச் பிஷப்புக்கு!	1958	289
174.	அமைச்சர் பத்தவச்சலனார்க்கு அறிக்கை	1958	290
175.	இராசாசி தமிழ்படித்தால் வராத வெண்பாவும் வரும்	1958	291
176.	தென்னந்தோப்பு	1958	292
177.	ஒற்றுமைதான் வழி	1958	293
178.	நேரு	1958	295
179.	நேரு ஆட்சி	1958	295
180.	கல்விக்கரசு மணவாளராமாநுசனார் கட்டளை	1958	296
181.	கொம்புத்தேன் - நாடக வாழ்த்து*	1958	297
182.	அமைச்சர் பத்தவச்சலனார்!	1958	298
183.	பெரியார்க்கு வாழ்த்து!	1958	299
184.	பத்தவச்சலம் பாடும் பாட்டு	1958	300
185.	பாவலர்க்குப் பணஉதவி செய்க!	1958	301

186.	இராசாராம் அடங்கவேண்டும்	1958	302
187.	தி.க.வில் சேர்ந்தார் வாழ்க!	1958	302
188.	கண்ணதாசர் கவலை	1958	303
189.	உருசி உதைப்பும், அமரிக்கா அதைப்பும்	1958	303
	உருசிக்கும் அமரிக்காவுக்கும் நாம் கூறும் அமைவு	"	304
	மக்கட்குத் தொல்லையில்லாத வழி	"	304
	உலகப்போர் மூட்டலின் உயிர்விடுதல் நன்று	"	304
190.	பத்தவச்சலம் மேலும் பழியேற்றார்	1958	305
191.	சங்கொலி - இதழ் மதிப்புரை*	1958	305
192.	திரு. முத்தமிழ் அழிக்கும் சட்டர்சிக்குக் கருமுத்துக் கேடயம் கொடுத்தார்	1958	306
193.	இடுப்பில் குழந்தை	1958	307
194.	கொட்டடா பறை!	1958	308
195.	அன்னை தன் மகளுக்கு	1958	309
196.	நானே நீ	1958	310
197.	பெரியாரின் (பஞ்சசீலம்) ஐந்தொழுக்கம்	1958	312
198.	மீண்ட தமிழகத்தில்	1958	312
199.	தமிழனுக்குப் பிறக்க வேண்டும்	1958	313
200.	தாயும் பிள்ளையும்	1958	314
201.	இறகு தமிழ்! பேனா ஆங்கிலம்!	1958	315
202.	பொன்னேட்டில் புதுப்பாட்டு	1958	316
203.	அன்னைமார்க்கு விண்ணப்பம்	1958	317
204.	எங்குள்ள தமிழரும் எங்கள் பட்டாளம்	1958	318
205.	திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் திருமண வாழ்த்து*	1958	319
206.	புறப்படுவீர் விடுதலைப் போர்!	1958	321
207.	தாய் பிள்ளைக்குச் சோறூட்டல்	1958	322
208.	அன்னையின் பூரிப்பு	1958	323
209.	சோம்பித் திரியேல்	1958	325
210.	பள்ளிக்குப் போ	1959	326
211.	வாடல் தவிர்த்து வாழ்வோம்*	1959	328
212.	மானம் மறையா மெல்லுடை!	1959	328
213.	தமிழகம் வென்றாக வேண்டும்!	1959	329
214.	கன்னக்கோல்காரன்	1959	330
215.	தில்லி ஒழிக	1959	331

216.	பெரியாரைப் பின்பற்று	1959	332
217.	வடநாட்டில் பெரியார் முழக்கம்	1959	333
218.	உனக்குமா ஓர் இயக்கம்?	1959	335
219.	காற்றுள்ள போதே!	1959	337
220.	அவர் யாவர்?	1959	338
221.	படார்	1959	341
222.	வெற்றிச்செல்வி - வேங்கடாசலன் திருமணச் சிறப்பு*	1959	342
223.	கலியபெருமாள் எழுந்தருளிய பெரமலூர் பெற்ற பேறு!	1959	343
224.	இதுவுமோர் பிழைப்பா?	1959	345
225.	திருமண வாழ்த்துப்பா	1959	346
226.	சிட்டுக்களும் பூனையும் (மெய்ம் மூவாறு)	1959	347
227.	படிப்பை இகழலாமா?	1959	348
228.	என் ஆசை	1959	349
229.	தமிழர் கடன்	1959	351
230.	ஏனங்குடி ம.சம்பந்தம் அறிக்கை	1959	352
231.	ஏமாறாதே!	1959	353
232.	நமக்குள் சண்டை ஏன்?	1959	354
233.	வந்தார்க்கு வாழ்த்து	1959	355
234.	திபேத்து விடுதலை	1959	356
235.	வாருங்கள்	1959	357
236.	என் விலங்கை மாற்று	1959	359
237.	நல்லவர் ஆண்ட புதுவையிலே நரிகளுக்கே இன்னும் நாட்டாண்மையா?	1959	361
238.	என் நூல் அருமை எனக்கே தெரியும்	1959	362
239.	நன்றாயில்லை	1959	364
240.	ஒற்றுமை	1959	365
241.	வெல்க தமிழ், வெல்க தமிழர்!	1959	367
242.	பொன்முடியார் - புலவர் திருஞானம் திருமண வாழ்த்து*	1959	369
243.	தமிழக முதலமைச்சர் காமராசர் 57ஆவது ஆண்டுவிழா வேண்டினோர்க்கு நன்றி	1959	370
244.	அறிவும் கலையும்*	1959	374
245.	ஏடும் எண்ணமும்*	1959	374
246.	சொத்தும் சுவடியும்*	1959	374

247.	பேறும் வேறும்*	1959	374
248.	தன்னலம்*	1959	375
249.	அறமும் திறமும்*	1959	375
250.	ஐந்தறிவும் மெய்யுணர்வும்*	1959	375
251.	ஆசிரியர் வாழ்த்து	1959	376
252.	சாகாமைக்கு ஒழுக்கம் காரணம்	1959	378
253.	சுண்டல் காரணப் பெயர்	1959	378
254.	மகளிர் ஒழுக்கம்	1959	379
255.	தமிழ்போனால் மேடைத்தம்பிரான் பாடைத்தம்பிரான்தான்	1959	380
256.	கோழிகள் ஒழிக	1959	380
257.	படிக்காதவன் சிரிப்பு	1960	381
258.	பொதிநாத் துவையல் அருமை	1960	381
259.	பாரதிதாசன் திருக்குறள் (ஒருவன்)	1960	382
260.	தலைவி விழுந்து விழுந்து சிரித்தாள்	1960	382
261.	கிழக்குச் சுவருக்கு அப்பால் தமிழ்விளக்கு	1960	383
262.	நாடு, மொழி, பண்பாடு, எல்லை, கலை	1960	383
263.	எங்கே வாழ்வு?	1960	383
264.	துணைத்தலைவர் இலக்குமணசாமி	1960	384
265.	பாரதிதாசன் திருக்குறள் (தானும்)	1960	384
266.	தினத்தந்தி	1960	384
267.	இல்லை, ஆனால் உண்டு	1960	385
268.	பெருமாள் கோயில் தெருவில் அலார்	1960	385
269.	அமரிக்கரைப் பார்! உருசியரைப் பார்	1960	386
270.	உலக்கைக் கொழுந்தே	1960	386
271.	ஆளவந்தார் முதற்கடன் கல்வி அளிப்பது	1960	386
272.	மாணவர்க்கு உறங்கும் நேரந்தான் ஓய்வுநேரம்	1960	387
273.	நீ ஒரு பாவாணன்	1960	387
274.	அறிவை ஆசையால் தோண்டினால் புதியமனம் உண்டாகும்	1960	387
275.	எழுத்தை அழகாய் எழுது	1960	388
276.	நினைவாற்றல் வேண்டும்	1960	388
277.	தமிழ்	1960	388
278.	கம்மாளன் பிள்ளை	1960	389
279.	தமிழைத் தமிழனிடமிருந்து பிரிக்க முடியாது	1961	390

280.	'கலை' இதழ் தீபாவளி மலர் - கவிஅரங்க வாழ்த்து	1961	391
281.	கலை விருந்து வாழ்க!	1962	393
282.	இரவின் இளவரசி	1962	395
283.	பாவேந்தர் பாரதிதாசனார் வாழ்த்து	1962	397
284.	வேலன் பாட்டு	1962	398
285.	யார் நல்லவன்?	1962	400
286.	பூனைக்குட்டியும் மண்ணாங்கட்டியும்	1962	402
287.	பெயர் தெரியாத மணமலர்	1962	402
288.	நன்னெறியில் வளர்வது திறமை	1962	403
289.	சின்ன பீடி	1962	403
290.	தலைவன் தளர்ச்சி*	1962	404
291.	பிள்ளைக்கு	1962	404
292.	வெற்றிலைக்கு முன் என்ன போடவேண்டும்?	1962	405
293.	இழந்த பி.எஸ்.ஞானம்	1962	405
294.	கெட்ட பையன்	1962	406
295.	அழகாய் எழுது	1962	407
296.	நல்ல பிள்ளை (அம்மாவுக்கு)	1962	408
297.	படிப்பு இருக்கும்	1962	409
298.	மன்ற உறுப்பினர்க்கு நன்றியும் மற்றவர்க்கு வேண்டுகோளும்!	1962	409
299.	கவிஞர் கண்ணதாசர்க்கு நன்றியும் வாழ்த்தும்	1962	410
300.	படியாதவன்	1962	411
301.	ஆலமரத்துக் கிளிக்கு அழைப்பு	1962	413
302.	தி.மு.க. அட்டூழியம்!	1962	414
303.	கல்லெறிதல் நன்றா?	1962	414
304.	தொலைபேசிக்குத் தீயா?	1962	414
305.	மிதிவண்டிக்குத் தீயா?	1962	415
306.	பேருந்துவண்டி சிதைத்தது சரியா?	1962	415
307.	கண்ணியமா? புண்ணியமா?	1962	415
308.	மருத்துவ இல்லத்திலும் வம்பா?	1962	416
309.	எரிந்தன பெண்கள் வயிறு!	1962	416
310.	தி.மு.க.வின் இறுதி	1962	416
311-328	சிறப்புக்கவிகள்	1962	417
329.	ஏரி	1962	419
330.	நல்லபிள்ளை (வில்லாதி)	1962	420

331.	பாரதிவிழா	1962	421
332.	வணக்கமும் வாழ்த்தும்*	1962	426
333.	தேசத்தைக் காத்தல் செய்	1962-1963	427
334.	விட்டுவிடுவேனா?*	1963	430
335.	திரு.வி.க. பாடல் திருத்தம்*	1963	431
336.	நிலவுப்பூ - அணிந்துரை	1963	433
337.	கொடி வணக்கம்	1963	434
338.	குபேர்க்கு வாழ்த்து*	1963	435
339.	எந்தநாள் திருநாள்	1963	437
340.	கவிஞர்கள் தேவை!	1963	439
341.	தெவ்வரை வீழ்த்தித் தெசிணி வாழ்க	1964	442
	காலம் தேடும் பாடல்கள்		
342.	நாவேந்தர் பற்றிப் பாவேந்தர்*		443
343.	மாணவர் பாட்டு - நூற் சிறப்புரை*		444
344.	பொருள்வரிசை*		445
345.	பாரதி சாப்பாட்டுக் கட்டுப்பாடு		446
346.	குழந்தைத் திருமணம்		447
347.	சூழ்நிலை நாடக மன்றத்திற்கு வாழ்த்து		448
348.	பொங்கல் வாழ்த்து		449
349.	மங்கையர்க்கரசி சாம்பசிவன் மணவாழ்த்து		450
350.	வரலாற்றை முழக்கிடுக உலகமெலாம்		451
351.	மூத்தவரின் வாழ்த்து		453
352.	ராஜா நலங்கிடவா*		454
353.	வா கண்ணா*		456
354-365	**மொழிபெயர்ப்புப் பாடல்கள்**		458
	இணைப்பு		
	பாடல்கள் முதற்குறிப்பு அகரநிரல்		481
	பாடல்கள் தலைப்பு அகரநிரல்		491
	சிறப்புப் பெயர் அகரநிரல்		500
	எழுத உதவிய ஏடுகள்		506

* உடுக்குறி இடப்பெற்ற தலைப்புகள் பதிப்பாசிரியரால் சுருக்கியோ மாற்றியோ புதுவதாகவோ தரப்பெற்றவை.

1904

1. மறைப்பதென்ன?

பழங்கலத்தில் பழங்களைத்தான்
பார்த்துத்தேடி(ப்)[1] பயல்களைத்தான்
கிழங்களைத்தான் உதைக்கவேண்டும்
கெடுநினைப்பே[2] அதிகமப்பா
ஒழுங்குபட வாழைச்சீப்பில்
ஒன்றுவிழுக் காடுதந்தாள்
விழுங்கிடவே அண்ணாவுக்கு
மீத்துக்கொடுக்க மறைப்பதென்ன?

குறிப்பு :

கனக சுப்புரத்தினம் 13ஆம் அகவையில் இயற்றிய பாடல் இது. அவரின் பெரியம்மா வாழைச்சீப்பு ஒன்றை வாங்கி வந்து சுப்புரத்தினத்திற்கும் வேறு சிலர்க்கும் ஆளுக்கு ஒரு பழம் தந்துவிட்டு மீதிப் பழங்களையெல்லாம் அண்ணன் சுப்பராயனை எடுத்துக்கொள்ளும்படிக் குறிப்புக்காட்டியபின் பழங்கல அறைக்குள் ஒளித்துவைத்தாள். பிறர் அறியாமல் கனகசுப்புரத்தினம் அப்பழங்களைத் தின்றதோடு அதனை அறிந்த தன் தந்தையிடம் பெரியம்மாவின் முறையற்ற செயலைக் கண்டித்து எழுதிக்கொடுத்த பாடல் இது. இதில் 'பயல்களைத்தான்', 'உதைக்க வேண்டும்' எனும் தொடர்களில் பாரதிதாசனின் எதிர்ப்புக்குரல் பதிவாகியுள்ளது.

வே.
1. பார்த்துத்தேடும் (க.கு.)
2. கெடுநினைப்போ (க.கு.)

- புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கையிலே, ப. 13-14
கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப. 22-23

1907

2. இலாவணிப் பாட்டு

நீலமலர் தன்னையும்
கோலக் கெண்டை மீனையும்
நிகர்க்குதே இவள் நேத்ரம்
என்ன காத்ரம்?
நான்எம் மாத்ரம் - இந்த
வாலைப் பெண்ணைப் புணர
வேண்டுமே கொக்கோக சாத்ரம்

ஏக காலத்திலிரு
சூரியன் புறப்பட்டா
எப்படித் தானிருக்கும் ஓது?
அதுபோல் காதில்
இருப்ப தேது?

ஒப்பாலாயிரம் பெறும்
கொப்பு முதல்நகைகள்
இழையாலாயிரம் பெறும் தாவணி
மற்றும் பூவணி - கனக
சுப்புரத்னம் சொன்னான்
அடியாலாயிரம் பெறும் லாவணி.

குறிப்பு :

ஒரு காதலன் காதலியின் உறுப்பழகை வருணித்துப் பாடுவது போலக் கனக சுப்புரத்தினம் தனது 16ஆம் அகவையில் எழுதிய ஓர் இலாவணிப்பாட்டிலிருந்து அவராலேயே நினைவுகூரப்பட்ட சில வரிகளே இவை. ஒருநாள் பாரதியாரின் வீட்டு மாடிமேல் இந்தப் பாடலை இசையோடு இளம்பருவ நண்பர்கள் சிலரிடம் பாடிக்காட்டிக் கொண்டிருந்தபோது அவர்களறியாமல் இப்பாடலைக் கேட்டுப் பாரதியார் 'சபாஷ்' என்று கூறித் தன் முதுகில் தட்டிக் கொடுத்துப் பாராட்டியதாகப் பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார்.

- பாவேந்தர் நினைவுகள் (முதற்பகுதி), ப.89-91

1907

3. ஆயிரம் பெறும் இலாவணி

அள்ளி அமுத முண்ணும் ஆழக் கிணறு முண்டாம்
அதுவே முத்திக்குப் போகும் மார்க்கம்
கண்டால் வேர்க்கும்: காமனைத் தீர்க்கும் எங்கும்
எள்ளது நிறைந்த தங்கத் தட்டெனவே இனிமை சேர்க்கும்

ஆலிலையோ வயிறு மரவி னுடலோ கைகள்
நூலிழையோ அந்த இடுப்பு; அண்டை மடிப்பு;
சதங்கை முடிப்பு நிதம்
காலில் விழுந்தாகிலும் பெறவேண்டுமே இவள் தொடுப்பு

ஒப்பால் ஆயிரம் பெறும் கொப்பு நகைகளுடன்
செப்பிலோர் கோடி பெறும் காதணி
முகமல் தாவணி; கொண்டைப் பூவணி கனக
சுப்புரத்தினம் சொன்ன அடிகள் ஆயிரம் பெறும் லாவணி!

குறிப்பு :

பாரதிதாசன் மாணவரும் அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவருமான 'பாவலர் மணி'சித்தன் 'பாவேந்தருடன் பயின்ற நாள்கள்' (1990) என்னும் தன் நூலில் முன், பின் குறிப்புகளோடு பதிவு செய்துள்ள பாடல் இது. 'நீலமலர் தன்னையும்' எனத் தொடங்கும் முந்தைய பாடலின் இறுதி அடியோடு இப்பாடலின் இறுதி ஒத்திருந்தாலும் முன் பகுதிகள் வேறுபட்டுள்ளன.

இந்த இலாவணிப் பாடல் எவ்வாறு தோற்றம் பெற்றது என்பது பற்றிச் சித்தன் குறிப்பிடுவதாவது:

"மருத்துவர் சி.எம்.சாமி தனிமையாக இருந்த அந்த இல்லத்தில், அந்நாள் புதுவை அரசியலில் ஒரு பிரிவைச் சேர்ந்த சிலர் கூடுவர்...

கவிஞரிடம் அவர்களுக்கெல்லாம் பெருமதிப்புண்டு. ஒருநாள் கவிஞர், சி.எம்.சாமி (மருத்துவர்) செய்து கொண்டிருப்பது 'என்ன இலேகியம்' என்று வினவினார்.

மருத்துவர் சொன்னார் "இது ஸ்தம்பன இலேகியம்" இதற்குப்

பெயர் 'இந்திர புஷ்பாதி இலேகியம்' என்பது என்று. "அதை உண்பவர் யானையின் வலிமையைப் பெறுவர்" என்று தெருச் சுவரில் எழுதிவைத்திருந்தார்.

கவிஞர் கேட்டார்; 'இது காம இச்சையைத் தூண்டுவதா?' என்று.

அதற்கு சி.எம்.சாமி "உங்கள் பாட்டை விடவா?" என்றார்.

அந்தப் பாட்டு, அந்த மருத்துவர் இல்லத்தில் இருந்த சில அன்பர்களின் தூண்டுதலினால் எழுதப் பெற்றதாம். இன்பச் சுவை மிக்க பாடல் அது; இலாவணியாக அமைந்தது அப்பாடல்.

இந்த முன்குறிப்போடு பாடலை வழங்கியுள்ள சித்தன் இறுதியில் "இதன் தொடர்ச்சியாக மேலும் இரண்டு பாடல் களை அவர் சொன்னார். முதுமை, மறதி இவை காரணமாகச் சி.எம்.சாமியால் பாடல்களைப் பிழையின்றிச் சொல்ல இயலவில்லை. மேலே சொன்ன பாடல்களிலும் கூடப் பிழைகள் இருக்கலாம் என்றார்" என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

- **பாவேந்தருடன் பயின்ற நாள்கள், ப.131-133**

4. விண்ணோர் பதியே!

காணும் பொருளிலெல்லாம்
கண்ணாஉன் இன்னுருவம் காணேனோ
பூணும்என் உள்ளமெல்லாம்
புன்மைதீர்ந் துன்பதத்தைப் பூணேனோ

கேட்கும் ஒலியனைத்தும்
கேசவா என்றென் காதில் கேட்காதோ - நான்
வேட்கும் பொருளனைத்தும்
விண்ணோர் பதியே நீயாய் விளையாயோ!

குறிப்பு :

'குமுதம்' இதழில் "வழிகாட்டிகள்" எனும் தலைப்பில் பாரதி தாசன் எழுதியுள்ள கட்டுரையில் இடம்பெற்றுள்ள பாடல் இது. பாரதியாரைக் காணுமுன்னரே தன்னால் பாடப்பெற்ற பல்லாயிரம் பாடல்களில் ஒன்றாகப் பாரதிதாசன் இதனைக் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து இப்பாடல் 1911க்கு முன் பாடப்பெற்றதாகக் கருதலாம்.

- குமுதம் வார இதழ் 16.3.1961

1916–1917

5. இராமாயணக் கதை நிகழ்ச்சிப் பாடல்

இந்திராதியர் கண்டு மகிழ்ந்திடும்
மடந்தையர் பலர் நடந்தார்!
இலையோ இடையென மயல்கொளவரும்
இந்திராதியர்...

கிஞ்சுக வாயிதழ் சந்திரிகை வீசிட
பந்தமிலாமுனி தங்கும் வனத்திடை
இந்திராதியர்...

தம்பியிவ் வனம்பாராய்!
கொம்பில் மாமலர்களெல்லாம் கொட்டும் தேனில்லாமல்
கோங்கு படலம் யாவும் ஏங்கியிருப்பதென்ன
தம்பியிவ்வனம்...

குறிப்பு :

ஒரு பாகவதர் இராமாயணத்தைக் கதாகாலட்சேபம் செய்வதற்கான இசைப்பாடல்கள் எழுதித்தருமாறு பாரதியிடம் கேட்க, பாரதியார் பாகவதரைக் கனக சுப்புரத்தினத்திடம் ஆற்றுப்படுத்த, அவர் எழுதிக் கொடுத்த பாடலின் சில வரிகள் இவை.

பாகவதர் பெயர் பெலாப்புத்தூர் சீனிவாச பாகவதர் (க.கு.ப.94) என்று குறிக்கப்பட்டுள்ளது. கவிஞர் ஆலங்குப்பத்தில் ஆசிரியப்பணியாற்றிய காலத்தில் மேற்குறித்த நிகழ்ச்சி நடந்ததாக மன்னர்மன்னன் குறித்துள்ளார். (க.கு.ப93-94). இதிலிருந்து அங்குப் பணியாற்றிய 7.7.1916 - 10.4.1917 ஆகிய காலக்கட்டத்தில் இப்பாடல் எழுதப்பட்டதாகக் கொள்ளலாம்.

பேரா. ந.இராமநாதன் தன் நினைவிலிருந்து கூறியதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள இப்பாடல் (பா.பா.பா.), இராமாயணத்தில் கலைக்கோட்டு முனிவரை அழைத்துவர அனுப்பப்பட்ட பெண்கள் வனத்திடைச் செல்வதைப் பேசுகிறது. பாடலின் இறுதிப்பகுதி மடந்தையர் நடந்ததைச் சொல்லாமல் தம்பியை விளித்துப் பேசுவதாக வேறுபட்டு விட்டிசைக்கின்றது. வனத்தை வருணிக்கும் பிறிதொரு பாடலின் பகுதியாக இது

அமையலாம். இப்பகுதியில் பரதன் தன் பாட்டன் கேகயனது மாளிகையிலிருந்து அயோத்திக்குப் புறப்பட்டு வரும்போது பின் நிகழப்போகும் நிகழ்ச்சியை முன்னறிவிக்கும் தீயநிமித்தமாக மலர்களின் வாட்டம் குறிக்கப்படுகிறது எனக் கருதலாம்.

(பாகவதரிடம் 'இந்திராதியர் தொழும்' என்று தொடங்கும் பாடல் முதற்கொண்டு பல்வேறு பாடலை எழுதி அளித்தார் (க.கு.ப.94) எனும் குறிப்பு பாடலின் தொடக்கத்தைப் பிறழப் பதிவு செய்துள்ளது.)

- பாரதிதாசன் பார்வையில் பாரதி, ப.230
கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.94

5அ. இராமாயணக் கதைநிகழ்ச்சிப் பாடல்

இந்த்ராதியர் கண்டு மகிழும்
மடந்தை [1] பலர் நடந்தார்
இலையோ இடைஎன
மயல்கொள வரும் *(இந்த்ராதியர்)*

சிந்துர வாயிதழ் சந்த்ரிகை வீசிடப்
பந்த மிலாமுனி தங்கும் வனத்திடை *(இந்த்ராதியர்)*

செந்தேனில் இனிக்கும் பக்ஷணமும்
சீதக்குல மலரும்
சிதையா மதுரித மொழுகிட வரும் *(செந்தேனில்)*

சந்தன குங்குமச் சாந்து வகைகளும்
மந்தமாருதம் வீசும் நந்தனமே என்று *(இந்த்ராதியர்)*

குறிப்பு :

பாரதியாரின் வரலாற்றினைத் திரைப்படமாக எடுப்பதற்குப் பாரதிதாசன் எழுதிய 'மகாகவி பாரதியார் வரலாறு' என்னும் எழுத்தோவியத்தில் இடம்பெற்றுள்ள பாடல் இது. 'இந்த்ராதியர்' எனத் தொடங்கும் இப்பாடலும் கலைக் கோட்டு மகரிஷியை அழைத்துவரப் பெண்கள் செல்வதைச் சொல்கின்றது. நினைவிலிருந்து கூறப்பட்ட முந்தைய பாடலைவிட வடிவச் செம்மையுடையதாகவும் வேறுபாடு கட்கு இடமில்லாததாகவும் இப்பாடல் அமைந்துள்ளது.

பாடல்கேட்டு வந்த பாகவதரின் பெயர் 'பலாப்புத்தூர் ஸ்ரீநிவாச ஐயங்கார்' (பா.ப.ப.195) என்று எழுத்தோவியத்தில் குறிக்கப்பெற்றுள்ளது.

1. 'மடந்தையர்' என இருப்பின் நன்று

- பாட்டுப் பறவைகள், ப.197-198

6. பராசக்தியிடம் முறையிடல்

(நொண்டிச்சிந்து மெட்டு)

கெஞ்சுவதன் பயனோடி - அம்மா
கேடுவந்து சேருவதுன் தயவோடி - எனை
மிஞ்சவிட மனமில்லையோ நாங்கள்[1]
மேநிலையி விருந்ததை அறியாயோ - இந்த
மஞ்சிலுயர் வானமறிய - இந்த
மண்அறியத் தேவி உந்தன்[2] மனமறிய - நாங்கள்
பஞ்சை யெனப்பறந்த துண்டோ - இந்தப்
பாரிலுள்ள தேசங்கள் இகழ்ந்ததுண்டோ?
(உன்னைக் கெஞ்சுவதன்)

ராமன்என ஓர்அரசன் - அவன்
ராச்சியத்திலே வறுமைப் பேச்சுக்கள் உண்டோ? - இந்த(ப்)
பூமிமுழு தாண்டிருந்தவன் - ஒரு
பூததயை யேயுடைய மாயவனுந்தான் - அன்று
சாமியென்றும் அடிமையென்றும் - ஒரு
சாதன மென்றால் பலவி வாதமிடுவார் - என்று
நாமறியக் கேட்டது முண்டோ - நித்தம்
நாளுக்கொரு துன்பம் எனவளர்வ தெல்லாம்
(உன்னைக் கெஞ்சுவதன்)

முப்பத்து முக்கோடி ஜனங்கள் - நாங்கள்
மோசமறியா திருந்தோம் முனிவர் மக்கள் - இதைச்
செப்பிடினும் பிறர்அறியார் - இந்தச்
சகமுழுதிலும் கொண்ட பகைமையிலே - நமர்
ஒப்பி அந்தத் துரைத்தனத்தார் ஐயம்[1]
ஓங்கிநிற்கவே படை தாங்கியிருந்தோம் - நாம்
கப்பல்மிசைக் கடல்கடந்தோம் - முன்னர்(க்)
கண்டறிந் திடாதபல தேசம்டைந்தோம்
(உன்னை)

சீறிவரும் குண்டின் இடையே - அங்கு(ச்)
சிங்கம்எனப் பாய்ந்துவரும் பகைவர்முன்னே - நமை
நீறுசெய்யும் விஷப்பந்துகள் - நாம்
நிற்கையில் உறங்குகையில் இடிபோல [1]
வீறுகொள வெடித்திடுமே - நமை
வெற்றிபெறச் சேகரித்த மாயப்புகையில் - நமை
மீறிவரும் மயக்கத்திலே - சிலர்
மீண்டுவரப் பலபேர் ஆவிதுறந்தார்
(உன்னை)

ஆள்கொடுத்த பெருநாடு - பின்னும்
அளவின்றிப் பொருட்குவை கொடுத்திருக்க - இங்கு(க்)
கோல்நடத்தும் துரைமார்கள் - நமைக்
கொடியதோர் சட்டமிட்டுக் கடுமைசெய்தால் - அந்த
நாள்கொடுத்த வாக்குறுதியை - நிலை
நாட்டுவது துரைமன்னர் கடமையன்றோ - இது
நீள்புவிக்குள் அதிசயமே - இங்கு
நியாயமென்ப தனைவர்க்கும் பொதுவில்லையோ?
(உன்னை)

குறிப்பு :

பாரதியார் கேட்டுக் கொண்டதற்கிணங்கக் கனக சுப்புரத்தினம் இயற்றியதாகக் குறிப்பிடப்படும் 'எங்கெங்கு காணினும்' எனத் தொடங்கும் சக்திப்பாட்டைப் பலரும் அறிவர். பின்வரும் பாட்டோ பாரதியாரின் மூத்த மகள் தங்கம்மாள் பாரதி 'எந்தையும் தாயும்' என்னும் நூலில் உலகுக்கு அளித்துள்ள பாரதிதாசனின் பாட்டு. இப்பாட்டின் முற்குறிப்பு அன்றைய கனக சுப்புரத்தினத்தை அழகாகப் படம்பிடிக்கிறது:

"இன்று புரட்சிக்கவிஞர் என்று புகழப்படும் பாரதிதாசன் அன்று வாத்தியார் சுப்புரத்தினம். கையில் தங்கக் காப்புடனும் உருமாலைப் பட்டு அங்கவஸ்திரம் தோளில் துலங்கவும், நான் தமிழன் என்ற எக்களிப்பும் இறுமாப்பும் விழிகளில் மிதக்கத் தோன்றுவார். பராசக்தியை அவர் போற்றிய பாட்டு இப்பொழுது அவர் கவிதைத் தொகுப்பில் காணப்பட வில்லை. நாட்டின் இழிநிலையைக் கண்டு கொதிக்கும் கவிஞனின் உள்ளத்தை அந்தப் பாட்டிலிருந்து அறிந்து கொள்ளலாம்".

1. இறுதிச்சீராக இடம்பெறும் தனிச்சொல் இடைக்கோடிட்டுக் காட்டப்பெறவில்லை.
2. 'உன்றன்' என மூலம் திருத்தப்பெற்றுள்ளது. (பா.பா.பா.)

- எந்தையும் தாயும், ப.29-30

பாரதிதாசன் பார்வையில் பாரதி, ப.228

7. ஆசிரியர் பு.அ.பெரியசாமிப்பிள்ளைக்கு இரங்கற்பா

பூமியை மறந்துவிட் டீரே எமக்கிங்கோர்
போக்கிலா தாக்கினீ ரெம்
புன்மதி விளக்குமதி காரத்தை நீரிங்குப்
பொற்கதிர்க் களித்திரேனும்

யாமதைப் புதுமையாய்க் கொள்வதுண் டோதினம்!
எங்கள்பாற் காட்டுமன்பை
ஈன்றதாய்க் கீந்துசென் றீரெனினு மன்னதால்
இதயத்து எமுத முறுமோ!
தாமமில் லாதுகவி பாடிடுந் தன்மையைச்
சமுத்திரத் தீந்தி ரதுதான்
சாற்றுவது மற்றோர் முறைசாற்றுமோ கீர்த்தியைச்
சாரிமய மலையில் வைத்துச்
சாமியும் பொறுமையைப் பூமிக் களித்துச்
சகக்கடை வரைபெரிய
சாமியிடம் நிறுவி... ... ...
தாணுவடி வெய்தினீரே!

குறிப்பு :

இறுதியடி சிதைந்துள்ள இந்த இரங்கற்பா, சுப்புரத்தினத்தின் ஆசிரியர் 'சாரம் மகாவித்வான் பு.அ.பெரியசாமிப்பிள்ளை' 24.1.1920இல் மறைவுற்றதையொட்டி எழுதப்பட்டது. பாரதிதாசன் இறுதிக்காலத்தில் எழுதிய தன்வரலாற்றுக் கவிதையில்,

"புலவர்க்குப் புலமை ஈந்து, நிலவு
பெரும்புகழ்ப் பெரியசாமிப் பிள்ளை"

என்று இவரைப் போற்றுவார்.

- கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.109

7.11.1922

8. தொண்டரைச் சேர்த்தல்

(ஸ்ரீ குணங்குடி மஸ்தான் "போவோம் குணங்குடிக் கெல்லோரும் - புறப்படுங்கள்" என்று பாடிய மெட்டில் இதனைப் பாடித் தொண்டர்கள் - மற்றும் பாரதப் புத்திரர்களைத் தொண்டர்படையிற் சேரக் கேட்கவேண்டும்.)

பல்லவி

சேர்வீர் தொண்டர் படைக்கெல்லோரும் - அரைநொடியில்
(சே)

அநுபல்லவி

பாரீர் நமக்கு வந்த கேடு! - பொறுக்கவில்லை
வாரீர் இதனை அடியோடு கல்ல எம்மோடு
(சே)

சரணங்கள்

இன்பம் பொலிந்ததிரு நாட்டை - நவமணிகள்
ஈன்றார் குவித்துவைத்த வீட்டை - மறவர்குலம்
என்றும் மலிந்திருக்கும் காட்டை - இணையுலகில்
இல்லா விதம்கிடைத்த தேட்டைப் - பிறர்தளைத்த
வன்மை விலங்க கலப்பூட்டை - யுடைத்துக்காட்டச்
(சே)

கண்ணன் வழிப்பிறந்த சாதி - நமக்கருந்த(க்)
கஞ்சியன்று வயிற்றிற் பாதி - பிணிவகைகள்
நண்ணி வருத்துவது மீதி - அடிமையென
நம்மைப் பிடித்திட்டவி யாதி - தொலைந்ததென்று
விண்ணும் அதிர்சங்கை யூதிப் - "பராக்" கென்றோதிச்
(சே)

காளை யருச்சுனனி றந்தான் - அறம்புரந்த
கண்ணன் நம்மைவிட்டுப்ப றந்தான் - சிபியுமிந்த
வேளைதனி லின்றிம றைந்தான் - எனினும் அவர்
1...........
தோளே நமக்குமென் றறிந்தோம் - உடன்பிறந்தோம்
(சே)

வாழ்வே மிகச்சிறிய நேரம் - இதற்கிடையில்
மானம் இழப்பதுவி காரம் - உயிர்கொடுத்தும்
தாழ்வை யகற்றுவது வீரம் - நமதுரிமை
தாங்கி நடத்தல்சமு சாரம் - அரைவயிற்றுக்
கூழோடி றப்பதுவி சாரம் - அதிக கோரம்

(சே)

சாரைச் சிற்றெறும்பெனக் கூடிச் - சிங்கங்களென்னச்
சள்ளைக் கலிப்பகையைச் சாடி - இழந்தபழம்
பேரை நமது தலைசூடி - உடன்பிறந்தும்
பேதம் கொள்ளும்வரை நாடி - வாய்மையெனும்
போரை நடத்த இன்று கோடிக் - கணக்கிலோடிச்

(சே)

குறிப்பு :

பாரதி மறைவுக்குப் பின் 'K.S.பாரதிதாசன்' என்னும் புனை பெயர் பூண்டு 'தேசீயக் கீர்த்தனைகள்' எழுதத் தொடங்கிய காலப் படைப்பு இது.

இன்று கிடைக்காத 'தொண்டர் படைப் பாட்டு' என்னும் நூலில் இடம்பெற்றதாகக் குறிக்கப்பெறும் 'தொண்டரைக் கூட்டுதல்' எனும் தலைப்பில் அமைந்த பாடலாக இதனைக் கருதலாம்.

1. அடி குறைந்துள்ளது.

- தேசசேவகன், 7.11.1922, ப.4.

7.11.1922

9. தெய்விகத் தாய்நாடு

நாதந்தி னாதந்தி
நாதந்தி னாதந்தி
நாதந்தி னாதந்தி - தந்தி னாதந்தி
நாதந்தி னாதந்தினா

கலைகற்ற தாய்செல்வ
நிலைபெற்ற தாய்நாடு
மலைபெற்றதாய் எங்கள்தாய் - எனிற்பாரதத்தாய்
புலையற்ற தெய்விகத்தாள்

யோகத்தின் தாய்கொள்கை
வேகத்தின் தாய்செய்யும்
யாகத்தின்தாய் எங்கள்தாய் - எனிற்பாரதத்தாய்
ஏகத்தின் தெய்விகத்தாள்.

சாந்தத்தின் தாய்நல்ல
மாந்தர்க்குத் தாய்நீதி
வேந்தர்க்குத் தாய்எங்கள் தாய் - எனிற்பாரதத்தாய்
வாய்ந்திட்ட தெய்விகத்தாள்

அன்புக்குத் தாய்தோளின்
வன்புக்குத் தாய்வேண்டும்
இன்பத்தின்தாய் எங்கள்தாய் - எனிற்பாரதத்தாய்
சம்பத்தின் தெய்விகத்தாள்.

வென்றிக்குத் தாய்கீதத்
தென்றற்குத் தாய்நீத
மன்றுக்குத்தாய் எங்கள்தாய் - எனிற்பாரதத்தாய்
தன்னொத்த தெய்விகத்தாள்.

அமருக்குத் தாய்வெற்பின்
இமயத்தின் தாய்ஆறு
சமயத்தின்தாய் எங்கள்தாய் - எனிற்பாரதத்தாய்
நமையீன்ற தெய்விகத்தாள்

தீரர்க்குத் தாய்ஞான
வீரர்க்குத் தாய்கற்பின்
நாரீயர்தாய் எங்கள்தாய் - எனிற்பாரதத்தாய்
சீருள்ள தெய்விகத்தாள்.

நீதத்தின் தாய்தெய்வ
கீதத்தின் தாய்நாலு
வேதத்தின்தாய் எங்கள்தாய் - எனிற்பாரதத்தாய்
போதங்கொள் தெய்விகத்தாள்.

நீதிக்குத் தாய்நாலு
சாதிக்குத் தாய்உண்மை
போதிக்குந்தாய் எங்கள்தாய் - எனிற்பாரதத்தாய்
காதல்செய் தெய்விகத்தாள்.

சீதைக்குத் தாய்இவர்
மாதுக்குத் தாய்நல்அ
சோதைக்குத்தாய் எங்கள்தாய் - எனிற்பாரதத்தாய்
நீதங்கொள் தெய்விகத்தாள்.

புத்தர்க்குத் தாய்தேர்ந்த
பக்தர்க்குத் தாய்கோடி
சித்தர்க்குத்தாய் எங்கள்தாய் - எனிற்பாரதத்தாய்
வித்தகத் தெய்விகத்தாள்.

வங்கர்க்குத் தாய்சீனச்
சிங்கர்க்குத் தாய்வன்தெ
லுங்கர்க்குத்தாய் எங்கள்தாய் - எனிற்பாரதத்தாய்
இங்குற்ற தெய்விகத்தாள்.

நாரதன் தாய்நற்ப
கீரதன் தாய்சோழ
சேரனின்தாய் எங்கள்தாய் - எனிற்பாரதத்தாய்
வீரங்கொள் தெய்விகத்தாள்.

கம்பற்குத் தாய்காளி
நம்பற்குத் தாய்மற்ற
சம்பத்தின்தாய் எங்கள்தாய் - எனிற்பாரதத்தாய்
இம்பர்க்குத் தெய்விகத்தாள்.

விசயர்க்குத் தாய்கண்ணன்
இசைபெற்ற தாய்கீதை
ரசமுற்றதாய் எங்கள்தாய் - எனிற்பாரதத்தாய்
வசையற்ற தெய்விகத்தாள்.

அணிபெற்ற தாய்பொன்னின்
மணிபெற்ற தாய்அத்தன்
துணைபெற்றதாய் எங்கள்தாய் - எனிற்பாரதத்தாய்
இணையற்ற தெய்விகத்தாள்.

குறிப்பு :

'யாகத்திலே - தவ
வேகத்திலே' எனத் தொடங்கும் பாரதியின் 'பாரதநாடு' பாடலின் சாயலை இதில் காணலாம்.

- தேசசேவகன், 7.11.1922, ப.4

7.11.1922

10. சக்திக்கு விண்ணப்பம்

(காவடிச் சிந்து)

தேசத்திலே இந்த நேரத்திலே நல்ல
தீரரை ஆக்கிடுவாய் - இன்றே அச்சப்
பேய்தன்னைப் போக்கிடுவாய் - எங்கள்
பூசையெலாம் உனதாக்கி எமைஅண்டும்
பேதமை நீக்கிடுவாய்.

நீசத்திலே அரைவீச மெங்கள்
நினைப்பில் வராதவிதம் - நன்றே உன்றன்
நேசம்உண் டாக்குநிதம் - கொண்ட
ஆசை தணிந்திடக் கேட்பதெல்லாம் அடி
அன்னையுன் தண்டைப்பதம்.

தன்னுயிர் நீத்தும் பிறர்க்கிதம் தேடிடும்
தன்மை எமக்கருள்வாய் - அம்மாளங்கள்
வன்மைப் புயத்தமர்வாய் - எங்கள்
இன்னல் தவிர்க்கும் குலத்தெய்வமே நெஞ்சில்
ஏக்கம் தவிர்த்திடுவாய்.

பண்ணும் சமூக நினைப்புக்கு மாறான
பாவிகள் சாகட்டுமே - அல்லாமல் இனி
நேர்மையி லேகட்டுமே - அடி
இன்னும் பொறுக்க வென்றால் தகுமோ இக்கண்
எம்முயிர் போகட்டுமே.

உண்ணக் கொடுத்தவளே எங்களுக்குநல்
லூகம் கொடுத்தவளே! - இங்கே யறம்
பண்ணப் படைத்தவளே! - எமக்
கெண்ணம் எவ்வாறந்த வண்ணம் செயல்செய்யும்
திண்மை கொடுத்திடுவாய்.

தண்ணமுதைப் பிறன் "தீ" என்று சொல்லென்னில்
சந்தோஷமா யுரைப்பார் - சமூகம்வ
ருந்திடத் தாம் நகைப்பார் - இவர்
பண்ணிடு மோசங்கள் உன்னரு ளோஇந்தப்
பாரினை ஈன்றவளே?

-

- தேசசேவகன், 7.11.1922, ப.4

21.11.22

11. பாரத தேவியிடம் குடியர் தம் தெளிவு கூறல்

கண்ணிகள்

(பராபரக்கண்ணி போற் பாடுக)

அம்மா இனிக்குடிக்க மாட்டோம் அதன்தீமை
கைமேற் கண்போலக் கண்டுவிட்டோம் ஏழைகள்.

பொய்ம்மானைப் பின்பற்றி ராமன் புரிந்ததுபோல்
இம்மதுவின் மாயங்கண் டிடறித் தலைகவிழ்த்தோம்.

நஞ்சிருந்த பாண்டத்தை நக்கி வசமழிந்து
நெஞ்சி லுரமிழந்து நிதியிழந்தோ மெந்தாயே.

பஞ்சத்தைத் தேசத்தைப் பாபத்தைப் பெண்டாட்டி
நெஞ்சத்தை எண்ணு[1] விஷப்புனலை நீக்கிவிட்டோம்.

அறிவு விளக்கை அவிக்கும் மதுக்குடத்தை
மறுபடியும் காசுதந்து வாங்கோம் மறந்துவிட்டோம்.

அறமுணர்ந்து கொண்டோம் கடைவைத் ததைவிற்கும்
குறிப்பினையும் மாற்றிவிட்டோம் கொற்றத் தனித்தேவி

ஈன்றாள் வெறுக்க இல்லாள் நடுநடுங்கச்
சான்றோர் அவமதிக்கச் சம்மதித்தோம் இம்மதுவால்

ஊன்வேண்டும் கள்வகைக்கே யுரைக்கு மதுவெனும்பேர்
தேனுக்கு மிட்டழைத்தால் செம்மலர்தான் நாணாதோ?

கள்ளென்னும் தாயோடு காமம் கொலைகளவுப்
பிள்ளைகளும் பெண்டுமாய்ப் பின்தொடர்தல் கண்டுகொண்டோம்

தள்ளாப் பெரியோர் சமுகமெனை யேவெறுத்துத்
தள்ளவைத்த தீமதுவைத் தள்ளிவிட்டோம் எந்தாயே

சோர்வு மதிமயக்கம் துன்பமெல்லாம் ஒன்றாக்கி
ஆர்அனுப்பி னார்மதுவென் றறியோம் அருந்தேவீ.

நேரில்விட்டால் இப்பேயை ஏமாற்ற நேருமென்று
நீரிற் கலந்தனுப்பும் கலிக்கொடியன் நேர்மைகண்டாய்

கொள்ளிப் பிசாசென்னும் கொள்கையினை நம்பாதார்
கள்ளைப் பிசாசென்றால் காரணமும் கேட்பாரோ?

நள்ளிருள்தான் கண்கள் நாணுமை உள்ளமெனில்
கள்ளுண்டான் சேதியெல்லாம் துஷ்டக் கனவன்றோ?

பருந்துபோல் ஊன்அனைத்தும் தின்னவைக்கும் பாழ்மதுவை
மருந்துக்கும் வேண்டோமே எங்கள் மலர்த்தேவீ

அரும்பாடு பட்டனம்என் றிம்மதுவை யுண்டதனால்
துரும்பாகிப் போனதுண்டு தூய்மைத் திருநாடே

உடலுறுதி வீரமிவை உண்டாக்குங் கள்ளென்று
மடையர்சிலர் கூறுவது வஞ்சமடி எந்தாயே.

குடிக்கும்போ தேயுயிர்போம் கூத்தாடும் போதுயிர்போம்
இடித்துவிழுந் தாலுமுயிர்போம் இம்மதுவால் நன்மையுண்டோ?

முனிவர்க்குத் தாய்என்னும் முன்னைத் திருநாடு
சனிமதுவை [2] ஒப்புமெனிற் சகந்தான் சிரிக்காதோ?

நினைத்தால் அறிவூறும் ஞானிகட்கு நீதான்
தனித்தாய் உனக்கெம்மால் சஞ்சலந்தான் வேண்டாவே

அன்னைநீ வாழ்க அறமே வளர்கஇங்குத்
"தன்னுரிமை" யாகிய ஓர் இன்பந் தழைத்தோங்க.

கன்னி குமரிமுதல் கங்கைஇம யம்வரைக்கும்
உன்னரசே ஆகுகஎம் உரிமைத் திருநாடே.

வந்தே மாதரம்

1. 'எண்ணி' என இருப்பின் நன்று

- தேசசேவகன், 21.11.1922, ப.4.

11அ. கண்ணிகள் (முன்தொடர்ச்சி)

பருந்துபோல் ஊன்அனைத்தும்
　　தின்னவைக்கும் இஃதை [1]
மருந்துக்கும் வேண்டோமே
　　எங்கள் மலர்த்திருவே. [2]

அரும்பாடு பட்டதனால் [3]
　　இம்மதுவை உண்டாற் [4]
துரும்பாகிப் போவதெனிற்
　　சூதோசொல் எந்தாயே. [5]

உடலுறுதி வீரமிவை
　　உண்டாக்கும் என்று [6]
மடையரிதைக் [7] கூறுவது
　　வஞ்சமடீ எந்தாயே.

குடிக்கும்போ தேயுயிர்போம்
　　கூத்தாடும் போதும் [8]
இடித்துவிழுந் தாலுயிர்போம் [9]
　　இம்மதுவால் நன்மையுண்டோ?

முனிவர்க்குத் தாயென்னும்
　　முன்னைக்கு மூத்தாள் [10]
கனிமதுவை ஒப்பின் [11]
　　சகந்தான் சிரிக்காதோ?

நினைத்தால் அறிவூறும்
　　ஞானிகட்கு நீதான்
தனித்தாய் உனக்கெம்மால்
　　சஞ்சலந்தான் வேண்டாவே.

அன்னைநீ வாழ்க!
　　அறமே வளர்கவென்றும்! [12]
தன்னுரிமை யாகியஓர்
　　இன்பம் தழைத்தோங்க!

கன்னிக்[13] குமரிமுதல்
கங்கையிம யம்வரைக்கும்
உன்னரசே யாகுகவெம்
முரிமைத் திருநாடே

குறிப்பு :

இதற்குமுன் இடம்பெற்றுள்ள பாடலின் (21.11.1922) பிற்பகுதி- 'பருந்துபோல்' எனத் தொடங்கி முடியும் இறுதி எட்டுக் கண்ணிகள் - மீண்டும் பல மாற்றங்களுடன் இப்பாடலாக வடிவெடுத்துள்ளன. 'முன் தொடர்ச்சி' எனும் குறிப்போடு மூன்று மாதங்களின் பின்னர் அதே இதழில் வெளியிடப் பெற்ற இப்பாடற் பகுதி செப்பம் குறைந்துள்ளது. இவ்வெட்டுக் கண்ணிகளும் இவற்றிலும் செப்பமாக முன்னரே வெளியிடப்பெற்றன என்னும் ஓர்மையின்மையால் மறு அச்சீடு நேர்ந்திருக்கலாம். படைப்பொருமை கருதி இங்கு இணைக்கப்பட்டுள்ளது.

வே.

1. பாழ்மதுவை
2. மலர்த்தேனீ
3. பட்டனம் என்(று)
4. யுண்டதனால்
5. துரும்பாகிப் போனதுண்டு தூய்மைத் திருநாடே
6. உண்டாக்கும் கள்ளென்று
7. மடையர்சிலர்
8. போதுயிர்போம்
9. தாலுமுயிர்போம்
10. முன்னைத் திருநாடு
11. சனிமதுவை ஒப்புமெனிற்
12. வளர்க இங்குத்
13. கன்னி

- தேசசேவகன், 27.2.1923, ப.4

28.11.22

12. உடமை நாடு

காளி!

உலகத்தை ஓங்கச்செய், ஓ! பரா சக்தி,
கலகத்தை நீங்கச்செய் காண்.

நூல்

காலப் பெருங்கடலில் - நாளும்
கரைந்த தோற்றமெலாம்
பாலப் பருவமுதல் - எங்கள்
பாரதத் தாய்அறிவாள்
நாலு திசைமுழுதும் - கொள்கை
நாற்பதி னாயிரத்தார்
ஆலின் கிளையவைகள் - என்னில்
ஆக்கும் மரம்இவள்தான்.

சோர மிழைப்பதெவன்? - இங்கு(ச்)
சூட்சுமம் செய்வதெவன்?
தீர மிகுந்தவள்காண்! - பிறன்
தீங்கை யெதிர்ப்பவள்காண்!
ஆரு மறிந்தவள்தாய் - புவிக்
கரங்கம் ஒற்றவளாம்
நேரிற் பகைவருங்கால் - அன்னை
நெஞ்சிற் கனல்பிறக்கும்

வேத மறிந்தவள்தாய் - நல்ல
விரிந்த கொள்கையினால்
நீத மிதுவெனவே - அன்னை
நீணிலத் துக்குரைப்பாள்
மோதும் படையெனவே - நெஞ்சில்
முதிர்ந்த சத்தியத்தாள்
சாதிகள் நால்வகையாய்த் - தொழில்
தன்னிற் பிரித்துரைத்தாள்

"இயக்கல்" "மாற்றுத"லும் - ஒருங்
"கிணைத்தல்" "உணர்த்தலா"ம்
செயலின் நான்குபெயர் - இவை
செய்வது நால்வருணம்
இயக்கல் சூத்திரராம் - மாற்றல்
இயம்பும் வாணிபராம்
முயற்சி கொண்டிணைத்தல் - தன்னை
முடித்தல் வல்லரசர்.

உணர்த்தல் பார்ப்பனராம் - அன்னை
உரையின் சீர்த்திகண்டாய்![1]
பணத்தில் சாதியில்லை - ஏழைப்
பறையர் தாழ்மையில்லை
பிணத்தில் செய்கையில்லை - அது
பெரிதும் தாழ்ந்ததுதான்
துணைக்கு நான்குமல்லால் - ஒன்றைத்
தூண்டிடல் தீமையென்பாள்.

உலகு தூங்கவில்லை - இன்று
ஒழிவு கொள்ளவில்லை.
பலபல் மானிடமும் - ஒளி
படைத்து வாழ்ந்திடவே
செல்லும் அழகையெல்லாம் - அன்னை
சிரித்துப் பார்த்திருப்பாள்
கலகச் சூழ்ச்சியினை - அன்னை
காரி[2] யுமிழ்ந்திடுவாள்

அறம்வ ளர்த்தவள்காண் - யுத்த
அமளி கண்டவளாம்
துறவில் மிக்கவள்தாய் - மனத்
தூய்மை யுடையவளாம்
இறைவன் "ஒற்றை" யென்பாள் - அதில்
எண்பது கோடிவண்ணம்
முறையிற் பாடிடுவாள் - அன்னை
மூதறி வானவள்காண்

முனிவர் யோகியர்கள் - கல்வி
முழுதுங் கற்றவர்கள்
மனதை விட்டகலா - நிறை
வாய்மை யுடையவர்கள்
முனையில் வாழ்ந்திடுவார் - மணி
முடிகொள் நன்மறவர்
தனைம றந்தவராய் - என்றும்
தருமம் காப்பவராய்.

முப்பது கோடிமக்கள் - பெற்ற
முதன்மைத் தெய்விகத்தாள்
கற்புக் கரசியராய்த் - தெய்வக்
கனிகள் தந்தவள்காண்
கைப்படத் தாலிகட்டும் - சொந்தக்
கணவன் தெய்வமென்பார்
இப்புவி யெங்குமுண்டோ - கற்பின்
ஏற்ற மறிந்தவர்கள்?

மானிடச் சாதியெலாம் - நன்கு
மதிக்குந் தெய்விகங்காண்
கானில் வெறுவெளியில் - இவள்
கண்ட அமுதனையாள்
ஊனும் சிலிர்க்குதுகாண் - அன்னை
உடைமை பாடுவதால்
தானம் மிகுந்தவள்காண் - அவள்
சந்ததம் வாழ்க! என்பேன்.

1. நான்கு வருணம் பற்றிய புதிய விளக்கம்.
2. 'காறி' என்றிருத்தல் வேண்டும்.

- தேசசேவகன், 28.11.1922, ப.4.

12.11.22

13. மதுவிலக்குப் பாட்டு

நோட்டு, தாளம் ஒற்றை

மதுவிலக்கு மதுவிலக்கு மனைவிமக்கள் வாழியே!
மதிகலக்கும் மதுவைவிட்டு மகிழ்வுபெற்று வாழ்குவாய்!
நிதியனைத்தும் வீணிலாக்கும் நிலைமைகண்டு நீங்குவாய்!
நிதமிழுத்து நலியவைக்கும் நேசர்கையி லேங்குவாய்!
(மதுவி)

சதியனைத்தும் காசுதந்து சம்மதித்து வாங்கவோ?
சதையனைத்தும் நையவைத்து நிதமரைப்பொன் தேடுறாய்
மதுவிலக்கு மதிதுலக்கு மனிதவாழ்வில் மேன்மைகொள்
மகிதலத்தில் உனதுநாட்டை வடுவகற்ற நோன்புகொள்
(மதுவி)

அறிவுனக்கு மணிவிளக்கம் அதைவிருத்தி செய்குவாய்!
அறமிதென்றும் மறமிதென்றும் அறியவேண்டு மல்லவோ?
நிறைகுளத்தைப் பாசிமூடி நிலைகெடுக்கும் வாறுபோல்
நின்மனத்தில் தெளியவிக்கும் நீசமதுவை நீக்குவாய்!
(மதுவி)

பொறுமைகொண்டு புகழடைந்து பொன்மிகுந்த தமிழிலே
புலமைகொண்டு வாழ்வதென்ற புதுநினைவு கொள்ளுவாய்!
திறலிழந்து செயலிழந்து தெருவிலெங்கும் வெறியனாய்த்
திரியவைக்கும் குடியைவிட்டுத் தேசசேவை செய்குவாய்!
(மதுவி)

- தேசசேவகன், 12.12.1922, ப.8.

26.12.1922

14. பாரத சமூக மன்றம் (காங்கிரஸ்) சொல்லுகிறது[1]

கும்மி மெட்டு

நட்ட நடுவினில் ஈனத்தனம் - இந்த
நாட்டினில் வந்து குடிபுகவே
இட்டது செய்யென்று நானுரைத்தால் - அதை
ஏற்க மறுத்தனர் பற்பலபேர்.

இட்டது சட்ட மெனப்பிறரால் - இன்று
ஏவப் படுவதை ஒப்புகின்றார்
சட்டமென் றேஒரு தெய்வமில்லை - ஒரு
சமுகம் ஒப்புதல் சட்டமடா!

பஞ்சின் நுணுக்கமும் இன்னும்சிலச் - சில
பக்குவம் நானன்று சொன்னதுண்டு
மிஞ்சி விட்டீரதை மிஞ்சிவிட்டீர் என்றும்
மிஞ்சி விடாதவர் மிஞ்சிவிட்டீர்

நெஞ்சி லிருக்குது தேசப்பணி - இந்த
நேரத்தில் மாயை மறைக்குதென்றீர்!
அஞ்சிக் கிடப்பதில் ஆசையெனில் - உங்கள்
ஆண்மைக் குடிக்குள்ள ஆண்மையெங்கே?

"கள்ளை அகற்றுதல்" தேசக்கலை - கற்றல்
காட்டிய மற்றும் சிறுபணிகள்
கொள்ளப் படாதனவோ? இவை - கொண்டிடில்[2]
குந்தகம் வந்துபு குந்திடுமோ?

எள்ளும் கடைசி வருஷம்வரை - மிச்சம்
இல்லையென் றாக்கிய கொத்தடிமை
தள்ள எண்ணாவிடில் சாதல்நன்று - கெட்ட
சாவை எதிர்ப்பவர் சாதல்நன்று.

பண்ணிற் குழந்தை [3] பசுக்குலம்போல் - நதிப்
பள்ளத்தி லோடும் சலத்திரள்போல்
கிண்ணத் திலிட்ட மணித்திரள்போல் - இனிக்
கேடடைந்த பல கோடியினர்.

கண்ணிய மெண்ணி ஒரேமனதாய் - ஒரு
காரிய மாயின் அரைநொடியில்
பண்ணிவிட் டால்இந்தப் பார்மதிக்கும் - இந்தப்
பாரத நாட்டினைப் பார்மதிக்கும்.

வே. :

1. 'மாதர் பகுதி' என்னும் பொதுத்தலைப்பின்கீழ் இப்பாடலின் தலைப்பு 'பாரத சமூகத்திற்கு' என (க.ம.) மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
2. கொண்டிடுதல் (க.கு.), கொண்டில் (க.ம.)
3. மண்ணிற் குழைத்த (க.கு.)

- தேசசேவகன், 26.12.1922, ப.4.
ஸ்ரீ சுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம், வெ.7, ப.21
கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.129-130

20.2.1923

15. கொள்கைத் திருநாடு

நீதிமன்னர் பலஞானிய ரின்னுடல்
 நீத்தன ரேயிந்த மண்ணிலே - அவர்
காதல் முகத்தினை எண்ணுவதால் நல்ல
 கதைகள் தோற்றுதென் கண்ணிலே - எங்கள்
தாதையரே எனக் கூப்பிடும் போதினிற்
 சத்தியங் கேட்குதென் செவியிலே - அவர்
ஆதி நலந்தனைப் பாட நினைத்திடில்
 ஆண்மை தொனிக்குதென் கவியிலே

கண்ணன் அருச்சுனன் வில்விதுரன் அறங்
 காத்தனரே அந்த நாளிலே - எங்கள்
விண்ணின் மதியொத்த வாழ்வு நினைத்திடில்
 வீரமுண் டாகுதென் தோளிலே - அன்று
அண்ணன் உதிட்டிரன் நீள்பகை வீழ்த்திய
 அத்தனை வாய்மை கொள்நிலத்திலே - இன்று
எண்ணிய எண்ணமிங் கேழ்பு விக்குத்தகும்
 வண்ண முதிக்குதென் குலத்திலே

கம்பன் அருங்கவி காளியின் நற்கன
 வார்ந்ததுவும் இந்தத் தேசமே - எனில்
இம்பரிற் கோள் நிலைஎண் குறியாவும் அப்
 பாற்கர னுருப தேசமே [1]
அம்புவிக் காட்டினி லாடிய பாரத
 அன்னையின் வீரிய வரம்பிலே - நின்
றென்பல பற்பல கால்வழியே தொடர்ந்
 தேறுது "சக்தி" யென் நரம்பிலே.

கற்பி னருந்ததி சீதை திரௌபதி
 காதலறம் செயும்போதிலே - அவர்
பொற்புறு நெஞ்சிற் சுவைநினைத் தால்இன்பு
 போந்திடு தென்னுள மீதிலே - பல

சிற்ப முதற்கலை காவிய வல்லுநர்
செய்ய மனத்தெழும் ஊற்றிலே - எழும்
அற்புத வாடை கலக்குது வந்தென்
அறிவுப் பெருங்குளிர் காற்றிலே.

(நீதிமன்னர்)

1. 'பாற்கர னாருப தேசமே' என இருத்தல் வேண்டும்

- தேசசேவகன், 20.2.1923, ப.4

16. தேவியின் திட்டம்

பாரதத் தேர்வந்து இன்பநிலை சேரப்
பாய்க மனக்குதிரை
சோர்வினை அச்சத்தை இட்டு மிதிப்பதில்
தூளி படுத்திடுக.

வீரியின் சாட்டையடா அடடேயினி
வீண்கதை போக்கிடுவீர்
ஆரிய நாடு சுகம்பெற இன்னும்
அரைக்ஷணம் உள்ளதென்றாள்

பாய்க மனக்குதிரை அடடேயிது
பக்குவ காலமடா!
வாய்மை யிருப்பதில் தேவியின் இன்னருள்
வந்து கிடைத்ததடா.

போய்த்தொடுவோம் அந்த விண்ணை அமுதத்தைப்
பூமிக் கெலாந்தருவோம்
தாய்கொடுத்தா ளிந்தச் சத்திய வேல்என்று
தாரணி ஆண்டிடுவோம்

ஏழைகள் கையிருப் புள்ளவர் என்னும்
இரட்டையைக் கொன்றிடுவோம்
கூழுக் கொருத்தன் அழும்படி ஆண்டிடும்
கோலை முறித்திடுவோம்

வாழ்வுக்கு நேரம் அரைக்ஷண மாம்என்று
மங்கை குறித்துவிட்டாள்
ஊழையும் அன்னை மடித்திடு வாள்இனி
ஓடுக இன்பத்திலே.

- தேசசேவகன், 6.3.23, ப.4

13.3.1923

17. தேச மகா மன்றம் (காங்கிரஸ்)

மன்றத்தைப் போற்றுவதா லுங்கள் செய்கைகள்
மாதவ மாகுமடா - அவை
மாதவ மாகுமடா - அந்தக்
குன்றத்தை வாய்மைக் குணக்கூட்டை மீறுதல்
குற்றம் பெருங்குற்றமாம் - அது
குற்றம் பெருங்குற்றமாம்
தின்றிடும் சோறும் பிடுங்கப் படாதது
தேசமன் றத்துணையால் - இந்தத்
தேசமன் றத்துணையால் - ஒரு
கன்றுக்குச் சொந்தம் கறந்திடும் பால்இக்
கருத்தை நிசம்புரிவீர் - இக்
கருத்தை நிசம்புரிவீர்.

முப்பத்து முக்கோடி மாந்தர் கருத்தில்
முளைத்த பெருந்தெய்வமாய் - நன்கு
முளைத்த பெருந்தெய்வமாய் - ஒரு
மெய்ப்பதம் உண்டெனில் உம்மினும் வேறொரு
வீரக் குலம்புகல்வாய் - ஒரு [1]
வீரக் குலம்புகல்வாய்
இப்பொழு தேஉங்கள் தெய்வ மகாமன்
றினையற்ற [2] தாக்கிடுவீர் - சென்
றினையற்ற [2] தாக்கிடுவீர் - நீர்
அர்ப்பணம் செய்திடுவீர் அந்த மன்றத்தின்
ஆணைக் குயிர்பொருள்கள் - அதன்
ஆணைக் குயிர்பொருள்கள்

கெட்ட நெடுங்கதை கட்டுவ தும்வெறும்
கீர்த்திக்குப் பேசுவதும் - வெறும்
கீர்த்திக்குப் பேசுவதும் - இனி
முட்டுந் தடையின்றி மன்றத்தின் வேகத்தில்
மூச்சை நடத்திடடா - உன்
மூச்சை நடத்திடடா.

கொட்டும் பறைவாய்மை முற்றும் ஓரேவழிக்
கோலி முழக்குவதால் - நன்கு
கோலி முழக்குவதால் - திசை
எட்டும் நமக்குள்ள கீர்த்தி விரிந்திடும்
இன்பம் நிலைத்துவிடும் - நமக்
கின்பம் நிலைத்துவிடும்

இத்தனை கோடி யிளம்புயங்கள் விடும்
எண்ணம் பெறாம்[3] பெரும்வேல் - விடும்
எண்ணம் பெரும்பெரும்வேல் - அவை
அத்தனை யுங்குறி வைத்தெறி யத்தகும்
யுத்த களம்புகல்வேன் - ஒரு
யுத்த களம்புகல்வேன் - அது
சத்திய மன்றிச் சழக்கிய லாவகை
தாயரு ளாகுமன்றம் - அது
தாயரு ளாகுமன்றம் - அந்த
உத்தம மன்றினை வாழ்த்திடு வீர் - அதை
ஓங்கப் புரிந்திடுவீர் - வெற்றி
ஓங்கப் பரிந்திடுவீர்.

1. இத்தனிச்சொல் (க.கு.) விடுபட்டுள்ளது.
2. 'நிணையற்ற' என இருத்தல் வேண்டும்.
3. 'பெரும்' என இருத்தல் வேண்டும்.

- **தேசசேவகன், 13.3.1923, ப.4**

கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.134-136

3.4.1923

18. பராசக்தி திருப்புகழ்

தானன தத்தத் தானன தானன
தானன தத்தத் தானன தானன தனதான

பூநிறை பச்சைச் சோலைகள் மாகனி
தேனிலி னிக்கத் தாவிய நீணதி பலவோடு

போர்மலை ஒக்கத் தூவுநெல் வாழைகள்
நேர்கழை சித்ரத் தாமரை வாவிகள் வளமாக

நானில மெச்சக் கூடிய பாரதம்
மேனிலை கெட்டுப் போவதி லேமன முருகாத

நாயெனை விட்டுத் தூரவு லாவுதல்
தாயுன ருட்கு மாவதை மாவதை நினைவாயென்

மேனியை வச்ரத் தூணென வேயுளம்
ஞானவி ரத்னப் பூணென வேசெய வரவேணும்!

மேதினி இச்சைக் கானவ ளேகொடு
சூதசு ரர்க்குக் கோளரி யேயுன திருபாத

மானகு ளிர்ச்சிக் காவண நீழலில்
நானுமி ருக்கத் தோதருள் வாயினி உலகாரு

மானிடர் கட்டைச் சாடிடு வேனருள்
மாசிவ சக்தித் தாயுன தீரடி மலர் வாழ்க!

தந்தத் தனதன தனதன தனதன
தந்தத் தனதன தனதன தனதன
தந்தத் தனதன தனதன தனதன தனதான

கங்கைத் திருநதி யமுநென வுலவிய
திங்கட் பனிமலை யெவையினு முயரிய
தென்றற் கலகல வெனவெகு குளிர்தரும் எழில்நாடு!

கந்தப் பொடிகுழல் மகளிர்கள் உலவிய
பந்தித் தெருவினி லுயருயர் மலையென
விந்தைப் படமுறை படநிறை பலபல மணவீடு

பங்கப் படவிவை பிறரிட மடிமைபொ
ருந்திக் கெடுவதை விடுதலை செயஒரு
சிங்கத் தினைநிகர் மனவலி அருளுக இதுதேதி!

பஞ்சத் தினைஒரு நொடியினி லயலவர்
நெஞ்சப் புகைதனை அரைநொடி தனிலவர்
வஞ்சச் செயல்களை அதைவிட விரைவினில் இலையாக

இங்குப் பழமையின் நிலைதரு குவனடி!
தங்கத் துருகிய இளநகை ஒளிசெய
இன்பக் கடலிடை அமுதென மருவிய எழில்வீரி!

எந்தத் தருணமு முலகினில் நிகழ்வன
எந்தச் செயல்களும் விழியெதிர் அறிகுவை
எந்தப் பொருளிலு நிறைபொரு ளுனைவிட எனதாவல்

பொங்கிக் கவிழ்வதை எவர்நிலை புரிபவர்?
அங்கத் தனைபுய வலிபெற விசயனை
முந்தச் செயுமருள் எனதுள மிசையுற வரவேணும்!

புன்மைத் தொழில்புரி மகிடனை உறவொடு
சின்னப் படஉல கினிலற நிலைபெற
மன்னிப் புரிபரை உனதழ கியபத மலர்வாழ்க!

குறிப்பு :

இருவேறு சந்தக் குழிப்புகளில் அமைந்துள்ளதால் இரண்டு பாடல்களாகவும் கருத வாய்ப்புள்ளது.

- தேசசேவகன், 3.4.1923

10.4.1923

19. பசுத் தெய்வம்

(நொண்டிச் சிந்து)

நல்லதொரு தெய்வ முரைப்பேன் - எங்கள்
நாட்டினர் நலத்தையுல கூட்ட நினைத்தே - நான்
சொல்லில் மட்டும் உரைப்பதன்றாம் - எங்கள்
சுருதியுரைத்த பல தெய்வங்களிலே - நல்ல
புல்லருந்தும் பசுமாடு - இன்பம்
பொழிந்து நிதம் உடலைப் பிழிந்து தரும் - புவிக்
கெல்லையற்ற உபகாரம் - நம்மை
இன்புறச் செயுந் தெய்வமென்று தொழுவோம் - அந்த

(நல்லதொரு)

பசுவுக்குத் தனி நிலங்கள் - முன்னர்(ப்)
பசும்புல் வளர்க்கவென்று தனிநிலங்கள் - இட
வசதியை உரைப்பதென்றால் - பசு
வாசம்புரியு மிடம் மணிக்கோயில் - அரு
கிசைந்திடும் நிலைத்தீபம் - எனில்
இரவுபகல் மனிதர் வழிபாடாம் - உடல்
கசங்குதல் சிறிதின்று - முலை
கறந்திடும் போதினில் இசைப்பாட்டாம் - எங்கள்

(நல்லதொரு)

காவலர் கடமையிலே - பசுக்
காப்பது தலையெனக் காத்துநின்றார் - எங்கள்
பாவலர் வாழ்த்திலெல்லாம் தெய்வப்
பசுவினை மறந்தொரு பாட்டினையாம்[1] - திரு
தாவுதல் பூவெனிலோ - அவள்
சந்ததம் கிடப்பது பசுவிடமாம் - அறத்
தேவர்கள் கூட்டமெல்லாம் - பசுத்
தெய்வத்தினிடம் வந்து நடம்புரிவார் - இன்று

(நல்லதொரு)

எண்ணான் கறங்களிலே - பசு
இன்னுடல் உரஞ்சிடத் தரிநடுதல்[2] - இது
பண்ணா திருப்பவரும் - தெய்வம்[3]
பசுவினை வழிபட மறந்தவரும் - முன்னர்க்
கண்ணாற் பார்க்கரிதாம் - அந்தக்
காலத்தைக் கனவிலும் மறப்பதுண்டோ? - ஓ ஓ!
புண்ணுங் குழியுலகே - பசுப்
புனித மறந்தபெருஞ் சனியுலகே[4] இன்று

(நல்லதொரு)

வீரிய அருள் தாயை - இந்த
விரிநில மாந்தர்கள் வேண்டுதல்போல் - உளம்
கோருதல் பழிப்பாமோ? - பசு
குவலயம் தனக்கொரு செவிலியன்றோ? - நல்ல
மோரொடு சுளைத்தயிரும் - மணம்
மொகுமொகு வெனவரும் நெய்ப்பயனும் - இவை
யாரையும் மகிழ்வாக்கும்[5] - பால்
இன்பங்கள் அனைத்தையும் அரசாளும் - பசு

(நல்லதொரு)

சாணமும் தருஞ்சலமும் - பிணி
தாக்கிடும் பொருள்களில் தலையெனவே - மிகப்
பேணினர் எங்குலத்தார் - பசுப்
பெருமையை யறிந்தவர் பிணியறியார் - மனம்
கோணிடப் பசுக்கூட்டம் - ஒரு
கொடுமையுடையுமெனில்[6] - உலகத்தையே - எதிர்
காணாத தீப்பொறியாய்[7] - ஒரு
கணத்தி லழித்துவிடும் அறக்கடவுள் - இன்று

(நல்லதொரு)

மடியினிற் பால்சுமந்தே - புவி
மாந்தருக் களித்திட வருந்தாயை - அதன்
அடிகளில் வணங்கிடுதல் - அஃ
தருந்தவ மாவதை யாமறிவோம் - இதைக்
கொடுமை யிலாக்க வரும் - பிறர்
கொடும்பசி தனக்கெங்கள் உயிர்தருவோம் - இதை
விடும்படி கெஞ்சிடுவோம் - இதை
வெறுத்திடுங் குலத்தினுக் கறம்புகல்வோம் - இன்று

(நல்லதொரு)

எங்கணும் பசுச்சாலை - பசு
எழுந்ததும் எழும்பசிக் குணவிடுக - இனி
எங்கணும் புல்வெளிகள் - தன்
னிச்சையில் மேய்ந்திட [8] ஆள்விடுக - மனம்
பொங்கிடும் இசைப்பாட்டில் - பசு
பூரிக்க இடையிடை புரிந்திடுவீர் - உல
கெங்கணும் பசுக்குளங்கள்[9] - அதன்
இன்னுடல் அழுக்கறத் தேய்த்திடுவீர் - நம்

(நல்லதொரு)

மகளிர்கள் பசுப்பூசை - அதன்
மணிக்கன்று நினைக்கையில் முலைசேர்ப்பீர் - அதன்
சுகந்தரு [10] காளைகளும் - ஒரு
துயரின்றிக் காத்திட எண்ணிடுவீர் - இனி
மிகஇவை செய் உலகே - பசு
மிகமிக மனிதரின் இன்பமிகும் - பசு
பகையென நினைத்திடுவோர் - அதன்
பகையன்று தருமத்தின் பகையாவர்?

(நல்லதொரு)

புத்தனென் றொருபெரியான் - முதல்
புலைதவிர் முனிவரன் பலநோன்பு - மிக
மொய்த்த இந்நாட்டினிலே - கொலை [11]
முதலெழுத் துரைப்பதும் போக்கிடுவோம் - ஒரு
சத்தியம் காத்திடுவோம் - இந்த
ஸகத்தினை அதன்வழி சேர்த்திடுவோம் - நம்
மெய்த்துணை பரைத்தேவி [12] - இந்த
மேதினி "அவள்" என்று வாழ்த்திடுவோம்

குறிப்பு :

இந்தப் பாட்டு பெரியவர் சு.ர.சுப்பிரமணியன் 1980களில் நடத்திய ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் இதழில் மறுவெளியீடு செய்யப்பட்டுள்ளது. அப்பாடலுக்கும் தேசசேவகன் இதழிலும் 'கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல்' நூலிலும் இடம்பெற்றுள்ள பாடல் வடிவிற்கும் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. அம்மாற்று வடிவங்கள் பின்வருமாறு:

1. 'பாட்டிலையாம்' என இருப்பின் நன்று
2. 'தறிநடுதல்' என இருப்பின் நன்று
3. தெய்வப் (க.ம.-சு.)
4. சதியுலமே (க.ம.-சு.)
5. மகிழ்விக்கும் (க.ம.-சு.)
6. கொடுமை அடையுமெனில் (க.ம.-சு.)
7. தீப்பொறிவாய் (க.ம.-சு.)
8. மேய்த்திட (க.ம.-சு.)
9. பசுக்குலங்கள் (க.கு.)
10. சுகந்தரும் (க.ம.-சு.)
11. நொலை (க.கு.)
12. பசுத்தேவி (க.ம.-சு.)

- தேசசேவகன், 10.4.1923, ப.4

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் 1982
ஆடி, ஆவணி, புரட்டாசி, ப.12, 21
கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல் 140-143

17.4.1923

20. அன்பு தரும் பாரதத்தாய்

தன்னெழில் காட்டுகின்றாள் - தனைக்கண்டே
அன்புமிகச் செய்கின்றாள் - நல்ல
சின்னஞ் சிறுவண்டு சித்திரத்தேன் பூக்கள்
என்னரும் பாரதத்தாய் இவையாவினும்

(தன்)

தென்ன மரத்தோப்பு - அங்கே நல்ல
சீதத் தென்றற்காற்று - அங்கோர்
கன்னியும் நாதனும் காதல் அறம்செய்யும்
பின்னிய ஓலைக் குடிசை தனக்குள்ளும்

(தன்)

பாய்ந்திடும் வீரப்புலி - அமர்ந்தங்குப்
பாடிய சாந்தக் குயில் - கிளை
சாய்ந்த பெருங்காடு தவசியரின் கூட்டம்
மாய்க்கும் இருட்டுக்குள் மந்திர கீதத்துள்

(தன்)

மாய்ந்த உடற்புழுதி - ரிஷிகள் சென்று
தேய்ந்த கொடிப்பாதை - முன்னைப்
பேர்ந்த பழஞ்செங்கல் - பிள்ளைப் பழம்பொம்மை
தேர்ந்த கதையுரைக்கும் சின்னங் களுக்குள்ளும்

(தன்)

காட்டிற் சிறுகோயில் - அதிலெந்தக்
காலத்திலும் பூசை - அங்குப்
பாட்டைத் திருடர்கள் பச்சைக் கொலைவேடர்
கூட்டத்திலும் தெய்வக் கொள்கை யிருப்பதில்

(தன்)

வீட்டுச் சுவற்றுக்கு[1] மேல் - பறவைதங்கக்
கூட்டுக்குச் சாணறைகள் - அண்டும்
ஆட்டுக்குத் துணைபண்ணை ஆளுக்குத் தயவான
நாட்டுப் புறத்தவர் நல்ல வழக்கத்துள்

(தன்)

உழவுத் தொழில்மாடு - புரியும்நன்மைக்
குண்மை வழிபாடு - நல்ல
நிழலை வெறுத்தங்கு நெல்லை வளர்க்கின்ற
தொழில்புரியும் பறைச்சோதரர் தோளுக்குள்

(தன்)

முழுதும் அவள்ரூபம் - எனில்நாட்டின்
மோகத்தில் என்வாழ்வு - அவள்
எழிலுண்டு கண்ணேரில் இழிவென்ப தொன்றில்லை
இதயத்தில் எழுகின்ற எனதன்னை வாழ்த்துக்குள்.

(தன்)

1. 'சுவருக்கு' என இருத்தல் வேண்டும்.

- தேசசேவகன், 17.4.23, ப.6

24.4.1923 - 1.5.1923

21. சுதந்திரம், அமரத் தன்மை

ஆநந்தக் களிப்பு

(வானம் என்று சொல்லியிருப்பது தெய்வ லோகத்தை)

துன்ப மிலாதது வானம் - பல
தோஷமும் வேஷமும் அற்றது வானம்
இன்பம் நிறைந்தது வானம் - அங்கு
யாவு மிருக்கும் இலாதவை இல்லை.

மேன்மை யுடையது வானம் - எனில்
மேலுண்டு கீழில்லை என்பது பொய்யாம்.
ஆன விடுதலைப் பூமி - எது
வாயினும் அஃது நலந்தரும் வானம்.

கொட்டிய தேன்மலர்க் காடு - வண்டின்
கூட்டத்தினுக்கு நலந்தரு வானம்
கட்டை விலக்காத நாய்க்கு - நல்ல
கைலைமலை நரகாகி வருத்தும்

தேவர்கள் வாழ்வது வானம் - எனில்
தேவர் திருத்தி யமைத்தது வானம்
ஆவலில் வந்தது வானம் - எனில்
அச்சமும் சோம்பலும் அற்றது வானம்.

தேவர்கள் யார்என்று கேட்பீர் - வீரம்
சேர்ந்திடும் வாய்மை படைத்தவர் தேவர்
ஆவதும் தீவதும் எண்ணா - தறம்
ஆண்மைத் தனத்தில் இயற்றுவர் தேவர்

வில்லைப் பிடிக்கின்ற தோளும் - நல்ல
வேதம் படிக்கின்ற மேலான நெஞ்சும்
நல்ல வியாபார நோக்கும் - விதை
நட்டுப் பயிர்செய்யும் தாய்போன்ற அன்பும்

நாலும் நலங்குத லின்றி - ஒரு
நாயும் எறும்பும் அழுங்குர லின்றிச்
சீலம் படத்தங்கள் நாட்டைத் - திறம்
செய்து முடித்தவர் தேவர்கள் என்பேன்.

சோனக வீதியிற் பூனை - ஒன்று
சோற்றுக் கழப்பிறர் வீரக் குலத்தில்
ஆனவர் போல வசிப்பர் - அட!
அவரன்று தேவர்கள்! அவரன்று தேவர்!!

- தேசசேவகன், 24.4.23, ப.4

பாயும் சிறுத்தை மனத்தால் - கண்ணிற்
பார்த்த நலத்தினிற் பாய்ந்திடும் வன்மை
யேயப் படைத்தவர் தேவர் - துன்பம்
ஏற்றவ ரின்துயர் மாற்றுவர் தேவர்

யாவினும் காணுவர் இன்பம் - பசி
என்பது நோயு மிலாதவர் தேவர்
தாவும் பகைக ளிலாமல் - இன்ப
ஸாத்தியமாம் அமுதத்தினர் தேவர்

வெள்ளந் திரண்டது போலே - தன்னுள்
மேவிய வாய்மை மலைத்தொடர் மேலே
துள்ளிக் குதித்திடை நீங்கா - நற்
சுதந்திரம் பெற்றவர் எவ்வெவ ரேனும்

அன்னவர் தேவர்க ளாவார் - அஃ
தற்றவர் யாவரும் வாடும் புழுக்கள்
இன்னில மாந்தர்கள் யாவரும் - தினம்
எண்ணித் தவம்பல செய்வதன் நோக்கம்

வானவ ராகிடு தற்காம் - தாம்
வாழ்கின்ற மண்ணினை வான்செய்வ தற்காம்
ஆன விடுதலை யுச்சி - தன்னில்
அன்னைப் பராசக்தி யின்னருள் வெள்ளம்

தேவர்கள் உண்டு திளைப்பார் - அந்தச்
சிவசக்தி அருள்மேனி கூடிக் கலப்பார்
கூவிடும் ஓரியைப் போலே - வெறும்
கோட்டை யெழுப்ப நினைக்கின்ற நாடே

வான மிழந்திட்ட நாடே - வெறும்
மண்ணையும் நோயையும் ஒப்பிய நாடே
மான மிழந்திட்ட நாடே - முன்னர்
மண்ணிடை வானைக் கொணர்ந்திட்ட நாடே

தேவ நிலைக்கும் உனக்கும் - இடை
சேர்ந்து மறைத்திடும் கொத்தடி மைக்கே
ஆவியைப் போக்குதல் நன்றாம் - உங்கள்
ஆண்மை யினாலதை வென்றிடல் வேண்டும்

மண்ணினை வானென்று செய்வீர் - புவி
மாந்தருக் காவன செய்வது கேட்பீர்
விண்ணவர் தன்மையைத் தந்து - இந்த
மேதினி மேலுயிர் யாவையும் காப்பீர்.

குறிப்பு :

ஒருபாடல் இரண்டு இதழ்களில் பகுதி பகுதியாக வெளியிடப் பெற்றுள்ளது.

- தேசசேவகன், 1.5.1923, ப.4

8.5.1923

22. சக்திப் பாட்டு

வானத்தில் மின்னற் சிரிப்பைக் கண்டேன் - இந்த
வையத்தில் உன்னிரு பாதங் கண்டேன்.
ஊனமில் காற்றினில் சுத்தவெளி - தனில்
ஓங்கி யெழுந்ததுன் மேனியடீ!

ஞானச் சுடர்நில வோடுகனல் - இவை
நங்கை யுனக்கொரு மூன்றுவிழி
சோனைக் குளிர்புனல் உன்னிதயம் - அதில்
சொட்டொன்று தான் என்றேன் இன்பக்கடல்.

எத்தனைக் கோடி எழிற்குலங்கள் - அந்த
எண்ணருங் கோடி உடம்பிலெல்லாம்
தொத்து யியக்கும் உயிர்க்கிளியே - பல
தோற்றமு மான தனிப்பரையே.

சித்த மினித்திடு துன்னினைவால் - என்னைச்
சேர இழுத்திடும் காந்தமணி!
ஒத்தது காதல் எனப்புகல்வாய் - நொடி
ஒன்றினில் என்குலம் ஓங்கவைப்பேன்.

- தேசசேவகன், 8.5.1923, ப.4

22.5.1923

23. வெற்றி நெருக்கம்

(கும்மி)

வாழ்க்கை யினிக்குதடீ[1] இந்த நேரத்தில்
மாதர்க்கெலாம் நல்ல பாட்டுரைப்பேன்
கேட்டுக் கொண்டே கும்மி தட்டிடுவீர் உங்கள்
கீர்த்தியை எண்ணி மகிழ்ந்திடுவீர்

வேட்கை யிருக்குதடீ இந்த நேரத்தில்
வெற்றி யிருக்குது பார்எதிரே
நாட்டில் விடுதலை என்னுமோர் நற்பதம்
நம்மை நெருங்குது மாதர்களே

மேட்டு நரிகட்கும் மேய்ந்திடும் கூகைக்கும்
மேனி நடுங்கிடப் போவதில்லை
பூட்டியவண்டிய விழ்ப்பதில்லை உயிர்
போகுமட்டும் விடப் போவதில்லை

கேட்டிலும் தீமை நினைப்பதில்லை பிறர்
கேண்மையை முற்றும் மறப்பதில்லை.
ஏட்டிலும் வெற்றி யெழுத்திலும் வெற்றிஎல்
லாமினி வெற்றியென்றே மகிழ்வீர்.

1. யினிக்குதடி (க.ம.)

- தேசசேவகன், 22.5.23, ப.5
ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், வெ.7, ப.22

22.5.1923

24. நீச நாகரிகம்

(கும்மி மெட்டு)

கோயிலிலென்ன குளத்திலென்ன பயன்
கும்பிடல் யாவும் வெளிவேஷம் - என்று
வாயி லுரைத்தொரு நாகரிகம் இங்கு
வந்து குதித்தது பாரதமே.

கோயிலைச் சாமியை வேண்டுகிலா தவன்
"கொள்கை பிறர்க்கு நலம்புரிதல்" - இன்றி
வாயினில் மாத்திரம் ஞானம் வளர்ப்பது
வம்பெனச் சொல்லடி பாரதமே.

சாத்திரம் பொய்ம்மை[1] *சரித்திரம் பொய்யது*
சள்ளையை விட்டு மறந்திடென்றே - ஒரு
கோத்திரம் நீங்கிய நாகரிகம் வந்து
கொட்ட மடிக்குது பாரதமே.

சாத்திரம் பொய்ம்மை சரித்திரம் பொய்யெனச்
சாற்றும் சழக்கர்கள் நல்லதமிழ் - எனும்
நேத்திரம் கெட்டவர் நீசப் படிப்பினர்
நிச்சய மாமிது பாரதமே.

வெள்ளைத் துரைஉடை போலுடுப்போம் மயிர்
வெட்டிக் கொள்வோம் தமிழ்துப்பிச் செல்வோம் - எனத்
துள்ளுது மற்றொரு நாகரிகம் இதிற்
சொக்குதல் பற்பலர் பாரதமே.

வெள்ளைத் துரையெனக் கோலமிட்டார் உள்ளம்
வெள்ளைக் கிருப்பதறிந்த தில்லை - தம்மைக்
கொள்ளை கொடுப்பதை விட்டு விடாப்பெரும்
கோளரைத் துப்பிடு பாரதமே.

மாந்தர் குலத்தை ஒரேநொடியிற் கொன்று
மாய்ப்பவரைப் பெரும் வீரரென்றே - அவர்
ஈந்த பணிக்கிணை யில்லையென்றே ஒன்
றியம்புது பாரடி பாரதமே.

*மாந்தர் தலைக்கு விஷம்புரி வார்அவர்
மண்டை தனக்கதை மாற்றிவிட - நம்மில்
வாய்ந்திடு சத்தியம் உண்டிது பொய்த்தவர்
மந்தரென்றே உரை பாரதமே.*

*மாதரின் கற்பை யழித்திடு தந்திரம்
மாத்திரம் மிக்க விரித்துரைக்கும் வெள்ளைப்
போதகர் செய்துள கட்டுக் கதைகளைப்
பொன்னென்னப் போற்றுதொர் நாகரிகம்*

*நூதன நூதனக் கற்பனைப் புத்தகம்
நூறு லக்ஷம்தர எண்ணிடினும் - இந்தச்
சாதி யொழுக்கம் கெடாவகை செய்யுமின்!
தாயெழில் மாற்றுதல் பேடித்தனம்.*

*செந்தமிழிற் பெயரிட் டறியாக்கொடு
தேயிலை காப்பியை முப்பொழுதும் - உண்டு
வந்தனை செய்யென நாகரிக மொன்று
வல்லமை காட்டுது பாரதமே.*

*முந்தை வழங்கிய சத்துணவும் நல்ல
மூச்சை வளர்த்திடு பானகங்கள் - இன்று
நொந்து விலக்கும் பகட்டரெலாம் மெத்த
நோயினர் என்றுரை பாரதமே.*

- **தேசசேவகன், 22.5.1923, ப.5**

*வெள்ளை வயித்தியம் தெய்விகமாம் - அதை
வேண்டி யழைப்பது செய்தவமாம்
உள்ள மகிழ்ந்து குதிக்குதிங்கே புலை
ஊனர் விரும்பிய நாகரிகம்*

*அள்ளிக் கொடுத்தது நல்லமுதம் - கிழ
ஆண்டியின் பச்சிலை பொன்னியற்றும்
தெள்ளும் வயித்திய பாரத சாத்திரம்
தீயதெனிற் புவி தீயதுவாம்.*

*மேலில் மினுக்கி மினுக்கி யனுப்பிய
வெள்ளையர் நாட்டு மருந்தினிலே - நீர்
நாலும் அழைத்திடிர் என்றொரு பேய்வந்து
நாட்டைக் கெடுக்குது பாரதமே!*

நூலொரு கோடி வயித்தியமாம் வலி
நுண்ணிய நாடியிற் காண்பவரின்
சீலமிகுந்த நம்மூலிகை எண்ணிடில்
சித்த மினிக்குது பாரதமே!

தின்னுதல் பூசல் தினம்பழகும் பொருள்
சீமையிற் செய்தது நல்லதென்றே - விழி
தன்னை மயக்குதோர் நாகரிகம் கையைத்
தட்டிப் பறிக்குது பாரதமே!

தின்னுதல் பூசல்தினம் பழகும் பொருள்
தேசத்தில் உள்ளவை போதுமென்றே
பன்னிய உண்மையைக் கண்டறி யாதவர்
பாவிக ளாகுவர் பாரதமே!

தேசத் திரவியம் பஞ்சிழை யாக்குதல்
தெய்வந் தரும்பொருள் ராட்டினமாம் - இதை
நாசப்படுத்திப் பிறன்கையை நத்திட
நஞ்சை வளர்க்குதோர் நாகரிகம்.

தேச மிருக்குது கற்பகம் போல்இதில்
தேவையெலா முண்டு வாழ்வினுக்கே
காசைத் திரட்டிக் கடற்புறம் சேர்ப்பது
கட்டடிமைக் குணம் பாரதமே!

குறிப்பு :

ஒருபாடல் இரண்டு இதழ்களில் பகுதி பகுதியாக வெளியிடப் பட்டுள்ளது.

- தேசசேவகன், 29.5.23, ப.5

29.5.1923

25. ஆசையும் அச்சமும்

(ஸஹானா)

அன்னையெழில் நிறைந்த வார்த்தை - அவள்
ஆசை பெருகவைக்கும் கவிகள் - தினம்
என்னை யுரைத்திடு கென்றிசைத்தாள் - நெஞ்சில்
ஏறும் கனல்நிகர்த்த தேவி
பன்னப் புரிவதில்லை இங்கே - என்றன்
பாரதத் தேவியின் நற்சீர்த்தி - உயர்
மன்னு இமயமலை யோடு - கங்கை
வண்புனற் பாய்திரு நாடு.

காலை விழித்தெழுந்த போது - நேற்றுக்
கண்ட வடிவில் ஒருமேன்மை - எனில்
நூலுக்கது பொருத்தமாக - நெஞ்சில்
நுழைந்த பொழுதில் ஒருவீரம்.
கோல முடையநல்ல பறவை - மரக்
கூட்டம் விடுதலைகொள் விலங்கு - மிகு
சீல முனிவர் தவக்காடு - பல
சேர்ந்த மகிமைத்திரு நாடு.

வாழ்விற் கலந்திருந்த இன்பம் - உங்கள்
வாய்க்குத் தவறி விட்டதென்றே - இந்தப்
போழ்தில் உரைக்குவரும் பேச்சில் - உள்ள
போக்கில் மலைத்துவிட வேண்டா.
ஆழ்ந்து மிதந்துவரும் மீன்கள் - கடல்
ஆழந் தனை மலைப்பதுண்டோ - திறல்
சூழ்ந்த மறவர் குலத்தோடு - மறைச்
சோனை தனில் முளைத்த நாடு.

உள்ளந் தனிற்கிளம்பு முளைகள் - இந்த
உலகுக் கறிவுதரும் கனலாய்ப் - புகழ்
அள்ளும் படிநினைத்தல் செய்வீர் - நொடி
அரையில் அரையியற்ற வருவீர்.

வெள்ளம் மடைதிறந்த வாறே - உங்கள்
வீரர் நிலத்தில் வைத்தமோகம் - அதற்
குள்ள மனவுறுதி யோடே - அச்சம்
ஓட்டிப் பணிபுரிந்து வாழ்வீர்.

- தேசசேவகன், 29.5.23, ப.5

12.6.23

26. நெஞ்சுக்கு நீதி

(விருத்தம்)

போந்தது புதிய எண்ணம்!
பொலிந்தது வீரம் எங்கும்!
தீர்ந்தது தொழும்பும் புத்தி![1]
செழித்தது நாட்டில் அன்பு
தேய்ந்தது பகைவர் துள்ளல்!
திருவெலாம் சேர்த்தான் காந்தி!
காந்தியின் வழியை நெஞ்சே!
கணத்தொறும்[2] பாடு கண்டாய்!

மனிதரில் மிக்கோன் காந்தி
மகாத்துமா சொன்ன தர்மம்
கனவிலும் சாக்கி ரத்தும்
கடலினுக் கெப்பு றத்து
மனைதொறும் பாய்தல்; உன்றன்
மனதுக்கு வீணை யின்பம்
உனதுநற் காந்தி நெஞ்சே!
உலகுக்கும் காந்தி கண்டாய்!

தனக்கென அன்றி நெஞ்சே!
சகத்துக்கே வாழும் வீரன்
மனத்தினில் தோன்றும் யாவும்
மணிமுர சடித்து நின்றே
இனைத்தினைச் செய்க! இன்ன
விடுக்க! என் றிசைத்துப் பின்னும்
தனிச்சிறை சென்றான். இந்த(ச்)
சகத்தை(க்)காந் தியாக்க என்றே!

சிறையினிற் காந்தி யண்ணல்!
செகமெலாம் அன்னோன் பேச்சு
இறையவர் என்று தம்மை
எண்ணிடும் சர்க்கார் மேலே

தலையினி லுள்ளோர்க் கெல்லாம்
சலிப்பின்மேல் சலிப்பு நெஞ்சே!
மறைவினில் உள்ளோன் மூட்டும்
மருக்கனல் தன்மை கண்டாய்!

சிறிதுமேல் வலிது பாயும்
சின்னது வலிய தொன்றைப்
பிறிதொரு நாட்டைக் கூட்டிப்
பிடித்துநொக் கிடக்கி எம்பும்
குறுகிய செயலில் வையம்
— குதித்தது; கரைக்கு மீள
இறையவன் அருளின் காந்தி
எழுந்தது புவியில் நெஞ்சே!

1. 'தொழும்புப் புத்தி' என இருப்பின் நன்று
2. 'கணந்தொறும்' என இருப்பின் நன்று

- தேசசேவகன், 12.6.23, ப.4

12.6.1923

27. காளிக்கு விண்ணப்பம்

(கலிவெண்பா)

பாரததே சத்தை விடுவிப்பேன் பண்டைநாள்
ஆரியரை உற்பத்தி ஆக்கிடுவேன் - வீரியத்தில்

சிங்கத்தை ஒத்தவரைச் செய்வேன் செயும்தொழில்கள்
எங்கைக்கும் மேலாய் இயற்றுவிப்பேன் - தங்கம்

குவிக்கின்ற வாணிபத்தைக் கூட்டுவேன். நாட்டை(ப்)
புவிக்குத் தலையாக்கிப் போட்டுத் - தவிர்ப்பின்றி

எல்லா மனிதர்களும் ஒன்றுதான் என்பதாய்
நல்லதொரு சட்டம் நடத்துவிப்பேன் - பொல்லா

வறுமையினை மாய்த்திடுவேன் எல்லோரும் தெய்வப்
பிறவிகள்; ஈசன் பெற்றபேர்கள்; - உறவினர்கள்

என்ற உணர்வை எழுப்பிடுவேன். மற்றவரின்
பொன்னுக்கும் பூமிக்கும் போரிட்டுக் - கன்னமிடும்

செய்தி யறவொழிப்பேன், சின்னவரை வல்லோர்கள்
நையப் புரிவதெல்லாம் நான்தொலைப்பேன். துய்யமன

எண்ணிக்கை யெல்லாம் உனது வடிவழகில்
நண்ணுதற்கே என்றஉண்மை நாட்டிடுவேன் - கண்ணெதிரில்

ஈயெறும்பு கோடி எண்ணற் றனஉயிர்கள்
தாய்பெற்ற சேதி சகமுரைப்பேன் - நோயின்றி

இன்பமே ஓங்கவைப்பேன் இத்தனையும் காளியே!
உன்னருளில் ஓர்துளியின் உண்டு.

- தேசசேவகன், 12.6.23, ப.4

19.6.1923

28. சுதந்திர தேவி ஸ்தோத்ரம்

(போனால் வருமோ வாலிபம் என்ற மெட்டு)

நெஞ்சத்திலே வரும் எண்ணங்கள் யாவுமுன்
நேசத்தி லாக்கும் சுதந்தரமே!
கொஞ்சிக் குலாவிட நீவருவாய் - எங்கள்
கொத்தடிமைத் தன்மையாம் தொலைப்போம். அடி

கொஞ்சத்திலே முகங் கோணிவிட்டாய். இங்குக்
கொள்கையில் மாறிக் கலங்கிவிட்டோம் - இன்று
தஞ்சமடி யுன்றன் பாதத்திலே! - சிங்கத்
தன்மை எமக்கருள் நீதத்திலே. எங்கள்

அச்சம் பிடித்தவர் கண்டறியார் - எனில்
ஆண்மைகொள் தோளில் நடிப்பவளே! எமக்
கிச்சை யிருக்குது நாற்றிசையை - எம்
இனத்தில் அடக்க வரந்தருவாய் - அடி

உச்சி மலையடி உன்னழகு! - தன்னி
லோடும் சிறுத்தை மனத்தெளிவு! - கட்டுங்
கச்சை யறுத்து வருங்குதிரை - தன்
கருத்தினில் வந்து கலப்பவளே! - அடி!

வாய்மையும், வேலும் வலக்கையிலே - நல்ல
வண்மையும், திண்மையும் மற்றொருபால் - எனத்
தூய்மைப் படைசுமக்குந் திருவே! - எங்கள்
துன்ப மகற்றும் நிழற்றருவே! - அடி

தேய்ந்து சிதைந்திடப் பார்ப்பதுண்டோ? - உன்றன்
தெய்விக மிங்குப் புதுப்பொருளோ? - பண்டு
தோய்ந்த உன்காதற் சுகத்தையெல்லாம் - எண்ணச்
சொக்குதுபார் இந்தத் தேசமெல்லாம் - அடி

தாவிடுவாய் உள்ளத் தாமரைமேல் - வந்து
தாக்குது பாருன்றன் காதறகனல் - எங்கள்
ஆவி, யுடல்பொருள் அத்தனையும் - உன்றன்
ஆசை நெருப்பில் துரும்புகளாம் - அடி!

தேவை யிருப்பதை நீயறிவாய்! - எங்கள்
திண்மையைச் சோதனை செய்பவளே! - உன்றன்
கோவை யுதட்டின் குறிப்பறிந்தோம்! - எங்கள்
கொள்கையிலே அன்பு கொண்டவளே! - அடி

- தேசசேவகன், 19.6.1923, ப.6

10.7.1923

29. அகாலியரின் ஆண்மை

(அகாலியர் கையோடு கிருபான் (ஓர்வித கத்தி) வைத்திருப்பது வழக்கம். சர்க்கார் தங்கள் சட்டத்திற்கு விரோதம் என்று மறுத்தார்கள். அகாலியர் ஸ்வதர்மத்தை விட்டுவிடவில்லை. அவர்கள் சத்யாக்ரஹம் நடத்தி வெற்றியில் ஏறிவிட்டார்கள்)

கட்டளைக் கலிப்பா

எங்கள் சாதித் திருக்கைவ ழக்கமாம்
எங்கள் கத்தி எமக்குயிர் போன்றதாம்
தங்கள் வன்மையைக் காட்டுக ஆளுவோர்
சாதல் நேரினும் கைப்படை விட்டிடோம்
பொங்கிப் பாயும் கடலினைப் போலவே
போய்ச்சி றைப்படல் எங்கட்கு வெல்லமாம்
அங்கிவ் வாறு கிளம்பினார்! வென்றனர்
அகாலி வீரரின் ஆண்மையைக் கண்டிரோ!

நின்று பாடிக் கிளம்புமாம் கூட்டம்அந்
நீளக் கத்தியை ஏந்திய கையொடே,
வன்பு கொண்டவர் 'வா' சிறைக் கென்பராம்.
வாய்மைக் கூட்டமும் தோள்தட்டிச் செல்லுமாம்
என்பு நோக அடிப்பதுண் டாமதை
"ஈச னாரருள்" என்று நகைப்பராம்!
அன்றொ டன்றித் தினந்தினம் வெற்றியாம்
அகாலி வீரரின் ஆண்மையைக் கண்டிரோ!

நாட்டில் இந்தநற் றெய்விகப் போர்த்திறன்
நாலு திக்கினும் சென்று கொளுத்துது
கேட்ட மாந்தர்கள் கீர்த்தியை வாழ்த்தினார்
கீழ்மை போக்கக் குலமொன்று [1] சேருது
வீட்டி லில்லை துயில்வதி லில்லை யிவ்
வீண்ப சப்பினில் இல்லை சுதந்திரம்!
ஆட்ப டாது யதேச்சையி லோடிய
அகாலி வெற்றி அரும்பணி கண்டிரோ!

வே.:

1. 'கலமென்று' (க.கு.)

- தேசசேவகன், 10.7.23, ப.7.

கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.154

10.7.1923

30. ஸ்ரீ லாலா லஜபதிராய் பிணிக்கிரங்கல்

எண்சீர் விருத்தம்

இன்றைக்கே லஜபதிநோய் தீர்ந்த தென்றே
யாருரைப்பார் என்காதில்? அந்தோ நாட்டின்
நன்மைக்கே வினவறிந்த நாளாய் இந்த
நாள்வரைக்கும் உழைத்தவனை மறப்ப துண்டோ?
குன்றைப்போல் கலங்காத வீரன்! பல்கால்[1]
கொடுஞ்சிறையில், பிறநாட்டில் கொண்டு சேர்த்தும்
அன்றுபோல் சுதந்திரப்போர் இன்றும் நீங்கா
அருந்துணையைப் பிணிநலித்தால் நலியா ருண்டோ?

நாளைதரும் வெற்றியெலாம் நன்றோ இன்று
நலிந்தவனை "மாசத்தி" தேற்றா விட்டால்
வேளையறிந் தாதரிப்பாய் வெற்றித் தேவி!
விண்தேவி! உயிரனைத்தும்[2] வேண்டுந் தேவி!
காளை, இளங் கன்னியர்க்குத் தோளுங் கற்பும்
கதியற்ற நாட்டினுக்குக் கண்ணும் போன்றான்
தாளுக்குத் தலைவணங்காப் பேயர் எண்ணம்
தவிர்க்கநோய் தவிர்ப்பாய்நீ லஜப திக்கே!

இன்னதுசெய் கென்றுரைப்பான் பாஞ்சா லக்கோன்
இரண்டின்றிச்[3] செய்திருந்தார் நாட்டா ரெல்லாம்
அன்னைதுயர் தீர்ப்பனென அவன்சொற் பேச்சின்
அமுதத்தில் விஷமிருப்ப தாகச் சர்க்கார்
பின்னொருத்தர் காணாமல் நாட்டை விட்டுப்
பிறிதொருநா டேற்றிவிட்டார் பன்னாள் சென்று
சின்னாளின் முன்வந்தான் சிறையே சென்றான்
திருவடியை நீசூழ்ந்தாய் போபோ நோயே!

1. பலகால் (க.கு.)
2. உயிரினைத்தும் (க.கு.)
3. ஒற்று'ச்' விடுபாடு (க.கு.)

- தேசசேவகன், 10.7.1923, ப.7,
கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.155

10.7.1923

31. ஸ்வதர்மம்

உடை

வெண்கலிப்பா

இங்கிலந்து தேசத் தினிற்போய் இறங்கியதும்
அங்குநான் கண்ட அதிசயத்தைச் சொல்லுகிறேன்

எல்லாரும் குல்லாய் தலைமயிரோ கத்தரிப்பு.
எல்லாரும் மேலுங்கீ ழும்சட்டை யிட்டிருந்தார்.

உள்ளங்கால் மூடி உறையிட்ட தன்மேலே
வள்ளம்போற் சப்பாத்து மாட்டாதார் யாருமில்லை.

எல்லோரும் இவ்விதமே எத்தனையோ நாள்அங்குச்
சொல்லா[1] இடமெல்லாம் சென்றுநான் பார்த்துவிட்டேன்.

வேறுவித வேஷத்தைப் பூண்டவரைக் கண்டறியேன்.
மாறில்லை. சத்தியமே. இந்துமனித ரைப்போல்

தோள்மேலே உத்தரியம் தொங்குமிடைச் சோமனுடன்
ஆளொருவன் வெள்ளையரில் அங்குநான் கண்டதில்லை.

அப்போது தானென் அகத்திலொரு சந்தேகம்
தொப்பென்று தோன்றிற்று நாம்மாத் திரம்நமது

தேச உடையிருக்க வேற்றுடையைத் தீண்டுவதா?
யோசிப்பீர் யாருமிதை உற்று.

1. 'செல்லா' என இருப்பின் நன்று

- தேசசேவகன், 10.7.23, ப.7

31.7.1923

32. இராட்டினம் - தெய்விகப் படை

ஆசிரியப்பா

*தேவர்க்கு விடுதலை தந்திடத் தேவி
இந்திரன் தோளுக்கு வச்சிரம் ஈந்தனள்
பார்த்தனுக் களித்தது பாசுபதாஸ்திரம்.
இராமனின் உரிமையைக் காப்பதற் கென்றே
இராமனின் தோளினில் வில்லொன்றை யிட்டனள்.*

*கண்ணன் கையிற் சக்கரம் அளித்தனள்,
கண்ணன் உலகைப் பகைகொன்று காத்தனன்.
"இதோஉம் விடுதலை" என்றனள். நாமெலாம்
"எங்கென்று" கேட்டதில் இராட்டினம் காட்டினாள்.*

*இராட்டினம் சுழற்றிச் சுழற்றி எதிரியின்
போக்கையும் சுழல வைக்கலாம் போலும்!
மூச்செலாம் ராட்டின விசையினில் முடுக்கினால்
ஏச்சின்றி வெற்றியில் ஏறலாம் போலும்!*

*இந்திரன் உலக்கையால் எதிரிக்கு நோயெனல்
இராட்டின நற்படை நாட்டினை மீட்பதாம்.
வச்சிரம், பாசுப தாஸ்திரம், வலியவில்,
சக்கரம் அனைத்திலும் நமக்குத் தந்ததே.*

*நல்லது போலும்! வாழ்ந்தோம் நாமெலாம்
இங்கிது வாழ்க! இதற்கொரு தனியறை
நாட்டினில் ஒவ்வொரு வீட்டிலும் அமைப்போம்.
தெய்வப் படைத்திறன் திசையெட்டும் காணக்
கையும் மனமும்நாம் சோராது கலப்போம்.
தோளுக்கு வீரமும் தொழும்புக்கு மீட்சியும்
ஆளுக்காள் வேண்டினோம் அவையெலாம் அடைவோம்.
இராட்டினம் தந்தனள் எங்கள் மாசக்தி.
மாசக்தி வாழ்க! அன்னவள்
தேசத்தில் வாழ்க! பாரத நிலமிதே!*

- தேசசேவகன், 31.7.1923, ப.6

7.1923

33. ஏடுகள் (பத்திரிகைகள்) வாழ்க!

வெண்கலிப்பா

ஊருக்கோர் ஏடுஅந்த ஏடொன்றில் ஆயிரம்பேர்
சேருங்கள்! நல்லமொழி தீட்டுங்கள்! பாரதத்தைப்

பாடுங்கள்! எல்லாரும் பார்க்க விடுத்திடுங்கள்!
ஓடுங்கள் வெற்றியிலே ஓடுங்கள்! ஓடுங்கள்!

நாய்த்தன்மை கொன்று சுதந்தரத்தை நாட்டுங்கள்!
காய்த்திருக்கும் நல்ல கனியைஇழக் காதிருங்கள்!

தேவி யனுப்பிவிட்டாள் அந்தத் திருவருள்தான்
ஆவியொடு காந்தி யவதாரம்! கண்டிடுங்கள்!

ஏடெல்லாம் காந்தி இயக்கம் பரப்பிடுங்கள்!
ஏடும் இருதயமும் ஒன்றாய் இருந்திடுங்கள்!

எத்திசையும் உங்கள் இதயத்தை - ஸத்தியத்தைச்
சித்திரித்து வாணிசொல்லத் தூதாய்ச் செலுத்திடுங்கள்!

ஏடெல்லாம் வாழ்க! இசைஓங்க! ஒன்றுபத்தாய்
நாடெல்லாம் காண்க! நயந்து.

- ஆத்மசக்தி, ருத்ரோத்காரி ஆடி, (சூலை 1923) ப.13-14

1923 ஆகஸ்டு

34. மகாசக்திக்கு விண்ணப்பம்

(திருக்கடையூர்தனிலே சித்ரத் தேரோடும் வீதியிலே என்ற மெட்டு)

அன்பு கொடுத்திடுவாய்! - உயிர்
அத்தனைக்கும் இனிதாய்
வன்பு கொடுத்த மலைக்குமரி! புவி
வாய்மை வாய்மை வாய்மை வளர்த்திட.

(அன்பு)

முன்பு வகுத்தபடி - உன்றன்
மூச்சில் இயங்குமுயிர்
ஒன்றினை ஒன்று நலிப்ப தில்லாவகை
ஒத்தல் ஒத்தல் ஒத்தல் நிலைத்திட

(அன்பு)

பக்தி வரப்புரிவாய்! - உன்றன்
பாத மலர்களிலே
முக்தி கொடுக்கும் முதற்பொருளே! புவி
மூர்க்கம் மூர்க்கம் மூர்க்கம் தொலைத்திட

(பக்தி)

சக்தி யென்றே பிழைப்பேன் - கெட்ட
சாவைத் தொலைத்திடுவேன்
மித்தை யிந்தப்புவி என்னுமோர் கொள்கையை
வீழ்த்தி வீழ்த்தி வீழ்த்தி விடும்படி

(பக்தி)

அறிவை வளர்த்திடடீ! - புவி
ஆக்கம் வளர்த்திடுவேன்
உறவிற் கலந்தவளே! எளிமைத்தனம்
ஓட ஓட ஓடும்படி செய்ய

(அறிவை)

குறுகிய நோக்கத்தையும் - வெறுங்
கோணற் பிழைப்பினையும்
அறஇங் கொழித்திடில் மீதியி லாகுவ
தாண்மை ஆண்மை ஆண்மை வெளிப்பட

(அறிவை)

வீரம் மிகத்தருவாய்! நெஞ்சில்
வேட்கை தவிர்த்திடுவேன்.
சேரும் பகைப்பிணி தீரப் பலப்பல
தேசம் தேசம் தேசம் சுகப்பட

(வீரம்)

ஆரும் உனக்கடிமை. உயிர்
அத்தனைக்கும் உரிமை.
கோரிப் பிறன்பங்கின் கோட்டை மித்திடல்[1]
கொட்டம் கொட்டம் கொட்ட மடங்கிட

(வீரம்)

கந்த மலர்களடி! புவிக்
காரியம் எண்ணிக்கைகள்
விந்தை அருச்சனை உன்றனுக் காக்கிடில்
வெற்றி வெற்றி வெற்றி நிலைத்திடும்

(கந்த)

இந்தப் புவித்தலைமை எனக்
கிந்தத் தினம்கொடுப்பாய்
சந்தித்து நீசொல்லும் சட்டப் படிக்கெங்கும்
சாந்தி சாந்தி சாந்தி புரிகுவென்

(கந்த)

1. 'மிதித்திடல்' என இருப்பின் நன்று

- ஆத்ம சக்தி, ருத்ரோத்காரி ஆவணி, (ஆகஸ்டு 1923) ப.40-41

35. சமூகத் திருத்தம்

சுற்று மதிற்சுவரின் உட்புறத்திலே - பெரும்
சோதி தெரிந்ததொரு ராத்திரியிலே,
உற்று(க்) கவனிக்கையில் சாமியெழுந்தே - அங்
குலவி வருவதென்ற சேதியறிந்தார்.
பற்றித் தொடர்ந்த சிலபறையர் உள்ளம் - தங்கள்
பாழும் உடலிருக்கத் தலையைமட்டும்
சற்றந்தக் கோயிலுக்குள் நுழைந்துவிட்டார்[1]; இதைச்
சாமிக் குடையவர்கள் அறிந்துவிட்டார்.

அச்ச மிகுந்ததந்தப் பறையருக்கே! - எனில்
ஆசை யிருக்குதந்தத் தரிசனத்தில்
உச்சி தனிற்பறக்க இறக்கையில்லை - அங்
குயர்ந்த மரக்கிளையில் தொத்தமுயன்றார்.
கச்சை தனைவரிந்து சாமிக்குடையோர் - அங்குக்
காணப் பறையர்களைத் தொடர்ந்துவந்தார்
பச்சைக் கிளியினொடு பறையரெலாம் - மண்ணில்
பதிய விடும்படிக்கு[2] நொறுக்கப்பட்டார்.

வீழ்ந்த[3] குலைந்தவரை மேலும்மடித்தார் - இந்த
வெற்றி கிடைத்தற்கு மகிழ்ச்சிகொண்டார்!
வாழ்ந்து மதியிழந்த மனிதர்களே
மனத்தில் உயர்த்தியென நினைப்பரே!
தாழ்ந்த குலம்தமக்குள் உயர்ந்திடவே - சென்று
தாவும் கிளையினையும் முறிப்பதுண்டோ?
தாழ்ந்த குலம்மென இங்கு உரைப்பீரேல் - இந்த
சமூகம் இழிந்ததென்று நானுரைப்பனே.

1. 'நுழைத்து' என இருப்பின் நன்று
2. 'விழும்படிக்கு' என இருப்பின் நன்று
3. 'வீழ்ந்து' என இருப்பின் நன்று

- ஆத்மசக்தி, 1923 அக்டோபர்,
ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், மார்ச், ஏப்ரல், 1983 ப.19

36. திரு(இலக்ஷுமி)

கண் நிமிராமல் - மனதிற்
கபடு வையாமல்
திண்ணிய தோள்கள் - இரண்டும்
செயல் இளைக்காமல்
நண்ணிய உழவன் - தனைப்போய்
நாடிடுந் திருவே!
மண்ணினை மணியாய்ப் - புரிவாய்
வாழிய திருவே!

பொய்ம்மையும் வார்த்தைப் - புளுகும்
போக்கும் இல்லாதான்
கைம்முதற் செட்டி - அவன்தோள்
கலந்திடுந் திருவே!
இம்மெனு முன்னர் - அவன்சீர்
எழுந்திடப் புரிவாய்
மெய்ம்மலர் தனிலே - அமுதாய்
மேவிய திருவே!

காட்சியும் நினைவும் - செவியில்
கலந்தன யாவும்
மீட்சியின் பொருள்கள் - எனவே
மேவிடும் குலத்தார்
ஆட்சி யிப்புவியாய் - நொடியில்
ஆக்கிடுந் திருவே!
மாட்சி மிக்கவளே! - வறுமை
மாய்த்திட வருவாய்.

தாமரைப் பூவும், - கழனித்
தடங்களும் சோலை,
கோமகன் மொழியும் - பசுவும்
குலவிய திருவே!
ஆமையின் முதுகை, - மடிநாய்
ஆட்டிய வாலைத்,
தூமதி யனையாய்! - மறந்தும்
சோம்பலின் புயத்தை

வெறுத்திடுந் திருவே! - இனிநான்
விளம்புதல் கேட்பாய்;
நறுக்கிய மணியில் - ஒளிபோல்
நாவினிற் சுடரும்
சிறப்புறு கவிஞர் - புலவோர்
திருவெனில் பகையாம்
வெறுப்பு மிக்கதடி - இதனை
வீழ்த்திடு திருவே.

- **ஆத்மசக்தி, 1923 கார்த்திகை, ப.149-150**

37. வாணி (சரஸ்வதி)

வாணியை என்றும் வணங்கிடுவோம் புவி
மாயம் அனைத்தும் விளக்கிடுவாள்
பூணும் இருட்டை மனத்தைவிட்டே நொடி
போக்கும் நிலாவை வெறுப்பதுண்டோ?
காணப் பதங்கள் புவிக்கினிதாய் அகக்
கண்ணில் நமக்குச் சொரிந்திடுவாள்
வீணை யெடுத்துப் பிழிந்தனளே ஒலி
வெள்ளம் அனைத்தும் எழுத்தெழுத்தாய்!

காதல் நமக்கவள் தந்திடுவாள் அவள்
கழலில் நமக்குண்டு கீர்த்தியெலாம்
ஊதி வடிக்கின்ற பொன்னினைப்போல் நெஞ்சில்
ஒளியைக் கொடுக்கின்ற தெய்வமவள்!
தீதில் நடக்கின்ற மாந்தரெலாம் அந்தத்
தெய்வம் தனைக்கண்ட தில்லையென்போம்
வேதன் சுவைக்கின்ற நாவினிலே கலை
வேண்டும் படைக்கின்ற போதினிலே

வெள்ளை மலர்க்குள் இருந்திடுவாள்! நல்ல
வேதங்க ளுக்குள் இருந்திடுவாள்!
பிள்ளை மொழிக்கு மகிழ்ந்திருந்தே அவர்
பெற்றவை பின்னர்ப் புவிக்குரைப்பாள்!
கள்ளை வடிக்கும் உதட்டினிலே நல்ல
கற்பனை கொட்டும் நகைப்புடையாள்!
தெள்ளிய ஞானச் சுடர்முகத்தாள் அவள்
செய்யும் நலங்கள் கணக்கிலுண்டோ?

ஒன்றும் வழக்கம் அறிந்திடுமுன் நமை
ஒப்பிடச் செய்து மணந்தவளாம்
அன்று தொடங்கிஎந் நாளும்அவள் இன்பம்
ஆக்குவ தென்பது நோக்கமன்றோ?
சென்றநம் உள்ளம் மறப்பதுண்டோ அவள்
சீத விழிக்குள் நனைந்தபின்னும்?
என்றும் இனிப்பது மாத்திரமோ கலை
ஏறிட ஏறிட இன்பமன்றோ?

- ஆத்மசக்தி, 1924 தை, ப.219-220

27.8.1924

38. திருமண வாழ்த்து

விநாயகர் காப்பு

பூக்கும் புதுவையினிற் பொன்னிநிகர் காசியம்மா
பாக்கியனி ராமசாமிக் கென்ன - ஆக்குமணம்
சொல்லிப் புவிக்குச் சுவைப்படைக்க [1] என்மீது
வல்லபைநா தாகிருபை வை.

இராகம் : அமிர்தவாஹினி
தாளம் : ஆதி

பல்லவி

வானோர் ரவீமதீ தாமுள்ள நாள்வரை
வாழ்க சதீபதீயர்

அனுபல்லவி

மானமும் குலசந்தான சம்பன்னராய்
மாசிலாவிஸ் வாசமொடு காசினிதன்னில்

சரணம்

சீலன் செங்கழனி செம்மலும் தாயாம்
திருநிகர் பொன்னம் மாவும் சேயாம்
கோலமார் ராமசாமி சற்குணனை(க்)
கோதையோடு பூவும்வாச மாமணம் முடித்தார் (வா)

பூமிமெச்சும் குப்புசாமி தாயம்மை
புரிதவக் குமரி காசியம்மையாம்
தேமலர்க் கொடிபோய்ச் செழித்திடும் தருவைச்
சேர்ந்தவாறு தோய்ந்த அன்பிலே மணம்ஆர்ந்தார் (வா)

அறநெறி கடவா தனைத்துயிர் மேலும்
அன்பொடு பழகித் துன்பெலாம் விலகி
உறவினிற் கலந்தும் உண்மையை நயந்தும்
ஓசையொடு தேச ஆணை மீறுதலன்றி (வா)

குறிப்பு :

"சரஸ்வதி மனோகர சபை" எனும் அமைப்பின் உறுப்பினர் இராமசாமி என்பாரின் திருமணத்தின் போது 27.8.1924இல் புதுவை சரஸ்வதி மனோகர சபையாரால் வெளியிடப்பெற்ற திருமண வாழ்த்துப்பா

1. ஒற்று'ப்' மிகை.

- பாவேந்தர் உள்ளம், ப.43-44

39. மறந்தறியேன்

மறந்தறியேன், தருவாய் - முருகா
திருவடி மறந்தறியேன்

பிறந்துவிட்டேன் முன்னே
வினைப்பயனதனால்
பெற்றதுன்பம் போதும்
நானுன்னை என்றும்
ஒருநொடியில் [1]
(மறந்தறியேன்)

அடியார் உள்ளமெனும்
அழகிய மயில்மேல்
அமரும் சுடரொளியே
உனதருளால்
குடமுனி உய்ந்தான்
கீரனும் உய்ந்தான்
கொலைசெய்யும் குறவரைக்
காத்தாய்
உனதருளில் ஒருதுளி
அருளுவாய் கனவிலுமுனை *(மறந்தறியேன்)*

குறிப்பு :

இந்தப் பாடல் புதுவை இசை ஆசிரியர் ஒருவர் கொடுத்த மெட்டைவைத்து எழுதியது. 'முந்தைய நிலைகாட்டும் முருகன் பாட்டு' எனுந்தலைப்பில் மன்னர்மன்னன் எழுதிய 'நினைவுமண்டபப்' பகுதியில் இப்பாடல் தரப்பட்டுள்ளது. பாடலுக்கு முன் "மாரியம்மன் விழாவாயிருந்தாலும் அதற் கான பாடலை எழுதி அரங்கேற்றி அச்சிட்டு வழங்குவார். தாமே இசையோடு பாடுவார். திருமண வாழ்த்து அழைப்பிதழ் எழுதும்படி எவரேனும் கோரினால், விநாயகர் காப்பு, சரசுவதி இலக்குமி வாழ்த்து முதலியவை எழுதி விட்டே அழைப்புச் செய்தியைப் போடுவார்" என்னுங் குறிப்பு காணப்படுகின்றது. மேலும் மன்னர்மன்னன்

பிறப்புக்கு முந்தைய நிலையாகவும் இது குறிப்பிடப் படுகின்றது. இவற்றிலிருந்து 1928க்கு முன் இப்பாடல் இயற்றப்பட்டதாகக் கொள்ளலாம்.

1. 'ஒருநொடியும்' என இருப்பின் நன்று.

- பாரதிதாசன் குயில், 10.11.67, ப.11-12

40. பாலசுப்பிரமணிய நாயகர் இரங்கற்பாக்கள்

ஞாலமிக்க கீர்த்திதனைக் கசந்தோ? வான
நாடுதரும் இன்பமதை வியந்தோ? தீய
காலனுக்கு நெஞ்சீர மில்லாச் செய்தி
கடலுலகு கண்டறிவு காணத் தானோ?
சீலமிக்க தன்நண்பர் தனைப்பி ரிந்தால்
செயலிழப்பர் எனப்புவிக்குக் காட்டு தற்கோ?
பாலசுப்ர மணியனெமைத் துயரிற் சேர்த்துப்
பரனடியிற் சேர்ந்திட்ட பான்மை என்னே!

வாளெடுத்துப் போர்செய்யும் கலைவ ளர்த்தும்
வண்தமிழ்நா டோங்கவைத்த தமிழர் மாண்பை
நாளெடுத்து விழுங்கிற்றே! தமிழ்ச்சிங் கங்கள்
நலிந்தனரே! தமிழ்நாட்டைத் தமிழ்நா டாக்கத்
தோளெடுத்துத் தொண்டுசெய்யும் இளைய வீரர்
தோன்றுவரா! என்றுநாம் எண்ணும் இந்நாள்
தாளெடுத்து வீரம்எழுந் தகத்த காயத்
தமிழ்எழுதும் தமிழனைஇன் றிழந்தோ மந்தோ

உரஞ்சுமந்த மணிக்கவசம் ஒளிம ழுங்க
ஓய்ந்தனபோல் முப்பத்து மூன்று கோடி
கரஞ்சுமந்தும் பிறநாட்டான் இங்கு வைத்த
காலைமுறிக் காதிருக்கும் பார தத்தாய்
சிரஞ்சுமந்த தன்னுரிமை மகுடம் பூண்டு
செகத்தின்கோல் தன்கோலாய் ஆள்க என்றே
"இரஞ்சிதபோ தினித்" தலைமை ஏற்று யர்ந்த
இளையானைப் பாரதத்தாய் இழந்தா ளந்தோ.

"பாரதமைந் தன்மரண சாச னப்"பேர்ப்
பயன்மிக்க ஒருநூலைப் பாலன் தந்தான்
பாரதமைந் தர்களதைப் பார்க்குந் தோறும்
பாரதத்தின் விடுதலையில் ஊக்கங் கொள்வார்
"பாரதமைந் தன்மரண சாசனத்"தைப்
பார்க்கின்ற பொழுதெல்லாம் எங்கட் கந்தோ
சீருடைய அவன்முகமும் எழுதும் கையும்
திடுக்கிடவைக் கின்றனவே கண்முன் தோன்றி.

புதியனவாய் நெஞ்சத்தில் அரும்பும் எண்ணம்
பூக்குமுன்னே கிள்ளஎண்ணும் ஆங்கி லர்கொள்
அதிகாரம் செல்லுபடி ஆகா வண்ணம்
அழகுடைய பிரான்சியர்நூல் பிரான்செல் லைக்குள்
கொதிக்கின்ற விடுதலைப்பே ராவல் கொண்டு
குளிர்தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்குங் காலை
விதிதோன்றி ஆங்கிலரின் விண்ணப் பத்தால்
விழுங்கிற்றோ பாலசுப்ர மணியன் தன்னை.

பெண்கொடுத்த மாதுலனாய்க் கணமும் நீங்காப்
பிரியமிகு வளர்ப்புத்தந் தைதா யாகி
விண்கொடுத்த கொடைபோலே கல்விக் காக
வெகுபொருளும் செலவிடும்ஆ றுமுகப் பேரான்
கண்கொடுத்து வைக்கவில்லை என்று நையக்
கதியழிந்தேன் எனமனைவி கண்ணீர் கொள்ளப்
பண்கொடுக்கும் அவனிளஞ்சேய் அப்பா என்னப்
பரகதிக்குப் பாலசுப்ர மணியன் சென்றான்

சோதரிசோ தரர்கொண்ட துயரும், மற்றும்
சொந்தக்கா ரர்துயரும், நண்பர் கொண்ட
ஓதரிய துயரும்கா ணாது சென்றவ்
வுயர்வுடைய பொன்னாட்டில் எம்பி ரானின்
பாதநிழற் குளிர்கொண்டு வீற்றி ருக்கும்
பாலசுப்ர மண்யனுக்கு, வீர னுக்கு,
நீதனுக்கு நிறைகல்வி வாய்ந்தோ னுக்கு
நிகழ்த்துகின்றோம்; அவனென்றும் அடைக சாந்தி.

குறிப்பு :

பாரதிதாசனின் தலைமாணாக்கரும், கவிஞரும், பாரதிதாசனோடு இணைந்து புதுவைமுரசு இதழில் பணியாற்றியவரும், திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவருமான ச.சிவப்பிரகாசத்தின் உறவினரே பாலசுப்பிரமணிய நாயகர், அவர்மீது பெருமதிப்புடைய பாரதிதாசன் அவர் மறைவுக்கு ஆற்றாது எழுதிய இரங்கற்பாக்களே இவை. இவை தனி வெளியீடாக வந்தபோது "இவை 'இரஞ்சிதபோதினி!' பத்திராசிரியரும் 'ஓர் பாரத மைந்தனின் மரணசாசனம்'. 'பகவத்கீதை நூறு' 'ஆங்கிலேயர்களின் அமானுஷீகத் தன்மை' என்னும் நூல்களின் ஆசிரியருமாகிய புதுவை, திரு. சுபாலசுப்ரமணிய நாயகர் அவர்கள் விபவ ஞு ஆடி மீ 12

உ (27.7.28)-ல் தேக வியோகமடைந்ததை முன்னிட்டு ஆசிரியர் கனக சுப்புரத்தினம் அவர்களால் இயற்றியதை மேற்படியார் மைத்துனர் புதுவை முத்தியால்பேட்டை எஸ்.சிவப்பிரகாச நாயகரால் வெளியிடப்பட்டது. ஜெகநாதம் பிரஸ், புதுவை 1928" என்ற குறிப்பு முதலில் இடம்பெற்றுள்ளது.

- பாரதிதாசன் - கனகசுப்புரத்தினம், ப.54-56

10.2.1929

41. வந்தனோபசாரப் பத்திரம்

வருகஉயர் இராமசாமிப் பெயர்கொள்
அறிஞ!உன்றன் வரவால் இன்பம்
பருகவரும் இந்நாளை வாழ்த்துகின்றோம்
பனிபறக்கத் தகத்த காயம்
பெருகவரும் செங்கதிர்போல் மடமைவழக்
கம்பறக்கப் பீடை இங்கு
மருவவைத்த பார்ப்பனியம் வடுவின்றிப்
பறக்கஉனை வரவேற் போமால் 1

ஆதியிலே வாழ்வடைந்த பார தத்தார்க்
கதன்பிறகு பிழைக்கவந்த பார்ப்ப னீயம்
சோதியிலே வானத்தைக் கீறி நல்ல
சுவர்க்கத்தைக் காட்டியது மெய்யா? பின்னைத்
தேதியிலே நமைக்கலந்து[1] *பெருமை பெற்றுச்*
சிலசிலவாய்த் தமதுநலம் தனைஉ யர்த்திச்
சாதியிலே சமயத்தே சாத்தி ரத்தே
தனையுயர்த்திக் கொண்டதுவும் மெய்யா? நாட்டிற்
பாதியிலே பாதியதிற் பாதி தன்னைப்
பணிவதுமுக் கால்இஃதோர் சமுகந் தானோ? 2

பார்ப்பனியம் மேலென்று சொல்லிச் சொல்லிப்
பழயயுகப் பொய்க்கதைகள் காட்டிக் காட்டி
வேர்ப்புறத்தில் வெந்நீரை வார்த்து வார்த்து
மிகப்பெரிய சமுகத்தை இந்நாள் மட்டும்
தீர்ப்பரிய கொடுமைக்குள் ஆக்கி விட்ட
செயல்அறிந்து திடுக்கிட்ட வீரா! நின்னை
ஊர்ப்புறத்து மாந்தர்பலர் உணருங் காலை
உவக்கின்றாய் உன்பணியில் ஓய்ந்தா யில்லை
ஆர்ப்பரித்துப் பணிசெய்யும் தன்மை காண்போம்
அரும்பணிக்கு யாங்களுனை வணக்கம் செய்தோம் 3

சமுகத்தில் தாங்களொரு சிறிய தான
தனிச்சமுகம் என்றெண்ணி இருப்ப தாலும்[2]
சமுகத்தில் தாமன்றி மற்றோர் யாரும்
தாழ்ந்தோர்கள் என்றெண்ணி இருந்த தாலும்
சமுகத்தில் தங்களது செல்வாக் கென்றும்
தாழ்வடையப் பார்ப்பதில்லை பார்ப்ப னர்கள்
சமுகத்தில் எத்துறைக்கும் தமையே கோரும்
தாம்திருத்தும் சாத்திரங்கள் பொய்யென் பாரா? 4

காலமென்னும் சக்கரத்தின் சூழ்ச்சி தன்னில்
கடுகளவும் நாம்கலந்து கொண்டோ மில்லை
தூலமென இருந்திட்ட பிறநா டெல்லாம்
சொல்வதுண்டோ என்னென்ன புதிய எண்ணம்
ஞாலமெலாம் புதுவாழ்க்கை இன்ப வாழ்க்கை
நடக்கையிலே நம்நிலையை எண்ணிப் பார்க்கில்
மூலவயி றெரிவதல்லால் முன்னேற் றத்தின்
முதற்படியை மிதித்தோமா இல்லை இல்லை 5

மேல்வருணம் கீழ்வருணம் வேண்டா மென்றால்
மிகப்பொறுப்பு கொண்டவன்போல் பார்ப்பான் வந்து
நால்வருணம் வேதத்தில் உண்டென் கின்றான்
நாலுயுகத் தின்பின்னும் இதையே சொல்வான்
பால்யமணம் நாட்டுக்குத் தீமை என்றால்
பருவமணம் தீதென்று பகரு கின்றான்
மேல்வரட்டும் அறுகோடிப் 'பறையர்' என்றால்
விரைந்தோடிப் பார்ப்பனியம் காலைக் கௌவும் 6

நாடுமுற்றும் கோயில்மய மாக்கு தற்கும்
நாட்டிலுள்ள சாத்திரங்கள் சம்ம திக்கும்
பாடுபட்டுப் பார்ப்பனர்கள் பார்த்தா லன்றோ
பாரதத்தார் செல்வத்திற் பொறுப்பி ருக்கும்?
பாடைநிறை யப்பிணங்கள் குவியும் போதும்
பார்ப்பனர்க்குப் பணம்வாங்கித் தருவ தற்கு
நாடுகின்ற மந்திரங்கள் நாட்டி லுண்டு
நரிக்கெதிரே ஆடிறந்தால் நகைத்தல் போலே. 7

இளவிதவை மணம்பாவ மென்று சொல்லி
    எடுத்தெடுத்துக் காட்டுகின்றார் புண்ய சாஸ்த்ரம்[3]
அளவற்ற மூடவழக் கங்கள் நம்மை
    ஆட்படுத்திக் கொள்ளுவதை எண்ணி வாழ்வை
வளமாக எண்ணுங்கால் பார்ப்ப னீயம்
    மடையடைத்துப் புனல்இல்லை என்று சொல்லும்
புளகாங்கி தம்மிகவும் உண்டு போலும்
    பொதுநலத்தில் நம்முடைய பார்ப்ப னர்க்கு 8

முப்பத்து முக்கோடி மக்கள் நாடு
    முடிபுனையும் நற்சமயம் பார்ப்ப னர்க்கு(க்)
கர்ப்பத்தில் சனியடையும் சமய மென்று
    கருதுவதால் அச்சிறிய தொகையி னார்கள்
எப்போதும் இச்சமுகம் பிறனி டத்தே
    இருப்பதிலே அன்னவர்க்குக் கவலை யேது?
பொய்பகட்டுப் பார்ப்பனரை நம்பு மட்டும்
    பொதுவாழ்வின் உள்ளீடு மாய்வ துண்மை. 9

பாரதத்தின் இன்றைநிலை என்ன வென்று
    பார்க்குங்கால் எவ்விடத்தும் எதிலும் நன்கும்
வேர்விடுத்துப் பார்ப்பனரின் ஆதிக் கந்தான்
    மிகச்செழிப்பாய் இருப்பதனைக் காணு கின்றோம்.
சீரடைந்தான் பார்ப்பானே என்னும் செய்தி
    சிறுபிள்ளை முதலாக ஒப்புக் கொள்ளும்
யார்சொல்வார் இந்நிலையில் பார தத்தார்
    இன்பநிலை யடைகுவது கூடு மென்று? 10

பார்ப்பனர்கள் புரிகின்ற பசப்பால் மற்ற(ப்)
    பார்ப்பனர்கள் அல்லாத பேரிற் சில்லோர்
ஆர்ப்பதையும் பார்ப்பனரின் ஆதிக் கத்தில்
    அன்புசெலுத் திடுவதையும் காணுந் தோறும்
வேர்க்கின்ற வெயர்வையெலாம் வெள்ள மாகி
    மிளிர்கின்ற சத்தியமே வித்தாய் இன்பம்
சேர்க்கின்ற மனவுறுதி உழவாய்க் கொண்டு
    சின்னாளிற் பன்னாளின் வளப்பங் கண்ட 11

சுயமரியா தைப்பெயர்கொள் பயிர்செ ழிக்கத்
தொண்டுசெய்யும் இராமசா மித்த லைவா!
புயத்தெதிரே புவிபெயர்ந்து வருமப் போதும்
புலன்அஞ்சாத் தன்மையுள்ள கர்ம வீரா
செயற்கரிய செயப்பிறந்த பெரியோய்! இந்தச்
செகத்துநிலை நன்கறிந்த அறிவு மிக்கோய்!
வியப்புறுநின் இயக்கமது நன்றே வெல்க!
மேன்மையெல்லாம் நீஎய்தி வாழ்க நன்றே.

குறிப்பு :

"ஈரோடு திருவாளர் ஈ.வே.இராமசாமி நாயக்கரவர்கட்கு(ப்) புதுச்சேரி பொதுக்கூட்டத்தில் வாசித்துக் கொடுத்த வரவேற்பு" எனும் குறிப்பு குடிஅரசு இதழில் பாடலுக்கு முன் இடம்பெற்றுள்ளது.

இப்பாடலின் இரண்டு, மூன்றாம் விருத்தங்கள் ஐந்து அடிகளைப் பெற்றுள்ளன.

கறுப்புக்குயிலின் நெருப்புக்குரலில் தரப்பட்டுள்ள பாடலில் தென்படும் வேறு வடிவங்கள் வருமாறு:

1. நமைகலந்து (க.கு.)
2. இருப்ப தானும் (க.கு.)
3. சாத்திரம் (க.கு.)

- குடிஅரசு, 10.2.29, ப.6
கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.208-211

10.3.1929

42. நாளுக்கு நாணம்

கருங்கட லின்[1] மேல் பொன்னிறக் கதிர்கள்
இலங்கும் வண்ணம் எழுந்த பரிதியே!
நேற்றுங் கண்டோம் நின்னைஇக் கடல்மேல்
அதற்கு முன்னாள், அதற்கு முன்னாள்![2]
தினம்தினம் காலையில் சேர்வது கண்டோம்!
மாலையில் மேற்றிசை மறைவது கண்டோம்!
யாமுனைக் காணல்போல் நீஎமைக் காண்கிறாய்!
அனைத்துத் தேசமும் நிதம்உனை அறிவன!
அவைஎலாம் நீயும் அனுதினம் காண்கிறாய்!
சொல்லுவேன் இதுகேள் தொன்மைச் சுடரே!
நாளொரு புதுமை! மாதமோர் நன்னிலை!
உடுத்த,ஆடை அடுத்தநாள் களைதல்போல்
புதிய புதிய செயல்கள் புரிந்திடும்
செகத்தைத் தினம்தினம் காணும் நீதான்
எனது சமூகம் இழிநிலை நின்றும்
இம்மி பெயர்ந்தது முண்டோ இசைப்பாய்
சாதி, சமயம் சாத்திரப் புராணம்
மனிதர் மனிதரைச் சாமியாய் வணங்கல்
ஆனவை பலவும் சமூகத்தை அழுத்தி
அழுத்தி வருத்த அதன்கீழ் அழுந்திக்
'கண்ணுள மட்டும் இருட்டைவிட்' டகலோம்
என்று சொல்லும் இழிநிலைச் சமூகம்
எங்கே யிருக்கக்[3] கண்டிருக் கின்றாய்?
கருங்கட லின்மேல் பொன்னிறக் கதிர்கள்
இலங்கும் வண்ணம் எழுந்த பரிதியே!
எங்கள் நிலையின் ஈனத்தைக் காண
உள்ளம் நாணியோ உன்றன் ஒளியிற்
குன்றிக் குன்றி மேற்றிசை
சென்றிடு கின்றாய்? வேறென் செய்வையோ?

குறிப்பு :

முதலில் குடி அரசு இதழில் பாடல் வெளிவந்தபோது சில சொல் வடிவங்கள் பிழையாக இடம்பெற்றுள்ளன. அவை :

1. கருங்காடலின்
2. முந்நாள்
3. யிருக்கங்

- குடிஅரசு, 10.3.1929, ப.15

குடிஅரசு இதழில் பாரதிதாசன் பாடல்கள், ப.91-92

43. திருமண வாழ்த்து

இராகம் : இராகமாலிகை
தாளம் : ரூபகம்

மணக்கோலம்தான் நீடூழி வாழி (மண)

*இதனைக் **கேதாரந்திகழ்** மார்பினர் (மண)*

துணைப் பெருவாழ்வில் தோய்பல் காலும்
துங்கம் கொளங்கம் விளங்கும் நிஷ்களங்க (மண)

*சகத் **தோடி** யைந் தாலெனத்*
தழைத்துவேர் நல்ல ருகென [1]
மிகுத்து வாழ்கவெ [2] செழித்து
மின்னுடற் கோதையும் அன்பனும் இன்புற (மண)

*தேன்றறு [3] மலர்வேணி சேல்விழி கொளும் **கல்யாணி***
தோன்றல் பாலே அன்பு பேணிச்
சுகுண புத்ர பௌத்ரர் அடைக (மண)

*புவன **மோஹன** வான்உள நாளும்*
புனித வதூவரர் ஆயுளும் நீளும்
பொன்னேர் ஆரோக திடகாத்ரம் மன்ன
புவிக்குட் பிரபல்யர் என்னாளும் [4] பன்ன (மண)

*சகமென்னும் பெருந்தேவி **ஷண்முகப்ரியை** மேவி*
அகமெனும் தானம் தன்னில் அமர்த்தி அன்பில்
அருள இன்பம் (மண)

குறிப்பு :

1930ஆம் ஆண்டு சரஸ்வதி மனோகர சபையினர், பார்த்த சாரதி - கிருஷ்ணவேணி ஆகியோர்க்குத் திருமண வாழ்த்தாக வழங்கியது. இவ்வாழ்த்துப்பா 'இராகமாலிகை' எனக் குறித்ததற்கேற்ப இராகங்களின் பெயர்கள் இடம்பெறுமாறு இயற்றப்பட்டுள்ளது. அப்பெயர்கள் தடித்த எழுத்துகளில் தரப்பெற்றுள்ளன.

1. 'நல்லறுகென' என இருத்தல் வேண்டும்
2. 'வாழ்கவே' என இருத்தல் வேண்டும்
3. 'தேன்றரு' என இருத்தல் வேண்டும்
4. 'எந்நாளும்' என இருத்தல் வேண்டும்

- பாவேந்தர் உள்ளம், ப.44-45

1931

44. புதுவைமுரசு ஆசிரியர் திரு. எஸ்.குருசாமி, பி.ஏ. அவர்கட்கு ஸமர்ப்பணம்

நயமறியா மக்கள்நலம் நாடி இனிய
சுயமரியா தைக்கொள்கைத் தூய்மையினைத் தன்அருமைப்

பாரதநா டெங்கும் பரப்பும் திருப்பணியில்
நேரடைந்த நல்லுணர்வு நித்தங் கனிந்துயர்ந்தே,

ஆங்கில ரிவோல்ட்டுக்கும் ஆசிரிய னாய்உழைத்தே,
ஈங்குரைப்பேன் மற்றும் உரைத்தபடி யான்நடப்பேன்

என்ற நிசத்தைத்தான் எண்பிக்கக் காத்திருந்து,
கன்னற் பிழியொன்றைக் காதல் மணம் பூண்டு,

சமத்துவத்தின் சாரதியாய்த் தாக்குநரைத் தாக்கிச்
சுமக்கின்ற அன்பராய்ச், சொல்லால் எழுத்தால்

சகம்எதிர்த்த போதும் தனித்தெதிர்க்கும் சேயாய்
அகம்கிடந்த வெள்ளத்தால் ஆரார்க்கும் அன்பனாய்த்

தன்நலங்கா ணக்கண் தவிர்ந்தவராய்த் தாரணியோர்
இன்னலத்தைக் காக்க இருநூறு தோளராய்

"எங்கயோ சத்தம்! எதுதான் முழங்கிற்றோ
இங்கே நமக்கென்ன" என்னாமல், பூவின்

மதுவைக் கவனிக்கும் வண்டுபோல் அந்தப்
புதுவை முரசுநிலை பொன்போல் அறிந்து

திருவாரூர்த் தேரைத் தெரிசித்துப் போக
வருவார் கழுத்து வளைக்கவளை யாததுபோல்

நட்ட தலைநிமிர்த்தும் நம்பிக்கை யில்லாமல்
தொட்ட எழுதுகோல் தொட்ட படியுழைக்கும்
ஆசிரிய ராக அமர்ந்த குருசாமி
பேசரிய வாய்மையன் என்நண்பன் அன்னோன்

உயர்முன் சமர்ப்பித்தேன்! உரைத்த இதன்பேர்
சுயமரி யாதைச் சுடர்!

குறிப்பு :

1931இல் 'பாரதிதாஸன்' கிண்டற்காரன் என்னும் புனை பெயரில் 10 பாடல்கள் அடங்கிய 'சுயமரியாதைச் சுடர்' எனும் நூலை 3 பைசா விலையில் வெளியிட்டு அதனை அப்போது புதுவை முரசு ஆசிரியராக இருந்த (குத்தூசி) சு.குருசாமி அவர்கட்குக் காணிக்கையாக்கிய பாடல் இது. பின்னர் வெளிவந்த பாடல் தொகுப்புகளில் இடம்பெறாதது என்பது குறிப்பிடத்தக்கது. தன்னிலும் பதினாறு அகவை இளையவராகிய குருசாமியைப் பாரதிதாசன் போற்றும் முறை தனித்துச் சுட்டத்தக்கது.

- சுயமரியாதைச் சுடர் - 1931, ப.1-2

8.8.1931

45. வாழ்க ஈ.வெ.ராமசாமிப் பெரியார்

பியாக் - ஆலாபனை

இமயமலை தென்குமரி எல்லை நீண்ட
இயற்கைவளம் செறிந்திட்ட இந்துஸ் தானம்
அமைவுற்ற முப்பதுகோ டிப்பேர் ஈன்றும்
அடிமையுற்ற காரணத்தை எண்ணிப் பார்த்தால்

பியாக் - ஏகம்

அழிவைச் செய்யும் 'பேதப் பேய்கள்'
அவரது சிந்தைக் கெதிரில் தோன்றும்
விழியால் அவைகள் வீழச் சுடும்அவ்
வீரர் ராமசாமிப் பெரியார் வாழ்க! வாழ்க!
வாழ்க!!

பின்னெழுந்து பிழைப்படைந்து வீரங் காட்டிப்
பிறநாடு முன்னேறக் காணுங் காலை,
முன்னெழுந்த மக்களிங்கு முன்னேற் றத்தின்
முனைகருகிப் போவதென்ன எனச்சிந் தித்தார்

மூடக் கொள்கை மொய்க்கக் கண்டார்
முழக்கு கின்றார் அறிவுச் சங்கம்!
ஓடச் செய்தார் அவிவே கத்தை
ஓதும் ராம சாமிப் பெரியார் வாழ்க! வாழ்க!
வாழ்க!!!

தேசத்திற் பிறந்தவரில் அறுகோ டிப்பேர்
தீண்டாமைப் பூதத்தின் வாயில் நைந்தார்
"கூசுகின்ற வீச்சினிலே விடுத லைபார்
விழுங்கும்பூ தம்சாகும் விதம்பார்" என்றார்:

வீர வாக்குக் கண்டீர்! - வைக்கம்
வீரத் தமிழர் தோளை வாழ்த்தீர்!
சாரத் தமிழில் அவரைப் பாடீர்!
தகுமி ராம சாமிப் பெரியார் வாழ்க! வாழ்க!
வாழ்க!!!

பெண்முழுதும் சிறப்படைதல் வேண்டு மென்பார்
பிறப்பிடத்தைப் பேதையென்று சொல்லி - இந்த
மண்முழுதும் எதிர்த்தாலும் பெரிதென் றெண்ணார்
வாழியபெண் ணுலகமென வாழ்த்து கின்றார்.

வயதில், அறிவில், முதியோர் - நாட்டின்
வாய்மைப் போருக் கென்றும் இளையார்
உயர்எண் ணங்கள் மலரும் சோலை!
ஓங்கு ராம சாமிப் பெரியார் வாழ்க! வாழ்க!
வாழ்க!!!

நீதமற்ற கொள்கைகளை இனிக்கப் பேசி
நிகழ்த்திவந்த தலைவர்களால் என்ன கண்டோம்!
காதினிக்கப் பேசியதோர் நரியா ராவே
காகத்தின் அப்பந்தான் பறிபோ யிற்று.

கதையினில் வருமோர் "கைலை" வேண்டாம்
கையால் தேடும் "நொய்"நன் றென்பார்
எதிர்த்த வர்பால் அன்பும் கொண்டார்
இனிது ராம சாமிப் பெரியார் வாழ்க! வாழ்க!
வாழ்க!!!

தன்னுழைப்பில் நம்பிக்கை செத்த திங்கே
சாமிசெயல் என்றுசொலும் சோம்ப லுண்டு
பன்னாளும் பேதங்கள்! மற்றும் மூடப்
பழக்கவழக் கங்களெல்லாம் எரித்துத் தள்ளிப்

பயனுற நாட்டை விடுதலை நோக்கிப்
படுதுயர் நீங்க ஒன்றாய்க் கூட்டிச்
சயமுற வைக்கும் சுயமரி யாதைத்
தலைவர் ராம சாமிப் பெரியார் வாழ்க! வாழ்க!
வாழ்க!!!

குறிப்பு :

8.8.1931, 9.8.1931 ஆகிய நாட்களில் விருதுநகரில் நடைபெற்ற மூன்றாவது சுயமரியாதை மாநாட்டில், புதுச்சேரி சுய மரியாதைத் தோழர்களால் வாசித்தளிக்கப்பட்ட பாரதிதாசன் எழுதிய பாடல் இது.

- பாரதிதாசன் - கனகசுப்புரத்தினம் - 81-82

19.12,1931

46. கல்வி நீரோடை

வறியோர்க்[1] கெல்லாம் கல்வியின் வாடை
வரவிட வில்லை மதக்குருக்களின்[2] மேடை
நறுக்கத் தொலைந்தது அந்தப் பீடை
நாடெல்லாம் பாய்ந்தது கல்விநீ ரோடை

குறிப்பு :

பிரெஞ்சு நாட்டில் மதக்குருமார்களின் கையில் இருந்த கல்வியை மக்களுக்கு உரியதாகப் போராடி மாற்றிய கல்விச் சீர்திருத்தத் தந்தை எனக் கருதப்பட்டவரும் குடியரசுத் தலைவராக இருந்தவருமாகிய மூய்ல் பெரி(Jules Fery)யின் நூற்றாண்டு விழா புதுவையில் கொண்டாடப்பட்டபோது பாரதிதாசன் இயற்றி அரங்கேற்றப்பட்ட பாடலின் ஒரு பகுதி. இப்பகுதியைப் போல ஆறு பகுதிகளைக் கொண்டதான முழுப்பாடலைப் பாடிக் கவிஞர் நிறைவுசெய்தார் (இரா.நெடுஞ்செழியன், 1994) என்று குறிக்கப்பட்டுள்ளது.

இப்பாடலை விழாவில் கவிஞரே பாடினார் என்றும் (இரா.நெடுஞ்செழியன் (1946) மன்னர்மன்னன் 1985) மாணவர்களால் பாடப்பட்டது என்றும் (முருகுசுந்தரம் 1979) இருவேறு கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

1. வறியவர்க் (க.கு)
2. மதகுருக்களின் (பா.நி.) (க.கு.)

- **புரட்சிக் கவிஞர் (தொகுப்பு நூல்), ப.86-88**
பாவேந்தர் நினைவுகள் (முதற்பகுதி), ப.47
புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் (வாழ்க்கை வரலாறு), ப.25-27
கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.47

1.5.1932

47. எட்டாவது ஆண்டிற் குடிஅரசு

விருத்தம்

ஏழாண்டி னின்றுநீ எட்டாம் ஆண்டின்
எழிற்பீடம் ஏறிவிட்டாய் வெல்க! வெல்க!
பாழாண்ட படிவிட்டே அறிவி யக்கப்
படியேற்றிப் படியேற்றி நாங்கள் கொண்ட
வாழாத நிலைநீக்கி வாழ்நி லைக்கு
வரச்செய்யப் பணியாற்றும் நன்மை தன்னில்
சூழ்கின்ற குடிஅரசே! வெல்க! உன்றன்
சுயமரியா தைக்கொள்கை வெல்க நன்றே!

எட்டாண்டின் எழிற்பீடம் வெற்றி கொள்க!
ஏறிநின்ற உனதுநிலை ஏற்றம் கொள்க!
வெட்டாத கத்தியினை வீசாக் கையால்
வெடுக்கென்று தாக்கிஎமை வீழ்த்தப் பார்க்கும்
முட்டாள்கள், வைதிகர்கள், குருக்கள், சூழ்ச்சி
முளையழிய நடமாடி, நாட்டு மக்கள்
கட்டோடு சமத்துவத்தைத் தாவும் இன்பக்
கருத்தளிப்பாய் குடிஅரசே! வெல்க நன்றே!

ஏழ்ஆண்டும் உன்நிலையும் உறையும் வாளும்
எட்டாவ தாண்டுதான் உனது வீச்சு!
கூழ்ஆண்டே கூழ்ஆண்டே என்று கூவும்
கொடும்ஏழ்மைத் தன்மையினை நீக்க வேண்டும்
வீழ்நிலையில் நாட்டினரை வீழ்த்தும் தீய
வெம்பணக்கா ரத்தன்மை தொலைய வேண்டும்
சூழ்கின்ற பகுத்தறிவின் இயக்கங் கண்ட
தூயகுடி அரசேநீ என்றும் வாழி!

குறிப்பு :

'ஆக்கியோன் புதுவை பாரதிதாசன்' என்னும் குறிப்போடு குடிஅரசு இதழில் முகப்புப்பாடலாக இப்பாடல் இடம் பெற்றது.

- குடிஅரசு, 1.5.1932, ப.1

9.10.1932

48. சுயமரியாதைத் திருமணத்தில் வாழ்த்து

உலகினிற் பழஞ்சீர் இலகிய இந்தியா
விழிமூ டிற்றெனும் பழிமூடா வண்ணம்
மக்களே எழுக வாழ்வினில் உயர்க
என்றுணர் வளிக்க எழுந்ததெம் இயக்கம்
அவ்வியக் கத்தின் அருமை கூறிடில்
இருளிற் சுடராய் எழுந்த தென்போம்
வற்றிய நெஞ்சில் வற்றிய தோளில்
வயிரத் தன்மை வழங்குவ தென்போம்

பாரத நாட்டை வீரர்தம் நாடாய்ப்
புரியும் தன்மை பூண்ட தென்போம்
நயங்கொள்அவ் வியக்கம் தன்னை நாங்கள்
சுயமரி யாதை இயக்கமெனச் சொல்வோம்

ஃ ஃ

அந்த இயக்கம் அறைவதென் னவெனில்
எல்லாரும்[1] ஓர்குலம் எனப்படல் வேண்டும்
எல்லாரும்[2] இந்தியர் எனப்படல் வேண்டும்
எல்லாரும்[3] பொதுவாய் இன்புறல் வேண்டும்
உயர்வு தாழ்வுகள் ஒழித்திட வேண்டும்
பெண்கள் விடுதலை பெற்றிட வேண்டும்
கை(ம்)மைக் கொடுமை களைந்திட வேண்டும்

காதல் மணமே காணுதல் வேண்டும்
பகுத்தறி வுச்செயல் பரவுதல் வேண்டும்
மூடச் செயல்கள் முறிபடல் வேண்டும்
யார்க்கும் கல்வி ஈந்திடல் வேண்டும்
தொழிற்கல்வி எங்கும் தோன்றிடல் வேண்டும்

ஒருவனை ஏய்த்து மற்றொருவன் உண்ணும்
இருதயந் தன்னில் எரிமூட்ட வேண்டும்
சுதந்தரம், சமத்துவம், சகோதரத் துவமெனும்
இதந்தரும் பதவி எவர்க்கும் வேண்டும்
எழுபது கோடித் தடக்கைகள் இருந்தும்

எழுபது கோடிச் சுடர்விழி இருந்தும்
குளிர்முப் பத்தைந்து கோடிமுகம் பூண்டும்
நீடுமுப் பத்தைந்து கோடிவாய் நிறைந்தும்
பாரத நாடெனும் பழம்பெருந் தேவிதான்
ஒற்றுமை உணரா ஒரேகா ரணத்தால்
அங்கம் சிதைப்பட்[4] டழிதல் நன்றா?
என்றுதான் சொல்லிற் றெங்கள் இயக்கம்

ஃ ஃ ஃ

இயக்கம் சொன்ன இவற்றை யெல்லாம்
இயக்கம் கொண்டு மறுப்பது தகுமா?
கடவுளின் பெயரால் கடிவது முறையா?
மதப்பெயர் சொல்லி மறுப்பது[5] சரியா?
ஜாதியைச் சொல்லித் தவிர்ப்பது நன்றா?
வழக்கம் எண்ணி ஒழிப்பது நெறியா?
சடங்கைச் சொல்லித் தடுப்பது நீதியா?
குருக்கள் சூழ்ச்சியால் குலைப்பது ஞாயமா?[6]
ஆச்சாரி மெச்ச அழிப்பது தர்மமா?
பார்ப்பனர் தூண்டலால் பகைப்பது பெருமையா?
மகந்துகள் சூழ்ச்சியால் மாய்ப்பது வண்மையா?

ஃ ஃ

உயர்ந்தஎம் இயக்கம் உண்மை கண்டு
தெளிந்த சிந்தையோர் நன்றென ஒப்பினர்
பகுத்தறி வாளர்கள் மகிழ்ச்சியோ டேற்றனர்
நாட்டிலன் புடையோர் கேட்டு வியந்தனர்
ஆயிர மக்கள் அறிவியக்கம் என்றனர்
பல்லா யிரவர் பயனுடைத் தென்றனர்
லக்ஷக் கணக்கினர் பக்ஷத்தால் ஆர்த்தனர்
ஆயினும் சிலபேர் தீயதென் கின்றனர்
சிற்சில பேர்கள் சிந்தை நொந்தனர்
இன்னும் சிலபேர் எதிர்த்திடு கின்றனர்
மற்றும் சிலபேர் வைதிடு கின்றனர்
அன்பற்ற சிற்சிலர் அடிக்கவும் செய்தனர்
எம்மியக் கத்தை எதிர்த்திடு வோரை
நாமின்று சில ஞாயங் கேட்போம்
உங்கள் ஆஸ்திகம் உங்கள் வைதீகம்

உங்கள் கடவுள் உங்கள் கோயில்
உங்கள் குருக்கள் உங்கள் ஐயர்
உங்கள் மந்திரம் உங்கள் வேதாந்தம்
உங்கள் யோகம் உங்கள் யாகம்
உங்கள் விரதம் உங்கள் பூசனை
உங்கள் சடங்குகள் உங்கள் மடங்கள்
இவைகள் இதுவரை என்ன செய்தன?
ஆயிரம் ஆண்டாய் அசைத்த தென்ன?
இலக்ஷம் ஆண்டாய் ஈந்த தென்ன?
ஓர்யுக மாக உருட்டிய தென்ன?
சதுர்யுக மாகச் சாய்த்த தென்ன?
பசியால் மக்கள் பறக்கின் றாரே
நோயால் மக்கள் நொடிக்கின்[7] றாரே
தொழிலின்றி மக்கள் சோர்கின் றாரே
வாணிபம் கெட்டு வதைகின் றாரே
கல்வி யின்றிக் கலங்குகின் றாரே
ஆடை யின்றி அலைகின் றாரே
வீடின்றி மக்கள் வெறிக்கின்[8] றாரே
பரதேசம் சென்று பதைக்கின் றாரே

ஃ ஃ

அண்டை வீட்டினர் அரிப்பார் என்றும்
பக்கத் துள்ளார் பழிப்பார் என்றும்
எதிர்த்த வீட்டினர் இளிப்பார் என்றும்
பின்வீட் டார்கள் பிதற்றுவார் என்றும்
சாதியார் சனங்கள் சபிப்பர்[9] என்றும்
நாட்டாண்மைக் காரர் கேட்பார் என்றும்
பெரியதனக் காரர் பேசுவா ரென்றும்
பாவம் வந்து பாயும் என்றும்
நாகம் வந்து நலிக்கும் என்றும்
சனியன் வந்து சாரும் என்றும்
தோஷம் வந்து தொலைக்கும் என்றும்
குருக்கள் வந்து கூவுவா ரென்றும்
கிழவர் வந்து கேட்பா ரென்றும்
பொன்னியக் கத்தைப் பின்பற்றா திருப்பதா?
இதோபா ருங்கள் எமது தோழர்
மன்னும் பெருமைப் பொன்னு சாமியின்
செல்வ ரான சிவசங் கரனும்

கதாஸ்தர் வேலை எதார்த்த வாதி
கோபாலன் பெற்ற குணவதி யான
திருநிறை[10] செல்வி கிருஷ்ண வேணியும்
உருவோங் கியசீர்த் திருவேங் கடனார்
பண்புசேர் செல்வி பவுனாம்[11] பாளும்
கோபாலன் பெற்ற பூபாலன் ஒத்த
நேச மிக்க கேசவன் தானும்
சுயமரி யாதைத் தூய இயக்கத்
திருமணம் கண்டு பெருமக் களுக்கு
நன்னெறி காட்ட முன்வந் தார்கள்!
வீரப் பெண்கள் வீரக் குமரர்கள்
ஆரும் இன்பால் அகிலத்தில் வாழ்க!

மணமக்கள் பெற்ற குணமிக்க சுற்றத்தார்
உயர்வுற வந்தவர் தூய
சுயமரி யாதை இயக்கம் வாழியவே!

குறிப்பு :

முனைவர் ச.சு.இளங்கோ எழுதிய 'குடியரசு இதழில் பாரதி தாசனின் பாடல்கள்' என்னும் நூலில் இப்பாடல் சில வேறுபாடுகளுடன் தரப்பெற்றுள்ளது. அவ்வேறுபாடுகள் :

1, 2, 3. 'எல்லோரும்'
4. 'சிறைப்பட்'
5. 'மறப்பது'
6. ஞாயமோ
7. நொடிசின்
8. வெளிக்கின்
9. சபிப்பார்
10. திருநிறைச்
11. படினாம்

- குடிஅரசு, 9.10.1932, ப.16
குடிஅரசு இதழில் பாரதிதாசன் பாடல்கள், ப.94-97

19.3.1933

49. தொழிலாளர் தோழமைப் பயன்

(ஆருக்குத்தான் தெரியும் அவர்மகிமை என்ற மெட்டு)

பல்லவி

ஏழமை [1] என்பதேது? தொழில் மக்கள்பால்
தோழமை உணர்ச்சிதான் தோன்றிடும் போது (ஏ)[2]

சரணம்

வாழும் நினைப்புடைய மாந்தரின் கூட்டம்
வசிக்க இடமோ இந்த மண்ணில் ஏதேஷ்டம்
சூழும் திசைமுழுதும் விளைபயி ரூட்டம்
சோற்றுக்குப் போதுமிதில் ஏனினி வாட்டம்? (ஏ)

கையினை விரித்துத்தம் மெய்யினை மூடும்
கணக்கற்ற கோடிமக்கள் கவலையும் ஓடும்
நெய்யும் உடையனைத்தும் யாரும்அன் போடும்
நித்தம் உடுத்திமீதம் வைத்தலும் கூடும்! (ஏ)

காலுக்குச் செருப்புண்டு கவிகைகள் கிடைக்கும்
கால்நடை மிகஉண்டு பால்தயிர் கொடுக்கும்
மேலுக்கு மிகுசுகா தாரம்வந் தடுக்கும்
வெம்மைநோய் அசுத்தங்கள் விரைந்தோட்ட மெடுக்கும் (ஏ)

எலும்பு முறியும்படி உழைப்பது தீரும்
எந்திர உதவிகள் மிகுதியும் சாரும்
பொலிந்து புதுத்தொழில்கள் புலன்களிற்சேரும்
பொதுவில் நலமடைவர் புவியிலெல் லோரும் (ஏ)

கடவுளை மதங்களைக் காப்பவர் என்போர்
கருணையி லாதநிலம் பொருள்நனி வாய்ந்தோர்
உடைமை பறித்தஇந்தக் கொடியரிற் கொடியோர்
ஒழிந்தபின்பே நலம்உறுவர் இவ்வுலகோர் (ஏ)

1. ஏழ்மை (கு.இ.பா.பா.)
2. கண்ணிதோறும் மறித்துவரும் முதற்சொல் 'ஏழ்' எனக் குறிக்கப்பட்டுள்ளது. (கு.இ.பா.பா.)

- **குடிஅரசு, 19.3.33, ப.9,**
குடிஅரசு இதழில் பாரதிதாசன் பாடல்கள், ப.100

50. பிழைப்புக்கு வழி

(கந்தா காருண்யனே - என்ற மெட்டு)

தேவா ராதனைக்கே - தெய்வ
பூசனைக்கே (தேவா)

கோவில் கோபுரம் கட்டவே - மத - குருக்கள் வீட்டினிற் கொட்டவே
பாவம் போக்க என்றே - கைகள்
கூப்பி நின்றே (பாவம்)

தாவியே பொருள் தேடியே - இதில் - தந்ததோ சத கோடியே
வீட்டுக்கோர் குருக்கள் - அதன்
மேற்கடவுள் (வீட்டு)

நாட்டுக் கோயிலிற் பஞ்சமோ - இதில் - நடந்த செலவுகள் கொஞ்சமோ
மூட்டை முடிசுமந்தே - நதி
மலை கடந்தே (மூட்டை)

தேட்டம் ஒழித்ததிற் கணக்கில்லை - செய்த - தீர்த்த யாத்திரைக்
கேதெல்லை
பக்தி மேவலினால் - முக்தி
ஆவலினால் (பக்தி)

இத்தனைநாள் இத்தனை - பேர் - இத்தனை பொருள் போக்கியும்
செத்தால் புதைத்தற்கே - இங்குச்
செலவுக் கில்லை (செத்தால்)

பித்தச் செலவுகள் நீக்குவோம் - நம்[1] பிழைப்புக்கே அதை ஆக்குவோம்.

1. நாம் (கு.இ.பா.பா.)

- குடிஅரசு, 16.4.33, ப.12
குடிஅரசு இதழில் பாரதிதாசன் பாடல்கள், ப.101

30.4.1933

51. குடிஅரசு 9ஆம் ஆண்டு வாழ்த்து

விருத்தம்

பயன்விளைக்கும் கருத்துக்கள் கொத்துக் கொத்தாய்ப்
பழம்பழுக்கும் சோலையிலே எமைஅ ழைத்து
நயன்விளைத்தாய் முதலாண்டில்! இரண்டாம் ஆண்டில்!
நாங்கள்எலாம் எங்கள்நிலை அறியச் செய்தாய்!
வயன்விளைக்கும் மலையுச்சி வருக என்றாய்;
"மக்கள்எலாம் சமம்" எனலை அங்குக் கண்டோம்!
வியன்விளைத்த பூங்காவில் "பெண்கள் மேன்மை
வீணைஒலி" பருகவைத்தாய்! வேறோர் ஆண்டில்,

வெள்ளத்தைப் போல்அன்பும், விரிந்த மார்பும்,
விழித்தவிழி யும், கோரிக்கும் வீரப் பேச்சும்,
உள்ளத்தில் பெருங்களிப்பும், குன்றைப் போலே
உயர்நோக்கும் சுடர்முகமும், கருங்கற் றோளும்,
உள்ளிட்ட புவிமக்கள் இயற்கை தன்னை
ஒன்றுக்கும் ஆகாமல் ஆக்கு கின்ற
குள்ளக் கருத்துமதம் கடவுட் பித்தம்
கொடிதென்றே எக்காளம் கேட்டோம் பின்னே

உன்தோழ ராம்எம்மை மற்றோர் ஆண்டில்
ஒலிமுழக்கும் திரைக்கடலின் ஓரம் சேர்த்தாய்;
கன்னத்தில் அறைந்ததுபோல் எங்கள் முன்னே
கடற்பறவை கூடிவந்து "மக்காள்! மக்காள்!!
சின்னப் புரோகிதர், பண்டிதர், குருக்கள்
திருடரவர், முழுத்திருடர்" என்று மெய்மைச்
சொன்னத்தை நினைக்கையிலே நகைப்புக் கூட்டம்
தோன்றுதுகாண் குடிஅரசே வாழ்க நன்றே!

உலகியலின் பலஉண்மைக் காட்சிக் கெம்மை
உள்ளாக்கிப் பகுத்தறிவின் ஒளியிற் சேர்த்தாய்!
கலகம்வரும் காரணத்தின் வேரைக் கல்லிக்
கண்கலங்கும் ஏழ்மைக்கு விடைகொ டுக்கத்
தலைநிமிர்ந்து சமதர்மப் போரில் ஏறிச்
சகமுழங்கும் குடிஅரசே நீயும் உன்றன்
உலவுசுய மரியாதைப் புலிக்கு மூமும்
ஒன்பதாம் ஆண்டினிலே வெல்க நன்றே!

போர்முகத்தில் அணிவகுக்க இன்ற ழைத்தாய்!
பொதுஉட்டமை முரசறையக் கோலெ டுத்தாய்!
ஓர்முகத்தில் சந்தோஷம் ஒன்றில் வாட்டம்
உண்டாக்கும் அரசியலை விழிநெ றித்தே
ஊர்முகத்தில் நிற்காதே எனமு ழக்க
ஒன்பதாம் ஆண்டினிலே உயர்ந்தாய் இந்நாள்
பார்முகத்தைச் சமப்படுத்த ஓகோ கோகோ
பறந்தேறு கின்றாய்நீ வாழி நன்றே!

- குடிஅரசு, 30.4.1933, ப.18

5.10.1933

52. "வளர்ந்த திங்கொரு தீ!"

1. ஆண்ட நாட்கள் பலயுகம் மனமே! - நாம்
அடிமைப்பட்டது சிலசில நிமிஷம்
மாண்பினி லுயர் பாரத மக்கள்
வடுப்பெறுமுன் பகைவர் ஓட
வளர்ந்த திங்கொரு தீ! - இன்று
வளர்ந்த திங்கொரு தீ!

2. தூண்டுவது போய்ப்பாரத மெங்கும் - அவள்
சொரிந்திடும் விழிக்கருணையின் ஊற்று
தாண்டிடும் பகைதலை குனிந்திடச்
சகத்தினி லெங்கள் நிலை யுயர்ந்திடத்
தாவு திங்கொரு தீ! - இன்று
தாவு திங்கொரு தீ!

3. இருந்தது புயம்; எழுந்தது குன்றம் - இதை
இடர்நினை வார்க்கோதுக மனமே!
பெரும்பெரும் செயல்புரிக என்றாள்
பெயர்ந்தன தோள்பொய் நசுங்கிடப்
புரிந்த திங்கொரு தீ! - இவை
புரிந்த திங்கொரு தீ!

4. பெரும்புவிக்கிடை மறம்புகப் பாரோம் - அவள்
பேச்சினை எங்கள் மூச்செனக் காப்போம்
சரம் சரமென அமுதம் பொழியும்
சக்தி என்பதோர் இன்ப ஊற்றில்
விரிந்த திங்கொரு தீ! - மனமே!
விரிந்த திங்கொரு தீ!!

5. சக்தி யின்னருள் நமக்கமு தளித்தாள் - மனமே!
தருமம் கொன்றவர்க் கது பெருந்தீ! தீ!
தொத்தும் வறுமை பகையும் கருவில்
தொலைந்திட அறம் விடுதலை பெறத்
தொடர்ந்த திங்கொரு தீ! - மனமே
தொடர்ந்த திங்கொரு தீ!!

6. *தடுப்பது துகள் தகிப்பது வாய்மை - நாம்*
சகத்தைக் காக்கும் சக்தியின் கூட்டம்
விடுக்கு மொழியில் விடுதலைக் குரல்
விருப்ப மனைத்தும் அமர வாழ்வில்
கொடுக்கு திங்கொரு தீ! - மனமே
கொடுக்கு திங்கொரு தீ!!

7. *இடுக்கிட முதல் எங்கணும் காதல் - உயிர்*
யாவு மீதோ விடுதலை மீதில்!
பிடித்தது நாம் அவள் மலர்த்தாள்
பெய்ததங்கே தண்ணருள்காண்!
பகைக்கது பெருந்தீ! - மனமே
பகைக்கது பெருந்தீ!!

குறிப்பு :

மணிக்கொடி இதழில் அதிக அளவில் வெளிவந்த பாடல்கள் பாரதிதாசன் பாடல்களே. இப்பாடல் 'க.சு.பாரதிதாஸன் எழுதியது' என்னும் குறிப்புடன் (கொடி 1 மணி 5) வெளியிடப்பட்டுள்ளது. மணிக்கொடி இதழ்களில் ஆக்கியோன் பெயர் 'பாரதிதாஸன்' என்றே குறிக்கப்பட்டுள்ளது.

- மணிக்கொடி, 5.10.1933, ப.6

53. மின்னும் தமிழ்

பின்னும் திரும்பாதீர் - பழம்பீடை
இருள்நடையில்

தமிழ் வளர்ப்பவரே - நல்ல
தவங் கிடப்பவரே - தமிழ்

அமுதமென்றும் இனியதென்றும் சொல்லி
அகமகிழ்வோரே,

கமழும் நல்வீரத் - தமிழ்க்
கவி புனைவோரே - மிகு

சுமைபெறப் பழந்தமிழ் நெடுங்கதை
சொல்ல வருபவரே

உமக்கொரு சேதி - தனை
உரைத்தல் என்ஆவல் - இனித்

தமிழ்படித்திடும் தமிழரின் தொகை
தனை வளர்த்திடுவீர்.

அமைத்திட வாரீர் - தமிழ்
அரங்கினைப் பெரிதாய் - நீர்

அமைத்த திக்கணம் மறுகணம் கவி
அகிலம் ஏறவைப்பீர்

சின்ன மொழிகளிலே - புவி
தின்னும் சுவையளிப்பீர் - தமிழ்

இன்னும் பெருக்கி மற்றின்னம் பெருக்கிமற்
றெங்கும் கவிவளர்ப்பீர்

பின்னும் திரும்பாதீர் - பழம்
பீடை இருள்நடையில்! - நல்ல

கன்னலை ஒத்த கருத்துக் களுக்குக்
கறுப்புடை போர்த்தாதீர்.

உன்னுந் தமிழர்களின் - உயிர்
உள்ளத்தும் ஆவியிலும் - எங்கும்

சன்னத்தமாம் தமிழ் தத்தம் மதங்களில்
தள்ள நினைக்காதீர்

- மணிக்கொடி, 3.12.33, ப.5

1933

54. எழுந்தருளும் தெய்வங்களிடம் புதுமையாக வேண்டுதல்

காசியும் போலிசும் கவர்னரும் கையிலென்
றோதித் தேமாற்ற உன்னுவர் அழிக்கவா!

மாம்பராய்[1] வந்தபின் மக்களை வெருட்டுஞ்
சோம்பற் குழுவினைத் தொலைக்க வேலா வா!

பட்டுத் துணியால் பாழாகும் புதுவையே
நாட்டுத் துணியால் நலம்பெறச் செய்யவா - ரங்கா!

இருதலைக் கொள்ளி போலிலகு கக்ஷியனடு
ஒருநலக் கவர்னர் நின்றோங்க ரங்கா வா!

தேர்தலின் பெயரால் திருடிப் பிழைக்கும்
பேர்களை யொழிக்கப் பெருமான் வருக!

சிலர்வயிறு நிரம்ப சிறைபுகா திருக்க வா
வரும் எலக்சியத்தில்[2] வம்பிலா தருள வா!

வரும் சேனாத்தேர்[3] வண்[4]டிரை பீசா
திரு லெமோ னிக்கா[4] செப்புவாய் முருகா!

தலைவ ராதற்குச் சனங்களின் தயவையே
எதிர்பார்த் திருப்போர் எழிலுறச் செய்ய வா!

மாநிலம் புகழும் மகாத்மா வாழ வா
பொதுவுக் குழைக்கும் புனிதர்கள் வாழ வா!

குறிப்பு :

ஒவ்வோராண்டும் மாசிமக விழாவின்போது மயிலம் சுப்பிரமணியரும் செஞ்சி அரங்கநாதரும் புதுவைக்கு எழுந்தருளுவர். மிகப் பெரிய அளவில் கொண்டாடப்படும் அவ்விழாக் காலத்தில் மேற்குறித்த பாடல்அடிகள் விழாப் பந்தலின் நாற்புறமும் தட்டிகளிலும் துணித்திரைகளிலும் எழுதப்பட்டிருக்கும். நடப்புநிலை அரசியலைக் கிண்டற்சுவை மலிய, பிரெஞ்சு வடிவச் சொல்லாட்சி கலந்து எடுத்துக் காட்டுவன இவை.

'பாரதிதாசன் கவிதைகள் (முழுவதும்)' எனப் பாரதி பதிப்பகம் வெளியிட்டுள்ள தொகுப்பில் (ப.612-613) பட்டுத்துணியால்..., தேர்தலின் பெயரால்... எனத் தொடங்கும் இரண்டு கண்ணிகளோடு இப்பாடலில் இடம்பெறாத

'கோட்டான் போல்வந்த கோட்டா சிஸ்டத்தை
ஓட்டாம லிங்கேன் உலாவந்தாய் முருகா?'

என்னும் புதிய கண்ணி ஒன்றும் இடம்பெற்றுள்ளது. ஏனைய ஏழு கண்ணிகள் அத்தொகுப்பில் இடம்பெறவில்லை.

1. மாம்பராய் - மெம்பராய்
2. எலக்சியம் - எலக்சன்
3. சேனாத்தேர் - செனட்டர்
4. டிரைபீஸ், லெமோனிக் - செனட்டர் தேர்தல் வேட்பாளர்கள்

- கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.157-159

55. புவியன்னை முன்னேறுகின்றாள்

உள்ளம் மலர்ந்த சிரிப்போடு மின்னை
உதிர்க்கும் முகங்களொ ராயிரங் கோடி
கொள்ளும் பெரும்புவி ஆ மெங்கள் அன்னை
குறைதவிர் ஒற்றைப் பெரும்பதம் நாடி
அள்ளும் மகிழ்ச்சியி லேநடக் கின்றாள்
அண்டங்கள் ஓட அவற்றொடு விண்ணில்
குள்ள நினைப்புகள் பேதங்கள் வென்றால்
கோல மெலாம்தரு வாள்மலர்க் கண்ணில்.

ஊனுடை வீடு படிப்புநல் லின்பம்
ஒவ்வொரு வர்க்கும் கிடைப்பது நாடி
மாண்புவி அன்னை பலப்பல துன்பம்
வாய்த்திடி னும்தொடர் வாள்குறி தேடி
வீண்படு பேதங்கள் போரிடும் உள்ளம்
மேதினி அன்னைஇப் பீடைகள் நண்ணாள்
காணலுற் றாள்பொது அன்பெனும் வெள்ளம்
கால்சலி யாள்குறி மேல்வைத்த கண்ணாள்.

மக்களை மக்கள் படுத்திடும் வெம்மை
வஞ்சகம், மிஞ்சும் மதஞ்செயும் தொல்லை,
மொய்க்க இருப்பினும் மேதினி அம்மை
முன்வைத்த காலினைப் பின்வைப்ப தில்லை
அக்கறை கொண்டுமுன் னேறிடு கின்றாள்
அண்டிடு தீமை ஒதுக்கினள் தேவி.
புக்கன யாவும் பொதுப்பொருள் என்றாள்
போதம் விளைத்து நடந்தனள் தாவி.

குறிப்பு :

'சுதந்திரச்சங்கு' இதழில் பாரதிதாசன் பாடல்கள் பல வெளிவந்துள்ளன. மறுவெளியீடும் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஆக்கியோன் பெயர் 'பாரதிதாஸன்' என்றே குறிப்பிடப்படுகின்றது.

- சுதந்திரச் சங்கு, 26.1.34, ப.6

18.2.1934

56. இயற்கைத் தேவியின் கோபம்

எரிபோல் விழியும் இடிபோல் மொழியும் உடையாள்
இதயத்திலே முதிரும் கோபப் படையாள்
விரியும் வண்மை இயற்கைப் பெண்ணெனும் அன்னாள்
வெறியும் தயையும் கொண்டென் னிடமிது சொன்னாள்
தெரியும் வழியிற் செல்லா உலகத் தோரே
செப்பக் கேளீர் அவளின் சொல்லை நீரே!
உரிமை! உரிமை! யார்க்கும் எதிலும் எங்கும்
உணரச் சொன்னாள் இதனால் இன்பம் பொங்கும்

'மனித குலமும் வாழ்வுப் பொருளும் தந்தேன்
மடியில் தோளில் அவரைத் தாங்கியும் வந்தேன்
புனிதம் புனிதம் எங்கும் எதிலும் யார்க்கும்
புன்மை கண்டால் என்னுள் ளந்தான் வேர்க்கும்
தனமும் கனமும் பலவும் என்றன் தேகம்
தாயின் பாலில் தனயர்க் கெல்லாம் பாகம்
இனியும் பேதம் வேண்டாம் வேண்டாம் இந்நாள்
என்றே அன்னை கோபத் தோடே சொன்னாள்.

மாந்தர் யாரும் வாழ்க்கை முறையில் ஒப்பே
வகையில் நிறையிற் பேதம் காணல் தப்பே
சேர்ந்தோன் உணவைத் தன்சொத் தென்றே சொன்னால்
துயரம்! துயரம்! ஒப்பத் தகுமோ என்னால்?
ஏந்தும் தயவால் இதனைச் சொன்னாள் முன்னர்
இதையே எண்ணிக் கனலாய் நின்றாள் பின்னர்
தீர்ந்திட் டதுவோ புவியென் றச்சம் கொண்டேன்
திண்மைத் தாயின் தேகம் அதிரக் கண்டேன்.

கிடுகிடு வென்றே அவள்தோள் அதிரக் கண்டேன்
கேளீர் கேளீர் பீகார் வீழக் கண்டேன்[1]
குடமும் புனலும் நிலையிற் சாய்தல் போலே
குடிலும் ஏழைக் குலமும் சாயுங் காலே
படையால் மாளும் பகைபோல் மாளக் கண்டேன்
பணமும் பிணமும் மண்ணில் புதையக் கண்டேன்
குடமும் வீடும் சமமே யாதல் கண்டேன்
சதையும் மண்ணும் இரத்தக் குமிழும் கண்டேன்

மாங்கீர் சீதா மார்முகி சபர்புரி ஊரும்
மதுபான் மோத்கிரி சுமசுதகிரி என் றாரும்
ஆங்கே பற்பல ஆயிர மைல்களின் எல்லை
அழகும் பொழிலும் தெருவும் வீடும் இல்லை
ஏங்கிய மைந்தர் தாயொடு வெளியில் நின்றார்
எத்தனை ஆயிர மக்கள் மண்ணிற் சென்றார்!
தாங்கிட வாரீர் பீகார் மக்கள் தம்மைத்
தாரீர் பொருளை எதிர்பார்க் கின்றார் உம்மை!

குறிப்பு :

1934 சனவரி 15ஆம் நாள் பீகாரில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கம் பற்றிய கவிஞரின் பாடல்.

1. 'கிடுகிடு' எனத் தொடங்கும் ஓரடி 'பாரதிதாசன் பார்வையில் பாரதி' நூலில் விடுபட்டுள்ளது.

- மணிக்கொடி, 18.2.1934, ப.5
பாரதிதாசன் பார்வையில் பாரதி, ப.233-234

57. சோபன அறை

மாலைப் போதின் உச்சியில் மலர்ந்து
குதித்த நல்ல குதூகல இரவில்,
துலங்குமோர் வீட்டின் சோபன அறையில்
புதிய பெண்ணையும் புதுமாப் பிளையையும்,
உள்ளமும் உடலும் உயிரும் ஒருங்கே
அள்ளி அள்ளி அருந்து கின்ற
இன்ப உலகின் எல்லையிற் சேர்க்க
அங்கும் இங்கும் மங்கையர் பறந்தனர்.

ஃ ஃ ஃ

பெட்டி திறப்பார் பட்டாடை தூக்குவார்.
சிலபெண்கள் ஓடிக் குலமலர் ஏந்துவார்.
விரிந்த வானிலும் உளத்திலும் வீசும்
பரிமளச் சாந்து பலபேர் அள்ளுவார்
விசும்பு நிலாநிகர் வெள்ளிக் கிண்ணியில்
பசும்பால் ஏந்தி ஓடுமோர் பசுங்கிளி.
பழங்கொண்டு போகுமோர் தங்கப் பதுமை.
தகதக வெனச்சிலர் சதிராடும் மயில்கள்போல்
அதிரச பக்ஷணம் அள்ளிச் செல்லுவார்.

ஃ ஃ ஃ

தாயொரு புறமும் தந்தையோர் புறமும்
சுறுசுறுப் பாக விரைந்து தொடர்ந்து
மேற்பார்வை பார்ப்பது தோற்பதுமைக் கூத்து.

ஃ ஃ ஃ

ஆநந்தப் பொருள்கள் அமைந்து சிறந்து
நறும்புகை ததும்பும் அறையி னுள்ளே
மஞ்சம் கெஞ்சிக் கெஞ்சி அழைக்கப்
புதிய பெண்ணுடன் அந்நாள் புகுந்தஎம்
இராம சாமி இளமாப் பிளைக்கு
நவிலொணா மகிழ்ச்சியும் கொஞ்சம் நாணமும்!
கலப்பற்ற மகிழ்ச்சி கண்டனன் இந்நாள்.

ஃ ஃ ஃ

மக்கள் அடைந்த வறுமைக் கொடுமையை
வண்மையிற் கரைக்கும் எண்ணத் தால்அவன்
"குடியரசு" தன்னில் விடுதலை வாசகம்
எழுதிய தன்மை பிழையென ஆங்கிலர்
திறந்த கோவைச் சிறையில், இந்நாள்
கலப்பற்ற மகிழ்ச்சியால் எங்கள்
"புலிக்கிழவன்" போய்ப் புகுந்தனன் வெல்கவே!

குறிப்பு :

"22ஆம் வெற்றியில் "ஈ.வெ.ரா.வின் ஜெயில் பித்து" என்னுந் தலைப்பில் "கேசரி"யின் பேனா நர்த்தனத்தில் தோழர் ஈ.வெ.ரா. அவர்கள் அந்தத் தண்டனையை எந்தவிதமான மனோபாவனையுடன் ஏற்றுக்கொண்டார் என்பதை பாரதிதாசன் கவிச்சித்திரம் வரைந்து கொண்டிருப்பதாக எழுதியிருக்கிறது. அந்த ஓவியமே இந்தச் "சோபன அறை" என்பது" என்னும் பிற்குறிப்பு பாடலின் கீழ் தரப்பட்டுள்ளது.

- நகர தூதன், 4.3.34, ப.7

11.3.34

58. தொழிலாளர் கேள்வி

(சகானா கண்ணிகள்)

காடு மலைகள் உண்டு புவியில் - பெருங்
கடலும் வயலும் மிகஉண்டு
ஓடை நதிகள் சுனை ஏரி - இவை
உண்டு புவி முழுதும் உண்டு
நாடி அறியும் அறிவுண்டு - நன்று
நடத்தத் தெரியும் எங்கள் வாழ்வைப்
பாடு படமுடியும் எம்மால் - அதன்
பயனை அடைந்திடவும் தெரியும்.

மண்ணின் பரப்பு மிகப்பெரிது - மற்றும்
வாழ்வுக் குரிய பொருள்மிகுதி.
எண்ணிக் கணக்கெடுத்த போது - மக்கள்
இருக்கப் படுக்க இடம்போதும்
கண்ணை மிகத்திறந்து பார்த்தோம் - பஞ்சுக்
காடு துணிகளுக்குப் போதும்
வண்ண முடையஇந்த லோகம் - எங்கள்
மனத்தில் இனிமைதனைச் சேர்க்கும்

கடலை அடைப்பதெங்கள் தோள்கள் - மலை
கடுகென நொறுக்குவம் நாங்கள்
கடலை இருந்தஇடம் மறுநாள் - மதிற்
சுவர்கள் எழும்பும்[1] எங்கள் விரல்கள்.
உடலை அசைத்தஓர் அசைப்பால் - இந்த
உலகம் தாழும் அன்றி உயரும்
மடையைத் திருத்துவதும் நாங்கள் - உயர்
வானை அளப்பதுவும் நாங்கள்.

உலகம் இருக்க அதில்எங்கள் - நல்ல
உழைப்பும் மிகஇருக்க இடையில்
கலகம் என்ன? மதம் என்ன? - ஒரு
கடவுள் என்ன? மதம் என்ன?
அலையும் வேட்டை நாய்போலே - உள்ள
ஆட்சி என்ன? வெறி என்ன?
வலுவில் யுத்த உலைமூட்டி - எம்மை
வருத்த எண்ணிடுதல் என்ன?

1. 'எழுப்பும்' என இருப்பின் நன்று

- நகரதூதன், 11.3.34, ப.7

22.7.1934

59. கொடைத் தமிழன்

திங்கள்கதிர் உள்ளமட்டுன்[1] கீர்த்தி யுண்டு
செவிபெற்ற பாக்கியத்தால் இங்குன் பாட்டில்
பொங்கிவரும் சுவையனைத்தும் உண்ணு கின்றோம்
....

சிங்கமென்று நீயுரைத்தாய் தமிழர் தம்மைச்
செய்கையிலே வானுயர்ந்தாய் தமிழா! உன்னை
எங்குலத்து வீரனென நாங்கள் ஏத்தும்
இசையுனக்குக் கேட்பதுண்டோ வானி லாங்கே-

காண்பதினாலே[2] சத்தியத்தைக் கண்டு பாடிக்
கடவுளிங்கு யாவுமென்று நன்றாய்ச் சொல்லி
மாண்பினிலே நீயிருந்து காட்டி எம்மை
வடுவகற்றித் தமிழரென வாழ்க சொல்லி(ச்)
சேண்புகுந்த சுப்பிரமணிய பாரதி உன்
தெய்வமொழி இங்குவைத்த வன்மை யாலே
ஆண்மையினி லேறுகின்றோம் இன்றே எங்கள்
அடிமையைநின் ஆவலினைத் தீர்ப்போம் அண்ணே!

இயல்பில்வரும் பேச்சினைப்போல் எழுதி ஆங்கே
எழுத்தெழுத்துக் கொளிகாட்டி இனத்தை யெல்லாம்
பயிலும்விதம் கவியாக்கும் பாங்கின் ஜோதி
பரவுமொரு மண்டலமாய்க் காணுந் தோறும்
வியக்கின்றார்; நின்திறனைத் தாமும் கேட்பார்
வெண்மதிபோல் மற்றொன்று செய்வ துண்டோ?
செயற்கரிது செய்துவிட்டாய்! தமிழா! நின்போற்
செய்வதையும் காட்டுகின்றாய் நின்சீர் வாழி!

குறிப்பு :

"ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியைப் பற்றி" "வெண்மதிபோல் மற்றொன்று செய்வ துண்டோ?" இருள் அடர்ந்த இரவு கழிந்து 'விடியுங்'காலம் வருவதை அறிவிக்கும் குரலை அருகிருந்து உடனிருந்து கேட்டவர் "பாரதிதாஸன்" - அந்தக் குரலொலி கேட்டுத்

தமிழ்நாட்டுமக்கள், தமது தொழிலை மேற்கொண்டு வெளிப்பட்டதையும், அவர்களது போரையும் நேரில் கண்டனுபவித்தனர். சென்ற சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்துகொண்ட தமிழனின் குரலில் ஒலித்த வீரம், ஆவேசம், ஆதர்சம் யாவும் அந்த ஒரு குரலிலிருந்து எழுந்தவைதான்.

அந்த முதல்குரல் நாட்டுமக்களுக்கு ஊட்டிய ஆவேசத்தையும், காட்டிய ஆதர்சத்தையும் இந்தப் பாடலில் எழில்கலந்து பாடியிருக்கிறார் பாரதிதாஸன்."

- என்னும் மணிக்கொடியின் குறிப்பு, பாடலின் தலைப்பை அடுத்து இடம்பெற்றுள்ளது. மணிக்கொடியில் வெளிவந்த போது மூலத்தில் முதல் விருத்தத்தின் இரண்டாமடி, அரையடி குறைந்துள்ளது. இப்பாடல் 'பாரதிதாசன் பார்வையில் பாரதி' நூலில் இவ்விடுபாட்டோடே எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது. பின்னர் 'பாரதியாரோடு பத்தாண்டுகள்' *(1992)* நூலில் 'விடுபட்ட பகுதி "புத்துணர்வு பெறுகின்றோம்! நிமிர்ந்து நின்றோம்!" என்னும் அரையடியால் நிறைவுசெய்யப் பெற்றுள்ளது. எதன் அடிப்படையில் இவ்வடி நிறைவு செய்யப்பெற்றது என்பதற்கான குறிப்பு அந்நூலில் தரப்படவில்லை.

1. உள்ளமட்டுமுன் (பா.பா.பா.)
2. 'காண்பதினால்' என இருப்பின் நன்று.

- **மணிக்கொடி, 22.7.1934, ப.5**

பாரதியாரோடு பத்தாண்டுகள், ப.107-108

1934

60. தறிநெய்வோர் தவிப்பு-1

தறிநெய்வோர் பறிதவித்தார்[1] பல்லாயி ரம்பேர்
ஊண்வேண்டித் தொழிலாளர் உழைக்கும் போதில்
உயர்லாபம் முதலாளி அடைய வேண்டி
நாணயமில் லாவகையில் நடந்த தாலே
நல்லவியா பாரம்ந சிந்த தென்றார்
ஒருசிலரின் செய்கையினால் ஊர்மக்கள் துடிதுடித்தார்
உதவுவீர் ஏழைகட்கே முதலாளிகாள்!

(தறிநெய்வோர்...)

உழவற்ற நேரத்தில் உழவன் மாட்டை
உணவுதந்து காத்திடுதல் நீங்கள் கண்டீர்
தொழிலற்ற நேரத்தில் தொழிலா ளர்க்குச்
சோறிட்டுக் காத்திடுதல் உங்கள் கடனன்றோ!
ஊரைவிட்டு ஓடுவதோ உணவின்றி ஏழைமக்கள்
உதவுவீர் ஏழைகட்கே முதலாளிகாள்!
ஊரார் உழைப்பினிலே திருவிழாவிலே பெட்டிவாணங்
கொளுத்த ஏழைமக்கள் எத்தனைநாள் சகித்திருப்பார்?

1. 'பரிதவித்தார்' என இருத்தல் வேண்டும்

- கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.215-216

61. தறிநெய்வோர் தவிப்பு-2

காலை தொடங்கியவர் காட்டும் தறித்தொழில்
மாலை வரைக்கும் உடல்வாட உழைத்துழைத்து
நாலைந்து பணம்பெற்று நாளைக் கடத்திவந்தோம்
பாலுண்ண எண்ணவில்லை. பழமுண்ண எண்ணவில்லை.
சாலில் பழங்கூழைத் தகுதியென் றெண்ணிவந்தோம்
மேலுக்கு நல்லதொரு வேட்டி தரித்ததில்லை
வேலைத் தறிவேலையே யன்றி வேறொரு வேலையும் கண்டதில்லை

நாளெல்லாம் தறித்தொழிலை நாங்கள் நடத்துகையில்
தோளும் மெலிந்ததுண்டு துடையும் மெலிந்ததுண்டு
ஆளும் முதலாளிகள் எங்கள்அவதியைப் பார்ப்பதில்லை
மாளுமட்டும் அவர் வழிசெய்வா ரென்றிருந்தோம்
தேளும் மணிக்கொடுக்கைத் திருப்பிக் கொட்டியதைப்போல்
நீளும் சுடர்விளக்கு திடுக்கென்று நின்றதைப்போல்
மூளும் தறிவேலைக்கு இன்றுதொடங்க முற்றென்று விட்டார்

தொழிலில்லை இல்லையென்று முதலாளி சொன்னதுண்டு
வழியுமக் கென்னவென்று அவர்எம்மைக் கேட்கவில்லை
விழிதனில் நீர்பெருக எம்வீடு போனவுடன்
அழுகின்ற பெண்டுபிள்ளை அலறும் குழந்தைகளும்
பொழுதெல்லாம் பசிவாதை போக்க வகையுமின்றிப்
புழுவாய்த் துடிதுடித்துப் புரளுகின்ற கோலத்தில்
கழுதை மகனே கண்ணாடி விமானம் காட்ட நினைக்கின்றனை

ஊர்பெற்ற ஏழைமக்கள் உழைத்த உழைப்பினிலே
பேர்பெற்ற பிள்ளைபெற்றுப் பெருத்த செல்வமும்பெற்றுப்
போர்வைக்குப் பட்டணிந்து பொழுதைப் போக்குதற்குத்
தேர்செய்து வாகனங்கள் திருவிழாக்கள் கொண்டாடுவர்
ஆர்க்க உழைத்தவரின் அவதியைப் பார்ப்பதில்லை
மார்பில் சந்தனம் பூசி மகா தர்மகர்த்தர் என்பர்
வேர்க்குதடா பணக்காரனின் கொழுத்த விளையாட்டைக் காண்பதற்கு!

குறிப்பு :

முதல் 15 வரிகள் வேறுபட்ட தனியமைப்பினவாக உள்ளன. அவை 'தறிநெய்வோர் தவிப்பு' எனத் தனிப்பாடலாய்த் தரப்பட்டுள்ளன. யாப்பு அமைப்பிலும் படர்க்கை இடத்தில் தறிநெய்வோர் குறிக்கப்படுவதிலும் பின்னர் வரும் பகுதிகளிலிருந்து இவை வேறுபட்டுள்ளன. முன்பகுதி 15 வரிகளையடுத்து, "புதுவையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் முதன்முதலாக நிறுவிய திரு. நடேச முதலியார் நினைவுகூர்ந்த பாடல்கள் இவை" என்னும் குறிப்பு இடம்பெற்றுள்ளது (க.கு.ப.216)

அரிமாநோக்கில் இரண்டு பகுதிகளும் திரு. நடேசனாரால் நினைவுகூரப்பட்டவையாகக் கொள்ளலாமா என்பதும் இரண்டு பாடல்களாக இவற்றைக் கொள்ளமுடியுமா என்பதும் எண்ணத்தக்கன.

நினைவிலிருந்து கூறப்பட்டவையாதலால் பல இடங்களில் யாப்புச் சீர்மை குறைந்துள்ளது.

- கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.216

62. தொழிற்கல்வி வேண்டு

(வேலவா எனை ஆளாக்கித் தருணம் என்ற மெட்டு)

தொழிற்கல்வி வேண்டு
துயர்க்கடல் தாண்டு

தொழிற்கல்வியாலே சுகப்படும் தேசம்
தொண்டு படிப்பினிலே விளைந்தது மோசம்

தொழிற்பொருள் மிகுதி
தொழில்செய்த் தகுதி

தொழிற்சாலை எங்கெங்கும் தோன்றிடச் செய்வாய்
துன்பக் கடல்கடந்து நீஇனி துய்வாய்

தொழில்முதல் மேவும்
தோன்றும்பின் யாவும்

தொழிலறி யாதவர் இருப்பது விரசம்
தொழில்தொழில் என்று சொல்லி முழக்குக முரசம்

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், பவ-பங்குனி (1935), வெளியீடு 1, ப.7

1935

63. நண்பனுக்குக் கடன்படும் தீமையுணர்த்தல்

(ஐயா ஒருசேதி ஐயா ஒருசேதி என்ற லாவணி மெட்டு)

அந்தோ கடன்தீதே அந்தோ கடன்தீதே அந்தோ கடன்தீதே
என்நேசா வாங்கொணாதே!

நொந்து பிறரிடம்போய்க் கடனென்று கேட்டு
நூற்றுக் கிரண்டானாலும் எழுதுவார் சீட்டு
சிந்தனை இன்றியதில் கையொப்பம் போட்டுத்
தெருச்சிரிக்காதவரைக் காட்டு (அந்)

வாங்கும் பொழுதுகடன் மிகவும் கொண்டாட்டம்
வைத்த கெடுக்கடந்தால் அதிக திண்டாட்டம்
ஈங்குவை பணம் என்றால் கால்கைகள் ஆட்டம்
எடுப்பார்பின் அயலூர் ஓட்டம் (அந்)

கடன்தரு வானோர் கசடனா னாலும்
கடன்தரும் போதவன் துரையினைப் போலும்
திடமொடு பேசுவான் அவனிடம் மேலும்
சிக்கினால் மானமே நிர்மூலம் (அந்)

கடன்பட்டுக் கடன்பட்டுக் கெட்டவர் தொகையே
கணக்கிட முடியுமோ அப்பெரும் பகையே
விடுவது மேலென்று நான்சொல்லல் மிகையே
விளம்புதல் கேள்பெருந் தகையே (அந்)

வரவுக்குத் தக்கபடி செலவிடல் வேண்டும்
வட்டிக்கு வாங்குவது தொலைந்திட வேண்டும்
சிரமத்தை விளைவிக்கும் டாம்பிகம் தூண்டும்
செலவை நிறுத்துதலும் வேண்டும். (அந்)

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், பவ-பங்குனி (1935), வெளியீடு 1, ப.18

64. படியாமை நினைந்து வருந்தல்

(திருக்கடையூர் தனிலே என்ற மெட்டு)

எப்படி நான் பிழைப்பேன் - நாளை
எவ்விதத்திற் கழிப்பேன் - என்

அப்பா இறந்தபின் ஆஸ்திவிற்றுத் தின்றேன்
அருமைப் பிள்ளை பசி கண்டிதோ துடிக்கின்றேன்

வயது முதிர்ந்த அன்னை - தின்ன
வாங்கிவா என்றாள் என்னை - மிக

நயந்து மனைவியோர் நல்ல தொழில்செய்து
நாற்பது ரூபாய் சம்பாத்தியம் தேடென்றாள்

அந்தோ படிப்பில்லையே - எனக்
கதனாலிந்தத் தொல்லையே - என்

தந்தை கல்விச் சாலை போடா என்றப்போது
சாற்றினார் கேட்டேனா? அழுகின்றே னிப்போது

மாத மிரண்டொருநாள் - நான்
மாணவரோடு செல்வேன் - அன்று

பாதிவழிச் சென்று வீட்டிற்குத் திரும்பிப்
பள்ளிக்கூடம் இல்லைஅப்பா என்பேன் இன்று - என்

பெண்டு பிள்ளை அன்னைநான் - உண்டு
கண்டோர் நகைத்திடத்தான் - நான்

அண்டியபேர் உனக்குண்டா படிப்பென்றார்
ஆகையினாற் கூலிவேலை இனிச்செய்தே (எப்)

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், பவ-பங்குனி (1935) வெளியீடு 1, ப.21

65. இனாம் ஜோதிஷம்!

உண்மைப் பலனை உணர வேண்டுமா?
நன்மை தீமை யறிய வேண்டுமா?
அப்படி யானால் இப்பொழு தேநீர்
அடியில் காணும் கூப்பனை நிறைத்துக்
கடிதம் எழுதும் நேரம், அல்லது
ஜென்ம நக்ஷத்ரம் எழுதி, அதனுடன்
அனுப்புவீர் இரண்டணா ஸ்டாம்பும் வைத்து
மூன்று கேள்விகள் கேட்க வேண்டும்
மூன்றின் விடையும் இனாமாய்க் கிடைக்கும்
நவில்வ தெதற்கெனில் நீங்கள்
கவிதா மண்டலம் நேயர் தாமே!

குறிப்பு :

ஜோதிஷம் c/o எனக் குறிப்பிட்டு, கவிதாமண்டலம் ஆபீசிற்கு அனுப்பவும்.

கூப்பன்

கடிதம் எழுதும் நேரம் அல்லது ஜென்ம நக்ஷத்திரம்

....

பெயர்

முழுவிலாசம்

குறிப்பு :

கவிதா மண்டலம் இதழை வளர்க்கும் நோக்கத்தில் அதன் நேயர்களுக்குப் பணமின்றிப் பலன்சொல்லப்படும் என்னும் இவ்விளம்பரப்பாட்டு முதல் வெளியீடு தொடங்கிப்

பலவற்றிலும் இடம்பெற்றுள்ளது. இப்பாட்டின் ஈற்றடிகள் இரண்டும் பாரதிதாசனின் பாடுமுறை - கருத்து விளக்க முறையைக் காட்டுகின்றன. மேலும் கவிதா மண்டலத்தில் பாரதிதாசன் படைப்புகள் பல ஆசிரியர் பெயர் குறியாது வெளியிடப்பட்டுள்ளன என்பது மனங்கொள்ளத்தக்கது.

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்,
பவ-பங்குனி (1935) வெளியீடு 1, ப.37

1935

66. வண்மைத் தமிழர் தம்புசாமி

....

தமிழ்க்கவி தைக்கென்த் தனிப்பத் திரிகை
அமைப்போம் என்றே ஆண்டுபல சென்றன;
தமிழ்ப்பற் றுடையார், தம்பு சாமிஎன்று
அமைந்த சீமான் அன்புறு தோழர்
ஸ்ரீசுப்ர மண்ய பாரதி திருப்பெயர்
வாய்ந்த கவிதா மண்டலம் எனுமிதை
ஆய்ந்த அறிஞர் கவிஞரால் ஆக்கி
வெளியிட முன்வந் தொளிரு கின்றார்
தெளியுளப் பெரியார் செய்த நன்றி
மறப்பதற் கில்லை வண்மைத் தமிழர்!
அறப்பெருஞ் செயலை, அரும்பெருஞ் செயலைத்
தமிழர் ஆனோர் தோள்தந்து தாங்குக!
அமுதம் பெருக்குதல் அனைவர்க்கு மன்றோ?

....

குறிப்பு :

ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலத்தில் 'தமிழ்த்தொண்டு' என்னும் தலைப்பில் வெளிவந்த 58 அடி அகவற்பாவில் மேலே தரப்பட்டுள்ள 13 அடிகள் விடப்பட்டு ஏனைய 45 அடிப்பாடலே நூல்வடிவம் பெற்றுள்ளது. (முல்லைக்காடு, ப.19-20, இசையமுது - II, ப.26-27)

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்,
யுவ-சித்திரை (1935) வெளியீடு 2, ப.5-6

67. தமிழ்த்தாய் - இதழ் மதிப்புரை

இணைக்குறள் ஆசிரியப்பா

*தமிழ்த்தாய் வந்தாள்! சென்னை மாகாணத்
தமிழ்ச்சங் கத்தி னின்று
பெரியார் கண்ட கனவின் சித்திரம்
விரியுரை, வியாசம் அணிகலம் பூண்டு
தமிழகம் நோக்கி வந்தாள்!
தருசிவ ஞான யோகியார்
ஒப்பில் ராவ்சாகிப் சுப்பிர மணியனார்,
ஓது வேங்கட ராமையர்
செய்யி தப்துல், காதிர்வேள்,
திரு.வே, நெல்லையப்பர்,
இரத்தி னேச்சுரர் பெரிய சாமியார்,
கவிஞர்கள் திசைமுகம் கவிய வாழ்த்தவும்
தாளா சிரியர் தமிழின் தொண்டர்
வேள்சுப்ர மணியனார் முதற்றமிழ் வீரர்
திருச்சங் கூதவும் சின்ன மெடுப்பவும்
விருப்பொடு பராக்கு விளம்பவும், சயசய
அமிழ்தொலி ஆர்ப்ப ஆர்ப்பத்
தமிழ்த்தாய் வந்தாள் சகம்எதிர் கொள்கவே.*

குறிப்பு :

சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தின் முத்திங்கள் வெளி யீடாகத் தனியிதழ் நான்கணா விலையில் திருநெல்வேலியி லிருந்து வெளிவந்தது 'தமிழ்த்தாய்'.

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்,
யுவ-சித்திரை (1935) வெளியீடு 2, ப.17

68. தாயைப் பிரிந்திருந்த குழந்தை!

ஜன்னலுக்குள் தலையை விட்டுத்
தயிரை நக்கும் நாயின்
தடித்து நீண்ட வாலை எலி
பிடித்துக் கொண்டு வாயின்
சின்ன பல்லால் கடிக்கப் போகும்
தெரிந்து கொண்ட பூனை
திடுக்கெனப்பாய்ந் திடுகையிலே
சாய்ந்ததொரு பானை
அன்னதிலே இருந்த உப்பும்
அடுப்பினிலே விழுமே
அதுவெடிக்கக் குழந்தையின்மேல்
படமிகவும் அழுமே!
அன்னை வந்தாள்! பூனை, எலி
இல்லை அந்த நாயை
ஆதரித்தாள்! தனிக்குழந்தை
அடைந்ததுதன் தாயை.

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், யுவ-சித்திரை (1935) வெளியீடு 2, ப.29

1935

69. புது உலகம் - இதழ் மதிப்புரை

விருத்தம்

நல்லறிவும் பெருநோக்கும் கேட்பி ராயின்
நம்தோழன் சிங்கார வேலன் கண்ட
வெல்லுதமிழ்ப் "புதுஉலகம்" என்னும் மாத
வெளியீட்டை வாசித்தல் வேண்டும் என்போம்!
புல்லறிவில் தூக்கத்தில் சேர்க்கும் பேச்சுப்
புதுவுலகில் எவ்விடத்தும் கண்டோ மில்லை
இல்லைஎனல் இந்நாட்டில் விஞ்ஞா னந்தான்.
புதுஉலகில் விஞ்ஞானம் எதேஷ்டம் கண்டீர்!

புதுவுலகம் மாதமொரு முறைகி டைக்கும்
புலன்அடைந்த மாசையெலாம் அதுது டைக்கும்;
இதுஉண்மை உபசார வார்த்தை அல்ல!
எல்லாரும் வாங்கிவா சித்தல் வேண்டும்.
அதுஎன்ன இதுஎன்ன என்று தேடி
ஆயிரம்ஆ யிரநூற்கள் உண்மை கண்ட
சதுருளத்தி னின்றுவரும் சரக்கை வாங்காத்
தமிழருண்டோ? கரும்புதின்னக் கூலி ஒன்றா?

குறிப்பு :

தோழர் மா.சிங்காரவேலரை ஆசிரியராகக் கொண்டு தனியிதழ் இரண்டணா விலையில் சென்னையிலிருந்து வெளியிடப்பட்ட மாதஇதழ்க்கு மதிப்புரை.

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்,
யுவ-வைகாசி (1935) வெளியீடு 3, ப.23

1935

70. குன்றும் மயிலும்

வெண்பா

இடித்தாலும் வானம், எறிந்தாலும் மின்னல்
அடித்தாலும் சூரை[1] அனல்தான் - பிடித்தாலும்
குன்றான இவ்வீரன் குன்றான் நிலைகுலையான்
என்றாடும் பச்சைமயில் ஈண்டு.

1. 'சூறை' என இருத்தல் வேண்டும்

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்.
யுவ-வைகாசி (1935) வெளியீடு 3, ப.29

71. உலகின் இலக்ஷியம்

தாய்க்கும் சேய்க்கும் சம்பாஷணை

இடம் : ஆனந்த பைரவி தாளம் : ஆதி

பல்லவி

ஏடி மாநிலத் தேவி - விடை சொல்லாயோ
எங்கேடி செல்கின்றனை?

அநுபல்லவி

நாடும் அறிவை நோக்கி நான்பறந்தோடு கின்றேன்
நலக்கம் உடையார்க் கெல்லாம் இலக்ஷியம் அதுவாகும் (ஏடி)

சரணம்

தேடும் அறிவுப் பூமி சேர்வதில் என்ன லாபம்?
செறிந்த இருளை யெல்லாம் போக்குமடா அத்தீபம்,
மூடும் இருள் ஒழிந்தால் என்னேடி காணக் கூடும்?
மொய்த்த பேதம் அறுத்தெவற்றிலும்
மக்கள் ஏக சமத்துவத்தொடு

முகமிலங்கிட அகமகிழ்ந்திடுவார் -
நிதியால் சதியால் விளைந்திடும்
பகைமறைந்திடும்! வகைமிகுத்திடுமே -
வறியோர் பொருளாளர் ஆமெனப்
புகல்வதும் கெடும் - சகலமும் சுகமாம் -
வருணம் பல சாதியாகிய
புகைய டங்கிடும் தகைமை மிஞ்சிடுமே - மதப்
புன்மை தீர்ந்துவிடும் - அகத்
தன்பு சார்ந்து விடும்

பொய்ம்மை தீர்ந்திடும் மெய்ம்மை நேர்ந்திடும்!
பொதுமை நிலவிடை எவையும் இலகிடும்!
புதிய வாழ்வெனும் மதுவின் ஓடையில்
பொலியும் மானிடம்! பொழியும் விடுதலை! (ஏடி)

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்,
யுவ-வைகாசி (1935) வெளியீடு 3, ப.31

72. வழிகாட்டி - இதழ் மதிப்புரை

கல்லூரு ணித்தோழர் புன்னைமுத்தைக்
கவினாசி ரியராய்க் கொண்டே
எல்லோரும் பின்பற்றி முன்னேற
வழிகாட்டி என்னும் பேரால்
நல்லமதிக் கொருமுறையாய் வெளிவருமாம்
அதுகண்டோம். மிக்க நன்று!
சொல்லெல்லாம் நல்லோர்சொல்! பகுத்தறிவுச்
சுடர்கொளுத்தும் சொல்லே கண்டீர்

குறிப்பு :

அருப்புக்கோட்டை கல்லூருணியிலிருந்து தோழர் புன்னை முத்துவை ஆசிரியராகக் கொண்டு, தனியிதழ் ஒன்றரை அணா விலையில் வெளிவந்த மாத இதழ் 'வழிகாட்டி'க்கான மதிப்புரை இது.

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்,
யுவ-ஆனி.ஆடி (1935) வெளியீடு 4-5, ப.32

73. பகுத்தறிவு - இதழ் மதிப்புரை

புகுத்தறிவீ னத்தைப் புதைக்கப் புவியில்
பகுத்தறிவு வந்ததுநாம் பார்த்தோம் - தொகுத்திருக்கும்
கட்டுரைகள் யாவும் அறிஞர் கவின்கனவாம்.
அட்டுழியக் காரர்வாய் ஆப்பு.

தேசப் பகுத்தறிவின் ஆசிரியர் செப்புகின்றோம்:
"வீசப் பிறக்கும் விரிகதிர்போல் - காசினியில்
ஆமிருளைப் போக்கும் அறிஞர் ஈ.வீ.ராம
சாமி" அவர் உள்ளம் சகம்.

வையம் பகுத்தறிவை வாசிக்க! வாசித்து
மெய்யை அறிக! வெறும்பொய்யை - வைதொதுக்க!
நல்ல சமத்துவத்தை நாடுக! இன்பத்தை
எல்லாரும் துய்க்க இனிது.

குறிப்பு :

ஈரோட்டிலிருந்து பெரியார் ஈ.வெ.இராமசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு தனியிதழ் ஒன்றரை அணா விலையில் வெளிவந்த இதழுக்கான மதிப்புரை.

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்,
யுவ-ஆனி,ஆடி (1935) வெளியீடு 4-5, ப.33

74. பூங்காவனம்

மாதவனே என்ற இந்துஸ்தான் மெட்டு

(தலைவியும் சேடியரும்)

மாதர்களே எழில் மாதர்களே!

சீதளச் செந்தாமரைச் சங்கீத வண்டினம் - இங்குக்
காதினிக்கவே கவிதை பாடும் இத்தினம்

மாதர்களே எழில் மாதர்களே!

வாசம் நன்கு வீசும் முல்லை பூத்திருக்குதே - இங்கு
மூசு வண்டு தேனருந்தக் காத்திருக்குதே! (மாதர்களே)

மாமரத்திலே குயில்கள் கூவுதல் கண்டீர் - அங்குத்
தாமருந்தவே தளிரைத் தாவுதல் கண்டீர் (மாதர்களே)

சோலை தன்னிற் பூ உதிர்ந்த மாமகரந்தம் - அங்குக்
கோலநற் பொன்போல எந்தப் பாகமும் சிந்தும் (மாதர்களே)

ஈரமந்த மாருதம் சஞ்சாரம் கொள்ளுதே - அங்கு
நேரில் இன்ப ஓடைதன்னில் என்னைத்தள்ளுதே (மாதர்களே)

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்,
யுவ-ஆவணி (1935) வெளியீடு 6, ப.30

75. யுத்த ஆயத்தம்

அரசன் சேனாபதியை ஏவுதல்

அடாணா ராகம் ஆதி தாளம்

பல்லவி

துட்டப் பகைவரை வெட்டித் தள்ளப் படைவீடு - நோக்கி
இஷ்ட சேனா பதியே விரைந்தோடுநீ ஓடு!

அநுபல்லவி
(முடுகு)

எட்டுத்திசை எட்டப்பறை கொட்டிச்செய முற்றுப்பெற
எப்பக்கமும் உற்றுச்சரம் விட்டுத்ததி யுத்தத்தினில் (துட்டப்)

சரணம்

கட்கம் குத்துக் கத்தி கட்டும் அம்புப் புட்டில்
கச்சம் விற்கோல் திறம்நோக்கி - நல்ல
முட்கம்பம் நற்குந்தம் முக்கிளைச் சூலங்கள்
அட்டகா சத்தொடு தூக்கிக்
கட்டுக் காலாட்படை காணும் பரிப்படை
மட்டற்ற தேர்ப்படை யானைப் படையொடு (துட்டப்)

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்,
யுவ-ஆவணி (1935) வெளியீடு 6, ப.30

76. தாய் தனயனுக்குரைத்தல்[1]

(நாத சங்கீதப் பொன் மணிமண்டபம் என்ற மெட்டு)

தங்கை தமயன்[2] அக்கை இடம்வெதும்பி - நீ
சண்டை யிடாதிருப்பாய் தம்பி!
உங்கள் நலத்தையே நர்ன்விரும்பி - மிக
உரைத்தேன் கேட்பாய் இதைநம்பி

உண்மை! நீயே
யோசிப் பாயே
ஒத்திருந்தால் நீயோர் தங்கக் கம்பி

சின்ன வயதி லொற்றுமைப் பழக்கம் - அது
தேசத்துக் கும்பின் நலம்கொழிக்கும்!

என்னைப்போல்[3] பிறரை எண்ணும் வழக்கம்
உண்டானால் அதுதான் நல்லொழுக்கம்

உன்னை அக்கா
வைது விட்டால்
உளம்பொறுப்பாயவளை ஊர்பழிக்கும்!

1. 'தனையனுக்குரைத்தல்' என இருப்பின் நன்று
2. 'தமையன்' என இருப்பின் நன்று
3. 'உன்னைப்போல்' என இருப்பின் நன்று

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்,
யுவ-ஆவணி (1935) வெளியீடு 6, ப.33

77. தாயின் மணிக்கொடி

மன்னிய பாரத நாட்டின் கொடிக்கு
வணக்கம் புரிந்திடுவோம் - நம்
அன்னை மணிக்கொடி வாழிய வேஎன
அணிவ குத்திடுவோம் - நம்
முன்னைப் பெரும்புகழ் எண்ணிடு வோம்;குறி
நோக்கிமுன் னேறிடுவோம் - உயர்
குன்றெ னவேநிமிர் வோம்; நடப் போம்பகைக்
கூட்டத்தைச் சீறிடுவோம்.

வானிம யாசலம் தென்குமரிக் கிடை
வாய்ந்த பெரும்பூமி - அது
கான வரிப்புலி போலும் முப்பத்துமுக்
கோடி மக்கள்பூமி - என்று
நானில மீதினில் எங்கள் மணிக்கொடி
நாளும் பறக்குதங்கே - நம்
மானம் அஃதே எனஎண்ண எண்ணநெஞ்சில்
வீரம் பிறக்குதிங்கே.

செந்தமிழ் வீரர்கள் வங்கர் தெலுங்கர்கள்
சீக்கியர் ராஜபுத்ரர் - உளம்
முந்தும் துருக்கர்கள் வில்லினர் வேலினர்
வாளினர் மொய்ம்புடையார் - எனும்
பந்தியின் வாய்ந்திடு சேனையெ லாம்எங்கள்
பாரத அன்னைவசம் - எனில்
சந்ததம் வெல்வதும் தாரணி ஆள்வதும்
எங்கள் மணித்துவசம்

மாக்களைத் தந்த பெரும்புவிக் கேநல்ல
மக்களைத் தந்தநிலம் - அது
பாக்கியம் என்று பணிந்திடும் எங்களின்
பாரத அன்னைநிலம் - எங்கள்
ஆக்கையும் ஆவியும் அன்னவட் கேஎனப்
பேரிகை ஆர்த்திடுவோம் - அவள்
தூக்கும் சுதந்திர மாகொடி நாளும்
துலங்கிடக் காத்திடுவோம்.

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்,
யுவ-புரட்டாசி (1935) வெளியீடு 7, ப.1

78. சங்கு சுப்பிரமணியன் திருமண வாழ்த்து

சொல்லறங்கள் சிறந்திருந்த நமதருமைத் தமிழ்நாட்டின்
தூய்மை காக்கப்
பல்லறங்கள் நாடிடுவோர் "தமிழரிடைத் தமிழொளியைப்
பரப்பல்" என்ற
நல்லறத்தைச் செய்திடுக என்றுசுதந் திரசங்க
நாதஞ் செய்தோன்
இல்லறமும் காக்கமணந் தான்! சுப்ர மணியன்சர
சுவதி வாழ்க!

வெள்ளைநிலா, விரிநதிகள், மணித்தடங்கள், சோலையெலாம்
வீழ்ந்த நெஞ்சை
அள்ளுவது காணீரோ அமுதுநிகர் தென்தமிழால்
அவைபா டீரோ
நொள்ளைகளாய் இருப்பதுண்டோ என்று "தின மணி" வாயில்
நுவல்வோன் வீரப்
பிள்ளைகளைப் பெறமணந்தான்! சுப்ரமணியன் சரசுவதி
பெருநான்[1] வாழ்க!

தன்பற்று நீக்கிநிறை தமிழர்க்குப் பெரிதுழைப்போன்
தக்கோர் தம்மைப்
பின்பற்றும் பெருங்குணத்தோன் எழுத்தினிலே கவிதைரசம்
பெய்வோன் நாட்டின்
துன்பத்தை யுணர்ந்தபடி தமிழருளம் சுருக்கேற்றிக்
கைதேர்ந் தோன், பின்
இன்பமுணர்ந் திடமணந்தான்! சுப்ரமணியன் சரசுவதி
என்றும் வாழ்க!

தேரழுந்தூர்த் திருவாளர் சுந்தரமை யர்முதல்வன்
திண்மைத் தோளன்
ஆரிழந்தார் எவனுரைத்தான் அன்னைசுதந் திரதேவி
வா, இங் கென்றே
போரிழந்த அமைவுளத்தால் கூப்பிடுங்கால் அடடாவோ
அவள்தான் வந்து
தாரிழந்த நிலாமுகத்து சரஸ்வதியாய்ச் சுப்ரமணியன்
கரந்தொட் டாளோ!

இதந்தருநற் கோயில்வாழ் புவனேஸ்வ ரையர்தவத்
தீன்ற பெண்ணாள்
சுதந்திரநல் லினிமையிலும் இனிமைதரும் தூயசரஸ்
வதி தன்னை
பதம்பெறுசீர்ச் சுப்ரமணியன் பயனுறவே மணந்திட்டான்
பல்லா குக்கண்
நிதம்வதூ வரர்ஆ யுள் பேறுபதி னாறுபெற்று
நிலைக நன்றே.

குறிப்பு :

பாரதிதாசன் இயற்றி, ஸ்ரீ சுப்ரமணிய பாரதி கவிதா மண்டலப் பொறுப்பாசிரியர் அ.ம.தம்புசாமி முதலியார் 29.6.1936 அன்று சங்கு சுப்பிரமணியன் அவர்களின் திருமணத் தின்போது வாசித்தளித்த வாழ்த்துப்பா.

1. பெருநாள் என இருத்தல் வேண்டும்.

- ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதாமண்டலம், ஜூன் 1983, ப.2

79. எனது நாடு

என்னருமைத் தேசம் எழில்பா ரததேசம்
பொன்னும் பொருளும் பொருந்தும் பழநாடு!

கங்கை பெருகும்; கலகலென ஓசைவரும்!
அங்கு மணிப்பறவை அத்தனையும் பண்பாடும்!

தூய இமயமலை வானைத் தொடும்! சிந்து
பாயும் ஒருபால்! பழமரங்கள் ஓங்கும்!
நதிகள் சமுத்திரத்தை நண்ணும்! கரையில்
நிதிகள் கொழிக்கும்! நிறைகப்பல் நீர்மிதக்கும்!

ஈக்கள் சதாகீதம் என்னென்ன இன்பங்கள்!
பூக்கள், மகரந்தம், பூந்தேன், புதியமணம்

வெள்ளைமலை போற்பசுக்கள் வேண்டுமட்டும் பால்கொடுக்கும்!
அள்ளும் தயிர்நறுநெய் ஆர்ந்து கிடக்குமிங்கே!

தென்றல் சிலிர்க்கவரும் செவ்விளநீர் தித்திக்கும்!
மன்றலுறு தாமரைகள் வாவியெலாம் பூத்திருக்கும்!

செந்நெல், கரும்பு, செழும்பலா, தேன்கதலி
எந்நலமும் வற்றாச் சமுத்திரம்போல் இங்குண்டு!

தேனென்று பாலென்று சேல்விழியார் வாய்முத்தந்
தானென்று சொல்லும் தமிழ்க்கவிதை யெல்லாம்

புகழ்க்கூட்டம் செய்து, புனிதத் தமிழர்
அகத்தே உயிராகி ஆர்ந்து கிடக்குதிங்கே!

வீடுதொறும் நல்லறஞ்செய் வெண்(ண)கைசேர் பெண்களெலாம்
பாடுதொறும் இன்பஞ்செய் பச்சைப் பசுங்குயில்கள்!

ஈர முடையார்; எவர்க்கும் நலம்புரிவார்
வீரர்; பகைக்குலத்தை வேரறுப்போர் ஆடுவார்கள்!

கோலமுப் பத்தைந்து கோடி குலமக்கள்
காலம்பார்க் கின்றார்கள் கட்கத்தை ஓச்சுதற்கு!

சாதி யனைத்தும் சமன்செய்தார்; புன்மதத்தால்
மோதி யழியாமே முன்னேறிச் செல்கின்றார்;

கண்ணினிக்கும் காட்சிகளைப் பாடும் கவிஞரெலாம்
பெண்ணினத்தை இங்கே பெரிதென்று பாடுகின்றார்!

மூட வழக்குக்கு முடிவளித்தார்; பேதமெனும்
காடழிக்க நல்லறிவுக் கோடரியைக் கைப்பிடித்தார்!

எங்கும் புதிய எழுச்சி இலகினதால்
அங்கே பகைவரெலாம் அங்கம் நடுங்குகின்றார்!

நானிலத்தார் இன்பமெலாம் நன்று நுகர்வதற்குத்
தேனென் றினிக்கும் எனது திருநாடு

தூக்குந்தோள், வில்லில் தொடுக்குங்கோல், நல்லறத்தால்
ஆக்கும்போர், நெஞ்சில் அடக்கும்மூச் சுகளெல்லாம்

வெல்கவெல்க! என்நாடு வெல்க! உரிமையெலாம்
மல்கநலம் அத்தனையும் வாய்ந்து.

குறிப்பு :

தமிழ்நாடு அரசு நடத்தும் தமிழரசு இதழில் முதலில் வெளி வந்தபோது இப்பாடல் '1937-இல் எழுதியது' என்னும் குறிப்பும் மறு அச்சீடு செய்யப்பட்டபோது '1936-இல் எழுதியது' எனும் குறிப்பும் காணப்படுகின்றன.

- தமிழரசு, 16.4.1978
மறு அச்சீடு : தமிழரசு, 1.5.1990

80. பாம்புப் பாட்டு

ஆடு பாம்பே எழுந்தாடு பாம்பே
அன்னை துயில்நீங்கி நலம்துன்னப் பாம்பே!

1. உண்மைநிலை கண்டுறங்கும் யோகப் பாம்பே - இந்த
உலகத்தைச் சமன்செய்ய எண்ணு பாம்பே!
திண்மைநிலை கொண்டிருக்கும் தெய்வப் பாம்பே! - உன்
தெய்வீகத்தைக் காட்டுதற்குத் தீவிரம் கொள்வாய்! (ஆடு)

2. பாரதத்தி லேபிறந்த பன்னகப் பிள்ளாய்! - இந்தப்
பாரதத்தில் அன்பு வைத்த நல்லபாம்பே!
பாரதத்தை விடுவிக்கும் வழிநினைந்தே - நல்ல
பக்குவ மிகுந்திருக்கும் படப்பாம்பே! (ஆடு)

3. ஆடிவரும் விதந்தெரிந் தூதி வருவேன் - இங்
கனைவரும் தகத்தகத் தாளமிடுவார்
மோடியிசை பாடுதற்குக் காந்தி யொருவன் - இங்கு
மொய்த்திருக்கும் தொண்டரிடை ஆடுபாம்பே!

4. செம்மை, அறம் ஞானமிவை செகத்திலெல்லாம் - இனித்
திகழ்ந்திடச் செய்வதுன்றன் மணித்தலையே
பொய்ம்மை கொண்ட பகைவர்கள் புலையமக்கள்
பொசுங்கிட விஷஞ் சொரிந்தாடு பாம்பே! (ஆடு)

5. பாரதர்க்குப் பாரதத்தில் உரிமையில்லை - இந்தப்
பாவனையைத் தீர்க்கநல்ல காலமுமில்லை
சீர்கெடுக்க நினைத்திடும் பகைக்குலத்தை - நீ
சீறிப் படத்தை விரித்தாடு பாம்பே! (ஆடு)

6. ஆதிசிவன் மேலிருந்த நாகப் பாம்பே - எங்கள்
அரவிந்தப் பேர்புனைந்த அன்புப் பாம்பே!
ஜோதிப் படந்தூக்கி நடமாடி வருவாய் - அந்தச்
சோலைநிழ லால்எமது துன்ப மொழிவோம். (ஆடு)

குறிப்பு :

1938இல் வெளிவந்த 'பாரதிதாஸன் கவிதைகள்' தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு' என்னும் பகுதியில் ''பாரதிதாஸன் அவர்கள் எழுதிய பாம்புப் பாட்டை - பாரதியாரின் நண்பரான ஒரு ஆசிரியரே பாரதியார் பேரால் தம் பத்திரிகையில் வெளியிட்டது சிலருக்கேனும் ஞாபகமிருக்கலாம்'' எனும் குறிப்பு காணப்படுகிறது (ப.7)." இதிலிருந்து பாரதிதாசனின் பாம்புப் பாட்டு 1938க்கு முன்னரே பாரதியார் பெயரில் வெளியிடப் பட்டது என்பதும் அதற்கு முன்னரே அது எழுதப்பட்டது என்பதும் தெரியவருகின்றன.

மன்னர்மன்னன் புதுவையிலிருந்து வெளிவந்த கற்பகம் இதழில் இப்பாம்புப் பாட்டு முதலில் வெளிவந்ததாகவும் இதனைக் கலைமகள் (சென்னை) 1942ஆம் ஆண்டுப் பொங்கல் இதழில் 'சி.சுப்பிரமணிய பாரதி எழுதியது. பெ.தூரன் தேடி உதவியது' என்னும் குறிப்போடு வெளி யிட்டிருந்ததாகவும் குறிப்பிட்டு இப்பாடலை முழுமையாகத் தமது நூலில் பதிவுசெய்துள்ளார். இதிலிருந்து பாரதியார் பெயரில் மீண்டும் மீண்டும் இப்பாடல் வெளியிடப் பட்டிருப்பதை அறியமுடிகிறது.

சுத்தானந்த பாரதியாரின் 'கவிக்குயில் பாரதியார்' எனும் நூலிலும் (ப.50-51, 1945) எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயரின் 'தேசீயக் கவிராஜசிங்கம் சுப்பிரமணிய பாரதியார்' (ப.38, 1962) என்னும் நூலிலும் இப்பாம்புப் பாட்டின் முதல், இறுதிக் கண்ணிகளாகிய இரண்டு மட்டும் தரப்பட்டுப் பாரதியார் பாடலென விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது.

1987இல் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகம் வெளியிட்ட 'பாரதியார் பாடல்கள்' ஆய்வுப்பதிப்பில் முன்னூல்களில் குறிக்கப்பட்டவாறே முதல், இறுதிக் கண்ணிகள் மட்டும் 'அரவிந்தப் பாம்பு' என்னும் தலைப்பின்கண் (ப.835) சேர்க்கப் பட்டுள்ளன.

- கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.96

81. சமர்ப்பணம்

நல்ல குணம்செயல்கள் நன்கமைந்தார்! கல்வியிலே
வல்ல எவர்க்கும் மகிழ்ந்தா தரவளிப்போர்;

தற்பெருமை யற்றார்! தமிழப் பெருமக்கள்
முற்பெருமை காக்களனில் முன்னேறும் போர்வீரர்;

செந்தமிழே யாண்டும் சிறக்கச் செழுந்தமிழர்
செந்தமிழால் யாண்டும் சிறப்புப் பெறுகஎன்று

செல்வத்தால் நல்லுடலால் தீந்தமிழ்க்குத் தொண்டேதான்
அல்லும் பகலும் அநவரத மும்புரிவார்;

சைவப் பெரியாரின் சங்கத்தின் அங்கத்தார்;
நைவர்க் கிரங்கி நலம்புரியும் நோன்புடையார்;

வாராச்சீர்க் கோவிலூர்க் கீழ்[1] மருதூரரார்
நாரா யணசாமி நாயடுகார் அன்னவர்க்கே,

என்னூல் சமர்ப்பித்தேன்! இன்னோக்கம்[2] என்னூலைப்
பொன்னூலாய்ச் செய்யும் பொருட்டு!

குறிப்பு :

நல்லநூல்கள் வெளியீட்டுக்கு நாளும் உதவி, இறுதிக்காலம் வரை அமைதியாகவும் அடக்கமாகவும் தமிழுக்கு அருந் தொண்டாற்றிய சான்றோர் மருதூர் தி.கி.நாராயணசாமி நாயுடு ஆவார். அவரின் பொருளுதவி 'பாரதிதாஸன் கவிதை கள்' தொகுப்பாக முதலில் வெளிவரத் துணைசெய்தது. அந்த நன்றிப்பெருக்கின் விளைவே மேற்குறித்த பாடற்படையல். இப்பாடல் இக்கவிதைத்தொகுதியின் முதல்மூன்று பதிப்புகளில் மட்டுமே (1938, 1940, 1944) இடம்பெற்றிருந்தது. பின்னர் நீக்கப்பெற்றுவிட்டது.

1. 'கீழ்' (க.கு.)
2. இந்நோக்கம் என இருப்பின் நன்று

- 'பாரதிதாஸன் கவிதைகள்' முதற்பதிப்பின் (1938) சமர்ப்பணப்பாடல்

9.1.1938

82. முஸ்லிம் இளைஞர்களுக்கு வேண்டுகோள்

ஒன்றுசேர் உயர்வுசெய், உன்இ னத்தை!
ஒன்றுகொடு விரோதிகளின் உரத்தின் மேலே!
நன்றுசெய்! அஞ்சாதே! வெற்றி நோக்கி,
நடத்து! முன் வைத்தகால் பின்வைக் காதே!
இன்றிந்த நாட்டினிலே பிறந்தோர்க் கெல்லாம்,
எதுவேண்டும்? போராடும் சக்தி வேண்டும்,
சென்றிடுமோ உன்னுரிமை? விடாதே! முஸ்லிம்,
சேனாதி பதியேநீ ஏறுமேன் மேலே!

"இந்தியர்கள் யாரும்" எனும் நோக்க மின்றி,
இம்மியள வேபேதம் கொண்டிட் டாலும்,
அந்தநெடும் பாம்பினத்தின் விஷப்பல் லைப்போய்
அடியோடு பெயர்த்துவிடு! இரக்கம் வேண்டாம்!
சிந்துபொழி யும்தேசம் கேட்ப தெல்லாம்,
திறல்பொழியும் வீரனைத்தான்! நாயை யன்று!
சிந்துமெனில் உன்மானம், சாதல் நன்று!
செல்விகத்து முஸ்லிம்நற் சிங்கக் கன்றே!

குறிப்பு :

குடிஅரசு இதழில் முகப்புப்பாடலாக இது வெளிவந்தது. 1937இன் இறுதி, 1938இன் தொடக்கக் காலக் குடிஅரசு இதழ்களில் தன்மான இயக்கமும் முசுலீம் லீக்கும் இணைந்து நெருக்கமாகச் செயல்பட்டமைக்கான பல சான்றுகள் பதிவாகியுள்ளன.

பெரியார் ஈ.வெ.ரா. புதுநகரம் முஸ்லீம் லீக் ஆண்டுவிழாக் கொண்டாட்டத்தில் 6.12.37இல் கலந்துகொண்டு 'எல்லா வற்றையும்விட இந்து - முஸ்லிம் ஒற்றுமையில்லாமல் இந்நாடு ஒரு விரற்கிடையளவாவது முன்னேற்றமடையாது. இந்து - முஸ்லிம் ஒற்றுமையில்லாமல் இந்நாட்டு மக்களுக்கு ஒரு கடுகளவு சுதந்தரம்கூட ஏற்பட்டுவிடாது - இந்து முஸ்லிம் ஒற்றுமையில்லாமல் இந்நாட்டு மக்களுக்கு விநாடிநேர சாந்தியும் ஏற்பட்டுவிடாது' எனப் பேசியிருப்பது மனங்கொள்ளத்தக்கது. இந்தப் பின்புலத்தில் இந்தப்பாடல் உருவாகியுள்ளது எனக் கொள்ளலாம்.

- குடிஅரசு, 9.1.1938, ப.1

1.2.1938

83. 'தை'

பரிதி கண்டோம்! பரிதி கண்டோம்!!
பலபல கோடியாய்ப் பல்கிய கதிர்கள்
உலகினைத் தழுவி ஒளிபெறச் செய்வன;
உயிர்க்குலம் அதனால் உணர்வு பெறுவன!

ஃ ஃ ஃ

கருமழை தந்த பெருமழை வெள்ளம்
கழனி தோறும் அலைக்கரம் தாவிப்
பண்ணொன்று பாடிப் பாயுங் காலைப்
பொன்னேரு பூட்டிப் புவியெலாம் உழுதும்,
செந்நெல் விதைத்தும், செழுங்களை போக்கியும்,
தோளும் மனமும் சோர்ந்து போனோம்!
பனியே வெளியாய்ப் பகலே இரவாய்த்
துன்பினால் உயிரே சுருங்கினோம்! பின்இதோ
விளைத்த செந்நெல் விளைந்தது; கிழக்கில்
விரிகதிர் தங்கச் சலாகை பீறிட்டது.

ஃ ஃ ஃ

பனி, இருள், பிணி, துயில், பயம்அயர்வுகளெலாம்
பறந்தன. பறந்தது படமுடியாக் குளிர்!
பரிதி கண்டோம்! பரிதி கண்டோம்!
ஆண்டில் ஓர்கெட்ட அவதிப் பகுதி
அகன்றோம்! புதியநாள் - புதுவாழ் வாரம்பம்!

ஃ ஃ ஃ

உயிரினில் உடலினில் ஒவ்வோ ரணுவிலும்,
வெயிலைப் பாய்ச்சினான் விரிகதிர்த் தந்தை!
பனிப்புகை பிணிவகை பயங்காட்டு சாக்காடு -
இனியில்லை! பகைக் கினிமேல் உதைவிழும்!
எமையாள நினைப்பவன் எந்தப் பயல்அவன்?
அயர்வு போக எரியினை ஏற்றுவோம்

அன்பு சேரப், புத்தரிசி கொண்டு
புதுப்பரிதி வாழ்த்திப் புதுநறும் பொங்கல்
குடமடிப் பசும்பால் பொங்கப் பொங்க
நடமிட்டுப் பாடி, நாம்உற வோடு,
வறுமையும், துன்பமும், நாணும்
சிறுமையும் தீரச் சேர்ந்துண் போமே!

- மணிக்கொடி, 1.2.1938, ப.49

84. பட்டாளஞ் சேர்த்தல்

(கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு என்ற மெட்டு)

செந்தமிழைக் காப்பதற்குச் சேனை ஒன்று தேவை
பெருஞ்சேனை ஒன்றும் தேவை
திரள்திரளாய்ச் சேர்ந்திடுவீர் புரிவம்நல்ல சேவை
பைந்தமிழை மாய்ப்பதற்கே பகைமுளைத்த திங்கே
கொடும் பகைமுளைத்த திங்கே
பாதகரை விட்டுவைத்தால் தமிழர்திறம் எங்கே?
இந்திதனைத் தமிழரிடம் ஏன்புகுத்த வேண்டும்? - இவர்
ஏன்புகுத்த வேண்டும்?
எம்முயிரில் நஞ்சுதனை ஏன்கலக்க வேண்டும்?
சந்தத் தமிழ் மொழியழிந்தால் தமிழர் நூலை விரிதம்[1]
நல்ல தமிழர் நிலைதளரும்
தமிழர்திறம் காட்டிடுவோம் முழங்கிடுவீர் முரசம்!

ஊமைஎன நினைத்துவிட்டார் ஊர்நடத்த வந்தோர் -
நமை ஊர்நடத்த வந்தோர்
உளறுகிறார்; பொருளறியார் சிறுசெயல் புரிந்தோர்
தாய்மொழிக்குத் தீமைசெய்தார் சயமடைந்த துண்டோ? -
இங்குச் சயமடைந்த துண்டோ?
தன்மொழியை விலக்கியதோர் சமூகமெங்கே கண்டார்?
நாமும்உயிர் வாழ்வதுண்டோ நம் தமிழைப் பிரிந்தும் -
இங்கு நம் தமிழைப் பிரிந்தும்
நம் தமிழை ஈடழிக்க இந்திவரத் தெரிந்தும்
"போய்மறைவாய் இந்தி" என்று புகலுகின்றோம்
இங்கே - நாம் புகலுகின்றோம். இங்கே
புகநினைத்தால் அழிவைஎன்று முழக்கிடுவோம் சங்கே!

தூரிகையும் எழுதுகோலும் தூய்தமிழர் நாவும் - மிகு
தூய்தமிழர் நாவும்
தொட்டியற்றும் அச்சுச்சாலை மற்றுமுள்ள யாவும்
ஓரிடத்தும் தொடுவதுண்டோ இந்தியிலோர் எழுத்தை -
அந்த இந்தியிலோர் எழுத்தை
உயர்தமிழன் பகையதுவாம் அறுக்கவேண்டும்[2]

காரிகைகள் குழந்தைகள் நம் கனமறிந்த கிழவர் - நல்ல
கனமறிந்த கிழவர்
கைத்தொழிலா ளர்வணிகர் கடல்நிகர்த்த உழவர்
பேரிகை முழக்கிடுவீர் இந்தி எதிர்ப்பீரே
பேணவரும் தமிழர்களின் ஆணைஎண்ணு வீரே!

குறிப்பு :

1. இந்தப் பாடலின் மெட்டமைப்பை நோக்கும்போது அடிதோறும் இறுதிப்பகுதி மறித்துவரும் நிலையில் அமைந்துள்ளது. அந்த அமைப்புக்குப் பொருந்தாமல் சொற்கள் சிதைந்து பொருள் தெளிவற்ற நிலையை இந்த அடியில் காண்கிறோம். 'நூலை விரிதம்' என்பது 'நிலைதளரும்' என இருத்தல் வேண்டும்.

2. 'அறுக்க வேண்டும்' என்னும் தொடரை அடுத்து 'கழுத்தை' என்னும் சொல் இடம்பெற்றால் சிறப்பாய் இருக்கும். மூலத்தில் அது விடுபட்டுள்ளது.

- நகரதூதன், 3.7.38, ப.5

85. இந்திப் போருக்கு அழைத்தல்

இந்தியை விதைக்கிறார் தோழர்காள்
இன்தமிழ் நிலத்திலே தோழர்காள்
செந்தமிழ் விளைச்சலைத் தோழர்காள்
சேற்றிலே மிதிக்கிறார் தோழர்காள்
தந்திரந் தெரிந்ததோ தோழர்காள்
தமிழிழந்து வாழ்வமோ தோழர்காள்
சிந்தைஒன்று பட்டநாம் எல்லோரும்
சேர்ந்து போரியற்றுவோம் வாரீரோ.

தென்றலொடு வந்ததாம் தோழர்காள்
செம்மைமிக்க செந்தமிழ் தோழர்காள்
அன்றிருந்து - சங்கமும், மூவேந்தும்,
ஆதரித்த செந்தமிழ் தோழர்காள்
நன்றுயர்ந்த கலையெலாம் தோழர்காள்
நந்தமிழ்க்கண் உள்ளவாம் தோழர்காள்
இன்றழிக்க எண்ணிய தோழர்காள்
இந்திகொண்டு வந்தனர் தோழர்காள்

தமிழரைத் தொலைக்கவே நாளெல்லாம்
தமிழ்தொலைக்க எண்ணினார் தோழர்காள்
அமுதமொத்த தமிழிலே தீயோர்கள்
அழகிலாத வடசொலைச் சேர்த்தார்கள்
அமிதமாய்த் தெலுங்கிலே பாடல்கள்
ஆக்கவும் தொடங்கினார் தோழர்காள்
சமயமெண்ணி இந்தியால் இந்நாளில்
தமிழழிக்க வெண்ணினார் தோழர்காள்

தமிழ்மன்னர் மரபிலே வந்தோரே
சஞ்சலம் தவிர்க்கவே வாரீரோ
அமையுந் தம்பிரான்களே வாரீரோ
அழிவுதேட லாயினார் தீயோர்கள்
உமதுமக்கள் அல்லவோ இங்குள்ளோர்
உயர்தமிழ் மடிந்தபின் வாழ்வுண்டோ?
அமர்விளைக்க வாரீரோ எல்லேர்ரும்
அச்சமில்லை அச்சமில்லை தோழர்காள்!

- நகரதூதன், 10.7.38, ப.2

9.1.1939

86. 'தமிழ்மகள் தந்த செய்தி!' நூல் சிறப்புரைப்பா

விருத்தம்

நந்தமிழ் நாட்டு மக்கள்
நலமெய்தி வாழ்வ தற்குச்
செந்தமிழ் ஓங்க வேண்டும்;
செறுபகை வீழ வேண்டும்,
இந்தியைக் கட்டா யத்தால்
ஏற்படுத் திடநி னைந்தோர்
மந்திபோல் விழிகள் வைக்க,
மறுத்ததை ஒழிக்க வேண்டும்.

தமிழர்கள் நாட்டில் வேற்றோர்
தலைமைகொள் ளுவது தீமை,
தமிழரைத் தமிழர் ஆள்க
என்பன தமிழ வீரன்,
அமுதுநேர் மொழியான் அண்ணல்
தங்கோவின் எண்ண மாகும்,
அமைதிசேர் நல்லோன் கொண்ட
அன்புசேர் கொள்கை கண்டீர்!

கருத்தறிந் திட்ட நாளாய்க்
கணந்தொறும் தமிழர் தம்மைத்
திருத்தவும் அன்னோர் வாழ்விற்
செம்மைசேர்த் திடவும் எண்ணிப்
பெருத்ததொண் டிழைப்போன் நல்ல
பெரும்பெரும் செயல்கள் செய்வோன்
பொருத்தமாம் குணங்கள், கல்வி,
பொறையெலாம் அமைந்தோன் கண்டீர்!

அரசினர் சிறைப்ப டுத்த
அதனையும் தமிழர்க் காகப்
பரிசெனக் கொண்ட மேலோன்,
பன்னாட்பின் வெளியில் வந்தும்

முரசினை முழக்கி வெற்றி
'மேவுக தமிழர்' என்னும்
பெரியதோர் மனத்தான்! அன்னோன்
நூலொன்று பேச லுற்றான்

'தமிழ்மகள் தந்த செய்தி'
தன்னைநந் தமிழ ரெல்லாம்
தமதென அமுத மென்னத்
தாங்கிவா சித்தல் வேண்டும்
அமைவுற வாசித் துப்பின்
அதுசொலும் வண்ண மாக
இமையள வும்வ ழாமே
இயற்றவும் வேண்டும் நன்றே.

குறிப்பு :

கு. மு. அண்ணல்தங்கோ அக்கால மரபைத் தழுவி, 'தமிழ்மகள் தந்த செய்தி அல்லது சிறையில் யான் கண்ட கனவு' என இரண்டு பெயர்களைச் சூட்டியுள்ள 'ஒரு இனிய கவி' நூலுக்குப் பாரதிதாசன் சென்னையிலிருந்து 9.1.1939 அன்று எழுதி விடுத்த பாடல் இது. நூலாசிரியர் பாரதிதாசனை "இயற்கைக் கவிஞாயிறு புதுவை புதுமைக்கவி தோழர் பாரதிதாசன் அவர்கள் அன்பு கூர்ந்தளித்த சிறப்புரைப்பா" என இப்பாடலுக்கு முன் போற்றியுரைத்துள்ளார். இருவரும் நெருங்கிய தொடர்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

1.3.1940

87. பிரிந்த பிரானைப் பெறமுடியும்

பஃறொடைவெண்பா

பூரிக்கும் தாரகைப் புள்ளிக் கருநீலச்
சீரை உடுத்துச் சிரித்த நிலாமுகத்தைக்

காட்டுகின்ற வானே! - கலியாணம் பேசாமல்
தோட்டப்பூ வாசத்துத் தோளால் எனைத்தழுவ

வந்த பொதிகை மலைக்காற்றே! - மகிழ்கின்ற
சந்தத்தால் நல்ல ஒளிஇரவைத் தாலாட்டி

என்னை உனக்காக்க எண்ணும் பறவையே! -
தின்னக் கொடுத்தாலும் தேவையில்லை என்றுசொல்லி

வேலையுள்ள போதுவந்து வேடிக்கைப் பாட்டுரைத்துக்
'கூலிக்குக் காசு கொடு' என்று கூத்தாடும்

ஆசைக் குழந்தைகளே! - அன்பு மனையாளே!
ஓசைப் படாமல் இருப்பீர்; ஒதுங்கிநிற்பீர்;

ஃ ஃ ஃ

என்னுளத்தைத் தீண்டா திருக்கஉம்மைக் கெஞ்சுகின்றேன்
இந்நிலத்தார்க் குள்ளதுபோல் என்நெஞ்சும் ஒன்றேதான்

சந்தோஷம் துக்கம் இரண்டும் தனித்தனியாம்;
சிந்தை ஒரேசமயம் இரண்டினையும் சேர்வதில்லை.

துன்பத்தைக் கொஞ்சம் சுவைபார்க்கப் போகின்றேன்.
இன்பத்தை நீட்டாதீர் என்னிடத்தில்! போய்விடுங்கள்.

அந்த மனிதன்தன் ஆவி பிரிந்தநாள்
இந்தநாள். கேட்டதும் நான்இந்த இரவில்தான்.

"பன்னீர்ச்செல் வன்மறைந்தான்" என்று பகர்ந்தமொழி
இந்நேரத் திற்தான்[1] எனதுளத்தை வாட்டியது.

ஃ ஃ ஃ

கல்வி, அறிவொழுக்கம், சீதக் கடல்போன்ற
நல்லன்பு, செந்தமிழர் மாட்டு நனிதயவு,

நெஞ்சில் உறுதி, நினைப்பில் புதுத்தன்மை,
வஞ்சகர் பேச்சில் மயங்காமை என்னும்

குணம்செயல்கள் வாய்ந்தோன். குறைவொன்றில் லாத
பணக்காரன். நல்ல பதவி தனிலிருந்தோன்.

∴ ∴ ∴

இத்தகைய மாண்புகள் தன்பால் இருக்கையிலும்
அத்தலைவ ராம்ராம சாமிப் பெரியார்பால்

என்ன அடக்கம் தெரியுமா? அச்செல்வன்
தன்னைத் தமிழர்க் குதாரணமாய்த் தானளித்தான்.

சென்னைமா நாட்டில்அச் செல்வன் தலைமைபெற்ற
அன்று, பொதுமக்கள் சூடவந்த ஆரத்தைக்

கையேந்தித் தன்னிரண்டு கண்ணிற் புனலேந்தி
வையப் பெரியார் சிறைதனிலே வாழ்வதெண்ணித்

"தோளுக்குத் தந்தமலர் தூய பெரியாரின்
தாளுக்குச் சூடுகின்றேன்" என்றான் தகையுடையான்!

ஏன்தமிழா என்றழைத்தால் அவ்வளவில் நாட்டுக்கே
நான்தலைவன் என்று சுயநலத்தை நாடுகின்ற

கூழைமட்டை, பேயத்திக் கொம்பு முருங்கைமிலார்
தாழங்காய் எல்லாம் தலைதுள்ளிப் போகுமிந்நாள்,

தேசப் பொதுஒழுக்கம் காட்டவந்த சீமானை,
நாசக் கொடியவரின் நாவடக்கும் நாவலனை,

நம்தமிழர் நாடு நமக்கென்றும், ஆரியர்கள்
சொந்தம்பா ராட்டுவது சூதென்றும் சொன்னவனை(ப்)

போக்கடித்த தெண்ணுகின்ற போதெல்லாம் கால்வாரித்
தூக்கி அடிப்பதுபோல் ஆகிடுதே தொல்லைஎன்னே?

∴ ∴ ∴

செந்தமிழ் நாட்டார் எனது செழுந்தமிழர்
அந்தப்பன் னீர்ச்செல்வன் ஆசையினை எண்ணட்டும்!

நல்லொழுக்கம் எண்ணட்டும்! செந்தமிழ் நாட்டுக்கே
அல்லும் பகலும் அநவரத மும்புரிந்த

தொண்டு நினைக்கட்டும்! பேதமே சூழ்கின்ற
முண்டங்க ளைத்திருத்தி, மூச்சுவிடு வேனென்று
கொண்ட உறுதி தனிலுள்ள குட்டுதனைக்
கண்டு தெளியட்டும்! தெளிந்தால் கடிதில்
பிரிந்த பிரானைப் பெறமுடியும். நெஞ்சே
புரிந்ததா என்சொற் பொருள்!

குறிப்பு :

நீதிக்கட்சித் தலைவர் ஏ.டி.பன்னீர்ச்செல்வத்தின் மறைவுக்குப் (1.3.1940) பின் ஈரோடு குடிஅரசு பதிப்பக வெளியீடாக வந்த பாரதிதாசன் கவிதைகள் முதற்பகுதியின் மூன்றாம்பதிப்பு (1944) இறுதியில் புதிதாக இணைக்கப்பெற்ற பாடல் இது. பின் வந்த பதிப்புகளில் இப்பாடல் இடம்பெறவில்லை என்பதும் பலரும் காணக்கிடைக்காத அரிய பாடல் என்பதும் குறிப்பிடத்தக்கன.

1. 'திற்றான்' அல்லது 'தில்தான்' என்று இருத்தல் வேண்டும்.

- பாரதிதாசன் கவிதைகள் - முதற் பகுதி, மூன்றாம் பதிப்பு, ப.187-189

88. குடுகுடுப்பைக்காரன் நகரதூதன் 10-ம்[1] ஆண்டு வாழ்த்து

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
நல்லகாலம் பொறக்குது நல்லகாலம் பொறக்குது
நகர தூதனுக்கு நல்லகாலம் பொறக்குது
செல்வம் பொறக்குது குடுகுடு குடுகுடு
தீமை பறக்குது குடுகுடு குடுகுடு

ஃ ஃ ஃ

பத்தாம் வருஷம் பாஞ்சி வந்ததுபோல்
ஆயிரம் வருஷம் வாழணும் தூதன்

ஃ ஃ ஃ

நோய்நொடி இல்லாமே வாழணும் அந்தப்
பேப்பர் எழுதும் பெரிய மனிசர்.

ஐயா வுக்கோ அமுச மிருக்குது
ஆம்பளை பொறக்கும் ஆனை மாதிரி
பொம்பளை பொறக்கும் பொன்னு மாதிரி

பேரன் பொறக்கும் பெருமாள் மாதிரி
பேத்தி பொறக்கும் ஆத்தா மாதிரி

ஆயுசு வளரும் ஐயா வுக்கு
அரசி மாதிரி அம்மா இருக்கணும்
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு

ஐயா மூஞ்சியில் அழவு வடியுது
எண்ணம் இருக்குது வைகை மாதிரி
எழுத்தோ இருக்குது பழச்சா றாட்டம்
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு.

ஆட்சியைக் குடுக்கும் ஐயா ஓழைப்பு.
சூழ்ச்சியை விளக்க ஐயா துழவுகோல்.
திருமலை சாமியின் விரோதி(க்) கூட்டம்

அதிகாரம் இல்லாமே ஐயோண்ணு போவுது!
தமிழர் பேப்பரைத் தலையி லடிக்கும்
பழிகாரக் கும்பல் ஒழியப் போவுது.
ஐயா வாழ்க அனைவரும் வாழ்க
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு.

பசியா இருக்குது சாமி!
ருசியாய் ஒருதூதன் புசிக்கக் கொடுங்களே!

1. '10ஆம்' என இருத்தல் வேண்டும்

- நகரதூதன், 15.9.40, ப.9

செப்டம்பர் 1941

89. ராஜா சர் அண்ணாமலை வள்ளலார் வாழ்த்து

அகவல்

மலர்தலை யுலகிற்கு வான்பெரு நாடு
பலர்புகழ் ஞாயிறு படைத்தது போன்று
பண்ஆர் தமிழ்நாடு பகர்ரா ஜாசர்
அண்ணா மலைச்செட் டியாரை இந்தத்
தமிழர் இழைத்த தவத்தின் பயனாய்
அமிழ்தம் போல அளித்த தன்றோ!

ஃ ஃ ஃ

அருளினால் அக்கதிர் அம்புலி தன்னை
இருளினால் படாமை இழைத்தது போல
நல்கலை நயந்த அண்ணா மலையார்
பல்கலை மதிக்கு - ஒளி பாய்ச்சி அருளினார்
விண்ணுக்கு அத்திங்கள் விளக்கா வதுபோல்
மண்ணுக்கு அக்கழகம் மணிவிளக் கன்றோ!

ஃ ஃ ஃ

நிலவு பொழிந்து நிலவு பொழிந்து
குலவும் அத்திங்கள் குளிர்செய் வதுபோல்
நண்ணாப் பெரும்பேறு நண்ணு ராஜாசர்
அண்ணா மலைக்கலைக் கழக மோவெனில்
அறம்பொருள் இன்பம் ஆம்வீட் டறிவின்
திறம்பொழிந்து திறம்பொ ழிந்து
மடமையாம் வெப்பினை வறுமையாம் பிணியினை
'நடமின்' என்று நடத்தித் தீர்த்துக்
குளிரினைப் பெரிதும் கொழிக்கின் றதுவே!

பன்னரும் புகழினைப் பாரெலாம் செலுத்திய
மன்னரும் அறிஞரும் வாழ்ந்தஇத் தமிழ்நாடு
இனிப்புறுங் கரும்பின் நுனிப்புறம் சுவைதேய்ந்து
போதல் போலத் புனிதம் தேய்ந்தும்

சாதல் போலத் தளிர்ச்சி[1] எய்தியும்
குழிவுறும் கண்ணும் குனிவுறும் தோலுமாய்[2]
அழிவுறக் கண்ட அண்ணா மலையார்
அருளும் அம்பலத் தருகில் மக்கட்குத்
தெருளும் அம்பலம் தேடி 'அண்ணாமலை
நகர்' எனப் பேரிட்டு நாவலர் உள்ளமே
நிகர்எனப் பெரிதாய், நேயர்போல் நல்லதாய்(ப்)
பெருந்தமிழ் வேந்தர் பேழைபோல் கண்ணால்
அருந்தமிழ் தாக அமைத்த நிலையத்துப்
பாவிரி புலவர் பலரையும் கூட்டிக்
காவிரிப் பெருக்கெனக் கல்விப் பெருக்கைத்
தென்னாட் டுளந்தொறும் சேர்த்துத் தென்னாடு
பொன்னா டாகப் புரிந்த நன்றியால்
அண்ணா மலைப்பேர் அதனை நாடொறும்
எண்ணாத் தமிழர் எங்கணு மில்லை!
தெங்கிளங் காய்தொறும் தித்திக்கும் நீர்போல்
இங்குளார் உளந்தொறும் இனிக்கின்ற தப்பெயர்!

ஃ ஃ ஃ

அனைவரும் அவ்வாறு - அப்பெரு வள்ளலை
நினைவ தோடு நிற்ற லின்றி
உண்ணிலவும் அந்நினைப்பு - உவகையொடு புணர்ந்து
தண்ணிலவு புணர்ந்த வண்கடல் போலப்
பொங்கிட இங்கொரு புதுநாள் வந்தது
புதுநாள் என்னெனில் புகல்வேன் கேளிர்:[3]
நாள்ஒவ் வொன்றும் நன்மதி எதுவும்
வேள்இந்த நாட்டுக்கு விளைத்த அறங்கண்டு
வாழ்த்திச் சென்றன; வாளா கழிந்தில
ஆண்டு - ஒவ்வொன்றும் அண்ணா மலையார்
ஈண்டு மக்கட்கு - இழைத்த நன்மைக்கு
நன்றி கூறாது நடந்த தில்லை!
அண்ணா மலையார் அருங்கொடை வாழ்வில்
எண்ணா வெறுநாள் எதுவும் இல்லை
அன்னார் கண்டஅவ் - அறநாட்கள் எனும்
மின்னார் பவள மெல்லிதழ்ப் பெண்கள்
பற்பலர் அரசரைப் பரவிப் போனபின்
அற்புதப் பெண்ணாம் அறுபதாம் ஆண்டு
மான்போல் வந்து மலர்போற் சிரித்துத்,

தேன்போல் பேசிச் சேல்போல் விழியால்,
மங்குல் போலும் வள்ள லாரின்
தொங்கல் மார்பைச் சுவைத்து நிற்க,
அவர்அவ் வறுபதாம் ஆண்டை அணைந்தனர்.

ஃ ஃ ஃ

இருமுப்பான் - ஆண்டு எய்திய அண்ணலார்
வருநூற் றாண்டையும் மணக்கத் தக்க
குன்றத் தோளையும் குளிர்மலர் விழியையும்
அன்றலர் மலர்முகத் தழகையும் கண்ட
அவர்மனை - என்னரும் அன்னையா ரோவெனில்
புதுமணம் கண்ட போதுதம் காதலர்
மதுமணம் கண்ட மலர்க்கை நீட்டி
அங்கம் சிலிர்க்க அணிசெய் திட்ட
மங்கல நாணையும், மணாளர் தம்மையும்
கிள்ளை முதிரை கொள்ளு வதுபோல்
அள்ளி முத்தம் அளித்து மகிழ்ந்தார்

ஃ ஃ ஃ

அன்பொடு செட்டிநாட் டரசர் அரசியார்
மன்றினில் திருமுக மலர்ந்துவீற் றிருக்கப்,
பொதிகைத் தென்றல் புதுமணம் புரிந்தது!
வதிகைப் பரிதி மணிவிளக் கெடுத்தது!
முழங்கு தென்கடல் முரசம் ஆர்த்தது!

ஃ ஃ ஃ

பழங்குடி மக்கள் இழந்தவை அனைத்தும்
இவைஎன்று கொணர ஈன்றதம் மக்கள்
அவையினில் இளவர சழகு செய்தனர்.

பாருக்குள் பற்பல கோடி மாந்தரின்
வேருக்கு வித்தாய் விளைத்த தொன்மைச்
செந்தமிழ் மக்கள் திசைய டங்கலும்
தந்தமிழ் மொழியால் தூம்தாம் வாழ்த்திய
வாழ்த்தொலி அனைத்தும் மகர வீணைதான்
வீழ்த்திய அமுத வெள்ளமோ! தாமரை
விரிந்த வாய்தொறும் விண்ணை நனைக்கச்

சொரிந்த தேனூற்றுத் தொடர்போ! வேய்ங்குழல்
இசையின் பிழம்போ! இன்தமிழ்ப் பாட்டொடு
பிசைந்து கிடக்கும் பெரும்பயன் தானோ!

அதிர்த்த தென்கடல் அகடு பூரித்து
உதிர்த்த முத்தமோ! உலக மெல்லாம்
அகில்கமழ் குன்றின் அணித்து - உளார் கேட்கும்
முகில்கமழ் ஓசையோ! மொய்த்த தமிழர்க்கு
நண்ணாப் பேறு - என நண்ணு ராஜாசர்
அண்ணா மலையார், அரசியார், மக்கள்
வாழ்க பல்லாண்டு வாழ்க சுற்றம்
வாழ்க, என்று வாழ்த்திய வாழ்த்தும்,
வெல்க அன்னார் விரிந்த கொள்கை
வெல்களன் றுரைத்த வெற்றி மொழியும்,
பல்குக செல்வம் பல்குக இன்பம்
பல்குக' என்று பகர்ந்த மொழியும்
உண்மை ஞாயிற்று நிலைபோல்
திண்மை உடையன ஆகுக சிறந்தே!

குறிப்பு :

அண்ணாமலைப் பல்கலைக்கழக நிறுவனரும் இணைவேந்தருமாகிய இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் உயர் கல்விக்கு ஆற்றிய தொண்டை நன்றியுடன் நினைவுகூர்ந்து பாராட்டும் வகையில் பல்கலைக்கழக ஆட்சிக்குழு அவரின் 61ஆம் பிறந்தநாளின் போது வெளிக்கொணர்ந்த விழாமலரில் இடம்பெற்ற பாடல் இது.

1. 'தளர்ச்சி' என இருத்தல் வேண்டும்
2. 'தோளுமாய்' என இருத்தல் வேண்டும்
3. 'கேளீர்' என இருத்தல் வேண்டும்

- அண்ணாமலை அரசரின் 61ஆம் ஆண்டுப் பிறந்தநாள் விழா மலர்
1941 செப்டம்பர், ப.938-940

90. அமுதூட்டி அறிவூட்டும் கோயில்

எண்சீர் விருத்தம்

இரவினிலே உணவருந்தி நாற்காலி யிற்சாய்ந்
        திருந்தேன்இத் தமிழ்நாட்டின் எளிமைதனை எண்ணி!
மரவேரிற் புழுப்போலே தீமைபல செய்து
        மாய்கின்றார் பொதுநலத்தில் நாட்டமில்லை மற்றப்
பரதேச மக்களையும் பார்க்கின்றோம் அங்குப்
        படிப்புக்கு வசதியுண்டு பிள்ளைகளைப் பெறுவார்
குரலுடையார் இங்கெல்லாம் வெறுங்கூச்ச லிடுவார்
        பெருஞ்செல்வர் இருக்கின்றார் கொடைக்குணந்தா னில்லை

என்றுநான் பலவாறு நினைத்திருக்கும் நேரம்
        என்மனைவி வெற்றிலையும் கையுமாய் வந்தே
என்னயோ சனைஎன்றாள் என்னேடி மாதே
        இராக்காலம் தருவதோர் இன்பத்தை இந்த
சின்னநிலைத் தமிழ்மக்கள் அடைவதில்லை அறிவின்
        திறமற்ற மக்களுக்குக் காதல்ஒரு கேடா
அன்புள்ள பிள்ளைகட்கோ அருங்கல்வி வசதி
        அணுவளவும் இல்லையன்றோ என்றுநான் சொன்னேன்.

தன்னலமே அறியாதார் வாழ்ந்திருந்த இந்தத்
        தமிழ்நாட்டின் வீழ்ச்சியினை நிலையெனவே எண்ணி
இன்னலுற்றீர் சரியன்று முன்னாளில் உழவர்
        இட்டவிதை ஒன்றிருக்க முளைப்பதுவே றாமா
கன்னல்நறுஞ் சாற்றைப்போல் இந்தஇராப் போதில்
        கலைநுணுக்கம் பேசுகின்றார் மாணவர்கள் கேளீர்
அன்னதுதான் ராஜாசர் அண்ணாம லைப்பல்
        கலைக்கழகம் அமுதூட்டி அறிவூட்டும் கோயில்.

திருக்கோயில் பலகண்டும் சத்திரங்கள் கண்டும்
        தென்னாட்டில் வாழ்கின்ற அருமைத்தாய் மார்கள்
கருக்கோயில் விட்டுவந்த முருகப்பிள் ளைகள்
        கலைக்கோலம் பெறப்பலவாம் நிலைக்கழகம் கண்டும்

இருக்கும்அவர் பிறசெல்வர் ஈந்துவக்கும் வழியை
இன்னதென்றும் காட்டிவிட்டார் இன்னமென்ன தேவை!
உருக்காதீர் நெஞ்சத்தை என்றுரைத்தாள் மனைவி
ஓகோகோ ஓகோகோ அப்படியா செய்தி.

ஓரிரவில் ஒருதுளியும் இனிமேல்வீ ணாக்கும்
உத்தேசம் எனக்கில்லை வித்தார மயிலே
பாராள ஒருபிள்ளை, படைநடத்தப் பசங்கள்,
பைந்தமிழ்க்குத் தொண்டுசெய்ய நல்லநல்ல மக்கள்
ஏராள மாய்வேண்டும். தவம்புரிவோம். கல்வி
ஈயத்தான் அண்ணாம லைக்கழகம் உண்டே
பாராயோ என்றுரைத்தேன் காத்திருந்த பாவை
பறந்துவந்தாள் ஆநந்த வெள்ளத்திற் பாய்ந்தோம்

குறிப்பு :

முதலில் குறித்துள்ள பாடல் இடம்பெற்றுள்ள அதே மலரில் அப்பாடலையடுத்துத் தொடர்ச்சியாக (ப.942 - 943) இப்பாடலும் இடம்பெற்றுள்ளது. முதற்பாடல் பல்கலைக் கழக நிறுவனரை வாழ்த்துவதாகவும் இப்பாடல் நிறுவன மேன்மையைப் பேசுவதாகவும் அமைந்துள்ளன. முறையே ஆசிரியரின் பெயர் பாடல் தலைப்பின்கீழ் 'By BharathiDason' என ஆங்கிலத்தில் முதற்பாடலிலும் 'பாரதிதாஸன்' என இரண்டாம் பாடலிலும் குறிக்கப்பட்டுள்ளன.

91. அரவிந்தர் - யோகம்

ஓதுகின்ற யோகத்தால் பயன்கண் டாலும்
ஒருவர்க்கே பயன்அன்றிப் பிறருக் கில்லை!
மோதுகின்ற அறியாமை மிகுந்த நாட்டார்,
'யோகம்' எனும் மொழியினிலோர் மோகம் கொள்வார்;
ஆதலினால், "நீஇறத்தல் இல்லை; தேகம்
அழிவதொன்றே" என்னும்ஒரு சொல்லை மட்டும்
கீதையிலே இருந்தெடுத்துத் திலகன் காட்டிக்
"கிளம்புங்கள் பணிக்" கென்று முழக்கம் செய்தான்.

கேட்டெழுந்தார் நாட்டார்கள், கேட்ட தன்றிக்
கிளர்ந்தெழுந்தார் உணர்ந்தெழுந்தார் என்ப தில்லை.
போட்டதிட்டம் விடவில்லை திலகன் மட்டும்;
பொழுதெல்லாம் பொதுவுக்கே உழைத்தான்! அந்நாள்
ஆட்டின்மேல் விழிவைத்த இடைய னைப்போல்
அரவிந்த இளஞ்சிங்கம், அறிஞர் கோமான்,
நாட்டுநிலை தனைக்கண்டான் 'ஒன்று' செய்தான்;
நடுவிலது முறிந்ததனால் புதுவை வந்தான்!

ஆங்கிலத்துப் பெருங்கவிஞன் அரவிந் தற்கோ,
அணிநாட்டின் பிணிநீக்கும் கவலை யல்லால்.
தீங்கியலும் சிறுசெயலில், பணத்தில், காசில்,
சிறிதேனும் கவலையுறக் கண்ட தில்லை;
பாங்கன்ஒரு வன்கிடைத்தான் அரவிந் தற்கே;
பாரதிஓர் தமிழ்க்கவிஞன்; நாட்டின் அன்பன்!
தூங்கியது நாடந்நாள்! இரண்டு பேரும்,
சொல்லாலே உணர்வுதந்தார்; ஏடும் தந்தார்!

வங்காளச் சிங்கமவன், 'எண்ணம் செய்வான்;
வரிப்புலிப்பா ரதிஅதனைத் தமிழாய்ச் செய்வான்;
வங்காளச் சிங்கமவன் ஆங்கி லத்தில்
வழங்குவதும் வழக்கந்தான்! ஏடு கள்போய்
எங்கெங்கும் முழக்கமிடும்! அவர்கள் சொன்ன
இறவாத மொழிகளிலே ஒன்றைக் கேளீர்:
'உங்களுக்கே யோகத்தின் உண்மை சொல்வோம்:
ஊருக்கு ழைப்பதுதான் யோகம்" என்றார்!

"ஊருக்கு ழைப்பதுயோ கம்தான் என்றே
உரைத்திட்ட பாரதியின் பாட்டை, வாழ்வின்
வேருக்கு நீரென்று சொல்வார் அந்நாள்!
விழலுக்கு நீர்பாய்ச்சும் இளைஞர் இந்நாள்,
பேருக்கும் பெருமைக்கும் யோகம் பேசிப்
பெரும்பணத்தை இழக்கின்றார்! அறிஞர் சொன்ன
ஊருக்கு ழைப்பதுதான் யோகம் என்னும்,
உண்மையிலே யோகத்தின் உயிரைக் காண்பீர்!

- 'சக்தி' சித்திரபானு மார்கழி (1942 டிசம்பர் - ஜனவரி), ப.207-208

92. மாட்சிமிக்க ஆங்கிலேய அரசாங்கத்திற்கும் சொற்பொழிவாளர் திருவாளர் N.தண்டபாணி அவர்கட்கும் வாழ்த்து

எண்சீர் விருத்தம்

அமுதச்சொற் பெருக்காற்றும் தண்ட பாணி!
அறிவுப்பைங் கூழ்வளர்க்கும் பெரியோய்! இந்தத்
தமிழ் நாட்டில் நினது புகழ் விண்ணின் மிக்க
சாலவுமே பெரிதாகும். இந்நாள் மட்டும்
இமைப்போதும் நீங்காது பிறர் நலத்தை
எண்ணிநீ ஆற்றிவந்த பொதுமைத் தொண்டு
தமிழ்நாடு மறந்துவிடத் தக்க தன்று
தமிழ் நாட்டில் உனையறிவார் பிறந்தா ரெல்லாம்

எதற் கிவற்றைச் சொல்ல வந்தேன் என்று கேட்பாய்
இரிசுநாட் டினரைநாம் எல்லாம் கூடி
உதைகொடுக்க வேண்டியதன் அவசி யத்தை
ஊரார்க்கு விளக்கிவைக்க அரசாங் கத்தார்
மதித்துன்னை நியமித்தார் வாழ்த்து கின்றேன்
மதிபெற்ற அரசினரை வாழ்த்து கின்றேன்
சதிருடைய நல்தண்ட பாணி செம்மால்
தயையுடையாய் வாழி நீ வாழி வாழி

குறிப்பு :

பாரதிதாசன் பெயர் அச்சிடப்பட்ட மடல்தாளில் *25.6.1942* அன்று எழுதி விடுத்த வாழ்த்து இது.

- பாரதிதாசன் இதழ்ப்பணிகள், ப.427

20.11.42

93. திருவாரூர் 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்'திற்கு வாழ்த்து

தண்பொழிலில் குயில்பாடும் திருவா ரூரில்
தமிழ்நாடு, தமிழ்மாண வர்மன் றங்காண்!
வண்மையொடும் உண்மையொடும் வாழ்ந்தி டுங்காண்!
மக்களிடை எழுச்சிக்கு மருந்தா குங்காண்!
கண்மூடிக் குறிமறந்து தமிழர் தங்கள்
கலைமறந்த நெஞ்சத்தில் ஒளியெய் துங்காண்!
புண்வாய்ந்தோர் அல்லர்காண்! திருவா ரூரின்
புலிஇளைஞர் காண்! தோள்கள் பூரித் தார்காண்!

எழில்மன்றச் சட்டத்தை உயிரைப் போலே
எண்ணிஅந்த வண்ணமே நடப்பார் கள்காண்!
ஒழித்தார்காண் அயர்வுதனை! அவர்கள் நாளும்
உயர்கவிதைச் சுவைதன்னில் தோய்ந்திட் டார்காண்!
மொழியினிலே தமிழ்மொழியே உயர்ந்த தென்றும்
மூச்செல்லாம் தமிழுக்கே என்றும், நல்ல
வழியறிந்து விட்டார்காண்! முத்த மிழ்க்கு
மடைகோலி விட்டார்காண் உலகில் பாய்ச்ச!

கிளம்பிற்று காண்தமிழ்ச் சிங்கக் கூட்டம்!
கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக்கூட் டத்தை!
வளம்பெரிய தமிழ்நாட்டில் தமிழ ரல்லார்
வால்நீட்டி னால்உதைதான் கிடைத்தி டுங்காண்!
"தளும்புதுபார் பத்தியென்றும் யோக மென்றும்
சாமிஎன்றும், முழமிஎன்றும், எழுதிப் பேசிப்
புளுகிடுதல்" இனிப்பலிக்க வழியில் லைகாண்!
புதுவாழ்வு மலர்ந்ததுகாண் தமிழ்நாட் டில்காண்!

குறிப்பு :

16.11.42இல் பள்ளி மாணவராக இருந்த மு.கருணாநிதி பிற மாணவர்களையும் சேர்த்துத் திருவாரூரில் நிறுவிய "தமிழ்நாடு தமிழ்மாணவர் மன்றத்'தின் சார்பில் அதன் திறப்புவிழாவையொட்டித் "தங்களது கவி ஒன்று வெளியிடத் தீர்மானித்துள்ளோம். தயவுசெய்து எங்களை அலட்சியம்

செய்யாமல் ஒன்று அனுப்பவும்" என்று பாரதிதாசனுக்கு எழுதிய மடலுக்கிணங்கி 20.11.42இல் பாரதிதாசன் அனுப்பிய பாடல். இது பல இடங்களில் பலரால் பன்முறை எடுத்துக் காட்டப்பட்டாலும் இதுவரை கவிதைத் தொகுப்பு எதிலும் இடம்பெறவில்லை.

- கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.352-354

1942

94. திருஅரங்கம் திராவிட வாலிபர் கழகம் அறிவுலகம் - வாழ்த்து

அறுசீர் விருத்தம்

அனைவரும் தமிழைக் கற்க
அனைவரும் தமிழ்ஆ ராய்க!
அனைவரும் தமிழைப் பெய்க
அனைவரும் கவிதை செய்க!
அனைவரும் தமிழர் நாட்டுக்
காவன அறங்கள் செய்க!
தினைப்பொழு தேனும் வீணில்
திரிபவன் தமிழன் அல்லன்!

தன்னலம் மறுக்க நாளும்
பிறர்நலந் தனக்கு ழைக்க!
பொன்நலம் பெரிதே இல்லை;
புதுநாளைக் காண வேண்டும்
இன்னன வெல்லம் என்க!
இரவினில் தூங்கு முன்னே
என்நலம் தமிழர்க் கிந்நாள்
இழைத்தோம்என் றெண்ணிப் பார்க்க.

ஆயினும் தீமை செய்யும்
தமிழனைப் பொறுக்க; ஆனால்
சீஎன்று பகைவன் சொன்னால்
வேரினில் தீயைப் பெய்க
தூயராய்த் தமிழ ரெல்லாம்
ஒற்றுமை சூழ்க! சிங்கச்
சேயராய்ப் பொதுமைத் தொண்டு
கற்கண்டாய்ச் செய்து வாழ்க!

திராவிடர் கழகம் நல்ல
திருவரங் கத்தில் வெல்க!
இராவிடம் இல்லை என்ன
எங்கணும் தமிழ்மு ழங்க!

அராவுக மடமை தன்னை
'அறிவுல கம்' சிறந்த
திராவிடர், தமிழர் யாண்டும்
பல்லாண்டு சிறந்து வாழ்க!

அன்புள்ள தோழர் சுப்பையா அவர்கட்கு,

நலம் உண்டாக.

இதுபோலப் பல கழகங்கள் - கையெழுத்துச் செய்தித்தாள் நடத்துவதாக எழுதுவதுண்டு. நானும், கேட்டபடி அனுப்பிய துண்டு. ஒன்றையேனும் நான் கண்டதில்லை. அனுப்புவ தில்லை போலிருக்கிறது.

குருபிக்சர்ஸ் லிமிடெட் பிரஞ்சிந்தியா என இங்கு நிறுவப் பெற்றிருக்கும் சினிமா கம்பெனி "பாரதி வாழ்க்கை"யைப் படம் எடுக்க முயற்சி நடக்கிறது. ஷேர் கம்பெனி ஷேர் ஒன்று 100 ரூபாய். நடிப்புத் தெரிந்த - நாட்டியம் தெரிந்த (இதுவரை நடித்திராத) ஆடவர் பெண்டிர் தேவை. எவ்வகையிலாவது சேர்ந்து ஆதரவு தர உங்கள் கழகத்தில் வாலிபர் இருந்தால் எழுதுங்கள். கம்பெனி, சட்டதிட்டங்கள் தேவையிருந்தால் கேளுங்கள்.

திராவிட வாலிபர் கழகத் தோழர்கள் அனைவரும் வாழ்க. அனைவர்க்கும் இதைக் கூறுக.

- பாரதிதாசன்

குறிப்பு :

புதுவை 'பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் - ஆய்வு மையத்'தில் கவிஞரின் கையெழுத்து வடிவில் இப்பாடலும், இதனை அடுத்துவரும் மடலும் இடம்பெற்றுள்ளன. பாடலிலிருந்தும் மடலிலிருந்தும் திருவரங்கத் திராவிட வாலிபர் கழகத்தாரின் 'அறிவுலகம்' என்னும் கையெழுத்து இதழுக்குப் பாரதிதாசன் விடுத்த வாழ்த்துப்பா இது என அறிய முடிகிறது. மடல் எழுதிய நாள் குறிப்பிடப்படாத மடலில் 1942இல் பாரதியின் வாழ்க்கையைப் படமாக்க மேற்கொண்டுள்ள முயற்சிகள் பற்றிய செய்திகள், குறிப்பாகக் 'குருபிக்சர்ஸ்' பற்றிய குறிப்புகள் காணப்படுவதால் இவை எழுதப்பட்ட காலம் 1942 எனத் துணியலாம்.

- கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.285-286,
பாட்டுப் பறவைகள், ப.28

1942

95. எம் கொள்கை

ஹிட்லரின் எண்ணம் பலிக்காது - நம
தெல்லையில் நாஜிசம் செல்லாது
கஷ்டம் விளைத்திட ஜப்பானே - இங்குக்
காலைவைத் தாலுயிர் தப்பானே

கட்டவொண்ணாது முத்தாலி - தலை
காட்டவும் கூடுமோ இத்தாலி
கொட்டி முழக்கிடு போர்முரசே - நம்
கொள்கை முழக்கிடு போர்முரசே

ஹிட்லரிசத்தை விதைத்திடுவார் - அவர்
ஏழைகள் தம்மை வதைத்திடுவார்
கொட்டாப்புளிக் குள்ளர் ஜப்பானிசம் - லாபக்
கொள்ளையடிப்ப பதப் பப்பா நிசம்

தொட்டாற் சிணுங்கிகள் நாங்களில்லை - முன்
னூன்றிய காலைப்பின் வைப்பதில்லை
கொட்டி முழக்கிடு போர்முரசே - நம்
கொள்கை முழக்கிடு போர்முரசே

ஒற்றுமை உண்டு இந்த நாட்டினிலே - மிக
ஊக்கமுண்டு நெஞ்சவீட்டினிலே
வெற்றிகொள் வீரர்கள் வாழ்ந்தநிலம் - இது
வீராதிவீரரைக் கண்ட நிலம்

பெற்ற இந்நாட்டிற் பிறநாடு - வரின்
பின்னல்லவோ அறிவார்கேடு
கொற்றம் முழக்கிடு போர்முரசே - நம்
கொள்கை முழக்கிடு போர்முரசே

குறிப்பு :

பாரதிதாசன் கையெழுத்துவடிவில் தரப்பட்டுள்ள இப்பாடலின் இறுதியில்

தாக்குதல்

சராசரங்கள் எ.மெ
அதோ பகைவர் படைமுழக்கம்!
அங்குவிரைவில் நடப்போம்
அங்குவிரைவில் நடப்போம்.

என்னும் அடிகளையடுத்து சிதைந்த இரண்டு அடிகளுக்குப் பின்

பகைவருக்கா அன்றி நமக்கா
பகைமீது பாய்ந்தோம்
நாம் வாழ்ந்தோம்

என்று முடிகின்றது.

- பாரதிதாசன் இதழ்ப்பணிகள், ப.224-225க்கு இடையில் இணைப்பு

1942

96. ஜனநாயகம்

ஆட்சியிலே நல்லஆட்சி என்பது - ஜன
நாயக ஆட்சி அன்றோ அது
சூழ்ச்சியினால் அதை வீழ்த்தவரும் - ஜப்பான்
துஷ்டரை வீழ்த்தத் தொடுப்போம் போர்

தூங்கியிருந்த பிராஞ்சினையும் - அதன்
சொல்லஒண்ணாப் பெருமாண்பினையும் - பழி
வாங்கிய பொல்லாத ஜெர்மனியும் - குள்ள
வர்க்கமும் வாலாட்டுமோ இனியும்!

இந்தியர் உண்டிங்கு நாற்பதுகோ - டியர்
ஏய்த்திடும் குள்ளர்க் கிளைத்தவரோ?
வந்திருக்கும் நமதாங்கில நண்பர்க்கு
வல்லமை இல்லை எனுங் கருத்தோ.

குறிப்பு :

பாரதிதாசன் கையெழுத்து வடிவில் தரப்பட்டுள்ள இப்பாடல் முற்றுப்பெறவில்லை. இதனையடுத்து இரண்டு வரிகள் சிதைவோடு இடம்பெற்றுள்ளன.

- பாரதிதாசன் இதழ்ப்பணிகள், ப.224-225க்கு இடையில் இணைப்பு

1942

97. பாரத சேனை

மக்களின் சம்மதம் பெற்று நடத்திடும் ஆட்சி - அது
மாசற்ற தென்றுரைக்கும் ஜனநாயக ஆட்சி
முக்கியமாய் ஜனநாயகம் ஹிட்லரின் வைரி - அவன்
மூர்க்கம் தொலைப்பதுதான் அறியத்தக்க செய்தி
திக்குத் தெரியாத போக்கல்லவா அவன்போக்குப் - பெரும்
செக்கும் சிவலிங்கமும் ஒன்றுதான் தெருநாய்க்கே
இக்கணமே தொலைப்போம் அந்த ஜெர்மானியரை - முன்
னேறுமுன் னேறுமுன் னேறுது பாரதசேனை.

குறிப்பு :

இரண்டாம் உலகப்போரில் இட்லரை எதிர்த்து நேச நாடுகளின் படை முன்னேறிச் செல்வதைக் குறிப்பிடும் பாடல் இது. கவிஞரின் கையெழுத்து வடிவில் அமைந்த இதைப்போன்ற பல பாடல்கள் அச்சேறவில்லை என்று அறிய முடிகிறது.

- பாரதிதாசன் இதழ்ப் பணிகள், ப.215

1942

98. ஆங்கிலர் அறப்போர் வெற்றி முரசு

(ஆநந்தக் களிப்பு மெட்டு)

பல்லவி

வெற்றி முழக்கஞ்செய் முரசே நல்ல
வீரம் செறிந்தநம் ஆங்கில நாட்டின்
வெற்றி முழக்கஞ்செய் முரசே!

சரணம்

1. *சிற்றெறும்பின் சரம் போலே - அந்த*
ஜெர்மனியர்கள்வந் தாங்கிலர் மேலே
கற்றிடும் வித்தையைக் காட்டிப் - புவிக்
கலகம் விளைத்தனர் ஆத்திரம் மூட்டி (வெற்றி)

2. *நாஜிசம் என்னும்அ நீதி - ஜன*
நாயகத் துக்கது மிக்கவி ரோதி
தேசத்தை வாட்டும் வியாதி - அதைத்
தீர்த்திடும் ஆங்கிலர் தீரரென்றோதி (வெற்றி)

3. *மனிதத் தனத்தை மதித்தே - மக்கள்*
வாழ்வை உயர்த்திடும் சட்டம் விதித்தே
இனிமையில் ஆண்டிடும் தேசம் - அந்த
இங்கிலாந்துக் குண்டு வையத்தின் நேசம் (வெற்றி)

4. *நப்போலியன் இரு தோளும் - முன்பு*
ஞானமிலா ஜெர்மன் ஓச்சிய வாளும்
அப்போதும் ஆங்கிலர் கண்டார் - எனில்
இப்போதும் காண எழுந்தனர் என்றே (வெற்றி)

5. *தேச ஜனங்கள் விருப்பம் - ஒரு*
தீய மனிதனின் காலின் செருப்பாம்
நாஜியர் ஆட்சி விஷத்தைக் - கொல்ல
நானென்று மார்தட்டும் ஆங்கிலநாட்டின் (வெற்றி)

6. பல்கோடி மக்களை ஆளும் - பெரும்
பதவிக்குக் காரணம் நல்ல தயாளம்
பொல்லாத ஜெர்மனி மாளும் - அதன்
போக்குகள் யாவும் அதற்கடையாளம் (வெற்றி)

7. இங்கிலாந்தின் அறப்போரில் - நல்ல
இந்தியரின் துணை உள்ளதை நேரில்வி
ளங்கவைப் போமிந்தப் பாரில் - எனில்
வீழ்ந்தது ஜெர்மனி வீழ்ந்தது கோரி (வெற்றி)

8. நாட்டுக்கு நல்லது செய்தார் - எந்த
நாளும் நமக்குள்ள தீமை களைவார்
வீட்டுக்கு வீடாங்கிலர்க்கு - ஒரு
வீதம் கொடுப்பது நீதம் பயக்கும் (வெற்றி)

9. இன்றல்ல நேற்றல்ல நேசம் - நல்ல
இங்கிலாந்தோ பலநாள் சாவாசம்
நன்றி செலுத்த உத்தேசம் இதை
நாம் மறுத்தால் நமை நம்மனம் ஏசும் (வெற்றி)

10. ஜெர்மனியாரின் பதட்டம் - முற்றும்
திரிவில்லையெனில் யாருக்கும் நஷ்டம்
தர்மத்தின் விழியும் இருட்டும் - நாம்
தடையின்றி உதவுதல் நாம்கொண்ட திட்டம் (வெற்றி)

11. நாமுண்டு சிங்கங்கள் போலே - செல்வ
நாடுண்டு தோளுண்டு குன்றத்தைப் போலே
சீமையில் மன்னர்பி ரானார் - ஆட்சி
ஜெயமுறும் என்பதொர் நிச்சயமுண்டு (வெற்றி)

12. ஏதுண்டு ஜெர்மனி நாய்க்கு - இனி
எத்தனை நாளைக்கு ஜெர்மன் வீராப்பு?
காதுண்டு கேட்டிடும் வையம் - ஜெர்மனி
கரிவேகும் போதது பரிகாசம் செய்யும் (வெற்றி)

13. நானில மக்களுக் காக - பல
நாட்டின் சுதந்தரம் மீட்பதற்காக
மானம் நிலைப்பதற் காக - நின்று
மார்தட்டும் ஆங்கிலப் போர்ஒப்பினோம் நாம் (வெற்றி)

14. *ஆபத்திலே இந்த லோகம் - சிக்க*
ஆக்கிற்று ஜெர்மனி என்ன சந்தேகம்?
கோபித்த ஆங்கிலர் கையில் - நாம்
கொடுப்பது வையம் படைப்பதுவாகும் *(வெற்றி)*

குறிப்பு :

இரண்டாம் உலகப் போரின்போது செர்மனி நாசிப் படையினை எதிர்த்து அதன் வீழ்ச்சியையும் ஆங்கிலேயரின் வெற்றியையும் பாடுபொருளாகக் கொண்ட இப்பாடல் பாவேந்தரின் கையெழுத்து வடிவில் புதுவை பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் - ஆய்வுமையத்தில் உள்ளது.

'சுபானு' சித்திரை (ஏப்ரல் 1943)

99. புத்தாண்டு வாழ்த்து

அன்பு பெருகவும் அறம்பல ஓங்கவும்
இன்பப் புதிய யாண்டுநீ வருக!
வருக! எம் வாழ்வில் வண்மை சேர்க்க
வருக புதிய வாழ்வு மல்க!
தமிழிசைச் சிலம்பின் அமுது பாய்ச்சி
இமைதொறும் கயல்விழி இன்பம் பெருக்கிக்
கொடியிடை அசையக் கூத்துத் தமிழால்
அடியெடுத் தூன்றி அழகின் கலையாய்ச்
'சுபானு' என்று தோன்றினை - ஓடி
வருக! ஓடி வருக! வாழி!
முந்நூற் றறுபதுன் முத்துச் சிலம்படி
ஒவ்வொன் றாக ஊன்றிநீ "உமக்குச்
செம்மை, செம்மை செம்மை" என்று
நடத்துவர் எம்மனோர் நல்வாழ்வு
தொடங்கும் வண்ணம் தூயோய் வாழியே!

குறிப்பு :

1944 தொடங்கிப் பாரதிதாசன் நூல்களை வெளியிட்டும் பாரதிதாசனை 'ஆதரவாளர் : கவியரசர் பாரதிதாசன் அவர்கள்' எனக் குறிப்பிட்டு 'முல்லை' இதழ் (1946) நடத்தியும் பெருமை சேர்த்த முல்லை முத்தையா அவர்கள் புத்தாண்டு வாழ்த்து அச்சிட்டு வழங்கக் கருதிப் பாரதிதாசனிடம் கேட்டுப் பெற்ற பாடல் இது.

- பாவேந்தருக்குப் புகழ் அஞ்சலி, ப.183-184

1943 சூலை - ஆகஸ்டு

கருத்துரைப் பாட்டு

"குறுந்தொகை முதலிய பழந்தமிழ் நூற்களில் உள்ள பாடல்களின் கருத்துக்களை வைத்து, எளிய நடையில் பாட்டெழுதி வெளியிடுவதால் நன்மை உண்டாகும். அக்கருத்துக்கள் மக்களிடை உயர்ந்த எண்ணங்களை, கலையுணர்வை, அன்பை, தமிழர் அறத்தை, மறத்தன்மையை உண்டாக்கும். பண்டைப் பாடல்களின் கருத்துரையைக் கொண்டு பாடுதலின், 'கருத்துரைப் பாடல்' எனப் பெயர் பெற்றது. ஓவியத்துப் பூஞ்சோலை காட்டி மக்களை உண்மைப் பூஞ்சோலை சேர்க்கலாம். அன்றோ? இக்கருத்துரைப் பாடலால், மக்களைக் கருதினார் பாடலில் சேர்க்கலாம் என்பது என் எண்ணம்."

- கருத்துரைப் பாடல்களுக்கு முன் குறிப்பாகச் 'சக்தி' இதழில் (சுபானு ஆடி) பாரதிதாசன் அளித்துள்ளது.

100. தலைவன் கூற்று

(பேரறிவுடைய நீ ஒருத்தியால் உள்ளம் உடைவது அழகா என்று இடித்துரைத்த பாங்கனை நோக்கித் தலைவியின் இயல்பையும் வனப்பையும் கூறி "இத்தகையாளை மறப்பதெப்படி" என்று தலைவன் கூறியது.)

விரைந்து தழுவுவாள்; விரும்பும் அழகினாள்;
கொடிபோல் இடையினாள்; நெடிய கூந்தலாள்;
ஒருபுறம் மேய்ந்த விரைந்து சுரக்குந்
தூய்தாம் பசுவின் துளங்குதலைக் கன்று
தாய்கா ணுதற்குத் தான்விரும் புதல்போல்
விருப்புடன் நோக்குவாள்; எவ்வாறு
இருப்பேன் யானே அவளை மறந்தே!

- குறுந்தொகை 132ஆம் செய்யுள்.

101. தோழி கூற்று

(தலைவன் பிரிய எண்ணியிருப்பதையறிந்து வேறுபட்ட தலைவியை நோக்கித் தோழி கூறியது)

ஆட வர்க்குயிர் கேடிலாத் தொழிலே,
பீடுறு மகளிர்க் காடவரே உயிர்,
என, உரைத்தவரும் அவரே,
உனைவிட் டகலார், இனிநீ அழாதே!

- குறுந்தொகை 135ஆம் செய்யுள்

102. தோழி கூற்று

(முதல்நாள் குறிப்பிட்ட இடத்தே வந்து தலைவியைக் காணத்தவறிய தலைவன், மறுநாள் வந்து அண்மையில் நிற்பதையறிந்த தோழி "நேற்றிரவு தலைவர் வரவை எதிர்நோக்கித் துயிலாதிருந்தோம்" என்று அவன் காதில் விழக் கூறியது.)

எம்வீட் டயலில் ஏழ்குன் றின்[1] மேல்
இலைமயி லடிபோலி ருக்கும் நொச்சியின்
அழகிய மென்கிளை ஆர்ந்த பூக்கள்
விழும்ஒலி கேட்ட வண்ணம்
விழித்துக் கிடந்தோம் ஊர்உறங் கையிலே.

- குறுந்தொகை 138ஆம் செய்யுள்.

1. ஏழ்குன்று: அப்பெயருள்ள குன்று

குறிப்பு :

கவிஞரின் "அகம் புறம் பற்றிய பழந்தமிழ்ச் செய்யுட்களின் உரையாக அமைந்த பாட்டுகள் பல" 'துறைப்பாடல்கள்' என்னும் பிரிவில் 'தேனருவி'யில் இணைக்கப்பட்டுள்ளன. திணைக் குறிப்புகளுடன் பழந்தமிழ்ச் செய்யுள்களை எளிமைப்படுத்தும் பாடல்கள் அவை. 'பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதி'யிலும் (1952), 'கருத்துரைப்பாட்டு' எனும் பொதுத்தலைப்பில் மூன்று குறுந்தொகைப் பாடல்கள் எளிமையாக்கம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் இணைத்து எண்ணத்தக்கன.

- 'சக்தி' சுபானு ஆடி (1943 சூலை - ஆகஸ்டு), ப.289-290

28.8.43

103. திரு.வி.க. மணிவிழா வாழ்த்து

பழகுதென் புதுவைப் பாலைய சாமி
அழகு மடத்தில் அறிஞர் திரு.வி.க.
சொற்பெருக் கிடையில் சொன்ன தாவது,
"நான்ஓர் முசிலிம் நண்பர் வீட்டில்
ஆன்நெய் மணக்க அறுசுவை யுணவை
உண்டேன். மக்களில் உயர்வு தாழ்வுகள்
எண்டிசை யுலகில் எங்கும் இல்லை"

ஃ ஃ ஃ

மற்றும், அறிஞர் வண்டமிழ்ச் சிலம்பின்
சொற்சுவை தன்னைச் சுளைசுளை யாகச்
செவியினில் ஊட்டினர் கவிதை உரித்தே.

ஃ ஃ ஃ

இச்சொற் பெருக்கை இனிதுகேட் டிருந்த
வா.வே.சு. சீனி வாசாச் சாரியார்
பக்கத் திருந்த பாரதி யார்உளம்
கண்ட மகிழ்ச்சிக்குக் கரையே இல்லை.

எழுந்தெழுந்து விழுந்துகை தட்டினார்
"செந்தமிழ் உணர்வும் சீர்தி ருத்தமும்
இந்த நாட்டுமுன் னேற்றத் திற்குஉயிர்
இது பாரதியார் எண்ண மன்றோ?

ஃ ஃ ஃ

மணவழக னார்க்கு வண்டமிழ் நாட்டில்
இணையென எவரும் இல்லை என்று
பாரதியார் இருபத்தைந் தாண்டுமுன்
ஊர திர்ந்திட உரைத்தார் புதுவையில்

ஃ ஃ ஃ

ஏழெட் டாண்டுமுன் என்தலைவராம்
ஈ.வே.ரா. அமர்ந்திருந்த வீட்டில்
கலியாண சுந்தரக் கவிஞர் வந்தார்
காதற் புறாக்கள் கனிந்துண்ட தீனியை
மாற்றிக் கொள்ளும் வழக்கம் போலப்
பன்மொழி மாற்றிப் பருகினார் இருவரும்
கலியாண சுந்தரர் கழறினார் அப்போது
நாத்தீ கத்தை நல்ல சைவம்
எதிர்க்க வில்லை; எண்பிப் பேனிதை!
தெளிந்த அறிஞர் திரு.வி.க. என்பதை
உளங்கை நெல்லிபோல் உணர்ந்தேன் அன்றுநான்
நாவினாற் புதுமை நடாத்துவார் கோவையிற்
கோவாப் பண்டிதக் குறுமணிகள் போல்
இளைஞர் முற்போக்கை எரிக்க நினைக்கும்
களிமுகம் கலியாண சுந்தரர்க் கில்லை,
மைந்தர் முற்போக்கைத் தந்தை மகிழ்தல்போல்
இளைஞர் முன்னோக்கி எடுத்து வைக்கும்
ஒவ்வோர் அடிக்கும் உவகை கொள்ளுவார்!

ஃ ஃ ஃ

கம்பனை நெருங்கும் கையிருப் பின்றிக்
கம்பன்நூல் மாற்றியும், கவிதை நீக்கியும்
நற்புகழ் தேடும் நரிபோ லன்றிக்
கலியாண சுந்தரர் கட்டுரை வன்மையால்
புலிஎன்று புலவரால் புகழப் பெற்றார்.

ஃ ஃ ஃ

செல்வ ரிடத்தில் செந்தமி ழிசைதான்
வல்ல தென்று வாலைக் குழைத்தும்,
தில்லையில், தமிழிசை இல்லை என்றும்
சொல்லும் வஞ்சகர் சூழுமிந் நாட்டில்
மணவ ழகனார் வண்டமிழ் நாட்டின்
துணையாய்ப் பற்பல துறைகளில் மிகுதியும்
நேர்மையாய் உழைக்கு சீர்மை யுடையவர்.

ஃ ஃ ஃ

நல்வினவு தெரிந்த நாள்முதல் இதுவரை
அல்லும் பகலும் ஆவி, உடல்பொருள்
நாட்டுக் கென்று நல்கும் நோக்கொடும்
ஈட்டுதல் அறத்தால் எய்தும் இன்பமென்றும்
அறிஞர் இருமுப் பானாண் டாயுள்
நிறையப் பெற்றார் நீடு வாழ்க!
தமிழரின் பேரால் சாற்று கின்றேன்.

கலியாண சுந்தரர் கடிமண நாளில்
மலர்நிறை கட்டிலில் மங்கையின் புதுச்சுவைக்குத்
துடித்த இளமை, சேரனின்
படைக்கலம் போல்அவர் படைத்து வாழ்கவே.

குறிப்பு :

"செந்தமிழ்த் திருவாரூர் - மடப்புரத்தில் நிகழ்வுற்ற திரு.வி.க. அறுபதாண்டு நிறைவு மணிவிழாவன்று புதுவை வாழ் புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் அன்பால் அளித்த இருமுப்பானாண்டு நிறைவு வாழ்த்து" என்று தலைப்பிடப் பட்டு வாழ்த்துப்பா வழங்கப்பட்டுள்ளது. பாடலின் இறுதியில் "மடப்புரம் - திருவாரூர் *28.8.1943*" இடமும் நாளும் குறிக்கப்பட்டுள்ளது. - இவ்வாழ்த்து புதுவை பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் - ஆய்வு மையத்தில் உள்ளது.

104. திருமணத்தில் தலைமை வகித்த பெரியார்க்கு அளித்த வரவேற்பு

தமிழரின் மாபெருந் தலைவரே வருக!
அமுத மழையே அன்பே வருக!
திராவிடர் தலைமைப் பெரியீர் வருக!
இராதிடர் அஞ்சேல் என்றீர் வருக!
அறிஞர்க் கறிவை அளித்தீர் வருக!
நெறிகளில் உயர்நெறி நிகழ்த்தினீர் வருக!
பாவலர் இருட்குப் பகலே வருக!
நாவலர் நல்வழி நவின்றீர் வருக!
அரசியல் நிபுணர்க் கரசே வருக!
சுரம்நிகர் ஏழையர் தொண்டரே வருக!
தாழ்ந்தோம் என்று சலித்தநற் றமிழர்
வாழ்ந்தோம் என்று மார்தட்டி எழ
மக்கள் நிகர்என வண்முரச சதிர்த்து
மிக்கிருள் கடிந்த விரிகதிர் வருக!
சாதிஎன்பதின் சல்லிவெர்[1] அனைத்தும்
தேதிக்கொன்றாய்த் தீர்த்தீர் வருக!
அமியும் அடிமேல் அடிக்க நகருமாம்
சமயம் நகரச் சாடி னீர் வருக!
கண்களும் வாழ்வின் கவிதையும் போன்ற
பெண்களின் விடுதலை பேணினீர் வருக!
பன்னூற் றாண்டுகள் இன்னலிற் கழிய
இந்நூற்றாண்டின் இன்பே வருக!
பன்னாடுக ளெமைப் பழிகூற நீவிர்
இந்நா டெழில்பெற எய்தினிர் வருக!
ஆத்திகத்தையும் சாத்திரத்தையும்
நாத்திறத்தோரே காத்தினர்[2] எனினும்
மாந்தரின் அறிவினை மாய்க்குமேல் அவைகள்
தீர்ந்தன எனச்செயல் செய்தீர் வருக!
தரகரைக் கொண்டதும் தன்னலம் கொண்டதும்
ஒருவனை ஏழையாய் ஒருவனைச் செல்வனாய்ப்
படைத்ததாய்ச் சொல்லப் படுவதும் கடவுளின்
அடையாளங்கள் ஆமோ என்று

வறியர்க்குண்மை வகுத்தீர் வருக!
அறிஞரின் சீற்றம் அடக்கினீர் வருக!
பழநூற் பேரால் பாவலர் பண்டிதர்
எழிலுறு புலவர் எனவெளி வருவோர்
புதுநூற்செய்யும் புலமை.இலாமையால்
அதுநூல் அதுகலை அதனாற் பிழைப்பெனும்
கூனல் உள்ளம் கொண்டவர்க் கெல்லாம்
மானம் உணர்த்த வல்லீர் வருக!
பயனுறு வாழ்வின் பாதை காட்டும்
சுய மரியாதை சொன்னீர் வருக!
நாவலந் தீவின் நற்பயன் ஆன
ஈ.வே. ராஎம் இறையே வருகவே.
துன்புறு சுசீலா இராம மூர்த்தி
அன்புது [3] திருமணத் தலைப்பினை ஏற்றுப்
பலப்பல நாட்டுப் பணிகட்கிடையில்
அலுப்பை நோக்கா தையா வந்தனிர்
எங்கள் நன்றி எங்கள் வணக்கம்
தங்கட் குரியன தமிழ் காத்தவரே
மடமையும் மூட வழக்கமும் மக்களின்
கடமையாய்க் கிடந்ததைக் கட்டொடு வேரோடு
சில்லாண்டிற் சாய்த்த ராமசாமி
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவே!

குறிப்பு :

மற்றவர்கட்காக வாழ்த்து முதலியன எழுதிக் கொடுக்கும் இயல்புடையவர் கவிஞர். இப்பாடல் புதுவை கே.நாதமுனிக் காக எழுதப்பட்டது. பாடலின் இறுதியில் 'பாரதிதாசன் எழுதியது' என்று குறிக்கப்பட்டுள்ளது. திருமண நாள் 16.9.43

"திருவளர் சுசீலா தேவி இராமமூர்த்தி திருமணத்தில் தலைமை வகித்த தமிழர் தலைவர் ஈ.வெ.ராமசாமிப் பெரியார்க்கு அளித்த வரவேற்பு" என்பது வரவேற்பு இதழில் இடம்பெற்ற முழுத் தலைப்பு - புதுவை பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் - ஆய்வு மையத்தினின்று பெற்றது.

1. 'சல்லிவேர்' என இருத்தல் வேண்டும்
2. 'காத்தனர்' என இருத்தல் வேண்டும்
3. 'அன்புறு' என இருத்தல் வேண்டும்

16.9.43

105. கானாடுகாத்தான் வை.சு.ஷண்முகம் மஞ்சுளாபாய் அவர்கட்கு வரவேற்பு

நயனுறும் ஈ.வெ.ரா. இந் நாட்டில்
சுயமரி யாதைத் தூய்இயக் கத்தை
வித்திய நாளே விளைந்தநற் றொண்டரே
அத்திரு இயக்க அங்கத் தினரே!
போன இந்நாட்டுப் புலமையைக் கொணர
ஞான சூரியன் நல்கிய பெரியீர்!
செட்டிமார் நாட்டில் சேர்புத் தொளிக்கு
மட்டிலா துழைத்த வை.சு.ஷண்முகத்
தறுகணாளரே தமிழன் துணையே!
உறுபுகழ் செல்வம் உடையீர் வருக
உலப்புறும் இந்நா டுலகில் முன்னேறக்
கலப்பு மணமே கடிதினில் தேவை
என்று தாங்கள் எண்ணி உலகுக்கு
நன்று வழிகாட்ட நாடி, அழகிய
பஞ்சுறு மெல்லடிப் பாவை யான
மஞ்சுளா பாயை மணந்து வாழ்கின்றீர்
எத்தனை தொலைவு! மற்றெத்தனை தொல்லை
அத்தனைக்கும் அழியா உளத்தொடும்
எழில் சுசீலைக்கும், இராம மூர்த்திக்கும்
இயலும் மணத்தில் எழிலைச் செய்ய
எம்அழைப் பினையும் ஏற்று வந்தீர்!
நன்றி யன்புசேர் ஐய நன்றி!
நீங்கள் இருவரும் இன்பம்
தாங்கி மக்கள் பெற்று வாழியவே!

குறிப்பு :

முந்தையப் பாடலைப் போலவே 'புதுவை கேநாதமுனி'க் காகப் 'பாரதிதாசன் எழுதியது' இப்பாடல். "உயர்திரு சுசீலாதேவி இராமமூர்த்தி திருமணத்தில் சொற்பெருக்காற்றிய கானாடுகாத்தான் வை.சு.சண்முகம் மஞ்சுளாபாய் அவர்கட்கு அளித்த வரவேற்பு" என்பது வரவேற்பு இதழில் இடம்பெற்ற முழுத்தலைப்பு - 16.3.49 திருமண நாள் புதுவை பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் - ஆய்வு மையத்தில் பெற்றது.

15.12.43

106. 'தமிழ்வாழ்க' - நூற் சிறப்புரை

தமிழ்வாழ்க என்னுமோர் நூலை ஈண்டுத்
தமிழரெலாம் வாழுமா றியற்றித் தந்தார்
தமிழ்வாழ்க என்னுமிதைத் தமிழர் யாரும்
தம்பழமை. தம்பெருமை தமதோர் ஆட்சி
அமைப்புமுறை எலாம் அங்கை நெல்லி போல
அறிந்துய்ய வேண்டுமெனும் அருள்மேற் கொண்டார்
தமிழர்பெருங் குடிவந்தார் நாகர் கோயில்
தரும்அப்பாத் துரையெனும் பே ரறிஞர் கண்டீர்

இந்தியென்றும் தெலுங்கென்றும் ஆரி யந்தான்
இங்கிருக்க வேண்டுமென்றும் பலபேர் இங்கே
மந்தியென்றும் சும்மாவி ராமை போலே
வாய்பதைத்துக் கிடக்கின்ற இந்த நாளில்
குந்தியென்றும் தூங்காமல், தமிழ், தெலுங்கு,
கூறும்வட மொழிஆங்கி லத்தோ டிந்தி
முந்தியென்றும் இவர்போலே இல்லை என்ன
முழுதாய்ந்த திருஅப்பாத் துரைந மக்கே

ஆய்ந்தளித்த தமிழ்வாழ்க எனும்நூ லுக்கோ
அகம்கனிந்து வாழ்த்திடுவோம் அவர்வாழ் கென்றே
ஓய்ந்தலுத்த தமிழர்க்கும் தமிழுண் ணாமல்
உயிர்சுமக்கும் மனிதருக்கும், இந்த நாட்டில்
சாய்ந்திளிக்கும் நரிகட்கும் இந்நூற் றாண்டு
தந்தஅப் பாத்துரையார் தந்த நூலால்
வாய்ந்தளிக்கும் நல்லுணர்வு! மெய்யே! மெய்யே!
வாழ்ந்ததுசெந் தமிழ்! தமிழர் வாழ்ந்தார் நன்றே.

குறிப்பு :

பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துரைப் பிள்ளையின் 'தமிழ் வாழ்க' என்னும் நூலுக்கு 15.12.43 அன்று பாரதிதாசன் நல்கிய சிறப்புரைப் பா.

107. கூவிஅழை கண்ணனையே!

கண்ணபிரான் என்னகத்தில் காலைவைத்த நாள்முதலாய்
எண்ணமெலாம் அன்னவன்மேல் - கிளியே
ஏகியபின் மீளவில்லை.
பண்மகிழும் கண்ணனின்வாய் பறித்தெடுத்த தாமரையோ
கண்மகிழ்ந்து போகுதடி - கிளியே
கட்டழகன் காட்சியினால்.

மெய்சிலிர்க்கு தேடிகண்ணன் வேய்ங்குழலை நானினைத்தால்
கைசிலிர்க்கும் உயிர்சிலிர்க்கும் - கிளியே
கண்ணனென்ற பேருரைத்தால்.
வையம்புகழ் கண்ணனொடு வாழுமின்ப வாழ்க்கையல்லால்
உய்யும்நெறி காணுகிலேன் - கிளியே
உண்மைஇது பொய்யல்லவே.

ஊர்முழுதும் கண்ணபிரான் ஓவியமே காணுகின்றேன்
பார்முழுதும் அப்பெருமான் - கிளியே
பண்ணும்விளை யாடலடி
ஆர்சொல்லி யனுப்பிடுவார் ஆசைக்கண்ணன் வந்தெனது
பேர்சொல்லி யழைத்துவிட்டால் - கிளியே
பெற்றபெரும் பேறதுவே.

ஆவிநிகர் கண்ணனுக்கே அன்பிருந்தால் வந்தெனையே
பூவிரலால் தொட்டுவிட்டால் - கிளியே
போதுமடி வாழ்விலின்பம்.
தூவிவைத்த பஞ்சணைப்பூந் தோடழிந்து வாடுதடி
கூவிஅழை கண்ணனையே - கிளியே
கோதையினாள் வாழும்படி.

குறிப்பு :

பாரதிதாசன் பகுத்தறிவு நெறியில் பயணந் தொடங்கிய பின்பும் அன்புக்குரிய பிறரின் வேண்டுகோளை மறுக்காமல் கடவுள் பேரில் பாடல்களையும் திருமண வாழ்த்துப் பாடல் களையும் மெட்டுக்கேற்ற பாடல்களையும் எழுதிக் கொடுத் துள்ளார். இப்பாடலும் அவ்வாறு எழுதப்பட்டதென்பதை

"இசை ஆசிரியர் ஒருவர் மிகவும் அச்சத்தோடு கண்ணன் பேரில் கிளிக்கண்ணி ஒன்றைக் கேட்டார்; பலமுறை அவர் வற்புறுத்தியதை மறுத்திட வொண்ணாமல்:

'கண்ணனவன் என்னகத்தில்
காலைவைத்த நாள்முதலாய்
எண்ணமெலாம் அன்னவன்மேல் - கிளியே
ஏகியபின் மீளவில்லை.

என்று தொடங்கிப் பத்துக் கண்ணிகளை எழுதிக் கொடுத்தார் கவிஞர்" என்னும் மன்னர்மன்னனின் கூற்று (பாரதிதாசன் குயில் 10.10.67, ப.12) புலப்படுத்துகின்றது.

இதே பாடல் 'கண்மகிழ்ந்து போகுதடி - கிளியே என்று பழம்பாடல் ஒன்று பாவேந்தர் பாடக்கேட்டுத் தலை நிமிர்கிறது' என்னும் குறிப்போடு பாரதிதாசனுக்கு நெருக்க மானவராகிய நாவரசு, பின்னாளில் நடத்திய 'பைங்கிளி' என்னும் திங்களிதழில் (சித்திரை 13.4.64) 'கண் மகிழ்ந்து போகுதடி கிளியே' - என்னும் தலைப்பு மாற்றத்துடன், 'கண்ணபிரான்' என்னும்சொல்லை இரண்டு இடங்களிலும் 'கண்ணனவன்' என மாற்றியும் வெளியிட்டுள்ளார்.

- பிரசண்ட விகடன் பொங்கல்மலர், ஏப்ரல் 1944, ப.6

1944

108. திருவரங்கனார்க்கு இரங்கல்

திருவரங்கம் தமிழர்அங்கம் துடிதுடிக்கச்
சீர்இயற்கை யாம்அரங்கம் சேர்ந்திட் டாரோ!
பெருவரங்கம் தமிழ்க்கென்று பேசும் சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நாடி
வருவர்அங்கம் என்படுமோ! வையம் வாடி
வண்தமிழ்நா டுற்றமறை மலைஎம் அண்ணல்
ஒருவர்அங்கம் தம்மருகர்க் காக நொந்தால்
உயர்தனிச்செந் தமிழணங்கும் உயிர்நை வாளே!

மலைவிளக்காய்த் தமிழகத்து வீற்றி ருக்கும்
மறைமலைப்பே ரடிகட்கு மகளா ராய், நற்
கலைவிளக்காய்த் 'தனித்தமிழே இயங்கும்' என்னும்
காட்டுக்கோர் அணையாத விளக்காய் எங்கள்
நிலைவிளக்க உடன்பிறந்தா ராய்அ மைந்த
நீலாம்பி கையாரின் உளத்தில் இந்நாள்
இலைவிளக்கென் றாயிற்றோ திருவ ரங்கர்
இருப்பரெனில் இறப்புலகு சிறப்பெய் தாதோ?

கமழ்சைவ சித்தாந்த நூற்ப திப்புக்
கழகத்தின் கண்ணான திருவ ரங்கர்
அமிழ்வித்து நமைத்துயரில் சென்றார் ஆதல்
அருந்துணையைப் பெருந்தமிழ்த்தாய் இழந்தாள், மேலும்
திமிர்இந்தி போக்கற்குச் சிறையும் சென்ற
செழியுமறைத் திருநாவுக் கரச ரென்னும்
தமிழ்காத்தார், மைத்துனரை இழந்தார் நாமும்
தலைசிறந்த தோழரையே இழந்தோம் அன்றோ!

செந்தேனும் பொற்குடமும் எனமேல் நாட்டார்
திகழ்நூலும் அழகுமென வெளியிட் டார்கள்
நந்தமிழ்நூல் அதனினும்பன் மடங்காய்த் தோன்ற
நன்றுழைக்கும் கழகத்தின் முகவ ரான[1]
முந்தறிஞர்[2] சுப்பைய னாரோ, தம்மில்
மூத்தவராம் திருவரங்கர் தமைஇ ழந்து
பைந்தமிழ்நூற் கழகத்தின் அமைச்சை யுந்தாம்
பறிகொடுத்தால் அவர்நெஞ்சு பதைத்தி டாதோ?

வெல்வேலும் மறைவதுவோ! படைவீ டிந்நாள்
வில்லைத்தான் இழப்பதுவோ! தமிழ்எ திர்ப்போர்
சொல்வேலி னால்எதிர்த்துச் சோர்வு பெற்றும்
சூழ்ச்சிவேல் எறிகின்ற இந்நாள், எங்கள்
நெல்வேலித் திருவரங்க மறவர் தம்மை
நெடுந்தமிழ்நா டிழப்பதுவோ! அவரின்[3] உற்றார்
பல்லோர்க்கும் யாம்கொண்ட உடன்துன் பத்தைப்
பகர்கின்றோம்! திருவரங்க னார்பேர்வாழி!

குறிப்பு :

மறைமலையடிகளின் மருகரான வ.திருவரங்கனார் 1944 ஏப்ரல் திங்கள் 28ஆம் நாள் மறைவுற்றார். அவரின் தமிழ்த் தொண்டினை எண்ணிப் பாவேந்தர் எழுதிய இரங்கற்பா.

வே.:
1. முதல்வரான (க.கு.)
2. மூதறிஞர் (க.கு.)
3. இவரின் (க.கு.)

- **கழக அமைச்சர் திருவரங்கர் வரலாறு, ப.136-137**
கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.379-380

1944

109. எங்கள் ஊரில்...

பூவிருக்கும்; தேனிருக்கும்; மணம்இ ருக்கும்
பொடியிருக்கும், வண்டுகள் பண்பா டிடும்பூங்
காவிருக்கும்; குளிர்இருக்கும்; தென்றல் வீசக்
கனன்றிருக்கும் வெளியனைத்தும் குளிர்ந்தி ருக்கும்
நாவிருக்கும் செந்தமிழோ டிசைஇ ருக்கும்
நவின்றிருக்கும் தொடர்மொழியிற் பொருள்செ றிந்த
பாவிருக்கும்! நெஞ்சிலெல்லாம் அன்பி ருக்கும்
பல்லோர்வாழ் எம்புதுவை நல்ல ஊரில்!

அலையிருக்கும் கடற்கரையில் அழகி ருக்கும்!
அடல்இருக்கும் தோள்மறவர் படைஇ ருக்கும்!
"இலை" "இருக்கும்" எனஎண்ணா திருக்கும் வண்ணம்
எவரிடத்தும் இருக்கும்அருள், ஈகை, வன்மை;
தொலைஇருக்கும் அறிவான நிலையிற் சேர்க்கும்
துறைதோறும் நிறைமை [1] வாய்ந் தோர் [2] சூழ்ந்த
கலையிருக்கும் நிலையங்கள் பலஇ ருக்கும்
காட்சிதரும் எம்புதுவை மாட்சி ஊரில்.

குறிப்பு :

புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள 'பாரதிதாசனின் தேர்ந்தெடுத்த பாடல்கள்' என்னும் ஆங்கில மொழியாக்க நூலில் முதல் பாடலாக இப்பாடல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் 'தாரண' *(1944)* ஆண்டில் புதுச்சேரியிலிருந்து கையெழுத்து வடிவில் வந்த வெளியீடு ஒன்றில் இப்பாடல் இடம்பெற்றிருந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. இக்குறிப்பு மன்னர்மன்னன் அளித்தது.

1. 'திறமை' என இருப்பின் நன்று.
2. ஓரசைக்குறைவினால் ஓசையில் சீர்மையில்லை
Bharathidasan selected Poems (Translated in to English) - p.2.

- புதுச்சேரியைப் பாருங்கள், ப.3

110. அன்பழகன் - வெற்றிச்செல்வி திருமண வாழ்த்து

நன்றாண்ட மூவேந்தர் நாகரிக மேமாற்றி
வென்றாண்ட ஆரியத்தை வென்றாளத் தோன்றியவர்,
குன்றா மறவக் குரிசிலார் அன்பழகர்
என்றோழர் என்னல் எனக்குப் பெருமையதே!

திருநின்ற என்றன் தமிழகத்துச் சீர்த்தி
உருநின் றழியாமே ஓம்புபடை கூட்டி
வருகின்றார் அன்பழகர் என்றொருநாள் கேட்டு!
விரிகின்ற செந்தமிழ்க்கு வெற்றிஇனி என்றேனே!

மண்டு புதுநினைவு வாயூறும் மாப்புலவர்
கண்டதமிழ் நாட்டில் கருத்திருண்டு கெட்டொழியும்
நொண்டிப் பசங்களின் நோக்கழிக்க அன்பழகர்
தண்டமிழ் பேசித் தமிழர்நலம் காத்தாரே!

பாடுந் தமிழ்மகளைப் பார்ப்பனற்குக் கூட்டிவைத்த
பேடியினைக் 'கம்பன்', 'கலைஞன்' என்று பேசுமிந்நாள்
நாடு முழுதும் உரைபெருக்கும் அன்பழகர்
பீடுபிறர் பேசநான் பெற்றமகிழ் சொல்லரிதே!

பன்மொழியில் பல்கலையில் ஆய்வும் பழந்தமிழாம்
பொன்மொழியைத் தம்முயிராய்ப் போற்றும் பெருமாண்பும்
இன்மொழியில் நாட்டின் இருளகற்றும் நற்றிறனும்
என்மொழிவேன்! அன்பழகர் இந்நாட்டின் பொன்னணியே!

பற்றலரை வீழ்த்தும் பகுத்தறிவார் அன்பழகர்
பெற்றி யறிந்து, பிழிந்தபழச் சாற்றுமொழி
வெற்றி மகளார் விரும்புவதும் மேவுவதும்
முற்றுமியல் பென்று முழங்கும்என் முத்தமிழே!

வெல்லும் பகுத்தறிவும் காதல் விளைமணமும்,
நல்லவெனக் காட்டிவைத்த நம்பெரியார் நாட்டினிலே
கல்வி அழகோடு கட்டழகும் வாய்ந்தவெற்றிச்
செல்வியரின் விண்ணப்பம் அன்பழகின் தேனன்றோ.

வாழியவே வாழியவே வெற்றியினார்! அன்பழகர்!
வாழியவே இந்நாள்போல் என்றும் மணமக்கள்!
ஆழிநேர் அன்னாரின் அன்புநனி வாழியவே
சூழியவே நல்லறமே தோய்கநல் லின்பமே!

திருப்பும் முகத்தினுக்குக் காத்திருந்து சிந்தும்
சிரிப்பைச் சிரிப்பால் வரவேற்போர், காதற்
கருப்பஞ்சா றுண்ணக் கருதின், நடுவில்
இருப்புச் சுவரும் தடையாவ தில்லையே.

பொன்பழகும் செம்மணிநேர் வெற்றியெனும் பூவையரும்
அன்பழகும் காதல் அழகுமணம் பெற்றஇந்நாள்
இன்பழக பெற்ற திளமை அழகுபெற்ற(து)
என்பழ நாடும் அழகுபெற்ற தென்பேனே!

ஒத்த உளமுடையார் வெற்றியினார் அன்பழகர்
முத்தமிழ் வையத்து முன்வைக்கப் பிள்ளைகளும்
புத்தம் புதுக்கொள்கை பூரிக்கப் பேரர்களும்
மெத்தவும் பெற்றுநனி மேன்மையுற்று வாழியவே.

குறிப்பு :

திரு. க.அன்பழகன் 21.2.45ஆம் நாள் நடைபெறவுள்ள தனது திருமணத்துக்கு வாழ்த்தனுப்ப வேண்டுமென்றும் அதனை அச்சிட்டு வழங்கும் வகையில் முன்னரே அனுப்பித்தர வேண்டுமென்றும் **15.2.45ஆம் நாள் எழுதிய மடலுக்கிணங்கிப்** பாரதிதாசன் விருப்புடன் விடுத்த வாழ்த்துப்பாடல். 'இவ்வாழ்த்துக் கவிதை முதலில் **'திராவிட நாடு' இதழிலும்** (ஞாயிறு வெளியீடு, 18.3.45) அடுத்துக் **'கறுப்புக் குயிலின் நெருப்புக் குரலி'லும்** *(ப. 381, 382)*, அடுத்து, **'பேராசிரியர் பவளவிழா மலரி'லும்** *(1997)*, பின்னர் **'இனமானப் பேராசிரியர் க.அன்பழகன் பவழமாலை'த்** *(1998)* தொடக்கத்திலும் இடம்பெற்றுள்ளது. நான்கிலும் பாக்கள் சில விடப்பட்டுள்ளன. அவை:

'பாடுந் தமிழ்மகளை', 'வெல்லும் பகுத்தறிவும்', 'வாழியவே வாழியவே', 'திருப்பும் முகத்தினுக்கு', 'பொன்பழகும் செம்மணிநேர்' எனத் தொடங்கும் ஐந்து பாக்களும் 'கறுப்புக் குயிலின் நெருப்புக் குரலி'லும் 'பவழமாலை'யிலும் இடம்பெறவில்லை. 'திருப்பும் முகத்தினுக்கு', 'பொன்பழகும் செம்மணிநேர்', 'ஒத்த உளமுடையார்' ஆகிய மூன்று பாக்களும் 'திராவிடநாடு' இதழில் இடம்பெறவில்லை. 'பாடுந் தமிழ்மகளை', 'வாழியவே வாழியவே' எனத் தொடங்கும் இருபாக்களும் 'பேராசிரியர் பவளவிழா மலரி'ல் இடம்பெறவில்லை.

27.4.1945

111. அது நம்மை ஒன்று படுத்தும்

சமயத்தால் பிரிவுற்றோம்! சாதியினால் பிரிவுற்றோம்!
சடங்கு, மற்றும்
சாற்றரிய பழக்கவழக் கங்களினாற் பிரிவுற்றோம்!
கொடுத்தல் கொள்ளல்
தமில்முற்றும் பிரிவுற்றோம்! அரசியலாற் பிரிவுற்றோம்!
வருவாய் தன்னில்
தாழ்வுயர்வாற் பிரிவுற்றோம்! சலுகையினாற் பிரிவுற்றோம்
எனினும், இந்நாள்
நமையெல்லாம் ஒன்றாக்கிப் புத்துணர்வை உண்டாக்கி
நலம்செய் தற்கு
நாமொன்று பெற்றுள்ளோம் "தமிழ்" அதனை உயிரென்று
நாளும் காப்போம்.
அமிழ்தொத்த புதுநூற்கள் பொதுநூற்கள் ஆகுமா
றந்தமிழ்க்கே
அன்றன்று நூறுநூ றென்றுதோன் றுதல்வேண்டும்
அறிஞ ராலே!

குறிப்பு :

புதுவை பி.சுந்தரவேலு ஆசிரியராக இருந்து நடத்திய 'வெண்ணிலா' (27.04.1945) இதழில் இடம்பெற்ற இப்பாடல், மே 2001 'கவிதாமண்டலம்' இதழில் (திரு. தி.வ.மெய்கண்டார்) மறுவெளியீடு பெற்றுள்ளது. இதழில் தலைப்பையடுத்துக் கவிஞரின் பெயர் 'கனகசுப்புரத்தினம் (பாரதிதாசன்) எனக் குறிக்கப்பட்டுள்ளது.

- கவிதா மண்டலம், மே 2001, ப.2

சனவரி 1946

112. மலர்ந்தது முல்லை

பச்சைப் பசுந்தழைக் காட்டினி லேஒரு
பக்கத்தில் பூத்திட்ட முல்லையைப்பார்.
அச்சடை யாளம்நல் வான்குளத்தில் மின்னும்
ஆயிரம் மீனெனத் தோன்றுதடி!
அச்சில் அடித்திட்ட வெள்ளிப் பணம்கையில்
அள்ளி இறைத்தது போல்இருக்கும்!
இச்சை நறுமணத்தால் அழைக்கும் முல்லை
ஏன்என்று பார்க்கையி லேசிரிக்கும்

- 'முல்லை' முதல் வெளியீடு (பொங்கல் நாள்), சனவரி 1946.

1946

113. இராவண காவியச் சிறப்புப் பாயிரம்

பாவண மல்குமி ராவண காவியம்
நாவண மல்கிய நல்லா சிரியனும்
நலமலி ஓல வலசுவாழ் முத்துச்
சாமிசின் னம்மை காமுறு செல்வ
மைந்தனும் ஆய செந்தமிழ்க் குழந்தை
செப்பினான் அறிவுல கொப்பு மாறே.
இராவண காவியம் எனுமிது தமிழகத்
திராவிடம் இவையெனத் திராவிடர் புரிக.
ஆக்கியோன் குழந்தையும் போக்கறு பனுவலும்
ஆழிசூ ழுலகில் என்றும்
வாழிய நன்றே வாழிய நன்றே.

- இராவண காவியம் - முதற்பதிப்பு, 1946

114. பொங்கல் வாழ்த்து!

கடல்மேல் எழும்பரிதித் தங்கக் கதிர்கள்
உடல்மேல் ஒளியாய் உயிர்மேல் உணர்வாகிப்

போந்நாள், பொங்கற் புதுநாள் நனிவாழி!
ஆர்ந்தபாற் பொங்கல் அருந்திளம் பொன்னுடை

கட்டுமணிச் சிற்றிடையார் காளையரும் ஆந்தமிழர்
மட்டற்ற செல்வம், உயர் மக்கள், உற வோடுநலம்

பெற்றுப் பெருவாழ்வும் பேருலகின் மாப்புகழும்
உற்றுநனி வாழ்க உவந்து!

குறிப்பு :

திரு. மா.சு.சம்பந்தம் அவர்களின் வேண்டுகோட்கிணங்கிப் பாரதிதாசன் எழுதிய வாழ்த்து. அழகிய அட்டையில் இதனை அடித்து வெளியிட்ட மா.சு.சம்பந்தம் பதிப்பாசிரியரிடம் நேரில் அளித்தது.

115. ஆளவந்தார்

சிந்துகண்ணி

ஆளவந் தோம்உல காளவந் தோம்நா
டாளவந் தோம்இனி வெள்ளையனே - நல்
வேளையும் வந்தது "போவெளியே" என
வெற்றி முழக்கினார் ஆளவந்தார்;
மீளவந் தால்நலம் வெள்ளையன் என்று
விளம்பினர் என்னேடி சின்னகண்ணே? - ஆம்
ஆளவந் தார்தமக் கண்டை வீட்டாரிடம்
அன்பில்லை என்னரும் பொன்னுக்கண்ணே.

கோள்அகன் றோம்மனக் கோணலற்றோம் இனிக்
குள்ள நினைப்புக்கள் கொள்ளுகிலோம் - கையில்
வாளெடுப் போம்ஒத்து வாழ்ந்திருப்போம் - என்று
வாய்திறந் தேசொன்ன ஆளவந்தார் - பகல்
வேளையிலே இந்த நாட்டுத் துருக்கனை
வேம்பென்று சொல்லினர் சின்னகண்ணே - ஆம்
ஆளவந் தார்மத மான கண்ணாடி
அகற்றத் திருந்துவர் பொன்னுக்கண்ணே.

ஆளவந் தார்இவர் முப்பதுபேர் - அவர்
ஐயிரண் டானவர் பொய்யல்லவே - இங்கு
மூளுவ தாகிய இப்பெருஞ் சண்டையில்
மூத்தவ ரேதணி வாய்நடந்தால்
சூளையிற் கல்லென வெந்திடு மக்களின்
தொல்லை தணிந்திடும் சின்னகண்ணே - ஆம்
சூளையின் கல்லுக்குத் தொல்லைவந்தால் அதில்
ஆளவந் தார்க்கென்ன பொன்னுக் கண்ணே.

ஆயுத மில்லாத போது பிறர்க்கின்னல்
ஆக்குதல் தீதென்று சொல்லிவந்தார் - கையில்
ஆயுதம் வந்தபின் ஆளவந்தார், தொல்லை
ஆளவந்தார் என ஆகிவிட்டார்
வாயினில் ஒன்று மனத்திலொன் றாகிட
வாழ்ந்திட ஒப்பினர் சின்னகண்ணே - ஆம்
வாயாற் பிறர்க்கின்னல் செய்யாதீர் என்றது
ஆயுதம் தாம்பெறப் பொன்னுக் கண்ணே.

- பொன்னி, மே 1947, ப.8

116. கவிதைமலர்கள் - நூலுக்கு வாழ்த்து

வெண்பா

'கவிதை மலர்கள்' எனக் கன்னற் றமிழால்
உவகைபெற நாட்டுக் குதவி - யவர்என்
பழநாளின் தோழர் பழநிவேல் என்னும்
எழிலார் எனஅறிக இன்று.

எளியநடை, நல்ல கருத்துக்கள் ஏற்றே
ஒளியால் வெளிவந்த ஒண்மைத் - தெளிதமிழ்நூல்
நாட்டார்எல் லார்க்கும் நலம்புரிந்து விட்டதென்று
நாட்டுவேன் உண்மையிலே நான்.

பழநிவேல் சிங்கையிலே பன்னாளாய்த் தங்கித்
தழையத் தமிழர்தமைப் பேணி - உழைக்கின்றார்
நன்றிநவில் கின்றேன் நற்றமிழர் சார்பாக
என்றும்அவர் வாழ்க இனிது.

குறிப்பு :

'பாரதிதாசன் கவிதாமண்டலத்தைச் சேர்ந்த திரு. நபழநிவேல் அவர்களின் கவிதைத் தொகுதி' எனும் குறிப்போடு சிங்கப்பூர் தமிழ்முரசு காரியாலயம் மே *1947*இல் முதற்பதிப்பாக வெளியிட்ட **'கவிதை மலர்கள்'** நூலுக்கு வாழ்த்து.

16.6.47

117. ஏன் சிரித்தாள்?

கோதையவள் என்தொடர்பைக்
கோரவில்லை என்றுரைத்தால்
வீதியில்ஏன் என்னைக்கண்டு சிரித்தாள்?

காதலில்லை என்றனின்மேல்
கட்டழகிக் கென்றுரைத்தால்
ஏதுக்கெனை இடித்துக்கொண்டு போனாள்?

பாகுமொழி யாள்உளம்என்
பங்கில்இல்லை என்றுரைத்தால்
போகையிலே ஏன்திரும்பிப் பார்த்தாள்?
நீகிடப்பாய் என்றனையே
நீக்கிவிட்டாள் என்றுரைத்தால்
தோகைஎன்றன் காகிதம்ஏன் தொட்டாள்?

மின்னுதலாள் நெஞ்சம்என்றன்
மீதில்இல்லை என்றுரைத்தால்
என்உறவோர்க் கேன்புரிந்தாள் நன்மை?
கன்னல்மொழி யாளுக்கென்மேல்
காதலில்லை என்றுரைத்தால்
என்கிளியை ஏன்அவளழைத்தாள்?

குறிப்பு :

"ஈரோட்டிலிருந்து வெளிவந்த 'இளைஞன்' எனும் இதழுக்கு 16.6.47இல் அனுப்பிய கவிதை. படியெடுத்து உதவியவர் பாவேந்தர் மகள் வசந்தா தண்டபாணி" என்னும் குறிப்பொடு **'பாவேந்தரில் அகமும் புறமும்'** *(ப.108)* என்னும் நூலில் முனைவர் மா.அண்ணாதுரையால் இப்பாடல் தரப்பட்டுள்ளது.

4.8.1947

118. செந்தமிழ் மீட்போம்

தேனருவி யான தமிழ்
ஏன்பருக வேண்டு மென்றே
ஊனருவி யாக இந்தி
தான்பருக வேண்டு மென்றார்

மானமின்றி வாழ்வ துண்டோ
ஈனர்காலில் வீழ்வ துண்டோ
வானிடிந்து வீழ்ந்திடினும்
ஆனதமிழ் காத்திடுவோம்

தாய்முலைப்பால் நீக்கிஇந்தி
நாய்முலைப்பால் கொள்வதுண்டோ?
தூயகனிச் சாறிருக்க(க்)
காய்புளிக்கத் தின்பதுண்டோ?

வாய்மணக்கும் தமிழிருக்க
நோய்அழைக்க ஒப்புவதோ?
மாய்வதொன்று வெல்வதொன்று
தாய்மொழியை மீட்டிடுவோம்

செந்தமிழின் நன்செயிலே
இந்திக்கடா மேய்ப்பதற்கே
வந்துவிட்ட துரிமைஎன்றார்
தொந்திவட நாட்டினர்கள்

நிந்தைபட வாழ்வதுண்டோ?
வந்தஇடர் தாங்குவதுண்டோ?[1]
இந்திஆட்சி யைமுறிப்போம்
செந்தமிழை மீட்டிடுவோம்.

குறிப்பு :

இலங்கையில் 1964 வரை இருந்தவரும் அங்குத் திராவிடர் கழகத் துணைத்தலைவராகப் பணியாற்றியவருமான தூத்துக்குடி மாவட்ட நாரைக்கிணறு என்னும் ஊரைச் சார்ந்த சு.கா.சுந்தரராசனுக்கு 4.8.1947இல் பாரதிதாசன் எழுதிய தனது கடிதத்துடன் இணைத்து அனுப்பிய கவிதையே இது. கவிதையொடு கடிதச் செய்தியும் இதழில் இடம்பெற்றுள்ளன.

1. ஓசைச் சீர்மையின்மை

- ராணி-வாரஇதழ், 2.12.90, ப.8

119. செந்தமிழ்நாடு

இருபொருள் வெண்பா

மடக்கொடியைக் காதலித்தோர் வார்கூழ் உழவர்
அடைக்கலத்தால் கொள்ளும் அழகு - நெடுநாடே
பொய்விளை யாதுநனி செம்மை புரிந்திடுநன்
செய்விளைஎன் செந்தமிழ் நாடு.

குறிப்புரை : மடக்கொடியைக் காதலித்தவர், அடைக்கலத் தால் அம்மடக்கொடியை அடைகின்ற அழகான நெடிய நாடே - அன்றியும், வார்க்கின்ற கூழை, உழவர் இலைக்கலத் தால் (தொன்னையால்) அடைந்து குடிக்கும் அழகான நெடிய நாடே பொய்விளையாமல் மிகச்செம்மை தருகின்ற நன்செய் விளையும் என் செந்தமிழ்நாடு.

அடைக்கலம் தம்மையே ஒப்படைப்பது. அதையே அடை கலம் எனப்பிரித்து இலைக்கலம் என்று பொருள்கொள்க. அடை - இலை

மெய்த்தநூல் ஆய்வானும் மெல்லியைப்பி ரிந்தானும்
முத்தமிழந் தேன்என்னும் முன்னாடு - கொத்தும்
கழுகு மதங்கள் கருதா தறத்தில்
ஒழுகு முயர்தமிழ் நாடு.

குறிப்புரை : மெய்த்தநூல் ஆய்வானும் முத்தமிழந்தேன் என்னும் முன்னாடு என்றும் மெல்லியைப் பிரிந்தாலும் முத்தமிழந்தேன் என்னும் முன்னாடு என்றும் கூட்டுக. முதலில் முத்தமிழ் - அம் - தேன் எனப் பிரிந்து முத்தமிழா னது அழகியதேன் என்றும், இரண்டாவது முத்தம் - இழந்தேன் எனப்பிரிந்து அவள் தரும் முத்தத்தை இழந்தேன் என்றும் பொருள்தரும்.

குறிப்பு :

தனிப்பாடல் புலவர்களிடம் தூக்கலாகக் காணப்படும் இப்பிரிமொழிச் சிலேடையமைப்பு பாரதிதாசனிடம் அருகியே காணப்படுவதாகும். மேற்குறித்த இரண்டு வெண் பாக்களும் 'செந்தமிழ் நாடு' என்னும் பொதுத்தலைப்பில் அமைந்துள்ளன.

- குயில் மாதவெளியீடு, 1.9.47, ப.41

1.10.1947

120. வெற்றிப் பறை

வெற்றிப்பறை கொட்டடா மறவா
வெற்றிப்பறை கொட்டடா

பெற்றிடுவோம் எம் திராவிடர் நாட்டை
பிரித்திடுவோம் பிறர் எண்ணிடும் கேட்டை நீ *(வெற்றி)*

இராதினிப் பிறர்சூழ்ச்சி உணர்வினில் குன்றோம்
திராவிட நாடு திராவிடர்க் கென்றோம் *(வெற்றி)*

குமரி தொடங்கிநல் வங்கம் வரைக்கும்நல்
அமைவான எமதாட்சி யசையா திருக்கும்நீ *(வெற்றி)*

தூய்தமிழ்க், கன்னடம், துளு, மலையாளம்,
ஆய்தெலுங் கென்பன வந்தமிழ் என்றே *(வெற்றி)*

தூக்கத்தி லேவந்து பிச்சை யென்றுரைத்தார்
ஆக்கத்தில் கைவைத்தால் ஆரிதைப் பொறுப்பார்? *(வெற்றி)*

உணர்வுண்டு தோளுண்டு மலையினைப் போலே
பணியாத பேர்க்கெல்லாம் இங்கென்ன வேலை? *(வெற்றி)*

உலகின் துவக்கம் திராவிடர் வாழ்வு!
நிலைகெட்டு வந்தவர்க்கோ நாங்கள் தாழ்வு! *(வெற்றி)*

கூளங்க ளாம்பகை சூழ்ச்சியை வீழ்த்தி
நாளும் திராவிடர் வாழ்கென்று வாழ்த்தி *(வெற்றி)*

- குயில் மாதவெளியீடு, 1.10.1947, ப.7

1.10.1947

121. தமிழ் நலம்

சமையல் அளிக்கும் அறை
அமுதளித்தாலும் அது
தமிழ் அளிக்கும் பள்ளிக்கு - நிகராமா?
- தம்பி,
இமைப்பொழு தேனும் அதைச்
சுவைக்க மறுப்பதுவும் - சரியாமா?

ஏட்டினில் ஔவைமூ
தாட்டி அளித்தசெல்வம்
இந்த உலகம் பெறும் - மறந்தனையா?
தம்பி,
பாட்டில் பழந்தமிழும்
பாரில் தமிழகமும் - உயர்ந்தனவாம்.

வார்ந்த தமிழமூ
வேந்தர் தமதுபுகழ்
வாய்ந்த புறப்பொருளைக் காணாயோ!
தம்பி,
ஆர்ந்த தமிழ்ப்புலவர்
அகப்பொருள் கண்டுநலம் - பூணாயோ!

சொல்லால் குயில்பயிற்றும்
தோகையர் இல்லறத்தால்
கல்லா உலகுக்குக்கண் - ஈந்தாரே
தம்பி,
வல்லது தம் மொழிதான்
என்றவரும் தமிழிற் - சேர்ந்தாரே

**படிப்பு நிரம்பா நாட்டில் பள்ளிக் கணக்காயரைத்*
துடிக்கச் செய்தாரை இனிக் - கிளியே - எவர்
சும்மா விடுவாரடி?
படிப்போரின் பெற்றவர்கள் பள்ளிக் கணக்காயரைக்
கெடுத்திட எண்ணாரடி - கிளியே - இக்
கேட்டினை ஒப்பாரடி!

குறிப்பு :

*இறுதி இரண்டு கண்ணிகளும் முந்தையவற்றிலிருந்து வேறுபட்டு விட்டிசைக்கின்றன.

- குயில் மாதவெளியீடு, 1.10.47, ப.43-44

1.2.48

122. நன்றி

பொங்கல் நாளில் புலவர் பல்லோர்
தங்கள் உளத்துப் பொங்கும் ஆர்வத்தால்
நமக்கு வாழ்த்து நல்கினர்
தமக்கு நன்றி சாற்றினோம் நாமே

- குயில் மாதவெளியீடு, 1.2.48, ப.10

15.6.48

123. தொல்லைசெய் நிலவே!

ஒளியோடு குளிரோடு புறப்பட்ட நிலவே - என்
உணர்வோடு காதலைச் சேர்த்தாய், நல் *(ஒளி)*

களியோடு நின்மேனி தழுவிற்று வானம்
காதல் நெருப்பைத் தழுவினேன் நானும் *(ஒளி)*

உளத்தை நீபடுத்தும் பாடு - நான்
உலகையே மறப்பேன் இன்றோடு
துளிபோதும் நான்விரும்பும் அவளிடம் ஓடு
தொல்லைசெய் என்துணை நாடுவாள் பிற்பாடு *(ஒளி)*

குறிப்பு :

குயில் மாத வெளியீட்டில் 4 இதழ்களில் (15.6.48, 15.7.48, 15.8.48, 1.10.48) பாரதிதாசன் எழுதிய 'அனைவரும் உறவினர்' என்னும் முற்றுப்பெறாத தொடர்கதையில் அஞ்சி என்பான் பாடுவதாக இடம்பெறும் பாடல் இது.

- குயில், மாதவெளியீடு 15.6.48, ப.24

15.7.1948

124. அழகப்பர் அழகுரை

பார்ப்பனீயத்தை நம்பாதவர்களை வளரவிடக் கூடாதாம்

இறையை, அவன் குரலான மறைகள் தம்மை
எவனொருவன் நம்பாமல் இருக்கின் றானோ
முறையாக அன்னவனைச் சமுகந் தன்னில்
முளைக்கவிடு வதுமிகவும் ஆபத் தென்று
நிறைவான பணக்காரன் அழகப் பன்தான்
நிகழ்த்தினான்! நான்நினைப்ப தவ்வா றன்று.
மறைவான வழியாலே பணம்பெ ருக்கும்
வஞ்சகர்க்குப் பார்ப்பனரின் உறவு ே வ!

பார்ப்பனரின் கூட்டுறவைக் கோரு வோன்தான்
பார்ப்பனரின் மறைதன்னை நம்ப வேண்டும்.
சீர்ப்பெரிய திராவிடர்க்கு மறைகள் உண்டு
சிறப்புண்டு கலைநாக ரிகங்க ளுண்டு.
ஆர்ப்பாட்டக் காரராம் அழகப் பர்க்கோ
அவைதெரியா திருக்கவழி யில்லை! நன்றாய்
ஊர்ப்பணத்தைக் கையாடா துண்மை யாக
உழைப்பானுக் கிறை, பார்ப்பான் மறைகள் வேண்டாம்!

- குயில், மாதவெளியீடு, 15.7.48, ப.6

15.8.48

125. எதற்கெடுத்தாலும் சும்-மா எதிர்ப்பாம் எதிலும் கலகம் செய்யும் பும்-ம புனை சுருட்டு

எதற்குமே சும்-ம, எதிர்த்திடும் என்று
பிதற்றிடும் பும்-ம பிழைப்போய்! இதைக்கேள்,
தமிழ்பேசி, எங்கள் தமிழாற் பிழைத்தும்
தமிழ்அழித்தல் உன்நோக்கம் தான்.

எதிலும் கலகம் இழைப்பது பும்-ம,
தொதிபோல் இருக்குமோ சும்-ம? - அதனை
எதிர்ப்பது பும்-ம வெனும் எம்பகைமை தன்னை
எதிர்ப்பதாம் ஈதறியா யா?

குறிப்பு :

'சங்கு சுப்பிரமணியன் திருச்சி வானொலியில் சும்-ம எனச் சுயமரியாதை இயக்கத்தாரைத் தாக்கிப்பேசியதைக் கேட்டவுடன் பாடியது' என்று இப்பாடலின் பின்புலத்தை மன்னர்மன்னன் பதிப்பாசிரியரிடம் (நேருரை 1.6.94 காலை) குறிப்பிட்டார்.

- குயில், மாதவெளியீடு, 15.8.48, ப.5

15.8.48

126. தென்றல் அருவி!

எடுப்பு

பொழுதுமலர் மணம் மருவி - நம்மேல்
ஒழுகும் தென்றல் அருவி *(பொழுது)*

உடனெடுப்பு

பொழிலிடைத் தழையெலாம் அசையப்
பொன்னிறப் பறவைமெய் சிலிர்க்க *(பொழுது)*

அடி

எழுதவொர் உருவிலாக் காற்றால் - நமக்
கின்பமே தன்குளிர் ஊற்றால்
கழைமொழி மங்கைமார் உறவும் - குளிர்
காற்றுக்கு நிகரில்லை அன்றோ? *(பொழுது)*

குறிப்பு :

குயில் மாத வெளியீட்டில் பாரதிதாசன் எழுதிய 'அனைவரும் உறவினர்' தொடர்கதையில் நன்னன் என்பான் யாழிசைத்துப் பாடுவதாக இடம்பெறும் பாடல் இது.

- குயில், மாதவெளியீடு 15.8.48, ப.48

127. தையற்கலை வாழ்க!

உணவு தடைப்படின் உயர்வு தடையப்பா
உடை தடைப்படின் உயர்வு தடைப்படும்
நல்லுண விலாவிடில் நாணுவா ரில்லை
நல்லுடை யிலாவிடில் நாணும் நெஞ்சம்

எழிலுடை உணவிலும் இன்றியமை யாதது
வழுவினால் உடனே மானம் கெடுதலால்
வையகத்தில் நெய்யும் உடையெலாம்
தையல் நிறத்தால்[1] தகுதி யடையும்

இயற்கையில் அழகிலார் எனினும் அவர்க்கெலாம்
செயற்கை அழகு செயும் தை யற் தொழில்[2]
தையல் அருந்தொழில் தழையத் தழைய
உய்யும் தமிழர்பால் உயர்வு தழையும்!

"தையற் கலை" என்னும் துய்ய ஏட்டைத்
தையற் கலைஞர் சாமிஎன் தோழர்
வெளியிட் டுதவினார் வெல்க!
ஒளிர்க "தையற்கலை" ஓங்குக நன்றே!

குறிப்பு :

'பாரதிதாசன் குயில்' (ஆனி 1984) இதழில் "1948ஆம் ஆண்டில் சென்னையில் வெளிவரத் தொடங்கிய "தையற்கலை" இதழுக்குப் பாவேந்தர் அளித்த இந்தப் பாடலை பண்ணுருட்டி தியாகச்செம்மல் எம்.ஆர்.பாண்டுரங்கனார் வழங்கியிருக்கிறார்." என்னும் முன்குறிப்போடு இப்பாடல் வெளியிடப்பட்டுள்ளது.

1. 'திறத்தால்' என இருப்பின் நன்று
2. 'தையற்றொழில்' என இருத்தல் வேண்டும்

- பாரதிதாசன் குயில் சுவடி, 6 ஆனி 1984, ப.8

சூலை 1949

128. அண்ணாவின் உவமைகள் - நூலுக்குச் சிறப்புரை

எண்ணாத் துறைநாடி எண்ணிப் பிறர்நலம் ஏற்பச்செய்தான்
அண்ணாத் துரைஅறிஞன் சொற்பெருக்கில் நற்றொடர்கள்
ஆய்ந்தெடுத்துப்
பண்ணாத் துறைஎன்ன நூல்யாத்தார் நல்லன்புப் பழநிச்செம்மல்
நண்ணார் புகழ்வீர ராகவனார்! இவர்தொண்டு நன்றே! நன்றே!

நூல் : **அண்ணாவின் உவமைகள், ப.3**

1949

129. சுடாத நெருப்பு - நூல் மதிப்புரை

திருத்திப் படித்துத் திரவியத்தின் நூலின்
கருத்திப் படிஎன்று கண்டால் - பெருத்த மகிழ்
வுற்றிடுவார், செந்தமிழில் உள்ள சுவையனைத்தும்
பெற்றிடுவார் என்னகுறை பின்பு?

காவியமாம், தென்றல், வான் காலைமுத லாம்காட்சி
ஓவியமாம், இந்தி ஒழிப்பாம், இங்-காவன
சொன்ன திரவியத்தின் சொல்லரிய தாம்தொண்டுக்
கென்னகைம் மாறறிவோம் யாம்?

குறிப்பு:

தலைப்பெதுவுமின்றி இவ்விரண்டு நேரிசைவெண்பாக்களும் அளிக்கப்பெற்று இவற்றின் கீழ் வலப்பகுதியில் 'பாரதிதாசன்' எனப் பெயரும் இடப்பகுதியில் '*21.10.49*' என நாளும் குறிக்கப்பெற்றுள்ளன.

30.11.1949

130. சரசுவதி - இராசவேல் திருமண வாழ்த்து

நன்று வாழிய இன்றுபோல் என்றும்
ஒன்றிய காதல் உள்ளம் உடையீர்!

தேசுறு சென்னைக் கேசவ னாரின்
அருமை மகளே சரசு வதியே

கைம்மை முதலைவாய் கடிந்த "உள்ளச்
செம்மை" வாய்ந்த திராவிடப் பொன்னே!

விழிகாட்டி அன்பனின் விருப்பம் கவர்ந்து
வழிகாட் டினைஇப் பழிநாட் டிற்கே!

தண்புனல் வளவயல் பண்ணு ருட்டி
நாம நாராயண சாமி யவர்களின்
இனிமைப் புதல்வ! இராசவேல் செம்மால்!
துணையிழந் தாரை மணப்ப தறமெனும்
இணையிலாத் துணிவுடை எதிரிலா ஆற்றலோய்
இயலிசை நாடகம் என்னு முத்தமிழ்
உடையாய்; திராவிடர் உயர்வுக்கு வாய்த்தோய்

நீவிர் நாளும் பூவும் மணமும்
பாவும் பொருளும் என்னப் பாரோர்
வாழ்வுக்கு இலக்கியம் வகுத்தும் திராவிடர்
வாழ்வுக்கு நல்ல மக்களைப் பெற்றும்
திருவெலாம் பெற்றும் உலகின்
பெரும்புகழ் பெற்றும் பெரிது வாழியவே!

குறிப்பு :

இதழாசிரியர், நாடக ஆசிரியர், நூலாசிரியர் இவற்றிற்கு மேலாகப் பாரதிதாசனின் அணுக்கத் தொண்டர் என்னும் சிறப்புகளுக்குரியவர் பண்ணுருட்டி நா.இராசவேல். கைம்பெண்ணை வாழ்க்கைத் துணையாக ஏற்ற அவரின் மணவிழா புரட்சிக்கவிஞரின் தலைமையில் நிகழ்ந்தது. இந்த மணவாழ்த்துப்பாடல் அவர்களிடையே அமைந்திருந்த

நெருக்கத்தைப் புலப்படுத்தும். இராசவேல் அவர்களைச் சென்னையில் சந்தித்தபோது (1974) சட்டம் போட்டு வைத்திருந்த இத்திருமண வாழ்த்தைப் பார்த்தெழுதப் பதிப்பாசிரியர்க்கு அளித்துதவினார். 'பாரதிதாசன் இதழ்ப் பணிகள்' (ப.403) நூலிலும் இப்பாடல் இணைக்கப் பெற்றுள்ளது.

14.1.1950

131. மகள் மருகர் பேரர்க்குப் பொங்கல் வாழ்த்து!

(அகவல்)

பொங்கற் புதுநாள்; தமிழரின் பொன்னாள்;
மங்காச் சீர்த்தி மன்னர் மூவர்
ஆண்டஅந் நாள்முதல் அருமைகுன் றாமே
ஈண்டிந் நாள்வரை இன்பத் தமிழர்
நினைத்தால் நெஞ்சம் இனிக்கும் திருநாள்
இந்நாள் இனிதில் யான்வாழ்த்து கின்றேன்.
"இன்றுபோல் தமிழர் என்றும் வாழிய!"

ஃ ஃ ஃ

அகல்வயல் புனல்வளம் அறாது நலங்கொள்
புகலூர்க் கட்டிப் பாளையம் புகுந்தே
தமிழர் தகுசீர் தகுமுறை காட்டியும்
அமிழ்தெனக் கொழுநர்க் காகியும் என்றும்
இடும்பை தீர்' கண் ணப்பர் சரசுவதி"
குடும்ப விளக்குக் குறைவின்றி வாழிய!

ஃ ஃ ஃ

தமிழர் தலைமுறைத் தன்மை மிளிர
இமைதொறும் பணிசெயும் இன்தமிழ்ப் புலவர்
சரசு வதிகண் ணப்பர் தம்வீட்
டரசு நிறைநாள் அமைந்து வாழிய!

ஃ ஃ ஃ

என்னரு மருகர் என்மக னாரின்
பொன்னே ஆன புகழேந்தி பாரியாம்
என்னரும் பேரர் இருவரில் இளையான்
தம்மூத் தானினும் தகுதோள் வலியினன்;

அறிவுத் துறையிலும் ஆண்மைத் துறையிலும்
நிறைந்திவ் விருவர் நீடுழி வாழிய!

ஃ ஃஃ

பழந்தமிழ் நாடு வாழிய!
தழைத்து(ச்) செந்தமிழ்த் தன்மை வாழ்கவே!

குறிப்பு :

புதுவையிலுள்ள பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் - ஆய்வுமையத்தில் கவிஞரின் கையெழுத்துப்படியாக உள்ள பாடல் இது.

- புதுவை விரோதி தை (சனவரி 14, 1950)

2.6.1950

132. திருமண வாழ்த்து

எண்சீர் விருத்தம்

திருவுடையார்; பொறையுடையார்; செந்த மிழ்க்கண்
 தீராத பற்றுடையார்; பண்பே ஆன
உருவுடையார்; நல்லொழுக்கம் உடையார்; வாய்மை
 உடையவராம் கந்தசா மிப்பெ யர்கொள்
ஒருபெரிய அறுவைவணி கத்தார் சென்னை
 ஓங்குபுகழ் உடையாரின் நீங்கா அன்புக்
குரியசேய் பட்டாபி ராமன் கண்டீர்
 ஒண்டொடியார் அண்டையிலே அமைதல் கண்டோம்.

விண்மணியும் நாணுமோர் மேன்மை வாய்ந்த
 பெங்களூர்க் கனகசபா பதியார் பெற்ற
கண்மணிகாண் சரசுவதிதான் நிறைந்தி லங்கும்
 கற்புக்கோர் அணிமணிதான் அவனுக் கேற்ற
பெண்மணிதான் மணவறையில் மணவா ளன்தன்
 பெருந்தோளிற் படர்முல்லை யாய்அ மைந்தாள்
ஒண்மணிசேர் இல்லறமாம் உயர்ம ணித்தேர்
 ஓட்டஇவர் பெறாநின்றார் திரும ணந்தான்.

சரசுவதி, பட்டாபி ராமன் ஆன
 தமிழ்ப்பெண் மாப்பிள்ளை இருவர் தாமும்
கருத்தொருமித் தாதரவு கொண்டார் இந்தக்
 கடிமணத்தை வாயார வாழ்த்தும் வையம்!
வருமகளிர் ஆடவர்கள் அவையில் உள்ள
 மதிநுட்பத் தமிழ்நூலோ டுடைய சான்றோர்
தரும்வாழ்த்தும், மங்கலமா இசையும் ஓங்கத்
 தடங்கைகள் மலர்பொழியக் காணு கின்றோம்.

குயில்மொழியாள் சரசுவதி, தான்அ டைந்த
 கொழுநனோ டின்புறுக! அன்பு வாழ்வின்
வெயில்முகத்துப் பட்டாபி ராமன் தானும்
 மெல்லியுடன் இன்புறுக! இருவர் தாமும்

பயில்மும்மைத் தமிழ்மன்னன் மன்னிபோலும்
　　பயன்பெறுக! வாழ்வுயர்க! புகழ டைக
முயன்றாராய் நிறைபொருளைக் குவிக்க! வாழ
　　முடியார்க்கு முடிந்தவரை ஈந்து வக்க!

வாழியவே பல்லாண்டு பல்லாண் டன்பு
　　மணமக்கள் மாமலரும் மணமும் போலே!
யாழோடு குழல்நிகர்த்த மழலை பேசும்
　　எழில்மக்கட் பேறடைக! குடும்ப மேன்மை
'வாழையடி வாழை' என வந்த வாறு
　　மாண்புறுபே ரர்கண்டு மகிழ்ச்சி கொள்க!
வாழியவே மணமக்கள் பெற்றோர் சுற்றம்
　　வாழியவே தமிழுலகம் வாழ்க நன்றே.

குறிப்பு :

'பாரதிதாசன் இதழ்ப்பணிகள்' நூலில் "விக்ருதி ஆண்டு, வைகாசித் திங்கள், 20ஆம் நாள் 2.6.50 வெள்ளிக்கிழமை சென்னைத் தியாகராச நகர் திருவாளர் ஆ.கந்தசாமி முதலியார் மகன் திருவளர்செல்வன் பட்டாபிராமன், பெங்களூர், கனகசபாபதி முதலியார் மகள் திருவளர்செல்வி சரசுவதி" (ப.404-405) என்னும் மணநாள், மணமக்களைப் பற்றிய முன்குறிப்போடு இப்பாடல் இணைக்கப்பெற்றுள்ளது.

133. தமிழ்நாடு

செந்தமிழ் நாடென்றன் அன்னை - தொண்டு
செய்திடுமாறு பணித்தனள் என்னை

கொந்த வரும்பகை நீக்கென் றுதிர்த்தாள்
கோணல் வழக்கத்தை எண்ணிக் கொதித்தாள்
சொந்த மறக்குல மாட்சியும் ஆட்சியும்
சோர்வுற்றதோ என்று கூவிக் குதித்தாள் (செந்தமிழ்)

அன்புநல் வாய்மை அறம்வளர்த் திட்டாள்
ஆர்க்கும் நலம்என்று முரசறைந் திட்டாள்
வன்புகள் செய்ய வரும்பகைக் கூட்டத்தை
மாய்த்திட வேவடி வேலினைத் தொட்டாள் (செந்தமிழ்)

வைகையும் தீம்புனற் காவிரி ஆறும்
வாழை பலாசெழும் கன்னலின் சாறும்
பெய்யும் சுவைமொழி மாதர்தம் கற்பும்
பேசப்பேச நெஞ்சில் இன்பம்வந் தேறும் (செந்தமிழ்)

பாலைப் பொழிந்து தரும்பசுக் குலமும்
பைம்பொழில் தேன்மலர் செழுநன்செய் நலமும்
காலமெல்லாம் தென்றல் ஈந்திடு பொதிகையும்
காணில் இதற்கீடில் லைஎந்த நிலமும் (செந்தமிழ்)

உலகு தொடங்கிய நாளினில் அன்னாள்
ஊக்க மிகுந்தற மார்க்கங்கள் சொன்னாள்
நிலையினில் அன்பு நிலைபெரி தென்னவே
நேர்மை எலாம்வகுத் தானவள் [1] முன்நாள் (செந்தமிழ்)

வேங்கடத்தின் தெற்கில் அலைகடல் மூன்றும்
வெல்க வெல்கஎன ஆர்த்திட ஆங்கே
ஓங்கு தமிழ்தனில் ஓம்என்று பாடிய
உவகைப் பெருக்கினில் கூத்திடு கின்றாள் (செந்தமிழ்)

குறிப்பு :

இப்பாடல் மறுவெளியீடு செய்யப்பெற்ற 'யாதும் ஊரே' என்னும் திங்கள் இதழில் அளிக்கப்பெற்ற குறிப்பு: "50 ஆண்டுகளுக்கு முன்வந்த 'தமிழரசு' என்ற இதழில் புரட்சிக் கவிஞர் எழுதிய இக்கவிதையை நமக்களிப்பவர் அன்புப் பழம்நீ."

1. 'தாளவள்' என இருத்தல் வேண்டும்.

- 'யாதும் ஊரே', அக்டோபர் 2000

21.10.51

134. சிவாஜி இதழின் 17ஆம் ஆண்டு வாழ்த்து

எழுத்தெல்லாம் புதியநடை
எண்ணமெலாம்[1] தன்னுடைமை
எனவே நாட்டின்
பழுத்தபொதுத் தொண்டுசெய்வான்
திருலோக சீத்தாராம்[2]
பரப்பும் ஏடு
வழுத்துமோர் சிவாஜியெனல்
வண்தமிழ்நா டறியும்அந்த
மைந்த னுக்கு[3]
தழைத்ததுவாம் பதினேழாண்
டென்றுரைத்தால் மகிழாத
தமிழ ருண்டோ?

இவனுயர்ந்தான் அவன்தாழ்ந்தான்
என்னுமின வேற்றுமையோர்
அணுவும் இல்லான்
எவன்பொதுமைக்[4] கிடர்சூழ்ந்தான்
அவன்தாழ்ந்தான் அஃதில்லான்
உயர்ந்தா னென்று
நுவல்வதிலே திருலோகம்[5]
அஞ்சா நெஞ் சன்;தக்க
நூற்கள் ஆய்ந்தான்[6]
அவனெழுதி டும்சிவாஜி[7]
வாரத்தாள் வாழியபல்
லாண்டு நன்றே

பல்லேடும் கூடிஒரு
பழந்தமிழன்[8] சீர்த்தியினை
மறைக்கு மாயின்
வில்லோடும் அம்போடும்
வரும்பகையைத் தனிநின்று
வீழ்த்து வான்போல்
சொல்லோடும் பொருள்சிறக்கத்
தூய்தமிழின் சீர்சிறக்க
எழுது கின்ற

நல்லேடாம் சிவாஜிக்கு
நல்லாசான் திருலோகன்
நாளும் வாழ்க.

குறிப்பு :

சிவாஜி இதழாசிரியர் திருலோக சீதாராம் 'கவியரசு பாரதிதாசன்' என்னும் தலைப்பில் பின்னர் (1980) எழுதிய கட்டுரை ஒன்றில் (அரும்புகள் மொட்டுகள் மலர்கள் ப.139-152) இப்பாடலை முழுமையாக எடுத்துக்காட்டியுள்ளார். இரு பதிவுகளுக்குமிடையே சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. கட்டுரைப்பதிவில் காணப்பெறும் வேறுபாடுகள் கீழே குறிக்கப்பெற்றுள்ளன.

வே.:
1. எண்ணமெல்லாம்
2. சீதாராம்
3. ஒற்று 'த்' மிகல் வேண்டும்.
4. எவன்பொதுவுக்
5. திருலோகன்
6. ஆய்ந்தோன்
7. அவனெழுதும் சிவாஜியெனும்
8. பழந்தமிழின்

- சிவாஜி 17ஆவது ஆண்டு மலர் 21-10-51 ப.55

1952

135. புலவர் வேணுகோபாலனார் வாழ்க!

தமிழரெலாம் அறிவுடைய ராதல் வேண்டும்;
தமிழ்என்றால் அவ்வறிவு பெறுதல் கூடும்;
'தமிழ்கற்றல் என்பதுதான் என்ன?' என்றால்
தமிழ்ச்சான்றோர் அருளியநூல் கற்ற லாகும்.
தமிழ்நூற்கள் கற்பதெனில், நூலைச் செய்த
தமிழ்ச்சான்றோர் உளமறிய முயல்வ தாகும்
தமிழ்நூல்கட் கமைந்துள்ள உரையைக் கொண்டே
தக்கபடி பொருள்தெரிதல் அருமை யாகும்.

'தொல்காப்பி யர்தமிழர்' என்பார்; அன்னார்
சொன்னநூல் தமிழர்நெறி சொல்லிற் றென்பார்
தொல்காப்பி யத்திலுள செய்யுள் கட்கும்
தூய்மையிலா உரைசெய்து பொருள்ம றைப்பார்
'பல்லோரும் புகழ்கின்ற திருக்கு றட்குப்
பரிமீதில் அழகியார் செய்த தொன்றே
நல்லஉரை' என்றுரைப்பார்; வருண பேதம்
நல்காத குறள், அதனை நல்கிற் றென்பார்

பெருநூற்கள் உரைபலவும் திருந்த வேண்டும்;
பிழைபாடு நீங்காக்கால் அறந்தோன் றாது;
பெரியவர்கள் எதிரிருந்து பொருளைக் கேட்கப்
பிழைநீங்கும்; நல்லறிவு பெறுதல் கூடும்.
திருத்தக்க தேவனார் அருளிச் செய்த
சீவகசிந் தாமணியாம் பெரிய நூலின்
உரைகூறி யருளினார் மூன்றாண் டாக
உயர்புலவர் வேணுகோ பால னாரே!

'அப்பெரியார் யார்?' என்னில் சைன மென்னும்
அருள்நெறியால் எழுந்ததமிழ் நூற்கள் மற்றும்
செப்பரிய சங்கநூல் அனைத்தும் ஆய்ந்து
சிறந்தாரிற் சிறந்தவரே! அவரை இவ்வா
றொப்பரிய பணியாற்றக் கேட்டார் யாவர்?
உயர்காஞ்சிச் சைனஇலக் கியமன் றத்தார்;
இப்போதும் சீவபந்து சீபால், தென்னாட்
டிளஞ்சினதே வனுடைய தந்த மன்றம்!

'சீவகனைப் பாராதே; சேக்கி ழாரின்
திருத்தொண்டர் புராணம்பார்' என்று கூறும்
நாவகரும் இருக்கின்றார், அவரை யெல்லாம்
நல்லரென்று சொல்வாரும் வாழ்கின் றார்கள்;
சீவகன்போல் வீரத்தைக் காதல் தன்னைச்
செப்புவதோர் நூலுண்டோ? தமிழர் நாட்டின்
பாவகன்ற இலக்கியத்தின் அரசு சிந்தா
மணிஎன்று பகர்ந்திடுதல் மிகையே இல்லை.

தமிழ்த்தொண்டு செய்துவரும் வளஞ்சேர் காஞ்சிச்
சைன இலக்கியமன்றம் தழைத்து வாழ்க!
அமிழ்திருந்த படிகாட்டும் சீவ கன்றன்
அழகிருந்த படிபொருளை ஊட்டி, இந்த
இமிழ்கடல்சேர் தமிழ்நாட்டார்க் கினிய செல்வம்
ஈத்துவந்த வேணுகோ பால னார்தாம்
தமர்நண்பர் மக்களொடு செல்வம் சீர்த்தி
தனித்தபெரும் புகழ்ஓங்கி வாழ்க நன்றே!

- சிந்தாமணிச் சொற்பொழிவு நினைவு மலர் 1952, ப. 3-4

15.3.54

136. சரசுவதி - கண்ணப்பர்

செல்வி மல்லிகை வாழ்க!

கலைச்செல்வி கண்ணப் பர்க்குப்
கண்ணொக்கும் பெண்ணே ஆன
நிலைச்செல்வி **மல்லிகை***தான்*
ஓராண்டு நிறைவு பெற்றாள்!
மலைச்செல்வம் நாட்டுச் செல்வம்
மாநகர் கானச் செல்வம்
அலைகடற் செல்வம் கல்வி
அடைந்துபல் லாண்டு வாழ்க!

பழனிபா ரதிதா சர்க்குப்
பேர்த்தியாய், அன்பு யிர்க்குக்
கழனியாய் மல்லி கைதான்
ஓராண்டு காணப் பெற்றாள்.
எழில்நனி பெற்று நன்றே
பெண்களின் உலகம் ஏத்தித்
தொழுவணம் புகழும் பெற்றுத்
துயரின்றி நீடு வாழ்க.

குறிப்பு :

புதுவை ‘பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் - ஆய்வு மையத்’தில் கவிஞரின் கையெழுத்து வடிவத்தில் இவ்வாழ்த்து இடம்பெற்றுள்ளது.

5.9.54

137. அன்றொருநாள் பாரதி

ஆயிரத்துத் தொளாயிரத் தேழில்இந்து சீன
அட்மினிஸ்ட்ரேட் டர்சரவா, பாரீசு சென்றார்;
தீயதொரு செய்தியினைக் கேள்வியுற்றார் அங்கே!
திடுக்கிட்டார் புதுவைக்குத் தந்திகொடுத் திட்டார்
தூய்பிரஞ்சிந் தியாவைஆங் கிலேயர்கொள் ளட்டும்
அதற்காக ஆப்பிரிக்கத் துணைப்பகுதி ஒன்றை
நேயமுறு ப்ராஞ்சியர்கள் கொள்ளட்டும் என்ற
நேர்மையிலாத் தீர்மானம் பாராளும் மன்றில்

வரும்; அங்கும் உறுதிபெறும் என்றுரைத்தார் சரவா!
மனம்துடித்தார் பாரதியார், வாவேசு ஐயர்
அரவிந்தர், சீனிவா சாச்சாரி முதலோர்!
அழகுதமிழ் ஏடொன்றைப் பறக்கவிட்டார் கவிஞர்
தெருவெல்லாம் சொற்பெருக்கைப் பாய்ச்சினார் அன்னார்!
"திரண்டெழுவீர் மக்களே, பிரஞ்சிந்தி யாவைத்
தரப்போகும் பிரஞ்சியர்க்கு மறுப்பொன்று வரைவீர்"
என்றுரைத்தார் பாரதியார்! தந்திபறந் தனவே!

எட்டாநாள் பிரஞ்சியர்கள் பதில்தந்தி தந்தார்
"இந்துபிராஞ் சுத்தலத்தை விற்கும்நோக் கத்தை
விட்டுவிட்டோம்" என்பதுதான் அத்தந்திச் செய்தி
விரைவாக அச்செய்தி அரவிந்தர் வீட்டில்
எட்டியதும் பாரதியார் பூரித்தார் இங்கே
எப்போதும் பிரஞ்சிந்தி யாஇருக்க வேண்டும்
அட்டியின்றி இப்போதே ஆங்கிலே யர்கள்
அகன்றுவிட வேண்டும்இந் நாட்டைவிட் டென்றார்.

- தினமணி சுடர் பாரதி அனுபந்தம் 5-9-54

1954

138. புதுவையைப் பற்றி பாரதி அறிக்கை

(எண்சீர் விருத்தம்)

சைகோனில் அதிகாரி, சரவான் என்னும்
தனித்தமிழர் புதுவையிலே பிறந்த செம்மல்
பையவே விடுமுறையும் பெற்று நேரே
பாரீசு சென்றங்கே இருக்கு நாளில்
ஐயகோ புதுவைமுதல் ஐந்தூர் தம்மை
ஆங்கிலர்பால் ஒப்படைக்கும் சட்ட மொன்று
வையமுயர் பாரீசு சட்ட மன்றில்
வரப்போவ தாய்அறிந்தார். மனம்பதைத்தார்.

ஆங்கிலவர் தமைஎதிர்த்துப் புதுவை வந்தார்
அப்புதுவை ஆங்கிலவர் கைக்குப் போனால்
தாங்குவரோ அரவிந்தர் ஐயர் என்றே
தந்திஅர விந்தர்க்கே சரவான் தந்தார்.
ஈங்கதனைக் கண்ணுற்றார் அரவிந் தர்தாம்
இருவிழியால் ஏற்றம்போட் டிறைத்தார் கண்ணீர்
பாங்கிருந்த தோழரிடம் சேதி சொன்னார்
பாரதியார், அரவிந்தர் அழுகை கண்டார்.

போங்காணும் அழுகின்றீர், என்று சொல்லிப்
புறப்பட்டார் குருசாமி அச்ச கந்தான்.
வாங்கினார் தாள்ஒன்றை, இறகெ டுத்தார்.
வரைந்திட்டார் ஓர்அறிக்கை. அச்ச டித்தார்.
யாண்டுமதை மக்களிடம் பரப்பச் சொன்னார்
இருபதாயி ரம்படிகள் பறக்கக் கண்டார்
பாங்குயர்ந்தார், பணக்காரர் கற்றார் மற்றோர்
பாரீசுக் கேவரைந்தார் ஒருவிண் ணப்பம்.

பாரதியார் வரைந்தஅவ் விண்ணப் பத்தில்
பத்தாயி ரம்பேர்கை யொப்ப மிட்டே
புண்பட்ட நெஞ்சத்தின் மறுப திப்பைப்
போக்கினார் பாரீசு சட்ட மன்றில்

கண்பட்ட உடனேயே மன்றத் தார்கள்
கைவிட்டார் ஐந்தூரை விற்கும் நோக்கம்.
அண்ணலார் பாரதியார் வரைந்த அந்த
அறிக்கைதன் சுருக்கத்தை உரைக்கக் கேளீர்:

பாரீசுக் குடியரசின் தலைவ ரே_எம்
படைஅமைச்சே முதலமைச்சே
சீரான புதுவைமுதல் ஐந்தூர் தம்மைத்
திறமாக ஆளுகின்றீர் இருநூ றாண்டாய்
ஈரமிலா நெஞ்சத்தார் ஆங்கி லர்பால்
எமைஒப்ப டைப்பதையாம் விரும்ப வில்லை
தூரத்தே ஆப்பிரிக்கக் காடு வாங்கத்
தூயராம் எமைவிற்றல் சரியா காது.

குடியரசின் தத்துவத்தை முதற்கண் யார்க்கும்
கூறியே செயற்படுத்திக் காட்டி னீர்கள்
இடிஇடிக்கும் மழைபெய்யும் அவற்றை முன்னே
இங்குள்ளார் யாவரையும் கலப்ப தில்லை.
முடியரசும் தன்குடியை விற்ற தில்லை.
மூதறிஞர் மக்களன்பர் நடத்து கின்ற
குடியரசே எம்கருத்தைக் கேளாமே
குடியுரிமை பாராமே விற்க லாமோ.

கொஞ்சநாள் இனியும்எமை ஆண்டி ருப்பீர்
கொடுமைசெயும் ஆங்கிலரை இங்கி ருந்து
கொஞ்சநா ளில்தொலைப்போம் அன்னார் ஆட்சி
கூண்டோடு கைலாசம் போன பின்னர்
நெஞ்சத்தில் அன்பிருந்தால் எம்மி டத்தில்
நீணிலத்தை ஒப்படைத்தல் அறமே ஆகும்.
எஞ்சாமல் எம்கருத்தை இயம்பி விட்டோம்.
இப்படிக்குப் பிரஞ்சிந்தி யாவின் மக்கள்.

குறிப்பு :

இந்தப் பாடலையும் இதற்கு முந்தைய பாடலையும் தனது நூலில் (பாட்டுப் பறவைகள்) பதிவு செய்துள்ள மன்னர் மன்னன் இப்பாடலின் இறுதியில் இரண்டு பாடல்களுக்கும் பொதுவான குறிப்பாகப் பின்வரும் சிறுவிளக்கத்தை அளித்துள்ளார்.

“முதல் உலகப்போர் முடிவை ஒட்டி பிரிட்டிஷ் அரசும் பிரெஞ்சு அரசும் ஓர் உடன்பாட்டுக்கு வந்து புதுவை பிரெஞ் சிந்தியப் பகுதிகளுக்கு மாற்றாக ஆப்பிரிக்கப் பகுதிச் சிறு தீவுகளை பிரான்ஸ் ஏற்றுக்கொள்ளட்டும் என்று பிரிட்டிஷ் அரசு முன்மொழிந்தது.

இதற்கான சட்ட வரைவு பிரான்ஸ் நாட்டின் நாடாளு மன்றத்தில் அளிக்கப்பட்டது. புதுச்சேரி பகுதிகளை பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளாக ஆக்கிவிட்டால் இங்கே அடைக்கலமாய் உள்ள பாரதியார், அரவிந்தர், வ.வே.சு. போன்றவர்களையும், சிறையிலிட்டுவிடலாம் என்ற தந்திரம் பலித்துவிடும் போல் இருந்த நிலையில் பாரதியார் வெகுண் டெழுந்து இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்றத்திற்கு அறிவிக்க ஏற்பாடு செய்தார். புதுவையில் வாழ்ந்த புரவலர்கள், அரசின் முதன்மைப் பொறுப்பிலிருந்தவர்கள் பாரதியின் கருத்தை ஏற்று செயல்பட்டதையும் அறியலாம்.”

- பாட்டுப் பறவைகள் ப. 307-309

25.12.1955

139. எண்ணருங் கலைகள் ஆய்ந்த அறிஞர்

பறந்தபல் லாயிரம் பறவைகள்; சனார்த்தனம்
உறையும் உறையுள் உற்றன; அவைகள்
அறைந்தன. "அறிஞரே தோழனாம் இதழை
மறந்தோம் இல்லை. மறந்தாலும் அரிதே!
மீண்டும் வெளிவர வேண்டும்" என்றன.
நாட்டு மக்கள் தீட்டிய அஞ்சற்
கூட்டம் கூறியது கேட்ட சனார்த்தனம்
தோழன் தனது தொண்டு தொடங்குவான்
என்ற உறுதி ஈந்தார் வாழ்க!
'தோழன்' திராவிடம் வாழும் வகையில்
பாங்குயர் கருத்துத் தாங்கி எழுவான்.
ஏனெனில் சனார்த்தனம் எண்ணருங் கலைகள்
ஆய்ந்த அறிஞர் அன்றோ?
தோய்ந்தின் புறுக திராவிடர்! வாழ்கவே!

குறிப்பு:

'தோழன்' என்னும் பெயரில் டார்ப்பிடோ ஏபி. சனார்த்தனம் நடத்திய இதழில் (25-12-1955) வெளியான கவிதை இது.

- பெரியாரே என்தலைவர் (நூ.), ப. V

140. கொய்யாக்கனி - நூல் மதிப்புரை

கள்ளம் எப்படி அப்படிக்
கடுகளவும் இலாதநெஞ் சினார்முக்
கனிகள் எப்படி அப்ப்டிப்
போன்றமுத் தமிழின்மே லன்பர்
குள்ளம் எப்படி அப்படி
இலாப்பெருங் கொள்கை யுடையார்
குரைகடல் எப்படி அப்படிக்
குணநிறை துரைமா ணிக்கனார்
வெள்ளம் எப்படி அப்படிச்
செந்தமிழ்ச் சொற்பெருக் கேற
மேன்மை எப்படி அப்படிப்
பட்டதோர் நடையிற்றம் நல்ல
உள்ளம் எப்படி அப்படித்
தந்ததோர் உயர்தமிழ் நூல்தான்
உலகம் எப்படி அப்படிப்
பட்டதோர் நிலைகொள்கொய் யாக்கனியே!

குறிப்பு :

பாவலர் துரைமாணிக்கத்தின் (பாவலரேறு பெருஞ்சித்திர னார்) தொடக்கக்காலப் படைப்பாகிய **“கொய்யாக்கனி** *(சனவரி 1956) காவியத்திற்குக் கவியரசர் பாரதிதாசனார் உவந்து அளித்த மதிப்புரை.”*

141. அன்றைய கருத்து இன்றைய கடமை

செந்தமிழை நாம்மீட்க வேண்டும் மேலும்
செந்தமிழை ஆட்சிமொழி ஆக்க வேண்டும்
செந்தமிழர் நிலப்பகுதி இன்னும் உண்டு
திறத்தாலே அவைகளையும் மீட்க வேண்டும்;
செந்தமிழர் நாட்டுக்குத் தமிழ்நா டென்ற
திருப்பெயரை நிலைநிறுத்த முயல வேண்டும்
செந்தமிழ்த்தாய் பெறஇருக்கும் வெற்றிக் கெல்லாம்
செங்கோட்டை வெற்றிதான் முதல்வி ளைச்சல்!

தளையகன்ற 'செங்கோட்டை' இளையான் மீண்டும்
தமிழ்நாட்டின் கைப்புறத்தில் இணைந்த தான
களியூட்டும் விழாப்பாடி ஆடு கின்றோம்!
கனல்தாண்டிப் பனிமலர்ப்பூங் காவ டைந்தோம்
குளிரூட்டும் தமிழகத்தின் பண்பா டல்லால்
குறையூட்டும் பிறர்நாற்றம் பொறுக்க மாட்டோம்;
இளைஞர்களே, முதியோரே, தங்கை மாரே!
தாய்மாரே எல்லார்க்கும் ஒருவிண் ணப்பம்.

தூய்தான கோயிலெலாம் தமிழே வேண்டும்
அலுவலகத் துறைதோறும் தமிழே வேண்டும்
ஆயகலை அனைத்திலுமே தமிழே வேண்டும்
அடுக்களையிலே[1] அங்கணத்தில் தமிழே வேண்டும்
வாயில்தோறும்[2] வாணிகத்துப் பலகை, அச்சு
வாய்ப்பனைத்தும் எவ்விடத்தும் தமிழே வேண்டும்!
தீயிலிட்டுப் பொசுக்கும்வகை செய்ய வேண்டும்
செந்தமிழே அல்லாத பிறசொல் கண்டால்!

வாழியவே செங்கோட்டை மக்கள் நன்றே
வாழியவே செந்தமிழே எங்கும் என்றும்!
வாழியவே தமிழ்ப்புலவர் ஓயாத் தொண்டு
வாழியவே தமிழரது நல்லொ ழுக்கம்!
வாழியவே தமிழரறம் வாய்மை அன்பு
வாழியவே பழந்தமிழன் பொருளில் தூய்மை!
வாழியவே பழந்தமிழ்நூல் நல்வி ளைச்சல்
வாழியவே தமிழ்நாடு; தமிழர் நன்றே!

குறிப்பு:

'பாரதிதாசன் குயில்' இதழில் "செங்கோட்டை நிலப்பகுதி தமிழகத்தோடு இணைந்தபோது நிகழ்ந்த விழாவிற்குப் பாவேந்தர் விடுத்திருந்த வாழ்த்து இது. இதனை நமக்கு உதவியவர் சே. சாகுல் அமீது (தமிழாசிரியர், அரசினர் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, கெங்கவல்லி - சேலம் மாவட்டம்)" என்னும் முன் குறிப்போடு இப்பாடல் வெளியிடப் பட்டுள்ளது.

"செங்கோட்டையை மட்டும் - பூகோள அமைப்பு காரணமாக - திருநெல்வேலி மாவட்டத்திலே சேர்த்துவிட்டு மற்ற நான்கு தாலுக்காக்களை (தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு) "கன்னியாகுமரி" என்னும் பெயரில் தனி மாவட்டமாக்க - தமிழக அரசின் விருப்பப்படி மத்திய அரசின் மசோதாவில் வழிவகுக்கப்பட்டது.

மொழிவாரி ராஜ்யமசோதா, டில்லி மக்கள் அவையிலும் சட்டமாக்கப்பட்ட பின்னர், 1956 நவம்பர் முதல் தேதியிலே நடைமுறைக்கு வந்தது" என்பார் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. இதிலிருந்து இப்பாடல் 1956 இறுதியில் இயற்றப்பட்டிருக்க லாம் எனக் கருத முடிகிறது.

1. 'அடுக்களையில்' என இருப்பின் நன்று.
2. 'வாயில் தொறும்' என இருப்பின் நன்று.

- பாரதிதாசன் குயில் 10-1-1968 ப-5.

புதிய தமிழகம் படைத்த வரலாறு (1986), ப. 517-518.

142. தமிழர் திருநாள்

காலை மலர்ந்தது, கண்மலர்ந்த தமிழர்தம் வீடுதோறும் தமிழ்மணக்க வாய்மலர்கின்றனர்.

ஈன்றபொன் னாட்டைவிட் டிந்நா டடைந்தோம்
ஈன்றபொன் னாடே இந்நா டாக
அல்லும் பகலும் உழைத்தோம் அந்தமிழ்ச்
சொல்லும் தமிழர் தூய வாழ்வும்
தோளும் வாளும் போல
நாளும் புகழோடு வாழ்க நன்றே!

- தமிழ்முரசு ஆண்டுமலர், சிங்கப்பூர், சனவரி 1957, ப.25

143. தமிழர் திருநாள்

தாயகம் எங்கள் தமிழகம் வாழ்க
தூயகம் மலையத் துணையகம் வாழ்கவே

ஊர்வலப்பாட்டு

எடுப்பு

இந்நாளே ஒரு நன்னாள் நம்
இன்பத் தமிழர் திருநாள்

உடனெடுப்பு

அன்னாய்! தமிழே! வாழ்க என்று
சொன்னால் உள்ளம் அமிழ்தே கொள்ளும்
இந்நாளே ஒரு நன்னாள் நம்
இன்பத் தமிழர் திருநாள்.

அடிகள்

தாயகமே நீ வாழ்க எம்
தாயகமே நீ வெல்க
அமிழ்தென் றுன்னைப் பாடும் பாட்டில்
அழகும் புகழும் திகழும் வீட்டில்
இந்நாளே ஒரு நன்னாள் நம்
இன்பத் தமிழர் திருநாள்
கால்வைத்த நிலம் வாழும் - தமிழ்
கனியின் சாறே பாயும்
தோலாத் தமிழர் பெருமை வாழ்த்தே
சொல்லிச் சொல்லி ஆடுவம் கூத்தே
இந்நாளே ஒரு நன்னாள் நம்
இன்பத் தமிழர் திருநாள்
தமிழ்நான் மறையும் குறளும் பொருள்
தத்துவ நூலும் பிறவும்

நமரே தந்தார் உலகுக் கெல்லாம்
ஞாலத் தமிழர் வாழிய என்போம்
இந்நாளே ஒரு நன்னாள் நம்
இன்பத் தமிழர் திருநாள்
மாடும் கன்றும் வாழ்க நெல்
வயலும் பொழிலும் தழைக
ஆடவர் மகளிர் நாளும் காக்கும்
அன்பும் அறமும் வாழ்க வாழ்க
இந்நாளே ஒரு நன்னாள் நம்
இன்பத் தமிழர் திருநாள்

- தமிழ்முரசு ஆண்டுமலர், சிங்கப்பூர், சனவரி 1957, ப. 25

14.1.1957

144. மனத்துக்கண் மாசிலன்...

குறள்வெண்பா:

அன்பார் அரங்கின் தலைவரே! தோழரே!
என்பா இயம்புவேன் இங்கு.

எண்சீர் விருத்தம்

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீரபிற என்றார் தேவர்
எனக்கந்தப் பாட்டின் பொருளின்ன தென்றே
இயம்புகஎன் றாள்தோழி. இத் தென்பாங்
கினத்துக்கோர் நற்றிரு நாளில் மகிழ்ச்சி
என்னுமோர் தீம்பால் மனப்பானை தன்னில்
இனித்திடப் பொங்கி வழியுமிந் நாளில்
இன்பத்தைக் கேட்டனை நன்றென்றான் தோழன்.

ஆசிரியப்பா

ஒண்டொடி! பொய்யன் மனமாசு உடையான்.
பொய்யினாற் போந்த அம், மன மாசுதான்
உய்யொணாத் துன்பம் உண்டாக்கும். ஆனால்
மெய்யினை அன்னவன் மேற்கொள் வானெனில்
அம்மன மாசும் அகலும் அதனால்
அந்த அளவவன் அறத்தைப் பெறுவான்

அவ்வறத் தளவவன் இன்பம் அடைவான்
ஒருபண்பு ஒருபடி அறத்தைச் சேர்க்கும்
ஒருபடி அறம்ஒரு படிஇன்பம் ஊட்டும்
தோழியே! இன்னும் சொல்லக் கேட்பாய்!
அழுக்கா றுடையான் இழுக்கே அடைவான்.

அன்னவன் மனமா சுடையவன் அன்றோ?
பிறர்நலம் கண்டு மகிழ்வதோர் பேறு
பெறுவா னாயின் அறம்வரும் அதனால்
அந்த அளவவன் இன்பம் அடைவான்.

பொன்வண்டு விழியாய்! இன்னும் கேட்பாய்
மேலே நான்தான் விளம்பிய வாறே
மெய்ம்மை தன்னை மேற்கொளல் ஒன்றும்
பிறர்நலம் கண்டு மகிழ்வதோர் பெற்றியும்

ஆகிய இரண்டுபடி அறத்தைச் சேர்த்தவன்
இரண்டுபடி இன்பம் அடைய லாகும்

பண்பெத் தனைத்தோ அறம்அத் தனைத்தே
ஆதலா லன்றோ அறிஞர்க் கறிஞன்
மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
என்றான். அனைத்தெனல் அத்தனைத் தின்மரூஉ.

ஒவ்வொரு பண்பினால் ஒவ்வோ ரறம்வரும்
ஒவ்வோ ரறத்தால் ஒவ்வோரின்பமாம்
அன்றோ? ஆயின் எல்லாப் பண்பும்
நன்றாக் கொள்ளின் அறமெலாம் நணுகும்
இன்பம் முற்றும் எய்தலாம் அன்றோ
என்றித் தோழன் இயம்பிய அளவில்
தோழி மலைப்புடன் சொல்லு கின்றாள்:

எத்தனைப் பண்புகள் இருப்பவை உலகில்
அத்தனை யும்பெற ஆரால் முடியும்?
இன்பம் முழுதும் எய்துவ தெப்படி!
என்று கேட்ட தோழிக்கு நன்றே
தோழன் இசைப்பான்: வாழிஎன் தோழியே!
தவமெனும் தக்கதோர் பண்பா டுண்டே
எப்பண் புகளும் இருப்பன அதனில்
அறக்கூ றெல்லாம் அதற்குள வேர்கள்
இன்பம் அனைத்தையும் எய்தலாம் தவத்தால்!
தவமெனல் இன்னதென்று சாற்றுவேன் கேள்நீ!
தவஎன் பதற்கு மிகுதிஎன் புதுபொருள்!
அருளின் மிகுதிதான் அதுவென அறிவாய்.
தவச்சொல்இழிவழக் காகத் தனக்கோர்
மகர இறுதி பெற்றது மயிலே!
இன்னும் தவத்தைப் பற்றி இசைப்பேன்

அருள்மிகக் கொண்டே இருள்மிகு மக்கட்குத்
தன்னலம் நீக்கிப் பிறர்நலம் காக்கும்
தொண்டு செய்வதோர் தூய தன்மையாம்.
அத்தகு தவத்தைச் செய்தல் அரிதென
எண்ணுதல் வேண்டா இத்தமிழ் நாட்டில்
அத்தகு பெரியார் உள்ளார் அன்றோ?
இல்லை என்றால் இத்தமிழ் மக்கள்
இல்லா தொழிந்திருப் பார்கள் அன்றோ?

தவத்தை இல்லற நிலையி னின்றும்
துறவு நிலையிலும் தூயதிற் செயலாம்
தவத்தின் ஆற்றல் சாற்றவொண் ணாதது
எண்ணிய எண்ணியாங் கெய்துவர் தவத்தினர்

கூற்றம் குதித்தலும் கூடும் தவத்தோர்க்கு
நிலமிசை நீடு வாழ்வார் தவத்தினர்
இன்ப மன்றித் துன்பம் சேரா!

இனிமேல் இரண்டாம் அடியைப் பற்றி
மகளிர் விளக்கே! விளக்கம் உரைப்பேன்;

ஆகுல நீர பிறஎனில் இதன்பொருள்
மாசு படிந்த மனங்கா ரணமாய்த்
தோன்றும் ஒருவனின் சொல்லும் நடிப்பும்
விளம்பரத் தன்மை கொண்டவை என்பதாம்.

மனத்தது மாசாக மாண்பினர் போல
இனத்தவர் தம்மை ஏமாற்று வாரவர்
உலகுக்கு ஒழுக்கம் பயிற்றிய நாட்டில்
சிலர்இவ் வாறு திரிவதும் உண்டோ
என்று கேட்க எண்ணுகின் றனையா?
ஆம்எனில் நீஓர் அடுக்களைப் பூச்சி!
அதோபார் அடாச்செயல் கூட்டம் ஒன்றை.
கேள்அக் குரலின் கீழ்மைக் குரலை!

பல்லாண் டின்பின் பைந்தமி ழர்க்குச்
செல்வமாய்க் கிடைத்த செம்மைத் தமிழனை,
தாழ்த்தப் பட்டுள தமிழர்க் குழைப்பதே
வாழ்க்கைப் பயனென மதிக்கும் தமிழனை,
நற்றமிழ் மக்களை நம்பி மறைந்துவாழ்

புற்றுப் பாம்பைப் புதைக்கஎண் ணியவனை(த்)
தோள்வலி மிக்க தூயனை, நாட்டில்
ஆள்வலி மிக்க அன்பனைச் சற்றும்
அறந்தவ றாத ஆட்சி யாளனை
மறந்து எதிர்ப்பது மாண்பா குவதா?
யாமே நல்லவர் யாமே வல்லவர்
எமையே தமிழர் ஏற்க வேண்டும்
ஆதர வெமக்கே அளிக்க வேண்டும்
என்று கலகம் இழைப்பது மேன்மையா?
இன்பத் தமிழர் நோக்கம் என்ன?

பல்லாண் டாய்நாம் பண்ணிய தவந்தான்
நல்ல தமிழனை நமக்கீந்த தென்றே
அன்னவன் வெல்கஎன் றார்க்கின் றாரே.
கழுகின் எஃகுவிரல் கடிந்து தமிழரை
முழுது காத்த முதன்மைத் தமிழன்
இனியும் ஆட்சி எய்துக! எங்கள்
ஆதர வெல்லாம் அவனுக் கே!என
அவன்தோட் புறத்தை ஆரமொய்த் தனரே!

தீர வேண்டிய குறைபல! தீந்தமிழ்
வேரில் மொய்த்த பூச்சிகள் மிகப்பல!
தன்மேனி பெற்ற புழுதி தவிர்ந்து
பொன்மேனி பெற்றான் பொய்யில்லாத் தமிழன்
என்று வையம் இயம்பவைக் கும்பெருந்
தகையினை நிலைபெறச் செய்வதா? தமிழர்
பகையினை நிலைபெறச் செய்வதா பகர்வாய்!
தவத்திறம் கொள்ளுதல் வேண்டும் தமிழர்கள்!
தமிழன் ஒருவனின் தகுதி கண்டால்
அமிழ்துண் டதுபோல் மகிழ்தல் வேண்டும்!
தமிழர்பால் ஒற்றுமை தழைக்க வேண்டும்!
தமிழ்வாழ்ந் தால்தான் தமிழர் வாழ்வார்!
தமிழ்மீண் டால்தான் தமிழர் மீள்வார்!

அறமே ஓங்குக! இன்பம் ஓங்குக!
மறமே வீழ்க! மங்கையர்க் கரசியே!
தமிழர் யாவ ரும்தனிப் பொங்கல்
நன்னா ளிதனில் மகிழ்ச்சி நண்ணினார்
இந்நாள் போலத் தமிழர் என்றுமே

வாழ்க! செந்தமிழ் வாழ்க!
வாழ்க தமிழகம் வளமெலாம் பெற்றே!

குறிப்பு :

'14-1-1957 பொங்கல் விழா நாளில், திருச்சி வானொலியில் புரட்சிப் பாவேந்தர் நிகழ்த்தியது' என்னும் குறிப்புடன் **'தமிழ்முரசு' கிழமை இதழின் (புதுவை) 14-1-1960 ஆம் நாளிட்ட ஆண்டுமலரில்** *(ப. 5-8)* இப்பாடல் வெளியிடப் பெற்றுள்ளது.

2.5.57

145. ஓவியர்க்கு வாழ்த்து

என்னையான் இனிது கண்டு வியந்தேன்!
கண்ணாடி யிலன்று: கருநிழற் படத்தில்
அன்று : பலர்புகழ் இன்ப ஓவியப்
புலவன் பெனடிக்ட் எழுதுகோல் புனைந்த
நிலவு வெண்படந் தன்னில் நலமுடன்
என்னைநான் இனிது கண்டு வியந்தேன்.

என்னைநான் எதிரிற் காண எழுதிய
வன்மைப் பெனடிக்ட் தன்னை நானும்
பார்த்தேன் அன்னோன் பருவுட லினையும்
பாரளவு விரிந்த உள்ளப் பரப்பையும்
ஓவியத் தாலதை உரைத்தேன் ஆயினும்
பாவின் திறத்தால் பகரு கின்றேன்.
இற்றைக் கெல்லாம் கேட்பினும் இனிப்புக்
குன்றாத் தமிழில் அன்பு குழைந்த
பேச்சினில் - பெனடிக்ட் பிறர்நலத் தவாவின்
வீச்சினைக் கண்டு வியந்துளேன் பன்முறை
நாட்டு நலத்தை நல்லிசை கூட்டிப்
பாட்டுப் பாடினான் ஒருமுறை நானதைக்
கேட்டு நல்லின்பக் கேணியிற் குளித்தேன்
பைந்தமிழ் இலக்கியச் சோலையிற் பறித்த
செந்தேன் மலர்சில என்முன் சேர்த்தான்
தமிழறிவு கண்டுநான் அமிழ்திற் குளித்தேன்.

பயனுறு மகன்இப் பாருக்குப் பெனடிக்ட்
அந்தப் பெரியோன் அரிய உள்ளம்
கலைவாழ் வதனில் உலகைச் சேர்த்து
நல்லதோர் அமைதியை நாட்டலாம் என்பதாம்
இவ்வருந் தொண்டினை இலங்கையில் தொடங்கி
இலங்கையின் குருதியோ டிணைந்த தான
நாவலம் பொழில்வரை நன்றாற்றி யுள்ளான்.
அயல்நாடு களெல்லாம் அக்கலை வல்லனை

அழைத்திடும் என்பதை இன்றுநான் அறிவேன்
தழைத்திட வேண்டும் அன்னோன் தனிப்புகழ்!
அறிஞன் பெனடிக்ட் ஆர்வம்
நிறைவு பெறுக! நீடு வாழியவே!

குறிப்பு :

இப்பாடல் பாவேந்தரோடு மூன்றுமாதக் காலம் பழகி அவர் உருவத்தை அவரது வேண்டுகோளின்படி இரண்டாம் முறையாக 2-5-57 அன்று வரைந்துகாட்டிய இனவுணர்வு மிக்க இலங்கை ஓவியர் ச. பெனடிக்ட் அவர்களைப் பாராட்டி அப்பொழுதே பாவேந்தர் மகிழ்வுடன் எழுதியளித்தாகும். ஓவியப்பாவலர் மு. வலவன் நடத்திய **'வண்ணச்சிறகு' (அக்டோபர் - நவம்பர் 1975, ப. 18-19)** இதழில் இப்பாடல் அளிக்கப்பட்டுள்ளது.

146. பாரதியின் விடுதலை வேட்கை

விடுதலை எவர்க்கும் பயன்பட வேண்டும்
விளைந்ததை முன்னின் றறுவடை செய்வோர்
நடுநிலை பிறழா திருந்திடல் வேண்டும்
நாடெலாம் வாழ்வதிற் கேடேதும் உண்டோ
கெடுதலை சிலர்கொள ஆள்வதோர் ஆட்சி
கீழ்என்றும் மேலென்றும் உள்ளவேற் றுமையை
முடுகிடச் செய்திடும் அதனால் அந்தோ
முற்றாது முற்றாது விடுதலை நெற்கதிர்

விடுதலை, விடுதலை, விடுதலை என்று
விடுதலை வேட்கை முழக்கிய பாரதி
கடையென உளறும் பறைய ருக்கும்
கருத்திலார் இகழும் புலைய ருக்கும்
விடுதலை விடுதலை விடுதலை என்றார்
வேற்றுமை பார்ப்பது கெடுதலை அன்றோ
வடுநீங்கு பாரதி விடுதலை வேட்கை
மாசிலா உணர்வினில் எழுந்ததென் றுணர்க.

சாதிகள் இல்லை என்றார் பாரதி
தாழ்வுயர் வுரைத்தல் பாவம் என்றார்
பாதிக்கு மேலுள தமிழர் நெஞ்சம்
பஞ்சுப டாப்பாடு படுகின்ற தென்றால்,
தீதுக்குத் தானா இந்த விடுதலை?
சிலர்க்கு மட்டுமா இந்த விடுதலை
காதிலோர் நல்லிசை கேட்க வேண்டும்
கைவிலங் ககன்றது தமிழ்த்தாய்க் கென்றே.

விடுதலை எவர்க்கும் எதிலும் என்றார்
வேம்பென் றார்சிலர் இந்த அமிழ்தை!
வடவர் கண்ணுக்கு வெண்ணெயாம் தெற்கில்
வாழ்வார் கண்ணுக்குச் சுண்ணாம்பாம் என்று
தொடரும்ஓர் தீயசொல் மறைந்திட வேண்டும்
தொட்ட இடமெலாம் "நிகர்" காண வேண்டும்
அடிமைதீர் பாரதி விடுதலை வேட்கை
அன்பினில் அறத்தினில் எழுந்ததென் றுணர்க.

- கலைக்கதிர் விடுதலைப்போராட்ட மலர் ஆகஸ்டு 1957, ப. 77.

14.5.58

147. நல்லறம் வாழ்க!

கொல்லாமை ஒன்று! கொல்லல் ஒன்று!
முன்னதே நன்றென முதன்முதல் சொன்னவன்
நானில நாக ரிகம்தொடங் கியவன்

அறநெறி ஒன்று பாவம் ஒன்று
முன்னதால் மன்னுயிர்க் கின்னாசெய் யாமையை
உலகிற்கு முதற்கண் உரைத்தவன் எவனோ
அவன்நாக ரிகத்தைத் தொடங்கிய அறவோன்

இரக்கம் ஒன்றுமற் றிரங்காமை ஒன்று
முன்னதால் உயிர்க்கெலாம் இன்னல்செய் யாமையை
வையத்து முதலில் வழுத்திய மேலோன்
நாகரிக வித்து நாட்டிய பெரியோன்

உடலால் சொல்லால் உளத்தால் உயிர்கட்குக்
கெடுதல்செய் யாமையை முதன்முதற் கிளத்தியோன்
சமணறத் தலைவனே ஆயின் அன்னோன்
இவணுறும் உயிர்க்கெலாம் அருள்தந்தை ஆவான்.

இன்னுயிர்க் கின்னா செய்தலே அறமென
முன்னர் ஆரிய நான்மறை மொழிந்தோர்
மக்கட் கருவழி நச்சுப் பூச்சிகள்
என்பதை எண்ணுங் காலை மன்னுயிர்க்
கின்னாசெய் யாமையை இனிதுரைத் தவனை
என்னென்று போற்றுதும் என்னென்று போற்றுதும்

சமணறம் தமிழால் தமிழர்க்கு நல்க
"நல்லறம்" என்னும் நல்லிதழ் வந்தது
நாம்அதை வரவேற் கின்றோம்
பூமிசை வாழ்க என்று புகன்றே.

- "நல்லறம்" 14-5-58, குயில் கிழமை இதழ், 1-6-58, ப. 11

1.6.58

148. தமிழர் எழுக!

தமிழ்நிலத்தில் தமிழான பயிர்விளைச்சல் குறைவு!
தமிழ்நிலத்தில் அயல்மொழியாம் களைவிளைச்சல் மிகுதி!
தமிழ்நிலத்தில் தமிழ்க்கொள்கை எனும்விளைச்சல் குறைவு!
தமிழ்நிலத்தில் அயற்கொள்கைக் களைவிளைச்சல் மிகுதி!
தமிழ்நிலத்தில் தமிழ்ஒழுக்கப் பயிர்விளைச்சல் குறைவு
தமிழ்நிலத்தில் அயலொழுக்கக் களைவிளைச்சல் மிகுதி!
தமிழர்களே! களைநீக்க வேண்டாமா? உங்கள்
சமையஉளத் தாலன்றித் தமிழுளத்தால் சொல்க!

தமிழ்நிலத்தில் "மக்கள்நிகர்" எனும்விளைச்சல் இல்லை!
தமிழ்நிலத்தில் சாதியெனும் களைவிளைச்சல் மிகுதி
தமிழ்நிலத்தில் "ஒன்றுதெய்வம்" எனும்விளைச்சல் குறைவு
தமிழ்நிலத்தில் உருவணக்கக் களைவிளைச்சல் மிகுதி!
தமிழ்நிலத்தில் "தன்னுரிமை" எனும்விளைச்சல் இல்லை!
தமிழ்நிலத்தில் அயலாட்சிக் களைவிளைச்சல் மிகுதி!
சமையஉளத் தால்இதனை எண்ணித்தூங் காதீர்!
தமிழுளத்தால் எண்ணிடுவீர் களைநீக்க எழுவீர்!

- குயில் கிழமை இதழ் 1.6.58, ப. 1

1.6.58

149. இந்நாள் காங்கிரசு

பாடும் கடலும் படுவெயி லால்அழும்
கோடைக் கொடுமை பொறாமல் ஓடிடும்
ஓநாய்க் கூட்டம் உண்ணும் சேற்றுக்
காட்டுக் குட்டை இந்நாள் காங்கிரசு!
நல்ல வர்க்கதில் இடமே இல்லை.
தீய எண்ணம் மனத்தைத் தீய்த்தலால்
சுரண்டும் எண்ணம் தூண்டுதல் செய்ததால்
இரும்ப கப்பையும் கையு மாக
நிறைந்தனர் தீயர்காங் கிரசில்
வறண்டது குட்டையும்! தமிழகம் வாழ்கவே.

- குயில் கிழமை இதழ், 1-6-58, ப. 15

1.6.1958

150. அறுவரைக் கொன்ற அரசியல் வீழ்க!

அறுப தாயிரம் ஆண்டுமுன் இருந்தஓர்
கல்லா யுதத்தை இன்றைய அரசினர்
கண்டு பிடித்துக் கையாள் கின்றனர்
அவ்வா யுதத்தை ஆராய்ந் தவர்அது
காட்டு மிராண்டித் தனம்என்று கண்டனர்.

எறியப் பட்டவர் இரும்பு டம்பையும்
அறிஞர் ஆக்கிய நீதி தன்னையும்
அரசியல் ஒழுக்கம் அறம்எவற் றையும்
கிழித்துக் கொண்டு கிடுகிடு வென்று
பாய வல்லதாம் அரசினர் படைஅது!

ஒவ்வாச் சாதி ஒழிய வேண்டினர்!
அவ்வழிக் கிளர்ச்சி அறத்தாற் புரிந்தனர்
அவ்வள வேதான், அவ்வள வேதான்!
கடுக டுத்தது காட்டுமிராண் டித்தனம்
சிறைப்பட் டவர்கள் சிறுவயிற் றுக்குக்
கூழு மிழந்தபின் குடலு மிழந்தனர்
நாலா யிரவரில் அறுவர் நல்லுடல்கள்
தோலா யினவே, தோற்றன உயிரையே.

தமக்கென வாழாப் பிறர்க்குரி யாளராம்
தமிழரைச் சாவின் வாயில் தள்ளிற்றுக்
காட்டு மிராண்டித் தனம்அது கண்டோம்
வீழ்க இன்றைய இந்தியப்
பாழாம் அரசியல் படுக்கை எழாமே!

- குயில் கிழமை இதழ், 1-6-58, ப. 7

8.6.58

151. சாதி மறுப்பு

பார்ப்பனர்மே லானவரோ? பாரிலுள்ளோர் தாழ்ந்தவரோ?
தீர்ப்பறிய வேண்டின்நீ தேவர்குறள் - பார்ப்பாய்:
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்.

- குயில் கிழமை இதழ், 8-6-58, ப.10

8.6.58

152. மதமறுப்பு

சமையக் கணக்கர்கள் சாற்றுவன கேளேல்
அமைவுதனை வேண்டின்நீ தேவர் _ தமிழைப்பார்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

- குயில் கிழமை இதழ், 8-6-58, ப.14

17.6.58

153. தாய்சொல் தட்டேல்

பட்டுக் குஞ்சுகள் எட்டைக் கோழி
இட்டுக் கொண்டே போகும்
எட்டுக் குஞ்சும் தாய்சொல் லுக்குக்
கட்டுப் பட்டே மேயும்
தட்டுக் கெட்டுப் போனால் ஒன்று
தட்டிப் போகும் பருந்தே
விட்டுத் தப்பி னாலும் பூனை
விட்டுவி டாது விருந்தே.

- குயில் கிழமை இதழ், 17-6-58, ப. 5

24.6.58

154. மொழிவெறியா கூடாது?

'மொழிவெறி கூடாது' என்று மொழிந்தார்
உமிழத் தக்க உளறுவாய்க் கக்கன்!
சொன்ன இச்சொல் தமிழர்க்குச் சொன்னசொல்!
"என்னசொல் கின்றோம் என்றெண் ணாமல்
சொல்வது கக்கனின் தனித்த சொத்தே!
போற்றி வாழும்இத் திருப்போற்றி யார்க்குச்
சோற்றுக் கெவரையும் போற்றத் தோன்றும்.

'வடவரைப் போற்றினால் வாழலாம். தமிழக்
கடையரைப் போற்றினால் ஒன்றும் காண்கிலோம்"
என்பது கக்கன் குறிக்கோள் என்க.

"தின்பது சாவது" எனும்சிறு கொள்கை
கக்கன் பிறக்கையில் ஒக்கப் பிறந்தது.
தமிழும் உயிரும் உடம்பும் தமிழன்!
இந்த மூன்றில் எதுகுறைந் தாலும்
தமிழன் இருப்பினும் செத்தவன் தானே!
நல்லறி வுலகைக் கேட்டால் நவிலும்:
ஒருநாட் டுக்கு மொழிவெறி உயிரென்று!
நல்லறி வுலகைக் கேட்டால் நவிலும்:
ஓரினத் திற்கு மொழிவெறி உணர்வென்று!
அடிமை நாய்கள் இதனை அறியா!
மானமி லார்இதை எண்ண மாட்டார்!
கழுகும் காண மறுக்கும்
அழிவுறு கட்டை திருந்துதல் எங்கே!

- குயில் கிழமை இதழ், 24-6-58, ப.3

24.6.58

155. நீவிர் எந்தக் கட்சி

வினா : *எந்தக் கட்சி ஐயா? - நீவிர்*
எந்தக் கட்சி ஐயா?

விடை : *எந்தக் கட்சியில் நல்ல கொள்கை*
இருக்கின்றதோ மெய்யா
அந்தக்கட்சி ஐயா நான்
அந்தக்கட்சி ஐயா!

வினா : *காங்கிரசு நன்றா? - ஐயா*
காங்கிரசு நன்றா?

விடை : *காங்கிரசு காரர் எல்லாம்*
காசடிக்கப் பார்ப்பார்!
காங்கிரசு கட்சிஎல்லாம்
தீங்கரசு கட்சி!

வினா : *சுத்திஅரி வாள்கட்சியை*
நத்துவிரோ நீவிர்?

விடை : *நத்துவாரை ஆசைகாட்டி*
நயவஞ்சகம் செய்யும்
எத்தர்களின் கட்சியிலே
வேலைஇல்லை எமக்கே.

வினா : *ஏர்காட்டும் கட்சியிலே*
இருந்ததுண்டோ நீவிர்?

விடை : *இருந்ததுண்டு மறுநாளே*
பிரிந்துபோன துண்டு.
ஆர்போவார் தமிழன்னை
சீர்அறியாக் கட்சி

வினா : *மா.போ.சீ.கட்சியிலே*
மகிழ்ச்சியுண்டோ உமக்கே?

விடை : தாய்பேரைச் சொல்லிக்காசு
தட்டுகின்ற கட்சி!
மா.போ.சீ. என்றாலே
சீ! போ! சீ என்பார்!

வினா : பார்ப்பனாரின் கட்சியிலே
பற்றுண்டோ உமக்கே?

விடை : காப்பான தம்தமிழை
இன்பத் தமிழ்நாட்டைத்
தீர்ப்பாரை நத்துபவர்
செந்தமிழர் ஆகார்!

வினா : நல்லதிரா விடர்கழகம்
பிடிப்பதுண்டோ உமக்கே?

விடை : நல்லதிரா விடர்கழகம்
மிகநல்ல இயக்கம்!
எல்லோரும் ஒன்றென்று
தொண்டுசெயும் இயக்கம்!

** வாழ்க திராவிடர் கழகம்!
வாழ்க தமிழ்நாடு!
யாழும் ஒரு பாய்புலியும்
இவள் என்னும் தமிழ்தான்
வாழ்க! அறம்வாழ்க! பெரி
யார் கொள்கை வெல்க!

- குயில் கிழமை இதழ், 24-6-58, ப. 13

24.6.58

156. அணிற்பிள்ளைக்குக் கிளிப்பிள்ளை

ஈந்து தந்த இருள்முத் துப்பழம்
வேம்பு தந்த வெயில்முத் துப்பழம்
இனித்ததேன்? கசந்ததேன்? கிளியே!
இனித்த தேன், கசந்த தேன் என்றுணர் அணிலே!

- குயில் கிழமை இதழ் 24-6-58, ப. 6

24.6.58

157. பெருகும் அன்பு

வியாழன் வீணாய்ப் போன போதிலும்
வெள்ளி மகிழ்ச்சியை விளைத்த போதிலும்
சனியாய் நம்மை வியர்வையால் தாக்கிய
ஞாயிறு தொலைந்ததே நல்ல வாய்ப்பாம்
திங்கள் எழுந்தது திருவுள ஒப்பம்நின்
செவ்வாய் மலரில்என் அன்புதன்
பெய்வாய் மலர ஆறாய்ப் பெருகுமே.

- குயில் கிழமை இதழ் 24-6-58, ப. 11

1.7.58

158. அவள் முகம்

மனைவிஎன் மடிமேல் இருந்தாள்! வானில்
நெடுமுகில் வெள்ளம் நீந்தி வந்த
கண்கவர் வெண்ணிலாப் பெண்ணைக் கண்டேன்
இருகை நீட்டி ஏந்தினேன் ஏந்தி
நிலவா என்றேன் முகம் "ஆம்" என்றது
முகமா? என்றேன், நிலவு
நகைபுரிந் "தாம்ஆம்" என்று நவின்றதே.

- குயில் கிழமை இதழ் 1-7-58, ப. 11

15.7.58

159. தி.க.வில் சேர்ந்த திருவாளர்க்கு வாழ்த்துப்பா

தீர்த்தகிரி நல்லதம்பி சித்தனொடு சின்னகண்
சீர்த்தி இராசு நடேசனும் - ஆர்த்தகுணச்
சின்னப்பன் வெள்ளையன் சிங்கார வேல்கதிர்
தன்னேர் இராமசா மியெனும் - இன்னர்
பெரியார் பெருங்கொள்கைப் பெற்றி வியந்து
திருவார் தி.க. வினிற் சேர்ந்தார் - அரிதுசெய்த
நுண்ணறி வாளர்கள் நூறாண்டு வாழ்கவே
வண்மை புகழ்எல்லாம் வாய்ந்து

- குயில் கிழமை இதழ், 15-7-58, ப. 3

15.7.58

160. ஓவியக் கலைத்திறம்

பற்கொம்பு மென்று கரிதொட்டுப் பண்ணிய
வெயிற்சுவர்க் கடற்கரைக் கலைத்திறம்
இயற்கைக் கடலினும் இனிதாயிற் றெனக்கே.

- குயில் கிழமை இதழ் 15-7-58, ப. 4

15.7.58

161. தச்சுக் கலைத்திறம்

அழகிய கருங்கல் பாவை என்றன்
கண்ணில் அழகெலாம் காட்டிப்
பண்ணொன்று காதிலும் பாடிய தென்னே!

- குயில் கிழமை இதழ். 15.7.58, ப. 5

29.7.58

162. க.து. விட்டுத் தி.க.வந்தனர் வருக! வாழ்க!

வடக்கு மாங்குடி நாக ராசனார்
வல்லம் படுகை செயராம னவர்கள்
கடையன் பார்ப்பான் அடிக்கண் ணீர்த்துளிக்
கட்சியின் கீழ்மை கண்டு விலகி
"இடக்குச் சாதி ஒழிக என்றும்
இத்தமிழ் நாடு மீள்க என்றும்
நடத்துபோர்த் திராவிடர் கழகம் போந்தனர்
நன்றே வருக!" என்றும் வாழியவே.

- குயில் கிழமை இதழ், 29-7-58, ப. 6

5.8.58

163. மீண்ட செல்வங்கட்கு வரவேற்பும் வாழ்த்தும்

கண்ணீர்த் துளிஎனும் உண்ணிகள் தொல்லை
எண்ணி மீண்ட தோழர்கள் இவர்கள்:
திருப்பத் தூரில் தேநீர் விடுதிக்
கண்ணன், மற்றும் அறிவுக் கண்ணு!
துரைசாமி என்னும் பொன்வேலைத் தோழர்!
நகைக்கடைத் தேவ ராசன் என்பார்
தேநீர் விடுதித் திகழரங்க சாமி
சாப்பாட்டு விடுதிச் சங்கரன் ராசா
முடிதிருத்து முதல்வர் கிருட்டின சாமி
இன்னுணவு விடுதி இராமன் என்பார்
நிலைநகை வாணிகம் கலைவாணி என்பார்
கொண்டவே காம்பரம் குயில்இதழ் விற்பார்
வெள்ளி வேலை முனிசா மிஅவர்
தையல் வேலைத் தகுமுரு கேசன்
இறைச்சி வாணிகம் எழிலுறு மாசி
இரும்பு வாணிகம் அப்துல் வகாபு
நாளும் பொதுப்பணிக் காளி யப்பன்
வண்டி வண்டியாய் நாட்டு மக்கட்குத்
தொண்டுசெய் ராம சாமித் தூயன்
ஆகியோர் திராவிடர் கழகம் அடைந்தனர்
வருக வருக வாழ்க!
திருநாட் டுக்குத் தொண்டு செய்யவே!

- **குயில் கிழமை இதழ்**, 5-8-58, ப. 3

5.8.58

164. காங்கிரசு

குத்தகைகள் நற்சலுகை கொள்ளாதார் காங்கிரசில்
எத்தனை பேர்கள் இருப்பார்கள்? - எத்தர்களும்
கத்தர்களும் வாழ்கின்ற காங்கிரசு வாழ்வதென்றால்
பெத்த பெருமாள் செயல்.

கத்தர் - பொய்யர், கத்து - பொய், பெத்த - பெரிய

- குயில் கிழமை இதழ், 5-8-58, ப. 12

12.8.58

165. பொதுப்பணம் அரோகரா!

துறைதோறும் வைத்தபொருள் அத்துறையோர் வீட்டின்
அறைதோறும் ஆட்டமிடும்; கேள்வி - முறையுண்டா?
பெட்டிப் பணமெல்லாம் கோவிந்தா கோவிந்தா
கட்டுக் கணக்கரக ரா!

துறை - டிப்பார்ட்மெண்ட்; துறையோர் - அலுவல்காரர்

- குயில் கிழமை இதழ், 12-8-58, ப. 5

12.8.58

166. மனத்துணைநாதர்க்கு வாழ்த்து

திருவார்ந்த தஞ்சை மனத்துணை நாதனே! செந்தமிழா!
ஒருமூன்றி லக்கம் தொழிற்கல்விக் காக உதவிசெய்தாய்.
பெருநன்றி! வாழ்க! பிழைசெய்து நாளும் பிழைத்துவரும்
ஒருசின்ன பார்ப்பும் நிறுவனம் சேரின் உடன்கெடுமே!

- குயில் கிழமை இதழ், 12.8.58, ப. 15

12.8.58

167. சாராய விற்பனை

ஊர்ச்சாரா யக்கடை ஒன்றிரண்டு முன்பெல்லாம்
காய்ச்சா இடமிந்நாள் கண்டதில்லை - காய்ச்சியதை
அப்பன்விற்பான் பிள்ளைவிற்பான் அம்மைவிற்பாள் போலீசுச்
சிப்பன்விற்பான்[1] *சேர்ந்துவிற்பான் சீப்பு.*

சிப்பன் - சிப்பந்தி
சீப்பு சீஃப் - தலைவன்
1. தளைதட்டுமிடம்.

- குயில் கிழமை இதழ், 12-8-58, ப. 7

12.8.58

168. வடமொழியில் சிபாரிசா?

தமிழ்தந்த சிவனார்க்கு
வடமொழியில் சிபாரிசா
சாற்றாய் என்று

தமிழறிகுன் றக்குடியார்
ஒருசொல்லால் ஒருசாட்டை
தருதல் கேட்டுச்

சிமிட்டாவைத் தூக்கியே
ஓடிவந்தார் பார்ப்பனர்கள்
சிறைப்ப தற்கே.[1]

அமைவாகச் சங்கரரும்
தூக்கிவந்தார் அடைப்பத்தை
அடங்கார் யாரோ?

1. 'சிரைப்ப தற்கே' என இருத்தல் வேண்டும்.

- குயில் கிழமை இதழ், 12-8-58, ப. 10

19.8.58

169. நாட்டில் மிடி இல்லையாம்

மிடிஇல்லை என்பார் அமைச்சர்! தம் வீட்டில்
மிடியேது? மெய்யாய் அரிசிப் - படி, அப்
படியே மலையாளம் சிட்டாய்ப் பறக்கும்
படிசொல்வார் அப்படிச்சொல் வார்.

- குயில் கிழமை இதழ், 19-8-58, ப. 8

19.8.58

170. செந்தமிழ் நாட்டுக்குத் திருநாமம்

திருநாமம் போட்டனர் செந்தமிழ் நாட்டுக்குத் தில்லியினோர்
*ஒருநூறு கோடியை ஓராண்டில் ஒட்ட உறிஞிவிட்டால்**
கருநூற்றுக் கொன்றாய்ப் பிழைத்தவர் கைகளும் ஓடெடுக்கும்
இருநாளைக் கென்னாமல் இன்றேநம் நாட்டை விடுவிப்பீரே.

* உறிஞி = உறிஞ்சி

- குயில் கிழமை இதழ், 19-8-58, ப. 11

19.8.58

171. இறைவன் பணித்ததே நம்பணி!

எடுப்பு

இறைவன் பணித்ததே நம்பணி என்றுசொல்
என் மனையாளிடம் குயிலே ஈரோட் (டிறைவன்)

உடனெடுப்பு

சிறையேநம் மாளிகை சிறைக்களி அமிழ்தே
செத்தாலும் சாகாத சொத்தாகும் புகழே (இறைவன்)

அடிகள்

குறிஒன்று நமக்குண்டு குயிலே வடவர்
கொட்டத்தை அடக்கிட ஒற்றுமை வேண்டும்
அறிவுண்டு நிறையாக ஆளும் திறமும் கொண்டோம்
ஆட்பட்ட தமிழ்நாட்டை மீட்கவேண்டும் என் (றிறைவன்)

தொழும்பே உயர்வென்று சொல்லிடும் பார்ப்பனர்
தொண்டரடிப்பொடி ஆழ்வார்க்கும் அஞ்சோம்
கழுவடைக் கட்சிகள் குலைப்புக்கும் அஞ்சோம்
கறையுற்ற தமிழ்நாட்டை மீட்க வேண்டும்என் (றிறைவன்)

தம்பட்ட உயர்வுக்கு தமிழே ஒழிக என்று
தம்பட்டம் அடிக்கின்ற தக்கைகட் கஞ்சோம்
வெம்பட்டும் மக்கள் என்று பகையை நத்தும்
வெம்பகைக்கும் அஞ்சோம் நாட்டைமீட் பீர்என் (றிறைவன்)

தெற்கு நாகரிகம் வடவர் உடைமைஎனும்
தெ.பொ.மீ. சேதுவாம் தீயோர்க்கும் அஞ்சோம்
நெற்பொதி தன்னை மலையாளம் ஏற்றிட
நின்றார்க்கும் அஞ்சோம் நாட்டைமீட் பீர்என் (றிறைவன்)

உறவுகொள் இலங்கையில் ஆயிரம் தமிழரின்
உயிர்க்கொலை செய்தாரை ஆதரித் தேவரும்
நெறியற்ற தில்லியின் நீட்டாண்மைக் கஞ்சோம்
நேயத்தால் நம்தமிழ் நாட்டைமீட் பீர்என் (றிறைவன்)

- குயில் கிழமை இதழ், 19-8-58, ப.12

26.8.58

172. செத்தபிள்ளையை ஆற்றில் எறிவது!

கற்பு நிலையறியார் கண்டவரைத் தாம்கூடிப்
பெற்ற குழந்தைகளைப் பேராற்றில் - எற்றும்
வடக்கர் வழக்கம் அடக்க நினைத்தால்
நடக்கா துலகமன்றில் நாட்டு.

- குயில் கிழமை இதழ், 26-8-58, ப. 10

26.8.58

173. பம்பாய் ஆர்ச் பிஷப்புக்கு!

பம்பாய் பிஷப்பாரே பாழ்மதங்கள், இங்குள்ள
கம்யூனி சத்தால் கரையுமென்றா - வெம்புகின்றீர்
பார்ப்பான் தலைவன்! படிதாண்டார் மற்றவரும்!
பார்ப்பானா பாழ்க்க மதம்?

(மதம் பாழாகப் பார்ப்பானா? என்பது மூன்றாவது அடியின்[1] பொருள்)

1. "நான்காம் அடியின்" என்றிருத்தல் வேண்டும்

- குயில் கிழமை இதழ், 26-8-58, ப. 11

26.8.58

174. அமைச்சர் பத்தவச்சலனார்க்கு அறிக்கை

கேரளத் திற்கு நெல்ஏற் றுமதி
கெடுதி அன்றோ என்றுநாம் கேட்டால்
ஊரில் உள்ள தமிழர்கள் நிறைய
உண்ட மீதியை அனுப்பினேன் என்றே
ஓர்அ மைச்சரே! பத்தவச் சலமே
உள்ளத்தை விற்றே உரைக்கின் றீரே
நேரு தந்ததா நீர்பெற்ற பதவி?
நேயத் தமிழர் உமக்கா பகைவர்?

நம்பிய மக்களை நட்டாற் றிற்கை
நழுவ விடுவது நல்லதா ஐயா?
தம்பதம் எண்ணிப் பிறர்க்கா ளாகித்
தம்இனம் வாட்ட விலங்குகள் ஒப்பாவே
வெம்பி இந்நாள் அழுதவர் நாளைக்கே
வேங்கைக ளாகி எழவும் கூடுமே
இம்மட்டும் போனது போகட்டும் இனிமேல்
இம்மி நெல்லும் அகலாமற் செய்கவே.

திறமை அனைத்தையும் தன்னலத் திற்கே
செலுத்தி வந்த உம்மையே மீண்டும்
இறைமை கொள்ளச் செய்தனர் தமிழர்
இன்னல் கொள்ளச் செய்வதா அவர்களை.
நிறைய இந்நாள் அதிகாரம் உம்மிடம்
நின்ற துண்டு நாளைக்கே அழியலாம்.
அறிக ஐயா பத்தவச் சலமே
ஆயிரம் வரினும் இனங்கொல்ல வேண்டாம்.

- குயில் கிழமை இதழ், 26-8-58, ப. 4

175. இராசாசி தமிழ்படித்தால் வராத வெண்பாவும் வரும்

வேண்டியா நந்த விகடன் வெளியிட்டான்
தாண்டியாச் சாரிதந்த தப்புவெண்பா! - ஈண்டே
இவாள்தவறி னாலும் அவாள்திருத்த லாமே?
அவாளுக்கி வாள்எழுந்துண் பாள்.

இராசாசி தப்பு வெண்பா

மூதுரைவேல் தூக்கி மொழிப்போரில் முன்சென்று
சூதுரைகள் அத்தனையும் தோற்கடித்து _ தீதறவே
நாமடைந்த ஆங்கிலமே நன்மருந்து எனஓதி
நாடறிய ஔவையின்சொல் நாட்டு.

தோற்கடித்து + தீது = இடையில் த் வரவேண்டும். நன்மருந்து என ஓதி, இதில் புணர்ச்சிப்பிழையும், தொடைப்பிழையும் ஆயின. மூன்றாமடியின் நாமடைந்த என்பதற்கு நான்காமடி யின் நாடறிந்த [1] என்பது எதுகைப்பிழை ஆயிற்று.

1. 'நாடறிய' என இருத்தல் வேண்டும்

- குயில் கிழமை இதழ், 2-9-58, ப. 4

2.9.58

176. தென்னந்தோப்பு

சின்ன தோப்பு - நல்ல
தென்னந் தோப்புத் - தரும்

முன்னும் பின்னும் நல்ல காய்ப்புக் - குடும்ப
முன்னேற்றத்துக் கொரு வாய்ப்பு
மோடான மோடி வானத்தி லோடிக்
காடாகி ஓலை பச்சென்று வளர்ந்த சின்னதோப்பு

இன்னிளநீரும்
தின்னத் தேங்காயும்

பின்னிப் பின்னிப் போடும் கீற்றும் - கொடுக்கும்
என்வீடும் தென்னையின் தோற்றம்!
ஏராளமாய் நாரும் கொடுக்கும்
வாரை(க்) கொடுக்கும் பட்டையும் கொடுக்கும் சின்னதோப்பு

கட்டிவிட்ட பாளை
தித்திப்புச் சாறு

தொட்டி இட்டுக் காய்ச்சும் வெல்லம் _ நல்ல
கொப்பறை கொடுக்கும் செல்வம்
காத்திடும் கூரைக் கீற்றும் கொடுக்கும்
அடுப்பெரித்திட மட்டையும் கொடுக்கும்[1] சின்னதோப்பு

சிட்டுக்கள் பாடும்
தென்றலும் ஆடும்

குட்டையிலே பூபூக்கும் _ நல்ல
எட்டுத் திக்கும் மணம்தூக்கும்
இல்லா தவரை உழைப்புக் கேட்கும்
நல்லா தரவு கொடுத்துக் காக்கும் சின்னதோப்பு

1. அடுத்த 'குயில் (9-9-58) இதழில் 'பிழை திருத்தம்' என்னுந் தலைப்பின் கீழ் "குயில் 14-ல் தென்னந்தோப்பு பாட்டின் மூன்றாம் அடியின் கடைசியில் அடுப்பெரித்திடமட்டையும் கொடுக்கும் என்பதைச் சேர்த்துக் கொள்க' எனுங்குறிப்பு தரப்பட்டுள்ளது. இவ்வாறு முதலில் வெளிவந்தபோது இல்லாதிருந்த ஒருவரி சேர்க்கப்பட்டுப் பாட்டின் சீர்மை காக்கப்பட்டது.

- குயில் கிழமை இதழ், 2-9-58, ப. 5

9.9.58

177. ஒற்றுமைதான் வழி

நல்ல வழிஇது நல்ல வழிஇது
சொல்லுவதைக் கேளீர்
கொல்லை வழியல்ல கோணல் வழியல்ல
சொல்லுவதைக் கேளீர்

தொல்லை யடைந்தீர் சோற்றுக் கலைந்தீர்
நெல்லிக்காய் மூட்டை யைப்போல்
எல்லையில் லாத பிரிவினை நோக்கி
ஒற்றுமை கொள்வீரே

நல்லவழி இது!

சாதிக் கிணற்றில் சமையச் சேற்றில்
தள்ளப்பட் டேஅழிந்தீர்
ஓதும் பெரியார் உள்ளம் உணர்ந்தே
ஒற்றுமை கொள்வீரே

நல்லவழி இது!

ஆண்டுக்கு நூறு கோடிஇ ழந்தோம்
அடிமைப் பட்டதினால்
தூண்டிலில் மீனாய்த் துடிது டித்தோம்
நாட்டை விட்டதினால்

நாலு கோடிமக்கள் மற்றவர் காலடி
நத்திப் பிழைப்ப துண்டோ?
ஓலை விடுப்பீர் நம்பகை ஓட
ஒற்றுமை கொள்வீரே

நிலை கெட்டுவந்த வடக்கரையே
நேருவாட்சி காக்கும்
நிலை கெட்டுவந்த தமிழர்களைப்
பாடைகட்டித் தூக்கும்

படிஅரிசிக்குப் பறக்கையில் பத்த
வச்சலம் சிரிக்கின்றார்
அடியோடு கேரளம் ஏற்றிக்
கையை விரிக்கின்றார்

முத்தான மொழி முன்னோ ரின்மொழி
முத்தமிழர் சொன்னதாம்
எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்
என்னும் அருள்மொழியே

நல்ல வழிஇது!

- குயில் கிழமை இதழ், 9-9-58, ப. 2

9.9.58

178. நேரு

நிலைகெட்ட பாகித்தான் மக்கட்கு நேரு
மலைஒத்த பொன்னை வழங்கி - நிலைகெட்
டிலங்கைவிட்டு வந்த தமிழர்களை எல்லாம்
கலங்கவிட்டார் கையை விரித்து.

- குயில் கிழமை இதழ், 9-9-58, ப. 4

9.9.58

179. நேரு ஆட்சி

“யாருளார் என்னைவிட” என்னும் மனப்பான்மை
நேருவிடம் காண்பதாய் நேருறவே - மோரார்சி
தேசாய் எனும்அமைச்சர் செப்பினார் இவ்வாட்சி
மாசாய் மறைவதன் முன்பு.

- குயில் கிழமை இதழ், 9-9-58, ப. 4

9.9.58

180. கல்விக்கரசு மணவாளராமாநுசனார் கட்டளை

அங்குவைத்தார் ஐந்துபல்க லைக்கழகம் தில்லியார்
இங்குவைத்த தேதொன்றும் இல்லையன்றோ! - சிங்கக்
குணவாள ரேஎழுச்சி கொள்ளீரோ என்றார்
மணவாள ராமா னுசர்.

ஆண்டுக் கறுபது கோடியினைத் தில்லியார்
ஈண்டிருந் தேப்பமிட்டார் என்தமிழீர் - வேண்டாத்
தணலானார் வஞ்சத்தைத் தாக்குவீர் என்றார்
மணவாள ராமா னுசர்.

நல்ல மணவாள ராமா னுசனாரின்
சொல்லை யுணர்ந்து துடித்தெழுக - கல்விக்
கரசரவர்; நந்தமிழரின்[1] அப்பனவர்; வெற்றி
முரசறைந்து முன்னேறு வீர்.

1. தளை தட்டுமிடம்

- குயில் கிழமை இதழ், 9-9-58, ப. 8

181. 'கொம்புத்தேன்' - நாடக வாழ்த்து

'கொம்புத் தேன்'படித் தேன்,மகிழ் கொண்டேன்;
செந்தமி ழர்க்கிது செப்பு கின்றேன்
நாவரசு நாடகம் நல்ல நாடகம்
கதையின் போக்கில் புதுமை கண்டேன்
பேச்சு நடையில் கூத்தர் பேசினர்
மிக்க இனிமை! மிக்க இனிமை!

அறமி தென்றும் மறமி தென்றும்
அறியார் எழுதுவார்; அவ்வா றின்றி(க்)
காண்பார்க்கு நன்னெறி காட்டிச் செல்லும்
மாண்பு மகிழ்ச்சிக் குரிய தாகும்.

இலக்கணம் என்பது வடசொல் என்பதா?
அஃது தூய தமிழே ஆம்என
எடுத்துக் காட்டிய இவர்தம் திறமை
புலவர் மறதியில் நினைவு புகட்டியது!

படித்தவர் எழுதினால் பழுது நேராது;
நாவரசு நன்கு படித்தவர் என்க.

நகைச்சுவைப் பகுதி நவையற்ற தாகும்,
பிறசுவை அனைத்தும் அறம்தவ றாதன!

தேவைக் கினிது நல்கிய
நாவரசு நற்புகழ் எய்திவா ழியவே!

குறிப்பு :

பாரதிதாசனின் மடல்தாளில் 10.9.1958 என நாள்குறித்து எழுதிய கையெழுத்து வடிவில் அமைந்த இப்பாடல் அவர் ஒப்பத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

- பாரதிதாசன் இதழ்ப்பணிகள், ப.439

16.9.58

182. அமைச்சர் பத்தவச்சலனார்!

"தென்னாட் டார்கள் வடநாடு சென்றே
பிச்சை எடுக்கின் றார்கள், பிச்சையும்
நிறையக் கிடைத்திடு கின்ற தென்றே
அமைச்சர் பத்த வச்சலம் அறைந்தார்;
தமிழர் அரிசியைக் கேரளம் தள்ளும்
மதியிலார் நாண மில்லார்
இதுவும் சொல்வார் எதுவும் சொல்வரே!

- குயில் கிழமை இதழ், 16-9-58, ப. 3

23.9.58

183. பெரியார்க்கு வாழ்த்து!

எண்பதாம் ஆண்டடைந்தும் என்தமிழ்நா டெய்துவதே
பண்பதாம் என்றே, பகைவடக்கர் - மண்புதைய
வீழ்த்த எழும்பெரியார் வெல்கவே வெல்கஎன்று
வாழ்த்தி மகிழ்கின்றோம் நாம்.

"குயிலகம்" பாரதிதாசன், புதுச்சேரி 17.9.58

குறிப்பு :

பாடல் எழுதிய இடமும் நாளும் இவ்வெண்பாவின்கீழ்க் குறிக்கப்பட்டிருப்பது தனித்துச் சுட்டத்தக்கது.

- குயில் கிழமை இதழ், 23-9-58, ப. 5

23.9.58

184. பத்தவச்சலம் பாடும் பாட்டு

நெல்லில்லை என்றுசொன்னால் உண்டென்பார்! நேரான
சொல்லில்லை என்றால் தொழில்என்பார்! - நல்லதமிழ்
வித்தவிச்சுத் தில்லிக்கு வேலைசெய்யும் நம்அமைச்சர்
பத்தவச்ச லம்பாடும் பாட்டு.

வித்து அவிச்சு - விதையை அவித்து

- குயில் கிழமை இதழ், 23-9-58, ப. 15

30.9.58

185. பாவலர்க்குப் பணஉதவி செய்க!

பாவலர் பால சுந்தர னாரைக்
காவலர் ஒழித்துக் கட்ட எண்ணிப்
பற்பல வழக்குகள் பதிவு செய்தனர்.

நடந்துகொண் டிருக்கும் வழக்குகள் நான்காம்
நடக்க இருப்பவை நாற்பத்து நான்காம்
இவ்வாறு கோட்டை ஏரியிற் பறக்கும்
மீன்கொத்தி ஒன்று விளம்பிற்று நம்மிடம்.

பெரியார் கருத்தைப் பெருந்தமி ழகத்தில்
உரிய வகையில் உணர்த்தும் பாவலர்
நல்ல பேச்சாளர்! நடுங்கா நெஞ்சினர்

அவர்மேல் அறனிலா அரசினர் எய்யும்
வழக்குக் கணைகளை மறுக்க எண்ணிய
பாவலர் முயற்சி பலநலம் விளைக்கும்.

எதிர்வழக் காட இரண்டுமூன் றாயிரம்
வெண்பொற் காசுக ளேனும் வேண்டும்!

வறுமை என்னும் முதலையின் வாய்க்குள்
குறுகக் குடித்தனம் செய்பவர் பாவலர்!

திராவிடர் கழகத் திருத்தகு கொள்கை
இராவிடம் எட்டி அன்றோ பாவலர்க்கு?
நம்மைத் தாம்அவர் நணுக முடியும்
நாம்தாம் அவர்க்கு நல்க வேண்டும்

ஆவலொடு தமிழர் இயன்ற வாறு
பாவலர் முகவரிக்குப் பணம்அனுப் புகவே!

- குயில் கிழமை இதழ், 30-9-58, ப. 1

30.9.58

186. இராசாராம் அடங்கவேண்டும்

இராசா ராம்எனும் காங்கிர சிறைவர்
கீழ்வரு மாறுகிளத்தி னாராம்:-
"நேருவைச் செருப்பால் அடித்த பேரெலாம்
மனிதரா?" என்று கேட்ட மனிதரை
நாம்கேட் கின்றோம்; நம்மருந் தமிழர்
தலைவரை இகழ்ந்தவன் மனிதன் தானா?
காங்கிர சிறைவர் கருதுக!
***தீங்கரசு செல்க!** செந்தமிழ் மீள்கவே!*

- **குயில் கிழமை இதழ், 30-9-58, ப. 7**

30.9.58

187. தி.க.வில் சேர்ந்தார் வாழ்க!

சாவும் இனிதென்று, தாய்மீளத் தொண்டுசெய், தி
ராவிடர் நற்கழகம் சேர்ந்தார்கள் - யாவர்அவர்?
சீர்ப.ம. ஆறுமுகன் செம்மை மருதையா!
வாரிர்என்றோம் வாழ்களன்றோம் நாம்.

30.9.58

188. கண்ணதாசர் கவலை

ஆசை விழாஎடுத்தார் பாரதிக்கே அன்பர்க
ணேசர்எனில் கூத்தரெலாம் ஏன்போனார்? - காசுதண்டும்
எண்ணம்மண் ணாயிற்றே என்றுகண் ணீர்த்துளியாம்
கண்ணதா சர்கவன்றார் காண்.

30.9.58

189. உருசி உதைப்பும், அமரிக்கா அதைப்பும்

குமாய்த்தீவு மேற்சீனர் குண்டுமேற் குண்டு
டமார்டமார் என்று போட்டார்கள் - சமாய்சமாய்
என்றே உருசி இயம்ப, அமரிக்கா
இன்றே கிளம்பிற் றெதிர்த்து!

உருசி - ரஷ்யா

உருசிக்கும் அமரிக்காவுக்கும் நாம் கூறும் அமைவு

அரிசிஎலாம் ஆயுதமாய் மாற்றி யமைத்த
உருசிஅம ரிக்காவில் உள்ள - அரசினரே,
கண்ணடியில் மக்கள்மேல் காட்ட அருளுண்டா
மண்ணடியில் வீழ்கஉம் வாழ்வு.

மக்கட்குத் தொல்லையில்லாத வழி

ஐசன் அவரும் குருசேவும் போர்க்களத்தில்
கைசலிக்கச் சண்டையிட்டுக் காட்டட்டும் - மெய்யாய்
அவர்வென்றால் வென்ற தவர்நாடாம் அன்றி
இவர்வென்றால் வென்றதிவர் நாடு.

உலகப்போர் மூட்டலின் உயிர்விடுதல் நன்று

எத்தனை ஆயிரம் கோடி இழக்கின்றார்
ஒத்துலக மக்களெலாம் உங்களால் - பித்தர்களே!
வீம்புண்டு சண்டை விளைக்கின்றீர் வீட்டில்முழத்
தாம்புண்டு சாதலே நன்று.

குறிப்பு :

தனித்தனித்தலைப்புகளைப் பெற்றுள்ள முன் ஆறு வெண்பாக்களும் 'எண்ணத்துளிகள்' என்னும் பொதுத் தலைப்பின் கீழ் ஒரே இதழில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- குயில் கிழமை இதழ், 30-9-58, ப. 2

30.9.58

190. பத்தவச்சலம் மேலும் பழியேற்றார்

ஊரலைத்த நெல்லை உடனுக் குடன்கட்டிக்
கேரளத்துக் கேற்றிக் கெடுங்கழுகை - நேரில்விட்டே
கொத்தவச்ச லம்பாடிக் கூட்டத்தை ஆதரித்தே
பத்தவச்ச லம்பழியேற் றார்.

- குயில் கிழமை இதழ், 30-9-58, ப. 3

7.10.58

191. சங்கொலி - இதழ் மதிப்புரை

சங்கொலி என்ற தமிழ்இதழ் வாழ்க!
திங்கள் இருமுறை செவ்வனம் வெளிவரும்
தனிஇதழ் தன்விலை எட்டுக் காசே
அதற்குச் சாக்கியன் ஆசிரி யர்எனில்
மதிக்கப் பெறும்என வரைய வேண்டா
அன்றியும் இந்நாள் அடையத் தகுவது
நாட்டின் விடுதலை என்று நவிலும்
திராவிடர் கொள்கையைத் தாங்கித் திகழ்வேன்
என்று சங்கொலி இயம்புதல் காண்க.
இதழுக் குடையார் கொள்கை இதுவெனில்
மகிழ்ச்சிக் குரியது மற்று முண்டோ.
சங்கொலித் தமிழ்நடை நன்று!
இங்கது பெரும்புகழ் எய்துக இனிதே!

- குயில் கிழமை இதழ், 7-10-58, ப.12

192. திரு. முத்தமிழ் அழிக்கும் சட்டர்சிக்குக் கரு முத்துக் கேடயம் கொடுத்தார்

திருமுத் தமிழ்வெட்டத் தென்னாடு போந்த சட்டர்சிக்குக்
கருமுத் தளித்தனன் கைக்கே டயம்நெடுங் கல்கத்தாவில்
தருமத்தைக் கொன்றும் தமிழ்த்தாயைக் கொன்றும் தனையுயர்த்தும்
கருமத்தைச் செய்பவன் கைகார னேனும் கயவனன்றே.

குறிப்பு :

பாடலையடுத்து அளிக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பு பின்வருவது:

"டாக்டர் சுனிதி குமார் சட்டர்சி என்பவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கூட்டியுள்ள திராவிட மொழியாராய்ச்சிக் குழுவின் தலைவர். இவர் தமிழை ஒழிக்க எடுத்துவரும் முயற்சியைக் குயில் தன் தலையங்க வாயிலாகப் பன்முறை விளக்கியுள்ளது. இந்த சட்டர்சிக்கு. 2-10-58 பார்ப்பனரால் கல்கத்தாவில் நடைபெறும் தமிழ் எழுத்தாளர் கழக ஆண்டு விழாவின்போது கருமுத்துத் தியாகராசர் வெள்ளிக்கேடயம் அனுப்பியுள்ளார் என்பது யாவரும் அறிந்ததே.''

- குயில், கிழமை இதழ், 7-10-58, ப.16

193. இடுப்பில் குழந்தை!

அன்னையின் கொஞ்சல்

இசை : சிந்துபைரவி **தாளம் : ஆதி**

இடுப்பிலே உன்னைஎடுத் தேஏனே - நீ
இனிக்கின்ற தேன்குடந் தாஅனே![1]
அடுப்பிலே காய்ச்சிய பாலோ - என்
அருமைத் திருக்குறள் நூலோ
செடியில் பறித்தெடுத்த பூவோ - தமிழ்ச்
சிலப்பதிகார இளங்கோவோ
குடிக்கின்ற இளநீர்க்காயோ - என்
குழந்தையாய் வந்தவனும் நீயோ

கொடுப்பாய் தமிழிசை மொண்டே - என்
கொட்டிக் குவித்தகற் கண்டே
கடலிலே கண்டெடுத்த சங்கே - பனங்
காட்டிலே கொண்டஇள நுங்கே
கொடிமுல்லை ஊதுகின்ற வண்டே - நீ
கொத்தாகக் கட்டியபூச் செண்டே
குடித்தனம் காக்கவந்த தங்கம் - என்
குழந்தையாய் வந்தஇளஞ் சிங்கம்!

1. இவ்வடிகளில் அளபெடை இடம்பெற்றுள்ளமை நோக்கத்தக்கது.

- குயில், கிழமை இதழ், 14-10-58, ப.3

14.10.58

194. கொட்டடா பறை!

இசை : மோகனம் **தாளம் : ஆதி**

நற்றவம் பலித்ததே ஒற்றுமை பெற்றோம்
அற்றதே பகைஎன்று கொட்டடா பறை
உற்றதே விடுதலை கொட்டடா பறை!

அற்றைநாள் இப்பெரும் தமிழுலகம் ஆண்டோம்
இற்றைக்கும் நாம்அந்த நிலையினைப் பூண்டோம்
வெற்றி முற்றுமே பெற்றோம் நாம் தமிழர்
வியப்பில்லை என்று கொட்டடா பறை!
புகழ்க்கெல்லை இல்லை கொட்டடா பறை!

நாம்பெற்ற விடுதலை மணிக்கொடி காப்போம்
நானிலம் காப்போம் கெடுதலைத் தீர்ப்போம்
தேம்பலா வாழை மாவெனும் முத்தமிழ்ச்
செழுங்கனி வழங்குவோம் கொட்டடா பறை
முழுதுலகும்பெறக் கொட்டடா பறை!

ஒருவன் நாட்டை ஒருவன் பறிக்கும்
உள்ளப் போக்கைத் தமிழன்கை நறுக்கும்
அருள்ஒன்றே சட்டம்! மக்கட்கே ஆட்சி!
அமைதி நிலைஎன்று கொட்டடா பறை!
தமிழர் கொடைஎன்று கொட்டடா பறை!

- குயில் கிழமை இதழ், 14-10-58, ப.16

21.10.58

195. அன்னை தன் மகளுக்கு
கல்விநலம்

அறியாத சின்னஞ் சிறுகிளிக்குப் - படிப்
பல்லவோ நல்லறிவு விளக்கு.

யாதும் (அறியாத)

குறியாகப் பள்ளிசெல்ல வேண்டும் - நீ
குறையாத செல்வம் பெறவேண்டும்.

யாதும் (அறியாத)

கற்றவர் விழிகளே விழிகள் - கல்வி
கல்லாதவர் விழிகள் குழிகள்
பெற்றிடுவார் நல்ல வழிகள் - கல்லாப்
பேதைகளுக் குண்டாகும் பழிகள்

யாதும் (அறியாத)

மாணிக்க உதடுகள் திறக்கும் - மலர்
வாயில் தமிழ்முத்துக்கள் பிறக்கும்
கோணல் வழக்கமெல்லாம் பறக்கும் - கற்றுக்
கொண்டாலன்றோ வாழ்வு சிறக்கும்

யாதும் (அறியாத)

நல்லதென்றும் கெட்டதென்றும் தெரியும் - கற்றால்
நம்குறள் உண்மைப் பொருள்புரியும்
இல்லற விளக்கு நன்றாய் எரியும் - கல்வி
இருந்தால்தான் புகழ்உலகில் விரியும்.

யாதும் (அறியாத)

இருட்டில் இருப்பதிந்த உலகம் - கால்
இட்ட இடத்திலெல்லாம் கலகம்
கருத்தாய் இருந்தால் தீமை விலகும் - நல்ல
கல்வியினால் வாழ்க்கை இலகும்

யாதும் (அறியாத)

- குயில் கிழமை இதழ். 21-10-58. ப.1

21.10.58

196. நானே நீ!

எனக்கு வந்த துனக்கு வந்ததே
யான்வேறு நீவே றென்ப துண்டோ?
என்று பொன்னி எல்லிக்குக் கூறினாள்.

அடுத்தநாள் பொன்னிக்கு ஐம்பது வெள்ளி
பணவிடை வந்தது பணத்தை எண்ணி
எல்லி பெற்றே பொன்னி என்றே
கையெ ழுத்தும் கடிதில் இட்டாள்.

பொன்னிக்கு மின்விளக்குப் பொதுவரி கட்ட
ஐம்பது வெள்ளி இல்லை ஆதலால்
நடவ டிக்கை வருமென்று நடுங்கினாள்.

ஊர்நகைக்குமென் றுயிரை விட்டிடத்
தாம்பொன்று கையில் தாங்கி நிற்கையில்
உனக்கு வந்த பணவிடை எனக்கென்று
நம்பி ஐம்பதை நான்பெற்றுக் கொண்டேன்
என்றே சொல்லி நின்றாள் எல்லி!

பொன்னி எல்லிக்குப் புகலு கின்றாள்:
எனக்கு வந்த துனக்கு வந்ததே
யான்வேறு நீவே றென்ப தில்லை
தூய்மின் விளக்குத் துறைத்த னத்தார்
என்மேல் எடுக்கும் நடவடிக் கையால்
மானம் வண்டியில் ஏறு கின்றது.

தூக்கிட்டுக் கொள்ளத் தூக்கினேன் கயிற்றை
எனக்கு வந்த துனக்கு வந்ததே
யான்வேறு நீவே றென்ப துண்டா?
இந்தா என்றாள் பொன்னி!
இந்தா ஐம்பதும் என்றாள் எல்லியே!

குறிப்பு :

பாடலின் இறுதியில் 'குறிப்பு' எனும் தலைப்பில் கவிஞரே தந்துள்ள பொருட்குறிப்பு பின்வருவது:

வெள்ளி - ரூபாய், பணவிடை - மணியார்டர், மின்விளக்கு - எலக்டிரிக் லைட், பொதுவரி - அரசினர் வரி, நடவடிக்கை - வழக்கு, தாம்பு - கயிறு, தூய் - தூய.

- குயில் கிழமை இதழ், 21-10-58, ப.2

21.10.58

197. பெரியாரின் (பஞ்சசீலம்) ஐந்தொழுக்கம்

வெண்பா

[1] சாதிஒழிப்[2] பாரியர் சாற்றுமத நூலொழிப்பே
[3] கோதுமனப் பார்ப்புக் குடிஒழிப்பே - [4] ஓதற்
கரியதன் மானம் [5] தமிழ்நா டடைதல்
பெரியாரின் ஐந்தொழுக்கம் பேசு.

(அடைதல் என்பதைத் தன்மானம் என்பதனோடும் சேர்க்க)

குறிப்பு :

இப்பாடலின் முன்னர், *"12-10-58 சீர்காழியில் சொற்*பெருக்காற்றிய தோழர் எஸ்.டி. விவேகியவர்கள் குறிப்பிட்ட பெரியார் பஞ்சசீலத்தைத் தமிழர் நினைவில் பதியுமாறு வெண்பா ஆக்கப்பட்டது'' எனும் குறிப்பு இதழில் இடம் பெற்றுள்ளது.

- குயில் கிழமை இதழ், 21-10-58, ப.6

21.10.58

198. மீண்ட தமிழகத்தில்

மீட்சித் தமிழகத்தில் மேன்மைத் தமிழருக்கே
ஆட்சி கொடுப்போம் அறம்அதுதான் - மாட்சித்
தமிழர்களைக் காட்டிக் கொடுக்கும் தமிழன்
தமிழன் எனப்படுதல் தப்பு.

- குயில் கிழமை இதழ், 21-10-58, ப.7

28.10.58

199. தமிழனுக்குப் பிறக்க வேண்டும்

வழுக்கி விழுந்த ஒருதமி ழச்சி
வயிற்றில் தமிழ்மக னுக்குப் பிறந்தோன்
அழுக்குச் சுமப்பவ னாயினும் அவனை
அந்தமிழ் நாட்டார் நம்பலாம். ஆனால்
வழுக்கி விழுந்த ஒருதமி ழச்சி
வயிற்றில் பார்ப்பன னுக்குப் பிறந்தோன்
விழிக்கு நல்லனவாய்த் தோன்றினும் அவனை
மேன்மைத் தமிழர் நம்பவே வேண்டாம்!

தமிழச்சி வயிற்றில் தமிழர்க்குப் பிறந்த
தமிழ்மகன் தமிழர்க்கு நல்லது செய்வான்
தமிழச்சி வயிற்றில் பார்ப்புக்குப் பிறந்த
தறுதலை தமிழர்க்கு நல்ல துசெய்யான்!
தமிழச்சி வயிற்றில் தமிழர்க்குப் பிறந்த
தமிழ்மகன் தமிழர் நெறியையே சார்வான்
தமிழச்சி வயிற்றில் பார்ப்புக்குப் பிறந்த
தறுதலை பார்ப்பனர் அடியையே சார்வான்!

வழுக்கி லாத தமிழ்மகள் ஒருத்தி
வழுக்கினும் தமிழன் மார்பினில் வீழ்க
தழைத்த தேனும் பழுத்ததே ஆயினும்
தமிழ்மகள் எட்டியை எட்டுதல் சாதலே!
இழுக்கு வண்டெச்சில் ஆயினும் தமிழ்மகள்
இனத்தேன் உண்ணலால் தீதொன்றும் இல்லையே
இழுக்குத் தேடற்க பார்ப்பானைக் காணற்க
இறக்க நேரினும் இனப்பகை எண்ணற்க!

- குயில் கிழமை இதழ், 21-10-58, ப.1

28.10.58

200. தாயும் பிள்ளையும்

கிச்சி கிச்சி

அழுதபிள்ளை சிரிக்குமாம்
அக்குளைக்காட்டு கிச்சி கிச்சி கிச்சி (அழுத)

பொழுது போனதே அடுப்பில் உலை
பொங்கி வந்ததே கிச்சி கிச்சி கிச்சி
ஒழித்துப் போட்ட ஏனமெல்லாம்
துலக்கவேண்டும் கிச்சி கிச்சி கிச்சி (அழுத)

குப்பை கூளம் கூடமெல்லாம்
கூட்ட வேண்டும் கிச்சி கிச்சி கிச்சி
சுப்பாய் போல அப்பா வருவார்
சுவைநீரும் கொடுக்க வேண்டும் (அழுத)

மந்தை மாடு வரும் வேளை
வைக்கோல் அள்ளிப் போட வேண்டும்
குந்தி யிருக்கச் சரிப்படுமா
கொஞ்சும் கிளியே கிச்சி கிச்சி கிச்சி (அழுத)

கிலுகி லுப்பை இந்தா உனக்குக்
கலகலென்று நீ குலுக்கே!
அலுவலைநான் பார்ப்பதற்கே
எனைஅனுப்பு - கிச்சி கிச்சி கிச்சி (அழுத பிள்ளை)

- **குயில் கிழமை இதழ், 28-10-58, ப.16**

201. இறகு தமிழ்! பேனா ஆங்கிலம்![1]

எங்களூரில் இருப்பவர்கள்
இறகென்று சொல்வார்
இறகென்றால் மைதொட்டே
எழுதுகின்ற இறகு!
உங்களூரில் பேனாஎன்றே
உளறுவார்கள் வீணாய்
உன்தமிழ்தான் இருக்கையிலே
ஆங்கிலப்பேர் ஏனோ?

என்னிடத்தி லேமையூற்
றிறகும்உண்டு பாராய்!
எடுத்தவுடன் மைதொடாமல்
எழுதலாமே சீராய்!
முன்னெல்லாம் வாத்திறகால்
எழுதிக்கொண் டிருந்தார்
பின்னால்தான் இரும்பிறகும்
இந்தமையூற் றிறகும்!

நாம்தமிழர்! நம்பொருளை
நம்தமிழால் சொல்வோம்
நாம்தமிழர்! எப்போதும்
நம்தமிழே கற்போம்!
காம்பினிலே கண்ணெதிரே
கைக்கெட்டும் நல்ல
மாம்பழம் இருக்கையிலே
வேப்பம் பழம்ஏனோ?

1. 'மாணவர்க்கு' எனும் பொதுத்தலைப்பின்கீழ் இப்பாடல் இடம்பெற்றுள்ளது.

- குயில் கிழமை இதழ், 11-11-58, ப.2

18.11.58

202. பொன்னேட்டில் புதுப்பாட்டு

பழந்தமிழ்க் குடிகள் வழிவந்த நாமே
பச்சைத் தமிழர்கள் நமதிந்த நாடு - நல்
உழுந்தள வேனும் நமைப்பிறர் ஆள
உரிமையே இல்லை என்றுநீ பாடு!

எழுந்தநம் எண்ணம், செந்தீ வெள்ளம்!
எதிர்ப்பில்லை என்று பாடொரு பாட்டு - நாம்
இழந்தன பலப்பல! ஆயினும் தமிழ்மறம்
இழக்கிலோம் என்றே இலக்கியம் காட்டு

குமரியும் இமையமும் குரைகடல் இரண்டும்
உள்ளிட்ட தான தமிழகம் இன்று - சிறு
சிமிழாயினும் புலவனே பாடு
செந்தமிழ் மக்கள் சிறுத்தைகள் என்று!

பொய்ம்மை வென்றது புரட்டுக்கள் வென்றன
என்றன தொலைந்தனபார் இப்பொழுது - நன்
மெய்ம்மை வென்றதே வீரம் வென்றதே
என்றுநீ கவிஞனே பொன்னேட்டில் எழுது!

மதவலை அறுத்தோம் சாதிநஞ் சுமிழ்ந்தோம்
வடக்கர் இடக்கரின் போக்கையும் கண்டோம் - நாம்
புதுக்கிய விடுதலை மணிக்கொடி ஏற்றிப்
புலவரின் செந்தமிழ்க் கவியமு துண்டோம்!

- குயில் கிழமை இதழ், 18-11-58, ப.1

25.11.58

203. அன்னைமார்க்கு விண்ணப்பம்

மாய்த்தான் பகைப்படை;
மாய்ந்தான் களத்திடை;
பார்த்த தாய்முலைப்
பாலூறும் தமிழகம்!

போய்த்தீர்ந்த துண்டா வடவரின் அடிக்கீழ்?
புதல்வரை அனுப்புக அன்னைமீர் போருக்கே (மா)

பழித்தவாய் மூடுமுன் வடபுலம் தாக்கும்
பழந்தமி ழகமா அடிமை ஏற்கும்?
வழித்தான் தமிழகச் செல்வம் அனைத்தும்!
மக்களை அனுப்புக அன்னைமீர் போருக்கே (மா)

நற்றமிழ் மீது செலுத்தினான் கண்ணை;
நடுங்கிற் றேநம் இலக்கியப் பண்ணை!
மற்றும் பகைவனை விட்டுவைப் போமா!
மைந்தரை அனுப்புக அன்னைமீர் போருக்கே!

இருட்கடல் கிழிய எழுகசெம் பரிதி
எழுக மணிக்கொடி வென்றது கருதி!
நரிக்கா இடந்தரும் செந்தமிழ் வேங்கை
நன்மக்கள் தாரீர் அன்னைமீர் போருக்கே! (மா)

- குயில் கிழமை இதழ், 25-11-58, ப.1

25.11.58

204. எங்குள்ள தமிழரும் எங்கள் பட்டாளம்

சிங்கைத்தமிழ் மக்கள்
எங்கள்பட் டாளம்!
சிங்களத்தமி ழர்கள்
எங்கள்பட் டாளம்!
எங்குள்ளதமி ழரும்
எங்கள்பட் டாளம்!
தங்கட்குத் தாயகம்
தமிழகமே நாளும்

தங்கத்தைச்சுட் டாலும்
தன்னொளிமங் காது
சந்தனமரைத் தாலும்
தன்மணம்குன் றாது
சங்கதமிழ்க் கொள்கைத்
தாய்ப்பாலி லேவந்த
சிங்கங்களுக் குள்ள
தென்பாங்குபோ காது

எங்கேதிரிந் தாலும்
எங்கள்புலிக் கூட்டம்
கங்குல்பக லுந்தான்
காட்டைமறக் காது
செங்குத்து மலையினில்
சிக்கித்தவித் தாலும்
தங்கத்தமிழ் நாடு
தாழப்பொறுக் காது

இங்குவரும் மேன்மை
மங்காத்தமிழ் நாடு
மாத்தமிழர் வீடு
எங்குள்ளத மிழனும்
இந்நாட்டுப்பங் காளி!
பொங்கினால்ஓ ருள்ளம்
பொங்கும்தமிழ் வெள்ளம்.

- குயில் கிழமை இதழ், 25-11-58, ப.2

7.12.58

205. திராவிடர்கழகப் பொதுச்செயலாளர் திருமண வாழ்த்து

இளமை வளமையை விரும்பும் என்பர்
இளமை எளிமையை விரும்பிய புதுமையை
வீர மணியிடம் நேரில் கண்டுளேன்!
பாடிக் கைவீசிப் பலருடன் உலவி
வேடிக்கை வேண்டும் வாடிக் கைதனை
அவன்பாற் காண்கிலேன் அன்றும் இன்றும்!

உற்றநோய் நோன்றலும் ஊர்நலம் ஓம்பலும்
நற்றவம் என்பர்; தொண்டென நவில்வர்!
தொண்டுமனப் பான்மை அந்தத் தூயனைக்
கொண்டது குழந்தைப் பருவத்தி லேயே!

தமிழன் அடிமை தவிர்ந்து குன்றென
நிமிர்தல் வேண்டும் என்று நிகழ்த்தும்
பெரியார் ஆணை ஒன்றே பெரிதெனக்
கருதிய கருத்து வீர மணியை
வீண்செயல் எதிலும் வீழ்த்த வில்லை!

அண்டிப் பிறரை அழிக்க அல்ல;
உண்டிக் கல்ல உயர்வுக் கல்ல;
தொண்டுக் காகக் கல்வித் துறையிற்
சேர்ந்தோன் எம்.ஏ. தேர்விலும் தேர்ந்தோன்!

நினைவின் ஆற்றல் நிறைந்த வீரமணி,
படிக்கும்நே ரத்திலும் பார்ப்பனர் கோட்டையை
இடிக்கும் நேரம் எட்டுப்பங் கதிகம்!

விட்டே னாபார் தமிழரின் பகைவரைக்
கட்டாயம் தொலைப் பேனெனக் கழறும்
எட்டாம் பத்தாண் டாசிரி யர்க்கொரு
சட்டாம் பிள்ளை என்னத் தகுந்தோன்!

பெருங்கூட் டத்துப் பெரியரும் பிள்ளையும்
விரும்பப் பேசும் ஆற்றல் மிக்கோன்,
கல்வியும் செல்வமும் கனக்க உடைய
அரங்கம் மைசிதம் பரனார் அளித்த
கற்றார் வியக்கக் கலையினால் விரிந்த
தோகை மயில்நிகர் மோகனா இந்நாள்
பெற்ற பேறு யாவர் பெறுவார்

தமிழர் தமக்கும் தமிழ்மொ ழிக்கும்
உழைப்பதே உயர்ந்த செல்வமாக் கொண்ட
மாண்பார் வீர மணியும்அம் மணியும்
ஒருமனம் ஆனதை உறுதி செய்யும்இத்
திருமண நன்னாள் தென்னாட்டுத் திருநாள்!
வாழ்க வீர மணியோடு மோகனா!
இன்னுடல் இருவர்க் கிரும்பின் குண்டென
எய்தும் இன்பம் கரும்பின் சாறென
மற்றவும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க!

குறிப்பு :

7-12-58 ஞாயிறு மாலை 5 மணிக்குத் திருச்சி பெரியார் மாளிகையில் நடைபெற்ற கி.வீரமணி, எம்.ஏ. _ மோகனா திருமணத்தின் போது மணமக்களைப் பாராட்டிப் புரட்சிக் கவிஞர் பாடியது.

- பகுத்தறிவாளர் நாட்குறிப்பு, கையேடு (1989), ப. 101-103.

9.12.58

206. புறப்படுவீர் விடுதலைப் போர்!

நாட்டைமீட்க மனமிருந்தால் இங்குவாரீர் - இனத்தைக்
காட்டிக்கொடுக்க மனமிருந்தால் அங்குப் போவீர்
ஏட்டிற்புகழ் எழுதவென்றால் இங்கு வாரீர் - இல்லை
இழிவுதேட மனமிருந்தால் அங்குப் போவீர்
வாட்டும்பசி நீக்கவென்றால் இங்கு வாரீர் - பகைவர்
வால்பிடித்து வாழ்வதென்றால் அங்குப் போவீர்
மூட்டிவிட்டார் நம்பெரியார் போர்ப்பெருந் தீயை - அதில்
மூழ்கவாரீர் மூழ்கவாரீர் தோழன் மாரே.

தமிழைமீட்க மனமிருந்தால் இங்குவாரீர் - தமிழ்த்
தாயைக்கொல்ல மனமிருந்தால் அங்குப் போவீர்
சமையவெறி ஒழிக்கவென்றால் இங்குவாரீர் - கெட்ட
தறிதலைகள் வேண்டுமென்றால் அங்குப் போவீர்
நமதுடைமை நமக்கென்றால் இங்குவாரீர் - கெட்ட
நாய்ப்பிழைப்பே நல்லதென்றால் அங்குப் போவீர்
குமைத்துவிட்டார் நம்பெரியார் போர்ப்பெருந்தீயை - அதில்
குதித்திடுவீர் குதித்திடுவீர் தோழன் மாரே.

மானங்காக்க மனமிருந்தால் இங்குவாரீர் - சிறிதும்
மானமில்லார் வேண்டுமென்றால் அங்குப் போவீர்
ஆனமட்டும் பார்ப்பதென்றால் இங்குவாரீர் - பகைவர்
அடியைநத்தி வாழ்வதென்றால் அங்குப் போவீர்
போனதில்லை தமிழர்வீரம் இங்குவாரீர் - கெட்ட
புன்செயலே நல்லதென்றால் அங்குப் போவீர்
தேனருவி, விடுதலைப்போர்! வாழ்கபெரியார்! மிகவே
சிறப்படைவீர் புறப்படுவீர் தோழன் மாரே.

- குயில் கிழமை இதழ், 9.12.58, ப.1

16.12.58

207. தாய் பிள்ளைக்குச் சோறூட்டல்

இசை : சங்கராபரணம் **தாளம் : ஆதி**

ஓடி வருமாம் - பிள்ளை
சோற்றை உண்ணுமாம்
ஆடி வருமாம் - பிள்ளை
அழுவ தில்லையாம்.
தேடி வருமாம் - பிள்ளை
சோற்றைச் சிந்தாதாம்.
பாடி இருந்தால் - பிள்ளை
பாட்டும் கேட்குமாம்.

இன்னும் ஓர்உண்டை - பிள்ளை
வேண்டும் என்னுமாம்.
வெந்நீர் கேட்குமாம் - பிள்ளை
விக்கல் கொள்ளாதாம்.
முன்னே ஓடுமாம் - பிள்ளை
முத்தம் கொடுக்குமாம்.
பின்னும் ஓர்உண்டை - பிள்ளை
தன்னால் உண்ணுமாம்.

பருப்புச் சோறென்றால் - பிள்ளை
சிரிப்புக் கொள்ளுமாம்
உருக்கு நெய்விட்டால் - பிள்ளை
ஓடி வாங்குமாம்.
இருப்பது மட்டு - பிள்ளை
இதை உண்டுவிட்டுத்
திரும்பச் சோறிட்டுக் - கொடுப்பேன்
மிளகின் சாறிட்டு!

காக்கா வந்ததே - சிட்டுக்
குருவி வந்ததே
நாக்கை நீட்டியே - குச்சு
நாயும் வந்ததே
தூக்கிப் போகுமோ - இந்த
சோற்றை எல்லாமே!
வாய்க்குள் வாங்குமாம் - பிள்ளை
மகிழ்ச்சி தாங்குமா!

- குயில் கிழமை இதழ், 16-12-58, ப.16

23.12.58

208. அன்னையின் பூரிப்பு

சின்ன சின்ன சின்ன குறட்பா - நீ
பன்னப் பன்னப் பன்ன இனிப்பதப்பா.

அன்னை தமிழ்உன் தந்தை தமிழ்அத
னால்உன் வாயும் மனமும் செந்தமிழ் (சின்ன)

பிள்ளை என்றுநீ பிறந்தாய்,
கிள்ளை என்றுவாய் திறந்தாய்!
குள்ள நினைப்பே துறந்தாய்
வள்ளுவர் உள்ளங்கண்டே சிறந்தாய் (சின்ன)

ஈன்றவள் பெற்ற பேறு - நின்
இதழ்தரும் தமிழ்ச் சாறு!
சான்றோ ரின்ஒரு கூறு - நீ
தமிழ்ப் பயிருக்குக் காவிரி யாறு (சின்ன)

நின்னாடு பொன்னாடு
நீணிலம்புகழ் தமிழ்நாடு
முன்னோரின் தமிழ்ஏடு
மொழியக் கண்டாய் தமிழ்ப்பண்பாடு (சின்ன)

இன்பமும் அறம்பொருளும்
இந்தாஎன் றேஅருளும்
அன்பு வந்தே திரளும்
அறநூலுன் நாவில் வளரும் (சின்ன)

இசை : ரஞ்சனி **தாளம் : ஆதி**

சின்ன	சின்ன	சின்ன	குறட்பா	நீ
ச்ச்	ச்ச்	ச்ச்	பதசா.	ரீ.ச்ரித
பன்னப்	பன்னப்	பன்ன	இனிப்பதப்பா	
தச்	ரிக்	கக்	ரிக்ச்தச்ரீ	
அன்னை	தமிழ்உன்	தந்தைதமிழ்	அத	
ரி.	க்ம்கா	ரிரிக்ச்ா	தத	
னால்உன்	வாயும்	மனமும்	செந்தமிழ்	(சின்ன)

ரீ. .த	*ச்சா*	*ரி.ச்தா*	*பம.பத*	
பிள்ளை	*என்று*	*நீ*	*பிறந்தாய்*	
ததத	*த*	*தா*	*பமபதா.*	
கிள்ளை	*என்று*	*வாய்*	*திறந்தாய்*	
சரி.	*கம.*	*கா.*	*ரிகச.ா*	
குள்ளநினைப்	*பே*	*துறந்தாய்*		
பதச்ச்	*ரீ.ரிசத*	*தச்ரிக்கா*		
வள்ளுவர்	*உள்ளங்கண்டே*		*சிறந்தாய்*	*(சின்ன)*
ம்க்ரி	*க்ச்தரிச்த*		*பம.பத.*	

- குயில் கிழமை இதழ், 23-12-58, ப.4

23.12.58

209. சோம்பித் திரியேல்

பள்ளிக் குப்போய்ப் பத்துநாள் இருக்கும்!
உள்ளே அறையில் உட்கார்ந் திருந்த
சோம்பே றிக்கு மாம்பழம் கொடுத்தேன்;
உரிக்க வில்லை உண்ணவில் லைஅவன்!
பள்ளம் பறித்துத் தூங்கும் நாய்போல்
உள்ளம் சோம்ப லுக்குள் புதைந்தது!
சொல்லிக் கொடுத்த பாட்டைச் சொல்லென்று
சொன்னேன் நாளைக்குச் சொல்வதாய்ச் சொன்னான்
மறுபுறம் திரும்பினேன் எறும்புகள் கண்டேன்!
குறுநொய் தலைக்கொன்று தூக்கிக் கொண்டு
காட்டிய சுறுசுறுப் புள்ள மெல்லாம்
காட்டுப் புலிகள்! படையின்
நாட்டுப் பாட்டொன்று கேட்டதென் காதிலே!

குறிப்பு:

'மாணவர்க்கு' எனும் பொதுத்தலைப்பின்கீழ் இப்பாடல் இதழில் இடம்பெற்றுள்ளது.

- குயில் கிழமை இதழ், 23-12-58, ப.16

210. பள்ளிக்குப் போ

இசை : பிலஹரி தாளம் : ஆதி

ஸஸரீக. பா.பபாப.
பள்ளிக் கூட முதல்மணி! - கேள்

பதஸ.நீ த. பதப.மகரிகாரி.
பறந்துபோ என் கண்மணி

ஸ்ஸ்நீத. பதபமகம
துள்ளிஓடு சுவடிப் பையைத்

தநித. ப.த.ப. மபமக ரிஸஸ
தூக்கி ஓடு மகிழ்ச்சி யோடு (பள்ளி)

அறிவைக் கொடுக்கும் கல்வி - நல்
லழகைக் கொடுக்கும் கல்வி
பொறுமை கொடுக்கும் கல்வி - நீ
போபோஎன் அருமைச் செல்வி (பள்ளி)

பெருமை சேர்க்கும் கல்வி - பெரும்
பொருளைச் சேர்க்கும் கல்வி
தருமம் சேர்க்கும் கல்வி - கற்கத்
தாவிடுவாய் என் புதல்வி (பள்ளி)

பாட வைக்கும் கல்வி - கொண்ட
பசியைப் போக்கும் கல்வி
நாடு காக்கும் கல்வி - நீ
நடநடநட என் புதல்வி (பள்ளி)

நாள்தோறும் போய்ப்போய் - நீ
படிக்கவேண்டும் நன்றாய் - ஒரு
நாள்நின்றாலும் மறப்பாய் - நீ
நடநடநட மிகவிரைவாய். (பள்ளி)

தமிழைக் கற்க வேண்டும் - நீ
தமிழை மீட்க வேண்டும்
தமிழ கந்தான் உன்தாய் - அவள்
தளையறுக்க வேண்டும்! செல்வாய். *(பள்ளி)*

குறிப்பு :

பாடலின் தொடக்கத்திலேயே சுரக்குறிப்பு அளிக்கப் பட்டுள்ளது நோக்கத்தக்கது.

- குயில் கிழமை இதழ், 6-1-59, ப.12

13.1.59

211. வாடல் தவிர்த்து வாழ்வோம்

பெற்ற தமிழகம் பெற்றது கைவிலங்கோ?
அற்றதோ மேன்மை அழகுதமிழ்? - சொற்கிளியும்
ஆடல் மயிலும் இசைக்குயிலும் ஆட்சியம்பால்
வாடல் தவிர்த்துவாழ் வோம்.

- குயில், பொங்கல் மலர், 13.1.59 & 20.1.59, ப.3

13.1.59

212. மானம் மறையா மெல்லுடை!

(அகவல்)

இம்முறை புதுமுறை என்றே எண்ணி
மெய்ம்மானம் மறையா மெல்லுடை பூண்டு
கண்ணாடி தன்னெதிர் நின்றுடல் கண்டே
உள்நிலை ஓடிய ஒதுங்கும் ஒண்டொடி
என் மகளே என்றெதிரில் வந்ததன்
அன்னை காணவும் நாணிப்
பொன்னுடல் போர்த்தனள் கைகால் கொண்டே!

குறிப்பு :

மலரில் ஒரு பெண்ணின் ஓவியத்திற்குக் கீழே இப்பாடல் இடம்பெற்றுள்ளது.

- குயில் பொங்கல் மலர், 13.1.59, ப.8

213. தமிழகம் வென்றாக வேண்டும்!

ராகம் : திருரஞ்சனி தாளம் : ஆதி

இன்றே செயத்தக்க தொன்றே - தொண்டுசெய்
இன்பத் தமிழ்நாட்டுக் கென்றே

அன்பி னால்உள்ளம் நன்றாக வேண்டும்
அனைத்துத் தமிழரும் ஒன்றாக வேண்டும்
பொன்றும் வடக்கர்கள் சென்றாக வேண்டும்
பொன்னான தமிழகம் வென்றாக வேண்டும் (இன்றே)

இழந்த புகழைநீ மீட்கத் தான்வேண்டும்
இரண்டில் ஒன்றைநீ பார்க்கத் தான்வேண்டும்
முழந்தாள் இடுவதோ பார்ப்பனன் ஆட்சிக்கு?
முத்தமிழின் ஆட்சியைச் சேர்க்கத் தான்வேண்டும் (இன்றே)

சாதிக் கிறுக்குத்தான் தாழ்வைப் போக்குமோ
சமையக் கிறுக்குத்தான் வாழ்வை ஆக்குமோ
தீது வடக்குநோய் தமிழைக் காக்குமோ
செந்த மிழ்நாட்டின் அடிமை போக்குமா. (இன்றே)

இசை அமைப்பு :

ஸ் நி ரி ஸ் நீ த த. மா. த . .
இ ன் . . றே செ ய த். த க் க,
ம த நீ. த. ம. கா ரி ஸ.
தொன். றே. தொண்டுசெய்
த ஸ் ரி க மா க மா . க ம த நி ஸ்
இ ன் பத்தமிழ் நாட்டுக்கென்.. றே
த ம. க ம த நி.
த ம. த. ஸா ஸ ஸ ஸ. ரீ. ரி. க்ரிக்ம்க்ஸ்
அன்பினால் உள்ளம். நன்றாக வேண்டும்
ஸ் ரி க் ம் ரி க் ஸ் ஸ் த ம த த ஸ்
அனைத்துத் தமிழரும். ஒன்றாக வேண்டும்
ஸ் நி த. மத ஸ். ஸ். ரீ. ரி க். ரி க் ம் க் ஸ்
பொன்றும் வடக்கர்கள் சென்றாக வேண்டும்
ஸ் ரி ஸ். நி த ம. த த ஸ் நி த மா ம. க ம
பொன்னான தமிழகம் வென்றாக வேண்டும்

- குயில், கிழமை இதழ், 27.1.59, ப.1

27.1.59

214. கன்னக்கோல்காரன்

ராகம் : புன்னாகவராளி தாளம் : சாபு

பார்ப்பான் இனப் பகைவன்என்றான் முன்னாளில் - அந்தப்
பார்ப்பான் காலைப் பணிந்துநின்றான் இந்நாளில் (பார்)

ஊர்க்கோயிலின் உருவெறுத்தான் முன்னாளில் - அந்த
உருவெல்லாம் கடவுளென்றான் இந்நாளில் (பார்)

தீர்ப்பாய் ராமன் மனிதன்என்றான் முன்னாளில் - அந்தச்
சீராமன்தான் கடவுள் என்றான் இந்நாளில் (பார்)

சேர்க்கவேண்டாம் பார்ப்பை என்றான் முன்னாளில் - மிகத்
தேவைஅவன் தலைமை என்றான் இந்நாளில் (பார்)

பேரைச்சொல்லப் பார்ப்பான் என்றான் முன்னாளில் - அவனே
பிராமணன் என்றுசொன்னான் இந்நாளில் (பார்)

ஆரிய ரூர் சேரிஎன்றான் முன்னாளில் - அவனே
அக்ராகாரம் என்று சொன்னான் இந்நாளில் (பார்)

ஓர்தமிழே வாழ்கஎன்றான் முன்னாளில் - அவனே
உயர்மொழிதான் இந்திஎன்றான் இந்நாளில் (பார்)

பார்தமிழன் நான்என்றான் முன்னாளில் - அவனே
பார்ப்பான் மகன் நானேஎன்றான் இந்நாளில் (பார்)

இசை அமைப்பு

ஸா ரி க ரி ரி. ஸ ஸ. ரிஸ நீ. ரிஸ நிநி. ஸஸ
பார்ப்பான் இனப் பகைவன் என்றான். முன்னாளில் - அந்த
ஸாரி க. ரிரி ஸ ஸ ரி ஸா ஸ. நீ. ஸ ரி ஸ
பார்ப்பான் காலைப் பணிந்துநின்றான். இந்நாளில்

இசை அமைப்பு, டி.என்.எஸ். மணி

குறிப்பு :

சுரக் குறிப்புகளோடு இசையமைப்புத் தரப்பட்டுள்ளபல பாடல்களுக்கு இசையமைத்தவர் பெயர் தரப்படவில்லை என்பதும் இப்பாடலுக்குத் தரப்பட்டுள்ளது என்பதும் மனங்கொள்ளத்தக்கன.

- குயில், கிழமை இதழ், 27.1.59, ப. 16

215. தில்லி ஒழிக

செந்தமிழ் நாட்டைத் தில்லி ஒழிக்குமுன்
தில்லிதன்னை ஒழிக்க வேண்டும் நாம்

குந்திச் சிறிய கதைபேசித் திரியும்
குள்ளத் தலைவர் குற்றம் செய்தனர் *(செந்)*

இந்திச் செய்தியில் நடந்த தெப்படி?
இன்பத் தமிழை மாய்ப்பதும் கண்டோம்
பைந்தமிழ் நாட்டுக் குள்ள அதிகாரம்
பத்தில் ஒன்றும் பலித்ததா நமக்கு? *(செந்)*

நாட்டினை ஆண்ட தமிழரா அடிமைகள்?
காட்டு மிராண்டிக் கழுதையா ஆள்வது?
நாட்டையும் மொழியையும் நசுக்குதல் கண்டும்
நாய்வாழ்க் கையைநாம் நாடுதல் நல்லதா? *(செந்)*

புலவர் உள்ளனர் எதற்குத்தாம் உள்ளனர்?
பொன்னுளார் உள்ளனர் எப்பயன் கண்டோம்?
கலைஞர் வாழ்கின்றார் எதற்காக வாழ்கின்றார்?
கைவிலங் குக்கு மெருகு போடவா? *(செந்)*

சோறுண்ணு கின்றோம்! நாயுண்ண வில்லையா?
துன்ப மற்ற தலைமுறை செய்வோம்
ஆறு பாய்ந்தெனத் தமிழர்கள் பாய்க
அழிக்கும் பகையை அழிப்ப தற்கே! *(செந்)*

- குயில், கிழமை இதழ், 17-2-59, ப. 1

216. பெரியாரைப் பின்பற்று

பெரியா ரிடத்தில் பிழைசெய் யாதே!
பெரியா ரிடத்தில் பிழைசெய் தவர்கள்
வாழ்கின் றார்என் றெண்ணுதல் மடமை!
அவர்கள் வாழ்கிலர்; மாய்கின் றார்கள்.

பெரியார் தம்மைப் பின்பற்ற வேண்டும்
பெரியார் தம்மைப் பின்பற்று கின்றவர்
மாய்கின் றார்என எண்ணுதல் மடமை
அவர்கள் மாய்கிலார்; வாழு கின்றனர்.

சாக வேண்டிய தமிழர் சாகிலர்;
வீழ வேண்டிய தமிழர் வீழ்கிலர்
வறள வேண்டிய தமிழகம் வறண்டிலது
காரணம் பெரியார் கண்கா ணிப்பே!

அன்னார் நினைப்பெலாம் தமிழர்க் கேயாம்
உரைப்பன தமிழர்க் குறுதி பயப்பன
அவர்தாம் தமிழர்க்குத் தமிழகம் அளிப்பவர்

அந்த முதியோர் ஆற்றலைத் தாண்டிநீ
எங்கே ஓடி எதுபெற முடியும்?
மலையுச்சிக் கப்பால் பிலத்தின் கீழ்ப்படி!

புகழ்வேண் டாமா உனக்கு? மிகமிக
அறம்வேண் டாமா உனக்கு? நிறம்பல
கூறித் தமிழரைக் கொல்வார் குதிகால்
நரம்பை வெட்டுதல் நல்ல தொண்டல்லவா?
என்செய வேண்டும் இதற்கெலாம் எண்ணுக!
என்றும் பெரியார் நன்னெறி பற்றுக!

தப்புக் கணக்குப் போடாதே
செப்பேட்டில் உன்புகழ் செதுக்குக நீயே!

- குயில், கிழமை இதழ், 17-2-59, ப. 16

24.2.59

217. வடநாட்டில் பெரியார் முழக்கம்

வெற்றிக்கும்மி

கும்மி அடியுங்கள் பெண்களே - நல்ல
செந்தமிழ் நாட்டின் கண்களே
நம்மிடம் உண்டு வடக்கை வீழ்த்தும்
நல்ல நல்லதமிழ்ப் பண்களே (கும்மி)

தொடங்கும் போர்பு கன்றிடவே - தம்
சொற்போர் கொண்டு வென்றிடவே
நடந்தார் பகைநாடு நோக்கி
நம்பெரியார் அருள்தேக்கி (கும்மி)

மக்கள் உயிர்க்குயிர் விடுதலை - அதை
மறந்து வாழ்தல் கெடுதலை
இக்கதை சொன்ன பெரியார் காண்க
எங்கும் புகழப் படுதலை (கும்மி)

நேருந மக்குப்ப கையாளி - அவன்
ஊரிற் புகுந்தநம் காப்பாளி
சீரும் சிறப்பும் அடைந்ததை நோக்கினால்
நேருவென் பான்ஒரு கோமாளி (கும்மி)

குடியர சுக்கட்சி என்பதொன்றும் - முசிலீம்
கூட்ட மென்றுசொல்லும் மற்றொன்றும்
ஒடிந்த உள்ளத்து மக்கள் தொகுதியும்
ஒப்பினர் நம்தமிழ் அப்பர் கொள்கை. (கும்மி)

ஐதரா பாத்து நாகபுரி - கான்பூர்
இலக்கு மணபுரி வாழுமக்கள்
கைதூக்கிவர வேற்றனர் தந்தையார்
காட்டிய நன்னெறி கைப்பிடித்தார். (கும்மி)

நூற்றுக்கு மூன்று பார்ப்பனர் ஆள
நோக்கிப் பெரும்பான்மை யோர்மாள
ஆற்றிடும் இவ்வாட்சி காற்றிற் பறக்கட்டும்!
அறமுழக் கினர்நம் பெரியார் (கும்மி)

பவுத்தம் ஒப்பும்பெ ரியாரே - அந்தப்
பவுத்தம் வன்செயல் ஒப்பவில்லை
பவுத்தம் ஒப்பாத வன்செயலை நீர்
பற்றுவ தேன்என்று கேட்டாராம் (கும்மி)

இருண்ட நெஞ்சங்கள் இக்கேள்வி - தனை
எழுப்பி நிற்கவும், நம்பெரியார்
மருண்ட உலகம் உணர்வு பெற்றிட
வழங்கிய விடை கேளீரோ! (கும்மி)

என்னுரை தன்னையே பின்பற்ற வேண்டும்
என்பதில்லை என்று புத்தர் சொன்னார்.
உன்னுடை அறிவிற் பட்டதைச் செய்கென
உரைத்த னர்அவர் கண்டீரோ? (கும்மி)

எப்போது வன்முறை வேண்டுமோ நானதை
அப்போது மேற்கொள்ள வேதுணிந்தேன்
தப்பேது சொல்லுங்கள் என்று புகன்றனர்
தக்கோர் வியந்திட நம்பெரியார் (கும்மி)

நேருவின் ஆட்சியின் வேரும் அதிர்ந்திட
நீண்டவை பற்பல சொற்பெருக்காம்
கோரிய கேள்விக்கு நல்ல நல்லவிடை
கொட்டி முழக்கினர் நம்பெரியார் (கும்மி)

திக்கின்றி நேருவின் தீங்கில் நலிந்தவர்
தென்னாட்டு வேங்கையின் வன்மை கண்டார்
வெட்கினன் நேரு! வடக்கர் விலகினர்
வேண்டினர் நம்பெரி யார்துணையே (கும்மி)

தில்லிக்குப் புறப்பட்டார் பின்னர்
செந்தமிழ் நாட்டு மாமன்னர்
தில்லித் தலைவர்கள் வந்து குழுமினர்
நம் பெரியாரின் திருமுன்னர் (கும்மி)

சாதியைக் காக்கஓர் சட்டமிட்டார் - அது
சட்டமா கட்டாயத் தூக்குமரம்! - என
மீதியும் சொல்லிய நம்பெரியார் நெறி
வெல்க என்றார்களாம் தில்லி மக்கள்! (கும்மி)

- குயில், கிழமை இதழ், 24-2-59, ப. 1 & 16

3.3.59

218. உனக்குமா ஓர் இயக்கம்?

உனக்குமா ஓர் இயக்கம்? - அதைக்
கலைக்க என்ன தயக்கம்?
இனக் குறையை நீக்கப் பெரியார்
இயக்கம் நாட்டில் இருக்கையிலே
உனக்குமா ஓர் இயக்கம்?

தமிழ்நா டென்று பேர்வை என்றால்
வரலா றில்லை என்றான்
நமை இகழ்ந்தான் நாக்கறுக்க
நம்பெரியார் இயக்கம் இருக்க
உனக்குமா ஓர் இயக்கம்?

காங்கிரசுக் காரா உனக்குத்
தமிழன்என்று பேரா?
தீங்கிழைக்கும் தில்லி காலைச்
சேருவதும் உன்சீரா?
உனக்குமா ஓர் இயக்கம்?

தனியுடைமை பழித்தாய் - இது
வரைக்கும் என்ன கிழித்தாய்?
இனிய தமிழை அழிக்கும் தில்லியை
ஏத்தி வாலைக் குழைத்தாய்
உனக்குமா ஓர் இயக்கம்?

பார்ப்பானுக்குப் பிள்ளை - நீ
தமிழர் நலத்தில் நொள்ளை
பார்ப்பான் கொள்ளை தனில்அசைக்க
முடியுமா ஓர் எள்ளை
உனக்குமா ஓர் இயக்கம்?

செட்டுத் தமிழர் நெல்லைச் - சேர்த்தான்
மலையாளத்தின் எல்லை
கொட்டம் அடிக்கும் ஆட்சித் தொல்லை
குறைக்க உன்னால் ஆவதில்லை
உனக்குமா ஓர் இயக்கம்?

தமிழரசி கூலி! - இங்கே
உனக்கு மென்ன சோலி?
தமிழ் ஒழிப்ப னோடுகூடித்
தமிழைச் செய்தாய் கேலி!

உனக்குமா ஓர் இயக்கம்?

தமிழ்பெருமை துணித்தான் - இந்தி
தமிழகத்தில் திணித்தான்
நமைஇகழ்ந்தான் நாக்கறுக்க
நம்பெரியார் இயக்கம் இருக்க

உனக்குமா ஓர் இயக்கம்?

நாம்தமிழர் தானா - இல்லை
நல்ல தலைக்குப் பேனா
ஏந்தியகை இட்டகையை
ஒடிப்பதுவே கொள்கை ஆனால்

உனக்குமா ஓர் இயக்கம்?

- குயில், கிழமை இதழ், 3-3-59, ப. 6

219. காற்றுள்ள போதே!

கட்டளைக் கலித்துறை

காற்றுள்ள போதொடு தூற்றிக்கொள் என்று கழறுமொழி
நூற்றுக்கு நூறுமே உண்மையன் றோஇழை நுண்ணிடையே
கூற்றொக்கும் நேரு இருக்கையிற் பார்ப்பனக் குண்டரெலாம்
சோற்றுக்கும் கூறைக்கும் வாய்ப்பொய்தி யேநலம் துய்த்தனரே.

கற்றுமை வென்றனம் என்றனர் பார்ப்பனர்; கண்ணெதிர்எம்
ஒற்றுமை காணுக என்றனர்; உம்மினம் போக்குதற்கே
பெற்றிமை உள்ளஎம் நேருவைப் பெற்றனம் என்றுரைத்தார்!
சற்றும்ஐ யோஉணர் வுற்றிலர் தொன்மைத் தமிழர்களே.

அல்விற் பகலில் அலுக்காம லேஎண்ப தாண்டினிலும்
சொல்லிற் செயலில் தமிழர்க்குத் தொண்டு செயும்பெரியார்
வெல்லற் கிருக்கப் பயன்கண் டிடாமல் வெறிதவிழ்த்த
நெல்லிக்காய் மூட்டைக்கு நேராயி னார்தமிழ் நேயர்களே.

உலையின் அரிசி குழையுமுன் பிச்சைஎன் றோடுநர்போல்
தலைவனின் ஆற்றல் பயன்தரு முன்னோடித் தாயைவிற்றும்
புலையர் உதவி பெரிதென்றும் போனஇப் பேதைமையைக்
கலையென்ப தாவூர்க் கொலையென்ப தாவுரை கண்மணியே.

பாத்திய கீரை ஒருதிங்கள் மட்டே பயனளிக்கும்
கூத்தியர் இன்பம் முதுமைவந்த தாற்கெடும் குள்ளர்கையின்
மாத்தமிழ் நாட்டினை மீட்பதால் இன்பம் மறைவதுண்டோ
ஏத்தவும் பெறுவர் பின்வரு வார்களால் என்றைக்குமே!

- குயில், கிழமை இதழ், 10-3-59, ப. 1

24.3.59

220. அவர் யாவர்?

நல்லவர் என்பவர் யாவர்? - அவர்
நல்லது செய்பவர் ஆவர்
அல்லவர் என்பவர் யாவர்? - அவர்
அறம் மறந்தவர் ஆவர்.
வல்லவர் என்பவர் யாவர்? - அவர்
வம்பர்க்கஞ் சாதவர் ஆவர்.
இல்லவர் என்பவர் யாவர்? - அவர்
எத்தர்க்குத் தந்தவர் ஆவர்!

அறம் உடையவர் யாவர்? - அவர்
அகம் தூயார் ஆவர்.
திறம் உடையவர் யாவர்? - அவர்
செந்தமிழ் காப்பவர் ஆவர்.
நிறம் உரைப்பவர் யாவர்? - அவர்
நெஞ்சற்ற பார்ப்பனர் ஆவர்.
மறம் உடையவர் யாவர்? - அவர்
மாற்றாரை மாய்ப்பவர் ஆவர்!

காதல் உடையவர் யாவர்? - தமிழ்
காணத் துடிப்பவர் ஆவர்.
சாதல் அடைபவர் யாவர்? - அவர்
தமிழ் மறந்தவர் ஆவர்.
ஈதல் உடையவர் யாவர்? - தமிழ்
ஏற்றத்துக் கீபவர் ஆவர்.
மோதல் உடையவர் யாவர்? - பகை
முன்சென்று தாழ்பவர் ஆவர்!

ஆத்திகர் என்பவர் யாவர்? - அவர்
அறிவு கெட்டவர் ஆவர்.
நாத்திகர் என்பவர் யாவர்? - அவர்
நல்லறி வாளர்கள் ஆவர்.
சீர்த்தியர் என்பவர் யாவர்? - அவர்
செந்தமிழ் மாந்தர்கள் ஆவர்.
தீத்தொழில் கொண்டவர் யாவர்? - இங்குச்
சேர்ந்துள ஆரியர் ஆவர்!

கொன்றவர் என்பவர் யாவர்? - இனக்
கொள்கையைக் கொன்றவர் ஆவர்.
வென்றவர் என்பவர் யாவர்? - பகை
வென்றதை வென்றவர் ஆவர்.
சென்றவர் என்பவர் யாவர்? - தொண்டு
செய்யாமல் செத்தவர் ஆவர்.
ஒன்றி உழைப்பவர் யாவர்? - தமிழ்
ஒன்றுக் குழைப்பவர் ஆவர்!

நலம் விளைவிப்பவர் யாவர்? - தமிழ்
நாட்டினை மீட்பவர் ஆவர்.
குலம் கெடுப்பவர் யாவர்? - பகைக்
கூட்டத்தை நத்துவர் ஆவர்.
நிலம் புரப்பவர்[1] யாவர்? - சிறை
நெருப்பும் நீர்என்பர் ஆவர்
புலம் பழுத்தவர் யாவர்? - பிறர்
புன்மறை [2] வெறுத்தோர் ஆவர்!

பணம் படைத்தவர் யாவர்? - வட
பாங்கில் இருப்பவர் ஆவர்.
குணம் படைத்தவர் யாவர்? - தென்
கோடியில் உள்ளவர் ஆவர்.
மணம் படைத்தவர் யாவர்? - தமிழ்
வாழத் தந்தவர் ஆவர்.
பிணம் நிகர்த்தவர் யாவர்? - தமிழ்
பேண ஒப்பாதவர் ஆவர்!

ஒற்றுமை உள்ளவர் யாவர்? - வந்த
ஓரிகள்[3] ஆரியர் ஆவர்.
கற்றும்கல் லாதவர் யாவர்? - தத்தம்
கட்சியால் வாழ்பவர் ஆவர்.
குற்றம் இழைப்பவர் யாவர்? - இனக்
கொள்கையை விற்பவர் ஆவர்.
சுற்றம் குலைப்பவர் யாவர்? - இனத்
தூய்மை இல்லாதவர் ஆவர்!

தென்மொழிப் புலவர் யாவர்? - நாளும்
செத்துப் பிழைப்பவர் ஆவர்.
பன்மொழிப் புலவர் யாவர்? - இனப்
பகைவர்க் குத்துணை ஆவர்.
நன்மொழிப் புலவர் யாவர்? - அவர்
நாலைந்து பேர்மட்டும் ஆவர்!
இன்னல் தவிர்ப்பவர் யாவர்? - ஓர்
ஈ.வே.ரா. என்பவர் ஆவர்.

தமிழைக் காப்பவர் யாவர்? - ஒரு
தாடி நரைத்தவர் ஆவர்.
தமிழர் தலைவர் யாவர்? - அத்
தந்தை பெரியார் ஆவர்.
சுமைக் கஞ்சாதவர் யாவர்? - அவர்
துன்பம் எண்ணாதவர் ஆவர்.
அமைவு செய்பவர் யாவர்? - நம்
அடிமை கொய்பவர் ஆவர்.

குறிப்பு :

கீழ் அமையும் சொற்பொருட்குறிப்புகள் இதழில் கவிஞரால் அளிக்கப்பெற்றவை;

1. புரப்பவர் - காப்பவர்
2. பிறர், புன்மறை - ஆரியர், கீழ்மையான வேதம்
3. ஓரிகள் - நரிகளைப் போன்றவர்

- குயில், கிழமை இதழ், 24-3-59, ப.1, 2, 16

221. படார்

படார்என்று காசுதரும் பைந்தமிழர் கையிற்
படார்! திருடும் பார்ப்பார்மேல் ஐயப் - படார்தீப்
படப்படப் படார்படார் என்று வெடித்தார்
மடப்பசங்கள் சூழரங்கத் தார்.

- குயில், கிழமை இதழ், 7.4.59, ப.3

222. வெற்றிச்செல்வி - வேங்கடாசலன் திருமணச் சிறப்பு

(அகவல்)

நற்றமிழ் பயின்ற "வெற்றிக்கொடி" எனும்
பாவை, ஆநந்தப் படையாட்சி யான
நூறுநில மன்னரின் பேர்த்தி, குறைவிலாச்
செக்கடிப் பட்டித் திருமலி இராமச்
சந்திரன் தவத்தில் வந்த புதல்வி,

கொட்ட வாடிக் கொற்றவ னிகர்த்த
பூமா லைப்படை யாட்சி புதல்வன்
மேன்மைக் குணமுறும் வேங்க டாசலன்,

இருவர் தாமும் திருமணம் பெற்றனர்!
இந்தத் திருமணம் செந்தமிழ் நாட்டின்
தலைவர் பெரியார் தலைமையில் நடந்ததால்
அதன் சிறப்பை அறையவும் வேண்டுமோ!

மணவறை யதனில் மணமக்கள் தமக்குப்
பாரதி தாசனார் வாழ்த்துரை பகர்ந்தனர்
புலவர் ஏறு பொன்னம் பலனார்,
ஏந்து புகழ்ச்சாந் தாநந்தம் முதலியோர்
வாழ்த்துரை வழங்கி மகிழ்ந்தனர்
பல்லா யிரவர் மக்கள்
நல்லுரை நவின்றனர்! மணமக்கள் வாழ்கவே!

- குயில், கிழமை இதழ், 14.4.59, ப.10

21.4.59

223. கலியபெருமாள் எழுந்தருளிய பெரமலூர் பெற்ற பேறு!

பெரமலூர் என்பது கலிய பெருமாள்
திருக்கோ யில்கொண் டிருக்கும் திருவிடம்.

ஃ ஃ ஃ

ஆண்டு தோறும் விழாவரும். அதனில்
ஆண்டவன், கோழிமீன் அரிசிநெல்
கீரை கிழங்குமுதல் கீழென்று மேலென்று
பாராது பெற்றுப் பார்ப்பனர்க் கருளுவான்
விழாவில் ஆண்டு வருமானம் எண்ணினால்
ஐந்திலக்கம் ஆகும்! என்னே அன்புதான்,
ஆனால்
இந்த வருமானம் வரவர இளைப்புப்
பெற்றதன் காரணம்: பெரியார் இயக்கமாம்!

ஃ ஃ ஃ

அன்பர்கள் தம்நலம் அகற்றிப், பெருமாள்
இன்பம் ஒன்றையே எண்ணும் திறமே
வியப்புக் குரிய தாகும். விளம்புவேன்:-
"கோயிலில் தனியொரு குறிப்பிடம் உண்டு
குறிப்பிட மதனில் கோவிந்த னேபோல்
முறுக்கு மீசை முரடன் ஒருவன்
கட்டிலில் குந்திக் காத்தி ருப்பான்
அவனோ அவ்வூர் அரச னாவான்
வட்டிலில் பண்ணியம் மலர்க்கை ஏந்தி
நாளுக் கொருத்தியாய்ப் பார்ப்பன நங்கை
வருவாள்.. வழக்கப் படியே நடக்கும்
பசகோ விந்தம் பசகோ விந்தம்!

ஃ ஃ ஃ

பெருமாள் இவ்வாறு பெரமலூர்ப் பார்ப்பனர்க்(கு)
அருளிய செல்வம் அளவிடற் கரிதாம்.

ஃ ஃ ஃ

எம்பெரு மான்செயல் இதுமட்டு மன்று.
கலிய பெருமாள் கட்டழகி மாரைத்
திருமணம் புரிந்து தேவடி யார்என
ஆக்கி ஆக்கி ஆக்கி இன்று
பாக்கி எவரும் இல்லாது செய்தார்.
உலகப் பற்றை ஒழிக்க எண்ணிய
கலிய பெருமாள் பெரமலூர்க் காசை
ஒட்ட உறிஞ்சி ஓட்டாண்டி ஆக்கினார்!
பட்டினிப் படையும், நீக்கிலா
வெட்ட வெளியுமின்று பெரமலூர் என்பதே.

- குயில், கிழமை இத்ழ், 21.4.59, ப.8-9

224. இதுவுமோர் பிழைப்பா?

கையிற் பெற்ற பதவி பெரிதா! - இனம்
காட்டிக் கொடுத்த பழி சிறிதா
சொல்லேடா (கையில்)

பையிற் பெற்ற பணந்தான் பெரிதா - இனப்
பகைவனைச் சேர்ந்த பழி சிறிதா
சொல்லேடா (கையில்)

பார்ப்பானைப் பிராமணன் என்றாய் - நீ
பதவிக் கவன் வீடுசென்றாய்;
தீர்ப்புக்கு வாய்பார்த்து நின்றாய் - நீ
செந்தமி ழர்மாண்பைக் கொன்றாய்!
சொல்லேடா (கையில்)

தமிழர்க் குழைப்ப தாய்மொ ழிந்தாய் - பின்பு
தன்மான மேகெட்ட ழிந்தாய்
உமிழ்பவன் வீடுநு ழைந்தாய் _ நீ
ஊரில் நாயினும்இ ழிந்தாய்!
சொல்லேடா (கையில்)

எந்தமிழ்த் தாயைக் கசந்தாய் - கெட்ட
இந்தி வருவதற்கும் இசைந்தாய்!
வந்தா ரடியில் கண்ணீர் கசிந்தாய் - நீ
மாத்தமி ழுடன்நஞ்சைப் பிசைந்தாய்!
சொல்லேடா (கையில்)

தமிழர் இழப்புக் கொஞ்சம் இழப்பா? - பகை
தழைப்பது கொஞ்சம் தழைப்பா?
தமிழன்னை சாக உழைப்ப துழைப்பா? [1]
தரம்கெட்டாய் இதுவும்ஓர் பிழைப்பா?
சொல்லேடா (கையில்)

குறிப்பு :

பாடலின் சீர்மையை நோக்கின் இவ்விடத்தில் 'நீ' என்னும் தனிச்சொல் இடம்பெற்றிருப்பின் நன்று.

- குயில், கிழமை இதழ், 28.4.59, ப.1

28.4.59

225. திருமண வாழ்த்துப்பா

எப்போதும் செந்தமிழ்க்கே தொண்டுசெய்வார்; என்தோழர்
அப்போசி மாரம்மை யன்னம்இவர் - இப்போது
வள்ளல் இளமுருகு வாழ்த்தி மணமுடிக்க
அள்ளினார் வாழ்க்கை அமுது.

ஆரம்மா என்பார்க்கு நான்என்று சோறளிக்கும்
மாரம்மா அப்போசி வாழ்முறையைப் - பாரம்மா
என்று பலரும் இயம்பிடவே பல்லாண்டு
நன்றுவாழ் வார்கள் நயந்து!

குறிப்பு :

29.4.59 அன்று திருச்சிப் புத்தூர் பெரியார் மாளிகையில் இரா. அப்போசிக்கும் - மாரம்மாளுக்கும் நடந்த திருமணத் திற்கு முன்கூட்டியே கவிஞர் விடுத்த வாழ்த்துப்பா.

- குயில், கிழமை இதழ், 28.4.59, ப.8

226. சிட்டுக்களும் பூனையும் (மெய்ம் மூவாறு)

நஞுணநமன நஞுணநமன
இருகுருவிகள் கூட்டுக்குள்
இப்படிப் பாடின பாட்டுக்கள்!

யரலவழள யரலவழள
என்றொரு பூனை தூலத்தில்
மெதுவாய் ஏறிய காலத்தில்

கசடதபற கசடதபற
எனப் பறந்தன சிட்டுக்கள்
எதிரில் சன்னல் வெட்டுக்குள்.

குறிப்பு :

இப்பாடல் 'சிறுவர் பகுதி' எனும் பொதுத்தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ளது.

- குயில் கிழமை இதழ், 28.4.59, ப.10

227. படிப்பை இகழலாமா?

பாடம் சொல்லிக் கொடுப்பேன் வாவா
பண்ணியம் எல்லாம் கொடுப்பேன் வாவா
ஆடும் குதிரையும் கொடுப்பேன் வாவா
அட்டைப் பெட்டியும் கொடுப்பேன் வாவா;
ஓடி அழைத்தாள் அக்கா! வந்தே
உட்கார்ந் திட்டாள் தங்கப் பாப்பா
பாடம் சொல்லத் தொடங்கும் முன்னே
பண்ணியம் எல்லாம் வாங்கிக் கொண்டாள்.

பண்ணியம் எல்லாம் உண்டான்[1] பாப்பா
பாடம் வேண்டாம் என்றாள் பாப்பா
எண்ணிய எல்லாம் பெற்றாள் பாப்பா
ஏனோ பாடம் என்றாள் பாப்பா
பெண்ணா குரங்கா இந்தப் பாப்பா
பிழைசெய் தாளே இந்தப் பாப்பா
கண்ணை இகழ்ந்தாள் இந்தப் பாப்பா
கல்வி இகழ்ந்தாள் இந்தப் பாப்பா

1. 'உண்டாள்' என்றிருத்தல் வேண்டும்

- **குயில் கிழமை இதழ்**, 28.4.59, ப.16

29.4.59

228. என் ஆசை

தமிழர் தூங்கிய நாளில் ஆரியர்
தமிழில் ஆரியச் சழக்கைச் சேர்த்தனர்;
தமிழர் விழித்தஇந் நாளில் ஆரியர்
"ஆரியக் கலப்பிலாத் தமிழும் உண்டோ?
"தமிழுக் காரியம் தாய்எனல் பொய்யோ?
என்று தமைமறந் தியம்பு கின்றனர்.

ஃ ஃ ஃ

இமையம் தொடங்கிக் குமரி வரைக்கும்
தமிழரே தழைந்து வாழ்ந்தஅந் நாளில்
பிழைக்க வந்த பிச்சைக் காரர்கள்
இந்நாள் தமிழரை நோக்கி இயம்புவர்:
"வண்தமி ழர்க்கொரு வரலா றுண்டோ?"
"வாழ்க்கை முறையொன்று வாய்ந்த துண்டோ?"

ஃ ஃ ஃ

ஆரியர் ஆணவ மிக்க ஒற்றுமை
வாய்மை என்பதன் வலியையும் அடக்கித்
தீய வழியே சென்று தாயக
ஆட்சியை அடைந்த தாயினும் வாய்மை
சாகா தென்பதைச் சழக்கர் அறியார்;
சாகாத் தமிழத் தலைமுறை அறியும்!

தமிழகத் தையும் தமிழையும் மீட்கத்
தமிழர் ஒற்றுமை தாங்கி எழுந்தனர்;
ஆரியர் அதுகண் டலறு கின்றனர்
அதனா லன்றோ "எம்ஆரி யந்தான்
தனிமொழி தனிமொழி! யாமே தக்கவர்
ஆரியர் ஆள்வதே முறைமை" என்று
வையக மெல்லாம் புளுகு மொழியும்
பெருநிறு வனங்கள் பரப்பு கின்றனர்"

ஃ ஃ ஃ

அழகு நடைபோட்டு வந்தஎன் ஆயுள்
அறுபத் தெட்டுக்குப் பின்னும், என்ஆசை
வாழ்ந்திரு என்று வலிவும் தந்ததே.
என்தமிழ் அன்னை துன்பம் நீங்கித்
தூய்மை எய்தித் துலங்குதல் காண்பேன்
என்தமிழ் நாடு தன்னாட்சி பெற்றுத்
துலங்குதல் காண்பேன் தமிழர்
நலங்காண் பேன்நான் நானில மதிலே!

குறிப்பு :

கவிஞர் தன் பிறந்தநாள் அறிக்கையாகத் தமிழ்முரசு இதழுக்கு 29.4.59இல் வழங்கிய பாடல்

- குயில் கிழமை இதழ், 5.5.59, ப.8 & 9

229. தமிழர் கடன்

ஏழைத் தமிழன் வாழ வேண்டும் மாமா - அவன்
இட்டலிக் கடையில் உண்ண மறுக்க லாமா?
கூழா னாலும் தமிழன் விற்பது நமது - சுவை
குறைந்திட் டாலும் அதுநமக்கே அமுது
தாழ்வாய் நமைத் தமிழன் நினைப்ப தில்லை - அந்தத்
தமிழனுக்கேன் தமிழர்களால் தொல்லை?
பாழாக்கிடும் நமை அயலான் நெஞ்சு - தீயன்
படைப்ப தமுதம் என்றா லுமது நஞ்சு!

தமிழன் கடையில் தமிழன் உண்ண வேண்டும் - பிற
தறிதலைகள் கடையை ஒழிக்க வேண்டும்;
தமிழர்களால் தமிழர் வாழ வேண்டும் - நமைத்
தாழ்த்து வாரை வீழ்த்திடத்தான் வேண்டும்!
தமிழன் கடை தமிழரின் தாய்வீடு - பிற
சழக்கர் கடை நமக்குச் சுடுகாடு!
தமிழ ருணவு தமிழ ருக்குத் தாய்ப்பால் - பிற
சாக்கடைகள் உணவு நமக்கு நோய்ப்பால்!

நூற்றுக் கிருநூறு வரு மானம் - கெட்ட
நாலுக்[1] கதைக் கொட்டுவதா மானம்?
காற்றுமழை கலந்தடிக்கும் போதும் - அவன்
கடைக்குறட்டில் ஒதுங்குவதும் தீதாம்!
வேற்றுவனை 'வேரறுத்தல் நன்றா? - அவன்
விற்பனையை ஓங்கவைத்தல் நன்றா?
சாற்றவந்தேன் முத்தானஎன் அத்தான் - தனித்
தமிழர்களின் நற்கடமை யைத்தான்!

1. 'நூலுக்' என இருத்தல் வேண்டும்.

- குயில் கிழமை இதழ், 5.5.59, ப.16

12.5.59

230. ஏனங்குடி ம. சம்பந்தம் அறிக்கை

இந்த நாட்டில் எங்கள் கட்சிதான்
முதன்மை உடையதென்று மொழிந்து
கடமை கண்ணியம் கட்டுப் பாடெனும்
சொல்வலை வீசித் தூய தமிழக
மக்கள் தமிழையும்[1] மாணவர் தம்மையும்
மயக்கிக் கூத்தியர் மடியில் சாய்த்து
நாட்டில் தீமை நாட்டு கின்றனர்;
மானம் அழிப்பார்; வீரம் மாய்ப்பார்
கடிவர் பண்பினைக் கண்ணீர்த் துளிகள்

ஃ ஃ ஃ

உண்மையும் நேர்மையும் ஒழிவன அல்ல
இந்நாள் வரைக்கும் அவருடன் இருந்தநான்
உண்மை உணர்ந்து வருந்து கின்றேன்

ஃ ஃ ஃ

தந்தை பெரியார் ஒருவரே தன்னலம்
எண்ணா துழைப்பவர், தண்முகில் போல!
அவரடி பற்றினேன்! தமிழர்
எவர்க்கும் யான்தரும் அறிக்கை யீதே!

1. 'தம்மையும்' என இருத்தல் நன்று!

- குயில் கிழமை இதழ், 12.5.59, ப.2

231. ஏமாறாதே!

எலிஏ மாந்தால் எறும்பும் கொல்லும்
புலிஏ மாந்தால் பன்றியும் புறட்டும்[1],
யானைஏ மாந்தால் எறும்பும் நலிசெயும்;
மானே மாந்தால் நரியும் மடிக்கும்.
தாயகம் ஏமாந்தது - ஆரியத்
தீயர் உயர்நிலை சிதைத்தார் அன்றே!

1. 'புரட்டும்' என இருத்தல் வேண்டும்

- குயில் கிழமை இதழ், 12.5.59, ப.2

232. நமக்குள் சண்டை ஏன்?

சிட்டுக் குருவிக்கும்
சிட்டுக் குருவிக்கும் சண்டை!
சிச்சி புச்சியென்று
கொத்தக் கிழிந்தது மண்டை!

பட்டுப் படாலென்று
எட்டிஅ டித்தஇ றக்கை,
பட்டுப் பட்டாகப்
பறந்தது வீட்டைம றைக்க(த்)

தட்டிஇ டுக்கிற்பு
ரட்டிய தேஒரு குருவி
ஒட்டிஎ ழுந்துக
டித்தது மற்றொரு குருவி

தட்டிக்கொண் டுபோக
வந்தது காக்கைக் கூட்டம்
சண்டையை விட்டேஇ
ரண்டும் எடுத்தன ஓட்டம்!

- குயில் கிழமை இதழ், 12.5.59, ப.5

26.5.59

233. வந்தார்க்கு வாழ்த்து

திண்டி வனத்துத் தேர்தலில் தி.மு.க.
கண்ணியம் கடமை கட்டுப் பாடுகள்
கடந்து தீங்குற நடந்த காரணத்தால்
கண்ணீர்த் துளிகளின் கலப்பட மான
நாவலர் பகுத்தறிவு மன்றம் நாடேன்;
இன்றுமுதல் நீங்கிக் கொண்டேன் என்பதைச்
செந்தமிழ்க் குயிலுக்குத் தெரிவிக் கின்றேன்.

என்று தோழர் எஸ்.கே.சாமி
நன்று நமக்கே நவில லுற்றார்
நாமும் அவரைத் திராவிடர் கழகச்
சார்பில் வருகெனச் சாற்று கின்றோம்
வாழ்க வாழ்க வாழ்கெனத்
தோழர்க்கு வாழ்த்தும் சொல்கின் றோமே!

- குயில் கிழமை இதழ், 26.5.59, ப.12

234. திபேத்து விடுதலை

கொஞ்சும் புறாக்களை ஒன்று தவறாது
வஞ்ச வலைக்குள் கட்டி ஆண்ட
திபேத்து வேடனார் இந்தியா சேர்ந்தார்.

அந்த நாட்டினர் அனைவ ருக்கும்
அவரே கடவுள்! அவரே தலைவர்
ஆயி ரத்துத் தொளாயி ரத்தின்
ஐம்பத் தொம்பதாம்[1] ஆண்டிலும் இந்நிலை!

திபேத்திய மக்கள் திகைத்தனர். அண்டையில்
உலாவும் சீனச் சிட்டுக் குருவிகள்
விடுதலை அமிழ்தம் உண்ணும் வேடிக்கை
அவர்களின் நெஞ்சை அள்ளிய தாலே
சீனாக் காரா சீனாக் காரா
எமக்கும் விடுதலை வேண்டும் என்றனர்.

சீனாக் காரச் சிங்கம் பூனைபோல்
திபேத்துச் செய்தியில் மெல்லடி வைக்கவே
கடவுள் கிடுகிடாய்த்துக் கடிது பறந்து
நேருவின் அடியில் நெடுஞ்சாண் கடையாய்
விழுந்தார். நேரு விருந்தளிக் கின்றாய்.[2]

காட்டு மிராண்டி காட்டுமிராண் டிக்குக்
காட்டும் சலுகைக்குக் கணக்கா? வழக்கா?
திபேத்து மக்களின் தீமை தீர்வதா?
"தலைலா மாவால் சாவை உண்பதா"
என்பது நேருவின் இரண்டு கையில்
அடங்கி விட்டதாய் அனைவரும் எண்ணுவர்.

சீனாக் காரன் திபேத்தைக் காப்பது
தன்னிடம் உளதென்று தானினைக் கின்றான்
அந்தத் திபேத்தின் ஆச்சாரி களையும்
அந்தத் திபேத்தின் அண்ணாக் களையும்
அங்குள பெரியார் தாமும் தொண்டரும்
முற்றும் அடக்கும் உணர்ச்சி
பெற்றுத் திபேத்தில் விடுதலை பெய்கவே!

1. 'ஐம்பத் தொன்பதாம்' என இருத்தல் வேண்டும்
2. 'விருந்தளிக்கின்றார்' என இருத்தல் வேண்டும்

- குயில் கிழமை இதழ், 26.5.59, ப.13

235. வாருங்கள்

நாற்புறத்தும் பகைவர்கூட்டம்
நடுப்புறத்தில் நம்தமிழ்த்தாய்!
காப்பதற்குத் தமிழரெலாம்
வாருங்கள் - தீய
கதைமுடிக்க விரைவில்ஒன்று
சேருங்கள்.

சோற்றுக்காக வந்தவர்கள்
தொழும்புக்கென்று வந்தவர்கள்
ஆற்றல்காட்டிப் பேசுகின்றார்
வாருங்கள் - அகந்தை
அறுக்கவேண்டும் விரைவில்ஒன்று
சேருங்கள்.

பிச்சைஎன்று வந்தவர்கள்
பெரியநாடு தம்மதென்றார்
கைச்சரக்கைக் காட்டுகின்றார்
வாருங்கள் - அந்தக்
கழிவிடையை [1] ஒழிக்கஒன்று
சேருங்கள்.

முச்சங்கமும் முத்தமிழும்
மூவரசும் எளியஎன்று
நச்சைஅள்ளி வீசுகின்றார்
வாருங்கள் - அவர்
நாவறுக்க விரைவில்ஒன்று
சேருங்கள்.

வந்தவர்கள் தமிழர்களாம்
வாழ்ந்தவரே ஆரியராம்
கொந்துகின்றார் வரலாற்றை
வாருங்கள் - அந்தக்
கோட்டான்களை ஒழிக்கஒன்று
சேருங்கள்.

இந்திஒன்றே மேலானதாம்
செந்தமிழ்தான் கீழானதாம்
முந்துகின்றார் முந்துகின்றார்
வாருங்கள் - அந்த
முட்டுக்கட்டைகள் தீரஒன்று
சேருங்கள்.

1. 'கழிசடையை' என இருத்தல் நன்று.

- குயில் கிழமை இதழ், 2.6.59, ப.16

16.6.59

236. என் விலங்கை மாற்று என் மகனே என் கண்ணி

மண்கலங்க வீரத்தால் வாழ்ந்தேன் எனைஇன்று
கண்கலங்க் வைத்ததுவும் காணாயோ என்மகனே

திண்ணைச் சிறுகதையும் தேர்தலிலே ஆசையும்என்
அண்ணாந்தாள் தன்னை அகற்றிடுமோ என்மகனே

தமிழை அழிக்கின்றான் தில்லியான் நீஉன்
அமிழ்தை இழந்திட்டால் ஆவியுண்டோ என்மகனே

உமிழத் தகும்இந்தி உன்றனுக்கா? ஞாலம்
கமழத் தகும்தமிழ்க்கும் கைவிலங்கா என்மகனே

இன்றுபட்ட இன்னல்கள் என்றுபட்டேன் என்தமிழர்
ஒன்றுபட்டால் அன்றோ உயிர்வாழ்வேன் என்மகனே

குன்றின் விளக்குநான் குத்தரிசிக் கேதில்லி
முன்றிலிற் கைஏந்த முற்பட்டேன் என்மகனே

தமிழ்நாட்டைச் சென்னைஎன்று சாற்றி, எவர்க்கும்
அமையப் பொதுமகள்போல் ஆக்கினார் என்மகனே

தமிழ்நாட்டில் மற்ற இனங்கள் கலைகள்
தமைஉயர்த்தி யேஎன்னைச் சாகடித்தார் என்மகனே.

தமிழ்தமிழர் தொன்மை தனிமேன்மை மாற்றி
அமைக்கும் வரலாற்றை ஆர்பொறுப்பார் என்மகனே

தமர்வாழச் சாதிவைத்துச் சட்டம்இட்ட மக்கள்
சமநிலைமை தோன்றுமா சாற்றுவாய் என்மகனே

மலையாளம் என்உடம்பே; மற்றதனை வெட்டிக்
கொலைகாரர் என்பகையாய்க் கொண்டுவந்தார் என்மகனே;

பலியானார் ஆந்திரரும் தில்லிப் பகைக்கே
எலியானார் என்பகைவர் ஆனாரே என்மகனே

என்அடங்கற் பொன்னுடலே என்னை இழப்பதுண்டோ
கன்னடத்தைப் புய்த்த கதையறிவாய் என்மகனே

என்விலங்கை மாற்றி வடக்கர் இடர்மாற்றி
உன்விளங்காச் சீர்த்தியினை ஓங்கவைப்பாய் என்மகனே!

- குயில் கிழமை இதழ், 16.6.59, ப.16

7.7.59

237. நல்லவர் ஆண்ட புதுவையிலே நரிகளுக்கே இன்னும் நாட்டாண்மையா?

நல்லவர் ஆண்ட புதுவையிலே - இந்த
நரிகளுக் கேஇன்னும் நாட்டாண்மையா மிக *(நல்லவர்)*

கல்லடி பட்டது போதாதா? மக்கள்
கத்தியால் வெட்டுண்டு செத்தது போதாதா?
பொல்லாத மாமாக்கள் ஆலைக்குள் புகுந்து
பூவைமாரைக் கூட்டிப் போனது போதாதா *(நல்லவர்)*

கையிற் பணமெடுத்து வெளிவர முடிந்ததா?
கண்ணீர் விடாமல்உயிர் வாழ்ந்திட முடிந்ததா?
ஐயோ ஐயோஎன்றே அலறாத மக்களை
அந்த நாளில்நாம் காண முடிந்ததா? *(நல்லவர்)*

அடியுதை பட்டவர் அழத்தான் முடிந்ததா?
அதிகாரி யிடம்சொல்ல எண்ணத்தான் முடிந்ததா?
கடையைத் திறந்தவர் விற்கத்தான் முடிந்ததா?
கண்ணான மாணவர்கள் கற்கத்தான் முடிந்ததா? *(நல்லவர்)*

அரசினர் பொருளெலாம் அவர்கள் பொருளே
அன்றியும் ஊரார் பொருள்அவர் பொருளே
இருந்தவர் பிழைத்தார் எனில்அவர் அருளே
எரிந்த விளக்குண்டோ வீடெல்லாம் இருளே *(நல்லவர்)*

தோன்றுவான் ஒருவன் ஆள்வோர்காலை வருடுவான்
தொழிலாளர் தலைவன்என்பான் பச்சையாய்த் திருடுவான்
ஈன்றதாய் தடுத்தாலும் ஊரை வாழவிடான்
இரக்கம் காட்டமனம் ஒப்பிடான் ஒப்பிடான் *(நல்லவர்)*

- குயில் கிழமை இதழ், 7.7.59, ப.2

7.7.59

238. என் நூல் அருமை எனக்கே தெரியும் தாத்தா சாற்றுகின்றார்

கலைப்பேழை ஆகிய கண்ணகி சிலம்பை - என்
நிலை(ப்)பேழை தனிலிருந் தெடுப்பாய் - உடன்
நீஎன்றன் கையிற் கொடுப்பாய் (கலைப்பேழை)

கையிலே அழுக்குச் சிறிது
கண்டாலும் சுவடிக் கிழுக்கு!
புய்யாமல் தவறியே புழுதியில் விழாமல்
புத்தகத்தை எடுத்திட வேண்டும் (கலைப்பேழை)

ஒருநூல் தெரியும் - எடுத்தால்
ஒன்றின்மேல் ஒன்று சரியும்
வரிசை கெடாமல் மற்றவை விடாமல்
மனம்சோராமல் எடுத்திட வேண்டும் (கலைப்பேழை)

உன்னால் முடியாது - வேண்டாம்
நானே எடுத்தால் பிழைநேராது
என்நூல் அருமை எனக்கே தெரியும்
பொன்னான சுவடிகள் எந்நாளும் வாழ்க! (கலைப்பேழை)

பலிஞ்சி

கலைநிறைந்த பெட்டி போன்றதான சிலப்பதிகாரத்தை என் நிலைப்பேழை (அலமாரி)யினின்று எடு என் கையிற் கொடு! புத்தகம் புய்ந்து விடாமல் புழுதியில் விழுந்து விடாமல் எடுக்க வேண்டும்.

அடுக்கிலிருந்து ஒரு நூலை எடுக்கையில் இந்தண்டை அந்தண்டைகளிலுள்ள நூல்கள் சரியும். சரியாமல் வரிசையினின்று விழாமல் மனம் சோர்வு கொள்ளாமல் எடுக்க வேண்டும்.

வேண்டாம்; அது உன்னால் முடியாது, நானே எடுத்தக் கொள்வதால் பிழை ஏற்படாது.

அருஞ்சொல் விளக்கம்

கலை - பாட்டின் சுவைப்பகுதி, பேழை - பெட்டி, நிலைப்பேழை - அலமாரி, சிலம்பு - சிலம்பு பற்றிய நூல் - அதாவது சிலப்பதிகாரம், உடன் - உடனே, இழுக்கு - கெடுதி, புய்யாமல் - பிய்யாமல் (என்று வழங்குகின்றது அது பிழை), சோர்வு - மறதி.

கேள்விகள்

சுவடியை எடுக்கவேண்டிய முறைகளை எல்லாம் சொல்லி எடு என்ற தாத்தா பிறகு எடுக்க வேண்டாம் நானே எடுத்துக்கொள்கிறேன் என்று ஏன் சொன்னார்?

பாடம் : பெரியவர்களின் நூற்களின் தூய்மை கெடும்படி நடந்துகொள்ளக் கூடாது.

- குயில் கிழமை இதழ், 7.7.59, ப.5

239. நன்றாயில்லை

கழுதைப் பாட்டு நன்றா யில்லை
காக்கைப் பாட்டு நன்றா யில்லை
தொழுகையிலே வடமொழியால்
சொல்லும்பாட்டு நன்றாயில்லை
அழுதுகொண் டிருக்கும் போதும்
சிரித்துக்கொண் டிருக்கும்போதும்
குழந்தைக்குரல் கேட்கக் கேட்கக்
காது குளிரும் இனிய பாட்டு!

பகிர்வு

பொருள் விளங்காத வடமொழிப்பாட்டு, கழுதைப் பாட்டுக்கும் காக்கைப்பாட்டுக்கும் ஒப்பாயிற்று. இதனால் இளைஞர் உணர்ந்துகொள்ள வேண்டியது பிள்ளை அழுதாலும் சிரித்தாலும் கேட்க ஆசையாய் இருக்கும்.

அருஞ்சொற்கள்

தொழுகை, வடமொழி

கேள்வி

கேட்கக் கேட்கக் காதுகுளிரும் என்பதன் எதிர்மறையாக வழங்குகின்ற சொற்றொடர் எது? (கேட்கக் கேட்கக் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போலிருக்கும்)

- குயில் கிழமை இதழ், 7.7.59, ப.6

7.7.59

240. ஒற்றுமை

ஈயைப் பார்த்தது பல்லி! பல்லியை
இருந்து பார்த்து பாம்பு! பாம்பைப்
பாயப் பார்த்தது கோழி! கோழியைப்
பசிக்குப் பார்த்தது காட்டுப் பூனை

ஈயைப் பல்லி விழுங்கி விட்டது
இருந்த பல்லியைப் பாம்பு கொன்றது
தீய பாம்பைக் கோழி கொன்றது
திருட்டுக் கோழியைப் பூனை கொன்றது

வாயில் லாத உயிர்இ னங்கள்
பெரிது சின்னதை விழுங்கி வாழும்
தூய மனிதர்; அறிவு பெற்றவர்,
தோற்றங் களில் உயர்ச்சி என்பவர்

நாய மின்றி வலுத்த வர்கள்
இளைத்த வர்களை நசுக்குவதா?
நேயம் கொண்டே இளைத்த வர்கள்
நெஞ்சில் ஒற்றுமை கொள்ள வேண்டும்

பயிற்சி

விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீர்வாழ்வன, மரஞ்செடி கொடிகள் ஆகிய இவ்வுயிரினங்கள் மனிதரைவிட அறிவு குறைந்தவை என்றும், அவைகட்கு மனிதருக்கு இருப்பது போலக் கைகால் பேச்சு முதலிய கருவிகள் இல்லை என்று கூறுகின்றார்கள். இவ்வாறு கூறித் தாங்களே _ அதாவது மனிதர்களே எல்லா உயிர்களையும் விட உயர்ந்தவர்கள் என்றும் கூறிக் கொள்ளுகின்றார்கள். இவ்வாறு கூறிக் கொள்ளும் மனிதர்களே, தங்களில் இளைத்தவர்களை வலுத்தவர்கள் அடிமைப்படுத்தலாமா சுரண்டலாமா துன்பப் படுத்தலாமா?

அறிவுடையவன் தங்களைப்போல் பிறனையும் எண்ணு வானே! எங்கே எண்ணுகின்றான்? இதனால் இளைத்தவர்கள் என்ன செய்யவேண்டும்? ஒற்றுமையடைய வேண்டும்.

இதனால் இளைஞர்கள் உணரவேண்டியது ஒன்றுபட்டால் உண்டுவாழ்வே என்பது.

அருஞ்சொற்கள்

தூய தோற்றங்கள், (பல்வகைப் பிறப்புக்கள் : விலங்கு, பறவை முதலியவை) உயர்ச்சி.

கேள்வியும் பதிலும்

விலங்கு முதலியவைகள் ஒன்றை ஒன்று தின்றுதானா வாழவேண்டும்? ஆம் அவைகளுக்குப் பயிரிடமுடியாது. சமைக்கமுடியாது. இளைத்தவரை வலுத்தவர்கள் விழுங்கு வதற்குச் சில எடுத்துக்காட்டுக்கள் உண்டா? உண்டு. தமிழரை வடவர் அடிமைப்படுத்திச் சுரண்டித் துன்பப்படுத்து கின்றார்கள். தமிழரின் தாய்மொழியிலேயே கையை வைத்துவிட்டார்களே!

பார்ப்பனர்கள் வலுத்துவிட்டார்கள். அவர்கள் இளைத் துள்ள தமிழர்களை நசுக்குகின்றார்கள்.

ஒற்றுமையுற்றால் இளைத்தவர் அடையும் பயன் என்ன? வலுத்தவர்களை எதிர்த்து நிற்கமுடியும். எடுத்துக்காட்டு தமிழகத்தமிழர் பெரியாரால் ஒற்றுமை அடைந்துள்ளார்கள். பார்ப்பனர் நடுங்கவில்லையா?

- குயில் கிழமை இதழ், 7.7.59, ப.7

11.7.59

241. வெல்க தமிழ், வெல்க தமிழர்!

இலங்கைத் தமிழர் துலங்க எண்ணினால்
அவர்கள் ஒற்றுமை அடைய வேண்டும்
வேற்றுமை விளைக்கும் ஆற்றல் எவற்றையும்
கான்றுமிழ்தல் வேண்டும் கழிவடைச்
சாதி சமயம் என்னும் எவற்றையும்
மதித்தல் கூடாது மறப்பது நன்று
தமிழர் நலத்தைத் தாக்கும் கட்சிகள்
எவற்றிலும் எவரும் சேர்தல் சரியன்று.
தமிழர் அனைவரும் கூடித் தக்கதோர்
கொள்கையை வகுத்துக் கொள்ள வேண்டும்
தாய்மொழி யான தமிழ்மொழி வாழ்ந்தால்
தமிழர் வாழ்வர்; தமிழ்மொழி வீழ்ந்தால்
தமிழர் வீழ்வர்; தமிழ் தமிழர்க்குயிர்
தமிழன்னைக்கொரு தாழ்வு நேர
விடுதலின் உயிரை விடுதல் தக்கது.
சிங்களர்க் குள்ள இலங்கையின் உரிமை
செந்தமி ழர்க்கும் உண்டு! திருமிகு
சட்ட மன்றிலும் பைந்த மிழர்க்கு
நூற்றுக் கைம்பது விழுக்காடு நோக்கிப்
படிமை ஒதுக்கப் படுதல் வேண்டும்!
செந்தமிழ் மக்கள் சிறுபான்மை யோரெனச்
சிங்களர் பெரும்பான்மை யோரெனச் செப்பித்
தமிழர் உரிமையைத் தலைக விழ்க்க
எண்ணும் எண்ணம் இழைக்கும் தீமைகள்
எவற்றையும் தமிழர் எதிர்க்க வேண்டும்
மானங் காப்பதில் தமிழ்மக்கள்
சாதல் நேரினும் தாழக் கூடாது
இவைகள்இலங்கைத் தமிழர் கொள்கைகள்!
யாவர் இவற்றை எதிர்ப்பினும் விடற்க!
வெல்க இலங்கைத் தமிழர்!
வெல்க தமிழே! மேவுக புகழே!

குறிப்பு :

இலங்கை 'தினகரன்' சிறப்புமலருக்கு 11.7.1959இல் எழுதிய தாகும்.

- பாரதிதாசன் குயில் சுவடி.10, அக்டோபர் 1984, ப.10

14.7.59

242. பொன்முடியார் - புலவர் திருஞானம் திருமண வாழ்த்து

வாழுமா றமைந்த கீழ மாளிகை
தமிழ்மற வர்செந் தமிழ்ப்பெரும் புலவர்
பொன்னம் பலனார் அவர்மேல் அன்பினில்
பிறந்து கல்வியில் சிறந்துள கற்புப்
பொன்முடியார் எனும் பூங்கொடிக்கும்
நந்தியன் குடிக்காடு தந்த நற்புகழ்
மேவு மாணிக்கம் வேலா யுதம்தரு
திருஞானம்எனும் செம்மல் தனக்கும்
உள்ளம் அன்பினால் ஒன்று பெற்றதை
வெள்ளத் தமிழர் தலைவர் பெரியார்
மன்னு சதாசிவப் பண்டா ரத்தார்
உற்றார் பெற்றார் மற்றையோர் அனைவரும்
வாழ்க வாழ்க என்று வாழ்த்தினர்
அந்த வாழ்த்தொலி அருளுளத் தெழுந்து
ஏழிசை யோடும் நாள்மலர் மணத்தொடும்
தேனினும் இனிதென வானே நிறைந்தது
திருஞானம் பொன்முடி இருவர் தாமும்
எந்த நாளும் இன்பமே எய்தி
செந்தமிழ்த் தாய்க்குத் திருத்தொண்டு செய்து
புகழுலகு தமக்கெனும் பேறு பெற்று
மக்கள் செல்வம் ஆயுள்
தக்கவா றெய்தி வாழியர் தழைந்தே.

குறிப்பு :

தமிழ் மறவர் வை. பொன்னம்பலனார் அவர்களின் மகள் பொன்முடியாருக்கும் புலவர் திருஞானம் அவர்களுக்கும் தந்தை பெரியார் தலைமையில் 14.7.1959இல் நடைபெற்ற திருமணத்தில் பாவேந்தர் படித்தளித்த வாழ்த்துக் கவிதை இது.

- தன்மானத் தமிழ் மறவர்
(கீ.வை. பொன்னம்பலனார் அவர்களின் வரலாறு), ப. 57-58

25.7.59

243. தமிழக முதலமைச்சர் காமராசர் 57ஆவது ஆண்டுவிழா வேண்டினோர்க்கு நன்றி

பஃறொடை வெண்பா

ஊமைத் தமிழரெலாம் பார்ப்பானால் ஓய்கையிலே
தீமை தவிர்த்திடுவேன் தீயர்திறம் நான்காண்பேன்

என்று முதலமைச்சுப் பதவியை ஏற்றுமே
நன்று கடனாற்றும் நம்காம ராசர்க்கே

அண்டும்ஐம் பத்தேழாம் ஆண்டு பிறந்தவிழாக்
கொண்டாட வந்த கோதிலா நாமக்கல்

ஊருக்கு நன்றி! உயர்விழா என்பதொரு
தேருக்கச் சாணிச் சிவஞானச் செம்மற்கும்

ஆன செயலாளர் கருப்பையா அன்பர்க்கும்
ஏனைய ஒத்துழைப்பார் எல்லார்க்கும் நன்றி

ஏனெனில், ஏதும் இனப்பற்றி லாமல்தன்
மானமிலா மாந்தர்கள் வாழும்இந் நாட்டில்

திகழ்ந்தான் ஒருதமிழன் மற்றத் தமிழர்
மகிழ்ந்தார் எனலும் அரிது.

முதல்வர் காமராசர் ஐம்பத்தேழாவது பிறந்தநாள் வாழ்த்து!

அகவல்

தமிழரை விழுங்கத் தயங்காப் பார்ப்பனப்
பாம்பின் திறந்தவாய்; இந்தப் பழநாடு!
தமிழன் ஒருவன் தலைகிளப் புவது
தாழப் பறக்கும் பருந்தெதிர் தவளை
வாழப் பறந்து மாய்வ தாகும்!
இந்த நிலையில் இத்தமிழ் நாட்டில்

இந்தத் தலைமுறை தன்னில்ஓர் இளைஞன்
வந்த ஆங்கிலன் அடிக்கீழ் மடியுமோர்
தாயகம் பூண்ட தளையில் கண்ணும்
உரிமை காப்பதில் உள்ளமும் ஆகத்
தொண்டு செய்து கொண்டி ருந்தான்
நண்டு நரிக்கெதிர் வலம்வரு தல்போல்!

விடுதலைக் கிளர்ச்சி தம்மின வளர்ச்சிக்கு -
என்னும் பார்ப்பனர் இந்த இளைஞனின்
வளர்ச்சியோ நமது வாணிக வீழ்ச்சியே
என்று நடுங்கினர். அவர்கள் எய்யும்
நச்சுக் கணைகட் கிடையிலும் நமது
பச்சைப் பசுங்கிளி பணிநிற்க வில்லை.
ஐம்பத் தேழாண் டிந்நாள் அடைந்துள
அமைச்சர் காம ராசர் அந்நாள்
எஞ்சாப் பொதுத்தொண்டார்வம் எவ்வளவோ
அஞ்சாமை தானும் அவ்வளவு கொண்டவர்
ஆங்கிலன் நாட்டன்பு - அழிக்க அளித்த
சிறையறை காம ராசர்க்கு மணவறை!
பெருமா வட்டப் பெருமக் கட்கெலாம்
அன்புக்குத் தாய்போல் அறத்திற்கு வேந்துபோல்
துன்புக்குத் தோழன்போல் காம ராசர்
வளர்ந்த வளர்ச்சி, பகைவர், தமக்கு
விளைந்த வீழ்ச்சி என்று புலம்பினர்.
காமராசன் கவினுறு புகழ்விளக்கு
மாமலைத் தலைமேல் ஏற்றுமோர் வாய்ப்பு
நேர்ந்தது, நிகழ்த்துவேன் சுருக்க மாக!

மக்கள் மன்றத் துக்கொரு தலைவன்
வேண்டுமென்று - ஒருநாள் நாடு விரும்பியது
"நாமே அதனை நண்ணுவோம் என்று
பார்ப்பனர் பறந்தனர் இறக்கை கட்டி
வேட்டியை இறுக்கிக் கட்டி வீடுதொறும்
காம ராசனை ஆதரிக் காதீர்
பார்ப்பனர் தம்மை ஆத ரிப்பீர்
என்று கரடியாய்க் கத்தினான் அன்று
தனியதி காரனாம் பார்ப்பனத் தலைவனும்!
அந்த முழக்கம் அவர்கட்குத் தீங்கையும்
செந்தமி ழர்க்கு நலத்தையும் செய்தது

தமிழன் வேண்டாம் என்று சாற்றுவோன்
பார்ப்பனன் அன்றோ, இருட்டறை நீங்கி
உணர்ச்சியின் உச்சி ஏறினர் தமிழர்
தமிழரில் பத்தரை மாற்றுத் தங்கம்,
காமராசன் என்றனர்; தலைவராய்க் கண்டனர்
நாளின் இருபத்து நான்கு மணியும்
தூங்கித் தொலைத்தே ஏங்கிக் கிடக்கும்
தமிழகத் திற்குப் பார்ப்பனத் தக்கை
முதலமைச்ச னாகினான். முதல்நாள்
தொடங்கி அன்னவன் பதவி தொலையுமட்டும்
தமிழர் பட்டது தளைநாய் படாது
படியாப் பொறுக்கிப் பார்ப்பன னைவிட
படித்த பார்புகழ்த் தமிழன் மட்டம்
என்பது பார்ப்பனர் எண்ணம் அன்றோ
இனத்தை முறைமை எண்ணா துயர்த்தினான்
தமிழரைத் தரம் எண்ணாது தாழ்த்தினான்
கொதிப்பைத் தமிழுக் காக்கக் குதித்தான்
மதிப்பைச் செத்த மொழிக்கே வைத்தான்
இந்தஆள் இன்பத் தமிழ கத்தின்
அமைச்ச னானது வியப்பே அன்று
மற்றும் ஒருமுறை கொல்லை வாயிலாய்
அமைச்சர் தலைவன் ஆனதே வியப்பு!
வெறியன் மருந்து கிடங்கில் தீயிட
விரும்பினான்; ஒப்பினார் தமிழ வீணர்!
அவனே தமிழைக் கொல்ல ஆரிய
இந்தியைத் திணித்த இருளன். மேலும்
தமிழர்கள் படிக்கத் தலைப்பட் டுள்ளார்
ஆரியர் நிலைமை என்ன ஆவது
கல்வியை அழிப்பதே கண்ண விப்பதாம்
என்றே எண்ணிக் குலக்கல் வியினைச்
சட்ட மாக்க முனைந்தான் இருந்த
பள்ளிகள் ஆயிரம் பதைப்புற மூடினான்
நாடு நலிந்தது காடாகு முன்பு
நரியின் முடியைப் பெரியார் நறுக்கினார்
திருவளர் காம ராசர் செந்தமிழ்
நாடு காக்க நன்முத லமைச்சுப்
பதவியை மறுக்காது பழியிலா தொப்பினார்
குலக்கல்வி பற்றிய சட்டம் கொன்று

மூடிய பள்ளிகள் முழுதும் திறந்து
மேலும் ஆயிரம் ஆயிரம் விளைத்து,
மாண வர்க்கு மாணுற உணவும்
உதவி, நாட்டுக் குயிரையும் உதவினார்
இந்த நாட்டின் அடிப்படை இன்னல்
கல்வி இன்மை என்பது கருதி
உள்ளம் உருகிய மேலோர் ஒருவரே;
அன்னவர், **காம ராச** *அறிஞரே!*
இந்த நாட்டின்அடிப்படை நன்மை
நீர்வளம் ஆக்குதல்! நெடிய அணைகள்
பலப்பல பாங்கின் அருளியோர் அவரே.
தில்லியின் உளத்தைத் திருப்பியும், தில்லி
திரும்பா விட்டால் விருப்பம் நோக்கியும்
தன்தமிழ் மக்கட்கு நன்மை புரிவதே
மூச்சும் பேச்சு மாக முயல்பவர்
இந்நாள் ஐம்பத் தேழாண் டடைந்ததை
எண்ணுந் தோறும் மனமெலாம் இனிக்கும்
இன்னும் அந்த மேலோர் எண்ணிலா
ஆண்டுகள் வாழ வேண்டினர் ஆகத்
தமிழர் வாழ்த்தல் சரியே அதைநான்
அமிழ்தெனக் கொள்ளுதல் அதனிலும் சரியே
வாழ்க தமிழ்மொழி வாழ்க
வாழ்க **காமராசர்** *வண்புகழே!*

குறிப்பு :

நாமக்கல் 'இளைஞர் காங்கிரஸ் கமிட்டி' அமைப்பாளர் வி.கே. கருப்பையா வெளியிட்ட **"திரு. காமராஜ் 57-ஆவது பிறந்ததின விழா மலர்"**, *25, 26-7-59, (பக். 7-10)*

244. அறிவும் கலையும்

அறிவெனப் படுவ தறிந்ததை விடாதது
கலைஎனல் கண்டோர் வியப்ப தொன்றே!

- குயில் கிழமை இதழ், 8.9.59, ப.5

245. ஏடும் எண்ணமும்

ஏட்டை நிரப்ப எண்ணம் தேடேல்;
எண்ணம் பொங்கினால் ஏட்டில் ஏந்து.

- குயில் கிழமை இதழ், 8.9.59, ப.6

246. சொத்தும் சுவடியும்

சொத்தைப் பெருக்கச் சுவடி எழுதேல்
சுவடி சிறந்தால் தூய புகழ்கொள்.

- குயில் கிழமை இதழ், 15.9.59, ப.5

247. பேறும் வேறும்

பேறுஎனல் அறத்தாற் பெறுவ தாகும்
வேறுஎலாம் எளியரை வென்றதன் விளைவே!

- குயில் கிழமை இதழ், 15.9.59, ப.15

248. தன்னலம்

தகுபுகழ் தேடல் தன்னலம் அன்று
தன்னலம் என்பது பிறர்நலம் சாய்ப்பதே!

- குயில் கிழமை இதழ், 22.9.59, ப.5

249. அறமும் திறமும்

அறம்தனக் கின்பம் பெறுவதோர் ஆற்றல்
திறம்எனப் படுவது ஆற்றலின் சிறப்பே!

- குயில் கிழமை இதழ், 22.9.59, ப.7

250. ஐந்தறிவும் மெய்யுணர்வும்

ஐந்தறிவு பருப்பொருள் மேலன ஆகும்
மெய்யுணர்வு நுண்பொருள் மேல தாகும்

- குயில் கிழமை இதழ், 22.9.59, ப.10

குறிப்பு :

குறள்வெண்செந்துறை அமைப்பில் ஈரடிப் பாடல்களாக எழுதப்பட்டுள்ள இவை தனித்தலைப்பின்றி இதழ்களின் பக்கங்களில் அங்கங்கே இடம்பெற்றுள்ளன. பாடற் கருத்தை அடியொற்றிப் பதிப்பாசிரியரால் தலைப்புகள் தரப் பட்டுள்ளன.

22.9.59

251. ஆசிரியர் வாழ்த்து

துடிப்பகத்தால் தோன்றுமலை யத்தமிழர் தூய
படிப்பகம் வாழ்கபல் லாண்டு

குறிப்பு :

மலேயாத் தமிழர்கள் பாரதிதாசன் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். அவர் பெயரில் பல அமைப்புகளைக் கண்டவர்கள் அங்குள்ள தமிழர்கள். பாரதிதாசன் பெயரில் படிப்பகம் திறந்த நிகழ்ச்சிச் செய்தியை அவர்க்கு அறிவித்து வாழ்த்து வேண்டினர். வாழ்த்தாக விடுக்கப்பெற்ற குறள்வெண்பாவே இது (குயில் 22.9.59)

மலேயா அன்பர்கள் விடுத்த வேண்டுகோட் கவிதை அருமைகருதி ஈண்டு அளிக்கப்பெற்றுள்ளது.

ஞானதாசன், கலைச்செல்வன்
நா. அன்பரசன், அ. மழலைச்செல்வன்
9911 பவுல் சீரிட் தெரு
சிரம்பான் நெகிரிசெம்பிலான்
மலேயா.

படிப்பகம் திறந்த செய்தி
மலையத்துத் தமிழர் உணர்ச்சி

பூரிக்கும் உள்ளத்தின் சேதி ஒன்று;
புகலுகின்றோம் பாவேந்தே கேட்க நன்று!
மாரினக் கவிபொழியும் குயிலின் கோவே
மாத்தமிழின் உறைவிடமே உங்கள் பேரால்
நேருறவே இளைஞரெலாம் ஒன்று கூடி
நிலையாம்ஓர் படிப்பகத்தை நிறுவி யுள்ளோம்
சீர்மிக்க இச்செய்தி திருமுன் வைத்தோம்;
தீட்டினோம் இம்மடலை ஆத ரிக்க.

வாழுகின்ற வையத்து மக்கள் யாக்கை
மண்ணுக்கே இரையாவ துண்மை! ஆனால்
தாழ்வகன்ற கல்வியினால் வாய்ப்ப தான
தனிப்புகழோ எந்நாளும் அழிவ தில்லை.

ஏழையோம் நும்பெயரால் நிறுவி யுள்ள
இன்பப்ப டிப்பகத்தை அன்பு ளந்தான்
வாழ்களன வாழ்த்துமோர் வாழ்த்தெ மக்கு
மாப்புகழைச் செய்யுமென வணக்கம் செய்தோம்.

- குயில், கிழமை இதழ். 22.9.59, ப.13

6.10.59

252. சாகாமைக்கு ஒழுக்கம் காரணம்

அசையா துயர்பனி அடுக்கல் போல
விசுவேசு ரையா மிகுநாள் வாழ்வதற்கு
உள்ள காரணம்அவன் ஒழுக்கமே யாகும்
கடவுள் பிள்ளை என்று கழறும்
ஞானசம் பந்தன் இமையிற்[1] போனதற்கு
உள்ள காரணம் அவன்தீய ஒழுக்கமே!
கோயில் உருவம் குருக்கள் படையல்
வாயில் ஆகா வாழ்நாள் மிகுதிக்கு!
நாட்டு மக்களே நவிலுதல் கேட்பீர்
ஒழுக்கம் ஓம்புக! வாழலாம். உங்கள்
மக்களை நீணாள் வாழ
வைக்கலாம். தமிழகம் வாழும் நன்றே!

1. 'இளமையிற்' என இருத்தல் வேண்டும்.

- குயில் கிழமை இதழ், 6.10.59, ப.7

13.10.59

253. சுண்டல் காரணப் பெயர்

சூட்ட டுப்பில் ஒருபா னைக்குள்
வார்த்த நீரில் ஒருபடி கடலை
போட்டெ ரித்தால் பொங்கிய நீரும்
சுண்ட இறக்கித் தாளித் திடுவார்
சுண்டல் என்பார் அதன்பெயர்
உண்டால் உண்ண உண்ணத் தெவிட்டாதே.

- குயில் கிழமை இதழ், 13.10.59, ப.3

254. மகளிர் ஒழுக்கம்

காலிற் செருப்பணிய வேண்டும் - பெண்கள்
கையிற் குடைபிடிக்க வேண்டும்
மேலுக்குத் துவைத்தநல் லாடை - அது
மிகவும் அழகுசெய்யப் போதும்
சோலை மலரணிதல் நன்று - உடல்
தூய்மை காத்திடுதல் வேண்டும்
மாலை உலவிடுதல் வேண்டும் - பெண்கள்
மார்பும் தோளும் மறைவாக்கி

உடம்பு தெரியும்மெல் லாடை - பெண்கள்
உடுத்தல் நாகரிகம் அன்று!
படத்தில் நடிக்கவரும் பெண்கள் - மக்கள்
பணத்தைப் பறிப்பதற் காக
உடுக்கை இலாதும்நடிப் பார்கள் - அதை
ஒப்பிமேற் கொள்ள லாமா?
நடக்கும் திரைப்படங்கள் தம்மில் - பெண்கள்
நல்லதை ஆதரிக்க வேண்டும்.

ஆள், ஒரு பெண்ணை விலைகொள்ள - முதல்
அச்சாரம் கேட்பதவள் சிரிப்பே!
காளை கதைதெரிந்த பின்னர் - அவள்
கண்ணும் கருத்தும் உடன்பட்டால்
பாளை பிளக்கும் ஒருகோடி - பெறும்
பல்லென்ற முத்துப் பிறக்கும்!
வேளுக் கடிமைஅல்லர் பெண்கள் - பெண்கள்
மேன்மைக் கடிமைஅந்த வேட்கை!

தக்கவள் மீதில் வைத்தஅன்பை - ஒரு
சாதி விலக்கிடுதல் இல்லை
இக்காலம் தமிழர்கள் சாதி - என்ற
இழுக்கினில் வழுக்கியும் வீழார்
எக்காலும் தமிழினப் பெண்கள் - தமிழ்
இனத்தவனை மணக்க வேண்டும்
தெற்கே உரிமைவர வேண்டும் - இதைத்
தெரிந்து நடந்திடுதல் வேண்டும்.

- குயில் கிழமை இதழ், 17.11.59, ப.16

22.12.59

255. தமிழ்போனால் மேடைத்தம்பிரான் பாடைத் தம்பிரான்தான்

தமிழ்நாட்டில் இன்பத் தமிழ்ச்சீர் குலைந்தால்
தமிழர் இரார்!தமிழ்நா டேது? - நமையாள
மேடைமேல் வீற்றிருக்கும் தம்பிரான் கைலாயப்
பாடைமேல் வீற்றிருப்பார் பார்.

- குயில் கிழமை இதழ், 22.12.59, ப.16

29.12.59

256. கோழிகள் ஒழிக

சட்டமன்றம் கோழி வளர்ப்பதைத்[1] தடைசெய்யுமா[2]
தொட்டார்கை தொட்டுச் சுவைக்குமுன் - பட்டப்
பகலாயிற் றென்று பறையடிக்கும் சற்றும்
அகலார் அகலும் படிக்கு.

என்காதலர்பால் நுகரும் இன்ப விளையாட்டு முடியுமுன் அந்தக் கோழி பகல் ஆய்விட்டது என்று கூவுகின்றது. அதனால் என்னைவிட்டு அகலாதவரும் அகன்று விடுகின்றனர். சென்னை சட்டமன்று கோழி வளர்ப்பதையே தடைசெய்து விட்டால் நல்லதாகும் என்பது இப்பாட்டின் கருத்து.

1, 2. தளை தட்டுமிடங்கள்

- குயில் கிழமை இதழ், 29.12.59, ப.12

21.6.60

257. படிக்காதவன் சிரிப்பு

நிலைமண்டில ஆசிரியப்பா

சுவடியில் தோய்ந்தன என்னிரு கண்ணும்!
என்னை நோக்கி "என்னபார்க் கின்றீர்"
என்றான்! "மதுரை நாய்க்கன் மன்றம்"
என்றேன்! "இருநூறு கல்லுக் கப்பால்
இருப்பதை இங்கிருந்து பார்ப்பதா" என்று
சிரித்தான் விழுந்து விழுந்து சீனனே!

- குயில் கிழமை இதழ், 21.6.60, ப.2

21.6.60

258. பொதிநாத் துவையல் அருமை

வெண்பா

ஆய ஒருத்தி அரைக்க இரண்டுபேர்
போயதைவ ழிக்கஐந்து பூவைமார் _ ஓயார்கள்
நாவிலிட மூன்றுபேர் நண்ணவேண் டும்பொதி
நாவிலிட்ட நல்லதுவை யல்.

ஒருத்தி - ஒருகை, இரண்டுபேர் - இரண்டு கைகள், ஐந்து பூவைமார் - ஐந்துவிரல், நாவில் இட மூன்றுபேர் - சுட்டு விரல், நடுவிரல், பெருவிரல்.

- குயில் கிழமை இதழ், 21.6.60, ப.4

21.6.60

259. பாரதிதாசன் திருக்குறள்[1]

ஒருவன் புகழ்வான் ஒருவன் இகழ்வான்
இரண்டுக்கும் அப்பால் இரு.

1. இதழில் 'பாரதிதாசன் திருக்குறள்' என்றுபாடலின் கீழ் தரப்பட்டுள்ளது.

- குயில் கிழமை இதழ், 21.6.60, ப.5

21.6.60

260. தலைவி விழுந்து விழுந்து சிரித்தாள்

(அகவல்)

எனையும் விட்டுத் தனியே இருந்தநீ
கனியுதடு கண்ணாடிக் கன்னம் துடியிடை
குலுங்கக்குலுங்கச் சிரித்தனை கோதையே
எதைநீ நினைத்தாய்! என்றாள் தோழி
தமிழக ஆட்சி தம்ம தென்னும்
அமைச்சரும் விளக்கெண்ணெய் ஆண்டவன் தானும்
செந்தமி ழகத்தைச் சென்னை அரசென்று
கிளத்திய தென்ன என்று கேட்கத்
"தில்லி அப்படிச் செய்ததென் றார்"என
எழுந்து சொல்லிய தலைவி
விழுந்து விழுந்து சிரித்தனள் மேலுமே.

- குயில் கிழமை இதழ், 21.6.60, ப.12

21.6.60

261. கிழக்குச் சுவருக்கு அப்பால் தமிழ்விளக்கு

வான்கடல் தொட்ட கிழக்கு மதிற்சுவர்!
யானும் தமிழும் இப்புறந் தன்னில்
தங்கிக் கிடப்பதா என்றேன்
சிங்கைத் தமிழ்விளக்குத் தெரிந்ததப் புறத்தே.

- குயில் கிழமை இதழ், 21.6.60, ப.15

28.6.60

262. நாடு, மொழி, பண்பாடு, எல்லை, கலை

நாடு மொழியாற் சிறப்படையும் நாட்டுப்பண்
பாடு பழமையாற் சீர்த்திபெறும் - நாடுபெற்ற
எல்லையோ வீரர் இருப்பை விளக்குவது
கல்லெல்லாம் காட்டும் கலை.

- குயில் கிழமை இதழ், 28.6.60, ப.10

5.7.60

263. எங்கே வாழ்வு

மந்திவந்தால் பிள்ளை மகிழ்வெங்கே? வாய்க்குவரா
இந்திவந்தால் எந்தாய் எழிலெங்கே? - கொந்தும்
வடக்குவந்தால் தெற்கெங்கே? வந்தவரால் இங்கே
இடக்குவந்தால் எங்கே அறம்?

- குயில் கிழமை இதழ், 5.7.60, ப.3

5.7.60

264. துணைத்தலைவர் இலக்குமணசாமி

இலக்குமண சாமி எழிலார்சென் னைப்பல்
கலைக்கழகம் கைவிடா விட்டால் - நலத்தமிழ்போம்!
ஆங்கிலமே ஈங்கிலகும் ஐயோஇத் துன்பத்தைத்
தாங்கிலமே தாங்கிலமே யாம்.

- குயில் கிழமை இதழ், 5.7.60, ப.3

5.7.60

265. பாரதிதாசன் திருக்குறள்

தானும் உயிர்களும் வாழ்களனும் தன்மையே
தானம் எனும்நற் றமிழ்.

- குயில் கிழமை இதழ், 5.7.60, ப.7

5.7.60

266. தினத்தந்தி

தினத்தந்தி பற்றி உங்கள் கருத்தென்ன என்றார்க்கு :

வெண்பா

மனத்தந்த வான்மீன்கள் செய்யும் மகிழ்ச்சி!
'தினத்தந்தி' ஓர்இலக்கம், சென்னை - வனத்தினின்று
மாடப் புறாக்களென வையம்அளக் கும்தமிழ்
நாடெப் படிநீ நவில்.

- குயில் கிழமை இதழ், 5.7.60, ப.14

5.7.60

267. இல்லை, ஆனால் உண்டு

நன்று சிவாஜி கணேசன் நடிப்பதுபோல்
இன்றுவரை யாரும் நடித்ததில்லை - வென்று
கலையாளி யின்சீர் கவிழ்க்கத் துடிக்கும்
மலையாளி வாழ்வதும் உண்டு.

- குயில் கிழமை இதழ், 5.7.60, ப.14

5.7.60

268. பெருமாள் கோயில் தெருவில் அலார்

பெருமாள்கோ யில்தெருவில் பேரிடிமு ழக்கம்
இரவு முழுதும் இருக்கும் - இருபது
கொங்கம்பட் டார்வண்டிக் கூட்டம் பழுதானால்
இங்கென்ன இந்த அலார்?

இரவெல்லாம் பஸ்கள் இருபதை வைத்துத்
தெருவார்க்குத் தூக்கம் சிறிதும் - வராதபடி
கொங்கம்பட் டார்செய்தார் என்றால் அவருக்கே
எங்கும்பட் டாவா இயம்பு.

- குயில் கிழமை இதழ், 5.7.60, ப.14

5.7.60

269. அமரிக்கரைப் பார்! உருசியரைப் பார்

காட்டுப் புலிமகிழும் காண்பார்க்கும் வீரம்வரும்!
ஆட்டப் புலிசாம்; அடிமைநினை - ஓட்டும்!
அமரிக்க ரைப்பார்! உருசிய ரைப்பர்![1]
அமிழ்துண்டார் நஞ்சையுண் டார்!

1. 'உருசியரைப்பார்' என இருத்தல் வேண்டும்.

- குயில் கிழமை இதழ், 5.7.60, ப.14

12.7.60

270. உலக்கைக் கொழுந்தே

அண்ணா மலைசென்னை ஆர்பல் கலைக்கழகம்
நண்ணா திருந்தால் நமக்குரிமை - எண்ணம்
எழுந்தா இருக்கும்? அறிவே உலக்கைக்
கொழுந்தா யிருக்கும்எனக் கூறு

- குயில் கிழமை இதழ், 12.7.60, ப.6

12.7.60

271. ஆளவந்தார் முதற்கடன் கல்வி அளிப்பது

பகுத்துணர்ந்து கல்வி பயிலவந் தார்க்கு
வகுப்பில்லை என்ற வறுமை - நகைப்பளிக்கும்!
மண்கொடுத்தென்? பொன்கொடுத்தென்? மாந்தர்க்கு வாழ்வளிக்கும்
கண்கொடுத்தல் அன்றோ கடன்.

- குயில் கிழமை இதழ், 12.7.60, ப.13

26.7.60

272. மாணவர்க்கு உறங்கும் நேரந்தான் ஓய்வுநேரம்

உறங்கும்நே ரந்தான் ஒழிவுநே ரம்!பின்
அறம்பொருள் இன்பம் அளிக்கும் - புறம்அகம்
ஆன பழந்தமிழ்நூல் ஐயம்அறக் கற்க
மானமுறு மாணவர் ஈங்கு.

- குயில் கிழமை இதழ், 26.7.60, ப.4

26.7.60

273. நீ ஒரு பாவாணன்

பாப்புலவர் பாட்டும், பயனும் புணர்ச்சியும்
யாப்பும் பயில்க! எழில்ஒன்றைப் - பார்ப்பாயேல்
ஆர்க்கும் அதுசொல்ல ஆசைகொள் வானுள்ளம்
வார்க்குமே செய்யுள் மழை.

- குயில் கிழமை இதழ், 26.7.60, ப.4

26.7.60

274. அறிவை ஆசையால் தோண்டினால் புதியமனம் உண்டாகும்

சிறிதெழுதத் தேடி நிறையப் படிப்பாய்!
பிறர்அடி பார்த்துப் பிழைப்போன் - வறியன்!
கருவி விருப்பாய் அறிவுநிலம் கல்லி
வருவி புதிய மனம்.

- குயில் கிழமை இதழ், 26.7.60, ப.4

26.7.60

275. எழுத்தை அழகாய் எழுது

மட்டுப் படாத இலக்கியச்சீர் வாய்த்தாலும்
நட்டு நடுமுதுகு வில்லாக்கப் - பட்டுக்
கழுத்தை வளைக்காமல் கைச்சோர்வில் லாமல்
எழுத்தை அழகாய் எழுது.

- குயில் கிழமை இதழ், 26.7.60, ப.4

26.7.60

276. நினைவாற்றல் வேண்டும்

தேடல் தமிழ்ச்செல்வம்! சேர்த்தல் தமிழ்ஒழுக்கம்!
நாடல் தமிழர்நலம் நன்றென்க - பாடல்
புனைவாற்றல் உண்டான போதும் எவர்க்கும்
நினைவாற்றல் வேண்டும் நிலத்து.

- குயில் கிழமை இதழ், 26.7.60, ப.4

9.8.60

277. தமிழ்

இருந்தாள் இருக்கின்றாள் என்றும் இருப்பாள்
வருந்தாள் மறத்தமிழ்த் தாய்.

(பாரதிதாசன் திருக்குறள்)

- குயில் கிழமை இதழ், 9.8.60, ப.6

16.8.60

278. கம்மாளன் பிள்ளை

கீரிப்பிள் ளைக்குக் கிளிப்பிள்ளை கீச்சிடுதல்
நேரிலே கண்டுநெடு வேற்பிள்ளை _ ஓர்மயில்மேல்
கும்மாளம் போட்டான்; குறிகெட்டான் வார்ப்படத்துக்
கம்மாளன் கைப்பிள்ளை தான்.

- குயில் கிழமை இதழ், 16.8.60, ப.13

279. தமிழைத் தமிழனிடமிருந்து பிரிக்க முடியாது

காற்றும் மழையும் கலந்தடிக்கும் வேளையிலும்
ஊற்றுநீர் வெள்ளமெலாம் ஊரழிக்கும் வேளையிலும்
தோற்றம் குலையாமல் தூய தமிழ்த்தொண்டே
ஆற்றி யிருந்தான் தமிழ்க்கவிஞன் அன்பினிலே.

கண்கள் இறகு முனையில், கருத்தெல்லாம்
மண்ணுலக மக்கள் நிலையினியே [1] வைத்திருந்தான்
உண்ணுவீர் என்னும் மனையாள் உரையினையும்
எண்ணுகிலான் இன்பத் தமிழ்க்கவிஞன் ஏஏஏ.

வேட்டி அவிழும்; வியர்வை உடல்நனைக்கும்;
பாட்டி இருமுவாள்; பதினைந்து நாய்குலைக்கும்
சீட்டிக் கடைக்காரன் பட்டகடன் தீர்என்பான்
கேட்கிலான்; கேடில் தமிழ்க்கவிஞன் ஏஏஏ.

அயல்வேந்தர் ஐந்துபேர் கூடிஉன் நாட்டின்
புயல்வேந்த னுக்குத் துணையாய்ப் புகுந்து
கயல்புலி மீன்கொடி கண்ட தமிழர்
உயிரினின்று முத்தமிழை ஓட்ட முயன்றனரே.

கைசோர்ந்தார் கால்சோர்ந்தார் கண்ணீரும் ஆறாக
மெய்சோர்ந்தார் வீசுகுண்டு வேல்வாள் விழலானார்
தைசேர்ந்த பொங்கலுண்டு வந்த தமிழர்களை(த்)
துய்ய தமிழ்க்கவிஞன் கண்ணாற் சுவைத்தானே.

பேரன் எதிர்வந்து தாத்தாஎன் றான்என்றன்
பேரா தமிழர்தாம் பெற்ற தமிழுயிரைப்
பாரோர் எதிர்த்தார் பழிசுமந்தார் நீபடித்துப்
பாராய்என் றான்கவிஞன் பாட்டெல்லாம் காட்டியே.

1. 'நிலையினிலே' என்று இருப்பின் நன்று

- கலைக்கதிர் பொங்கல் மலர், 1961.

1961

280. 'கலை' இதழ் தீபாவளி மலர்

கவிஅரங்க வாழ்த்து (வெண்பா)

கவிஞர் வாணிதாசன்:

எல்லாரும் நல்லர்என் றெண்ணுவார் இன்றமிழ்
வல்ல கவிவாணி தாசனார் - அல்லும்
பகலும் தமிழர்தம் பண்பாடு பற்றிப்
புகலும்பாட் டொவ்வொன்றும் பொன்.

சார்நிகழ் காலத் தமிழகம் பற்றி [1]
யாரும் தெளிய இனிதுரைத்தார் - பாரில்
கலையின் கவியரங்கின் மேன்மையைக் காத்தார்
நிலையுணர்ந்து வாழ்க நிலத்து.

கவிஞர் சிவனடியான்:

சிவனடியார் செந்தமிழ்ச் சீரடியார் ஆனால்
எவன்அடியான் எவனாண்டான் நாட்டில் - எவனும்மொழி
காக்க எழுந்த கறுஞ்சிறுத்தை நம்மாசு
நீக்க எழுந்த நெருப்பு.

கவிஞர் சிவனடியார் கண்ணாம் கலையின்
கவியரங்கிற் கற்கண்டு தந்து - கவிஞர்
இவர்என்றே எல்லாரும் வாழ்த்துதலை ஏற்றார்
அவர்வாழ்க கீர்த்தி அடைந்து.

கவிஞர் மருதகாசி

கவிஞர் மருதநற் காசி கலையின்
கவியரங்கில் நாடகச்சீர் காட்டி - அவியாப்
புகழ்விளக்கை ஏற்றுகின்றார் போந்தென் உளத்தில்
மகிழ்விளக்கை ஏற்றினார் மற்று.

சுமைசுமையாய்த் தங்கம் சுமந்து தரினும்
தமிழர்பண் பாடு தவறார் - தமிழ்க்கவிஞர்
சீர்மருத காசி திறம்வளர்க மேன்மேலும்
பேர்பெறுக வாழ்க பெரிது.

கவிஞர் கண்ணதாசன்:

தமிழ்பாடும் நம்கண்ண தாசனார் வாழ்ந்தால்
தமிழ்வாழும் அந்தத் தமிழாம் - அமிழ்தூறும்
ஊற்றை ஒழிக்களண்ணுங் கூட்டம் அதுசூறைக்
காற்றில் கலந்த துரும்பு.

கலையின் கவியரங்கிற் கண்ணதா சர்தாம்
தலையாம் தமிழ்வணக்கந் தந்தார் - நிலையுணர்ந்து
வாழ்ந்தோர்வாழ் கின்றார் இனியுந்தாம் பல்லாண்டு
வாழ்வார் புகழால் மகிழ்ந்து.

குறிப்பு :

கவியரங்கில் கலந்துகொண்ட கவிஞர்களை வாழ்த்திப் பாரதிதாசன் பாடிய வெண்பாக்களே இவை. 'கலை' இதழ் 1961 தீபாவளி மலரில் இவை இடம்பெற்றுள்ளன. திரு. பி.எல்.ராஜேந்திரன் தனது 'பாரதியாரும் பாவேந்தரும்' என்னும் நூலில் இப்பாடல்களைத் தந்திருப்பதோடு இவை 'கலை' பொங்கல் மலர்க் கவியரங்கில் பாடப்பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

1. தளை தட்டுமிடம்

- 'கலை' தீபாவளி மலர், 1961, ப.6-7.
பாரதியாரும் பாவேந்தரும், ப.136-137

14.1.62

281. கலைவிருந்து வாழ்க!

இருப்பவர் பொருளை இல்லா தவர்கள்
பறிக்கும் முயற்சிகள் பைந்தமிழ் நாட்டில்
ஆயிரம் ஆயிரம் ஆயிரம் உண்டு!

சிவத்தைக் காட்டியும் திருமால் காட்டியும்
தவத்தைக் குறித்தும் யோகம் சாற்றியும்
மக்கள் தலையை மழுங்கச் சிரைப்பவர்.
இந்த நாட்டில் எண்ணற் றவர்கள்.
சமயத் தலைவர் அவர்கள் பட்டமாம்!

அடுத்த பிறப்பில் அரசராய்ப் பிறக்க
இந்தப் பிறப்பில் இருப்பதைப் பறிப்பவர்
கீழோர் அல்லராம் மேலோர் ஆவராம்!

இறந்த முன்னோர் தெரியா இடத்தில்
இருப்ப தாகவும், அரிசியும் பருப்பும்
கேட்ப தாகவும், தம்மிடம் கொடுத்தால்
சேர்ப்ப தாகவும் செப்பி மக்களின்
ஈரலைத் தின்றே ஏப்ப மிடுபவர்
இருக்கின் றார்கள் ஏராள மாக
இவர்கள் மனிதராம் இவருக்குப் பட்டம்
குருக்கள் என்பதாம் நல்ல கூத்து!
வேறு வேறு பெயர்கள் கூறி(ச்)
சாறு பிழிந்து சக்கையை உதறுவோர்
மிகப்பலர் மிகப்பலர் விரிக்கிற் பெருகும்!

சிலஆண்டு களாகச் செந்தமிழ் நாட்டில்
இருப்பவர் தம்மையும் இல்லா தவரையும்
ஒட்டச் சுரண்டும் வகையில் ஒருபெரும்
மாற்றம் ஏற்பட் டுள்ளது. மக்களின்
நன்மை நாடி உழைப்பதாய் நவின்று
கட்சி கூட்டி(க்) காச டிப்பது
இந்நாள் இருக்கும் கட்சிகள் தாமும்

கட்சியின் தலைவர் என்று கழறும்
ஆட்கள் தாமும் அறங்கொல் பவரே!
தமிழ கத்தின் தலைவர் என்பர்
தமிழை(ச்) சாக டிக்கப் பின்னிடார்!
தமிழ்தொலைப் பார்க்கே தாளம் போடுவர்!
பொழுது விடிந்து பொழுது போனால்
காசு பறிப்பதே கடனாக் கொள்வர்.
இந்த நிலையில் "கலைவிருந்து" வந்தது.
செந்தமிழ் நாட்டுக்கு நல்லது!
இந்தி ஒழிக, செந்தமிழ் வெல்கவே!

- **கலைவிருந்து, திங்கள் இருமுறை**
பொங்கல் சிறப்பிதழ் (14.1.1962)

16.2.1962

282. இரவின் இளவரசி

கட்டளைக் கலித்துறை

கரவில் இருந்தொரு மங்கைஎன் மூக்கில் கடிமணத்தை
வரவிடு கின்றாள் வரவில்லை என்னெதிர் வாயிதழைத்
தரவில்லை உண்ணவும் என்றேன்என் தோழனும் "தையலவள்
இரவின் இளவர சிப்பெயர்ப் பூ" வென் றியம்பினனே.

குறிப்பு :

இப்பாடல் எழுதப்பட்ட பின்னணியை அவருடன் இருந்த கவிஞர் முருகுசுந்தரம் எழுதுவதாவது:

"பாவேந்தர் சென்னை இராமன் தெருவில் குடியிருந்தபோது 16.2.62 வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் இந்தப் பாடல் எழுதப்பட்டது. சிறுசிறு கருத்துக்களைக் கருவாகக் கொண்ட கட்டளைக் கலித்துறைகளை எளிமையாக எழுதி, அப்பாவினத்தைக் கவிஞர் நடுவே விளம்பரப்படுத்தப் போவதாகப் பாவேந்தர் குறிப்பிட்டதை நான் 14.2.62 நாட் குறிப்பில் எழுதியிருக்கிறேன். அவ்வாறு அவர் குறிப்பிட்ட பிறகு முதன்முதலாக எழுத விளம்பரப்படுத்திய கட்டளைக் கலித்துறை இதுதான்.

பாவேந்தர் இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு முற்றத்தில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். நானும் பொன்னடியும் கூடத்தில் அமர்ந் திருந்தோம். வெளியில் அமர்ந்திருந்த பாவேந்தர் திடீரென்று உள்ளே எழுந்து வந்தார். "என்ன இது மயக்கும் மணம்? எங்கிருந்து வருது? என்ன பூ?" என்று மூக்கில் மணத்தை இழுத்துக்கொண்டேகேட்டார். நாங்களும் அடிக்கடி மணத்தை உணர்ந்தோம். "அது என்ன மலர் என்று பார்த்துவிட்டு வருகிறோமய்யா" என்று கூறிவிட்டு நானும் பொன்னடியும் வெளி:யில் சென்றோம்.

பாவேந்தர் வாடகைக்கு இருந்த பங்களாவுக்கு அடுத்த பங்களா, ஓட்டல் அதிபர் புகாரி சாகிபின் குடியிருப்பு. இரண்டு பங்களாவுக்கும் இடையில் கைப்பிடிச் சுவர் எழுப்பப்படவில்லை; வேலிதான் இருந்தது. அந்த வேலியில்

'நைட்குவீன்' என்ற பூ, கொத்துக் கொத்தாக மலர்ந்து அவ்வாறு மயக்கும் மணத்தைப் பரவவிட்டுக் கொண் டிருந்தது. ஒரு பெரிய மலர்க்கொத்தாக ஒடித்துக் கொண்டு வந்து பாவேந்தர் கையிலே கொடுத்தோம்.

அதைப் பார்த்ததும் "இந்தப் பூதானா? அடேயப்பா! என்ன மணம்..." என்று வியந்துவிட்டு "ஆமா இப்பூவோட பேரென்ன சொன்னீங்க?" என்று கேட்டார். "நைட்குவீன்" என்று நாங்கள் மீண்டும் சொன்னோம். 'அப்படியா!' என்று கூறிவிட்டு நீண்டநேரம் அதைக் கையில் வைத்து முகர்ந்துகொண்டே இருந்தார். பாவேந்தர் அடுத்தநாள் அதிகாலை 5 மணிக்கே வழக்கம்போல் எழுந்து பின்னால் சென்று விட்டார். நாங்கள் அவர் அறைக்குள் நுழைந்த போது மேசைமீது கீழ்க்கண்ட கட்டளைக் கலித்துறை 'இரவின் இளவரசி' என்று தலைப்பிட்டு எழுதப் பட்டிருந்தது."

இந்த விளக்கத்திற்குப் பின் இந்த வெண்பா வழங்கப் பட்டுள்ளது.

- குயில் திங்கள் இருமுறை இதழ், 15.5.1962, ப.5,
பாவேந்தர் நினைவுகள் (முதற்பகுதி), ப.138-140.

283. பாவேந்தர் பாரதிதாசனார் வாழ்த்து

செந்தமிழில் அன்புடைய மன்னர் மன்னன்
செல்வர்களின் ஆதரவால், புலமை மிக்க
அந்தமிழர் ஆதரவால் பாவேந் தர்கள்
ஆதரவால் தமிழகத்து மக்கள் யாரும்
நொந்தவுளம் மகிழ்ந்திடவும் வீழ்ந்த தோள்கள்
நோயகன் றுயர்ந்திடவும் இறகு தூக்கி
வந்துவிட்டார் வந்ததுத மிழ்க்கு வெற்றி!
வாழியவே தமிழ்பாடும் வானம் பாடி!

விடாமுயற்சிச் சிறகுதனை விரித்துக் கொண்டு
விண்ணான தமிழர்களின் உள்ளம் ஏறித்
தொடாதபல புதுக்கருத்தைத் தமிழால் ஆக்கிச்
சுவையாகப் பாடிவரும் வானம் பாடி!
இடார்தமையும் ஆதரவை இடவே செய்யும்!
இருப்பவரை நிதிஅள்ளி ஈயச் செய்யும்!
மடார்என்று பகைவர்களை வீழச் செய்யும்!
வையத்தில் அறிவுமழை பெய்யச் செய்யும்!

தமிழ்என்றால் தமிழர்தம் உயிர்என் கின்றார்
தமிழ்வாழ்ந்தால் தமிழர்வாழ் வார்என் கின்றார்
உமிழ்கின்றார் தமிழ்எதிர்க்கும் மாக்கள் தம்மை!
உண்டாகி இருக்கின்ற தமிழு ணர்ச்சி
அமியல்ல உரலல்ல குன்றம் ஒக்கும்
அவ்வுணர்வை முன்னின்று பயன்ப டுத்தத்
தமிழ்மறவர் வேண்டுமெனில் மன்னர் மன்னன்
தமிழ்மறவர்! வெல்க அவர் வானம் பாடி!

- வானம்பாடி, சிறுவர் வார இதழ், 16.3.1962.

3.4.62

284. வேலன் பாட்டு

வேலன் உடம்பைச் சொறிகின்றானே எதனால் - அவன்
காலையிலே குளிக்கவில்லை அதனால்!
மூலையிலே தூங்குகின்றான் எதனால் - அவன்
காலைப் பாடம் படிக்கவில்லை அதனால்!

கண்ணைக்கசக்கிக் கொள்கின்றானே எதனால் - அவன்
மண்ணைத் தூற்றி ஆடினானே அதனால்!
திண்ணையிலே சுவடி வைத்தான் எதனால் - அவன்
எண்ணிப்பார்க்க நேரமில்லை அதனால்!

அழுக்குச்சட்டை போட்டானே எதனால் - அவன்
புழுதியிலே புரண்டானே அதனால்!
எழுத்தைக்கிறுக்கி எழுதுகின்றான் எதனால் - அவன்
உழைக்கவில்லை திருந்தவில்லை அதனால்!

கண்டதெல்லாம் கேட்கின்றானே எதனால் - அவன்
சண்டித்தனம் போகவில்லை அதனால்!
சண்டை பிடிக்கின்றானே எதனால் - அவன்
மண்டையிலே மூளையில்லை அதனால்!

நாயை அடிக்கின்றானே எதனால் - அவன்
தாய் சொல்லைக் கேட்பதில்லை அதனால்!
வாயடக்கம் இல்லாததும் எதனால்? - தன்னைப்
போயடக்க ஆளில்லையே அதனால்!

தெருநடுவில் நடக்கின்றானே எதனால் - தன்னை
ஒரு வண்டியும் மோதவில்லை அதனால்
எருமை வந்தால் விலகவில்லை எதனால் - அவன்
கருத்தாக நடப்பதில்லை அதனால்!

குஞ்சுக் கோழியை அடிக்கின்றானே எதனால் - அவன்
கொஞ்சிக் குலவ அன்பில்லையே அதனால்!
அஞ்சிக் குனிந்து நடக்கின்றானே எதனால் - அவன்
நெஞ்சத்திலே வீரமில்லை அதனால்!

நீயென்றான் பெரியவரை எதனால் - அவன்
நீங்களென்னத் தெரியாதவன் அதனால்!
நாயென்றான் நண்பர்களை எதனால் - நல்ல
நேயமில்லை நெஞ்சத்திலே அதனால்!

- வானம்பாடி சிறுவர் வார இதழ், 3.4.62

13.4.62

285. யார் நல்லவன்?

தாய்: ஒரே ஒரு கொய்யாப் பழம்
எடுத்துக் கொள் சின்னப்பா

சின்னப்பன்: ஐந்து கொய்யாப்பழம்
இருக்குதே அம்மா!

தாய்: ஐந்து கொய்யாப்பழம்
இருக்கிறது பொன்னப்பா

பொன்னப்பன்: ஒன்று எடுத்துக் கொள்ளட்டுமா
அம்மா?

இருவரில் எவன் நல்லவன்?

தாய்: உன் நாக்கில் புண் எப்படி
இருக்கிறது சின்னப்பா!

சின்னப்பன்: கொஞ்சம் பிண்ணாக்குக்
கேட்கிறது அம்மா

தாய்: பிண்ணாக்குத் தின்னாதே பொன்னப்பா

பொன்னப்பன்: உன் நாக்கில் புண் ஆகிவிட்டாலும்
நான் பிண்ணாக்குத் தின்ன மாட்டேன் அம்மா!

இருவரில் எவன் நல்லவன்?

தாய்: பாட்டி பட்டணம் போகிறார்கள் நீ
பாடசாலைக்குப்போ சின்னப்பா

சின்னப்பன்: நானும் பட்டணம் போவேன் அம்மா

தாய்: பாட்டி பட்டணம் போகிறார்கள் உனக்குப்
பள்ளிக் கூட நேரமாகிறது பொன்னப்பா!

பொன்னப்பன்: பட்டணம் போய் வாருங்கள் பாட்டி - நான்
பள்ளிக் கூடம் போகிறேன்.

இருவரில் எவன் நல்லவன்?

தாய்: *பள்ளிக்கூடம் போ பலாச்சுளையை*
வந்து உண்ணலாமே சின்னப்பா!

சின்னப்பன்: *பலாச் சுளையை உண்டபிறகு*
பள்ளிக்கூடம் போகிறேன் அம்மா!

தாய்: *பொன்னப்பா பள்ளிக்கூடம் போகப் போகின்றாயா?*
பலாச்சுளையை உண்ணப் போகின்றாயா?

பொன்னப்பன்: *பள்ளிக்கூடம் போய்வந்து*
பலாச்சுளையை உண்ணுவேன் அம்மா

இருவரில் நல்லவன் யார்?

குறிப்பு :

உரைநடைத் தன்மை மேலோங்கியுள்ளது.

- வானம்பாடி சிறுவர் வார இதழ், 13.4.62

23.4.62

286. பூனைக்குட்டியும் மண்ணாங்கட்டியும்

பாலைக் குடிக்கையில் பூனைக்குட்டி - அதன்
வாலை இழுத்தானாம் மண்ணாங்கட்டி!
வாலை இழுத்ததால் மண்ணாங்கட்டி - அவன்
காலைக் கடித்ததாம் பூனைக்குட்டி!

கோலை எடுத்தானாம் மண்ணாங்கட்டி - ஒரு
வேலிமேல் பாய்ந்ததாம் பூனைக்குட்டி!
வேலிகள் பொத்திடப் பூனைக்குட்டி - அதை(க்)
கேலி செய் தான்கண்ட மண்ணாங்கட்டி!

- வானம்பாடி சிறுவர் வார இதழ், 23.4.62

23.4.62

287. பெயர் தெரியாத மணமலர்

அண்டைவீட்டுக் கொல்லையிற் கண்ட
வண்டுபாடா நிறமிலா மலர் மரம்
காலையில் என்விழி கவரவில்லை
மாலையில் வீட்டு வெளியில் வந்தேன்
உடலை உளத்தை உயிரை இன்பக்
கடலில் ஆழ்த்திய மணம்அது மலர்மணம்!

எங்கே அம்மலர் எங்கே அம்மரம்?
இங்கே இதோஎன் நண்பர் கொணர்ந்தார்
மல்லிப் பிளவளவு மலர்கள் நிறைந்த
கொத்துக் கண்டேன் அம்மலர்க்கு
வைத்த பெயரை நான் காணவில்லையே?

- வானம்பாடி சிறுவர் வார இதழ், 23.4.62

1.5.62

288. நன்னெறியில் வளர்வது திறமை

இரவில் இருகண்ணும் நன்றாய்த் தெரியும்
திரியும்பூ னைக்கல்ல; தேர்ந்த - திருடனுக்கே
தீநெறியிற் சேர்ந்த திறமை பெரிதெனினும்
ஆனைஅடிக் கீழ்த்தவளை ஆம்!

- குயில் திங்கள் இருமுறை இதழ், 1.5.62, ப.4

1.5.62

289. சின்ன பீடி

மார்புநோய் வருத்தப் புதுவைக் கிண்ணித்
தேர்போல் கணீர்கணீர் என்று சீறி
விடாது நூறுமுறை விக்கும் இருமலுக்கு
என்ன செய்வேன் உலகமே
சின்ன பீடியால் பெரிய தொல்லை!

- குயில் திங்கள் இருமுறை இதழ், 1.5.62, ப.10

1.5.62

290. தலைவன் தளர்ச்சி

குயில்கூ வியது கடகட வென்றே
தலைவன் கேட்டான் தளர்ந்தான்
தலைவி தன்னிடம் கொஞ்சுதல் நினைத்தே.

குறிப்பு :

"மூன்று வரியுள்ள அகவற்பாட்டுக்கு எடுத்துக்காட்டு" என்னும் குறிப்புடன் இதழில் இடம்பெற்ற பாடல்.

- குயில் திங்கள் இருமுறை இதழ், 1.5.62, ப.16

7.5.1962

291. பிள்ளைக்கு

காலையில் கண்விழிக்க வேண்டும் - பின்பு
காலைக்கடன் முடிக்க வேண்டும்
ஓலைத்தடுக்கில் குந்த வேண்டும் - அம்மா
உண்ணச் சொன்ன தைஉண்ண வேண்டும்
மூலையிலே போய்ப்பதுங் காதே - நீ
முன்னே பள்ளிக்குப் போகவேண்டும்
சாலையிலே ஓரமாய் ஒதுங்கி - நீ
சட்டமாய் நடந்துபோக வேண்டும்

கருத்தாய்ப் படித்துவர வேண்டும் - தமிழ்க்
கல்வியிலே தேர்ச்சிபெற வேண்டும்
இருக்கும் நமது தமிழ் நாட்டை - நாம்
எப்போதும் வாழ்த்திட வேண்டும்
ஒருத்தர்க்கும் தீங்கு நினையாதே - நீ
உண்மைக்குப் பாடுபட வேண்டும்
சருக்கி வீழுகின்ற போதும் - நம்
தமிழை வாழ்த்திடுதல் வேண்டும்

- வானம்பாடி சிறுவர் வார இதழ், 7.5.1962

15.5.1962

292. வெற்றிலைக்கு முன் என்ன போடவேண்டும்?

வெண்பா

வெற்றிலைக்கு முன்என்ன போடுவார் வேலப்பா
சற்றிதனை எண்ணிவிடை சாற்றென்றான் - கொற்றன்
நகைத்துப்பாக் கென்று நவின்றான் வேலப்பன்
அகத்தியடா என்றான் அவன்.

- குயில் திங்கள் இருமுறை இதழ், 15.5.62, ப.6

15.5.62

293. இழந்த பி.எஸ்.ஞானம்

அகவல்

நாடகம் திரைப்படம் நலம்பெறும் வண்ணம்
பாடுவ தெளிது பேசுவ தரிது
பி.எஸ். ஞானம் இரண்டிலும் விளங்கினார்
தமிழக நடிகையைத் தமிழகம்
இமைப்பில் இழந்ததால் இரங்கி அழுததே.

- குயில் திங்கள் இருமுறை இதழ், 15.5.62, ப.10

21.5.62

294. கெட்டபையன்

சாமந்தியின் பூவின்முகம் மஞ்சள்
சம்பங்கியின் பூவின்முகம் மஞ்சள்
பூமாதுளைப் பூவின்முகம் சிவப்பு
பூத்திருக்கும் அலரிமுகம் சிவப்பு
தாமரைப்பூ வெள்ளை / அல்லது சிவப்பு
ஜாதிமல்லிகைப் பூவின்நிறம் வெள்ளை
போமடயா பள்ளிக்கூடம் என்றால்
போகாத பை யன்முகந்தான் கறுப்பு

சாலையிலே சேவற்கோழி கூவும்
தனதனனா சிட்டுக்குருவி பாடும்
மூலையிலே கூண்டுக்கிளி பேசும்
முற்றத்திலே காக்கை வந்து கரையும்
சோலையிலே வண்டுகுழல் ஊதும்
தோட்டப் பசு அம்மா என்று சொல்லும்
காலையிலே பள்ளிக்குப்போ என்றால்
கட்டாயமாய்க் கெட்டபையன் அழுவான்

- வானம்பாடி சிறுவர் வார இதழ், 21.5.1962

28.5.62

295. அழகாய் எழுது

முத்துக் கோத்தாற் போலே - எ
ழுத்தெழுதி னாலே - உனை
அத்தனைபே ரும்புகழ் - வார்
அலுவல் தருவார்!

கோணல்வரி வேண்டாம் - தலை
குனிந்தெழுத வேண்டாம்!
மாணவனே, உன் இறகு
மாட்சி யடையும்

எங்கிருந்தோ நிலவும் - நம்
இருகண்ணையும் கவரும்!
இங்கே உன் கைவரிசை
எடுக்கும் முதற் பரிசை!

- வானம்பாடி சிறுவர் வார இதழ், 28.5.1962

296. நல்ல பிள்ளை

அம்மாவுக்கு நல்ல பிள்ளை
அப்பாவுக்கு நல்ல பிள்ளை
ஐயாவுக்கும் நல்ல பிள்ளை ஆனான் - அவன்
அதனாலே பணக்காரன் ஆனான்

பள்ளியிலே நல்ல பிள்ளை
படிப்பிலே நல்லபிள்ளை
பலருக்கும் நல்லபிள்ளை ஆனான் - அவன்
பட்டங்கள் பல பெற லானான்

மாணவர்க்கும் நல்லபிள்ளை
வாணிகர்க்கும் நல்லபிள்ளை
நாணயத்தில் நல்லபிள்ளை ஆனான் - அவன்
மனிதர்க்குள் உயர்ந்தவன் ஆனான்

வீரத்தில் நல்லபிள்ளை
வீட்டுக்கு நல்லபிள்ளை
போருக்கு நல்லபிள்ளை ஆனான் - அவன்
புகழாற் சிறப்படைய லானான்

நல்லபிள்ளை நல்லபிள்ளை
என்றுசொல்லும் படிநட
இல்லாவிட்டால் மரமா - மாடா - நீ
எக்கேடு கெட் டாகிலும் போடா

- வானம்பாடி சிறுவர் வார இதழ், 4.6.62

11.6.62

297. படிப்பு இருக்கும்

அல்லிப் பூவில் தேனிருக்கும்
ஆழக் குளத்தில் மீனிருக்கும்
முல்லைப் பூவில் மணமிருக்கும்
முத்துக் கொட்டையில் குணமிருக்கும்
கொல்லை மரத்தில் கிளையிருக்கும்
கொஞ்சிப் பேசக் கிளியிருக்கும்
நல்லபிள்ளை நெஞ்சத்திலே
நாளும் படிப்பு நினைப்பிருக்கும்

- வானம்பாடி சிறுவர் வார இதழ், 11.6.62

1.7.62

298. மன்ற உறுப்பினர்க்கு நன்றியும் மற்றவர்க்கு வேண்டுகோளும்!

கட்டளைக் கலித்துறை

பாடி வருங்குயில் ஏடு நடத்தினர், பண்புடனே
கூடி அனைத்துல கத்தமிழ்ப் பாவலர்! கொள்கைவெல்லல்
நாடி, அளித்தனர் நன்கொடை! அப்படி மற்றவரும்
கோடியும் அல்ல; தமிழ்காக்கக் கொஞ்சம் உதவுகவே.

- குயில் திங்கள் இருமுறை இதழ், 1.7.62, ப.4

299. கவிஞர் கண்ணதாசர்க்கு நன்றியும் வாழ்த்தும்

கட்டளைக் கலித்துறை

நன்று கவிகளிந் நாட்டுக் களித்துக் கவிஞர்பெரு
மன்றுக்கும் நன்கொடை யாகவெண் பொற்காசு மற்றிருநூற்
றொன்றும் அளித்தனர்! நம்கண்ண தாசர்க்கு நாமளிக்கும்
நன்றிபெற் றேஅவர் வாழிய வாழிய நானிலத்தே!

- குயில் திங்கள் இருமுறை இதழ், 1.7.62, ப.4

16.7.62

300. படியாதவன்

அப்பாவுக்கும் அம்மாவுக்கும்
அவன் ஒரே பிள்ளை
அவன் மேலே இருவருக்கும்
ஆசை கொள்ளை கொள்ளை!

குப்பா என்று கூப்பிடுவார்
கொடுப்பார் ஒரு தட்டு
கொடுத்த அந்த தட்டு நிறை
இருக்கும் வெண்ணெய்ப் பிட்டு

தப்பாமலே விழுங்குவான்
தருவார் ஒரு வடையும்
தந்த வடை ஒரு நொடியில்
அவன் வயிற்றை அடையும்

எப்போதுமே குப்பனிடம்
இரண்டு மூன்று பந்தும்
இருக்கும் நாலு பிள்ளைகளும்
ஆடிடுவார் வந்து.

எட்டுமணி ஆவ தற்குள்
ஏழுதரம் கெஞ்சி
எங்கண்ணே எம் பொன்னே
என்றெல்லாம் கொஞ்சி

பட்டுச்சராய் பட்டுச் சட்டை
பட்டுக் குல்லாய் போட்டு(ப்)
பள்ளிக்கூடம் போஎன்றால்
புரண்டழுவான் கேட்டு

அட்டைப் படிப்பும் படிக்கவில்லை
அம்மா அப்பா அழுதார்
ஆள் மட்டும் வளர்ந்துவிட்டான்
தென்னைமரம் போலே

பட்டிமாட்டுச் சாணிஅள்ள
வேண்டும் காலைமாலை
படிக்காத முட்டாளுக்கே
அதுதகுந்த வேலை

- வானம்பாடி சிறுவர் வார இதழ். 16.7.62

29.7.62

301. ஆலமரத்துக் கிளிக்கு அழைப்பு

பழம் வேண்டு மாஉனக்குப் பச்சைக் கிளியே - பசும்
பால் வேண்டு மாஉனக்குப் பச்சைக் கிளியே
கிழங்கு வேண்டு மாஉனக்குப் பச்சைக் கிளியே - நீ
கீழே வந்து சொல்லவேண்டும் பச்சைக் கிளியே

அழகு தமிழ்ப் பேச்சினிலே பச்சைக் கிளியே - நீ
அக்கக்கா என்பாயோ பச்சைக் கிளியே
பிழிந்தபழச் சாறுதான் பச்சைக் கிளியே - நீ
பேசுகின்ற பேச்செல்லாம் பச்சைக் கிளியே

கரும்புபி டிக்குமா பச்சைக் கிளியே - உனக்குக்
கட்டிவெல்லம் வேண்டுமா பச்சைக் கிளியே
பருந்துவந்து கொத்திவிடும் பச்சைக் கிளியே - பெரும்
பாம்புவந்து சீறக்கூடும் பச்சைக் கிளியே

இருந்திருந்தும் ஆலமரம் பச்சைக் கிளியே - இந்த
ஏற்றஇடம் அல்லவே பச்சைக் கிளியே
விருந்துண்ண வந்துவிடு பச்சைக் கிளியே - இந்த
வெள்ளிக்கம்பிக் கூட்டினிலே பச்சைக் கிளியே

- வானம்பாடி சிறுவர் வார இதழ், 29.7.62

1.8.62

302. தி.மு.க. அட்டூழியம்!

திமுக்கழகம் தேடிய மக்கள்செல் வாக்கால்
தமிழ்த்தாய் விலங்கு தவிர்க்கத் - தமிழகத்தில்
எத்தனையோ நல்லூழி யம்செயலாம் செய்தவை
அத்தனையும் அட்டூழி யம்!

- குயில் திங்கள் இருமுறை இதழ், 1.8.62, ப.1

1.8.62

303. கல்லெறிதல் நன்றா?

விலைகள் மலைபோல் உயர்ந்தால் கழகத்
'தலைகள்' எலாம் சட்டமன்றிற் சென்று, - நிலைகுறித்துச்
சொல்லெறிதல் நன்றா? துடுக்காக மக்கள்மேல்
கல்லெறிதல் நன்றா கழறு.

- குயில் திங்கள் இருமுறை இதழ், 1.8.62, ப.1

1.8.62

304. தொலைபேசிக்குத் தீயா?

தொலைபேசிப் பெட்டிக்குத் தீவைத்துத் தொல்லை
விலைபேசி வாங்கினார் வீணே! - வலைவீசி
ஆளவந்தார் பற்றி அடைத்த சிறைநரிகள்
ஊளையிட்டல் என்னபயன் உண்டு?

- குயில் திங்கள் இருமுறை இதழ், 1.8.62, ப.5

1.8.62

305. மிதிவண்டிக்குத் தீயா?

தானே தனித்தியங்கத் தக்கமிதி வண்டியினை
ஏனோ எரியிலே போட்டார்கள்? - மானே
இதுதான் இயக்க அறப்போர்என் றால்பின்
எதுதான் இடக்குத் தனம்?

- குயில் திங்கள் இருமுறை இதழ், 1.8.62, ப.7

1.8.62

306. பேருந்துவண்டி சிதைத்தது சரியா?

அரசின் அலுவலகம் சென்று மறியல்
புரிதலை விட்டுப் புறத்தில் - திரிந்திருந்த
எண்பது மக்கட்பே ருந்துவண்டி ஈடழித்தார்
பண்பதுவோ? என்ன பயன்?

- குயில் திங்கள் இருமுறை இதழ், 1.8.62, ப.9

1.8.62

307. கண்ணியமா? புண்ணியமா?

நாடு புகுந்த வடக்கர் நடுநடுங்க
வீடு புகுந்து மிகுதிருட்டில் - ஈடுபடல்
கண்ணியமா கட்டுப்பா டாகடமை யாமிகுந்த
புண்ணியமா பெண்ணே புகல்.

- குயில் திங்கள் இருமுறை இதழ், 1.8.62, ப.11

1.8.62

308. மருத்துவ இல்லத்திலும் வம்பா?

பல்லூரின் மக்கள் பதறடித்தார்! பாங்கான
கல்லூரி மாணவர்மேற் கல்லெறிந்தார் - நல்ல
தெருக்கள் அமைதி சிதைத்தார்! விளைத்தார்
மருத்துவ இல்லத்தும் வம்பு.

- குயில் திங்கள் இருமுறை இதழ், 1.8.62, ப.13

1.8.62

309. எரிந்தன பெண்கள் வயிறு!

திருவுற்ற செந்தமிழ் நாட்டினில் ஐயோ
கருவுற்ற பெண்கண் கலங்கத் - தெருவில்
புரிந்தசெயல் கீழ்மக்க ளும்புரியார் பற்றி
எரிந்தன பெண்கள் வயிறு!

- குயில் திங்கள் இருமுறை இதழ், 1.8.62, ப.15

1.8.62

310. தி.மு.க.வின் இறுதி

மணப்பந்த லுக்குத்தீ வைத்தார் கழகப்
பிணப்பந்த லுக்குக்கால் நட்டார் - பணத்துக்குத்
தீட்டிய திட்டம் சிவசிவா! ஊர்ப்பெயரால்
ஓட்டிய ஓட்டைவண்டி தூள்.

- குயில் திங்கள் இருமுறை இதழ், 1.8.62, ப.16

311 - 328. சிறப்புக் கவிகள்

311 குடம்பத்தூர் தேன்கவிகள் கொட்டினோன் வாழ்க
கடம்பத்தூர் தேவரா சன் ப.4

312 குருடீ எனும்பெயர் கொண்ட கவிஞர்
இருள்தீர்ந்த நெஞ்சத் தவர். ப.4

313 குவியிதழ்ம லர்ந்தான் குடத்தேனே அந்தக்
கவியழகன் தந்த கவி. ப.5

314 கோவேந்தன் பாடிக் குவிக்கின்றான் நாளடைவில்
பாவேந்தன் ஆயவிடுவான் பார். ப.5

315 நாகமுத் தையா நவின்றதும் பாட்டுக்கென்
பாகமுத் தையா பரிசு ப.6

316 தமிழன்பன் நல்ல தமிழ்க்கவிஞர் வாழ்க
தமிழன்பு மேலும் தழைத்து. ப.6

317 சீபோ என்றேன் கவிஞர் சிலரை
வாவா என்று புகழ்ந்தேன்
வா-பா-கணேச சுந்தரன் தன்னையே ப.7

318 சேலம் கருணா கரன்புகன்ற செந்தமிழை
ஞாலம் புகழ்ந்திடும் நன்று. ப.7

319 எழில்முதல்வன் நல்லநல்ல செய்யுள் எழுதும்
தொழில்முதல்வ னாகின்றான் சூழ்ந்து ப.8

320 தெருட்டினன் எண்ணம் செறிந்த நற்பாடல்
கிருட்டினன் வாழ்கதமிழ் கேட்டு ப.8

321 அமுதத்தை அள்ளியே தந்ததுபோல் தந்தான்
தமிழன்பன் பாக்கள் தமை ப.9

322 பறம்பைப்பிர காசம் பகர்ந்தநற் பாட்டுத்
திறம்பெரிது வாழ்க சிந்து ப.10

323 தமிழோ வியப்புலவர் தந்த கவிதை
அமிழ்தோதே னோஅறிகி லேன் ப.10

324 பாவேந்தர் மெச்சவே பாடிய பாடல்[1]
கோவிந்த ராசன் கொடை ப.12

325 நெல்லைத் தமிழ்க்கவிஞன் கந்தசா மிக்குநிகர்
இல்லை எவருமென்பேன் யான். ப.12

326 தஞ்சைமுத்துத் தாசன் தமிழ்ப்பாட்டுக் கென்பரிசு
கொஞ்சமுத்தா கோடிமுத்துக் கள் ப.14

327 நாமுருக்கும் நன்மகிழ்ச்சிக் கண்ணீர் எதுகண்டு?
காமுசுவின் தீம்பாடல் கண்டு ப.15

328 நான்செய் தமிழ்ப்பாட்டை நல்லதோர் ஆங்கிலத்தில்
தான்செய் தளிக்கும் தகுதியிலே - வான்போன்றான்
வாழ்கவே நன்முருகு சுந்தரந்தான் வண்மையெல்லாம்
சூழ்கவே சீர்த்தி தொடர்ந்து ப.15

குறிப்பு :

சென்னையிலிருந்து வெளியான குயில் திங்களிருமுறை 1.8.62 இதழில் 'நெஞ்சில் நிறுத்துங்கள்' (ப.3) எனக் கட்டம்கட்டி வெளியிடப்பெற்ற செய்தியில் "இளம் கவிஞர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டி, பாவேந்தர் அவர்கள் இந்த இதழிலிருந்து ஒவ்வொரு கவிதைக்கும், "சிறப்புக்கவி குறள் வெண்பா' பரிசிலாக அளிக்கிறார்கள்! இது இளம்கவிஞர் கட்கு நற்பேறு! நலம்தரும் நல்வாய்ப்பு" என்று அறிவிக்கப் பட்டுள்ளது. அதன்படிப் பெரும்பாலும் குறள்வெண்பாக் களாகவும் ஓர் அகவல், ஓர் நேரிசை வெண்பாவாகவும் சிறப்புக்கவிகள் இவ்விதழில் தரப்பெற்றுள்ளன. இப்பாடல் கள் அனைத்தும் 'பாரதிதாசன்' எனும் பெயர்குறித்தே இதழில் வெளிவந்தன. ஆனால் கவிஞர் பொன்னடியான் 'இவற்றிற் சில பாடல்களே பாரதிதாசனால் எழுதப்பட்டவை' என்கிறார். அவரின் கருத்து:

"குயில்" ஏட்டின் செலவைக் குறைக்கும் நோக்கத்தோடு எழுதப்பட்ட சிறப்புக்கவிதைகளுக்குக் கீழ், கவிஞர்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்காக 'பாரதிதாசன்' என்று கவிஞரின் பெயரையும் குறிப்பிட்டோம்.

கவிஞர்கள் நாக.முத்தையா, முருகுசுந்தரம், எழில்முதல்வன், தமிழன்பன் (இருவேறு கவிஞர்கள்) போன்றார்க்குப் புரட்சிக்கவிஞரே சிறப்புக்கவிதைகள் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

1. தளை தட்டு மிடம்

- 'சென்னையிலிருந்து சிந்து பாடிய குயில்' (க)
நினைவலைகளில் பாவேந்தர் (நூ) ப.207.

329. ஏரி

ஏரி என்றால் பள்ளம் - அதில்
இருக்கும் நிறை வெள்ளம்
நீரின் மேலும் துள்ளும் - ஆம்
நிறைய மீன்கள் துள்ளும்

மேலே பறக்கும் பருந்து - நிறை
மீன் அதற்கு விருந்து
ஆலா கொக்குகள் தெரிந்து - மீன்
அருந்தும் மேலே திரிந்து

ஓரத்திலே கோரை - உள்ளான்!
ஒரு பக்கத்திலே நாரை!
ஆரா மீன்கள் சாரை - கண்டால்
அழித்துவிடும் பேரை

சென்னல் கெளுத்தி நண்டு - பல
சேர்ந்திருப்பது கண்டு
பின்னல் வலையைக் கொண்டு - பலர்
பிடிப்பதுவும் உண்டு

நீர் கொடுக்கும் ஏரி - மீன்
நிறையக் கொடுக்கும் ஏரி
ஊரைக் காக்கும் ஏரி - நம்
உயிரைக் காக்கும் ஏரி

- வானம்பாடி சிறுவர் வார இதழ், 6.8.62

330. நல்லபிள்ளை

வில்லாதி வில்லனடா என்பிள்ளை - அவன்
வேளைதோறும் பள்ளி செல்வான் என்பிள்ளை
பொல்லாத பையனில்லை என்பிள்ளை - பள்ளி
போகாத பையனில்லை என்பிள்ளை
எல்லார்க்கும் நல்லபையன் என்பிள்ளை - அவன்
எப்போதும் படித்திடுவான் என்பிள்ளை
சொல்லுவதைக் கேட்டிடுவான் என்பிள்ளை - யார்க்கும்
தொல்லை ஒன்றும் செய்வதில்லை என்பிள்ளை

பள்ளிக்குப் போவதென்றால் என்பிள்ளை - கொஞ்சம்
பாசாங்கு செய்வதுண்டா சேச்சேசே
வெள்ளையாய் உடுத்திடுவான் என்பிள்ளை - அழுக்கு
வேட்டியையா கட்டிடுவான் சேச்சேசே
துள்ளிக் குதிப்பதுண்டோ போகும்வழியிலே - கல்லைத்
தொடுவானா கையாலே சேச்சேசே
உள்ளபடி சொல்லப்போனால் என்பிள்ளை - இந்த
ஊருக்கெல்லாம் நல்லபிள்ளை என்பிள்ளை

- வானம்பாடி சிறுவர் வார இதழ், 10.9.62

11.9.1962

331. பாரதி விழா

கவியரங்கத் தலைமைக் கவிதை

இந்நாள் பாரதி இன்ப நினைவுநாள்!
பொன்னிகர் தமிழுக்குப் புதுமெரு கேற்றித்
தமிழரைத் தமிழில் பற்று மிகும்படி
அமிழ்தைக் கவிதைஎன் றாக்கிய புகழைப்
பாடிப் பாடிப் பயன்பெறு திருநாள்!

மன்னு கோவை மாவட் டத்து
மடத்துக் குளம்பஞ் சாயத்து யூனியன்
நடத்துமிப் பாரதி நற்றிரு விழாவில்
பன்னூறு கல்லுக் கப்பால் மன்னும்
என்னை அழைத்துத் தலைமை ஈந்தனர்
பாரதி தாசன் பாவலன் ஆதலால்.

இறந்த நாள்விழா ஏற்றதா பாரதி
பிறந்த நாள்விழா சிறந்ததா என்ற
கேள்வி ஒன்று கிடைத்திருக் கின்றது.
இறந்த நாளிது வரைகொண் டாடியவர்
இழவு கருதி அழுதா ரில்லை.
பிறந்த நாளைக் கொண்டாடும் பெரியரும்
பிறந்த பிள்ளைக்குக் கூரையில் வேப்பிலை
செருகுவார் என்றும் செப்புவா ரில்லை
இறந்தநாட் சிறப்பிலும் பிறந்தநாட் சிறப்பிலும்
நிறைவது பாரதி முழுது நினைவே.

இளமை கவிதையை நோக்கி எழுமவர்
உள்ளப் பாங்கு கவிதையின் உயர்வு
நாட்டன்பு சாதி நரிவேட்டை அவற்றால்
மக்கட் கேற்படும் மாப்பயன் இவையே
இரண்டு விழாவிலும் இயலும் ஆதலால்
இரண்டு விழாவும் சரிநிகர் என்பேன்.

இறந்த நாள்பிறந்த நாள்என்பன மட்டுமா?
பாரதி நாட்டுப் பிரிவினை எதிர்ப்புநாள்,
பாரதி இந்தி எதிர்ப்புநாள், பாரதி
ஆங்கில எதிர்ப்புநாள், பாரதி அறிவுநாள்.
பாரதி தமிழிலக்கிய நாள், பாரதி
பச்சைத் திருநாள் பலவும் பாரதி
விழாவே ஆகும் விடாது நடத்தலாம்.
இதுகிடக் கட்டும்.

பாரதி இயம்புவேன்.

"நல்லதோர் உணர்ச்சியை எல்லா ருக்கும்
பாட்டுத் தமிழால் ஊட்ட முடியும்"
என்பது பாரதி அசையா எண்ணம்!
துட்டுக் கருதிய சுதேசமித் திரனும்
சொட்டுச் சொன்னது தூய தமிழை!

வருணம் எதிர்த்தான் வள்ளுவன் என்பதால்
வண்டமிழ் நொண்டி என்றான் வ.வே.சு.
ஆங்கிலம் அறிவை வளர்க்கும் ஆனால்
ஈங்குத் தமிழ்ஏன் என்றான் வா.ரா.
தமிழ்மொழி பயனிலை என்று சொன்னான்
அரவிந்த கோஷ்எனும் அறிஞன் அந்நாள்
ஆங்கிலம் படித்துத் தமிழ்க்கு டித்தனம்
பண்ணுவோர் வடமொழி பயன்மொழி என்றனர்.

கால க்ஷேபிகள்[1] கதையும் பாட்டும்
தமிழா யிருந்தால் சாயா தென்றே
இந்துஸ் தானி, வடமொழி, தெலுங்கில்
பாடி ஆடிப் பழிசு மந்தனர்.

அரிச்சந் திரனும் பிள்ளை உதைக்கையில்
இந்துஸ் தானி பாடி இருப்பதும்
அவையில் தோன்றும் அரசனோ அரசியோ
தெலுங்கு பாடுவதும் சிறந்த நாடகம்
புலவரோ எவர்க்கும் புரியாத தமிழில்
பாடிக் குவிப்பதே பயன்படும் என்றனர்.

திருக்குறள் அச்சிட்டுத் தெருவெலாம் விற்பினும்
ஒருபடி விற்க ஓராண்டு செல்லும்
தமிழ்நூல் சரியாய் நூறுபடி அச்சிட்டு
எழுபது படிகளை எலிக்கமு தாக்குவார்
திருவா சகமோ செத்தார்க்கு வழியனுப்புத்
திருவாய் மொழிகூலிக் காடும் செக்கு.
நூற்கள் நூறு குறைய நூறு வெளிவரும்.

புதுநூல் சாற்று கவிக்கெனப் புறப்படும்
அதுவும் அடுத்தநாள் அறையில் தூங்கும்
பாட்டனார் வைத்த பழந்தமிழ்ச் சுவடியைக்
கேட்டால் எங்கோ கிடக்கும் எனப்படும்!

இளைஞர் ஒருவரை எதுநும் தாய்மொழி
என்றால் எனக்குத் தெரியா தென்பார்.
உன்நாடு எதுவெனில் என்நாடு சேலம்
என்று கூறுவார் வாணிகர் எவரும்.
மல்லி என்று வாணிகர் கூறார்
தனியா என்பார் அந்தத் தமிழர்.
திருமண அழைப்பென்று செப்புதல் தாழ்வென்று
விவாஹசுப முஹூர்த்தப் பத்ரிகை [2] என்பர்.

தீங்கிலும் தீங்கே என்று செப்பினும்
ஆங்கிலம் தன்னை ஆசையாய் உளறுவர்
இந்த இழிநிலைமை போன தெப்படி?
தமிழென்றால் அதுதமி ழரின்உயிர்ப் பொருள்
தமிழெனும் தாய்மொழி அமிழ்தினும் இனியது
தமிழை இகழ்ந்தவன் தமிழன் அல்லன்;
மனிதனும் அல்லன் என்று வண்டமிழ்
இலக்கியம் இனிக்க இனிக்கக் குவித்தவர்
பாரதி அல்லால் பாரினில் வேறெவர்?
உண்ணிறைவு பெற்றிட எண்ணும் உலகுக்குப்
பெண்ஒரு கண்மற் றாண்ஒரு கண்என
உணரப் பாடிய உயர்கவி பாரதி.

கொணர்க நாட்டுக்கு விடுதலை என்றே
ஆணை முரசம் அடித்த பாவலன்
வாணாள் தமிழுக்கு வழங்கிய பாரதி!
புன்ன டிப்பில் புரண்ட தமிழகம்
மின்னடித் தாற்போல் உணர்ச்சி அடிக்க
எங்கே தமிழின் பகைவன் என்ற
சிங்கப் பாய்ச்சல் எங்கிருந்து வந்தது!

வீட்டுநூல் வேண்டுமா என்றால் இளைஞர்கள்
பாட்டுநூல் வேண்டும் என்னும் பற்றுப்
பாரதி பாட்டு மரத்தில் பறித்ததே!
உமிழ்ந்து தூற்றிய அயலானு மிந்நாள்
தமிழெனில் அமிழ்தென்று சாற்று நிலைமை
யாரால் பாரதி யாரால் அல்லவோ?

தமிழுலகு தளிர்த்துப் பூத்துக் காய்த்துக்
கனிந்தது பாரதி புரிந்தது! கடைசியாய்க்
கைம்மாறு கருதாது கவிதை பொழிந்த
நம்ஐ யர்க்கு நம்கடன் என்ன?

முற்றும் சாதியை முறிய டித்துநம்
ஒற்றுமை ஓம்புதல் அவர்புகழ் ஓம்புதல்!
அன்னை நாட்டில் ஆங்கிலம் ஏனென்று
முன்னையே பாரதி மொழிந்தா ரன்றோ
ஆங்கில அடிமைத் தளையினை அறுப்போம்
ஆங்கில ஆதர வாளரை எதிர்ப்போம்
தரமிலா இந்தியைத் தமிழ்ப்பற்றுக் கொண்டு
துரத்தித் துரத்தி அடிக்க வேண்டும்!

பாரதியின் புகழ் பார்ப்பனர் புகழென்று
ஊரில் குதிக்கும் ஒருகூட் டத்தை
மனச்சான்று தன்னில் மறிக்க வேண்டும்
பாரதி பாட்டால் பெற்ற வெற்றி
பார்ப்பனர் அடைந்த படுதோல்வி யாகும்
பாரதி புகழைப் பாடுவோர் யாரும்
அவர்தாம் காட்டிய நன்னெறி அனைத்தையும்
உயிரெனப் போற்றி உய்தல் வேண்டும்

பார்ப்பனர் உயர்வெனும் உள்ளப் பான்மை
ஒழிய வேண்டும் என்றவர் உரைத்த
சொற்களை மறைப்பதும் சுரண்டி மாற்றுவதும்
அவர்க்குச் செய்யும் தீமை ஆகும்.

கவிஞர் விளைத்த கரும்பு களிற்சில
தமக்குக் கசப்பைத் தருவதாய் எண்ணி
அவைகள் பாரதி அளித்தவை அல்ல
என்று சிற்சிலர் இயம்பு கின்றனர்
கயவர்க்குக் கைவிலங்கு காத்திருக் கின்றது

எல்லாரும் இன்பத் தமிழைக் கற்க
இடைமறிக் கின்ற இந்தியைத் தொலைக்க
எல்லாரும் கவிஞராய் இலங்குக!

வாழ்க பாரதி மாப்புகழ்
வாழ்க செந்தமிழ்! தமிழர் வாழ்கவே!

குறிப்பு :

கோவை மாவட்டம் மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் 11.9.1962இல் நடைபெற்ற பாரதிவிழாவில் பாட்டரங்கத் தலைமைதாங்கிப் பாரதிதாசன் வழங்கிய பாடல். இப்பாடல் பாரதிதாசன் குயில், பாரதிதாசன் பார்வையில் பாரதி, பாரதியாரொடு பத்தாண்டுகள் ஆகிய மூன்றிலும் வெளிவந்துள்ளன. இவற்றுக்கிடையே காணப்படுகின்ற பாடவேறுபாடுகள் சுட்டப்பட்டுள்ளன.

1. கால க்ஷேபங்கள் (பா.பா.பா.) கால க்ஷேமிகள் (பா.ப.) பிழை வடிவம்
2. பத்திரிகை (பா.பா.பா.) - (பா.ப.)

- பாரதிதாசன் குயில், 10.8.1967, ப.21-25
பாரதிதாசன் பார்வையில் பாரதி, ப.219-222
பாரதியாரோடு பத்தாண்டுகள், ப.109-113

1962

332. வணக்கமும் வாழ்த்தும்

பல்லவி

அம்மா அப்பா தமிழையா வணக்கம் - உங்கள்
அன்பை வாழ்த்தும் வாய்மணக்கும்
உள்ளம் மணக்கும்

அனுபல்லவி

அம்மா அப்பா நீங்கள் என்னைப் படைத்தீர்! - தமி
ழையா நீங்கள் எனக்கு அறிவைக் கொடுத்தீர்
இம்மா நிலத்தினில் நான்பதினா றாண்டும்
எய்தினேன் செய்நன்றி மறவாமை வேண்டும்

சரணம்

தேனே தித்திக்கும் (அள்ளி) உண்ணும் பொழுதே - நல்ல
செந்தமிழ் இனிக்கும் அதை எண்ணும் பொழுதே

மானத் தமிழர்களே - சொந்தக் காரரே
வாழியவே வாழியவே மாவீரரே

தமிழ் வாழ்க தமிழர் வாழ்க

குறிப்பு :

பாடலின் முன்குறிப்பாகக் கையெழுத்தில் "பாகேடீ திஸ்ரம்" என்னும் இசைக்குறிப்பும் "பாவேந்தரின் பாடல்கள்" - திரைப்படம் எடுக்கப்போவதாயிருந்ததற்கு எழுதப்பட்டது" "நேரில் தந்தது" என்பன இடம்பெற்றுள்ளன. இப்பாடலைக் கவிஞர் பொன்னடியான் பதிப்பாசிரியரிடம் வழங்கினார்.

333. "தேசத்தைக் காத்தல் செய்"

பாரத வீரம் பழநாள் தொட்டே
வழிவழி வந்த தாகும் இந்நாட்டில்
அதனால் அன்றோ ஐயனா ரிதனார்
மக்கள் மாநிலம் தோன்றிய போதே
வாளோடு தோன்றினான் மாபா ரதத்தான்
என்று கூறினார். இதனைக் கூறி
இற்றைநாள் ஆயிரத் திருநூறு ஆண்டும்
ஆயின. அன்றியும் அவர்க்கு முன்னர்
பல்லா யிரமாண்டு பழைய ரான
தொல்காப் பியரும் தூய பாரத
போர்த்திறம் பற்றிப் புகன்றார்! மேலும்
பாரதர் மறத்தனம் பற்றியும் பகர்ந்தார்
இங்கி வற்றால் இந்த நாட்டின்
வீரம் என்பது புதுச்சரக் கன்று
வழிவழி வந்த தாகும் என்பது
விளங்கிற் றன்றோ! மேலும் கேளீர்!
இந்த நாட்டின் இலக்கியம் அனைத்தும்
காதல்வாழ் வென்றும் போர்வாழ் வென்றும்
இருபெரும் பிரிவாய் அமைந்தன என்றால்
போரி னுக்கும் பாரத ருக்கும்
உள்ள தொடர்பின் உண்மை விளங்கும்
ஆனால் அன்புறு பாரத வீரரே!
இந்நாள் இந்த நாட்டில் "வீரம்"
என்ன நிலையை எய்திற் றென்பதை
எண்ணினால் கண்ணீர் வாரா திருக்குமோ?
தறுகண் ஆண்மையின் தகவலும் உண்டா?
பாரத மைந்தன் பன்னா ளாகவே
போர்க்களம் புகுந்தான் என்பதும் இல்லை
தனது மண்ணை அயலான் மிதித்தான்
என்பதற் காக எதிர்த்ததும் இல்லை
நானூ றாண்டுகள் இந்த நகைப்புநிலை!
ஆயிரம் ஆண்டாய் அடிமையாய் வாழ்ந்தோம்!
வீரர் நாடு வீரம் மறந்ததேன்?

பாரத நாடு போரை மறந்ததேன்?
பண்டைச் சான்றோர் பத்தி ஒன்றையே
ஆதரித் தார்கள்; அன்பெனும் பேரால்
இன்பப் போரை இல்லா தொழித்தனர்
இன்பம் இருப்பிடம் போர்முனை என்னும்
பாரத மறத்தின் வேரையே அழித்தனர்!
'முனைமுகத்து நில்லேல்' என்று மொழிந்தனர்
'போர்த்தொழில் புரியேல்' என்று புகன்றனர்
இவ்வா றெல்லாம் எதுகண்டு சொல்லினர்?
சேர சோழ பாண்டியர் தாமும்
சீரியர் சிற்றர சானவர் தாமும்
தமக்குளே என்றும் சண்டை யிட்டனர்
சேர நாடும் சோழ நாடும்
பாண்டிய நாடும் பற்பல நாடும்
பாரத நாடுதான் என்பதை எண்ணினார்
அதனால் அந்நாள் சான்றோர் எல்லாம்
போரையே - போர்எனும் நினைவையே மாய்க்க
எண்ணினர்; எண்ணிச் செய்யுளும் செய்தனர்
ஆயினும் என்றன் அன்புறு தோழரே!
அந்நாள் அந்த அறிஞர் எல்லாம்
சேரனைச் சோழனைப் பாண்டியன் தன்னை
ஒன்று கூட்டி "இன்றே நீவிர்
மேற்குநா டுகளை வென்று வருவீர்!"
மற்றுள வற்றையும் மடக்கி வருவீர்
என்று சொல்லி அனுப்பி யிருந்தால்
ஆயிரம் ஆண்டுகள் அடிமை யாய்நாம்
இருந்திட நேர்ந்திடா தன்றோ? எண்ணுவீர்!
நம்மொழி நாகரிக மெல்லாம் நன்று
தடைபடா திருக்கும் அன்றோ? சாற்றுவீர்!
கோயிலைக் கட்டுவ தொன்றையே செய்தோம்
தாயிலைக் காப்பதைச் சற்றும் மறந்தோம்
பத்தியை வளர்த்தோம் பாரதம் காக்கும்
கத்தியை ஒடித்தோம்; என்ன கண்டோம்
நாம்அ டைந்தஇந் நன்றிலா நிலையில்
சீனன் எதிர்த்ததில் சிறிதும் வியப்பேது!
ஓணான் குட்டியும் எதிர்த்திடக் கூடுமே
'முனைமுகத் துநில்லேல்! போர்த்தொழில் புரியேல்!
என்னும் பழைய கட்சியை எதிர்ப்போம்

"முனையிலே முகத்துநில்; போர்த்தொழில் பழகு;
சாவதற் கஞ்சேல்! தேசத்தைக் காத்தல்செய்"
என்ற பாரதி கட்சி
ஒன்றே சார்வோம் சீனரை ஒழிக்கவே!

- அழகப்பா தமிழ் மன்றச் சிறப்புமலர், தி.பி. 1993-94, கி.பி. 1962-63

1963

334. விட்டுவிடுவேனா?

பல்லவி

1. *எந்நாட்டில் கால்வைத்தாய் சீனா - நான்*
உன்நாட்டைச் சும்மாவிடு வேனோ
முன்னேறித் தாக்குகின்றாய் சீனா - உன்
முழங்காலை முறித்திட மாட்டேனோ

2. *பொய்வைத்து(ப்) போர்தொடுத்தாய் சீனா - உன்*
போக்கறிந்தும் சும்மாவிடு வேனோ
கைவைத்தாய் வாளுறையில் சீனா - வந்த
குட்டிநாயைச் சும்மாவிடு வேனோ

3. *வாளுண்டு தோளுண்டு சீனா - இந்த*
வையத்தின் ஆதரவும் உண்டு
மூளுமிது போரல்ல சீனா - உன்
முதலழிக்கும் உலகப்பணி சீனா.

4. *அறநெறியில் தோன்றுவதே வீரம் - அந்த*
அறநெறிக்கும் உனக்கும் மிகு தூரம்
இறுதியை நீதேடிக் கொண்டாய்சீனா - உன்னை
இருக்கும்படி விட்டுவிடு வேனா.

குறிப்பு :

இந்திய-சீன எல்லைப்போரின் அடிப்படையில் இயற்றப்பட்ட பாடல். 1963இல் நடத்தப்பெற்ற சீன எதிர்ப்புப் 'பாரதப் பாசறை' நாடகத்திற்காக எழுதப்பட்டிருக்கலாம். கவிஞர் பொன்னடியான் பதிப்பாசிரியரிடம் அளித்த கையெழுத்தி லமைந்த பாடல் இது.

335. திரு.வி.க. பாடல் திருத்தம்

எண்ணாத் துறைநாடி ஏந்து புகழ்நட்ட
அண்ணாத் துரையண்ணல் ஆய்ந்து தமிழ்செழிக்கப்
பண்ணாத் துறையுண்டோ? பைந்தமிழர் ஏனிவனைக்
கண்ணாகக் கொள்ளார் கனிந்து.

குறிப்பு :

இந்த நேரிசை வெண்பாவின் தோற்றம் பற்றிப் பாரதிதாசனிடம் மிக நெருக்கமாகப் பழகிய கவிஞர் முருகுசுந்தரம் தனது 'பாவேந்தர் பாதையில்... சில சுவடுகள்' என்னும் கட்டுரையில் குறிப்பிடுவது:

"அடுத்த நாள் காலை நான் தி.நகர் இராமன் தெருவில் இருந்த பாவேந்தர் இல்லத்துக்குச் சென்றேன்... திரு.வி.க.வின் கவிதையாற்றல் பற்றிய பேச்சு எழுந்தது. அப்போது அவர் கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

திரு.வி.க. சிறந்த தமிழறிஞர். அவர் உரைநடையில் சாதித்ததை இன்னும் எந்தத் தமிழனும் சாதிக்கவில்லை. என்றாலும் அவர் கவிதையின் பக்கம் சென்றிருக்கக் கூடாது. அண்ணாவைப் பற்றி அவர் பாடிய பாடல் கவிதைத் துறையில் அவர் அடைந்த தோல்விக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

அண்ணாத் துரையென்னும் அண்ணல் தமிழ்நாட்டின்
வண்ணான் அழுக்கெடுப்பில் வாய்மொழியில் - பண்ணாவான்
சிற்பன்எழுத் தோவியத்தில் செவ்வரசு நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமியென் றாடு.

இந்த வெண்பா அண்ணாவைப் பாராட்டித் திரு.வி.க. எழுதியது. " 'வண்ணான்' என்ற உவமை, இடத்திற்கும், தகுதிக்கும் ஏற்பப் போடப்பட்ட நாகரிகமான உவமையன்று. இந்த உவமையால் அண்ணாவுக்கும் பெருமையில்லை; வண்ணானுக்கும் பெருமையில்லை. எதுகை சரியாக விழவேண்டும் என்பதற்காக அவசரப்பட்டு எந்தச் சொல்லை வேண்டுமானாலும் போடக்கூடாது. பொறுமையாகச் சிந்தித்து நல்ல உவமையாகப் போடவேண்டும். திரு.வி.க. கவிஞராக இருந்திருந்தால் இப்பாட்டின் அடிகளை அவர்

இப்படி அமைத்துப் பாடியிருப்பார்" என்று சொல்லி அவரே ஒரு வெண்பாவை உடனே சொன்னார். அவர் சொல்லச் சொல்ல எழுதி, அவரிடமே காட்டித் திருத்திக் கொண்ட பாடல் பின் வருமாறு" என்று குறிப்பிட்டு இப்புதிய வெண்பாவை அளித்துள்ளார்.

- புதுவைக் கல்லறையில் புதிய மலர்கள், ப.153-154

336. நிலவுப்பூ - அணிந்துரை

அண்ணா மலைப்பல் கலைக்கழகப் பேராசான்
அண்ணா மலையென் அரியதமிழ் மாணவனின்
கண்ணான மாணவன்நான் என்று கழறித்தம்
கையெழுத் துப்படியைக் கண்ணுக் கெதிர்வைத்தே
அண்டியசீர்ப் பொள்ளாச்சிக் கல்லூரி ஆசான்நான்
அரிய நிலவுப்பூக் கவிதைநூல் நான்செய்தேன்
கண்செலுத்த வேண்டுமென்றார்; மாட்டேனென்றா சொல்வேன்
கவிதை ஒவ்வொன்றும் அமிழ்தாக நான்கண்டேன்

பாட்டுத் திறம்கண்டேன் பாலசுப் பிரமணியப்
பாவாணர் செய்தஅப் பச்சைத் தமிழ்நூலில்
நாட்டுத் திறம்என்னே நாற்கவியும் முத்தமிழும்
நல்கும் பயன்என்னே நாவூறிப் போனேன்நான்
வீட்டிற் குறட்டைவிட்ட செந்தமிழர் கண்விழிக்க
வெற்றி இலக்கியத்தை அன்றளித்த பாரதிபோல்
பாட்டை திறக்கவந்த பாலசுப் பிரமணியப்
பைந்தமிழ்ப் பாவாணர் புகழ்பெற்று வாழியவே!

குறிப்பு :

கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் பாரதிதாசனிடம் தனது 'நிலவுப்பூ' என்னும் கவிதைத் தொகுதிக்குக் கேட்டுப்பெற்ற அணிந்துரைப் பாடல் இது. "நம்ம சாயல்... கவியிலே இருக்கு இன்னும் நீட்டா (நீளமாக) எழுதணும்" என்றார் பாவேந்தர். பிறகு ஒரு தாளை எடுத்து, என் கையெழுத்து சரியா இருக்காது... இதை நீயே பிரதி செய்... என்று அணிந்துரைக் கவிதையைக் கொடுத்தார். கவிதையை நான் பிரதியெடுத்தேன். கவிதை இது" என்னும் முன்குறிப்புடன் இப்பாடலைப் பதிவு செய்துள்ளார் சிற்பி.

- பாவேந்தர் ஒரு நினைவுச்சரம் (க),
புதுவைக் கல்லறையில் புதிய மலர்கள் (நூ), ப.85-86

சூன் 1963

337. கொடி வணக்கம்

பாட்டு

பாரத மணிக்கொடி வாழ்க!
வீரர்தம் புகழ்க்கொடி வெல்கவே!
போரெனில் தாக்கிட வாளினைத் தூக்கும்
புனைகழல் மறவரை நாளும்உண் டாக்கும் - பாரத

அறம்வே ரூன்ற அன்பே தோன்ற
ஆடிடும் மடமயில் மாதரை ஈன்ற - பாரத

குறைமதி யுடையஓர் அயலான் தன்னை
நிறைமதி பெறும்படி அருளும் அன்னை - பாரத

சீனனைப் புறங்கண்டு காப்பாள் எம்மை
சிங்கத்தை நிகர்த்தவள் பகைவர்க்கெம் அம்மை - பாரத

வானத்திற் பறந்திடும் அன்னை மணிக்கொடி
சீனத்துக் கோட்டையிற் பறக்கும் மிதேநொடி - பாரத

குறிப்பு :

சீனப் படையெடுப்பின்போது 'அமுதசுரபி'க்காக எழுதப்பட்டு 1963 சூன் இதழில் வெளிவந்த இப்பாடல் மீண்டும் அதே இதழில் சூன் 1990இல் வெளியிடப்பட்டது. பாட்டின் முன்குறிப்பாக,

"சீனன் பாரதமண்ணில் கால்வைத்தான் என்று பாரதமக்கள் கேள்விப்பட்டார்கள். தெருத்தோறும் ஆடவரும் மகளிரும் போராயத்தம் ஆகிறார்கள். பாரத மணிக்கொடியை வாழ்த்தி வணங்குகிறார்கள்."

எனும் பகுதி இடம்பெற்றுள்ளது.

- அமுதசுரபி, சூன் 1990, ப.7

338. குபேர்க்கு வாழ்த்து

பல்கலைப் பயிற்சியும் நல்லுடற் பயிற்சியும்
பெரியோர் கண்ட அரசியற் பயிற்சியும்
ஆகிய மூன்றும் சமன்டை யாக
இளமை தொடங்கிநம் குபேரிடம் வளர்ந்தன!

குபேருக்கு அவைகளும் மூன்று கொடுத்தன:
அறநெறி என்ப தொன்று; கீழோர்க்கு
அஞ்சா நெஞ்சம் ஒன்று; தீயரால்
அசைக்க ஒண்ணாத ஆட்சித் திறம்ஒன்று!

தமிழர்கள் நன்மை தழுவ வேண்டித்
தமிழ்நெறி தாங்கிச் சென்ற குபேரை
வாய்மை காணாதவர் வழி மறித்தனர்;

குண்டெறிந்து கொல்ல நினைத்தவர்,
கண்டனர் கண்கலக்கமும் பழியும்!
நல்ல குபேரைக் கொல்ல நீட்டிய
தீய துப்பாக்கிகள், நடுங்கிச் சிதைந்தன!

இந்நாள் வரைக்கும் எந்தச் சூழ்ச்சியும்
அசைக்க வில்லை குபேர் அறவழியை!

நண்பர் தந்தது நஞ்சே ஆயினும்
உண்பர் பண்புள்ளோர் என்பதற்கு ஒப்பத்
தம்பேர் சாற்றிப் பொதுநலம் கெடும்படி
நண்பர் செய்தது நான்செய்த தென்று
சாற்றி, வரும்பழிக்குத் தம்தலை நீட்டினார்!

சழக்கர் கூட்டம் குபேரைத் தழுவிக்
கொழுக்க நினைக்கும்; குபேர்அதற்கு ஒப்பார்!

குபேர் பேசிய ஒருகூட்ட நடுவில்
வெடிகுண் டொன்று வீசப் பட்டது
சிரித்தார் குபேர்; அவர் சிரிப்பின் அதிர்ச்சி,
குண்டெறிந் தவரையும், அவர் கொள்கைக்கே
அண்டையில் நின்ற அதிகாரி களையும்
நடுங்க வைத்ததை நானிலம் அறியும்!

புதுவை வரலாறு குபேரைப் போன்றஓர்
கைகா்ரத் தலைவரைக் கண்டதே இல்லை.
இப்படி ஒருவரே எமக்குத் தேவைஎன்று
குபேரைத் தமிழர் கூறுநாள் இந்நாள்
இந்நாள் புதுவை எய்திடும் நலங்கள்
எல்லாம் குபேரால் எய்திய நலங்கள்!

புதுவை காரை மாகி ஏனம்
ஆகிய நாலூர் மக்களின் அன்பை
ஒருங்கே பெற்ற ஒருவர்; மக்கள்பால்
அன்பு கொண்ட குபேரே ஆவார்.
அறுபத் தொன்ப தாண்டு பெற்றார்
இன்னும் பல்லாண்டு பல்லாண்டு
நன்னர் வாழ்க! வாழ்க குபேரே!

- எங்கள் தலைவர் திரு. குபேர் 70வது பிறந்தநாள் விழாமலர், 1963

15.11.63

339. எந்தநாள் திருநாள்?

*தமிழரெலாம் ஒன்றாய்த் தமிழ்காக்கும் நன்னாள்
தமிழர் திருநாள் அதனைச் - சமைத்திடுவோம்!
இந்திக் களையால் தமிழ்ப்பயிர் ஏறாது.
செந்தமிழ் வாழ்க செழித்து.*

*திருவாக்க வேண்டுமெனில் செந்தமிழ் மாண்பை
உருவாக்க வேண்டும் உடனே! - தெருவுக்குள்
இந்தியைச் சேர்த்தலும் இல்லங் களிலெல்லாம்
செந்தீயைச் சேர்த்தலும் ஒன்று.*

*சிவம்சேர்க்க வேண்டுமெனில் செந்தமிழைக் காக்கத்
தவம்சேர்க்க வேண்டும் தமிழர் - எவரும்!
திருநாளெல் லாம்திருநாள் செந்தமிழை மீட்கும்
பெருநாள் அடையப் பெறின்.*

*திருமாலும் செந்தமிழின் உள்உள்ளான்; இந்தி
வருதலும் மாய்த்தலும் இன்றிப் - பெருநாட்டார்
மீட்சி தமிழுக்கு வேண்டுமென ஒன்றுபட்டால்
ஆட்சி தமிழுக்கே ஆம்!*

*நமைச்சார்ந்து நம்மால் சிறந்து விளங்கும்
அமைச்சரும் ஆள்வோரும் என்றும் - தமிழ்த்தாயைக்
காக்கக் கருதிலர்; பூங்காவில் வெள்ளாட்டை
மேய்க்க விரும்புகின் றார்.*

*சிறைதோறும் மாற்றார் செறிந்திருந்த நாட்டின்
துறைதோறும் இந்தி தொடரும் - குறைகண்டும்
கட்சிபல கண்டு கவிழ்கின்றார்; செந்தமிழ்க்
கட்சிஒன் றில்லாமை கண்டு.*

*வேண்டுமா இந்திநஞ்சு? வேண்டுமா ஆங்கிலம்?
வேண்டுமா இந்த விழற்காடு? - வேண்டுமெனில்,
வெந்தமட்டும் போதாதா? வெந்த தமிழர்க்குத்
தந்தமட்டும் போதும் தழும்பு.*

ஆண்டார் இனமொழியை மற்றவர்க்கும் ஆக்கஎண்ணும்
காண்டா மிருகத்தைக் கண்டதுண்டா - யாண்டேனும்
ஒன்றுபடா நாடுபற்றி ஒன்றா நினைப்பார்கள்?
கொன்றிடவும் எண்ணக்கூ டும்.

காசுக் கொருபாடு! கன்னிக் கொருமுத்தம்!
ஈசர்க்குப் பூசை இயற்றுவதாய்ப் - பேசியே
ஒன்றாகக் கட்சிகள், "ஓங்கு தமிழாணை!
நன்றாத லின்றிக் கெடும்"

"ஏகஇந்தி யாஎன்றே எம்தமிழை மாய்க்கவந்தால்
சாகஇந்தி யாவென்றே சாற்றிடுவோம் - போகஇந்தி
எங்கள் தமிழகத்தை எங்கள் தமிழ்ஆள்க!"
சிங்கங்கள் செப்பினர்இவ் வாறு.

- தமிழ்நாடு - தீபாவளி மலர், 15.11.1963,
பாரதிதாசன் குயில், 10.5.1967, ப.42-43

29.11.63

340. கவிஞர்கள் தேவை!

செந்தமிழ்க் கவிஞர் தேவைஇந் நாட்டில்
எலியுள் ளத்தில் புலியுள்ளம் சேர்க்கக்
கணக்கிலாக் கவிஞர்கள் கட்டாயந் தேவை

தூங்கும் தமிழர் சுருக்கென விழிக்க
ஈங்குக் கவிஞர்கள் எண்ணிலார் தேவை

தமிழைத் தமிழரைத் தமிழக கத்தைத்
தமக்கென்று குதிக்கும் சழக்கரை ஒழிக்கச்
சிங்கத் தமிழரைச் செய்பவர் கவிஞரே!

ஆக்கலும் அழித்தலும் காத்தலும் செந்தமிழ்
மாக்கவி ஞர்க்கலால் மற்றவர்க் கியலுமோ?
ஒற்றுமை பாடி உயர்உல கொன்றை
அற்றைநாள் ஆக்கினும் ஆக்குவர் கவிஞர்
வேற்றுமை மதம்பல விளைத்து மக்களை(க்)
காற்றில் துரும்பெனக் காட்டினும் காட்டுவர்.
பல்கலைக் கழகம் இரண்டுபார்க் கின்றோம்
நல்ல தலைமை இல்லவே இல்லை
ஆங்கி லத்தின் அழகு 'கங் காணி'கள்!

தீங்கி ழைப்பவர் செந்தமி ழுக்கே!
செந்தமிழ்க் கவிஞர் செத்தால் மகிழ்வர்!
சொந்தத் தாயைத் தூக்கில் இடுபவர்!
தலைமையை மாற்ற நிலையுயர்த் திடுக!
கவிஞர் தோன்றிடக் கடுந்தவம் புரிவோம்!
உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன அவற்றின்
அயர்நிலை நீங்க வேண்டும்; அந்தமிழ்க்
கவிஞரைப் படைக்கும் கருத்து வேண்டும்.

எல்லாப் பள்ளியும் இன்பத் தமிழைக்
கல்லார் இலைஎன்று காட்ட வேண்டும்.
செல்வர்கள் கவிஞர் செய்யும் நூற்களை
வெளியிட வேண்டும் அவ்வப் போதே
அவர்கள் அடைந்துள செல்வம் அனைத்தும்

பைந்தமிழ் வளர்க்கப் பயன்பட வேண்டும்!
ஈத்து வக்கும் இன்பம் பெரிதென
எண்ணிச் செயல்செய வேண்டும் செல்வர்!
ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லான்[1]
பொன்றாது நிற்பதொன் றில்லெனப் புகல்வோம்.
எல்லா ஊரும் திருவா ரூர்த்தேர்
இழுத்து நிலையில் நிறுத்துதல் போலத்
தமிழர் எல்லாம் சரிநிகர் ஒன்றாய்த்
தமிழரின் தொல்சீர்த் தங்கத் தேரை
உளமெலாம் உற்றிடச் செய்தல் வேண்டும்!
தமிழைத் தமிழனே மறந்தநாள் இந்நாள்!
தமிழரின் தொல்சீர் சாகும் வண்ணம்
எதிரிகள் தவங்கள் இயற்றுநாள் இந்நாள்!
தெற்கி லுள்ள சீரலை வாய்க்குத்
தெற்கில் ஏழ்மதுரை ஏழ்தெங்கம் என்ன
நாற்பத் தொன்பது நாடுகள் இருந்தன.
அவைகள் கடலுள் ஆழ்ந்தன அதனால்
அங்கி ருந்த அந்தமிழ்ச் சங்கமும்
மறைந்தது; தமிழ்நான் மறையும் மறைந்தன;
இந்த உண்மையைக் கவிஞர் எல்லாம்
அடிக்கடி நொடிக்குநொடி அந்தமிழ்க் கவிகளால்
உலகுக் கெடுத்துக் காட்ட வேண்டும்.
கொடுங்கடல் கொண்டஅக் குமரிநா டுமுதல்
இமையம் வரைக்கும் எங்கள் தமிழகம்
என்ற உண்மையைக் கவிஞர் எல்லாம்
அடிக்கடி நொடிக்குநொடி அழகுறப் பாடுக!
தெலுங்கெனில் வேறு மொழிஎன்று செப்புவர்
மலையாள மொழிஎன்று மற்றொன்று கூறுவர்
கன்னட மொழிஎன்(று) ஒன்று கழறுவர்
துளுவென ஒன்று சொல்லி யிருந்தனர்
இவையெலாம் தமிழே என்ற உண்மையை
அடிக்கடி நொடிக்குநொடி அந்தமிழ்க் கவிஞர்
எங்கணும் முழக்க மிடுதல் வேண்டும்.

முந்தாநாள் தோன்றிய சிங்கள மூடர்
செந்தமி ழர்தம் சிறிய திட்டைத்
தமதென்று சொல்லித் தலைதுள்ளு கின்றனர்.
குமரி நாட்டின் குளிர்தமிழ் நாட்டின்

சிறிய திட்டே அந்தத் திட்டெனக்
கவிஞர் எடுத்துக் காட்ட வேண்டும்
செந்தமிழ்க் கென்று வந்துள தீமையைத்
தமிழர்கள் ஒன்று சேர்ந்து தடுக்க
அஞ்சாது கவிஞர் ஆவன பாடுக.

குறிப்பு :

இறுதிக்காலத்தில் வீறுணர்ச்சி சிறிதும் குன்றாது கவிஞர் வரைந்த இப்பாடல் 29.11.63 அன்று காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரிப் பாட்டரங்கத் தலைமைக்கவிதையாகப் பாடப் பெற்றது. கவிஞர் மறைந்தபின் 'பாரதமுழக்கம்' (1.2.65) இதழிலும், கவிஞர் த.கோவேந்தன் தொகுத்தளித்த "பாவேந்தர் பாரதிதாசன்" (ஏப்ரல் 1965) நூலிலும் இப்பாடல் இடம்பெற்றுள்ளது. இதழில் 'கவிஞர்கள் தேவை பாவேந்தர் பாரதிதாசனாரின் இறுதி வேண்டுகோள்' என்னும் தலைப்பைப் பெற்றிருந்தது.

1. 'புகழல்லால்' அல்லது 'புகழல்லாற்' என இருத்தல் வேண்டும்.

- பாரதமுழக்கம், மாதமிருமுறை இதழ், 1.2.65, ப.5
பாவேந்தர் பாரதிதாசன், ப.4-6

15.1.1964

341. தெவ்வரை வீழ்த்தித் தெசிணி வாழ்க!

குவிதைப்பொங் கல்வி ழாவில்
'கவிதை'க்கு வாழ்த்துச் சொன்னேன்!
எவிடத்தும் எவரில் லத்தும்
எவர்மாட்டும் 'கவிதை' ஏடு
தவழுக! தமிழர்க் கெல்லாம்
தமிழன்பு பெருகச் செய்க!
அவரவர் மொழியே நாட்டின்
ஆட்சியை அடையச் செய்க!

இந்தியே பேசும் நாட்டை
இந்தியே ஆள வேண்டும்!
செந்தமிழ் பேசும் நாட்டைச்
செந்தமிழ் ஆள வேண்டும்!
இந்தியே பேசும் நாட்டில்
தமிழ்வேண்டாம்; அதுபோல் இந்தச்
செந்தமிழ் பேசு நாட்டில்
இந்தியும் நுழைதல் வேண்டாம்!

தாய்மொழி வாயி லாகத்
தாயகம் அறிவைக் கொள்ளும்
பாய்பிற மொழியால் நாடு
பயன்பெறல் முயற்கொம் பாகும்;
நோய்வேண்டும் மக்கள் இல்லை;
நுணற்பறை கேட்பா ரில்லை;
தூய்திலா இந்தி நம்மைத்
தொடுவதை நாம்வி ரும்போம்!

இவ்வகை உணர்வு தந்தே
இழிவினை நீக்கி நாளும்
செவ்விய 'கவிதை' ஏடு
சிறந்தினி தாக(ச்) சீர்த்தி
எவ்வள வடைதல் வேண்டும்
அவ்வள வடைந்து வாழ்க!
தெவ்வரை வீழ்த்தி ஆசான்
தெசிணியும் வாழ்க நன்றே!

- 'கவிதை' இதழ், 15.1.64, ப.1, மறுவெளியீடு : 'கவிதை', 1994 சனவரி, ப.1.

342. நாவேந்தர் பற்றிப் பாவேந்தர்

எண்ணாத் துறைநாடி
எண்ணிப் பிறர்நலம்
ஏற்பச் செய்தான்

அண்ணாத்துரை, அறிஞன்
சொற்றொடரில் நற்றொடர்கள்
ஆய்ந்தெடுத்துப்

பண்ணாத் துறை என்ன?
வீழ்ந்த புகழ் மீட்டான்
பார்ப்பனத்தீ

நண்ணாமற் செய்தான்
திராவிடர்க்கு வாழ்வளித்தான்
நன்றே நன்றே.

குறிப்பு :

'எண்ணாத்துறை நாடி' என்று முந்தைய இரண்டு பாடல்களைப் போலவே தொடங்கும் இப்பாடல் பாவேந்தர், நாவேந்தரான அண்ணாவைப் பற்றிப் பாடியதாகக் கொடுக்கப்பட்டுள்ளது. பாவேந்தரால் எப்போது பாடப் பெற்றது? எந்த இதழில் அல்லது நூலில் இடம்பெற்றது? என்பன பற்றிய எக்குறிப்பும் நூலாசிரியரால் தரப்படவில்லை இந்நூலின் பதிப்பாசிரியர் பாவலர் த.கோவேந்தன். பாடலின் மெய்ம்மை ஆராயத்தக்கது.

- நாவேந்தர் கண்ட பாவேந்தர், ப.9

343. 'மாணவர் பாட்டு' - நூற்சிறப்புரை

எளிய நடையில், இளைஞர் உளத்தைத்
தெளிய வைக்கும் தேர்ந்த கருத்தொடு
"மாணவர் பாட்டு" வழங்கினார் நற்கலை
வாணர் நன்கு மகிழும் வகையில்.
பொன்னம் பலனார் என்னருந் தோழர்!
இன்னம் பலநூல் இயற்றி மக்களின்
தேவையை நிறைவு செய்து
தாவுக தனிப்புகழ்! நன்று வாழியவே!

குறிப்பு :

கவிஞர் வ.பொன்னம்பலம் எழுதிய "மாணவர் பாட்டு" நூலுக்குக் கவிஞர் அளித்த சிறப்புரைப் பா. இப்பாடல் கவிஞர் கையெழுத்துப் படப்படி வடிவில் வழங்கப் பட்டுள்ளது.

- புதுவைப் பொழில், ப.32

344. பொருள் வரிசை

என்னா வென்றெடுத் துரைப் பேன் நான்
இந்தக் கடைதனிலே இருக்கும் பொருள் வரிசை
என்னா வென்றெடுத் துரைப் பேன்

பலவித வாழைப் பழமொடு கொய்யா
பலாவிளா பேரீச்சை மாம்பழம்
சிலவகைக் கிச்சிலி பொம்பளிமாசும்
சீத்தாப் பழமுடன் ஆத்தாப் பழமும்
குலை குலையாகக் கொடிமுந்திரியும்
குண்டு நீட்டுமாய் வெள்ளரிப் பழமும்
ஈரநொங்கும் இளநீர்த் தேங்காய்களுடனே (நான்)

சின்ன மல்லிகை சிவந்த ரோஜா
சிறந்த வாசத் தாழம்பூவும்
பன்னீர் மலருடன் படர் சம்பங்கி
வன்னத் தாமரை வாசக் கதிர்கள்
புன்னை அலரியும் புரிபுரியாகக்
குருவேருடனே இன்னும் பல பல வித மலருடனே (நான்)

லட்டு ஜிலேபி மைசூர் பாகு
பூந்தி பகோடா அல்வா கெஜூர்
தட்டில் ஓமப் பொடியொடு சேவு
தகுந்த காராப் பூந்தி கவாப்பு
பிட்டு மசால்வடை இட்டலி அப்பம்
கொழுக் கட்டையுடன் வட்டத் தோசை
சட்டில் அப்பம் மஸ்பம் பிஸ்கோத்துகளுடனே (நான்)

குறிப்பு :

பாவேந்தரின் முதன்மகள் திருமிகு சரசுவதி கண்ணப்பர் சேமிப்பில் கையெழுத்து வடிவில் இருந்த இப்பாடலை அவரின் முதன் மகன் க.புகழேந்தி 28.7.2004 முற்பகல் நேரில் அளித்தார்.

345. பாரதி சாப்பாட்டுக் கட்டுப்பாடு

(வெண்பா)

காலை உணவு பகலுணவு மாலைஇராக்
கால உணவுகட் டாயமுண்ணும் - வேலையிலே
நல்ல திருத்தமொன்று நானுரைப்பேன் பாரதியார்
சொல்லிய சொல்லையே வைத்து

இழந்திரு சாப்பாடு ஒருநாள்! மறுநாள்
பழஞ்சோறும் பாற்சோறாய்த் தோன்றும் - இழக்காமல்
நாடோறும் உண்ணும் நறுஞ்சுவையும் நஞ்சென்று
பாடுவார் பாரதி யார்.

ஆமைவடை மோர்க்குழம்பும் அப்படிஓ ராயிரமும்
நாமாற்றி மாற்றியுண்டால் நாடோறும் - நாமே
இருந்துண்ணோம் போதுமென்போம் இப்படி நாளும்
பரிந்துரைப்பார் பாரதி யார்.

ஒவ்வொருநா ளும்பே ருணவுண்ணக் கட்டுமா?
அவ்வாறுண் டால்வயிற்றுக் காகுமா? - எவ்வெவர்க்கும்
பட்டினி வேண்டுமொரு பத்துநா ளுக்கொருநாள்
சட்டினிவேண் டாம்இட் டலிக்கு!

ஏழை இருப்பவன் எல்லார்க்கும் நோயின்றி
வாழ உரைத்த வகைஇதுவே - வாழ்நாளில்
பத்துநா ளைக்கொருநாள் பட்டினியி ருக்கும்நாள்
முத்துநாள் மாணிக்க நாள்!

- பாரதிதாசன் குயில், 10.11.1967, ப.20

346. குழந்தைத் திருமணம்

சின்ன குழந்தைக்குத்
திருமணம் செய்வ
தென்ன மதியீனம்?

தெருவில் புழுதி
அளைந்தே விளையா
டுகின்ற ஒரு *(சின்ன குழந்தைக்கு)*

நல்ல இளவயதில்
அறிவைத் தரும்
கல்விதர வேண்டும்
தொழில்கள் பல
சொல்லித் தரவேண்டும்

வல்லியானவள் காதல்
உளந்தெரிந்
தல்லவோ மணம்
செய்ய வேண்டும் *(சின்ன குழந்தைக்கு)*

- பாவேந்தரில் அகமும் புறமும், ப.107

347. சூழ்நிலை நாடக மன்றத்திற்கு வாழ்த்து

சூழ்நிலை நாடக மன்றம் துலங்குக!
வாழ்க நாளும் மக்கள்ஆ தரவால்!
நாடகம் இந்நாள் நன்னிலை அடைந்ததாய்
எண்ணு கின்றனர். அவ்வா றில்லை;
நாடகம் நன்னிலை அடைதல் வேண்டும்.
சூழ்நிலை மன்றம் தொடர்ந்தாற்றும் தொண்டால்
நாடகம் நன்னிலை அடையும் என்று
நம்பு கின்றேன். நம்புவ தேன்எனில்,
இந்நிறு வனத்தில் இருப்பார் அனைவரும்
நாடக ஆர்வமும், நாட்டில் அன்பும்
உடையவர் ஆவார். உவகை தரும்இது!
படித்தவர், இசையறிவு வாய்ந்திடப் பட்டவர்
எழுத்தா ளர்கள், எடுத்ததை முடிக்கும்
ஆற்ற லுடையவர்! அகலா ஒற்றுமைப்
பண்பு மிக்கவர். ஆதலின்
நண்பர் நிறுவனம் நனிஓங் கிடுமே!

- பாரதிதாசன் இதழ்ப்பணிகள், ப.414

348. பொங்கல் வாழ்த்து

பொங்கல் பொங்கிற்று பொழியும் நிலவுபோல்!
மங்கல வாழ்த்து வழங்குவோம் தமிழால்!
தித்தித் திருக்கும் செழும்பாற் பொங்கல்,
வட்டித்து மலர்புனைந்து, மகிழ்ந்து மனைவியும்
மக்களும் உறவும் ஒக்க இருந்து
புதுப்பரிதி கண்டு வெயில் அரங்கில்
உண்போம்; தமிழர் உயர்வுகொண் டாடுவோம்
தமிழ்நாடு முற்றும் தமிழே ஓங்கித்
தகையிலாப் பகைவர் தறுக்கு போக
அன்பும் அறமும் ஆர்ந்தே
இன்புற்று வாழ்க.

குறிப்பு :

சென்னை **அன்புப்பழம்நீ அவர்களின் குடும்பத்தாரின் வேண்டுகோளின்படி** பாரதிதாசன் எழுதியனுப்பிய பொங்கல் வாழ்த்து. நேரிசை அகவற்பா அமைப்பிலான இப்பாடலில் ஈற்றடியின் இறுதியில் இரண்டு சீர்கள் விடுபட்டுள்ளன.

349. மங்கையர்க்கரசி சாம்பசிவன் மணவாழ்த்து

பொன்னொளிசேர் மகரந்தப் பொடிபோய் மற்றோர்
பொழில்மலரைத் தழுவும்கீழ்க் கடலில் தோன்றி
மின்னிடுசெங் கதிர்ஓடி மேற்குக் கோடி
விண்ணுயர்ந்த மலைதழுவி மகிழ்ச்சி செய்யும்
தன்னைநிகர் காவிரிதன் தோளை நீட்டித்
தடவயலின் இடையினிலே படியும் நல்ல
கன்னிநறுந் தமிழ்சிரிக்கும் உயிர்சி லிர்க்கும்
கவின்உயிரும் செந்தமிழும் வாழ்வைச் செய்யும்.

செல்வன்உயர் சாம்பசிவம் உள்ளம் சென்று
செல்விமங்கை யர்க்கரசி உள்ளம் சேர
வல்லியுளம் அவ்வுணர்வால் மலரப் பின்னர்
மலர்மணம்போல் யாழ்இசைபோல் வான்க திர்போல்
முல்லைமலர் நறுந்தேனும் இனிமை யும்போல்
முழுத்திங்க ளும்கசியும் நிலவும் போலே
நல்லஇரண் டுள்ளமும்ஒன் றாய்ம லர்ந்த
நறுமணமே திருமணமாம், இன்னும் கேளீர்!

இரண்டுளத்தின் கட்டினிலே தட்டுப் பட்ட
இன்பத்தேன் கடலினது கரையோ ரத்தில்
புரண்டுவரும் அலையின்முதற் றுளியின் பேர்தான்
புதியமணம் கேளுங்கள், இன்னும் சொல்வேன்
ஒருவன்விழி தன்காதல் உரைக்கும். கண்ட
ஒருத்திவிழி ஆம்ஆம்என் றுரைக்கும் ஆங்கே
இரண்டுளத்தில் எழும்இன்பக் கவிதை தன்னில்
இருக்கும் முதலெழுத்து மணம்! பிறிதோ வாழ்வு!

- பாவேந்தரில் அகமும் புறமும், ப.106

350. வரலாற்றை முழக்கிடுக உலகமெலாம்

முதல்மனிதன் தோன்றியநா டெங்கள் நாடு
முதல்மொழியைக் கண்டநா டெங்கள் நாடு
முதல்மொழியில் தமிழ்கண்ட தெங்கள் நாடு
...

எதுநாக ரிகமென்றே அறியாப் போதில்
இதுநாக ரிகமென்ற தெங்கள் நாடு
முதலாட்சி முறைவகுத்த தெங்கள் நாடு
மூவேந்தர் முறைகாத்த தெங்கள் நாடே!

கடல்கொண்ட குமரிநா டெங்கள் நாடு
கவிஞரெலாம் வாழ்ந்தநா டெங்கள் நாடு
வடஇமையம் குமரிநா டெல்லை யாக
மாத்தமிழர் வாழ்ந்தநா டெங்கள் நாடு
முடிபுனைந்த தமிழ்வேந்தர் வாழ்வை வைத்து
முத்தமிழைக் காத்தநா டெங்கள் நாடு
அடிநாளே அறிவளித்த தெங்கள் நாடே!
...

பொய்சொல்லிப் பொய்சொல்லித் தமிழர் மாண்பைப்
பொய்யாக்கி னார்பகைவர்! பொய்யி ருட்டை
மெய்சொல்லி மெய்சொல்லி வெளுக்க வைக்க
வெடுவெடென நடுங்குவதேன் தமிழ்ச்சிங் கங்கள்?
உய்யாத நெறிகண்டும் தூதூ என்றே
உமிழாதார் தமிழரா? தமிழ்ப ழித்த
வையாபு ரிப்பிள்ளை போன்றா ரான
வடமன்னர் தமிழரிடம் பெற்ற தென்ன?

தலைநாளில் தத்துவநூற் கொள்கை கண்டார்
தமிழ்ச்சான்றோர் அல்லாமல் மற்று யாவர்?
கலைவல்லார் தொழில்வல்லார் போரில் வல்லார்
கைகாரத் தமிழரென்றால் எவர்ம றுப்பார்?
நிலைபெரிது; மிகப்பெரிது நீணி லத்தில்
நிகரற்ற நம்பண்டைத் தமிழர் வாழ்வு!
நிலைசிறிது; மிகச்சிறிது இற்றை நாளில்
நினைத்தாலும் குலைநடுங்கும் தமிழர் வாழ்வு!

தமிழுக்குத் தமிழகத்தில் ஆட்சி இல்லை
சாற்றினார் இவ்வாறு தமிழின் மாற்றார்!
நமக்கிந்நாள் வேண்டியதும் இந்தி தானே
நவிலுகின்றான் இவ்வாறு தமிழன் தானும்
சுமைசுமையாய் இலக்கியங்கள் ஆங்கி லத்தில்
தோன்றுவதால் தாய்மொழியாய் ஒப்பச் சொன்னார்
தமிழிலே ஒன்றுமே இல்லை என்றான்
தனைமறந்த தமிழனவன்! வியப்பி தன்றோ?

பெரிதாற்றல் உடையீரே தமிழ்ச்சான் றோரே
பின்நோக்கிப் பிடர்பிடித்து நம்மைத் தள்ளும்
நரிப்படையை வெல்லுதற்குப் புதிய தாக
நான்ஒன்று சொல்லுகின்றேன்; கேட்க வேண்டும்;
பெரியபடை தேவையில்லை! குண்டு வேண்டாம்!
பிறநாட்டார் உள்நாட்டார் எவரு மேநம்
வரலாற்றை அறியும்வகை முழக்கம் செய்வீர்!
மறவாமல் இதைச்செய்வீர் விடாது செய்வீர்!

உலகறிந்த தமிழனைஊர் அறிய வில்லை.
உயர்தமிழ்த்தாய் வடமொழியின் பிள்ளை என்று
கலகத்து மாந்தர்சிலர் கழறு கின்றார்
கடல்கடந்த நாட்டாரும் நம்பு கின்றார்
இலங்கைவாழ் தமிழரெலாம் நாடற் றோராம்
என்னநிலை தமிழருக்கு? மீண்டும் சொல்வேன்
வலந்தாங்கும் வாளுடைய தமிழர் பெற்ற
வரலாற்றை முழக்கிடுக உலக மெல்லாம்!

குறிப்பு :

எண்சீர் விருத்த அமைப்பினைக் கொண்ட இப்பாடலில் முதல்விருத்தத்தின் இரண்டாம் அடியில் பாதியும், இரண்டாம் விருத்தத்தின் இறுதியடியில் பாதியும் இடம் பெறக் காணோம். இவ்விடுபாடுகளோடு பல இடங்களில் அசைகள் குன்றியுள்ளன.

இப்பாடலில் இடம்பெறும் இந்தி எதிர்ப்பு, ஆங்கில எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் நாடற்றோர் எனும் குறிப்பு முதலியன இப்பாடல் 1958இன் இறுதிப்பகுதியில் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருத இடந்தருகின்றன.

- பாரதிதாசன் குயில், 10.5.1967, ப.5-8

351. மூத்தவரின் வாழ்த்து

அறுசீர் விருத்தம்

முன்னணி வாழ வேண்டும்
முழுவெற்றி எய்த வேண்டும்
என்அணி வலிய தென்றே
இந்தியைப் புகுத்து வோனைத்
தன்னணி ஆன இன்பத்
தமிழணி யால்அ டக்கித்
தென்னணி உயர்வை வையம்
தெரிந்திடச் செய்தல் வேண்டும்.

இன்புறு தமிழார் வத்தார்
முன்னணி எழுத்தா ளர்கள்!
துன்புறு தமிழர்க் கெல்லாம்
துணைசெய்யும் வன்மை மிக்கார்
அன்புறு நாட்டு மக்கள்
அனைவரும் முன்ன ணிக்கே
பொன்தந்து புகழைச் செய்து
தம்கடன் புரிதல் வேண்டும்!

குறிப்பு:

பாரதிதாசன் அளித்துள்ள இதழ் மதிப்புரைகளில் பொத்தாம் பொதுவாக இது அமைந்துள்ளது. இதழை நடத்துவோர், இதழ் வெளிவருங்காலம், இதழின் தன்மை பற்றிய எக்குறிப்பு மின்றி அமைந்துள்ளது. பாரதிதாசனோடு தொடர்புடைய வரான **ம.ரா.தேவராசன்** அறுபதுகளின் தொடக்கத்தில் ஆசிரியராக இருந்து நடத்திய 'முன்னணி' இதழுக்கு அனுப்பியதாகக் கருதலாம்.

- பாரதிதாசன் இதழ்ப்பணிகள், ப.407

352. ராஜா நலங்கிடவா,

ராஜா நலங்கிடவா, நடராஜா நலங்கிடவா
அந்தி மந்தாரை ரோஜா அரவிந்த மலர்களை
செண்டுகள் கட்டிய தேவி மனம் மகிழ (ராஜா)

மல்லிகைப்பூ, பாரிஜாதம் ரோஜா
மருக்கொழுந்து பந்துகள்
கட்டிய பாவை மனமகிழ - (ராஜா)

தங்கக் கயிறெடுத்து தாழம்பூ செண்டுகட்டி
கண்ணூஞ்சல் ஆடிவரும் கண்மணியாளுடன் கூடி (ராஜா)

முப்பத்தி முக்கோடி தேவர் மனம் மகிழ
அப்பாவு - பொற்பாதம்
தப்பாமல் எப்போதும் - (ராஜா)

நலங்கிட வருவாய் பெண்ணே, நங்கையே கண்ணே (நலங்கிட)
அலங்கார ஊஞ்சலில் அமர்ந்த சுந்தரர்க்கு (நலங்கிட)
மஞ்சள் கதம்பம் பன்னீர் மைசூர் சந்தனத்தோடு
கொஞ்சம் அட்சதை கொண்டு குணமுள்ள மன்னருக்கே (நலங்கிட)

மல்லிகை முல்லையோடு இருவாட்சி
செண்பகம் நல்லதோர் சாமந்தி நாகரீக
ரோஜா கொண்டு (நலங்கிட)

நலங்கிடவே... வோ வாரும் ராஜா
இந்த வேளையில் தாமதமாக...க (நலங்கிட)

மல்லிகை, முல்லை, ரோஜா புஷ்பங்களை
செண்டுக...ட்டி வைத்திரு...க்கு

ஜாலம் செய்யாமல் எழுந்திருமே மன்னனே நீர்
துரிதா...க... மாக... (நலங்கிட)

பரிமளமான வாசனை வீசும் மன்னனே நீர்
நேர்த்தியாக நீ...ர் (நலங்கிட)

குறிப்பு :

'மனோபாரதி அளித்த தகவல்' என்ற குறிப்போடு 7.12.86 சாவி **இதழில்** இப்பாடல் இடம்பெற்றுள்ளது. பாவேந்தரின் பேரன் கோ.பாரதி தொகுத்தளித்துள்ள ''பலகணியில் பாவேந்தர்" என்னும் நூலில் சாவி இதழ் பற்றிய குறிப்போடு மீண்டும் இப்பாடல் அச்சிடப்பட்டுள்ளது. இடைச்சிதைவு களுடன் அமைத்துள்ள இப்பாடலுக்கு வழங்கப்பட்டுள்ள முன்குறிப்பில் "தியாகி செல்லான் நாயக்கர் பாண்டிச்சேரியில் பிரபல வக்கீலாக இருந்தவர். அவரது பெண்களான பத்மதிலகமும் கமலாதேவியும் எக்கோல் பிரிமியர் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தனர். அவர்களது தமிழாசிரியர் சுப்புரத்தின வாத்தியார் செல்லான் நாயக்கரின் நெருங்கிய நண்பருங்கூட!

பத்மதிலகத்துக்குத் திருமணம் நிச்சயமானது. ஒரு நலங்குப் பாட்டு எழுதித் தரும்படி சுப்புரத்தின வாத்தியாரை நச்சரித்த னர் இரண்டு பெண்களும், அவரும் எழுதிக்கொடுத்தார்.

பாரதிதாசன் என்ற பெயரில் பிரபலமான சுப்புரத்தின வாத்தியார் எழுதிக்கொடுத்த அந்த நலங்குப் பாட்டை இப்போதும் ஒரு பொக்கிஷம் போலப் பாதுகாக்கிறார் திருமதி கமலாதேவி முனுசாமி. பிரசுரமாகாத அந்த நலங்குப் பாடல் இதுதான்" என்னும் செய்தி இடம்பெற்றுள்ளது.

- பலகணியில் பாவேந்தர், ப.85-86

353. வா கண்ணா!

இராகம் : அடாணா தாளம் : ஆதி

பல்லவி

வாமலர் வாயினிற் குழலூதி கண்ணா
மகிழ இசைநல்கி வாழ்வு நலமுற (வா)

அநுபல்லவி

தாமரையோ முகம் தாமரை யோவிழி
தருக உனது காட்சி இன்பம் பொழி (வா)

சரணம்

தேவை இல்லையோ நான்செந் தேனே
தித்திக்கும் கரும்பே பெருமானே
ஆவல் தணியும்படி அசைந்தாடி - என்
அங்கமெலாம் மகிழும் படியே (வா)

குறிப்பு :

'பாரதிதாசன் பாடல்' என்ற தலைப்பிடப்பட்டு, பாட்டின் அடியில் 'தொகுப்பு - இரா.வேங்கடேசன்' என்று குறிக்கப் பட்டு ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

- ஸ்ரீசுப்ரமண்யபாரதி கவிதா மண்டலம் - ஆவணி - புரட்டாசி 1983, ப.16

இராகம் : அடாணா தாளம் : ஆதி

'நீ இரங்காயெனில்' - என்ற மெட்டு

எடுப்பு

வா மலர்வா யினில் குழலூதி கண்ணா!
மகிழ இசை நல்கி - வாழ்வு நலமுற. (வா)

தொடுப்பு

தாமரை யோமுகம் தாமரை யோவிழி
தருக உனது காட்சி - இன்பம் பொழி (வா)

முடிப்பு

தேவை யில்லையோ நான் செந்தேனே
தித்திக்கும் கரும்பே பெருமானே
ஆவல் தணியும்படி அசைந்தாடி - என்
அங்க மெலாம் மகிழும் படியே - கண்ணா (வா)

தாமரையோ முகம் = என்பதில் உள்ள தாமரை முகத்தையும், தாமரையோ விழி - என்பதில் உள்ள தாமரை (தா+மரை) என மான் விழியையும் குறிப்பன.

குறிப்பு :

முந்தைய பாடலின் இன்னொரு வடிவமே இங்குத் தரப்பட்டுள்ளது. பாடலின் உருவாக்கம் தொடர்பான கூடுதல் செய்தியும் பாரதிதாசனின் மாணவரான **பாவலர் மணி சித்தன்** அவர்களால் அளிக்கப்பட்டுள்ளது. அச்செய்தி:

"டாக்டர் எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள் இசைத்தட்டில் 'நீ இரங்காயெனில் புகலேது' என்ற பாடலைப் பாடியிருந்தார்.

பலரால் விரும்பப்பெற்ற பாடல் இது. இப்பாடலை ஒருமுறை இசை நிகழ்ச்சியொன்றில் இராமர் பாடினார். பாவேந்தர் அப்பாடலைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தார்.

இராமர் யாதவ மரபினர்; கண்ணனின் பத்தர், ஆதலால் இந்தப் பண்ணில் கண்ணனைப் பற்றியோர் பாடல் இயற்றித்தர வேண்டுமென்று பாவேந்தரை வேண்டினார்.

மீண்டும் அந்தப் பாடலைப் பாடச் சொல்லி அவ் இசைக் கேற்பப் பாடலொன்றைச் சில மணித்துளிகளில் எழுதி இராமரிடம் கொடுத்தார். பஜனையில் அப்பாடலை இராமர் தவறாமல் பாடுவார்.

அப்பாடலை இராமர் தம் உறவினரான இரா.வேங்கடேசனுக் கும் கற்றுத்தந்தார். இன்றும் அவர் இப்பாடலை அதே இசையில் பாடி வருகிறார்."

- பாவேந்தருடன் பயின்ற நாள்கள், ப.161-162

மொழிபெயர்ப்புப் பாடல்கள்

வ. எண்	தியாகராசர் கீர்த்தனை தலைப்பு	தமிழ்மொழி பெயர்ப்பு	வெளியீடு	ப. எண்
1.	த்ஸனிதோடி	ததிகூட்டி வாராய்	1	461
2.	ராகஸுு தாரஸபானமுஜேசி	ஓர் இசையாம் அமுதார்ந்(து)	2	463
3.	இதர தைவமுலவல்ல	இதர தெய்வமெனில்	2	464
4.	அலக லல்ல வாடககநி	இலகு குஞ்சி சூழ்முகம்	3	465
5.	ப்ருந்தாவன லோல!	ப்ருந்தாவன லோல!	3	467
6.	ச்யாம சுந்தராங்க	நீலவண்ணம் வாய்ந்தோய்	4 - 5	469
7.	துளசி பில்வமல்லி	துளசி, வில்வம், மல்லிகை	4-5	471
8.	நிஜமர்ம முலனு	நிசமர்ம மதை	6	473
9.	மருகேலரா	மறைவென்ன காண்	6	475
10.	ஸரச ஸாமதான	ரசிகனே நற்சாம	6	476
11.	மனஸா ஸ்ரீராமசந்த்ருனி	மனசேஸ்ரீராமசந்த்ரனை	7	477
	காளமேகப் புலவர் பாடலின் தனித்தமிழ் மொழிபெயர்ப்பு			
12.	பேறு பதினாறு	புகழ் கல்வி	குயில் 5.8.58	479

தியாகராாசர் கீர்த்தனைகளின்

தமிழ்மொழிபெயர்ப்புப் பாடல்கள்

பாரதிதாசன் கவிஞர்களுக்கு விடுத்த வேண்டுகோள்களில் ஒன்று "பிறமொழியில் உள்ள பாட்டுக்களைத் தமிழ்ப் பாட்டுக்களாக்கித் தருக!" என்பது (1935). அவரே தியாகராாசரின் தெலுங்குக் கீர்த்தனைகளைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார் என்பது பலரும் அறியவேண்டிய செய்தி. ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் இதழில் (1935) 'சங்கீதப்பகுதி' என்னும் பொதுத்தலைப்பின் கீழ் தியாகராாசரின் பதினொரு கீர்த்தனைகளைத் தமிழாக்கம் செய்துள்ளார். கீர்த்தனை, கீர்த்தனம் ஆகிய இரண்டு சொற்களுமே இதழில் ஆளப்பட்டுள்ளன. பல கீர்த்தனங்கள் இசை அலகிடப்பட்டுச் சுரக் குறிப்புகளுடன் அளிக்கப்பட்டுள்ளன. பொதுவாக 'மொழிபெயர்ப்பு' என்றும் சில பாடல்களுக்குத் 'தமிழ்மொழிபெயர்ப்பு' என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

கவிதா மண்டலம் இதழை வெளியிடுவதில் பாரதிதாசனோடு பணியாற்றியவரும், அதே பெயரில் எண்பதுகளில் இதழ் நடத்தியவரும், கவிஞருக்கு மிக நெருக்கமானவருமாகிய **எஸ்.ஆர்.சுப்பிரமணியம்** அவர்கள் பாரதிதாசன் தியாகராாசர் கீர்த்தனைகளை மொழிபெயர்க்க வேண்டிய சூழல் எவ்வாறு ஏற்பட்டது என்பதை விளக்கியுள்ளார். அவர் விளக்கம்:

"பச்சையப்ப உடையார் என்பவர், தாளத்தில் வல்லவர். 108 தாளங்களிலும் தனக்குப் பயிற்சி உண்டு என்று சொல்லுவார். பாவேந்தரும் அவரது தாள ஞானத்தில் அதிக மதிப்பு வைத்திருந்தார்...

கவிதா மண்டலம் காரியாலயத்தில் ஒருநாள் பச்சையப்ப உடையார், குயில் சிவா நாய்க்கர், தம்புசாமி முதலியார், பேராசிரியர் பஞ்சாபிகேசய்யர் முதலியோர் அமர்ந்திருந்தனர். பஞ்சாபிகேசய்யர் தெலுங்கு, சமஸ்கிருதம் போன்று தமிழில் கீர்த்தனைகள் பாடமுடியாது. அப்படி ஏதோ பாடினாலும் அவை தாளத்திற்கு சங்கதி போட்டுப் பாடுவதற்கும் ஒத்துவராது என்றார். அது என்னாப்பா அப்படி சொல்றான். தமிழில் ஏன் முடியாது? எவ்வளவு கடினமான தாளத்தி லும் தமிழில் பாடமுடியும். லாவணியை சவுக்கதாளத்தில் பாடுவது கடினம். பாட்டிலிருக்கிறது இதோ பார் என்று "ஸ்ரீமதி இவளார்" என்ற அவரது லாவணியைப் பாடிக் காட்டினார். உடையாரே தாளம் போடு என்றார். அப்போது அவர் பாடியது தாளத்தில் எத்தகைய அபார ஞானம் அவருக்கு இருந்தது என்பது வெளியாயிற்று.

தியாகராசர் கீர்த்தனை போல் தமிழில் முடியாது என்று மறுபடியும் வற்புறுத்தினார் பேராசிரியர். பேச்சு ஒருவாறு முடிந்து, 12 மணிக்கு எல்லோரும் எழுந்தனர். கவிஞர் மட்டும் உட்கார்ந்திருந்தார். "சுப்ரமண்யா" அவன் என்ன சொன்னான்?

தியாகராசர் கீர்த்தனை போல் தமிழில் பாட முடியாது. அது என்ன தியாகராசர் கீர்த்தனை? இங்கு ஏதாவது இருக்கிறதா?

இருக்கிறது என்று சுதேசமித்திரன் வாரப்பத்திரிகையில் மொழி பெயர்ப்பும், இசையமைப்பும் என்ற பத்து கீர்த்தனைகளை கொடுத்தேன்.

சாப்பிட்டு வந்தவுடன் கவிஞர் எழுதினார். "நிஜமர்மமுலயனு" என்ற தியாகய்யர் கீர்த்தனையின் மொழிபெயர்ப்பு தியாகராசருடைய முத்திரையுடன் எழுதினார். "உடையாரே" பாடு என்றார் அவருடன் சேர்ந்தும் பாடினார்.

அவன் என்னமோ சொன்னானே "சங்கதி" அதெல்லாம் போட்டுப் பாடு என்றார். அவரும் பாடிவிட்டு, இந்தப் பாட்டு அற்புதம், அற்புதம் என்றார். பத்துக் கீர்த்தனைகளை மொழிபெயர்த்து கவிதா மண்டலத்தில் வெளியிட்டோம்"

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், பாரதிதாசன் மலர், சித்திரை 1983, ப.32

ததிகூட்டி வாராய்

(த்லனி தோடி என்ற தியாகராஜ கீர்த்தனத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு)

தாளம் : சதுர்ஸ ஷாதி திரிபுடை

பல்லவி

ததி கூட்டி வாராய் ஓ மனமே!

அனுபல்லவி

தயவுடன் எனைக் கண்டு, கரம்பிடித்
து(ள்)ள காலமும் சுகமனுபவிக்க ஓடிநீ (ததி)

சரணம்

பதிதரைக் காக்கும் பட்டாதி காரியைப்
பரமார்த்த மருள் வசிஷ்டானு சாரியை
அதி மன்மத ஜய சுந்தராங்கனை
ப்ரதான த்யாகராஜன் மனப்போதினில்

ஹரிகாம்போஜி

(28வது மேளம்)

பல்லவி

த தி கூட் டி வா ராய் ஓ ம ன மே
ஞ் தா பாதநீ நிததப மகரிக பா பாம பத நீ கபம

அனுபல்லவி

த ய வு டன் எ " னைக் கண் டு க ரம்" பி டித் து ள
ம நீ த நி ஸாதாநி ஸாகிஸா ரி நீ ஸ ஸ நி தநி ஸா ரிகா
கா ல மும் சு க மனு "ப விக் க ஓ டி நீ
ஸநிக ரீ ஸா ஸநி நிதி தாரீதநிஸா ஸாரிஸ நீஸநி தாநிதபா மக மா

சரணம்

ப தி த ரைக் காக் கும் பட் டா தி கா ரி யைப்
தா . தா நீ தா பா நிநிதப மகா மா பா மகரீ கா மா
ப ர மார்த் த ம ருள் வ சிஷ் டா ஞ் சா ரி யை
ச நீ தபமா ரிக மக கரி ஸா ஸா சா மா பாகாமபாப பா

(இதற்குமேல் அனுபல்லவியைப் போன்றது)

குறிப்பு :

இதழில் இடம்பெறும் தியாகராசர் கீர்த்தனங்களின் தமிழாக்கப் பாடல்களில் முதற்பாடலாக அமைவது இது. பாடலுக்கு அடுத்து 'ஹரிகாம்போஜி' '28வது மேளம்' என இராகதாளம் குறிக்கப்பட்டுப் பல்லவி, அநுபல்லவி, சரணத்தின் முதலிரண்டடிகள் ஆகியவற்றுக்கு இசை அலகிடப்பட்டுச் சுரக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன. 'இதற்குமேல் அனுபல்லவியைப் போன்றது' எனுங்குறிப்பு இறுதியில் இடம்பெற்றுள்ளது.

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், பவ-பங்குனி (1935), வெ. 1, ப.31

1935

ஓர் இசையாம் அமுதார்ந்(து)

ராகஸுத தாரஸபானமுஜேசி என்ற கீர்த்தனத்தின் தமிழ்மொழிபெயர்ப்பு

இராகம் : அந்தோளிகா தாளம் : ஆதி

பல்லவி

ஓர் இசையாம் அமுதார்ந்திவண் நீயே
ஓதெங்கணும் மனமே! *(ஓர்)*

அனுபல்லவி

யோக யாக த்யாக
யோக பலம் உளதாம்

சரணம்

சதாசிவ மயமெனும் நாதோங்கா ரஸ்வர
அறிஞர் ஜீவன் முக்தரென த்யாகராஜன் அறியும் *(ஓர்)*

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், யுவ-சித்திரை (1935), வெ. 2, ப.10

1935

இதர தெய்வமெனில்

இதர தைவ முல வல்ல என்ற தியாகராஜ கீர்த்தனத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு

இராகம் : சாயாதரங்கிணி தாளம் : ரூபகம்

பல்லவி

இதர தெய்வமெனில் உன்ற னைவிட ஸௌக்யமா ராமா!

அனுபல்லவி

மதபேதமிலாது சதா மனதில் நினைவு கொண்ட எனக்கு

சரணம்

மனதுதெரிந்து காத்திடினும் மறந்திடினும் நீயே
உனதாள் எனக்கொள இதுநாள் த்யாக ராஜன் அண்டிய *(இ)*

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், யுவ-சித்திரை (1935), வெ. 2, ப.10

1935

இலகு குஞ்சி சூழ்முகம்

அலக லல்ல வாடககநி என்ற தியாகராஜ கீர்த்தனத்தின்
தமிழ்மொழிபெயர்ப்பு

இராகம் : மாயமாதி தாளம் : ரூபகம்

பல்லவி

இலகு குஞ்சி சூழ்முகம் கண்டே
யாதா நந்தம் முனி பெற்றானோ

அனுபல்லவி

மலியும் கோலமுற மாரீசனை
மதமழித்த வேளை யிலும் (இலகு)

சரணம்

முனியின் சைகைதெ ரிந்துசிவ
தனுவினை முறிதரு சமயந்
தனிலேயும் த்யாக ரா
ஜனெந் நாளிலும் வந்திக்கும் (இலகு)

இராகம் : மாயமாதி தாளம் : ரூபகம்

பல்லவி

இ ல கு குஞ் சி சூழ் மு கம் கண் டு யா தா நந் தம் மு னி பெற் றா
ப ம ரி ஸா ஸ நிஸரீ ரீ ரீ நிஸ ரி மாரி ரிமப பா ப ப ம பம ரிஸ
னோ ரீ

அனுபல்லவி

ம லி யும் கோ ல மு ற மா ரீ ச னை ம த ம ழித் தவேளையி லும்
ரீ ரீ ரி ரீ ரி ரிஸ ரிம ரீ ஸ ரிரி ஸ ரிஸ் நி நி ப பநிஸாஸ
ஸநிபமரி ம

சரணம்

மு னி யின் சை கை தெ ரிந் து சி வ த னு வி னைமு றி தரு ச ம யும்
ப ம ப ரீ மரிபம ப பமரி ஸ பநி ப பநி ம ப ம ரிமபாம ப்பப

(இரண்டாவது பாகம் அனுபல்லவியைப் போன்றது)

குறிப்பு :

பாடலுக்கு அடுத்துப் பல்லவி, அனுபல்லவி, சரணத்தின் முதலிரண்டடிகள் ஆகியவற்றுக்கு இசை அலகிடப்பட்டுச் சுரக்குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், யுவ-வைகாசி (1935), வெ. 3, ப.25

ப்ருந்தாவன லோல

ப்ருந்தாவன லோல! என்ற தியாகராஜ கீர்த்தனத்தின் தமிழ்மொழிபெயர்ப்பு

இராகம் : தோடி தாளம் : ரூபகம்

பல்லவி

ப்ருந்தாவன லோல! கோவிந்த!
அரவிந்த முக

அனுபல்லவி

சுந்த ராங்க! திகிரிகை ஏந்து
சுடர்நீ அடியவர் பகைசிந்தும் (ப்ருந்தா)

சரணம்

காத்தருள் வாய் திருவே மகிழ் மதனா அடியார் நண்ப
ராம தாஸன் தாஸன் த்யாக ராஜன் துதி சரித! (ப்ருந்தா)

இராகம் : தோடி தாளம் : ரூபகம்

பல்லவி

ப்ருந் தா வன லோ ல கோ விந் த அ ர விந் த மு க
மா கா ரிஸ தநி ஸா ஸரீ கமமா பா தா ப ம கா ஸரீ கா

அனுபல்லவி

சுந் த ராங் க திகி ரி கை ஏந் து சு டர் நீ அ டி ய
தாதப கா ம ப த நி ஸா ஸ ரீ ஸ நீத ப த

சரணம்

காத் த ருள் வாய் தி ரு வே ம கிழ் ம த னாஅ டி யார் நண் ப
பா ம ப பமகபா ப த நீ ஸ ஸ த நி ஸா ஸா ஸநி நீஸரீஸரீ

ரா ம தா ஸன் தா ஸன் த்யா க ரா ஜன் து தி ச ரி த
தா த க்ரி ஸ தா நி ஸா ஸ ஸா நீ த பத நீத பம சகரிக

குறிப்பு :

பாடலை அடுத்துப் பாடல் முழுமைக்கும் இசை அலகிடப்பட்டுச் சுரக்குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், யுவ-வைகாசி, வெ. 3, ப.26

1935

நீலவண்ணம் வாய்ந்தோய்

ச்யாம சுந்தராங்க என்ற தியாகராஜ கீர்த்தனத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு

பல்லவி

நீல வண்ணம் வாய்ந்தோய்!
சகல சக்தியும் நீயேடா

அனுபல்லவி

தாமச முதல் நவை தீர்ந்தோய்
தரணி இலகும் ராம சந்த்ரா!

சரணம்

துஷ்டர்களின் கொழுமை[1] சாடிச்
சிஷ்டர்களின் இதயமதை நாடும்
இஷ்டதெய்வமும் நீ யாவாய்
புவியில் த்யாக ராஜன் வேறா?

இராகம் : தன்யாஸி **தாளம் : ரூபகம்**

பல்லவி

நீ ல வண்ணம் வாய்ந் தோய் ச க ல சக் தி யும் நீ யேடா
பா ப கா ம பா ப மக ம ப நீ ஸ ரி ஸா பநிஸாபநிஸா நிதபா

அனுபல்லவி

தா ம ச மு தல் ந வை தீர்ந் தோய் த ர ணி இ ல கும் ரா ம சந்
ஸா கா கா கா கா ரீ மக ரீரி ஸ ஸாஸ ஸா நிதா ப ப கா ம கம
ப ரா
பநி ஸா

சரணம்

துஷ்டர்க ளின் கொ ழு மை சா டி சிஷ் டர் க ளின்இத ய ம தை
பா பா மகரீ ஸ மக ம பா ப ப நி ஸ ஸ ஸ பம பத ப
நா டும்
மகா ரி

இஷ் ட தெய் வ மும் நீ யா வாய் பு வி யில் த்யா க ரா ஜன் வே றா
கா க கா த க காமகரீ ஸா ஸ ஸ ஸ ஸ நிதா ப கா ம கமபநிஸா

குறிப்பு :

பாடலுக்கு அடுத்துத் 'தன்யாஸி' 'ரூபகம்' என இராக தாளம் குறிக்கப்பட்டுப் பாடல் முழுமைக்கும் இசை அலகிடப்பட்டுச் சுரக்குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

1. 'கொடுமை' என இருப்பின் நன்று

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், யுவ - ஆனி (1935), வெ. 4-5, ப.7

துளசி, வில்வம், மல்லிகை

துளசி பில்வமல்லி என்ற தியாகராஜ கீர்த்தனத்தின் தமிழ்மொழிபெயர்ப்பு

பல்லவி

துளசி வில்வம் மல்லிகை ஜாஜி
வனசாதியின் பூசைகைக் கொள்வாய்

அனுபல்லவி

மலர்மேலயன் சனகாதி கரார்ச்சித!
மழைத்தேகா! சுநாபா; நல்ஆதவன் இரு
தயோததியின் சந்த்ரா சுகந்த (துளசி)

சரணம்

உரமதில் முகமதில் சிரமதில் புயமதில்
கரமதில் நேத்ரமதில் திருவடிகளில்
கருணையால் அன்பினால் பரமா நந்தமதால்
அநுதினமும் ஸ்ரீத்யாகராஜூ நிர்உபாதியுடன் அர்ச்சிக்கும் (துளசி)

இராகம் : கேதாரகௌள **தாளம் : ஆதி**

பல்லவி

து ள சி வில் வம் மல் லி கை ஜா ஜி
ரி ரி ரீகரிரீகரி ஸா ஸ நிஸரீ ஸ ரிஸநித தா ப
வ ன ஜா தி யின் பூ சை கைக் கொள் வாய்
ப ப பா ரீ ரி ரீ ரிமபா நிகதப மாகா ரீகரி

அனுபல்லவி

ம லர் மே ல யன் ச ன கா தி க ரார்ச் சி த
ஸ ஸ ஸா ஸரி தா தா பா பாநி ஸ ரீ ரீ ரீ ரி
ம ழைத் தே கா சு நா பா நல் ஆ த வன் இரு
ரி ரி மக ரி ரி கரி ஸ ரி ஸா நி நி ஸா
த யோ த தி யின் சந்த் ரா சு கந்த
ரி ஸா நி த ப பா ம மக ரிகரிஸ

சரணம்

உ ர ம தில் மு க ம தில் சி ர ம தில் பு ய மதில்

ப பா ப பா மா கரி ம பா ரி மா ப தா தப மகரி கரீ

க ர ம தில் நேத்ர ம தில் தி ரு வ டி க ளில்

தா பா ம தா ரீ மா கரி ஸ நி ஸா ரி மா மகரீ மபா

க ரு ண யால் அன் பி னால் ப ர மா நந் த ம தால்

ஸ ஸா ஸ ஸா நித பார் நீஸா ஸந ஸா ரீஸா நித பா நீ ஸா

அ நு தி ன மும் ஸ்ரீ த்யா க ரா ஜ௵

ரி ரி மக ரி ரி கரி ஸாரிஸ நிதபாநி ஸா

நிர் உ பா தி யு டன் அர்ச சிக் கும்

ஸ ரி ஸா நி த பா ம கா ரிரிகஸ

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், யுவ ஆனி - ஆடி (1935), வெ. 4-5, ப.8

1935

நிச மர்ம மதை

நிஜமர்ம முலனு - என்ற கீர்த்தனத்தின் மொழிபெயர்ப்பு

பல்லவி

நிசமர்ம மதை அறிந்துள்ள பேர்களை
நீ அலையவிடல் ஏதுக்கோ ராமா!

அனுபல்லவி

பசுபதி பங்கயன் அரிமும் மூர்த்தி
பாரில் தெய்வம் யாவை யுமுன் லீலை என்னவே நடத்தும் (நி)

சரணம்

சுருதி சாஸ்த்ர புராணிக ராதி
தொன்மத அறிஞரைப், பேர்துதிப் போர்தமை,
அரசர்தமை, அங்கமதில் அபி மானமே
ஆக்கும் ஆக்கமே தியாகராஜன் போற்றும் உன் (நி)

இராகம் : உமாபரணம் **தாளம் : ஆதி**

பல்லவி

நி ஜ மர் ம ம தை அ றிந் துள் ள பேர் க ளை
ரி க மாபா தநி தநி பதநீ ஸ நீ ப ம கா ம ரி
நீ அ லை ய விடல் ஏ துக் கோ ரா மா
பமகம ப்ரீ ல ஸநிஸரி ஸநிபா நிஸரீ ரி கமபம கம ரிஸமஸ

அனுபல்லவி

ப சு ப தி பங் க யன் அ ரி மும் மூர்த்தி
ம ப த நி ஸாநி ஸா ஸ ரிக ம ரீ ஸா ஸநிபா
பா ரில் தெய்வம் யா வை யுமுன் லீ லை என் ன வே நடத் தும்
தா நி ஸா நி பா ம ரிகமப தா நி பா ம கமபம கமரிஸ

சரணம்

சுரு தி சாஸ்த் ர பு ரா ணி க ரா தி
ஞ ப பா பம ரீ கா ம ரீ ஸா ஸா நி

தொன் ம த அறிஞ ரைப்பேர் து திப் போர் த மை
பா ரி ரி ரீ ரிக ம ரிகமா ப ப தநிஸநிஸா நி பா

(இதற்குமேல் அனுபல்லவியைப் போன்றது)

குறிப்பு :

தலைப்பில் 'தமிழ்' எனுஞ் சொல் விடுபட்டுள்ளது.

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், யுவ-ஆவணி, (1935), வெ. 6, ப.23

மறைவென்ன காண்

மருகேலரா என்ற கீர்த்தனத்தின் மொழிபெயர்ப்பு

பல்லவி

மறைவென்ன காண் ஓ ராகவா?

அனுபல்லவி

மறைவேன் அனைத்தின் உருவான மேலோய்
மதியோடு சூர்யன் விழியாய்க் கொண்டோய் *(மறை)*

சரணம்

யாவும் நீயே என்றென் அந்த ரங்க மதில்
தேவிரத்தில் தேடித் தெரிந்துகொண்டே னையா
தேவரிரை யன்றிச் சிந்தனையொன் றில்லேன்
காக்கவேண்டும் என்னை த்யாகராஜன் அன்பே! *(மறை)*

பல்லவி

இராகம் : ஷயத்தஸ்ரீ **தாளம் : ஆதி**

ம றை வென் ன காண் ஓ ரா க வா
ப ம பா ம கஸாநிஸ கா ம பா

அனுபல்லவி

ம றை வேன் அ னைத் தின் உ ரு வா ன மே லோய்
த த தா நி த மா த நி ஸா நி தநி ஸா
ம தி யோ டு சூர் யன் வி ழி யாய்க் கொண் டோய்
ஸ க ஸா ஸா க ஸா நி ஸ நீ த தமா

சரணம்

யா வும் நீ யே என் றென்அந் த ரங் க ம தில்
பா பா பா ம பா மா க ஸ கா ஸ க ஸா
தே வி ரத் தில் தே டித் தெ ரிந் து கொண் டே னை யா
ஸ நி ஸா நி ஸா ஸா ஸ ஸ ஸா கா க மா மா

(இதற்கு மேல் அனுபல்லவியைப் போன்றது)

குறிப்பு :

தலைப்பில் 'தமிழ்' எனுஞ்சொல் விடுபட்டுள்ளது.

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், யுவ-ஆவணி (1935), வெ. 6, ப.24

ரசிகனே நற்சாம

ஸரச ஸாமதான என்ற கீர்த்தனத்தின் மொழிபெயர்ப்பு

பல்லவி

ரசிகனே நற்சாம தானபேத தண்ட
சதுரன் நின்னின் தெய்வம் ஏது? காத்தருள் (ரசி)

அனுபல்லவி

தசமுகன் சிவபக்தனா யிருந்தும்
நிசமிதை அந்நாள் அறியவில்லை யன்றோ! (ரசி)

சரணம்

இதமதான வார்த்தை யாவும் நன்றுரைத்தாய்!
"எனதயோத்தி நாடும்உன" தென்றனை
பதவி சோதரனுக் கீந்தும் வாராததால்
அதமே நீபுரிந்தாய் த்யாக ராஜன் அன்பே! (ரசி)

குறிப்பு :

தலைப்பில் 'தமிழ்' எனுஞ் சொல் விடுபட்டுள்ளது.

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், யுவ-ஆவணி (1935), வெ. 6, ப.24

மனசே ஸ்ரீராம சந்த்ரனை

"மனஸா ஸ்ரீ ராமசந்த்ருனி" என்ற தியாகராஜ கீர்த்தனையின் தமிழ்மொழிபெயர்ப்பு

பல்லவி

மனசே ஸ்ரீ ராம சந்த்ரனை மறந்திடேல்
ஏமாறாதே ஓ - *(மனசே)*

அனுபல்லவி

முனர் புற்றினில் உற்றிடு மௌனி செய்த
மூன்று நால த்யாயமலை பார்ப்பையே *(மனசே)*

சரணம்

ஆக்கல் காத்தல் தீர்த்தல் ஆன செயலை
நலமல்ல எனஎணித் திரிமூர்த்தி களுக்களித்துப்
பாக்கியம் அகலா ஸத் பக்த மனோ
பீஷ்ட முடிக்கும் த்யாகராஜன் *(மனசே)*

பல்லவி

ராகம் : ஈசமனோகரி தாளம் : ஆதி

ம ன சே ஸ்ரீ ரா ம சந்த் ர னை
ப ப தானிதபா பமகாமா ரீ ரி கபகரி ஸா ஸா
ம றந்திடே ல் " ஏ மா றா தே" ஓ
நீ நீ நீ ஸா " நிஸரிக கா ரீ கா ரிஸாரிகபம

அனுபல்லவி

மு னர் புற் றினில் உற் றிடு மௌனி செ ய் த
நி நி ஸா நி ரி ஸரிகா ரிக மாரீ கரி ஸா
மூ ன்று நா லத் யா ய மலை பார் ப்பை யே
ஸா நி நீ தா பா ப ம ரீ காரி ஸ ரிகப

சரணம்

ஆக் கல் காத் தல் தீர்த் தல் ஆ ன செ ய லை
பா ப பா ப பதநீ த பாமா ரிக மா ரி ஸா

நல மல்ல எ ன எ ணித்திரி மூர்த்தி களுக் களி த்து
ரீ க ம ப பா தாநீ தனஸா நிதநீ த பா

- ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், யுவ-புரட்டாசி (1935), வெ. 7, ப.29

5.8.58

பேறு பதினாறு

கட்டளைக் கலித்துறை

புகழ்கல்வி வீரம் புனைவெற்றி மக்கள் பொருள்துணிவே
மிகுநெல் மணிநலம் மேலாம் நுகர்ச்சி அறிவுஅழகே
பகுபல் பெருமை பழங்குடித் தன்மை பிணிகள்இன்மை
தகும்ஆண்டும் ஆகும் பதினாறு பேறெனச் சாற்றுவரே

முற்குறிப்பு :

பதினாறு பேறும்பெற்றுப் பெருவாழ்வு பெறுக என்று வாழ்த்துவது உண்டு. இதில் பதினாறும் பெற்று என்றால் பதினாறு பிள்ளைகளைப் பெற்று என்பது பொருள் என்று நினைக்கின்றார்கள் சிலர்.

பதினாறுவகைப் பேறுகள் இன்னவை என்பதை இச்செய்யுளால் அறிக. இச்செய்யுள் காளமேகப் புலவர் பாடியுள்ள "துதி வாணி" என்று தொடங்கும் செய்யுளின் தனித்தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

பிற்குறிப்பு :

இதில் துணிவு என்பதை வடவர் தைரியம் என்பர். நெல்மணி என்பது நெல்முதலிய மணிவகையைக் குறிக்கும். நலம் - இதை வடவர் சௌபாக்கியம் என்று கூறுவர். போகம் என்று வடவர் சொல்லியுள்ளதை நுகர்ச்சி என்று இன்றியமையாத தமிழ்ச் சொல்லாற் சொல்லுவர் நம் தமிழ் மேலோர். பகுபல் பெருமை - மேலும் மேலும் புதிது புதிதாக ஏற்பட்டுவரும் பெருமை என்க. பழங்குடித்தன்மை - தமிழ்ப் பெருங்குடிகட்கிருக்க வேண்டிய உயரிய பண்பாடுகள். தகும் ஆண்டு - வாழ்நாள் மிகுதி.

குறிப்பு :

இதழில் தன் 'தனித்தமிழ் மொழிபெயர்ப்பு'ப் பாடலுக்கு முன்னும் பின்னும் கவிஞரே வழங்கியுள்ள குறிப்புகள் மேலே தரப்பட்டன. பாடல்களை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதற்காகப் பதிப்பாசிரியரால் காளமேகம் பாடல் தரப்படுகின்றது:

துதி, வாணி, வீரம், விசயம், சந்தானம், துணிவு, தனம்,
அதிதானியம், சௌபாக்கியம், போகம், அறிவு, அழகு,
புதிதாம் பெருமை, அறம் குலம், நோயின்மை, பூண் வயது,
பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே!

- குயில் கிழமை இதழ், 5.8.58, ப.7

பாடல்கள்
முதற்குறிப்பு அகரநிரல்

வ. எண்	முதற்குறிப்பு	பாடல் எண்	காலம்
1.	அங்கு வைத்தார்	180	09.09.58
2.	அசையா துயர்பனி	252	06.10.59
3.	அண்டை வீட்டுக் கொல்லையில்	287	23.04.62
4.	அண்ணாமலை சென்னை	270	12.07.60
5.	அண்ணாமலைப் பல்கலைக்கழக	336	23.05.63
6.	அந்தோ கடன்தீதே	63	1935
7.	அப்பாவுக்கும் அம்மாவுக்கும்	300	16.07.62
8.	அம்மா அப்பா தமிழையா	332	1962
9.	அம்மா இனிக்குடிக்க	11	21.11.22
10.	அம்மாவுக்கு நல்லபிள்ளை	296	04.06.62
11.	அமுதச் சொற் பெருக்காற்றும்	92	25.06.42
12.	அமுதத்தை அள்ளியே	321	01.08.62
13.	அரசின் அலுவலகம்	306	01.08.62
14.	அல்லிப்பூவில்	297	11.06.62
15.	அழகிய கருங்கல்	161	15.07.58
16.	அமுத பிள்ளை சிரிக்குமாம்	200	28.10.58
17.	அள்ளி அமுதமுண்ணும்	3	1907
18.	அறம் தனக்கின்பம்	249	22.09.59
19.	அறியாத சின்னஞ்சிறு	195	21.10.58
20.	அறிவெனப்படுவது	244	08.09.59
21.	அறுபதாயிரம் ஆண்டு	150	01.06.58
22.	அன்பார் அரங்கின்	144	14.01.57
23.	அன்பு கொடுத்திடுவாய்	34	ஆக. 1923
24.	அன்பு பெருகவும்	99	ஏப். 1943
25.	அன்னையெழில் நிறைந்த	25	29.05.23

26.	அனைவரும் தமிழை	94	1942
27.	ஆசைவிழா எடுத்தார்	188	30.09.58
28.	ஆட்சியிலே	96	1942
29.	ஆடவர்க்குயிர்	101	1943
30.	ஆடுபாம்பே	80	1938க்கு முன்
31.	ஆண்ட நாட்கள்	52	05.10.33
32.	ஆய ஒருத்தி	258	21.06.60
33.	ஆயிரத்துத் தொளாயிரத்தேழில்	137	05.09.54
34.	ஆளவந்தோம்	115	மே 1947
35.	இங்கிலந்து தேசத்தினில்	31	10.07.23
36.	இடித்தாலும் வானம்	70	1935
37.	இடுப்பிலே உன்னை	193	14.10.58
38.	இந்த்ராதியர் கண்டு	5அ	1916-17
39.	இந்த நாட்டில்	230	12.05.59
40.	இந்தியை விதைக்கிறார்	85	10.07.38
41.	இந்திராதியர் கண்டு	5	1916-17
42.	இந்நாள் பாரதி	331	11.09.62
43.	இம்முறை புதுமுறை	212	13.01.59
44.	இமயமலை தென்குமரி	45	08.08.31
45.	இரவில் இருகண்ணும்	288	01.05.62
46.	இரவினிலே உணவருந்தி	90	செப். 1941
47.	இராசாராம் எனும்	186	30.09.58
48.	இருந்தாள் இருக்கின்றாள்	277	09.08.60
49.	இருப்பவர் பொருளை	281	14.01.62
50.	இலக்குமண சாமி	264	05.07.60
51.	இலங்கைத் தமிழர்	241	11.07.59
52.	இளமை வளமையை	205	07.12.58
53.	இறையை அவன் குரலான	124	15.07.48
54.	இறைவன் பணித்ததே	171	19.08.58
55.	இன்றே செயத்தக்க	213	27.01.59
56.	இன்றைக்கே லஜபதிநோய்	30	10.07.23
57.	ஈந்து தந்த	156	24.06.58
58.	ஈயைப் பார்த்தது	240	07.07.59
59.	ஈன்றபொன் நாட்டை	142	சன. 1957
60.	உண்மைப் பலனை	65	1935
61.	உணவு தடைப்படின்	127	1948
62.	உலகத்தை ஓங்கச்செய்	12	28.11.22
63.	உலகினிற் பழஞ்சீர்	48	09.10.32

64.	உள்ளம் மலர்ந்த	55	26.01.34
65.	உறங்கும் நேரந்தான்	272	26.07.60
66.	உனக்குமா ஓர் இயக்கம்	218	03.03.59
67.	ஊமைத் தமிழரெலாம்	243	25.07.59
68.	ஊர்ச்சாராயக் கடை	167	12.08.58
69.	ஊரலைத்த நெல்லை	190	30.09.58
70.	ஊருக்கோர் ஏடு	33	சூலை 1923
71.	எங்கள் சாதி	29	10.07.23
72.	எங்களூரில் இருப்பவர்கள்	201	11.11.58
73.	எண்ணாத் துறைநாடி	128	1949
74.	எண்ணாத் துறைநாடி	335	1963
75.	எண்பதாம் ஆண்டடைந்தும்	183	23.09.58
76.	எதற்குமே சும்-ம	125	15.08.48
77.	எந்தக் கட்சி ஐயா	155	24.06.58
78.	எந்நாட்டில் கால்வைத்தாய்	334	1963
79.	எப்படி நான் பிழைப்பேன்	64	1935
80.	எப்போதும் செந்தமிழ்க்கே	225	28.04.59
81.	எம் வீட்டயலில்	102	1943
82.	எரிபோல் விழியும்	56	18.02.34
83.	எல்லாரும் நல்லர்	280	1961
84.	எலி ஏமாந்தால்	231	12.05.59
85.	எழில்முதல்வன் நல்ல	319	01.08.62
86.	எழுத்தெல்லாம் புதியநடை	134	21.10.51
87.	எளிய நடையில்	343	-
88.	என்னருமைத் தேசம்	79	1936 - 1937
89.	என்னாவென்று	344	-
90.	என்னையான் இனிது	145	02.05.57
91.	எனக்கு வந்ததுனக்கு	196	21.10.58
92.	எனையும் விட்டு	260	21.06.60
93.	ஏட்டை நிரப்ப	245	08.09.59
94.	ஏடி மாநிலத்தேவி	71	1935
95.	ஏரி என்றால்	329	06.08.62
96.	ஏழமை என்பதேது	49	19.03.33
97.	ஏழாண்டினின்று	47	01.05.32
98.	ஏழைத் தமிழன்	229	05.05.59
99.	ஐந்தறிவுப் பருப்பொருள்	250	22.09.59
100.	ஒருவன் புகழ்வான்	259	21.06.60
101.	ஒரே ஒரு கொய்யாப்பழம்	285	13.04.62

102.	ஒளியோடு குளிரோடு	123	15.06.48
103.	ஒன்றுசேர் உயர்வு செய்	82	09.01.38
104.	ஓடி வருமாம்	207	16.12.58
105.	ஓதுகின்ற யோகத்தால்	91	திச. 1942
106.	கடல்மேல் எழும்பரிதி	114	சன 1947
107.	கண்ணபிரான் என்னகத்தில்	107	சன 1944
108.	கண்ணீர்த் துளிஎனும்	163	05.08.58
109.	கண் நிமிராமல்	36	நவ. 1923
110.	கரவில் இருந்தொரு	282	15.05.62
111.	கருங்கடலின் மேல்	42	10.03.29
112.	கல்லூருணித் தோழர்	72	1935
113.	கலை கற்றதாய் (நாதந்தி)	9	07.11.22
114.	கலைச்செல்வி கண்ணப்பர்க்கு	136	15.03.54
115.	கலைப்பேழை ஆகிய	238	07.07.59
116.	'கவிதை மலர்கள்' என	116	மே 1947
117.	கழுதைப்பாட்டு	239	07.07.59
118.	கள்ளம் எப்படி	140	சன 1956
119.	கற்பு நிலையறியார்	172	26.08.58
120.	காசியும் போலிசும்	54	1933
121.	காட்டுப் புலிமகிழும்	269	05.07.60
122.	காடு மலைகள் உண்டு	58	11.03.34
123.	காணும் பொருளிலெல்லாம்	4	1911க்கு முன்
124.	காலிற் செருப்பணிய	254	17.11.59
125.	காலை உணவு	345	-
126.	காலை தொடங்கியவர்	61	1934
127.	காலையில் கண்விழிக்க	291	07.05.62
128.	காற்றும் மழையும்	279	சன 1961
129.	காற்றுள்ள போதொடு	219	10.03.59
130.	கீரிப்பிள்ளைக்கு	278	16.08.60
131.	குடம்பத்தூர் தேன்கவிகள்	311	01.08.62
132.	குடு குடு குடுகுடு	88	15.09.40
133.	குத்தகைகள் நற்சலுகை	164	05.08.58
134.	கும்மி அடியுங்கள்	217	24.02.59
135.	குமாய்த்தீவு மேற்சீனர்	189	30.09.58
136.	குயில் கூவியது	290	01.05.62
137.	குருடீ எனும் பெயர்	312	01.08.62
138.	குவிதைப் பொங்கல்	341	15.01.64
139.	குவியிதழ் மலர்ந்தான்	313	01.08.62

140.	கெஞ்சுவதன் பயனோடி	6	1918க்கு முன்
141.	கேரளத்திற்கு நெல்	174	26.08.58
142.	கையிற் பெற்ற	224	28.04.59
143.	கொஞ்சும் புறாக்களை	234	26.05.59
144.	கொம்புத்தேன்	181	10.09.58
145.	கொல்லாமை ஒன்று	147	14.05.58
146.	கோதையவள் என் தொடர்பை	117	16.06.47
147.	கோயிலிலென்ன	24	22.05.23
148.	கோவேந்தன் பாடி	314	01.08.62
149.	நஞ்ண நமன	226	28.04.59
150.	சங்கொலி என்ற	191	07.10.58
151.	சட்டமன்றம் கோழி	256	29.12.59
152.	சமயத்தால் பிரிவுற்றோம்	111	27.04.45
153.	சமையக் கணக்கர்கள்	152	08.06.58
154.	சமையல் அளிக்கும் அறை	121	01.10.47
155.	சாதி ஒழிப்பாரியர்	197	21.10.58
156.	சாமந்தியின் பூவின்முகம்	294	21.05.62
157.	சாவும் இனிதென்று	187	30.09.58
158.	சிங்கைத் தமிழ்மக்கள்	204	25.11.58
159.	சிட்டுக் குருவிக்கும்	232	12.05.59
160.	சிறிதெழுதத் தேடி	274	26.07.60
161.	சின்ன குழந்தைக்கு	346	-
162.	சின்ன சின்ன	208	23.12.58
163.	சின்ன தோப்பு	176	02.09.58
164.	சீபோ என்றேன்	317	01.08.62
165.	சுவடியில் தோய்ந்தன	257	21.06.60
166.	சுற்று மதிற்சுவரின்	35	அக். 1923
167.	சூட்டடுப்பில்	253	13.10.59
168.	சூழ்நிலை நாடக	347	-
169.	செந்தமிழ்க் கவிஞர்	340	29.11.63
170.	செந்தமிழ் நாட்டை	215	17.02.59
171.	செந்தமிழ் நாடென்றன்	133	1950
172.	செந்தமிழில் அன்புடைய	283	16.03.62
173.	செந்தமிழைக் காப்பதற்கு	84	03.07.38
174.	செந்தமிழை நாம்	141	நவ. 1956
175.	சேர்வீர் தொண்டர் படைக்கு	8	7.11.22
176.	சேலம் கருணாகரன்	318	01.08.62
177.	சைகோனில் அதிகாரி	138	1954

178.	சொத்தைப் பெருக்க	246	15.09.59
179.	சொல்லறங்கள் சிறந்திருந்த	78	29.06.36
180.	ஞாலமிக்க கீர்த்திதனை	40	1928
181.	தகுபுகழ் தேடல்	248	22.09.59
182.	தங்கை தமயன்	76	1935
183.	தஞ்சைமுத்துத்தாசன்	326	01.08.62
184.	தண்பொழிலில் குயில்பாடும்	93	20.11.42
185.	தமிழ்க்கவிதைக்கென	66	1935
186.	தமிழ்த்தாய் வந்தாள்	67	1935
187.	தமிழ்தந்த சிவனார்க்கு	168	12.08.58
188.	தமிழ்நாட்டில் இன்ப	255	22.12.59
189.	தமிழ்நிலத்தில் தமிழான	148	01.06.58
190.	தமிழ்வாழ்க என்னுமோர்	106	15.12.43
191.	தமிழர் தூங்கிய	228	29.04.59
192.	தமிழரின் மாபெருந்தலைவரே	104	16.09.43
193.	தமிழரெலாம் அறிவுடையர்	135	1952
194.	தமிழரெலாம் ஒன்றாய்	339	15.11.63
195.	தமிழன்பன் நல்ல	316	01.08.62
196.	தமிழோ வியப்புலவர்	323	01.08.62
197.	தறிநெய்வோர் பரிதவித்தார்	60	1934
198.	தன்னெழில் காட்டுகின்றாள்	20	17.04.23
199.	தாயகம் எங்கள்	143	1957
200.	தானும் உயிர்களும்	265	05.07.60
201.	தானே தனித்தியங்க	305	01.08.62
202.	திங்கள்கதிர்	59	22.07.34
203.	திண்டி வனத்து	233	26.05.59
204.	திமுக் கழகம் தேடிய	302	01.08.62
205.	திருத்திப் படித்து	129	21.10.49
206.	திருநாமம் போட்டனர்	170	19.08.58
207.	திருமுத்தமிழ்வெட்ட	192	07.10.58
208.	திருவரங்கம் தமிழர்	108	1944
209.	திருவார்ந்த தஞ்சை	166	12.08.58
210.	திருவுடையார் பொறையுடையார்	132	02.06.50
211.	திருவுற்ற செந்தமிழ்	309	01.08.62
212.	தீர்த்தகிரி நல்லதம்பி	159	15.07.58
213.	துட்டப் பகைவரை	75	1935
214.	துடிப்பகத்தால் தோன்றுமலை	251	22.09.59
215.	துறைதோறும் வைத்த	165	12.08.58

216.	துன்ப மிலாதது	21	24.04.23
217.	தெருட்டினன் எண்ணம்	320	01.08.62
218.	தென்னாட்டார்கள்	182	16.09.58
219.	தேசத்திலே இந்த	10	07.11.22
220.	தேடல் தமிழ்ச்செல்வம்	276	26.07.60
221.	தேவர்க்கு விடுதலை	32	31.07.23
222.	தேவாராதனைக்கே	50	16.04.33
223.	தேனருவியான தமிழ்	118	04.08.47
224.	தொலைபேசிப் பெட்டிக்கு	304	01.08.62
225.	தொழிற்கல்வி வேண்டு	62	1935
226.	நட்ட நடுவினில்	14	26.12.22
227.	நந்தமிழ் நாட்டுமக்கள்	86	09.01.39
228.	நயமறியா மக்கள்நலம்	44	1931
229.	நயனுறும் ஈ.வெ.ரா	105	1943
230.	நல்ல குணம்செயல்கள்	81	சன. 1938
231.	நல்லதொரு தெய்வம்	19	10.04.23
232.	நல்லவர் ஆண்ட	237	07.07.59
233.	நல்லவர் என்பவர்	220	24.03.59
234.	நல்ல வழி இது	177	09.09.58
235.	நல்லறிவும் பெருநோக்கும்	69	1935
236.	நற்றமிழ் பயின்ற	222	14.04.59
237.	நற்றவம் பலித்ததே	194	14.10.58
238.	நன்றாண்ட மூவேந்தர்	110	21.02.45
239.	நன்று கவிகளிந்நாட்டு	299	01.07.62
240.	நன்று சிவாஜி	267	05.07.60
241.	நன்று வாழிய	130	30.11.49
242.	நாகமுத் தையா	315	01.08.62
243.	நாட்டை மீட்க	206	09.12.58
244.	நாடகம் திரைப்படம்	293	15.05.62
245.	நாடுபுகுந்த வடக்கர்	307	01.08.62
246.	நாடு மொழியால்	262	28.06.60
247.	நாமுகுக்கும் நன்மகிழ்ச்சி	327	01.08.62
248.	நாற்புறத்தும் பகைவர்	235	02.06.59
249.	நான்செய் தமிழ்ப்பாட்டை	328	01.08.62
250.	நிலைகெட்ட பாகித்தான்	178	09.09.58
251.	நீதிமன்னர் பல ஞானியர்	15	20.02.23
252.	நீலமலர் தன்னையும்	2	1907
253.	நெஞ்சத்திலே வரும்	28	19.06.23

254.	நெல்லில்லை என்று	184	23.09.58
255.	நெல்லைத் தமிழ்க்கவிஞன்	325	01.08.62
256.	பகுத்துணர்ந்து கல்வி	271	12.07.60
257.	பச்சைப் பசுந்தழை	112	சன. 1946
258.	பட்டுக்குஞ்சுகள் எட்டை	153	17.06.58
259.	படார்என்று காசுதரும்	221	07.04.59
260.	பம்பாய் பிஷப்பாரே	173	26.08.58
261.	பயன் விளைக்கும்	51	30.04.33
262.	பரிதி கண்டோம்	83	01.02.38
263.	பருந்துபோல் ஊன்	11அ	06.02.23
264.	பல்கலைப் பயிற்சியும்	338	சூலை 1963
265.	பல்லூரின் மக்கள்	308	01.08.62
266.	பழகு தென்புதுவை	103	28.08.43
267.	பழங்கலத்தில்	1	1904
268.	பழந்தமிழ்க்குடிகள்	202	18.11.58
269.	பழம் வேண்டுமா உனக்கு	301	29.07.62
270.	பள்ளிக்குப்போய்	209	23.12.58
271.	பள்ளிக்கூட முதல்மணி	210	06.01.59
272.	பற்கொம்பு மென்று	160	15.07.58
273.	பறந்த பல்லாயிரம்	139	25.12.55
274.	பறம்பைப் பிரகாசம்	322	01.08.62
275.	பாடம் சொல்லி	227	28.04.59
276.	பாடி வருங்குயில்	298	01.07.62
277.	பாடும் கடலும்	149	01.06.58
278.	பாப்புலவர் பாட்டும்	273	26.07.60
279.	பார்ப்பனர் மேலானவரோ	151	08.06.58
280.	பார்ப்பான் இனப்பகைவன்	214	27.01.59
281.	பாரதத் தேர்வந்து	16	06.03.23
282.	பாரத தேசத்தை	27	12.06.23
283.	பாரத மணிக்கொடி	337	சூன் 1963
284.	பாரத வீரம்	333	1962 - 1963
285.	பாலைக்குடிக்கையில்	286	23.04.62
286.	பாவண மல்கும்	113	1946
287.	பாவலர் பாலசுந்தரனாரை	185	30.09.58
288.	பாவேந்தர் மெச்சவே	324	01.08.62
289.	பின்னும் திரும்பாதீர்	53	03.12.33
290.	புகுத்தறிவீனத்தை	73	1935
291.	பூக்கும் புதுவையினில்	38	27.08.24

292.	பூமியை மறந்துவிட்டீரே	7	சன. 1920
293.	பூரிக்கும் தாரகை	87	1.3.40
294.	பூவிருக்கும் தேனிருக்கும்	109	1944
295.	பெரமலூர் என்பது	223	21.04.59
296.	பெரியா ரிடத்தில்	216	17.02.59
297.	பெருமாள் கோயில்	268	05.07.60
298.	பெற்ற தமிழகம்	211	13.1.69
299.	பேறுஎனல் அறத்தால்	247	15.09.59
300.	பொங்கல் நாளில்	122	01.02.48
301.	பொங்கல் பொங்கிற்று	348	-
302.	பொங்கற் புதுநாள்	131	14.1.50
303.	பொழுது மலர்மணம்	126	1948
304.	பொன்னொளிசேர்	349	-
305.	போந்தது புதிய	26	12.06.23
306.	மக்களின் சம்மதம்	97	1942
307.	மட்டுப்படாத	275	26.07.60
308.	மடக்கொடியை	119	01.09.47
309.	மண்கலங்க வீரத்தால்	236	16.06.59
310.	மணக்கோலம் தான்	43	1930
311.	மணப்பந்த லுக்குத்தீ	310	01.08.62
312.	மதுவிலக்கு மதுவிலக்கு	13	12.12.22
313.	மந்திவந்தால் பிள்ளை	263	05.07.60
314.	மலர்தலை யுலகிற்கு	89	செப். 1941
315.	மறந்தறியேன் தருவாய்	39	1928க்கு முன்
316.	மன்றத்தைப் போற்றுவதால்	17	13.03.23
317.	மன்னிய பாரத	77	1935
318.	மனத்தந்த வான்மீன்கள்	266	05.07.60
319.	மனைவி என் மடிமேல்	158	01.07.58
320.	மாதர்களே எழில்	74	1935
321.	மாய்த்தான் பகைப்படை	203	25.11.58
322.	மார்புநோய் வருத்த	289	01.05.62
323.	மாலைப்போதின்	57	04.03.34
324.	மிடிஇல்லை என்பார்	169	19.08.58
325.	மீட்சித் தமிழகத்தில்	198	21.10.58
326.	முத்துக்கோத்தாற்போலே	295	28.05.62
327.	முதல்மனிதன்	350	-
328.	முன்னணிவாழ	351	-
329.	மொழிவெறி கூடாது	154	24.06.48

330.	யாருளார் என்னைவிட	179	09.09.58
331.	ராஜா நலங்கிட வா	352	07.12.86
332.	வடக்கு மாங்குடி	162	29.07.58
333.	வருக உயர் இராமசாமி	41	10.02.29
334.	வழுக்கி விழுந்த	199	28.10.58
335.	வறியோர்க்கெல்லாம்	46	19.12.31
336.	வாணியை என்றும்	37	சன. 1924
337.	வாமலர் வாயினில்	353	-
338.	வாழ்க்கை இனிக்குதடீ	23	22.05.23
339.	வாழுமாறமைந்த	242	14.07.59
340.	வான்கடல் தொட்ட	261	21.06.60
341.	வானத்தில் மின்னல்	22	08.05.23
342.	விடுதலை எவர்க்கும்	146	1957
343.	வியாழன் வீணாய்	157	24.06.58
344.	விரைந்து தழுவுவாள்	100	சூலை 1943
345.	வில்லாதி வில்லனடா	330	10.09.62
346.	விலைகள் மலைபோல்	303	01.08.62
347.	வெற்றிப்பறை கொட்டடா	120	01.10.47
348.	வெற்றிமுழக்கஞ்செய்	98	1942
349.	வெற்றிலைக்கு முன்	292	15.05.62
350.	வேண்டியா நந்தவிகடன்	175	02.09.58
351.	வேலன் உடம்பை	284	03.04.62
352.	ஹிட்லரின் எண்ணம்	95	1942
353.	ஜன்னலுக்குள் தலையை	68	1935

பாடல்கள்

தலைப்பு அகரநிரல்

	பாடல் எண்
அகாலியரின் ஆண்மை	29
அண்ணாவின் உவமைகள் - நூலுக்குச் சிறப்புரை	128
அணிற்பிள்ளைக்குக் கிளிப்பிள்ளை	156
அதுநம்மை ஒன்றுபடுத்தும்	111
அமுதூட்டி அறிவூட்டும் கோயில்	90
அமெரிக்கரைப் பார்! உருசியரைப் பார்	269
அமைச்சர் பத்தவச்சலனார்	182
அமைச்சர் பத்தவச்சலனார்க்கு அறிக்கை	174
அரவிந்தர் யோகம்	91
அவர் யாவர்?	220
அவள் முகம்	158
அழகப்பர் அழகுரை	124
அழகாய் எழுது	295
அறமும் திறமும்	249
அறிவும் கலையும்	244
அறிவை ஆசையால் தோண்டினால் புதியமனம் உண்டாகும்	274
அறுவரைக் கொன்ற அரசியல் வீழ்க	150
அன்பழகன் - வெற்றிச்செல்வி திருமண வாழ்த்து	110
அன்புதரும் பாரதத்தாய்	20
அன்றைய கருத்து இன்றைய கடமை	141
அன்றொருநாள் பாரதி	137
அன்னை தன் மகளுக்கு	195
அன்னைமார்க்கு விண்ணப்பம்	203
அன்னையின் பூரிப்பு	208
ஆங்கிலர் அறப்போர் வெற்றிமுரசு	98
ஆசிரியர் பு.அ.பெரியசாமிப் பிள்ளைக்கு இரங்கற்பா	7
ஆசிரியர் வாழ்த்து	251
ஆசையும் அச்சமும்	25

ஆயிரம் பெறும் இலாவணி 3
ஆலமரத்துக் கிளிக்கு அழைப்பு 301
ஆளவந்தார் 115
ஆளவந்தார் முதற்கடன் கல்வி அளிப்பது 271
இடுப்பில் குழந்தை 193
இதுவுமோர் பிழைப்பா? 224
இந்திப்போருக்கு அழைத்தல் 85
இந்நாள் காங்கிரசு 149
இயற்கைத்தேவியின் கோபம் 56
இரவின் இளவரசி 282
இராசசி தமிழ்படித்தால் வராத வெண்பாவும் வரும் 175
இராசாராம் அடங்க வேண்டும் 186
இராட்டினம் - தெய்விகப்படை 32
இராமாயணக் கதைநிகழ்ச்சிப் பாடல் 5
இராமாயணக் கதை நிகழ்ச்சிப் பாடல் 5அ
இராவண காவியச் சிறப்புப்பாயிரம் 113
இல்லை, ஆனால் உண்டு 267
இலாவணிப் பாட்டு 2
இழந்த பி.எஸ்.ஞானம் 293
இறகு தமிழ், பேனா ஆங்கிலம்! 201
இறைவன் பணித்ததே நம்பணி 171
இனாம் ஜோதிஷம் 65
உடமை நாடு 12
உருசி உதைப்பும் அமரிக்கா அதைப்பும் 189
உருசிக்கும் அமரிக்காவுக்கும் நாம்கூறும் அமைவு 189
உலக்கை கொழுந்தே! 270
உலகப்போர் மூட்டலின் உயிர்விடுதல் நன்று 189
உலகின் இலக்ஷியம் 71
உனக்குமா ஓர் இயக்கம் 218
எங்கள் ஊரில் 109
எங்குள்ள தமிழரும் எங்கள் பட்டாளம் 204
எங்கே வாழ்வு? 263
எட்டாவது ஆண்டிற் குடியரசு 47
எண்ணருங் கலைகள் ஆய்ந்த அறிஞர் 139
எதற்கெடுத்தாலும் சும்-மா எதிர்ப்பாம் 125
எந்தநாள் திருநாள்? 339
எம்கொள்கை 95
எழுத்தை அழகாய் எழுது 275
எழுந்தருளும் தெய்வங்களிடம் புதுமையாக வேண்டுதல் 54
என் ஆசை 228

என்நூல் அருமை எனக்கே தெரியும் 238
என் விலங்கை மாற்று 236
எனது நாடு 79
ஏடுகள் (பத்திரிகைகள்) வாழ்க! 33
ஏடும் எண்ணமும் 245
ஏமாறாதே 231
ஏரி 329
ஏன் சிரித்தாள்? 117
ஏனங்குடி ம.சம்பந்தம் அறிக்கை 230
ஐந்தறிவும் மெய்யுணர்வும் 250
ஒற்றுமை 240
ஒற்றுமைதான் வழி 177
ஓவியக் கலைத்திறம் 160
ஓவியர்க்கு வாழ்த்து 145
கண்ணதாசர் கவலை 188
கண்ணியமா? புண்ணியமா? 307
க.து.விட்டுத் தி.க.வந்தனர் வருக! வாழ்க! 162
கம்மாளன் பிள்ளை 278
கல்லெறிதல் நன்றா? 303
கல்விக்கரசு மணவாளராமாநுசனார் கட்டளை 180
கல்வி நீரோடை 46
கலியபெருமாள் எழுந்தருளிய பெரமலூர் பெற்றபேறு 223
'கலை' இதழ் தீபாவளி மலர் - கவிஅரங்க வாழ்த்து 280
கலை விருந்து வாழ்க 281
கவிஞர் கண்ணதாசர்க்கு நன்றியும் வாழ்த்தும் 299
கவிஞர்கள் தேவை! 340
கவிதை மலர்கள் - நூலுக்கு வாழ்த்து 116
கன்னக்கோல்காரன் 214
காங்கிரசு 164
காளிக்கு விண்ணப்பம் 27
காற்றுள்ள போதே 219
கானாடு காத்தான் வை.சு.ஷண்முகம்
மஞ்சுளாபாய் அவர்கட்கு வரவேற்பு 105
கிழக்குச் சுவருக்கு அப்பால் தமிழ்விளக்கு 261
குடிஅரசு 9ஆம் ஆண்டு வாழ்த்து 51
குடுகுடுப்பைக்காரன் 88
குபேர்க்கு வாழ்த்து 338
குழந்தைத் திருமணம் 346
குன்றும் மயிலும் 70
கூவி அழை கண்ணனையே 107

கெட்ட பையன் 294
கொட்டடா பறை 194
கொடி வணக்கம் 237
கொடைத் தமிழன் 59
'கொம்புத்தேன்' - நாடக வாழ்த்து 181
கொய்யாக்கனி - நூல் மதிப்புரை 140
கொள்கைத் திருநாடு 15
கோழிகள் ஒழிக 256
சக்திக்கு விண்ணப்பம் 10
சக்திப் பாட்டு 22
சங்கு சுப்பிரமணியன் திருமண வாழ்த்து 78
சங்கொலி - இதழ் மதிப்புரை 191
சமர்ப்பணம் 81
சமூகத் திருத்தம் 35
சரசுவதி - இராசவேல் திருமண வாழ்த்து 130
சரசுவதி - கண்ணப்பர் செல்வி மல்லிகை வாழ்க! 136
சாகாமைக்கு ஒழுக்கம் காரணம் 252
சாதி மறுப்பு 151
சாராய விற்பனை 167
சிட்டுகளும் பூனையும் (மெய்ம்மூவாறு) 226
சிவாஜி இதழின் 17ஆம் ஆண்டு வாழ்த்து 134
சிறப்புக் கவிகள் 311-328
சின்ன பீடி 289
சுடாத நெருப்பு - நூல் மதிப்புரை 129
சுண்டல் காரணப் பெயர் 253
சுதந்திர தேவி ஸ்தோத்ரம் 28
சுதந்திரம் அமரத்தன்மை 21
சுயமரியாதைத் திருமணத்தில் வாழ்த்து 48
சூழ்நிலை நாடக மன்றத்திற்கு வாழ்த்து 347
செத்த பிள்ளையை ஆற்றில் எறிவது 172
செந்தமிழ் நாட்டுக்குத் திருநாமம் 170
செந்தமிழ் நாடு 119
செந்தமிழ் மீட்போம் 118
சொத்தும் சுவடியும் 246
சோபன அறை 57
சோம்பித் திரியேல் 209
தச்சுக் கலைத்திறம் 161
தமிழ் 277
தமிழ்த்தாய் - இதழ் மதிப்புரை 67
தமிழ்நலம் 121

தமிழ்நாடு 133
தமிழ் போனால் மேடைத் தம்பிரான் பாடைத் தம்பிரான்தான் 255
'தமிழ்மகள் தந்த செய்தி' - நூல் சிறப்புரைப்பா 86
'தமிழ் வாழ்க' - நூற் சிறப்புரை 106
தமிழகம் வென்றாக வேண்டும் 213
தமிழக முதலமைச்சர் காமராசர் 57ஆவது ஆண்டுவிழா
வேண்டினோர்க்கு நன்றி 243
தமிழர் எழுக 148
தமிழர் கடன் 229
தமிழர் திருநாள் (ஈன்றபொன்) 142
தமிழர் திருநாள் (தாயகம் எங்கள்) 143
தமிழனுக்குப் பிறக்க வேண்டும் 199
தமிழைத் தமிழனிடமிருந்து பிரிக்க முடியாது 279
தலைவன் கூற்று 100
தலைவன் தளர்ச்சி 290
தலைவி விழுந்து விழுந்து சிரித்தாள் 260
தறிநெய்வோர் தவிப்பு-1 60
தறிநெய்வோர் தவிப்பு-2 61
தன்னலம் 248
தாய்சொல் தட்டேல் 153
தாய் தனயனுக்குரைத்தல் 76
தாய் பிள்ளைக்குச் சோறூட்டல் 207
தாயின் மணிக்கொடி 77
தாயும் பிள்ளையும் 200
தாயைப் பிரிந்திருந்த குழந்தை! 68
தி.க.வில் சேர்ந்த திருவாளர்க்கு வாழ்த்துப்பா 159
தி.க.வில் சேர்ந்தார் வாழ்க! 187
திபேத்து விடுதலை 234
தி.மு.க. அட்டூழியம் 302
தி.மு.க.வின் இறுதி 310
திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் திருமண வாழ்த்து 205
திரு (இலக்ஷுமி) 36
திருஅரங்கம் திராவிட வாலிபர் கழகம் - அறிவுலகம் வாழ்த்து 94
திருமணத்தில் தலைமை வகித்த பெரியார்க்கு வரவேற்பு 104
திருமண வாழ்த்து (1950) 132
திருமண வாழ்த்து (1930) 43
திருமண வாழ்த்து (1924) 38
திருமண வாழ்த்துப்பா 225
திரு. முத்தமிழ் அழிக்கும் சட்டர்சிக்குக்
கருமுத்து கேடயம் கொடுத்தார் 192

திருவரங்கனார்க்கு இரங்கல் 108
திருவாரூர் 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்திற்கு வாழ்த்து 93
திரு.வி.க. பாடல் திருத்தம் 335
திரு.வி.க. மணிவிழா வாழ்த்து 103
தில்லி ஒழிக 215
தினத்தந்தி 266
துணைத்தலைவர் இலக்குமணசாமி 264
தெய்வீகத் தாய்நாடு 9
தெவ்வரை வீழ்த்தித் தெசிணி வாழ்க 341
தென்றல் அருவி 126
தென்னந் தோப்பு 176
தேசத்தைக் காத்தல் செய் 333
தேச மகா மன்றம் (காங்கிரஸ்) 17
தேவியின் திட்டம் 16
'தை' 83
தையற்கலை வாழ்க 127
தொண்டரைச் சேர்த்தல் 8
தொல்லைசெய் நிலவே 123
தொலைபேசிக்குத் தீயா? 304
தொழிலாளர் கேள்வி 58
தொழிலாளர் தோழமைப் பயன் 49
தொழிற்கல்வி வேண்டு 62
தோழி கூற்று (ஆடவர்க்குயிர்) 101
தோழிகூற்று (எம் வீட்டயலில்) 102
நண்பனுக்குக் கடன்படும் தீமையுணர்த்தல் 63
நமக்குள் சண்டை ஏன் 232
நல்லபிள்ளை (அம்மாவுக்கு) 296
நல்லபிள்ளை (வில்லாதி) 330
நல்லவர் ஆண்ட புதுவையிலே நரிகளுக்கே
இன்னும் நாட்டாண்மையா? 237
நல்லறம் வாழ்க 147
நன்றாயில்லை 239
நன்றி 122
நன்னெறியில் வளர்வது திறமை 288
நாட்டில் மிடி இல்லையாம் 169
நாடு, மொழி, பண்பாடு, எல்லை, கலை 262
நாவேந்தர் பற்றி பாவேந்தர் 342
நாளுக்கு நாணம் 42
நானே நீ 196
நிலவுப்பூ - அணிந்துரை 336

நினைவாற்றல் வேண்டும் 276
நீ ஒரு பாவாணன் 273
நீச நாகரிகம் 24
நீவிர் எந்தக் கட்சி 155
நெஞ்சுக்கு நீதி 26
நேரு 178
நேரு ஆட்சி 179
பகுத்தறிவு - இதழ் மதிப்புரை 73
பசுத் தெய்வம் 19
பட்டாளம் சேர்த்தல் 84
படார் 221
படிக்காதவன் சிரிப்பு 257
படிப்பு இருக்கும் 297
படிப்பை இகழலாமா? 227
படியாதவன் 300
படியாமை நினைந்து வருந்தல் 64
பத்தவச்சலம் பாடும் பாட்டு 184
பத்தவச்சலம் மேலும் பழியேற்றார் 190
பம்பாய் ஆர்ச் பிஷப்புக்கு 173
பராசக்தி திருப்புகழ் 18
பராசக்தியிடம் முறையிடல் 6
பள்ளிக்குப் போ 210
பாம்புப் பாட்டு 80
பாரத சமூக மன்றம் (காங்கிரஸ்) சொல்லுகிறது 14
பாரத சேனை 97
பாரத தேவியிடம் குடியர்தம் தெளிவு கூறல் 11
பாரதி சாப்பாட்டுக் கட்டுப்பாடு 345
பாரதிதாசன் திருக்குறள் (ஒருவன்) 259
பாரதிதாசன் திருக்குறள் (தானும்) 265
பாரதியின் விடுதலை வேட்கை 146
பாரதி விழா 331
பாலசுப்பிரமணிய நாயகர் இரங்கற்பாக்கள் 40
பாவலர்க்குப் பணஉதவி செய்க 185
பாவேந்தர் பாரதிதாசனார் வாழ்த்து 283
பிரிந்த பிரானைப் பெறமுடியும் 87
பிழைப்புக்கு வழி 50
பிள்ளைக்கு 291
புத்தாண்டு வாழ்த்து 99
புது உலகம் - இதழ் மதிப்புரை 69

புதுவைமுரசு ஆசிரியர் திரு. எஸ்.குருசாமி, பி.ஏ. அவர்கட்கு
ஸமர்ப்பணம் 44
புதுவையைப் பற்றி பாரதி அறிக்கை 138
புலவர் வேணுகோபாலனார் வாழ்க! 135
புவியன்னை முன்னேறுகின்றாள் 55
புறப்படுவீர் விடுதலைப்போர் 206
பூங்காவனம் 74
பூனைக்குட்டியும் மண்ணாங்கட்டியும் 286
பெயர் தெரியாத மணமலர் 287
பெரியார்க்கு வாழ்த்து 183
பெரியாரின் (பஞ்சசீலம்) ஐந்தொழுக்கம் 197
பெரியாரைப் பின்பற்று 216
பெருகும் அன்பு 157
பெருமாள் கோயில் தெருவில் அலார் 268
பேருந்துவண்டி சிதைத்தது சரியா? 306
பேறும் வேறும் 247
பொங்கல் வாழ்த்து (கடல் மேல்) 114
பொங்கல் வாழ்த்து (பொங்கல்) 348
பொதிநாத் துவையல் அருமை 258
பொதுப்பணம் அரோகரா 165
பொருள் வரிசை 344
பொன்முடியார் - புலவர் திருஞானம் திருமண வாழ்த்து 242
பொன்னேட்டில் புதுப்பாட்டு 202
மக்கட்குத் தொல்லையில்லாத வழி 189
மகள் மருகர் பேரர்க்குப் பொங்கல் வாழ்த்து 131
மகளிர் ஒழுக்கம் 254
மகாசக்திக்கு விண்ணப்பம் 34
மங்கையர்க்கரசி - சாம்பசிவம் மணவாழ்த்து 349
மத மறுப்பு 152
மதுவிலக்குப் பாட்டு 13
மருத்துவ இல்லத்திலும் வம்பா? 308
மலர்ந்தது முல்லை 112
மறந்தறியேன் 39
மறைப்பதென்ன? 1
மன்ற உறுப்பினர்க்கு நன்றியும் மற்றவர்க்கு வேண்டுகோளும் 298
மனத்துக்கண் மாசிலன் 144
மனத்துணை நாதர்க்கு வாழ்த்து 166
மாட்சிமிக்க ஆங்கிலேய அரசாங்கத்திற்கும் சொற்பொழிவாளர்
திருவாளர் என்.தண்டபாணி அவர்கட்கும் வாழ்த்து 92
மாணவர்க்கு உறங்கும் நேரந்தான் ஓய்வுநேரம் 272

மாணவர் பாட்டு - நூற் சிறப்புரை	343
மானம்மறையா மெல்லுடை	212
மிதிவண்டிக்குத் தீயா?	305
மின்னும் தமிழ்	53
மீண்ட செல்வங்கட்கு வரவேற்பும் வாழ்த்தும்	163
மீண்ட தமிழகத்தில்	198
முஸ்லீம் இளைஞர்களுக்கு வேண்டுகோள்	82
மூத்தவரின் வாழ்த்து	351
மொழிவெறியா கூடாது?	154
யார் நல்லவன்?	285
யுத்த ஆயத்தம்	75
ராஜா சர் அண்ணாமலை வள்ளலார் வாழ்த்து	89
ராஜா நலங்கிடவா	352
வடநாட்டில் பெரியார் முழக்கம்	216
வடமொழியில் சிபாரிசா?	168
வண்மைத் தமிழர் தம்புசாமி	66
வணக்கமும் வாழ்த்தும்	332
வந்தனோபசாரப் பத்திரம்	41
வந்தார்க்கு வாழ்த்து	233
வரலாற்றை முழக்கிடுக உலகமெலாம்	350
வழிகாட்டி - இதழ் மதிப்புரை	72
வளர்ந்த திங்கொரு தீ	52
வா கண்ணா	353
வாடல் தவிர்த்து வாழ்வோம்	211
வாணி (சரஸ்வதி)	37
வாருங்கள்	235
வாழ்க ஈ.வெ.ராமசாமிப் பெரியார்	45
விட்டு விடுவேனா?	134
விண்ணோர் பதியே!	4
வெல்க தமிழ்! வெல்க தமிழர்!	241
வெற்றிச்செல்வி - வேங்கடாசலன் திருமணச் சிறப்பு	222
வெற்றி நெருக்கம்	23
வெற்றிப் பறை	120
வெற்றிலைக்கு முன் என்ன போடவேண்டும்?	292
வேலன் பாட்டு	284
ஸ்வதர்மம்	31
ஜனநாயகம்	96
ஸ்ரீலாலா லஜபதிராய் பிணிக்கிரங்கல்	30

சிறப்புப் பெயர் அகரநிரல்

	பாடல் எண்
அகாலியர்	29
அண்ணல் தங்கோ கு.மு.	86
அண்ணா	234
அண்ணாத்துரை அறிஞர்	128
அண்ணாமலை	336
அண்ணாமலை அரசர்	89. 90
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்	90. 270. 336
அப்பாத்துரையார்	106
அப்போசி மாரம்மை	225
அமரிக்கர்	269
அமரிக்கர்	189
அரவிந்தர்	91, 137, 138, 331
அழகப்பர்	124
அறிவுலகம்	94
அன்பழகன் வெற்றிச்செல்வி	110
அன்புப் பழம்நீ	128, 348
ஆங்கில நாடு	98
ஆங்கிலம்	91, 264
ஆங்கிலர்	98, 138
ஆங்கிலவர்	138
ஆச்சாரி	234
ஆநந்த விகடன்	175
ஆரியர்	209, 228
இங்கிலந்து	31
இங்கிலாந்து	98
இத்தாலி	95
இராசாசி	175
இராசாராம்	186
இராவண காவியம்	113
இலக்குமணசாமி	264
இலங்கைத் தமிழர்	176, 241

இளமுருகு	225
உருசி	189
உருசியர்	269
எழில் முதல்வன்	319
ஏனங்குடி மா.சம்பந்தம்	230
ஐசன்அவர்	189
ஐயனாரிதனார்	333
ஓவியர் பெனடிக்ட்	145
கக்கன்	154
கடம்பத்தூர் தேவராசன்	311
கண்ணதாசன்	188, 280, 299
கண்ணீர்த் துளிகள்	162, 163, 230
கணேச சுந்தரம்	317
கம்பர்	9, 103
கருமுத்து தியாகராசர்	192
கலியாணசுந்தரர்	103
கவியழகன்	313
காங்கிரசு	149, 155, 164, 186, 218
காந்தி அண்ணல்	26, 33
காமராசர்	243
காமுசு	327
கிருட்டினன்	320
குடிஅரசு	48, 51
குபேர்	338
குருசாமி	44, 138
குருசேவ்	189
குருடீ	312
குன்றக்குடியார்	168
கோவிந்தராசன்.வ	324
கோவேந்தன்	314
சங்கு சுப்பிரமணியன் - சரசுவதி	78

சட்டர்சி சுனிதிகுமார்	192
சதாசிவப் பண்டாரத்தார்	242
சரசுவதி - இராசவேல்	130
சரசுவதி - கண்ணப்பர்	131, 136
சரவா	137
சனார்த்தனம்	139
சாந்தானந்தம்	222
சாமி எஸ்கே	233
சிங்களத் தமிழர்கள்	204
சி.ங்காரவேலர்.மா	69
சிங்கைத் தமிழ்மக்கள்	204
சிவஞானம் ம.பொ.	155
சிவப்பிரகாச நாயகர்	40
சிவாஜி கணேசர்	188, 267
சிவனடியான்	280
சீக்கியர்	77
சீதை	9
சீவபந்து சீபால்	135
சீனர்	9, 189, 234, 333, 334
சீனிவாசாச்சாரியார்	103
சுத்தி அரிவாள் கட்சி	155
சுதேசமித்திரன்	331
சுப்புரத்(தி)னம்	2, 3
சுப்பையனார் (வ.சு.கழகம்)	108
சுயமரியாதை இயக்கம்	48
சென்னைப் பல்கலைக்கழகம்	264, 270
சேக்கிழார்	135
சேது (ரா.பி.)	171
சேரன்	9, 103
சேலம் கருணாகரன்	318
ஞானசம்பந்தன்	252
ஞானம் பி.எஸ்.	293
தஞ்சை முத்துத்தாசன்	326
தண்டபாணி	92

தம்புசாமி	66, 78
தமிழ்	53, 111
தமிழ்த்தாய்	67
தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்	93
தமிழர் தலைவர்	186
தமிழன்பன்	321
தமிழன்ப்ன், புலவர்	316
தமிழோவியன்	323
தி.மு.க.	233, 302, 310
திராவிடர் கழகம்	94, 155, 162, 187, 233
திராவிட வாலிபர் கழகம்	94
திருத்தக்க தேவர்	135
திருநாவுக்கரசர், மறை	108
திருமலை சாமி	88
திருலோக சீதாராம்	134
திருவரங்கனார்	108
திரு.வி.க.	103
திலகர்	91
தினத்தந்தி	266
தினமணி	78
துருக்கர்	77
துரை.மாணிக்கனார்	140
தெசிணி	341
தெ.பொ.மீ.	171
தெலுங்கர்	9, 77
தேசமகாமன்றம் (காங்கிரஸ்)	17
தையற்கலைஞர் சாமி	127
தொல்காப்பியர்	135, 333
நகரதூதன்	88
நப்போலியன்	98
நாகமுத்தையா	315
நாராயணசாமி நாயடு	81
நாஜிசம்	95, 98
நாஜியர்	98

நீலாம்பிகையார்	108
நெல்லை கந்தசாமி	325
நேரு	174, 177, 178, 179, 186, 217, 219, 234
பகீரதன்	9
பகுத்தறிவு	73
பத்தவச்சலனார்	174, 177, 182, 184, 190
பம்பாய் ஆர்ச் பிஷப்	173
பரிமேலழகர்	135
பழநிவேல்	129
பழநி பாரதிதாசர்	136
பறம்பைப் பிரகாசம்	322
பன்னீர்ச் செல்வன்	87
பாரத சமூக மன்றம் (காங்கிரஸ்)	14
பாரதியார்	59, 91, 103, 137, 146, 331
பாரதிதாசனார்	222, 331
பாலசுப்பிரமணிய நாயகர்	40
பாலசுப்பிரமணியன் (சிற்பி)	336
பாவலர் பாலசுந்தரனார்	185
பிரஞ்சியர்கள்	137
பீகார் நிலநடுக்கம்	56
புகழேந்தி - பாரி	131
புத்தர்	9
புதுஉலகம்	69
புன்னைமுத்து	72
பெரியசாமிப்பிள்ளை	7
பெரியார் இராமசாமி	41, 45, 57, 73, 104, 171, 177, 183, 197, 205, 216, 217, 218, 219, 220, 230, 234, 242
பொன்முடியார் - புலவர் திருஞானம்	242
பொன்னம்பலனார் (புலவரேறு)	222, 242
மணவழகனார்	103
மணவாள இராமாநுசனார்	180
மருதகாசி	280
மல்லிகை	136

மலயத்தமிழர்	251
மறைமலையடிகள்	108
மன்னர்மன்னன்	283
மனத்துணைநாதர் (தஞ்சை)	166
முசிலிம்	103
முருகுசுந்தரம்	328
முஸ்லிம் இளைஞர்கள்	82
ராஜபுத்ரர்	77
லாலா லஜபதிராய்	30
வங்கர்	9, 77
வ.ரா.	331
வ.வே.சு.	103, 137, 331
வாணிதாசனார்	280
வானம்பாடி	283
வி.வே.கி. (எஸ்.டி.)	197
வீரமணி (கி) - மோகனா	205
வீரராகவனார்	128
வெள்ளைத்துரை	24
வெள்ளை வயித்தியம்	24
வெற்றிச்செல்வி - வேங்கடாசலன்	222
வேணுகோபாலனார் புலவர் (மே.வீ.)	135
ஹிட்லர்	95, 97
ஹிட்லரிசம்	95
ஷண்முகம் வை.சு. - மஞ்சுளாபாய்	105
ஜப்பான்	95
ஜப்பானிசம்	95
ஜனநாயகம்	96
ஜெர்மனி	96
ஜெர்மானியர்	97, 98

எழுத உதவிய ஏடுகள்
(அ) நூல்கள்

1. அண்ணல்தங்கோ.கு.மு; **தமிழ்மகள் தந்த செய்தி அல்லது சிறையில் யான் கண்ட கனவு,** அறிவுக்கரசி வெளியீடு, வேலூர், மு.ப.1939
2. அண்ணாதுரை, டாக்டர் மா; **பாவேந்தரில் அகமும் புறமும்,** பூங்கொடி வெளியீடு, ஈரோடு, மு.ப.1988
3. " **பாரதிதாசன் இதழ்ப்பணிகள்,** பூங்கொடி வெளியீடு, ஈரோடு, மு.ப.1990
4. அப்பாத்துரைப்பிள்ளை.கா; **தமிழ் வாழ்க,** தமிழன்னை நிலையம், கோனாபட்டு, புதுக்கோட்டைத் தனியரசு, மு.ப.1944,
5. அன்புப்பழம்நீ & கே.வி.வீரராகவன்; **அண்ணாவின் உவமைகள்** மறுமலர்ச்சி நூல் நிலையம், சென்னை, மு.ப.1949
6. ஆறுமுகம், முனைவர் அ; **தன்மானத்தமிழ் மறவர் -** கீ.வை.பொன்னம்பலனார் வரலாறு, தமிழ்மறவர் கீழமாளிகை வை.பொன்னம்பலனார் அவர்களின் நூற்றாண்டு விழா அமைப்புக்குழு வெளியீடு, செந்துறை, மு.ப.தி.ஆ, 2034 (2003)
7. இராசேந்திரன், பி.எல்; **பாரதியாரும் பாவேந்தரும்,** பூங்கொடி பதிப்பகம், சென்னை, மு.ப.1998
8. இளங்குமரன், புலவர் இரா; **கழக அமைச்சர் திருவரங்கர் வரலாறு,** திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை, மு.ப.1982
9. இளங்கோ, டாக்டர் ச.சு; **குடிஅரசு இதழில் பாரதிதாசன் பாடல்கள்,** ஏரக வெளியீடு, மதுரை, மு.ப.1982

10. " **பாரதிதாசன் பார்வையில் பாரதி**, அன்னம் வெளியீடு, சிவகங்கை, மு.ப.1982

11. " **பாரதியாரோடு பத்தாண்டுகள்**, பாரி நிலையம், சென்னை, மு.ப.1992

12. " **பாரதிதாசனும் நகரத்தூதனும்**, முல்லை நிலையம், சென்னை, மு.ப.1996

13. **இளங்கோ, சிவ;** **பாவேந்தரும் புதுவைச் சிவமும் - சில நினைவுகள்**, ஞாயிறு நூற்பதிப்பகம், புதுச்சேரி, மு.ப.1990

14. " **பாரதிதாசன் - கனக.சுப்புரத்தினம் -** பாரதி பதிப்பகம், சென்னை, மு.ப.1991

15. **கிண்டற்காரன் C/o பாரதிதாஸன்;** **சுயமரியாதைச்சுடர்**, ஸ்ரீ சாரதா பிரஸ், புதுவை, மு.ப.1931

16. **குழந்தை புலவர்;** **இராவண காவியம்**, வேலா பதிப்பகம், ஈரோடு, இ.ப.1971

17. **கோவேந்தன்.த;** **பாவேந்தர் பாரதிதாசன்** (பா.தொ.), கவிஞன் பதிப்பகம், வேலூர், மு.ப.1965

18. **சகத்ரட்சகன், டாக்டர்;** **நாவேந்தர் கண்ட பாவேந்தர்**, அப்பல்லோ வெளியீடு, சென்னை, மு.ப.1990

19. **சனார்த்தனம், டார்பிடோ, ஏ.பி.;** **பெரியாரே என் தலைவர்**, மனோ பதிப்பகம், சென்னை, மு.ப.1997

20. **சித்தன், பாவலர் மணி;** **பாவேந்தருடன் பயின்ற நாள்கள்**, வானதி பதிப்பகம், சென்னை, மு.ப.1990

21. **சிவஞானம், ம.பொ.;** **புதிய தமிழகம் படைத்த வரலாறு**, பூங்கொடி பதிப்பகம், சென்னை, மு.ப.1986

22. **தங்கம்மாள் பாரதி;** **எந்தையும் தாயும்**, வானதி பதிப்பகம், சென்னை, மு.ப.1978

23. **நெடுஞ்செழியன், டாக்டர் இரா.;** **புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் (வாழ்க்கை வரலாறு)** நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை, சென்னை, மு.ப.1994

24. **பழநிவேல்.ந.** **கவிதை மலர்கள்**, தமிழ்முரசு வெளியீடு 1, தமிழ்முரசு காரியாலயம், சிங்கப்பூர், மு.ப. 1947

25. **பாரதி.கோ;** **பலகணியில் பாவேந்தர்**, பூங்கொடி பதிப்பகம், சென்னை, மு.ப.1990

26. " **பாட்டுக்கனல் பாரதிதாசன்**, குயில் வெளியீடு, புதுச்சேரி, மு.ப.2001

27. பாரதிதாசன்; **பாரதிதாசன் கவிதைகள்**, வெளியிட்டவர் டி.எஸ்.குஞ்சிதம், வேணுகோபாலபுரம், கடலூர், மு.ப.1938

28. " **பாரதிதாசன் கவிதைகள் முதற்பகுதி**, குடிஅரசு பதிப்பகத்தார், ஈரோடு, மூ.ப.1944

29. " **பாரதிதாசன் கவிதைகள் முதற்பகுதி**, முல்லை பதிப்பகம் சென்னை, நா.ப.1944

30. " **பாரதிதாசன் கவிதைகள்** (முழுவதும்... பல புதிய கவிதைகள் அடங்கியது) பாரதி பதிப்பகம், சென்னை, மு.ப.1992.

31. பெருமாள் முனைவர் எஸ். **மக்கள் இயக்கங்களும் தமிழ் வெளியீடுகளும்**, வடஆர்க்காடு, 1850-1950, மேகலை பப்ளிகேஷன்ஸ், வேலூர், மு.ப.2000

32. பொன்னடியான், கவிஞர்; **நினைவலைகளில் பாவேந்தர்**, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, மு.ப.1989

33. " **(தொ.ஆ.) எங்கள் நினைவில் புரட்சிக் கவிஞர்**, பொன்மலர் பதிப்பகம், சென்னை, மு.ப.1990

34. மன்னர்மன்னன்; **புதுச்சேரியைப் பாருங்கள்**, புரட்சிக்கவிஞர் பதிப்பகம், புதுச்சேரி, புதிய திருத்தப் பதிப்பு, 1981

35. " **கறுப்புக்குயிலின் நெருப்புக் குரல்**, முத்துப் பதிப்பகம், விழுப்புரம், மு.ப.1985

36. " **பாவேந்தர் உள்ளம்**, முத்துப் பதிப்பகம், விழுப்புரம், மு.ப.1990

37. " **பாவேந்தர் படைப்புப் பாங்கு**, பூங்கொடி வெளியீடு, ஈரோடு, மு.ப.1993

38. " **பாட்டுப்பறவைகள் (பாரதி - பாரதிதாசன் விளக்க நூல்)**, குயில் வெளியீடு, புதுச்சேரி, மு.ப.2000

39. மாணிக்கம், துரை; கொய்யாக்கனி, பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி, மு.ப.1956

40. முத்தையா.முல்லை; **(தொ) புரட்சிக்கவிஞர்**, முல்லைப் பதிப்பகம், சென்னை, மு.ப.1946

41. " (தொ) **புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கையிலே**, முத்தமிழ் நிலையம், சென்னை, மு.ப.1946

42. " (தொ.ஆ) **பாவேந்தருக்குப் புகழ் அஞ்சலி**, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, மு.ப.1991

43. **முருகுசுந்தரம், கவிஞர்;** **பாவேந்தர் நினைவுகள் - முதற்பகுதி**, அகரம், சிவகங்கை, மு.ப.1979

44. " **அரும்புகள், மொட்டுகள், மலர்கள்**, அகரம், சிவகங்கை, மு.ப.1980

45. " **புதுவைக் கல்லறையில் புதிய மலர்கள்**, அன்னம் வெளியீடு, சிவகங்கை, மு.ப.1985

46. **ரவி (கு.திரவியம்)** **சுடாத நெருப்பு - கவிதைகள்**, தமிழ்ப்பொழில் நூல் வெளியீட்டகம், மதுரை, 1949.

47. - **பகுத்தறிவாளர் நாட்குறிப்பு - கையேடு திராவிடர் கழக வெளியீடு**, சென்னை, (பெரியார் ஆண்டு 110-111), 1989.

48. - Bharathidasan Selected Poems (Translated in to English) Pondicherry Institute of Linguistics and Culture - Pondicherry, First Edition 1996.

(ஆ) மலர்கள்

1. அண்ணாமலை அரசரின் 61ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாமலர், 1941, சென்னை.
2. அழகப்பா தமிழ் மன்றச் சிறப்பு மலர், 1962-63, காரைக்குடி
3. இனமானப் பேராசிரியர் க.அன்பழகன் பவழமாலை, 1978, மதுரை.
4. எங்கள் தலைவர் திரு. குபேர் 70ஆவது பிறந்தநாள் விழாமலர், 1963, புதுவை.
5. கலை தீபாவளி மலர், 1961, சென்னை.
6. கலைக்கதிர் விடுதலைப் போராட்ட மலர், 1957, கோயம்புத்தூர்.
7. கலைக்கதிர் பொங்கல் மலர், 1961, கோயம்புத்தூர்.
8. கலைவிருந்து பொங்கல் சிறப்பிதழ், 1962, சென்னை.
9. சிந்தாமணிச் சொற்பொழிவு நினைவு மலர், 1952, காஞ்சிபுரம்.
10. சிவாஜி 17ஆவது ஆண்டு மலர், 21.10.1951, திருச்சிராப்பள்ளி.
11. தமிழ்நாடு தீபாவளி மலர், 15.11.1963, மதுரை.
12. தமிழ்முரசு ஆண்டுமலர், சனவரி 1957, சிங்கப்பூர்.
13. தமிழ்முரசு ஆண்டுமலர், 14.1.1960, புதுச்சேரி.
14. திரு. காமராஜ் 57ஆவது பிறந்தநாள் விழாமலர், 25.7.1959, நாமக்கல்
15. திரு.வி.க. மணிவிழா மலர், 28.8.1943, திருவாரூர்
16. தினகரன் சிறப்பு மலர், 11.7.1959, இலங்கை
17. பாரதிதாசன் குயில், பாவேந்தர் சிறப்பிதழ், 21.4.1968, புதுவை.
18. பிரசண்ட விகடன் பொங்கல் மலர், 1944, சென்னை.
19. பேராசிரியர் பவளவிழா மலர், 1997, சென்னை.
20. ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், பாரதிதாசன் மலர், மே 1983, புதுவை.

(இ) இதழ்கள்

1. அமுதசுரபி - சூன் 1963, சூன் 1990
2. ஆத்மசக்தி - சூலை 1923, ஆகஸ்டு 1923, அக்டோபர் 1923, நவம்பர் 1923, சனவரி 1924
3. இளைஞன் - 16.6.1947
4. கவிதா மண்டலம் - மே 2001
5. கவிதை - 15.1.1964, சனவரி 1994
6. குடிஅரசு - 10.2.1929, 10.3.1929, 1.5.1932, 9.10.1932, 19.3.1933, 16.4.1933, 30.4.1933, 9.1.1938, 1.2.1938
7. குமுதம் (வார இதழ்) - 16.3.1961
8. குயில் (மாத வெளியீடு) - 1947 - 1948
9. குயில் (கிழமை இதழ்) - 1958 - 1961
10. குயில் (திங்கள் இருமுறை) - 1962
11. சக்தி - சித்ராபாநு மார்கழி 1942 (டிசம்பர் சனவரி), சுபானு - ஆடி 1943 (சூலை - ஆகஸ்டு)
12. சாவி - 7.12.1986
13. சுதந்திரச் சங்கு - 26.1.1934
14. தமிழரசு (தமிழ்நாடு அரசு) - 16.4.1978, 1.5.1990
15. திராவிடநாடு - 18.3.1945
16. தினமணி சுடர் பாரதி அநுபந்தம் - 5.9.1954
17. தேசசேவகன் - 7.11.1922, 21.11.1922, 28.11.1922, 12.12.1922, 26.12.1922, 20.2.1923, 27.2.1923, 6.3.1923, 13.3.1923, 10.4.1923, 17.4.1923, 24.4.1923, 8.5.1923, 22.5.1923, 29.5.1923, 12.6.1923, 19.6.1923, 10.7.1923, 31.7.1923
18. தோழன் - 25.12.1955
19. நகரதூதன் - 4.3.1934, 11.3.1934, 3.7.1938, 10.7.1938, 15.9.1940

20. பாரதமுழக்கம் (மாதமிருமுறை)	-	1.2.1965
21. பாரதிதாசன் குயில்	-	சுவடி - 6. ஆனி 1984. சுவடி - 10. அக்டோபர் 1984
22. பொன்னி	-	மே 1947
23. மணிக்கொடி	-	5.10.1933. 3.12.1933. 18.2.1934. 22.7.1934
24. முல்லை	-	சனவரி 1946
25. யாதும் ஊரே	-	அக்டோபர் 2000
26. ராணி	-	2.12.1990
27. வண்ணச்சிறகு	-	அக்டோபர். நவம்பர் 1975
28. வானம்பாடி (சிறுவர் வார இதழ்)	-	16.3.1962. 3.4.1962. 13.4.1962. 23.4.1962. 7.5.1962. 21.5.1962. 28.5.1962. 4.6.1962. 11.6.1962. 16.7.1962. 6.8.1962. 10.9.1962
29. ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்	-	1935
30. ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்	-	1982 - 1983

பழம் புதுப்பாடல்கள்
இதுவரை வெளிவந்துள்ள பாரதிதாசன்
கவிதைத்தொகுதிகளில் இடம் பெறாதவை.
பதின்மூன்றாம் அகவை(1904) தொடங்கி
இறுதிக்காலம் (1964) வரையில் பாரதிதாசன் எழுதியவை.
தேசசேவகன் (1922-_1923),ஆத்மசக்தி(1923_1924) முதலிய
பல்வேறு இதழ்களிலும் மலர்களிலும்
நூல்கள், கட்டுரைகள் இடையிலும் கையெழுத்து வடிவிலும்
வாழ்த்து மடல்களிலும் இடம்பெற்றிருந்தவை.

பரமண்டலத்தைப் பாடிப்பரவும் பக்திப்பாடல்கள்,
பாரதவிடுதலைக்கு உரத்துக் குரல் கொடுக்கும்
உரிமை முழக்கங்கள்.
தன்மான இயக்கம், இந்தித்திணிப்பு எதிர்ப்பு இயக்கம்,
தமிழ், தமிழக விடுதலை இயக்கம் முதலியவற்றிற்கு
உரமூட்டி வளஞ்சேர்க்கும் ஊட்ட மருந்துகள்.

நாட்டுநடப்புகளை உடனுக்குடன் உரைத்துக்காட்டும்
வரலாற்றுப் பதிவுகள்.
அரசியல் கட்சிகளைத் தாக்கவும் தூக்கவும் செய்யும்
கவிதை அதிர்வுகள்.
பாரதிதாசனின் தணிக்கை செய்யப்படாத
பன்முகப்படிநிலை வளர்ச்சியைப் பறை சாற்றுபவை.
பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய்விளங்குபவை.

சுருங்கச் சொன்னால் ஒட்டுமொத்தப் பாரதிதாசனை
ஓரிடத்தில் காட்டுபவை.

பாரதிதாசன் பல்கலைக்கழகம்